ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :



கீதா வ்யாக்யானம்

(ஏழு, எட்டு அத்தியாயங்கள்)

[ப4க3வத்3 கீ3தையும், அதற்கு ஸ்ரீராமாநுஜ பா4ஷ்யமும், ஆளவந்தார் அருளிய கீ3தார்த்த2 ஸங்க்3ரஹமும், வாதி3கேஸரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவும், ஸ்ரீவேதா3ந்ததே3சிகர் அருளிய கீதார்த்தசங்கிரகமும், 'ஸுத3ர்ஶனம்' ஆசிரியர் இயற்றிய கீ3தார்த்த2விவரணம் என்னும் தமிழ் வியாக்கியானமும், கீ3தாஶ்லோகார்த்த2ச் சுருக்கமும், கைவல்ய ஸித்2த4ாஞ்ஜநமும் அடங்கியது.]

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ உ. வே.

S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார்,

அட்வகேட்,

3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

விலை ரூ. 8-00. தபாற்கூலி 1-50.

ஸ்ரீநிவாஸம் பிரஸ் 8, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-17.

உரையாசிரியரின் முன்னுரை

[7-8 அத்தியாயங்கள்]

கீ₃தையின் ஏழு எட்டாவது அத்தியாயங்களுக்கு ஸ்ரீராமாநுஜர் அருளிய கீ₃தா பா₄ஷ்யமும், ஆளவந்தார் அருளிய கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹமும், வாதி₃கேஸரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவும், ஸ்ரீவேத₃ாந்ததே₃ஶிகர் அருளிய கீதார்த்த சங்கிரகமும் இவை அனைத்தையும் தழுவி எளிய தமிழ் நடையில் எழுதப்பட்ட நமது கீ₃தா வ்யாக்₂யானமும், கீ₃தா ஶ்லோகார்த்த₂ச் சுருக்கமும் அடங்கிய கீ₃தா வ்யாக்₂யானப் பகுதி இப்போது வெளியிடப்படுகிறது. ஏற்கனவே முதல் ஆறு அத்தியாயங்களாகிற முதல் ஷட்கத்திற்கு இவை அனைத்தும் அடங்கிய பகுதி வெளிவந்திருப்பது ஸ்ரீவைஷ்ணவ உலகம் அறிந்ததே.

முதல் ஷட்கம் முழுவதையும் ஒரு பகுதியாக வெளியிட்டது போலே, இரண்டாவது ஷட்கம் முழுவதையும் ஒரு பகுதியாக வெளியிடுவதே நியாயமாயினும், கீ₃தையின் ஏழு எட்டு அத்தியாயங்கள் அதன் ஹ்ருத₃யம்போலே ஸாரமானதாய் அமைந்திருக்கையாலே இப்பகுதி தனியாக வெளியிடப்படுகிறது. இவ்விரண்டு அத்தியாயங்களின் பொருளை உள்ளபடி உணர்ந்தால், அறியவேண்டியதையெல்லாம் அறிந்ததாகும் என்று இவற்றின் முதலிலும், நடுவிலும், முடிவிலும் கீ₃தாசார்யனாலேயே முழங்கப்பட்டுள்ளது. முதல் ஷட்கம் இவ்விரண்டு அத்தியாயங்களின் பீடிகை என்றும், மேல்வரும் பத்து அத்தியாயங்களும் இவ்விரண்டு அத்தியாயங்களின் விளக்கமே என்றும் கொள்ளலாம். சுருங்கக் கூறினால், இவ்விரு அத்தியாயங்களும் கீ₃தாசரமஶ்லோகத்திற்கு விளக்கமாயமைந்துள்ளன. கீ₃தை முழுவதையும் உரையோடு படிக்க நேரம் இல்லாதவர்களுக்கு இவ்விரண்டு அத்தியாயங்களையும் உரையோடு படித்தாலே போதுமானது.

கீ₃தோபநிஷத்தின் இவ்விரு அத்தியாயங்களும் ஆழ்ந்த பொருளுடையவையாய் அமைந்துள்ளன. '*அவிஸ்த்ருதா: ஸுக₃ம்பீ₄ரா: ராமாநுஜமுநேர் கி₃ர:*' [ஶ்ருதப்ரகாஶிகைத் தொடக்கம் 9] [விரிவற்றவையாகவும், மிக ஆழ்ந்த பொருள் உடையவையாகவும் இருப்பவை ராமாநுஜ முனிவரின்

ஸ்ரீஸூக்திகள்] என்கிறபடியே கீ3தா பா4ஷ்யமும் ஆழ்ந்த பொருளுடையது. மிகச் சுருக்கமாயிருக்கையாலே, இவ்வத்தியாயங்களின் கீ3தா பா4ஷ்யத்தின் பொருளை விளக்குவதில், ஸ்ரீராமாநுஜரின் ஶிஷ்யர்கள் காலம் தொடங்கியே கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டன; இது காரணமாக விஶிஷ்டாத்3வைத ஸ்ரீவைஷ்ணவ த3ர்ஶனம் இரு ஸம்ப்ரதா3யங்களாகப் பிரிய நேர்ந்தது. இவ்விரு ஸம்ப்ரதா3யங்களில் தி3வ்யப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்களால் நிலைநாட்டப்பட்ட தென்னாசார்ய ஸம்ப்ரதா3யத்தைப் பின்பற்றிச் செல்கின்றது நமது கீ3தா வ்யாக்2யானம். கீ3தா பா4ஷ்யத்தின் தாத்பர்ய சந்த்3ரிகையை அடிப்படையாகக் கொண்ட தே3ஶிக ஸம்ப்ரதாயத்துக்கும், தென்னாசார்ய ஸம்ப்ரதா3யத்துக்கும் உள்ள முக்கியமான கருத்துவேற்றுமைகள் இவ்விரு அத்தியாயங்களுக்குப் பொருள் கொள்ளுவதில் வெளிப்படையாக விளங்கி நிற்கின்றன. இந்த ஸம்ப்ரதா3யார்த்த2பே4த3ங்கள் எட்டாம் அத்தியாயத்தின் கடைசியில் (பக்கம் 399-407) கொடுக்கப்பட்டுள்ளன. இதுகொண்டும் நமது கீ3தா வ்யாக்2யானத்தைக்கொண்டும் இரு ஸம்ப்ரதா3யங்களின் அர்த்த2 பே4த3ங்களையும், அவை எந்த அடிப்படையில் தோன்றி வளர்ந்தன என்பதையும் தெளிவாக உணரலாம்.

இவ்வத்தியாயங்களில் சொல்லப்படும் முக்2யமானதொரு அர்த்த2மான கைவல்ய விஷயத்தில் சுமார் 300 ஆண்டுகளுக்குள் தென்னாசார்ய ஸம்ப்ரதா3யஸ்த2ர்களிடையிலேயே குழப்பம் ஏற்பட்டு, தி3வ்ய ப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்கள் கருதாததொரு பக்ஷத்தை அவர்களுடைய பக்ஷமாகத் தென்னாசார்ய ஸம்ப்ரதா3ய வித்3வத்3வரிஷ்ட2ர்கள் பலர் கருதத்தொடங்கினர். இதனால் இவ்வத்தியாயங்களின் ஶ்லோக பா4ஷ்யங்களுக்குப் பொருளுரைப்பதில் மூன்றுவகையான கருத்துவேற்றுமைகள் ஏற்பட்டு விட்டன. கீ3தாசார்யனுடைய க்ருபையாலும், எம்பெருமானுடைய அபாரகருணையாலும், தி3வ்ய ப்ரப3ந்த4 ரஹஸ்ய வ்யாக்2யாதாக்களான பூர்வாசார்யர்களின் ஒப்பற்ற பேரருளாலும் எழுந்த 'கைவல்ய ஸித்3தா4ஞ்ஜனம்' என்னும் நூலில், இக்குழப்பங்களெல்லாம் களையப்பெற்று, கீ3தாசார்யனுடையவும், எம்பெருமானுடையவும், தி3வ்யப்ரப3ந்த4 ரஹஸ்ய வ்யாக்2யாதாக்களுடையவும் திருவுள்ளம் வெளியிடப்

பெற்றது. இந்நூல் இந்த கீ$_3$தா வ்யாக்$_2$யானத்தில் (பக்கம் 281-376) இணைக்கப்பெற்றுள்ளது. இந்நூலைக் கடாக்ஷித்த காஞ்சி மஹாவித்$_3$வான் ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, திருநாங்கூர் ந்யாயவேதா$_3$ந்த வித்$_3$வான் ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி, வாக$_3$ம்ருதவர்ஷீ, ந்யாய வேதா$_3$ந்த வித்$_3$வான் ஸ்ரீ உ. வே. K. வரதா$_3$சார்ய ஸ்வாமி, ஸாரார்த்த$_2$ச் சொல்லழகர் ஸ்ரீ உ. வே. ஸதாபி$_4$ஷேகம் கோ$_3$விந்த$_3$நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, திருநாராயணபுரம் வித்$_3$வான் ஸ்ரீ உ. வே. அக்காரக்கனி ஸம்பத் குமாராசார்ய ஸ்வாமி, வானமாமலை வித்$_3$வான் ஸ்ரீ உ. வே. V. S. தோதாத்$_3$ரி ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீரங்கம் வித்$_3$வான் க$_4$னபாடி ஸ்ரீ உ. வே. ஸௌரிராஜய்யங்கார் ஸ்வாமி, திருநாங்கூர் வித்$_3$வான் (ஸ்ரீராமானுஜ மிஷன் செயலாளர்) ஸ்ரீ உ. வே. P.B.K. ஸ்ரீநிவாஸா சார்ய ஸ்வாமி முதலான பல மஹனீயர்கள் இந்நூலில் கண்ட முடிவை ஒருமுக$_2$மாக ஆதரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. வாக$_3$ம்ருதவர்ஷி ஸ்வாமி கீழ்க்கண்ட ஸ்லோகங்களின் மூலம் தமது நிஷ்கர்ஷத்தைத் தெரிவித்திருக்கிறார்.

॥ श्रीः ॥

"जयति रघुपतेः वाक्यमेतद्धि सत्यम्"

१. विभीषणप्रपत्तौ हि पक्षत्रयमुदीरितम् ।
सुग्रीवहनुमत्पक्षौ रामपक्षस्तथैव च ॥

२. सुग्रीवादिवचः श्रुत्वा हनूमान् उत्तरं जगौ ।
तद्वचस्त्वधरीकृत्य राम उत्तरमब्रवीत् ॥

३. तथा कैवल्यविषये त्वन्तः सौदर्शनो ध्रुवः ।
इति दृष्टाः गरीयांसः भवेयुरिति मे मतिः ॥
[अन्तः-सिद्धान्तः इत्यर्थः ।
सौदर्शनः—सुदर्शनस्थितः इत्यर्थः ॥]

४. कैवल्यतत्त्वमधिकृत्य वदन्ति सर्वे
विद्वत्तमा ननु ततोऽप्यधिकश्च पक्षः ।
लब्धः सतां द्रविडसंस्कृतशास्त्रदृष्टः
मध्यस्थमत्सरिजना इह मा च भूवन् ॥

५. सुदर्शनस्यकैवल्यसिद्धाञ्जनमुपेयुषा ।
वरदार्येण दासेन स्वाभिप्रायो निवेदितः ॥

[*''ரகு4பதியின் உண்மையான வாக்கே வெற்றிபெறும்''*

(1) ஸுக்3ரீவனின் பக்ஷம், (2) அனுமனின் பக்ஷம், (3) ராமபக்ஷம் என்று விபீ4ஷண*ஶ*ரணாக3தியை அங்கீ3கரிக்கும் விஷயத்தில் மூன்று பக்ஷங்கள் காட்டப்பட்டுள்ளன. ''ஸ்ரீவிபீ4ஷணன் து3ஷ்டனாகையாலே அங்கீ3கரிக்கத்தகாதவன்'' என்று ஸுக்3ரீவன் முதலானோர் சொல்லுவதைக் கேட்டு, '' விபீ4ஷணன் நல்லவனாகையாலே அங்கீ3கரிக்கத்தக்கவனே '' என்று அனுமன் பதில் கூறினான். அந்தப் பக்ஷத்தையும் தள்ளி, ''விபீ4ஷணன் து3ஷ்டனாயினும் கைக்கொள்ளத்தக்கவனே'' என்னும் மூன்றாவது பக்ஷத்தை ஸ்ரீராமபிரான் அருளினான். அவ்வண்ணமே கைவல்யவிஷயத்திலும் ஸுத3ர்*ஶ*னத்தில் வெளிவந்த நிர்ணயம் அசைக்கவொண்ணாதது என்று (ஸாராஸார விவேகஜ்ஞர்களாய், ப்ரமாணபரதந்த்ரர்களாய். நடுநிலைவகிப்பவர்களான) பெரியோர்கள் உகந்தருள்வார்கள் என்பது அடியேனது கருத்து. கைவல்யவிஷயத்தைக் குறித்து நீண்டகாலமாகப் பண்டி3தோத்தமர்கள் அனைவரும் இருவித4மான பக்ஷங்களைக் கூறிவந்தார்களல்லவா? அவ்விரு பக்ஷங்களைக் காட்டிலும் வேறுபட்டதாய், தென்மொழி வடமொழி *ஶா*ஸ்த்ரங்களில் காணப்படுவதாய், மூன்றாவதான தி3வ்யப்ரப3ந்த4வ்யாக்2யாதாக்களின் பக்ஷம் ஒன்றும் (தாத்பர்யதீ3பிகை, கைவல்யஸித்3த4ாஞ்ஜநம் முதலானவற்றில்) கிடைத்துள்ளது. இப்பக்ஷ விஷயத்தில் அனைவருமே 'இது சரியோ தவறோ' என்று தயங்குபவர்களாகவோ, இப்பக்ஷத்தில் மாத்ஸர்யம் கொண்டவர்களாகவோ ஆகாமலிருப்பார்களாக. ஸுத3ர்*ஶ*னத்திலுள்ள கைவல்யஸித்3த4ாஞ்ஜனத்தை விமர்*ஶி*த்த வரத3ாசார்ய த3ாஸனால் (இவ்வண்ணமாகத்) தன் கருத்து தெரிவிக்கப்பட்டது.]

இவ்வண்ணமாக ஸ்ரீவைஷ்ணவ ஸித்3த4ாந்தத்தின் முக்கியமான கொள்கைகளைத் தெளிவுபடுத்துவதாக இவ்வுரை அமைந்தது எம்பெருமானருளேயாகும்.

23—3—79. ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி தாஸன்.

பிழைதிருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
22	27	கிறது;	தாகிறது;
26	13	ப்ரக்தியை	ப்ரக்ருதியை
33	18	யிருத்த	யிருந்த
45	12	கொணட	கொண்ட
45	32	மிகுதியாவுகைடயார்க்கு	மிகுதியாகவுடையார்க்கு
50	25	கு3ணங்கனால்	கு3ணங்களால்
53	10	யுயைய	யுடைய
59	34	ஈடுபடுவனுக்கும்	ஈடுபடுபவனுக்கும்
61	33	அங்க3பரபதி	அங்க3ப்ரபத்தி
63	9	அலர்	அல்லர்
67	16	எம்பெ ரு	எம்பெரு
76	17	நிறைளடைய	நிறைவடைய
77	13	எம்பெருமானை அதற்குப்	அதற்குப்
77	20	''ஶப்3த3 ஹி	ஹி
77	21	ப்3ரஹ்ம	''ஶப்3த3 ப்3ரஹ்ம
77	24	இவளை	இவனை
98	15	காணவில்யோ	காணவில்லையோ
131	16	முயற்ச்சி	முயற்சி
139	31	யததே	யததே அத2வா நிவர்த்ததே
,,	32	முயல்கிருன்	முயல்கிருன் அல்லது மீள்கிருன்
,,	36	ப்ரயத்னத்திற்கும்	ப்ரயத்ன நிவ்ருத்திகளுக்கும்
140	3	ப்ரயத்ன	ப்ரயத்ன நிவ்ருத்தி
,,	8	ப்ரவ்ருத்தியை	ப்ரவ்ருத்தியை அல்லது நிவ்ருத்தியை
,,	19	உதா3ஸீநநாயிருக்	உதா3ஸீநனுயிருக்
,,	22	ப்ரயத்நங்களே	ப்ரயத்ந நிவ்ருத்திகளே
,,	27	ப்ரயத்நமும்	நிவ்ருத்தியும்
,,	35	ப்ரவ்ருத்திகளே	ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளே
141	3	ப்ரவ்ருத்திகளும்	ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும்
,,	23	ப4க்தியோக3த்தைப்	கர்மஜ்ஞானப4க்தி ப்ரபத்திகளில் ஒன்றை
142	13	நிவ்ருத்நி	நிவ்ருத்தி
156	30	தன்னைத தவிர	தன்னைத் தவிர
165	11	ஸ்வபா4வத்தலும்	ஸ்வபா4வத்தாலும்

196	11	சொவ்லுகிருன்	செல்லுகிருன்
202	3	அடைகிருர்கனோ.	அடைகிருர்களோ.
206	33	ப்ரணைவத்திற்கூப்	ப்ரணவத்திற்குப்
208	21	விளங்கிறது.	விளங்குகிறது.
209	4	இவ்வத்$_3$ர்வ	இவ்வத$_3$ர்வ
211	20	ஸ்த$_3$ாந	ஸ்த$_2$ாந
211	22	ஸிருந்தே அநுப$_3$விப்	லிருந்தே அநுப$_4$விப்
211	24	கேஷாஞ்சித	கேஷாஞ்சித்
211	26	க$_2$தி:	க$_3$தி:
213	2	ஜதார்த்த$_3$நாத்	ஜ ார்த்த$_3$நாத்
213	14	பூஜிக்கத்தவன்	பூஜிக்கத்தக்கவன்
215	8	ஆடைகிருன்.	அடைகிருன்.
219	8	முகதேப்$_4$யோ	முக்தேப்$_4$யோ
220	6	மண்ட$_3$ல	மண்ட$_3$ல
221	5	கைவவல்ய ஸ்த$_3$ானம்	கைவல்யஸ்த$_2$ானம்
232	21	பட்டதகையாலே	பட்டதாகையாலே
234	31	கொன்ளலாம் ஶரீரம்.	கொள்ளலாம். ஶரீரம்
237	22	பரமபத$_3$த்திற்குக்	பரமபத$_3$த்திற்குக்
240	33	றிலே	நிலே
250	22	யர்யாநுப$_4$வம்	வர்யாநுப$_4$வம்
250	29	விநாஶிந	விநாஶிந:
252	3	மிக்கதினில்	மிக்கதனில்
252	26	ப்ாகரணத்தில்	ப்ரகரணத்தில்
254	13	எண்ணே	எண்ணெய்
254	23	வ்ருததி	வ்ருத்தி
266	34	முன்ருவது	மூன்ருவது
270	28	ப்$_3$ாஹ்மாநு	ப்$_3$ரஹ்மாநு
271	2	பலவிடங்ளளில்	பலவிடங்களில்
272	18	யாத$_2$ாத்மய	யாத$_3$ாத்ம்ய
273	7	ப்$_3$ரஹ்மாநுப$_4$வவே	ப்$_3$ரஹ்மாநுப$_4$வமே
274	24	காணத்தை	கரணத்தை
275	5	ப்$_3$ாஹ்மாத்மக	ப்$_3$ரஹ்மாத்மக
282	1	பே$_4$ாக$_2$	பே$_4$ாக$_3$
297	25	த்$_3$வந்த$_3$வமோஹம்	த்$_3$வந்த்$_3$வ மோஹம்
308	1	அர்ச்சிராதி$_4$	அர்ச்சிராதி$_3$
308	31	நிஷ்ட$_3$னுக்கு	நிஷ்ட$_2$னுக்கு

ஸ்ரீ:

ஆளவந்தார் அருளிய
கீ3தார்த்த2 ஸங்க்3ரஹம்

[ஏழாவது அத்தியாயத்தின் சுருக்கம்]

स्वयाथात्म्यं प्रकृत्यास्य तिरोधिः शरणागतिः ।

भक्तभेदः प्रबुद्धस्य श्रैष्ठ्यं सप्तम उच्यते ॥ ११ ॥

11. ஸ்வயாத2ாத்ம்யம் ப்ரக்ருத்யாஸ்ய திரோதி4: ஶரணாக3தி: ।
ப4க்தபே4த3: ப்ரபு3த்3த4ஸ்ய ஶ்ரைஷ்ட்2யம் ஸப்தம உச்யதே ॥

ஸப்தமே—ஏழாவது அத்தியாயத்தில், **ஸ்வயாத2ாத்ம்யம்**—(உபாஸிக்கப்படும்) பரமபுருஷனை தன்னைப்பற்றிய உண்மைநிலையும், **ப்ரக்ருத்யா**—மூலப்ரக்ருதியினாலே, **அஸ்ய திரோதி4:**—இந்நிலை (ஜீவனுக்கு) மறைக்கப்படுவதும், **ஶரணாக3தி:**—(அம்மறைவைப் போக்கடிக்கும்) ஶரணாக3தியும், **ப4க்தபே4த3:**—உபாஸகர்களில் (நாலு) வகையும், **ப்ரபு3த்3த4ஸ்ய ஶ்ரைஷ்ட்2யம்**—(அந்நால்வரில்) ஞானியின் சிறப்பும், **உச்யதே**—கூறப்படுகிறது.

முதல் ஷட்கத்திற்கும் இரண்டாவது ஷட்கத்திற்கும் ஸங்க3தி (தொடர்பு)

"ஜ்ஞாநகர்மாத்மிகே நிஷ்டே2 யோக3லக்ஷ்யே ஸுஸம்ஸ்க்ருதே । ஆத்மாநுபூ4திஸித்3த்4யர்த்தே2 பூர்வஷட்கேந சோதி3தே" ॥ [(ஶேஷத்வ ஜ்ஞாநம், இதர விஷயங்களில் பற்றின்மை முதலான பு3த்3தி4 விஶேஷங்களாலே) நன்கு சிறப்பிக்கப்பட்ட ஜ்ஞாநகர்மயோக3ங்கள், (ஆத்ம ஸாக்ஷாத்காரமாகிற) யோக3த்தை அடையும் பொருட்டும், (அதற்குப் பின்) ஆத்மாநுப4வத்தை அடையும்பொருட்டும், (கீ3தையில்) முதல் ஆறு அத்தியாயங்களாலும் விதி4க்கப்பட்டன.] **"மத்4யமே ப4க3வத்தத்வ யாத2ாத்ம்யாவாப்தி ஸித்3த்4யே । ஜ்ஞாந கர்மாபி4நிர்வர்த்யோ ப4க்தி யோக3: ப்ரகீர்த்தித: ॥"** [நடு ஆறுஅத்தியாயங்களில் ப4க3வானாகிற பர தத்துவத்தின் உண்மை நிலையின் அநுப4வம் உண்டாவதன் பொருட்டு, ஜ்ஞாநத்தோடு கூடிய கர்மயோக3த்தாலே உண்டாகும் ப4க்தியோக3ம் சொல்லப்படுகிறது] என்று கீ3தார்த்த2ஸங்க்3ரஹத்தின் 2, 3–வது ஶ்லோகங்களில் அருளியபடியே, "மாமுபேத்ய" [8-16] என்கிறபடியே

வாதிகேஸரி ஜீயர் அருளிய

பகவத்கீதை வெண்பா—அத்தியாயம் 7

விஜ்ஞானயோகம்

பூர்வமத்₄யமஷட்கார்த்த₂ஸங்க₃தி

முன்னாறு நல்லுணர்வின் முற்றுங் கருமத்தாற்
றன்னா ருயிருணர்வு தானுரைத்துப்—பின்னார்வத்
தேறு மனத்தா லிறைவன்பா லன்புசெயல்
கூறு நடுவாறுங் கூர்ந்து.

முன் ஆறு—முதல் ஷட்கத்தினால் (ஆறு அத்தியாயங்களால்), *நல் உணர்வின் முற்றும் கருமத்தால்* — (ஆத்மாவைப்பற்றிய) உண்மையறிவினால் நிறைவடையும் கர்மயோக₃த்தால், *தன் ஆர் உயிர் உணர்வு தான் உரைத்து*—தனது அருமையான ஜீவாத்ம ஸ்வரூபத்தின் ஸாக்ஷாத்காரம் உண்டாவதைக் கூறி, *பின்*—அதன்பலனாக, *ஆர்வம் தேறு மனத்தால்* — அன்பு நிறைந்த நெஞ்சினால், *இறைவன் பால் அன்பு செயல்*—ஸர்வேச்வரனிடம் ப₄க்திசெலுத்துவதாகிற ப₄க்தியோக₃த்தை, *நடு ஆறும்*—(கீ₃தையின்) நடுவிலுள்ள ஆறு அத்தியாயங்களும், *கூர்ந்து கூறும்*—விரிவாக விளக்கும்.

பரமப்ராப்யமாய், "பரம் ப்₃ரஹ்ம பரம் த₄ாம" [10-12] என்கிறபடியே பரப்₃ரஹ்மமாய், புருஷோத்தமவித்₃யையிற்படியே குற்றமற்றவனாய், "அஹம் ஸர்வஸ்ய ப்ரப₄வ:" [10-8] என்கிறபடியே எல்லா உலகிற்கும் ஒரே காரணமாய் "மத்த: பரதரம் நாந்யத்" [7-7] என்று எல்லாமறிந்தவனாய், "ஸர்வம் ஸமாப்நோஷி ததோऽஸி ஸர்வ:" [11-40] என்கிறபடியே, (எங்கும் வ்யாபித்திருக்கையாலே) எல்லாமானவனாய், ஸத்யஸங்கல்பனாய், "பூ₄மிராப:" [7-4] என்று சொல்லப்படும் உப₄யவிபூ₄திப் பெருஞ் செல்வத்தையுடையவனாய், ஸ்ரிய:பதியான நாராயணனை அடைவதற்கு தத்க்ரதுந்யாயஸித்₃த₄மான நேர் உபாயமான (அவனைப்பற்றியதான) உபாஸநத்தை மத்₄யமஷட்கத்தில் விவரிப்பதற்த உறுப்பாக, முதல் ஷட்கத்தில்-அவ்வுபாஸநத்திற்கு அங்க₃மாய், ஆத்மஜ்ஞாநத்தோடுகூடிய கர்மயோக₃ாநுஷ்டா₂னத்தால் ஸாதி₄க்கப்படுமதான (ப்ராப்தாவான ஜீவாத்மாவை உள்ளபடி ஸாக்ஷாத்கரிப்பதாகிற) ஆத்ம ஸாக்ஷாத்காரமாகிற பரம்பரோபாயம் கூறப்பட்டது. இனி, மத்₄யமஷட்கத்தால் பரப்₃ரஹ்ம

श्रीः

अथ सप्तमोऽध्यायः ॥

॥ भा ॥ प्रथमेनाध्यायषट्केन—परमप्राप्यभूतस्य परस्य ब्रह्मणो निरवद्यस्य निखिलजगदेककारणस्य सर्वज्ञस्य सर्वभूतस्य सत्यसङ्कल्पस्य महाविभूतेः श्रीमतो नारायणस्य प्राप्त्युपायभूतं तदुपासनं वक्तुं, तदङ्गभूतमात्मज्ञानपूर्वककर्मानुष्ठानसाध्यं प्राप्तुः प्रत्यगात्मनो याथात्म्यदर्शनमुक्तम्। इदानीं मध्यमेन षट्केन परब्रह्मभूतपरमपुरुषस्वरूपं, तदुपासनं च भक्तिशब्दवाच्यमुच्यते। तदेतदुत्तरत्र * यतः प्रवृत्तिर्भूतानां

[ஏழாம் அத்தியாயத்தின் சுருக்கம்]

ஆங்குமுத லேழாமோத் தன்புக் கிலக்காகு
மோங்குமிறை மாயத் தொழிக்குமப்—பாங்கிற்
சரண நெறியடைந்தார் தம்பேத ஞானி
யரணுயர்வு சொல்லு மமைந்து.

ஆங்கு முதல்—அந்த மத்₄யமஷட்கத்தில் முதல் அத்தியாயமான, *ஏழாம் ஓத்து*—ஏழாம் அத்தியாயம், *அன்புக்கு இலக்காகும் ஓங்கும் இறை*—ப₄க்திக்கு விஷயமாகும் தலைசிறந்த ஸர்வேஶ்வரனையும், *மாயம்*—(அவனை ஜீவனுக்கு மறைக்கும்) ப்ரக்ருதியையும், *ஒழிக்கும் அப் பாங்கில் சரண நெறி*—(அம்மறைவைப்) போக்கடிக்கும் தன்மையையுடைய ஶரணாக₃தியையும், *அடைந்தார் தம் பேதம்*—உபாஸிப்பவர்களின் (நாலு வகையான) உட்பிரிவையும், *ஞானி அரண் உயர்வு*—(அந்நால்வரில்) *ஞானி* (எம்பெருமானுக்கே) த₄ாரகனுயிருக்கும் சிறப்புற்றவன் என்பதையும், *அமைந்து சொல்லும்*—நன்றாகக் கூறும்.

மான பரமபுருஷனுடைய ஸ்வரூபமும், அவனைப்பெற நேருபாயமான ப₄க்தியெனப்படும் பரமபுருஷோபாஸநமும் கூறப்படுகிறது. அங்க₃ம், ப்ராப்தா ஆகிய இரண்டையும் முதல் ஷட்கத்தில் கூறியபின் அங்கி₃, ப்ராப்யம் ஆகிய இரண்டையும் மத்₄யமஷட்கத்தில் கூறுகிறது என்றபடி. மோக்ஷோபாயமான இந்த ப₄க்தியே கடைசி ஷட்கத்திலும்,

येन सर्वमिदं ततम्। स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः॥ (१८.४६) इत्यारभ्य * विमुच्य निर्ममश्शान्तो ब्रह्मभूयाय कल्पते। ब्रह्मभूतः प्रसन्नात्मा न शोचति न काङ्क्षति। समस्सर्वेषु भूतेषु मद्भक्तिं लभते पराम्॥ (५४) इति संक्षिप्य वक्ष्यते। उपासनं तु भक्तिरूपापन्नमेव परप्राप्त्युपायभूतमिति वेदान्तवाक्यसिद्धम्। * तमेव विदित्वाऽतिमृत्युमेति (श्वे. ३. ८) * तमेवं विद्वानमृत इह भवति

"யத: ப்ரவ்ருத்திர் பூ$_4$தாநாம் யேந ஸர்வமித$_3$ம் ததம்।
ஸ்வகர்மணா தமப்$_4$யர்ச்ய ஸித்$_3$தி$_4$ம் விந்த$_3$தி மாநவ: ||"
[18-46]

[எந்தப் பரமபுருஷனிடமிருந்து எல்லாப் பொருள்களும் தோன்றி, வாழ்ந்து, மறைகின்றனவோ, எவனால் இவையனைத்தும் வியாபிக்கப் பட்டுள்ளதோ, அவனைத் தன் கர்மாநுஷ்டா$_2$னத்தால் ஆராதி$_4$த்து, அவனருளாலே அவனை அடைவதாகிற ஸித்$_3$தி$_4$யை மனிதன் அடைகிறான்.] என்று தொடங்கி,

'விமுச்ய நிர்மம: ஶாந்தோ ப்$_3$ரஹ்மபூ$_4$யாய கல்பதே ।
ப்$_3$ரஹ்மபூ$_4$த: ப்ரஸந்நாத்மா ந ஶோசதி ந காங்க்ஷதி ॥
ஸமஸ் ஸர்வேஷு பூ$_4$தேஷு மத்$_3$ப$_4$க்திம் லப$_4$தே பராம்||"
[18-53, 54]

[அஹங்காரம் முதலியவற்றை விட்டு, தன்னதல்லாதவற்றில் தன்னது என்னும் அபி$_4$மானமற்றவனாய், ஆத்மாநுப$_4$வத்தையே ஸுக$_2$மாகக் கொண்டவனாய், ஆத்மாவை அநுப$_4$விக்கிறான். ஸ்வரூபாவிர்ப$_4$ாவம் பெற்றவனாய், க்லேஶகர்மாதி$_3$களால் கலங்காதவனாய், எப்பொருளைக் கண்டும் வருந்துவதுமில்லை, எதையும் விரும்புவதுமில்லை ; அனைத்திலும் ஒருபடிப்பட ஆத$_3$ரமற்றவனாய், என்னிடம் மேலான ப$_4$க்தியை அடைகிறான்.] என்பதீருகச் சுருக்கமாகக் கூறப்படுகிறது.

வேத$_3$ாந்தஸித்$_3$த$_4$மான மோக்ஷோபாயம் ப$_4$க்தியே

இங்கு பின்வருமாறு பூர்வபக்ஷம் எழுகிறது ; அதாவது,—"தமேவ விதி$_3$த்வா அதிம்ருத்யுமேதி" [ஶ்வே 3-8] (அவனை அறிந்தால்தான் ஸம்ஸாரத்தைத் தாண்டலாம்) முதலான வாக்யங்களில் அறிவினாலேயே மோக்ஷத்தை அடையலாம் என்று ஏற்படுகிறது. "உபாஸீத"

(पु) इत्यादिनाभिहितं वेदनम्, * आत्मा वा अरेः... द्रष्टव्यनिदिध्यासितव्यः (बृ. ६. ५. ६.) आत्मानमेव लोकमुपासीत (३. ४. १५)

[ப்₃ருஹ 3-4-15] என்றும் வேத₃ வாக்யத்தினில் சொல்லப்படுகிறபடியால் உபாஸநரூபமான அறிவினால் மோக்ஷம் ஏற்படுகிறது என்று வேண்டுமாகில் கொள்ளலாம். ''ப₄க்தியினால் மோக்ஷம் ஏற்படுகிறது'' என்று ஒரு வேத₃வாக்யத்திலும் கூறப்படவில்லையே; ஶ்ருதியில் கர்மஜ்ஞாநங்களிரண்டையுங்கொண்டு மோக்ஷமடையலாம் என்று கூறியிருப்பதையும் கைவிடமுடியாது. மேலும், அத₂ர்வஶிகை₂, கௌஷீதகீப்ரதர்த்த₃நவித்₃யை முதலானவிடங்களில் உருத்திரன், இந்திரன் முதலானவரை உபாஸித்தாலும் மோக்ஷம் ஸித்₃தி₄க்கும் என்று கூறப்பட்டிருப்பதால், பரமபுருஷனாகிற நாராயணனை உபாஸித்தால்தான் மோக்ஷமடையலாம் என்றும் கூறமுடியாது.

இவ்வண்ணமாக எழுந்த பூர்வபக்ஷத்திற்குப் பரிஹாரம் உரைக்கும் ஸித்₃தா₄ந்தமாவது:—(1) மோக்ஷோபாயம் உபாஸநமே; வெறும் ஜ்ஞானமல்ல; (2) அதிலும் வெறும் உபாஸநமல்ல; ப₄க்திரூபமான உபாஸநமே மோக்ஷோபாயம்; (3) இத்தகைய உபாஸநமே மோக்ஷோபாயமேயொழிய கர்மமும் உபாஸநமும் சேர்ந்து நேரே மோக்ஷோபாயம் என்பதும் சரியல்ல. (4) அவ்வுபாஸநமும் பரமபுருஷ விஷயமேயொழிய, உருத்திரன், இந்திரன் முதலான தே₃வதைகள் விஷயமானதல்ல. இவ்விஷயங்களனைத்தும் வேத₃வாக்யங்களினாலேயே ஸித்₃தி₄க்கிறது. எப்படியெனில்:—(1) ஒரே விஷயத்தைப் பல வாக்யங்கள் பல ஶப்₃த₃ங்களால் சொல்லும்போது, ஸாமாந்யஶப்₃த₃ங்களை விஶேஷஶப்₃த₃ங்களில் பர்யவஸாநம் செய்வது (தேர்ந்த பொருளாக நிர்ணயிப்பது) நியாயமாகும். அப்படிப் பார்க்கும்போது, மோக்ஷோபாயமாகிற ஒரே விஷயத்தைக் கூறும் வாக்யங்களில் அம்மோக்ஷோபாயத்தைப் பல ஶப்₃த₃ங்களால் படித்திருப்பதைக் காண்கிறோம். அதாவது,— ''தமேவ விதி₃த்வா அதிம்ருத்யுமேதி'' [ஶ்வே 3-8] (பரமபுருஷனை அறிந்தால்தான் ஸம்ஸாரத்தைக் கடக்கிறான்.) ''தமேவம் வித்₃வாந் அம்ருத இஹ ப₄வதி'' [பு. ஸூ] (அப்பரமபுருஷனை இவ்வண்ணம் அறிபவனே முக்தனாக ஆகிறான்.) என்னும் வாக்யங்களில் வேத₃நம் எனப்படும் அறிவு மோக்ஷோபாயமாகப் படிக்கப்படுகிறது, ''ஆத்மாநமேவ லோகமுபாஸீத'' [ப்₃ருஹ 3-4-15] என்னும் வாக்யம் அறிவெனப்பட்ட அம்மோக்ஷோபாயத்தை உபாஸநமெனக் காட்டுகிறது. ஆக, முதல் வாக்யத்தில் காட்டப்பட்ட

* सत्त्वशुद्धौ ध्रुवा स्मृतिः, स्मृतिलम्भे सर्वग्रन्थीनां विप्रमोक्षः (छा. ७. २६. २), * भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः। क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे॥ (मु. २. २. ८) इत्यादिभिरैकार्थ्यात्स्मृतिसन्तानरूपं दर्शनसमानाकारं ध्यानोपासनशब्द-

---

அறிவு உபாஸநரூபமான அறிவு என்று இவ்விரண்டாம் வாக்யத்திலிருந்து தேறுகிறது. "ஸத்வஶுத்3தௌ4 த்4ருவா ஸ்ம்ருதி:, ஸ்ம்ருதிலம்பே4 ஸர்வக்3ரந்தீ2நாம் விப்ரமோக்ஷ:" [சாந் 7-26-2] [மனம் சுத்3தி4யடைந்தால் நிலையான நினைவு ஏற்படுகிறது; அந்நினைவு ஏற்பட்டவுடன் ஸாம்ஸாரிகமான எல்லா முடிச்சுகளும் அவிழ்கின்றன.] என்கிற வாக்யம் நிலையான நினைவை மோக்ஷோபாயமாகக் கூறுகிறது. முன்சொல்லப்பட்ட உபாஸநம் நிலையான நினைவாயிருக்கவேண்டுமென்று இதிலிருந்து தேறுகிறது. 'பி4த்3யதே ஹ்ருத3ய க்3ரந்தி2: சி2த்3யந்தே ஸர்வஸம்ஶயா: । க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்3ருஷ்டே பராவரே ॥" [முண்ட 2-2-8] [அப்பரம்பொருள் காணப்பட்டவளவில், ஹ்ருத3யத்திலுள்ள எல்லா முடிச்சுகளும் அவிழ்கின்றன. எல்லா ஐயங்களும் தொலைகின்றன; எல்லாக் கர்மங்களும் அழிகின்றன.] என்னும் வாக்யம், இந்த நிலையான நினைவாகிற உபாஸநம் நேரே காண்பது போலிருக்கவேண்டும் என்று காட்டுகிறது. இவ்வர்த்த2த்தையே "ஆத்மா வா அரே த்3ரஷ்டவ்ய: (ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ) நிதி3த்4யாஸிதவ்ய:" [ப்3ருஹ 6-5-6] [(கேட்கத்தக்கதும், நினைக்கத்தக்கதுமான) ஆத்மா நேரே காண்பதுபோல் த்4யானம் செய்யத்தக்கது.] என்னுமிடத்தில் ஒரே வேத3வாக்யம் காட்டுகிறது, "ஶ்ரோதவ்ய:, மந்தவ்ய:" எனப்படும் ஶ்ரவணமும், மனனமும் விதி4யில்லாமலே ராக3ப்ராப்தமாய் ஏற்படக்கூடியவையாகையால் அநுவாத3மாகும். "த்3ரஷ்டவ்ய: நிதி3த்4யாஸிதவ்ய:" என்று ஒரே வாக்யத்தில் விதி4க்கப்பட்டிருப்பதால், த்4யானமானது நேரே காண்பதுபோலிருக்கவேண்டும் என்று விதி4க்கப்படுகிறது என விளங்குகிறது. ஆக, பலவித4மான வேத3ாந்த வாக்யங்களில் விதி4க்கப்படும் மோக்ஷோபாயமாகிற அறிவு, நேரே காண்பது போன்ற உபாஸநம் எனும் த்4யாநரூபமாயிருக்கவேண்டுமென்று ஸித்3தி4த்தது. "நிதி3த்4யாஸிதவ்ய: த்3ரஷ்டவ்ய:" என்னுமிரண்டில் த3ர்ஶந ரூபமான த்4யானம் என்று த3ர்ஶனத்தை த்4யானத்தில் பர்யவஸாநம் செய்யாமல், த்4யான ரூபமான த3ர்ஶனம் என்று த்4யாநத்தை த3ர்ஶனத்தில் பர்யவஸாநம் செய்தால் என்ன? எனில்: உயர்ந்தவனை அரசனைத்

वाच्यमित्यवगम्यते। पुनश्च * नायमात्मा प्रवचनेन लभ्यो न मेधया न बहुना श्रुतेन। यमेवैष वृणुते तेन लभ्यस्तस्यैष आत्मा विवृणुते तनूं स्वाम्॥ (क. २. २३) इति विशेषणात् परेणात्मना वरणीयताहेतुभूतं

தாழ்ந்தவனை வேலைக்காரனாகக் கூறுவதில் அர்த்த₂மில்லை; அநர்த்த₂மும் உண்டு. தாழ்ந்தவனை வேலைக்காரனை உயர்ந்தவனை அரசனாகக் கூறுவதில் பயன் உண்டு. அதுபோல் தாழ்ந்ததான த்₄யானத்தை உயர்ந்ததான த₃ர்ஶனமாகக் கூறுவதே உசிதம். மற்றது உசிதமல்ல. த்₄யானமானது ப₄ாவநாப்ரகர்ஷம் எனப்படும் நினைவின் முதிர்ச்சியால் நேரே காண்பது போலிருப்பதை "வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பஶ்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்ப₃ரம் । க்₃ருஹீத த₄நுஷம் ராமம் பாஶஹஸ்தமிவாந்தகம் ॥" [ரா-ஆ 39-14] [மரவுரி மான்தோலுடுத்து, வில்லெடுத்த ராமனை மரங்கள் தோறும் காண்கின்றேன்] என்று மாரீசன் சொன்னதுபோன்றவிடங்களில் ப₄யந்தவர்களிடத்திலும், "லீநேவ ப்ரதிபி₃ம்பி₃தேவ" [மாலதீமாத₄வம் 5] முதலான விடங்களில் காமுகர்களிடத்திலும் காண்கிறோம். ஆக, இவ்வாக்யங்களனைத்தும் நேரே காண்பதுபோன்ற உபாஸநமெனப்படும் த்₄யானத்தை மோக்ஷோபாயமாகக் குறிக்கின்றன என்று தேறிற்று.

(2) இனி, இவ்வுபாஸநம் கேவலத்₄யானமன்று, ப₄க்திரூபமாயிருப்பதே என நிரூபிக்கப்படுகிறது. எப்படியெனில்: "நாயமாத்மா ப்ரவசநேந லப்₄ய: ந மேத₄யா ந ப₃ஹுநா ஶ்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்₄ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம் ॥" [கட 2-23] [இப்பரமாத்மா (அன்பில்லாத) (மநநத்தாலோ அதன் கார்யமான) ப்ரவசநத்தாலோ, த்₄யானத்தாலோ, பலவித₄மான ஶ்ரவணத்தாலோ அடையத்தக்கவனல்லன்; எவனை இப்பரமாத்மா வரிக்கிறானோ அவனாலேயே இவன் அடையத்தக்கவன். அந்த ஜீவனுக்கு இப்பரமாத்மா தன் ஸ்வரூபத்தை வெளிப்படுத்துகிறான்.] என்னும் வேத₃வாக்யமானது—தியானமானது அன்பற்றதாயிருந்தால் பயனற்றது; ஸ்நேஹபூர்வத்₄யானமான ப₄க்தியாயிருந்தால் தான் பரமாத்மாவை அடைவிக்கும் என்று காட்டுகிறது. "ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதி₃த்₄யாஸிதவ்ய:" என்று விதி₄க்கப்பட்ட ஶ்ரவண மநநங்களை முன்னிட்ட தியானத்தை இங்கு அடியோடு நிஷேதி₄ப்பது முரண்படுமாகையால், அன்பற்ற ஶ்ரவணமநநத்₄யானங்களே இங்கு பரமாத்ம ப்ராப்தியில் பயனற்றவை என்று நிஷே

स्मर्यमाण[विषयस्य]त्यर्थप्रियत्वेन स्वयमप्यत्यर्थप्रियरूपं स्मृतिसन्तानमेवोपासनशब्दवाच्यमिति हि निश्चीयते। तदेव हि भक्तिरित्युच्यते, * स्नेहपूर्वमनुध्यानं भक்तिरित्यभिधीयते (लै. उ.) इत्यादिवचनात्।

தி₄க்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். இம்மந்திரத்தில் "யமே வைஷ:......" என்று தொடங்கி, பரமாத்மாவே ஜீவனை வரிக்கிருன் என்று சொல்லியிருந்தபோதிலும், அதில் பரமாத்மாவினுல் வரிக்கத் தகுந்த ஒரு கு₃ணவிஶேஷத்தை உடையவனுயிருப்பதினுல்தான் இந்த ஜீவன் பரமாத்மாவினுல் வரிக்கப்படுகிருன் என்பதும், வரிக்கத் தக்கவனுயிருப்பதற்கு உறுப்பான கு₃ணவிஶேஷமான ப₄க்தியே இங்கு விதி₄க்கப்படுகிறது என்றும் விளங்குகிறது. மிகவும் இனியவனு யிருப்பவனன்ரே வரிக்கத்தக்கவனுகிருன். ஆகையால், பரமாத்மாவினிடம் பேரன்பு வைப்பவனே அவனுல் வரிக்கப்படுகிருன் என்பது ஸித்₃த₄ம். "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்த₂ம் அஹம் ஸ ச மம ப்ரிய:" [7-17] [ஜ்ஞானிக்கு நான் வர்ணிக்கமுடியாத அளவுக்கு ப்ரியமானவன்; (அதனுலேயே) அவனும் எனக்கு ப்ரியமானவன்.] என்று கீ₃தாசார்யனே இவ்வர்த்த₂த்தை வெளிப்படுத்துகிருன். ஆகையால், இந்த நாயமாத்மாஶ்ருதியில், பரமாத்மா ஜீவனை வரிப்பதற்குக் காரணமாயிருப்பதாய், தியானிக்கப்படும் பரமாத்மஸ்வரூபம் உபாஸகனுக்கு மிகவும் இனியதாயிருக்கையாலே தானும் இனிமையே வடிவெடுத்ததாயிருப்பதாய், தொடர்ந்த நினைவாயிருக்கும் த்₄யானமே உபாஸனம் எனப்படுகிறது என்றும், அதுவே ப₄க்தி எனப்படுகிறது என்றும் விளங்குகிறது. "ஸ்நேஹபூர்வமநுத்₄யாநம் ப₄க்திரித்யபி₄தீ₄யதே" [லைங்க₃ம்] [(உயர்ந்தவர் விஷயத்தில்) ஸ்நேஹத்தை முன்னிட்ட தியானமே ப₄க்தி எனப்படுகிறது] என்றல்லவோ ப₄க்திலக்ஷணம் கூறப்படுகிறது. இந்த ப₄க்தியே "யா ப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ। த்வாமநுஸ்மரத: ஸா மே ஹ்ருத₃யாந்மாபஸர்பது॥" என்றபடி ... "தேஷு² தேஷ்வச்யுதா ப₄க்திரச்யுதாஸ்து ஸதா₃ த்வயி॥" [வி.பு1-20-18] [அச்யுதனே! விவேகமற்றவர்களுக்கு விஷயங்களில் (காலதத்வமெல்லாமநுப₄வித்தாலும்) தொலையாத யாதொரு ப்ரீதி ஒவ்வொரு விஷயத்திலும் உள்ளதோ, அந்த ஒவ்வொரு அழியாத ப்ரீதியும் எப்போதும் உன்னிடமே எனக்கு ஏற்படட்டும்.] என்றும், "க்வ நாகப்ருஷ்ட₂க₃மநம் புநராவ்ருத்திலக்ஷணம் । க்வ ஜபோ வாஸு²தே₃வேதி முக்திபீ₃ஜமநுத்தமம்: ॥" [வி. பு. 2-6-34] (மறுபடியும் திரும்பிவரக்கூடிய சுவர்க்கத்தை அடைவது எவ்வளவு தாழ்ந்தது? ஒப்பற்ற முக்திஸாத₄னமான வாஸு²தே₃வ மந்த்ரஜபம் எவ்வளவு உயர்ந்தது?) என்றும் விஷ்ணு புராணத்தில் காட்டப்பட்டது.

अतः-* तमेवं विद्वानमृत इह भवति, नान्यः पन्था अयनाय विद्यते (पु)
* नाहं वेदैर्न तपसा न दानेन न चेज्यया। शक्य एवंविधो द्रष्टुं
दृष्टवानसि मां यथा।। भक्त्या त्वनन्यया शक्य अहमेवंविधोऽर्जुन।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परन्तप।। (गी. ११. ५३, ५४)

"தமேவம் வித்₃வாநம்ருத இஹ ப₄வதி நாந்ய: பந்தா₂ அயநாய வித்₃யதே" [பு. ஸூ] [அவனே இப்படி அறிபவனே இங்கு மோக்ஷமடைகிறான். மோக்ஷமடைய வேறு வழியில்லை,] என்று ஶ்ருதிகளில் பரமபுருஷஜ்ஞாநமே மோக்ஷோபாயமாக முழங்கப்பட்டது.

"நாஹம் வேதை₃ர் ந தபஸா ந தா₃நேந ந சேஜ்யயா।
ஶக்ய ஏவம்விதோ₄ த்₃ரஷ்டும் த்₃ருஷ்டவாநஸி மாம் யதா₂ ॥
ப₄க்த்யா த்வநந்யயா ஶக்ய அஹமேவம்விதோ₄ऽர்ஜுந।
ஜ்ஞாதும் த்₃ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥"
[கீ₃தை 11-53, 54]

[நீ என்னைக் கண்டதுபோல், (என்னிடம் ப₄க்தியில்லாமல்) வேத₃ங்களை அத்₄யயநம் செய்வது முதலானவற்றாலும், தவத்தாலும், தா₃னத்தாலும், யாக₃த்தாலும் நான் காணத்தக்கவனல்லன். வீரனான அர்ஜுனனே! வேறொன்றையும் கருதாத ப₄க்தி ஒன்றினாலேயே நான் இவ்வண்ணமாக உள்ளபடி அறிவதற்கும், காண்பதற்கும், அடைவதற்கும் தகுந்தவனாகிறேன்.] என்று கீ₃தை முதலான உபப்₃ரும் ஹணங்களில் ப₄க்தியே மோக்ஷோபாயமாக உத்₃கோ₄ஷிக்கப்பட்டது, இப்படி அறிவென்றும், ப₄க்தியென்றும் கூறப்படும் மோக்ஷோபாயம் ஜ்ஞாந விஶேஷமான ப₄க்தியே என்று கொண்டால்தான் ஶ்ருதிகளுக்கும், ஸ்ம்ருதிகளுக்கும் முரண்பாடு இல்லாமலிருக்கும். ஆக, வேத₃நம், த்₄யாநம், உபாஸநம் எனப்படும் மோக்ஷோபாயம் ப₄க்தியே என்று ஸித்₃தி₄த்தது.

(3) இனி, இத்தகைய உபாஸநம் மோக்ஷோபாயமேயொழிய கர்மமும் உபாஸநமும் சேர்ந்து நேரே மோக்ஷோபாயம் என்பதும் சரியல்ல என்னும் ப்ரதிஜ்ஞையும் தன்னடையே ஸித்₃தி₄க்கும். எப்படியெனில்; " நாந்ய: பந்தா₂ அயநாய வித்₃யதே " என்னும் ஶ்ருதியில் ஜ்ஞாநம் தவிர வேறு மோக்ஷோபாயமில்லை என்று கூறியிருக்கையால் கர்மம் நேரே மோக்ஷோபாயமல்ல என்று தேறுகிறது;

इत्यनयोरेकार्थत्वं सिद्धं भवति। तत्र सप्तमे तावदुपास्यभूतपरमपुरुष-[स्वरूप]याथात्म्यं, प्रकृत्या तत्तिरोधानं, तन्निवृत्तये भगवत्प्रपत्तिः, उपासकविधाभेदो, ज्ञानिनश्श्रैष्ठ्यं चोच्यते ॥

"அவித்₃யயா ம்ருத்யும் தீர்த்வா" [ஈஶ 11] என்று கர்மத்திற்கு மோக்ஷோபாயத்வம் சிலவிடங்களில் கூறியிருப்பதும், "வித்₃யயா அம்ருதமஶ்நுதே" [ஈஶ 11] என்று நேரே மோக்ஷோபாயமாயிருக்கும் ஜ்ஞாநத்திற்குக் கர்மம் அங்க₃மாயிருப்பதினாலேயே என்று நிர்வஹித்துவிடலாமாகையாலே கர்மமும் ஜ்ஞாநமும் சேர்ந்து மோக்ஷோபாயம் என்பதும் சரியல்ல எனத் தேறுகிறது.

(4) இனி, இவ்வுபாஸநம் பரமபுருஷவிஷயமேயொழிய உருத்திரன் இந்திரன் முதலான தே₃வதைகள் விஷயமானதல்ல என்னும் ப்ரதிஜ்ஞையும் தன்னடையே தேறிநிற்கும். எப்படியெனில்: "தமேவ விதி₃த்வா அதிம்ருத்யுமேதி" [ஶ்வே 3-8] என்னும் ஶ்வேதாஶ்வதர வாக்யமும், "தமேவம் வித்₃வாநம்ருத இஹ ப₄வதி" [பு. ஸூ] என்னும் புருஷஸூக்தவாக்யமும் ஒருவனையே உபாஸிக்கத்தக்கவனாகக் கூறுகையால், புருஷஸூக்தத்தில் லக்ஷ்மீபதியாகக் கூறப்படும் நாராயணனே ஶ்வேதாஶ்வதரம் முதலான மற்ற உபனிஷத்துக்களிலும் உபாஸிக்கத்தக்கவனாகக் கூறப்படுகிறான் என்று ஸர்வஶாக₂ாப்ரத்யயந்யாயத்தாலே ஸித்₃தி₄த்தது. "மஹாந் ப்ரபு₄ர் வை புருஷ: ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக:" [ஶ்வே 3-12] என்று அந்த ஶ்வேதாஶ்வதரத்தில் பரம்பொருளை ஸத்வப்ரவர்த்தகன் என்று கூறியிருப்பதிலிருந்தும் பரமஸத்வஸமாஶ்ரயனை விஷ்ணுவே அவ்வுபனிஷத்திலும் பரம்பொருளாகக் கூறப்படுகிறான் என உறுதியாகிறது. ஆகையால், அவ்வுபனிஷத்தில் படிக்கப்படும் ஶிவருத்₃ராதி₃ஶப்₃த₃ங்களும் பரமமங்க₃ளமானவனும், ஸம்ஸார வியாதியைப் போக்கடிப்பவனுமான பரமபுருஷனையே குறிக்கின்றன என விளங்குகிறது. இந்த நியாயத்தாலே அத₂ர்வஶிகை₂ முதலான மற்ற சில உபனிஷத்துக்களில் படிக்கப்படும் ஶிவாதி₃ஶப்₃த₃ங்களும் நாராயணபரமே என விளங்குகிறது. ப்ரதர்த்த₃நவித்₃யையில் இந்த்₃ரனுக்கு மோக்ஷோபாயத்வம் சொன்னது இந்த்₃ரனுக்கு அந்தர்யாமியான பரமபுருஷனுக்கே சேரும் என்று இந்த்₃ரப்ராணாதி₄கரணத்தில் நிர்ணயிக்கப்பட்டது. இதே ரீதியில் அத₂ர்வஶிரஸ்ஸில் ருத்₃ரனுக்குக் கூறப்படும் ஜக₃த்காரணத்வமும் ருத்₃ராந்தர்யாமியான நாராயணனுக்கே சேரும் என்று காணலாம். நமது விஷ்ணுசித்த

श्रीभगवानुवाच —
मय्यासक्तमनाः पार्थ योगं युञ्जन्मदाश्रयः ।
असंशयं समग्रं मां यथा ज्ञास्यसि तच्छृणु ॥ १ ॥

ஸ்ரீப₄க₃வாநுவாச—
1. மய்யாஸக்தமநா: பார்த்த₂ யோக₃ம் யுஞ்ஜந் மத₃ாஶ்ரய: ।
அஸம்ஶயம் ஸமக்₃ரம் மாம் யதா₂ ஜ்ஞாஸ்யஸி தச்ச்₂ருணு ॥

ஸ்ரீப₄க₃வாந் உவாச—ப₄க₃வான் கூறினன்:— பார்த்த₂— குந்தீபுத்ரனே! மயி—என்னிடத்தில் ஆஸக்தமநா:—மிகவும் ஈடுபட்ட மனத்தையுடையவனுய், மத₃ாஶ்ரய:—என்னையே ஆத₄ாரமாகக் கொண்டவனுய், யோக₃ம் யுஞ்ஜந்—(என் விஷயமான) ப₄க்தியோக₃த்தைத் தொடங்குகின்ற நீ, மாம்—(அந்த யோக₃த்திற்கு விஷயமான) என்னை, அஸம் ஶயம்—ஐயமற, ஸமக்₃ரம்—முழுவதும், யதா₂ ஜ்ஞாஸ்யஸி— எந்த அறிவினுலே உணர்வாயோ, தத்—அவ்வறிவை, ஶ்ருணு—கவனமாகக் கேள்.

---

1. என்னமரு நெஞ்சனுய் யோகத் தியல்வுற்றே
நின்னமரு மென்பற்ருய் நின்றநீ—யு(மு)ன்னினைவு(யு)
முண்மயக்கற் றென்றெழியா தென்னை யுணர்வண்ணந்
திண்மையுறக் கேள்பார்த்தா தீர்ந்து.

விஜயத்திலே விரிவு கண்டுகொள்வது. ஆக, இந்நாலு ப்ரதிஜ்ஞை களாலும், பரம்பொருளான நாராயணன் விஷயமான ப₄க்திரூப மான ஜ்ஞானத்தாலேயே பரமாத்மப்ராப்திரூபமான மோக்ஷத்தை அடையலாம் என்று நிர்ணயிக்கப்பட்டது. இவ்விஷயமே கீ₃தையின் மத்₄யமஷட்கமான நடு ஆறு அத்தியாயங்களில் விளக்கப்படுகிறது.

அந்த ஷட்கத்தில் முதலாவது அத்தியாயமான இவ்வேழாம் அத்தியாயத்தில் — உபாஸிக்கத்தக்கவனுக ஆருமத்தியாயத்தின் கடைசியில் "ஶ்ரத்₃த₄ாவாந் ப₄ஜதே யோ மாம்" என்று கூறப்பட்ட பரமபுருஷனை தன்னைப்பற்றிய உண்மைநிலையும், மூலப்ரக்ருதி யினுலே இந்நிலை ஜீவனுக்கு மறைக்கப்படுவதும், அம்மறைவைப் போக்கடிக்கும் பரமபுருஷ ஶரணுக₃தியும், உபாஸகர்களில் நாலு வகை யும், அந்நால்வரில் ஞானியின் சிறப்பும் கூறப்படுகிறது.

॥भा॥ मय्याभिमुख्येन सक्तमनाः—मत्प्रियत्वातिरेकेण मत्स्व-रूपेण गुणैश्च चेष्टितेन मद्विभूत्या विश्लेषे सति तत्क्षणादेव विशीर्य-

---

பார்த்தா—குந்தியின் பிள்ளையே! **என் அமரும் நெஞ்சனாய்**—என்னிடத்திலே மிகப்பொருந்திய நெஞ்சை உடையவனாய், **நின் அமரும் என்பற்றாய்**—உன் ஸ்வரூபமும் என்னையே ஆத4ாரமாகப் பெற்றவனாய், **யோகத்து இயல்வுற்றே நின்ற நீ**—(என் விஷயமான) ப4க்தியோக3த்தைத் தொடங்கி நிற்கும் நீ, **உன் நினைவும்**—(என்னைப் பற்றிய) உன் அறிவும், **உள் மயக்கு அற்று**—ஐயம் இல்லாமல், **ஒன்று ஒழியாது**—முழுவதுமாக, **என்னை உணர் வண்ணம்**—என்னை அறியும்படியாக, **தீர்ந்து**—கவனமாக, **திண்மை உற கேள்**—நன்றாகக் கேட்பாயாக.

---

1. (ஸ்ரீப4க3வாநுவாச) சென்ற ஷட்கத்தின் கடைசி ஶ்லோகத்தில் "மாம்" என்னும் பத3த்தாலே ப4க்தி செய்யத்தக்கவனாகக் கூறப்பட்ட தன்னைப்பற்றிய உண்மையறிவை ப4க்தி செய்வதன் பொருட்டு இனி உபதே3ஶிக்கிறேன் என்று ஜ்ஞாநம் முதலான கு3ணங்களால் நிறைவுபெற்ற கண்ணன் கூறுகிறான். (மயி ஆஸக்த மநா:) என்னிடம் மிகவும் ஈடுபட்ட நெஞ்சையுடையவனாய். ஸக்த பத3ம் ஈடுபாட்டைக் குறிக்கிறது, 'ஆஸக்த' என்று ஆபி4முக்2யத்தோடு கூடிய ஈடுபாட்டைக் குறிக்கிறது. ஆபி4முக்2யமாவது பரம புருஷனை மிகவும் ப்ரியனாக (இனியனாகக்) கொள்ளுகை. (ஆஸக்த மநா:) இப்படிப் பரமபுருஷனே தனக்கு மிகவும் இனியனாகையாலே அவனுடைய ஸ்வரூபரூபகு3ணசேஷ்டிதவிபூ4திகளைப் பிரியும்போது-அதாவது அவற்றின் அநுப4வம் தனக்குக் கிடைக்காதபோது அக்கணத்திலேயே அழியத் தொடங்குகையாலே அவனிடம் மிகவும் ஈடுபட்ட நெஞ்சை உடையவன் என்றபடி. ஆழ்வார்களைப் போன்ற ப4க்திபரவஶர்கள் "பிறந்தவாறும், வளர்ந்தவாறும், பெரியபாரதம் கைசெய்து ஐவர்க்குத் திறங்கள் காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களும், நிறந்தனூடுபுக்கு எனதாவியை நின்று நின்று உருக்கி உண்கின்ற" "வதுவை வார்த்தையுள் ஏறுபாய்ந்ததும், மாயமாவினை வாய்பிளந்ததும், மதுவைவார் குழலார் குரவை பிணைந்த குழகும், அது இது உது என்னலாவனவல்ல என்னை உன் செய்கை நைவிக்கும்" "பெய்யும் பூங்குழல் பேய்முலையுண்ட பிள்ளைத்தேற்ற

माणस्व[भाच]रूपतया मयि सुगाढं बद्धमना: तथा मदाश्रय:—स्वयं च

மும், பேர்ந்து ஓர் சாடிறச் செய்ய பாதமொன்றால் செய்த நின் சிறுச்சேவகமும், நெய்யுண் வார்த்தையுள் அன்னை கோல்கொள்ள நீயுன் தாமரைக் கண்கள் நீர்மல்கப் பையவே நிலையும் வந்தென் நெஞ்சை உருக்குங்களே'' ''உண்ண வானவர்கோனுக்கு ஆயர் ஒருப்படுத்த அடிசில் உண்டதும் வண்ணமால் வரையை எடுத்து மழை காத்ததும், மண்ணை முன் படைத்து உண்டுமிழ்ந்து கடந்து இடந்து மணந்த மாயங்கள் எண்ணும் தோறும் என் நெஞ்சு எரிவாய் மெழுகு ஒக்கும் நின்றே'' ''நின்றவாறும் இருந்தவாறும் கிடந்த வாறும் நினைப்பரியன ஒன்றலாவுருவாய் அருவாயநின் மாயங்கள் நின்று நின்று நினைக்கிறேன் உன்னை எங்ஙனம் நினைகிற்பன்'' ''ஒண்சுடரோடிருளுமாய் நின்றவாறும் உண்மையோடின்மையாய் வந்து, என் கண்கொளாவகை நீ கரந்தென்னைச் செய்கின்றன எண் கொள் சிந்தையுள் நைகின்றேன் என் கரியமாணிக்கமே!'' ''திருவுருவு கிடந்தவாறும் கொப்பூழ்ச்செந்தாமரைமேல், திசைமுகன் கருவுள் வீற்றிருந்து படைத்திட்ட கருமங்களும், பொருவில் உன் தனிநாயக மவை கேட்குந்தோறும் என் நெஞ்சம் நின்று நெக்கு அருவி சோரும் கண்ணீர்'' ''அடியை மூன்றை இரந்தவாறும் அங்கே நின்று ஆழ் கடலும் மண்ணும் விண்ணும் முடிய ஈரடியால் முடித்துக் கொண்ட முக்கியமும், நொடியுமாறவை கேட்குந்தோறும் என் நெஞ்சம் நின்ற எனக்கே கரைந்துகும்'' ''கூடி நீரைக்கடைந்தவாறும் அமுதம் தேவர் உண்ண அசுரரை வீடும் வண்ணங்களே செய்துபோன வித்தகமும் ஊடுபுக்கு எனதாவியை உருக்கி உண்டிடுகின்ற'' [திருவாய்மொழி 5-10] ''பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண் சுழலும்'' [பெரிய திருவ-34] ''இனிதிரைத் திவலை மோத எறியும் தண் பரவைமீதே தனிகிடந்தரசுசெய்யும் தாமரைக் கண்ணனெம்மான் கனியிருந்தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள் பனியரும்புதிருமாலோ என் செய்கேன் பாவியேனே'' [திருமாலை-18] ''கடல் நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமா கண்டு உடல் எனக்கு உருகுமாலோ என் செய்கேன் உலகத்தீரே!'' [திருமாலை-19] ''அணியினார் செம்பொனாய அருவரையனைய கோயில் மணியனார் கிடந்தவாற்றை மனத்தினால் நினைக்கலாமே'' [திருமாலை-21] ''காலுமெழா கண்ணநீரும் நில்லா உடல் சோர்ந்து நடுங்கிக் குரல் மேலுமெழா மயிர்க்கூச்சுமறா என தோள்களும் வீழ்வொழியா'' [பெரியாழ்திரு 5-3-5] என்று பரமபுருஷனுடைய

मया विना विशीर्यमाण[स्वरूप]तया मदाश्रयो–मदेकाधारः, मद्योगं युञ्जन्—योक्तुं प्रवृत्तो योगविषयभूतं मामसंशयं—निस्संशयम्,

---

ஸ்வரூப ரூப கு₃ண விபூ₄தி சேஷ்டிதங்களை நினைத்தவுடனேயே நெஞ்சும், ஆவியும், உடலும் உருகப்பெறுவர்கள். அவற்றில் பிரிவு (அநுப₄வமின்மை) ஏற்பட்டாலோவெனில் மயக்கத்தை அடைந்து தாய்ப் பேச்சாலே பேசவேண்டியிருக்கும் நிலையை அடைவர்கள். அந் நிலையில் "ஆடி யாடி அகங் கரைந்து இசை பாடிப் பாடிக் கண்ணீர் மல்கி, எங்கும் நாடி நாடி நரசிங்கா என்று வாடி வாடும் இவ் வாணுதலே" "வாணுதல் இம்மடவரல் உம்மைக்காணும் ஆசையுள் நைகின்றுள்" "இரக்க மனத்தோடு எரியணை அரக்கும் மெழுகும் ஒக்குமிவள்" [திருவாய்-2-4] "கங்குலும் பகலும் கண்துயில் அறியாள் கண்ண நீர் கைகளாலிறைக்கும்" "வெவ்வுயிர்த்துயிர்த் துருகும்" "வானமே நோக்கும் மையாக்கும்" "உள்ளுருகும்" "இட்டகால் இட்டகைகளாயிருக்கும், எழுந்துலாய் மயங்கும் கைகூப்பும், "'கட்டமே காதல்' என்று மூர்ச்சிக்கும்" "சிந்திக் கும் திசைக்கும் தேறும் கைகூப்பும்" "அழும் தொழும் ஆவி அனல வெவ்வுயிர்க்கும்" [திருவாய்-7-2] "ஓதிலும் நின்பேரன்றி மற்றோதாள் உருகும் நின் திருவுரு நினைந்து காதன்மை பெரிது கையறவுடையள் கயல்நெடுங்கண்துயில் மறந்தாள்" [பெரிய திரு 2-7-5] என்கிறபடியே இவர்களது த₃ஶை வாசாம் அகோ₃சரமா யிருக்கும். உபாஸகர்களுக்கோவெனில், ஸம்ஶ்லேஷத₃ஶையில் த₄ரித்து நின்று நினைத்தால்தான் உபாஸநமாகிற ஸாத₄நம் கைகூடு மாகையால், ஸம்ஶ்லேஷத₃ஶையில் இவர்களது கரணங்கள் அழிய மாட்டா. விஶ்லேஷத₃ஶையிலேயே கரணங்கள் ஶிதி₂லமாகும். இதைத் திருவுள்ளத்திற்கொண்டே "விஶ்லேஷே ஸதி" என்று இங்கு அருளினர் ப₄ாஷ்யகாரர். (மதா₃ஶ்ரய:) தன் நெஞ்சு மாத்திர மல்லாமல், தானும் என்னைப் பிரிந்தால் த₄ரிக்கமாட்டாமையாலே என்னையே ஆத₄ாரமாகக் கொண்டவனாய். "அப்₃ப₄க்ஷ" (காற்றையே ஆஹாரமாகக் கொண்டவன்) என்றவிடத்திற்போலே 'மதா₃ஶ்ரய:' என்றவிடத்திலும் ஸமாஸத்தின் நடுவில் ஏவகாரத்தைக்கொண்டு 'என்னையே ஆத₄ாரமாகக் கொண்டவன்' எனப் பொருள்கொள்ள வேணும்; என் அநுப₄வத்தையே த₄ாரகமாகக் கொண்டவன் என்றபடி. (மய்யாஸக்தமநா: மதா₃ஶ்ரய:) "முந்துற்ற நெஞ்சே" [பெரிய திருவ 1] "என்னை நெகிழ்க்கிலும் என்னுடை நன்னெஞ்சந்தன்னை அகல்விக்கத் தானும் கில்லான் இனி" [திருவாய் 1-7-8] என்கிற

समग्रम्—सकलम्, यथा ज्ञास्यसि—येन ज्ञानेनोक्तेन ज्ञास्यसि; तज्ज्ञानमवहितमनाः त्वं शृणु ॥

படியே ப₄க்தனைக்காட்டிலும், அவனுடைய நெஞ்சு ப₄க₃வத்₃ விஷயத்தில் முன்நிற்கையாலே முதலில் நெஞ்சைச் சொல்லிப் பிறகு அவனைச் சொல்லுகிறான். வெண்பாவில் தனிச்சீர் "முன் நினையும்" என்று பாட₂மானபோது "என் அமரும் நெஞ்சனாய்" என்றவிடத்தில் நெஞ்சுக்கு விஶேஷணமாகி, இப்பொருளைக் காட்டுகிறது. (யோக₃ம் யுஞ்ஜந்) என் விஷயமான ப₄க்தியோக₃த்தைத் தொடங்குகின்றவனான நீ. 'யுஞ்ஜந்' என்னும் பத₃த்தில் 'ஶத்ரு' ப்ரத்யயத்தினால் காட்டப்படும் நிகழ்காலம் இங்கு யோக₃ம் தொடங்கப்பெற்று முடிவுறாமலிருக்கையைக் காட்டுகிறது. யோக₃த்தைத் தொடங்குவதற்கு உறுப்பான ப₄க₃வத்₃விஷய ஜ்ஞானத்தை இந்த ஶ்லோகம் முதலாக உபதே₃ஶிக்கத் தொடங்குகிறானாகையால் இது யோகா₃நுஷ்டா₂னத்தைக் குறிக்காது. (மாம் அஸம்ஶயம் ஸமக்₃ரம் யதா₂ ஜ்ஞாஸ்யஸி) எந்த அறிவைக் கூறினால் யோக₃த்திற்கு விஷயமான என்னை ஐயமறவும், பரிபூர்ணமாகவும் நீ அறிவாயோ. (மாம் யதா₂ ஜ்ஞாஸ்யஸி) யோக₃த்திற்கு விஷயமான என்னை முதலில் அறிந்தால் தான் ப₄க்தியோக₃த்தைத் தொடங்கலாம் என்று கருத்து. (அஸம்ஶயம் யதா₂ ஜ்ஞாஸ்யஸி) அதுவும் ஐயமற அறிந்தால்தான் தொடங்க முடியும் என்று கருத்து (ஸமக்₃ரம் யதா₂ ஜ்ஞாஸ்யஸி) அதிலும் பரிபூர்ணமாக அறிந்தால்தான் ஐயமற அறியமுடியும் என்று கருத்து. (யதா₂ ஜ்ஞாஸ்யஸி) மேலே "தத் ஶ்ருணு" [அதைக்கேள்] என்றிருக்கையாலும். மேல் ஶ்லோகத்தில் "ஜ்ஞாநம் தேऽஹம் வக்ஷ்யாமி" [உனக்கு நான் அறிவைச் சொல்லுகிறேன்] என்றிருக்கிறபடியாலும், தான் சொல்லப்போவதும், இவன் கேட்க வேண்டியதுமான ஜ்ஞாநமே "யதா₂" என்னும் ஶப்₃த₃த்தால் கூறப்படுகிறது என விளங்குகிறது. (தத் ஶ்ருணு) அதை கவனமாகக் கேட்பாயாக. அர்ஜுனன் கேளாமலிருக்கச் செய்தே உபதே₃ஶிக்கத் தொடங்குகையாலும், 'தத் ஶ்ருணு' என்று கேட்கச் சொல்லி விதி₄க்கையாலும், தான் சொல்லப்போகும் ஜ்ஞானம் அபூர்வமானதாகையாலே இவன் அவஶ்யம் அறிய வேண்டியதொன்று என்று காட்டுகிறான். அன்றிக்கே, யுத்₃த₄களத்தில் பராக்காயிராமல், நான் சொல்லுவதை கவனமாகக் கேள் என்கிறானாகவுமாம். "கேளீரோ" [திருப்பாவை 2] "கேளாய்" [திருப்பாவை 29] என்றவிடங்களிற்போலே. (பார்த்த₂) நீ என் அத்தை

ज्ञानं तेऽहं सविज्ञानं इदं वक्ष्याम्यशेषतः ।
यज्ज्ञात्वा नेह भूयोऽन्यत् ज्ञातव्यमवशिष्यते ॥ २ ॥

2. ஜ்ஞாநம் தேऽஹம் ஸவிஜ்ஞாநம் இத₃ம் வக்ஷ்யாம்யஶேஷத: ।
யத் ஜ்ஞாத்வா நேஹ பூ₄யோऽந்யத் ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே ॥

அஹம்—நான், **தே**—உனக்கு, **இத₃ம் ஜ்ஞாநம்**—(என் விஷயமான) இந்த ஜ்ஞாநத்தை, **ஸவிஜ்ஞாநம்**—விஶேஷ ஜ்ஞாநத்தோடு கூட, **அஶேஷத:**—முழுவதும், **வக்ஷ்யாமி**—கூறுகிறேன்; **யத்**—எந்த இவ்வறிவை, **ஜ்ஞாத்வா**—அறிந்தபின், **இஹ**—என் விஷயத்தில், **பூ₄ய:**—மறுபடியும், **ஜ்ஞாதவ்யம்**—அறியவேண்டியது, **அந்யத்**—வேறொன்றும், **ந அவஶிஷ்யதே**—மிகுதியில்லையோ (அந்த ஜ்ஞாந விஜ்ஞாநங்களைக்கூறுகிறேன் என்றபடி.)

—

2. **மிக்க வறிவிறைவி வேகத் துணர்வுடனே**
யொக்க வுனக்கொன் றொழியாமற்—சிக்கெனவே
யான்பகர்வன் யாதறிந்தால் வேறொன் றினியறியத்
தான்படுவ திங்கில்லை சார்ந்து.

யாது—எந்த அறிவையும், விவேகத்தறிவையும், **அறிந்தால்**—உணர்ந்தால், **இங்கு**—என் விஷயத்தில், **இனி**—மறுபடியும், **சார்ந்து அறியத்தான் படுவது வேறொன்று**—பொருந்தி அறியவேண்டிய வேறொரு விஷயம், **இல்லை**—இல்லையோ (அத்தகையதான), **மிக்க இறை அறிவு**—சிறந்த ஸர்வேஶ்வர ஜ்ஞானத்தை, **(இறை) விவேகத்துணர்வுடனே ஒக்க**-(ஸர்வேஶ்வரனை என்னை) விவேகித்தறியும் ஜ்ஞாநத்துடன் சேர்ந்து, **ஒன்று ஒழியாமல்**—முழுவதும், **உனக்கு**—உனக்கு, **யான் பகர்வன்**—நான் கூறப்போகிறேன்.

பிள்ளையாகையாலே நீ கேளாமலிருக்கச்செய்தேயும் உனக்கு நான் இதை உபதே₃ஶிக்கிறேன் என்று கருத்து. 1.

॥ भा ॥ अहं ते, मद्विषयमिदं ज्ञानं विज्ञानेन सहाशेषतो वक्ष्यामि; विज्ञानम्—विविक्ताकारविषयं ज्ञानम्। यथाऽहं मद्व्यतिरिक्तात्समस्तचिदचिद्वस्तुजातान्निखिलहेयप्रत्यनीकतया नानाविधानवधिकातिशयासंख्येयकल्याणगुणगणानन्तमहाविभूतितया च विविक्तः, तेन विविक्त-

---

2 "தத் ஶ்ருணு" [என்னைப்பற்றிய அறிவைக் கேட்பாயாக] என்று சென்ற ஶ்லோகத்தில் கேட்கச்சொல்லி விதி$_4$த்த விஷயத்தில் இவன் அதி$_4$கமாக கவனம் செலுத்தவேண்டும் என்பதற்காக, 'ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியான நானே இதைக் கூறுகிறேன்' என்று பீடி$_2$கையிட்டுக் கொண்டு "அஸம்ஶயம் ஸமக்$_3$ரம்" என்று கூறப்பட்ட அர்த்த$_2$ங்களை முறையே முன்பின்பாதிகளாலே சிறிது விளக்குகின்றான் இரண்டாம் ஶ்லோகத்தாலே. (அஹம் தே வக்ஷ்யாமி) ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியான நான் இதைக் கேட்பதில் குதூஹலமுடைய உனக்குக் கூறுகிறேன். (இத$_3$ம் ஜ்ஞாநம் ஸவிஜ்ஞாநம் வக்ஷ்யாமி) ப்ரக்ருதமான இந்த ஜ்ஞாநத்தை, விஜ்ஞானத்தோடுகூடக் கூறுகிறேன். சென்ற ஶ்லோகத்தில் தன் விஷயமான அறிவையே கேட்கச்சொல்லுகையாலே, இங்கும் அதுவே ஜ்ஞாநவிஜ்ஞாந ஶப்$_3$த$_3$ங்களால் கூறப்படுவதாகக்கொள்ளவேண்டும். அதில் பரமாத்மாவை ஸ்வரூப நிரூபக கு$_3$ணங்களையிட்டு அறிவது ஜ்ஞாநஶப்$_3$த$_3$த்தாலும், நிரூபிதஸ்வரூப விஶேஷணங்களையிட்டு அறிவது விஜ்ஞான ஶப்$_3$த$_3$த்தாலும் கூறப்படுவதாகக் கொண்டால் புநருக்தியில்லை. பரமாத்மாவின் ஸ்வரூபத்தை நிரூபித்துத்தரும் ஸத்யத்வம், ஜ்ஞாநத்வம், அநந்தத்வம், ஆநந்த$_3$த்வம், அமலத்வம், ஶ்ரிய:பதித்வம் ஆகியவை ஸ்வரூபநிரூபககு$_3$ணங்கள் எனப்படுகின்றன. பரமாத்மாவின் மற்ற பெருமைகள் நிரூபித ஸ்வரூப விஶேஷணங்கள் எனப்படுகின்றன. விஜ்ஞாநமாவது: - பரமாத்மாவை விவிக்தமாக - மற்ற பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டதாக அறிவது. அதாவது:—பரமாத்மாவானவன் தன்னைக்காட்டிலும் வேறுபட்ட எல்லாச் சேதநாசேதநப் பொருள்களைக் காட்டிலும்-தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாயிருப்பதன்மூலமும், பலவிதமாய், எல்லையற்ற மேன்மையை உடையவையாய், கணக்கற்றவையான கல்யாணகு$_3$ணங்களை உடைத்தாயிருப்பதன் மூலமும், எல்லையற்ற உப$_4$யவிபூ$_4$திகளுக்கும் தலைவனாயிருப்பதன்மூலமும் — சிறப்புற்றவனாயிருப்பவன் என்று தெரிவிக்கும் அறிவே விஜ்ஞாநம் என்றபடி. ஆக. ஜ்ஞாநவிஜ்ஞாந ஶப்$_3$த$_3$ங்களுக்கு முன்பின் ப்ரகரணங்களையொட்டிப்

विषयज्ञानेन सह मत्स्वरूपविषयज्ञानं वक्ष्यामि। किं बहुना? यत् ज्ञानं ज्ञात्वा मयि पुनरन्यत् ज्ञातव्यं नावशिष्यते॥ २॥

॥भा॥ वक्ष्यमाणस्य ज्ञानस्य दुष्प्रापतामाह—

मनुष्याणां सहस्रेषु कश्चिद्यतति सिद्धये।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः॥ ३॥

3. மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு கஶ்சித் யததி ஸித்₃த₄யே।
யததாமபி ஸித்₃த₄நாம் கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத:॥

பரமாத்ம விஷயஜ்ஞாநமே பொருளாகத் தேறுகையால், விஜ்ஞாந ஶப்₃தத்திற்கு த்₄யாநபரமாகச் சிலர் பொருளுரைத்தது பொருந்தாது என்று விளங்குகிறது. ''ஜ்ஞாநம் து விஜ்ஞாநகு₃ணேபபந்நம் கர்மாஶுப₄ம் பஶ்யதி வர்ஜநீயம்'' [ப₄ார-மோக்ஷ 199-17] [விஜ்ஞாந கு₃ணத்தோடுகூடிய ஜ்ஞாநத்தையும், விலக்கத்தக்கதாய், அமங்க₃ளமான கர்மத்தையும் காண்கிறான்.] என்றவிடத்திலும் ஜ்ஞாநவிஜ்ஞாந ஶப்₃த₃ங்கள் பரமாத்மாவின் இவ்விருவித₄மான பெருமைகளையிட்டு அவனை அறிவதையே கூறுகின்றன. ''மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு'' [மூன் திருவ 14] என்கிறபடியே இத்தகைய பெருமை பெற்ற பரமாத்மாவிடம் ஈடுபடுபவன் மற்ற அமங்களங்களைக்கைவிடுகிறான் என்று கருத்து. (வக்ஷ்யாமி) கூறுகிறேன். ஜ்ஞாநத்தையும், விஜ்ஞாநத்தையும் கூறுகிறேன் என்றது (லக்ஷணையாலே) அவற்றை அறிவிக்கும் வாக்யத்தைக் கூறுகிறேன் என்றபடி. இவற்றைத் தெரிவிக்கும் வாக்யம் சொல்லவும் கேட்கவும் தக்கது என்று உணர்த்துகிறதாகவுமாம். (யத் ஜ்ஞாத்வா) எந்த ஜ்ஞாநவிஜ்ஞாநங்களை அறிந்து. சமையல் செய்வதை ''சமையலைச் சமைக்கிறான்'' என்பதுபோலே அறிவைப் பெறுவது இங்கு அறிவை அறிவதாகக் கூறப்படுகிறது (அஶேஷத: வக்ஷ்யாமி) இந்த ஜ்ஞாந விஜ்ஞாநங்களை மீதமில்லாமல், அதாவது முழுவதும் கூறுகிறேன். இனி, உத்தரார்த்த₄த்தாலே ''அஶேஷத:'' என்றதை விவரித்துக் கொண்டு, முற்கூறிய ஜ்ஞாநவிஜ்ஞாநங்களைப் புகழ்கிறான்- (யத் ஜ்ஞாத்வா இஹ பூ₄ய: அந்யத் ஜ்ஞாதவ்யம் ந அவஶிஷ்யதே) சுருங்கக் கூறினால், இந்த ஜ்ஞாநவிஜ்ஞாநங்களை அறிந்தபின் என் ஸ்வரூப ஸ்வப₄ாவங்கள் விஷயத்தில் மறுபடியும் அறியத்தக்கதாக யாதொன்றும் எஞ்சிநிற்காது என்கை. அவசியம் அறியவேண்டிய எல்லா ஆகாரங்களோடும் கூடிய என் ஸ்வரூபத்தைக் கூறுகிறேன் என்று கருத்து. 2.

மநுஷ்யாணும்—ஶாஸ்த்ராதி₄காரிகளுக்குள்ளே, **ஸஹஸ்ரேஷு** — ஆயிரக்கணக்கானவர்களில், **கஶ்சித்** — ஒருவனே, **ஸித்₃த₄யே யததி**—ஸித்₃தி₄யடையும் வரையில் முயல்கின்றான். **யததாம் ஸித்₃த₄ாநாம் அபி**—ஸித்₃தி₄யடையும் வரையில் முயல்கின்றவர்களுக்குள், (**ஸஹஸ்ரேஷு**) **கஶ்சித்**—(ஆயிரக்கணக்கானவர்களில்) ஒருவனே, **மாம்**—என்னை, **தத்வத:**—உள்ளபடி, **வேத்தி**—அறிகிறான்.

---

3. **மானிடவர் பல்லா யிரத்தொருவன் மன்னுலகந்**
தானியல்வா னங்கவர்க டங்களினு—மேனிகழ்ந்தே
யென்னை முழுதறிவா னெங்கேனு மாங்கொருவன்
றன்னையறி வானரிது தான்.

மானிடவர் — ஶாஸ்த்ராதி₄காரிகளுக்குள்ளே, **பல்லாயிரத்து ஒருவன்** — ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவனே, **மன்னு உலகம் தான் இயல்வான்**—நிலையான மோக்ஷலோகத்திற்குச் செல்ல முயல்வான்; **ஆங்கு அவர்கள் தங்களிலும்**—அப்படி முயல்கின்றவர்களிலும், **மேல் நிகழ்ந்தே**—அதற்கும் மேலே சென்று, **என்னை முழுது அறிவான்**—என்னையே ப்ராப்யமாகவும் அறிபவன், **எங்கேனும் ஆங்கு ஒருவன்**—ஆயிரக்கணக்கானவரில் ஒருவனே; (அவர்களிலும்) **தன்னை**—(உபாயமாகவுமிருக்கும்) என இயல்வை, **அறிவான்**-அறிகிறவன், **அரிது தான்**—இல்லவேயில்லை.

---

3. இந்தப் பரமாத்மவிஷய ஜ்ஞாநம் மிகவும் பெறற்கரியது என்று காட்டுவதன்மூலம் இதைப் புகழ்கிறான் மூன்றும் ஶ்லோகத்தில். (மநுஷ்யாணும்) தமக்கு நன்மையை விரும்பி ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும் ஸாத₄நங்களை அநுஷ்டி₂க்கத் தகுதி பெற்றிருப்பவர்களுக்குள்ளே. தே₃வதாதி₄கரணம் முதலானவற்றில் தே₃வதைகள் முதலானர்க்கும் மோக்ஷஸித்₃தி₄யின்பொருட்டு முயல அதி₄காரமுண்டு என்று நிர்ணயித்திருக்கையால், இங்கு மநுஷ்யஶப்₃த₃ம் ஶாஸ்த்ரவிஹிதமான மோக்ஷஸாத₄நங்களில் அதி₄காரமுடைய அனைவரையும் காட்டுகிறது. (ஸஹஸ்ரேஷு கஶ்சித்) ஆயிரக்கணக்கானவர்களில் ஒருவனே. ஶாஸ்த்ராதி₄காரிகளில் பெரும்பாலோர் தமக்கு நன்மையை விரும்பினாலும், ப்ராக்ருத ஸுக₂ங்களையே தமக்கு நன்மை

||भा|| मनुष्याः—शास्त्राधिकारयोग्याः, तेषां सहस्रेषु कश्चिदेव सिद्धिपर्यन्तं यतते। सिद्धिपर्यन्तं यतमानानां सहस्रेषु कश्चिदेव मां विदित्वा मत्तस्सिद्धये यतते। मद्विदां सहस्रेषु कश்चिदेव तत्त्वतः—

யென்று மயங்கி, அவற்றின் பொருட்டு ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப் பட்டிருக்கும் ஜ்யோதிஷ்டோமாதி₃ ஸாத₄நங்களையே அநுஷ்டி₂க்கின்றனர். பல்லாயிரத்தில் ஒருவனே மோக்ஷாநந்த₃த்தை விரும்பி, மோக்ஷ ஸாத₄நத்தை அநுஷ்டி₂க்கிறான் என்று கருத்து. (கஶ்சித் ஸித்₃த₄யே யததி) அப்படி மோக்ஷ ஸாத₄னத்தை அநுஷ்டி₂ப்பவர்களிலும் எவனோவொருவனே மோக்ஷ ஸித்₃தி₄ யடையும் வரையில் முயல்கின்றான். இடையில் விஷயாந்தரங்களால் இழுக்கப்பட்டுத் தடுமாறுகிறவர்கள் பலர் என்று கருத்து. (யததாம் ஸித்₃த₄ாநாமபி) மோக்ஷ ஸித்₃தி₄யடையும் வரையில் முயலுமவர்களுக்குள்ளும். (கஶ்சித் மாம் வேத்தி) எவனோவொருவன் தான் என்னையே ப்ராப்யனாகவும் அறிந்து, என்னை அடையும் பொருட்டு என்னை ஸித்₃தே₄ாபாயமாகக் கொண்டு, ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப் படும் ப₄க்தியோக₃மாகிற ஸாத்₄யோபாயத்தை அநுஷ்டி₂க்கிறான். பலர் தம் ஆத்மாவையே ப்ராப்யமாக எண்ணி, அதன்பொருட்டு என்னை ஸித்₃தே₄ாபாயமாகக்கொண்டு ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப் படும் கர்மஜ்ஞாநயோக₃ங்களை ஸாத்₄யோபாயமாக அநுஷ்டி₂த்துக் கைவல்ய மோக்ஷத்தைப் பெற்றுப் போகின்றனர் என்று கருத்து. (கஶ்சிந்மாம் வேத்தி தத்₃வத:) இப்படி என்னையடைவதை விரும்புகிறவர்களிலும் எவனோவொருவன்தான் என்னை உள்ளபடி அறிகிறான். என்னையே உபாயமாகவும் அறிகிறான் என்கை. அதாவது—நானே தாயாய்த் தந்தையாய், மற்றுமாய், முற்றுமாய் நின்று சேதனனை அடையப் பாடுபடுபவனாகையாலே, தன்னுடைய ஆநந்த₃த்திற்காகத் தான் பாடுபடுவதினின்றும் கைவாங்கி,–மோக்ஷத்திலும் என்னுடைய ஆநந்த₃த்தையே விரும்புகின்றவனாய், சாதகம் போலே எனது அருளையே பார்த்திருக்குமவன் மிகவும் கிடைத்தற்கரியவன். அப்படிப்பட்டவன் இன்று வரையிலும் ஒருவன்கூட எனக்குக் கிடைக்கவில்லை என்று கருத்து. "ஸ மஹாத்மா ஸுது₃ர் லப₄:" [7-19] [வாஸுதே₃வனையே ப்ராப்யம், ப்ராபகம் முதலிய எல்லாமாக நினைத்திருக்கும் மஹாத்மா மிகவும் கிடைத்தற்கரியவன்] "மாம் து வேத₃ ந கஶ்சந" [7-26] [என்னை உள்ளபடி அறிபவன் ஒருவனுமில்லை] என்று அவனே இவ்வத்தியாயத்தில் மேலே வாய் வெருவப்போகின்றானன்றோ. "யாருமோர் நிலைமையன் என அறி

यथावस्थितं मां वेत्ति। न कश्चिदित्यभिप्रायः। "स महात्मा सुदुर्लभः"(१९) "मां तु वेद न कश्चन" (२६) इति हि वक्ष्यते॥३॥

வறிய எம்பெருமான். யாருமோர் நிலைமையன் என அறிவெளிய எம்பெருமான் '' [திருவாய் 1-3-4] என்று ஆழ்வாரும்—தம் முயற்சியாலே அவனைக் காண நினைப்பார்க்கு அவனை உள்ளபடி அறிய முடியாது என்றும் நிர்ஹேதுக க்ருபையாலே அவன் தன்னைக் காட்ட, அவனைக் காணநினைப்பவர்களுக்கே அவனை உள்ளபடி அறியமுடியும் என்றும் அருளிச்செய்தாரன்றோ; ஆளவந்தாரும் இதை அடியொற்றி ''நமோ நமோ வாங்மநஸாதி பூ₄மயே—நமோ நமோऽநந்த மஹாவிபூ₄தயே'' என்று எல்லையற்ற மஹாவிபூ₄தியை உடையவனுகையாலே, தம் முயற்சியால் காணநினைப்பார்க்குக் காண்பரியன் என்றும், ''நமோ நமோ வாங்மநஸைகபூ₄மயே—நமோ நமோऽநந்த த₃யைகஸிந்த₄வே'' என்று அவனுடைய க்ருபையாலே அவனைக் காணநினைப்பார்க்குக் காண எளியவனென்றும் அருளிச்செய்தாரன்றோ. ஆழ்வாருடைய இவ்வருளிச்செயலையும், ஆளவந்தாருடைய இந்த ஸ்ரீஸூக்தியையும் அடியொற்றியே ப₄ாஷ்யகாரர் இந்த ஶ்லோகத்தின் ப₄ாஷ்யத்தில் ''ந கஶ்சித்₃த்யபி₄ப்ராய: '' [ஒருவனுமேயில்லை என்று கருத்து.] என்று அருளிச்செய்து, அதற்கு கீ₃தாசார்யனின் வாக்குகளை ப்ரமாணமாகவும் காட்டினுர்.

இனி, ஸாத₄நாநுஷ்டா₂நம் செய்து மோக்ஷமடைவார்க்கும், அவனைக்கொண்டு அவனை அடைவார்க்கும் - அவனை அறிவதிலும், பெறும் ப₂லனிலும் வாசியில்லை என்னும் தேஶிக ஸம்ப்ரதா₃ய ரீதியில் பொருள் கொள்ளும்போது—ஸித்₃தி₄ஶப்₃த₃ம் ப்ரயோஜநாந்தரங்களான ஐஶ்வர்ய கைவல்யங்களைக் குறிக்கிறது. ''ஸித்₃த₄யே யததி'' என்று அவற்றின் பொருட்டு ஸாத₄நாந்தரங்களைப் பற்றுமவர்களைக் குறிக்கிறது. ''மாம் வேத்தி'' என்று அவற்றின் பொருட்டு எம்பெருமானை உபாயமாகப் பற்றுமவர்களைக் குறிக்கிறது '' தத்வத: வேத்தி '' என்று அவனையே ப்ராப்யமாக அறிந்து அடைய, அவனை ஸித்₃தோ₄பாயமாகவும், ப₄க்திப்ரபத்திகளில் ஒன்றை ஸாத்₄யோபாயமாகவும் பற்றுமவர்களைக் குறிக்கிறது. '' யாருமோர் நிலைமையன் என அறிவரிய எம்பெருமான் '' என்று ஆழ்வாரும், '' வாங் மநஸாதி பூ₄மயே '' என்று ஆளவந்தாரும், ''ந கஶ்சித்₃த்யபி₄ப்ராய:'' என்று எம்பெருமானுரும் அருளியது மிகவும் கிடைத்தற்கரியவன் என்னும் கருத்தாலே என்கை. '' ஒருவனே அறிகிருன்-என்னுமிடத்தில்—ஒருவனே அறிகிருன், இருவர் அறிவதில்லை என்று பொருள்

भूमिरापोऽनलो वायुः खं मनो बुद्धिरेव च ।
अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा ॥ ४ ॥

4. பூ$_4$மி ராபோऽநலோ வாயு: க$_2$ம் மநோ பு$_3$த்$_3$தி$_4$ரேவ ச ।
அஹங்கார இதியம் மே பி$_4$ந்நா ப்ரக்ருதிரஷ்டதா$_4$ ॥

பூ$_4$மி:—நிலம், ஆப:—நீர், அநல:—தீ, வாயு:—காற்று, க$_2$ம்—ஆகாயம் (எனும் ஐம்பூ$_4$தங்களும்), மந:—மனம் (முதலிய இந்திரியங்களும்), பு$_3$த்$_3$தி$_4$:—மஹான், அஹங்கார: ச-அஹங்காரமும், இதி—ஆகிய, அஷ்டதா$_4$ பி$_4$ந்நா—எட்டு விதமாகப் பிரிந்திருக்கும், இயம் ப்ரக்ருதி:-இந்த ப்ரக்ருதி, மே ஏவ-என்னுடையதேயாகும் (என்று) (வித்$_3$தி$_4$-அறிவாய்).

---

4. மண்ணும் புனலும் வளரெரியும் வாயுவுடன்
விண்ணு மனஞ்சேர் வியன்புலனுந்—திண்ணமரு
மானுமாங் காரமுமாய் வந்தவகை யெட்டுடைய
தானவசித் தென்னதுரு வாம்.

மண்ணும்—நிலனும், புனலும்—நீரும், வளர் எரியும்—விரகிட வளராநிற்கையால் அனலம் எனப்படும் தீயும், வாயுவுடன்—வாயுவோடு கூடிய, விண்ணும்—ஆகாயமும், மனம் சேர் வியன் புலனும்—மனத்தோடு கூடிய (பதினொரு) வியக்கத்தக்க இந்திரியங்களும், ஆங்காரமுமாய்—அஹங்காரமுமாக, வந்த வகை எட்டு உடையதான—இப்படி எட்டு வகையை உடையதாயிருக்கும், அசித்து-அசேதநப்பொருள், என்னது உருவாம்—என்னுடைய உடலாகும்.

கொள்ளமுடியாது; வ்யாஸர், பீ$_4$ஷ்மர் முதலான பலர் எம்பெருமானை உள்ளபடி அறிபவர்களாகக் காண்கையாலே. ஒருவன் அறியவே செய்கிறுன் என்று (அயோக$_3$வ்யவச்சே$_2$த$_3$பரமாகப்) பொருள்கொள்வது-அ[illegible]பவர்களின் அருமையைக் காட்டும் இப்ரகரணத்தில் பொருளற்ற[illegible]கிறது; ''ஸ மஹாத்மா ஸுது$_3$ர்லப$_4$:'' முதலான-அதி$_4$காரிகளின் அருமையைக்காட்டும்—வசனங்களோடும் முரண்படுகிறது. ஆகையால், அர்த்த$_2$ஸ்தி$_2$தியிலிருந்தும், மேல் வரும் வாக்கியங்களிலிருந்தும் தேறும் அதி$_4$காரியின் அருமையே இங்கு கருதப்படுகிறது என்று காட்டுகிறுர்'' என்னும் தாத்பர்ய சந்த்$_3$ரிகைக் கருத்து இங்கு காணத்தக்கது. 3.

||भा|| अस्य विचित्रानन्तभोग्यभोगोपकरणभोगस्थानरूपेणा - वस्थितस्य जगतः प्रकृतिरियं गन्धादिगुणकपृथिव्यप्तेजोवाय्वाकाशादि -

4. இனி, நாலாம் ஶ்லோகம் தொடங்கி, பனிரண்டாம் ஶ்லோகமீறாக ''ஸ்வயாதா2த்ம்யம்'' [தன்னைப்பற்றிய உண்மையறிவு] என்று ஆளவந்தாரால் கீ3தார்த்த2 ஸங்க்3ரஹத்தில் சொல்லப்பட்ட பரமாத்ம தத்வஜ்ஞாநம் உபதே3ஶிக்கப்படுகிறது; ''தத்த்வத:'' என்று சென்ற ஶ்லோகத்தில் கூறப்பட்டது விவரிக்கப்படுகிறது. அதில், தானே ஜீவனுக்கு நிரபேக்ஷோபாயபூ4தனாயிருக்கிறவன் என்று காட்டுவதற்குறுப்பாக ஜீவன் அசித்தைப்போலே தனக்குப் பரதந்த்ரனாயிருப்பவன் என்று இரண்டு ஶ்லோகங்களில் காட்ட முற்பட்டு, இந்த ஶ்லோகத்தில் அசேதனப் பொருள் தனக்குப் பரதந்த்ரமானது என்று காட்டுகிறான். காணப்படும் வ்யஷ்டிரூபமான இவ்வுலகிற்குக் காரணமாய், எட்டுவிதமாகப் பிரிந்துநிற்கும் ப்ரக்ருதி - எனக்கு ஶேஷமாய், நியாம்யமாய், தா4ர்யமாயிருப்பது என்று காட்டுகிறான். (பூ4மி: ஆப: அநல: வாயு: க2ம்) என்று ப்ரத்யக்ஷஸித்3த4மான பஞ்ச பூ4தங்களை எடுக்கிறான். இது, பூ4தகாரணமான ஐந்து தந்மாத்ரைகளுக்கும் உபலக்ஷணம். மேலே, ப்ரத்யக்ஷாநுமானங்களால் ஸித்3தி4க்கும் காரணப்பொருள்களைக் காட்டுகிறான். (மந:) மனம். இது, மனத்தின் தலைமையில் இயங்கும் மற்ற ஜ்ஞாந கர்மேந்திரியங்களுக்கு உபலக்ஷணம். (பு3த்3தி4:) பு3த்3தி4யைப் போஷிப்பதாக அநுமானத்தாலும், ஆக3மத்தினாலும் ஸித்3தி4ப்பதாய், மூலப்ரக்ருதிகார்யமாய், அஹங்காரகாரணமான மஹான் என்னும் தத்வம். (அஹங்கார: ச) அஹங்கார வாஸனைக்கு ஹேதுவாக அநுமாநாக3மங்களால் ஸித்3தி4க்கும் பூ4தேந்திரியகாரணமான தத்வமும். தத்வங்களைக் குறிக்கும் ப்ரகரணமாகையாலே, பு3த்3தி4 ஶப்3த3த்தாலே அறிவையும், அஹங்கார ஶப்3த3த்தாலே க3ர்வத்தையும் குறிப்பதாகக்கொள்வது பொருந்தாது. (இதி அஷ்டதா4 பி4ந்நா இயம் ப்ரக்ருதி:) இவ்வண்ணமாக எட்டு வகையாகப் பிரிந்துநிற்கும் இந்த வ்யஷ்டிகாரணம். உபலக்ஷணமுறையால் காட்டப்படும் பஞ்சதந்மாத்ரங்களையும், பத்து ஜ்ஞாநகர்மேந்திரியங்களையும் சேர்த்து மூலப்ரக்ருதிகார்யமான இருபத்துமூன்று தத்துவங்களும் இங்கு உணர்த்தப்படுகிறது. (இயம் ப்ரக்ருதி:) இந்தக் காரணம். ஶப்3த3 ஸ்பர்ஶரூபரஸக3ந்த4ங்களாகிற கு3ணங்களோடு கூடிய பூ4தங்களைச் சொல்லுகையாலே போ4க்3யப் பொருள்களும், பஞ்சபூ4தபரிணாமமான போ4க3ஸ்தா2நங்களும், இந்திரியங்களைச் சொல்லுகையாலே போ4கோ3பகரணங்களும் சொல்லப்பட்டு, இப்படி மூவகையிலடங்கிய இவ்வுலகிற்குக் காரணம் என்று மூலப்ரக்ருதி கார்யமாய், உலகிற்குக் காரணமான எல்லாத் தத்துவங்

रूपेण मनःप्रभृतीन्द्रियरूपेण महदहंकाररूपेण चाष्टधा भिन्ना मदीयेति विद्धि ॥ ४ ॥

களையும் எடுக்கிருன். இவ்வெட்டும் மூலப்ரக்ருதிகார்யமாயிருந்த போதிலும், வ்யஷ்டிரூபமான உலகிற்குக் காரணமாகையாலே இவற்றை ப்ரக்ருதி ஶப்$_3$த$_3$த்தாலே எடுக்கிருன். சிலர் - பூ$_4$மி முதலான ஶப்$_3$த$_3$ங்களாலே பூ$_4$மி முதலானவற்றின் காரணமான ஐந்து தந்மாத்ரங்களும், 'மந:' என்று மனத்தின் காரணமான அஹங்காரமும், பு$_3$த்$_3$தி$_4$ஶப்$_3$த$_3$த்தாலே அஹங்காரகாரணமான மஹானும், 'அஹங்கார:' என்று அஹங்காரவாஸனைக்கு இருப்பிடமான மூலப்ரக்ருதியும்—ஆக, இப்படி எல்லாப் பத$_3$ங்களாலும் ''அஷ்டௌ ப்ரக்ருதய:'' [க$_3$ர்ப்போ$_4$பநிஷத்] என்கிற ஶ்ருதியில் கூறப்பட்ட காரணப்பொருள்களே குறிக்கப்படுகையால் ப்ரக்ருதி ஶப்$_3$த$_3$த்தாலே இவ்வெட்டு காரணப்பொருள்களும் காட்டப்படுவதாகக் கூறினர்கள். இப்பொருளில் பு$_3$த்$_3$தி$_4$பத$_3$ம் தவிர மற்ற எல்லாப் பத$_3$ங்களும் முக்$_2$யார்த்த$_2$த்தை இழந்து அமுக்$_2$யமாகின்றன. இதைக் காட்டிலும் எல்லாப் பத$_3$ங்களையும் முக்$_2$யமாகவே கொண்டு, வ்யஷ்டிஸ்ருஷ்டிக்குக் காரணமாகையாலே இவை ப்ரக்ருதியெனப்படுகின்றன என்று கொள்வது சிறந்தது. அன்றிக்கே, இப்படி ப்ரக்ருதி ஶப்$_3$த$_3$த்திற்கு யௌகி$_3$கமாகப் பொருள்கொள்ளாமல் மூலப்ரக்ருதி என்று ரூடி$_4$ப் பொருளையே கொண்டு, அதுவே இப்படி எட்டுவித$_4$மாக நிற்கிறது என்று த்$_3$ரவ்யைக்யத்தாலே சொல்லுகிறதாகவுமாம். இப்படிப் பொருள் கொள்ளும்போது அடுத்த ஶ்லோகத்தில் ஜீவதத்வத்தை 'ப்ரக்ருதி' என்று குறித்திருப்பது விரூபமாகும். ஆகையால் முதற்பொருளே சிறந்தது. (இயம் ப்ரக்ருதி: மே ஏவ) அடுத்த ஶ்லோகத்திலிருந்து 'வித்$_3$தி$_4$' என்பதையும் சேர்த்துக்கொண்டு ''இப்படி ஸமஷ்டி ரூபமாகவும் வ்யஷ்டி ரூபமாகவுமிருக்கும் இந்த ப்ரக்ருதி என்னுடையதே என்று அறி'' என்று பொருள்கொள்ளவேணும். இப்ரக்ருதிக்கு நான் ஶேஷியாய், நியாமகனுய், த$_4$ாரகனுயிருக்கையாலே இதைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டவனுய், இதை ஆட்டிவைப்பவனுக என்னை அறி என்று கருத்து. ஏற்கனவே இங்கு இந்த ப்ரக்ருதியைப்பற்றி உபதே$_3$ஶிக்கப்படாவிடிலும், ப்ரத்யக்ஷாநுமாநங்களாலே ஸித்$_3$த$_4$மாகையாலே, இதைத் தன்னுடையதென்று விதி$_4$ப்பதற்காக 'இயம்' என்று அநுவதி$_3$க்கிருன். 'மே' என்னும் ஷஷ்டி$_2$ பொதுவாக ஸம்ப$_3$ந்த$_4$ஸாமாந்யத்தைக் காட்டுமாயினும், இங்கு ஸ்வஸ்வாமிப$_4$ாவமாகிற (உடைமையாகவும், உடையவனுகவுமிருக்கையாகிற) ஸம்ப$_3$ந்த$_4$ விஶேஷத்தைக் காட்டுகிறது. ஆக, அசேதநப்பொருள் எனக்கு அத்யந்தபரதந்த்ரமானது என்று காட்டப்பட்டது. 4.

अपरेयमितस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम्।
जीवभूतां महाबाहो ययेदं धार्यते जगत्॥५॥

5. அபரேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்$_3$தி$_4$ மே பராம்।
ஜீவபூ$_4$தாம் மஹாபா$_3$ஹோ யயேத$_3$ம் தா$_4$ர்யதே ஜக$_3$த் ॥

மஹாபா$_3$ஹோ—தடக்கையனே! இயம்—இந்த அசேதந ப்ரக்ருதி, அபரா—தாழ்ந்தது; இத:—இதைக்காட்டிலும், அந்யாம் து—மிகவும் வேறுபட்டதாய், ஜீவபூ$_4$தாம்—ஜீவன் என்று பெயர்பெற்றதாய், பராம்—முற்கூறிய அசேதந ப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானதான, ப்ரக்ருதிம்—ப்ரக்ருதியை, மே வித்$_3$தி$_4$—என்னுடையது என்று அறிவாயாக; யயா—எந்த ஜீவபூ$_4$த ப்ரக்ருதியினாலே, இத$_3$ம் ஜக$_3$த்—இவ்வுலகம் முழுவதும், தா$_4$ர்யதே—தரிக்கப்படுகிறதோ.

---

5. மற்றதனில் வேறாகி மன்னுயிராய் மேலாகி
யுற்றதுதா னென்ற னுருவாக—முற்றுமறத்
தாங்குஞ் சகத்திதனைத் தானமைந்து நிற்குமே
யோங்கித் தழைபுயத்தா யுன்னு.

ஓங்கித் தழை புயத்தாய்!—நீண்டு பெருத்திருக்கும் கைகளை உடையவனே! மற்று அதனில் வேறாகி—முன் சொல்லப்பட்ட அசேதன ப்ரக்ருதியைக் காட்டிலும் வேறுபட்டதாய், மன் உயிராய்—நிலைபெற்ற உயிராயிருப்பதாய், மேல் ஆகி உற்றதுதான்—(அசேதநத்தைக் காட்டிலும்) மேற்பட்டதாயிருக்கும் ப்ரக்ருதி, சகத்து இதனை—இவ்வுலகத்தை, முற்றும் அறத் தாங்கும்—முழுவதும் நன்றாகத் தாங்குமதாய், என்றன் உருவாக-என்னுடைய உடலாக, தான் அமைந்து நிற்குமே—தானும் பொருந்தி நிற்கிறது. உன்னு—(இதையும்) அறிவாய.

---

5. இனி, இவ்வசேதனப் பொருளைப்போலே, இதனிலும் மேற்பட்டதான சேதனப் பொருளும் எனக்கு அத்யந்த பரதந்த்ரமானதே என்று காட்டுகிறான். (அபரா இயம்) முன் ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட அசேதநப்ரக்ருதி தாழ்ந்ததாயிருப்பது. அடுத்தபடி சொல்லப்

॥ भा ॥ इयं ममापरा प्रकृतिः ; इतस्त्वन्याम्—इतोऽचेतना-याश्चेतनभोग्यभूतायाः प्रकृतेर्विसजातीयाकारां जीवभूतां परां—तस्या भोक्तृत्वेन प्रधानभूतां चेतनरूपां मदीयां प्रकृतिं विद्धि ; ययेदम् अचेतनं कृत्स्नं जगद्धार्यते ॥ ५ ॥

போகும் சேதநப்ரக்ருதியைக் காட்டிலும் அமுக்2யமானது என்றபடி. இனி, இதைக் காட்டிலும் உயர்ந்ததாகையாலே முக்2யமானதாகிற சேதந ப்ரக்ருதியைக் கூறுகிறுன்,—(இதஸ்து அந்யாம்) இதைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டதாய்; துஶப்3த3ம் மிகவும் வேறுபாட்டை உணர்த்துகிறது. இருளும் ஒளியும்போலே வேறுபட்டிருப்பவை ஜட3மாய், அறிவற்ற அசேதன ப்ரக்ருதியும், அறிவுமயமாய், அறிவுள்ள சேதந ப்ரக்ருதியும் என்று கருத்து. அது எது எனில்: (ஜீவபூ4தாம்) ஜீவன் என்று பெயர்பெற்றிருப்பதே அது என்கை. (பராம் ப்ரக்ருதிம்) மேலான ப்ரக்தியை. "போ4க்தா போ4க்3யம்" [ஶ்வே 1.12] [போ4க்தாவாயிருக்கும் ஜீவனையும், அவனுக்கு போ4க்3யமாயிருக்கும் அசேதனத்தையும்] என்று ஶ்ருதியில் சொன்னபடியே, போ4க்3யமாய் (அனுப4விக்கப்படுவதாய்) இருக்கும் அசேதன ப்ரக்ருதியைக் காட்டிலும், போ4க்தாவாய் (அநுப4விப்பவனுய்) இருக்கும் சேதந ப்ரக்ருதி—அக்காரணத்தாலேயே மேலானது என்று கருத்து. சேதநாசேதநங்களடங்கிய வ்யஷ்டிரூபமான உலகிற்கு, முன் சொன்ன அசேதந ப்ரக்ருதியைப்போலே இச்சேதந ஸமஷ்டியும் காரணமாயிருப்பதால் இது ப்ரக்ருதி எனத்தக்கது என்று கருத்து. வ்யஷ்டிரூபமான அசேதநவுலகை த4ரித்து நிற்பதும் இச்சேதந ஸமஷ்டியே என்று காட்டுகிறுன் கடைசிப் பாத3த்தாலே. (யயா இத3ம் ஜக3த் த4ார்யதே) ப்ரத்யக்கான (தனக்கே ப்ரகாஶிப்பதான) எந்தச் சேதந ப்ரக்ருதியாலே, 'இது' என்று சொல்லலாம்படி பராக்கான (பிறர்க்கே ப்ரகாஶிப்பதான) இந்த அசேதநவுலகனைத்தும் த4ரித்து நிற்கப்படுகிறதோ, அந்தப் பரமானப்ரக்ருதியை என்று முற்பாதியோடே அந்வயம். விழித்திருக்கும் நிலையாகிற ஜாக்3ரத3வஸ்தை2யிலும், கனவுநிலையாகிற ஸ்வப்நாவஸ்தை2யிலும் ஸங்கல்பத்தால் ஜீவன் ஶரீரத்தை த4ரித்துநிற்கிறுன் என்பது கண்கூடு; தூங்கும்நிலையாகிற ஸுஷுப்தியிலும், மூர்ச்சை2நிலையிலும் ஸ்வரூபத்தால் ஜீவன் ஶரீரத்தைத் தாங்குகிறுன் என்று கொள்ளத்தக்கது. (மே ஏவ வித்3தி4) முன் ஶ்லோகத்திலிருந்து ஏவகாரத்தைக் கூட்டிக்கொண்டு, "அந்த அசேதந ப்ரக்ருதியைப்போலே, இந்தச் சேதந ப்ரக்ருதியும் ஸ்ருஷ்டிஸ்தி2தித4ாரண நியமநங்களாலே என்னுலேயே

एतद्योनीनि भूतानि सर्वाणीत्युपधारय।
अहं कृत्स्नस्य जगतः प्रभवः प्रलयस्तथा ॥ ६ ॥

6. ஏதத்$_3$யோநீநி பூ$_4$தாநி ஸர்வாணீத்யுபத$_4$ாரய ।
அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக$_3$த: ப்ரப$_4$வ: ப்ரளயஸ்தத$_2$ா ॥

ஏதத்$_3$யோநீநி—இந்தச் சேதநாசேதந ஸமஷ்டியைக் காரணமாகக் கொண்ட, ஸர்வாணி பூ$_4$தாநி—(பிரமன் முதலாகப் புல்லீறுகவுள்ள) எல்லாப் பொருள்களும், இதி—என்னுடையவையே என்று, உபத$_4$ாரய—அறிவாயாக. தத$_2$ா—அப்படியிருக்கும்போது, அஹம்—நான், க்ருத்ஸ்நஸ்ய ஜக$_3$த:—இந்த எல்லா உலகிற்கும், ப்ரப$_4$வ:—உத்பத்திஸ்த$_2$ாநமாகவும், ப்ரளய:—லயஸ்த$_2$ானமாகவும் (ஶேஷியாகவும்) இருக்கிறேன்.

ஆட்டிவைக்கப்படுவதாகையாலே என்னுடையதென்றே அறி"—என்று பொருள்கொள்ள வேண்டும். இப்படி இதைக் காட்டிலும் வேறுபட்டவனாய், இதன் ஸ்ருஷ்டிஸ்தி$_2$களுக்குக் காரணமாய், த$_4$ரிப்பவனாய், உள்நுழைந்து நியமிப்பவனாய், ஶேஷியாயிருப்பவனாகையாலே, நானே இச்சேதனப் பொருளுக்கு நிரபேக்ஷாபாயபூ$_4$தனென்று அறிவதே—மூன்றும் ஶ்லோகத்தில் கூறிய ரீதியில் என்னை உள்ளபடி அறிவதாகும் என்று கருத்து. இக்கருத்தையே,

"உபாத$_3$த்தே ஸத்தாஸ்தி$_2$திநியமநாத்$_3$யைஶ் சித$_3$சிதௌ
ஸ்வமுத்$_3$தி$_3$ஶ்ய ஶ்ரீமாநிதி வத$_3$தி வாகௌ$_3$பநிஷதீ$_3$ ।
உபாயோபேயத்வே ததி$_3$ஹ தவ தத்வம் ந து கு$_3$ணௌ
அதஸ்த்வாம் ஶ்ரீரங்கே$_3$ஶய ஶரணமவ்யாஜமப$_4$ஜம் ॥"

[ஶ்ரீரங்க$_3$ 2-87]

["ஶ்ரீமந்நாராயணனானவன்–ஸ்ருஷ்டிஸ்தி$_2$திநியமநத$_4$ாரணங்களாலே அசேதநத்தைப்போலே சேதநவஸ்துவையும் தனக்கு ப்ரயோஜநமாக ஆக்கிக்கொள்கிறான்" என்று உபநிஷத்$_3$ வாக்யங்கள் உத்$_3$கே$_4$ாஷிக்கின்றன. ஆகையால், உபாயத்வமும், உபேயத்வமும் உனக்கே இயற்கையானது. (மற்ற பொருள்களுக்குப்போல) செயற்கையானதல்ல. ஶ்ரீரங்க$_3$நாத$_2$னே! இக்காரணத்தாலே உன்னை நான் ஓர் வ்யாஜத்தையும் எதிர்பாராத உபாயமாகப் பற்றினேன்] என்று ஶ்ரீபராஶரபட்டர் அருளிச்செய்தார். (மஹாப$_3$ாஹோ) தடக்கையனே! உன் கைகளைப்போலே, அறிவும் பெருமைபெற்று இவ்வுண்மையை அறியவேணும் என்று கருத்து. 5.

|| भा || एतच्चेतनाचेतनसमष्टिरूपमदीयप्रकृतिद्वययोनीनि ब्रह्मादि-स्तम्बपर्यन्तान्युच्चावचभावेनावस्थितानि चिदचिन्मिश्राणि मदीयानि

6. இந்த விரண்டு முதலாக வெப்பொருளும்
வந்த பரிசுணர்நீ மன்னவனே—யந்தவகை
தானதனு லெல்லாச் சகத்தின் பிறப்பிறப்பு(ம்)
நானெனவே காணீ நயந்து.

மன்னவனே!—அரசனே, **எப்பொருளும்**—இந்த எல்லா வுலகும், **இந்த இரண்டும் முதலாக**—என்னுடையவையான இந்தச் சேதநாசேதந ஸமஷ்டியைக் காரணமாகக் கொண்டதாயிருக்கையால், **வந்த பரிசு**—என்னையே காரண மாகக்கொண்டு உண்டானவை என்பதை, **நீ உணர்**—நீ அறிவாயாக. **அந்த வகை தான் அதனுல்**—அப்படி என்னையே காரணமாகக்கொண்டு உண்டானவையாகையாலே, **எல்லா சகத்தின் பிறப்பு இறப்பும்**—இந்த எல்லா உலகங்களின் பிறப்பிடமும், இறப்பிடமும், **நான் எனவே**—நானேயாயிருக் கிறேன் என்றே, **நீ நயந்து காண்**—நீ விரும்பிப்பார்ப்பாயாக.

6. ஸமஷ்டிதத்வங்கள் தன்னுடையவையே என்று இதுவரையில் உரைத்தான். இனி, வ்யஷ்டிதத்வங்களும் தன்னுடையவையே என உரைத்து, ஸமஷ்டிவ்யஷ்டி ரூபமான எல்லாவற்றுக்கும் தானே காரண மெனக் காட்டுகிருன். (ஏதத்$_3$யோநீநி) முன் இரு ஶ்லோகங்களில் ப்ரக்ருதியாக (காரணமாக) சொல்லப்பட்ட சேதநஸமஷ்டியும், அசேதநஸமஷ்டியுமான இரண்டு பொருள்களையும் காரணமாகக் கொண்டவையான. (ஸர்வாணி பூ$_4$தாதி) பிரமன் முதலாகப் புல்லெறும் பீருக ஏற்றத்தாழ்வுள்ளவையாகக் காணப்படும் சேதநாசேதநமிஶ்ர மான இந்த எல்லாப்பொருள்களும். இதிலிருந்து—ஸ்வரூபத்தால் நிர்விகாரமாயிருந்தபோதிலும், சேதநவஸ்து – தே$_3$வர், மனுஷ்யர், திர்யக், ஸ்த$_2$ாவரம் எனும் வ்யஷ்டி ஶரீரங்களைப் பெறும்போது, அந்தந்த ஶரீரங்களுக்கு அநுகு$_3$ணமான அறிவு, செயல், பே$_4$ாக$_3$ம் முதலியவற்ருேடு கூடியவனுகிருனுகையால், ஸமஷ்டிநிலையில் அசித் தோடு வாசியற நின்ற நிலையைக் காட்டிலும் வேறுபாடாகிற விகா ரத்தை அடைகிருனுகையால், சேதநஸமஷ்டி சேதநவ்யஷ்டிக்குக் காரணமாகக் குறையில்லை என விளங்குகிறது. (இத்யுபத$_4$ாரய)

सर्वाणि भूतानीत्युपधारय। मदीयप्रकृतिद्वययोनीनि हि तानि मदीयान्येव। तथा प्रकृतिद्वययोनित्वेन कृत्स्नस्य जगतः, तयोर्द्वयोरपि मद्योनित्वेन मदीयत्वेन च, कृत्स्नस्य जगतः अहमेव प्रभवोऽहमेव च प्रलयोऽहमेव च शेषीत्युपधारय। तयोश्चिदचित्समष्टिभूतयोः प्रकृति-

---

வ்யஷ்டிப் பொருள்களான இவையனைத்தும், முற்கூறிய ஸமஷ்டிப் பொருள்களைப்போலவே என்னுடையவை என அறிவாய். என்னுடையவையான இரண்டு ப்ரக்ருதிகளைக் காரணமாகக்கொண்ட இவையும் என்னுடையவையே ஆகவேண்டுமன்றோ என்று கருத்து. ''ஸர்வாணி பூ₄தாநி ஏதத்₃யோநீநி'' [எல்லா வ்யஷ்டிப் பொருள்களும் இவ்விரு ப்ரக்ருதிகளைக் காரணமாகக்கொண்டவை] என்னும் இவ்வளவே இங்கு கருதப்பட்டதாகில் ''மே வித்₃தி₄'' என்றவிடத்திற்போலே ''ஏதத்₃யோநீநி உபதா₄ரய'' என்னுமிவ்வளவே போதுமானது. ஆகையால், இங்கு அதி₄கமாயுள்ள 'இதி' ஶப்₃த₃ம் முன் ஶ்லோகத்திற் சொல்லப்பட்டதுபோலே இதுவும் மதீ₃யம் [என்னுடைமை] என்று உணர்த்துகிறது. ஆக, ஸமஷ்டிப் பொருள்களைப் போலே வ்யஷ்டிப் பொருள்களும் என்னுடைமையே என்றதாயிற்று. இனி, காரணமான இந்த ஸமஷ்டிப் பொருள்களோடு, கார்யமான இந்த வ்யஷ்டிப் பொருள்களோடு வாசியற எல்லாவற்றுக்குமே நானே காரணமாயிருப்பவன்; ஶேஷமான அசேதனத்தோடு, ஶேஷியான சேதநத்தோடு வாசியற எல்லாவற்றுக்குமே நானே ஶேஷியாயிருப்பவன் என்று காட்டுகிறான் உத்தரார்த்த₄த்தாலே- (ததா₂) இவ்வண்ணமாக எல்லாவுலகமும் முற்கூறிய இரண்டு ப்ரக்ருதிகளைக் காரணமாகக்கொண்டதாகவும், அவ்விரண்டும் என்னைக் காரணமாகக் கொண்டதாகவுமிருக்கையாலே. (க்ருத்ஸ்நஸ்ய ஜக₃த: அஹம் ப்ரப₄வ: ப்ரளய:) காரணமான ஸமஷ்டிப் பொருள்களோடு, கார்யமான வ்யஷ்டிப் பொருள்களோடு வாசியற எல்லாவுலகிற்கும் நானே உத்பத்திஸ்தா₂னமாகவும், லயஸ்தா₂னமாகவுமிருப்பவன்; காரணமாயிருப்பவன் என்றபடி. 'ததா₂' என்றது 'ததா₂ஸதி' என்றபடியாய், முற்பாதியில் சொல்லப்பட்டதை ஹேதுவாக்குகிறது. இப்படிக் காரணத்வத்தைச் சொன்னது ''மே'' என்று முன் ஶ்லோகங்களிற் சொல்லப்பட்ட ஶேஷித்வத்துக்கும் உபலக்ஷணம். அசேதனம் சேதனனுக்கு ஶேஷமாகவும், சேதனன் அதற்கு ஶேஷியாகவுமிருந்தபோதிலும் இரண்டுமே எனக்கு ஶேஷமாயிருக்கிறது, நான் அவற்றுக்கு ஶேஷியாயிருக்கிறேன் என்று கருத்து. ''ததா₂''

पुरुषयोरपि परमपुरुषयोनित्वं श्रुतिस्मृतिसिद्धम्। * महानव्यक्ते लीयते। अव्यक्तमक्षरे लीयते। अक्षरं तमसि लीयते। तमः परे देव एकीभवति (सु. २), * विष्णोस्स्वरूपात्परतोदिते द्वे रूपे प्रधानं पुरुषश्च विप्र (वि. १.२.२४), * प्रकृतिर्या मयाऽऽख्याता व्यक्ताव्यक्तस्वरूपिणी। पुरुषश्चाप्युभावेतौ लीयेते परमात्मनि। परमात्मा च सर्वेषामाधारः परमेश्वरः। विष्णुनामा स वेदेषु वेदान्तेषु च गीयते॥ (वि. ६.४.३०, ३१) इत्यादिका हि श्रुतिस्मृतयः॥ ६॥

என்று நேரேயே முன் ஶ்லோகங்களிற் குறிக்கப்பட்ட பேஶஷித்வத்தைக் காட்டுவதாகவும் கொள்ளலாம். இங்கு, ஓர் ஆக்ஷேபம் பின்வருமாறு எழுகிறது:—'' அஜாம் ஏகாம் '' [ஶ்வே 4-5] என்று மூலப்ரக்ருதியும், ''நித்யோ நித்யாநாம்'' [கட$_2$ 5-12] என்று ஜீவனும் பிறப்பிறப்பற்ற நித்யவஸ்துக்களாகக் கூறப்படுகையில், பரமாத்மாவை அவற்றுக்குக் காரணமாக இங்கு எப்படிச் சொல்லலாம்? என்பது அவ்வாக்ஷேபம். ப்ரக்ருதி புருஷர்கள் ஸ்வரூபத்தால் நித்யர்களாயினும், நாம ரூபங்களோடு கூடிய ஸ்தூ$_2$ல நிலையை அடைவதையிட்டுப் பரமாத்மாவிடமிருந்து பிறப்பதாகவும், நாம ரூபமற்ற ஸூக்ஷ்ம நிலையை அடைவதையிட்டுப் பரமாத்மாவிடம் லயமடைவதாகவும் ஶ்ருதி ஸ்ம்ருதிகள் கூறுகையாலே, அவற்றைக் கார்யப் பொருள்களென்றும், பரமாத்மாவை அவற்றுக்குக் காரணமென்றும் கொள்ளலாம் என்பது இவ்வாக்ஷேபத்திற்கு ஸமாத$_4$ாநம். ஶ்ருதி ஸ்ம்ருதிகள் அப்படி எங்கே கூறுகின்றன? எனில்: ''மஹாந வ்யக்தே லீயதே, அவ்யக்தம் அக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம: பரே தே$_3$வ ஏகீப$_4$வதி'' [ஸுபா$_3$லோபநிஷத்-2] [மஹான் அவ்யக்தத்தில் லயிக்கிறது; அவ்யக்தம் அக்ஷரத்தில் லயிக்கிறது; அக்ஷரம் தமஸ்ஸில் லயிக்கிறது; தமஸ்ஸு பரமாத்மாவிடம் ஒன்றுகிறது.] என்னும் ஶ்ருதிவாக்யத்தில் ப்ரக்ருதிபுருஷர்கள் பரமாத்மாவிடம் லயமடைவதாகக் கூறப்படுகிறது. லயமாவது, நீர் பாலில் கலப்பது போலே பிரிக்கமுடியாத நிலையை அடைவதேயாகும். ஆக, ப்ரக்ருதி புருஷர்களின் ஸ்வரூபம் அழியவில்லையாகையால் ''அஜாமேகாம்'' ''நித்யோ நித்யாநாம்'' என்னும் ஶ்ருதிகளின் விரோத$_4$மில்லை; ''விஷ்ணோ: ஸ்வரூபாத் பரதோதி$_3$தே த்$_3$வே ரூபே ப்ரத$_4$ாநம் புருஷஶ்ச விப்ர'' [வி-பு 1-2-24] [அந்தணரே! மேலான விஷ்ணு ஸ்வரூபத்திலிருந்து ப்ரக்ருதியும், புருஷனுமாகிற இரு உருவங்கள் உண்டாயின. (அல்லது வேறுபட்டிருந்தன. அல்லது லயமடைந்தன)] என்றும், ''ப்ர

मत्तः परतरं नान्यत् किञ्चिदस्ति धनञ्जय।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव॥ ७॥

7. மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய।
மயி ஸர்வமிதம் ப்ரோதம் ஸூத்ரே மணிகணா இவ॥

தநஞ்ஜய—அர்ஜுநா! மத்த:—என்னைக்காட்டிலும், அந்யத் கிஞ்சித் அபி—வேறுபட்டிருப்பவற்றில் ஒன்றுகூட, பரதரம் நாஸ்தி—மிகவும் மேலானதாயில்லை. இதம் ஸர்வம்—இந்த எல்லாப்பொருள்களும், ஸூத்ரே—நூலில், மணிகணா: இவ—ரத்தினங்கள் கோர்க்கப்பட்டிருப்பதுபோலே, மயி ப்ரோதம்—என்னிடத்தில் கோர்க்கப்பட்டிருக்கின்றன.

---

7. என்னில்வே றுகிமிக் கிங்கோர் பொருளுளதென்
றுன்னிலாங் கில்லை யுயர்விசயா—மன்னியநூன்
மாமணிபோற் கோப்புண்டு வந்தே யென்பாலிதெல்லாஞ்
சேமமுற நிற்குஞ் செறிந்து.

உயர் விசயா—உயர்ந்தவனான அர்ஜுநா! என்னில் வேறாகி—என்னைக்காட்டிலும் வேறாயிருப்பதாய், மிக்கு—மேலாயிருப்பதான, ஓர் பொருள் இங்கு உளது? என்று உன்னில்—ஒரு பொருள் இவ்வுலகில் உள்ளதோ? என்று

க்ருதிர் யா மயா௺க்யாதா வ்யக்தாவ்யக்தஸ்வரூபிணீ।புருஷஶ்சாப்யுபாவேதௌ லீயேதே பரமாத்மநி॥ பரமாத்மா ச ஸர்வேஷாமாதார: பரமேஶ்வர:। விஷ்ணுநாமா ஸ வேதேஷு வேதாந்தேஷு ச கீயதே॥" [வி-பு 6-4-30,31] [வ்யக்த ரூபமாகவும், அவ்யக்த ரூபமாகவும் என்னால் சொல்லப்பட்ட ப்ரக்ருதியும், புருஷனுமாகிற இவ்விரு தத்துவங்களும் பரமாத்மாவிடம் லயமடைகின்றன. அனைவர்க்கும் ஆதாரனாய், பரமேஶ்வரனான பரமாத்மாவும், வேதங்களிலும், வேதாந்தங்களிலும் விஷ்ணுவென்னும் பெயருடையவனாகவே முழங்கப்படுகிறான்.] என்று வேதத்தை விவரிக்கவந்த ஸ்ரீ விஷ்ணுபுராணம் முதலான ஸ்ம்ருதிகளும் இவ்வர்த்தத்தையே தெளிவாக உத்கோஷித்தன. ஆகையாலே விரோதமில்லை. ஆக, ஸமஷ்டிவ்யஷ்டிரூபமான எல்லா உலகிற்கும், தானே காரணமாகவும் ஶேஷியாகவுமிருப்பவன் என்று சொல்லிற்றாயிற்று. 6.

॥ भा ॥ यथा सर्वकारणस्यापि प्रकृतिद्वयस्य कारणत्वेन, सर्वाचेतनवस्तुशेषिणश्चेतनस्यापि शेषित्वेन, कारणतया शेषितया चाहं परतरः ; तथा ज्ञानशक्तिबलादिगुणयोगेन चाहमेव परतरः। मत्तोऽन्यत्—मद्व्यतिरिक्तं ज्ञानबलादिगुणान्तरयोगि किंचिदपि परतरं नास्ति ॥

ஆராய்ந்தால், **ஆங்கு இல்லை**—அப்படி இல்லை. **மன்னிய நூல் மா மணி போல்**—உறுதியான நூலில் உயர்ந்த ரத்தினங்கள்போலே, **என்பால் கோப்புண்டு வந்தே**—என்னிடம் கோர்க்கப்பட்டதாகவே, **இது எல்லாம்**—இந்த எல்லா உலகமும். **செறிந்து**—சிதறிவிடாமல் நெருங்கியிருப்பதாய், **சேமம் உற**—ரக்ஷை பெற்று, **நிற்கும்**—நிற்கும்.

---

7. அசேதநப் பொருளைப்போலே. சேதநப்பொருளும் என்னுடைமையாகையாலே நானே அதற்கு உபாயமாயிருக்கத்தக்கவன் என்று முன் ஶ்லோகங்களில் உணர்த்தினன். அச்சேதநப்பொருளைக் காட்டிலும் ஜ்ஞாநம், ஶக்தி முதலானவற்றில் மிகச்சிறந்தவனுகையாலும் நானே உபாயமாயிருக்கத்தக்கவன் என்று வலியுறுத்துகிருன் இந்த ஶ்லோகத்தின் முற்பாதியாலே. முன் ஶ்லோகத்திலிருந்து ததா² ஶப்³த³த்தை இங்கு சேர்த்துக் கொள்ளவேண்டும். (ததா²) முன் ஶ்லோகத்தில் காட்டப்பட்ட காரணத்வ ஶேஷித்வங்களுக்கு மேலே ஓரர்த்த₂ம் இங்கு காட்டப்படுகிறது. வ்யஷ்டிப் பொருள் அனைத்துக்கும் காரணமான இரண்டு ப்ரக்ருதிகளுக்கும் காரணமாயிருப்பதன் மூலமும், எல்லா அசேதநப் பொருள்களுக்கும் ஶேஷியாயிருக்கும் சேதநப்பொருளுக்கும் ஶேஷியாயிருப்பதன் மூலமும், காரணத்வத்தையிட்டும், ஶேஷித்வத்தையிட்டும் எப்படி நானே மிகவும் மேலானவனுயிருக்கிறேனே, அப்படியே ஒப்பற்ற ஜ்ஞானம், ஶக்தி, ப₃லம் முதலான கு₃ணங்களோடு கூடியிருக்கையாலும் நானே மிகவும் மேலானவன் என்றபடி. முன் ஶ்லோகத்தில் அந்வயத்தால் சொன்ன அர்த்த₂த்தையே இங்கு வ்யதிரேகத்தால் சொல்லுவதாகக் கொள்ளலாகாதோ? எனில்: அப்படிக் கொள்வதில் பயன் சிறிதேயாகையாலும், முன் ஶ்லோகத்தில் "சேதனன் அசேதனத்தைக் காட்டிலும் பரன்; நான் பரதரன்" என்னும் அர்த்த₂ம் ஶாப்₃த₃மாகச் சொல்லப்படவில்லையாகையாலும், அதில் ஶாப்₃த₃மாகச் சொல்லப்படாத கு₃ணங்களாலுண்டான சிறப்பே, இங்கு வ்யதிரேகத்தால் உறுதிப்படுத்தப்படுகிறது என்று கொள்ளவேண்டும்.

'தத₂ா''ஶப்₃த₃த்தாலே முன் ஶ்லோகங்களில் கூறப்பட்ட அநந்த மஹா விபூ₄தியுடைமையை த்₃ருஷ்டாந்தமாக்கி, அதுபோலே அநந்த கு₃ணங்களை உடையவன் என்று காட்டப்படுகிறது இங்கு. (மத்த: அந்யத் கிஞ்சித் பரதரம் நாஸ்தி) என்னைக் காட்டிலும் வேறுபட்டதாய், ஜ்ஞாநம், ப₃லம் முதலான நற்குணங்களை உடைய சேதந வஸ்துக்களில் எதுவும் அக்குணங்களில் பரதரமாக—மிகவும் மேலானதாக—இல்லை. ''மத்த: பரதரம் கிஞ்சித் நாஸ்தி'' [என்னைக் காட்டிலும் மேலானது ஒன்றும் இல்லை] என்று அந்வயித்துப் பொருள் கொண்டால், 'அந்யத்' என்னும் பத₃ம் அந்வயிக்காமல் நிற்கிறது. மேலும், ''என்னைக் காட்டிலும் மேலானது இல்லை'' என்று கூறியதால், ஸமமானது உண்டோ என்னும் ஐயமும் தவிர்க்கப்படாமலுள்ளது. இவ்விரு குறைகளும் ஏற்படாமலிருக்க, ''மத்த: அந்யத் கிஞ்சித் பரதரம் நாஸ்தி'' [என்னைக்காட்டிலும் வேறானது எதுவும் (ஜ்ஞாநம், ப₃லம் முதலான நற்கு₃ணங்களில்) மிகவும் மேலானதாயில்லை] என்றே பொருள் கொள்ளவேண்டும். ''பரதரம் நாஸ்தி'' [மிகவும் மேலானது இல்லை] என்றதால் ஸாமாந்ய ஜீவர்களைக் காட்டிலும், பிரமன், உருத்திரன் முதலான அதி₄காரி புருஷர்களும், நித்யமுக்தர்களும் முற்கூறிய நற்குணங்களில் மேலானவர்களாயிருந்த போதிலும், அவற்றில் அவர்களிலும் மேம்பட்ட என்னைப் போலே மிகவும் மேலானவர்களாயிருப்பவர் எவருமில்லை என்றதாயிற்று. (த₄நஞ்ஜய) நீ எல்லாச் செல்வங்களையும் ஜயித்திருக்கும் த₄நஞ்ஜயனாய், ஜ்ஞாநம், ப₃லம் முதலான கு₃ணங்களில் மற்றுள்ளாரைக் காட்டிலும் மிக்கிருப்பதுபோலே, நான் அக்கு₃ணங்களில் உன்னையும், உன்னிலும் மிக்கிருப்பவர்களான அனைவரையுங் காட்டிலும் மிகவும் மிக்கிருப்பவன் என்று கருத்து. ஆக, ஜ்ஞாநம், ப₃லம் முதலான கல்யாணகு₃ணங்களில் தனக்கு ஒத்தாரும், மிக்காரும் இல்லை என்று கூறப்பட்டதாயிற்று. ''ந தத் ஸமஶ் சாப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே'' [ஶ்வே] [அவனை ஒத்தாரும், மிக்காரும் காணப்படவில்லை] ''ஒத்தார் மிக்காரையிலையாய மாமாயா'' (திருவாய் 2-3-2) என்று உப₄யவேதா₃ந்தங்களும் இவ்வர்த்த₂த்தையே உத்₃கோ₄ஷித்தன. ஆக, ''பூமிராப:'' [4] என்று தொடங்கி மூன்று ஶ்லோகங்களால்—''ஈஶ்வரனை எதிர்பாராமல் மூலப்ரக்ருதி தானே உலகமாகப் பரிணமிக்கிறது'' என்னும் வாத₃மும் ''புருஷனுடைய ஸந்நிதி₄ மாத்ரத்தாலே மூலப்ரக்ருதி பரிணமிக்கிறது'' என்னும் வாத₃மும் ''ப்ரக்ருதி புருஷர்கள் ஈஶ்வரஶேஷமானவையல்ல'' என்னும்

॥ भा ॥ सर्वमिदं चिदचिद्वस्तुजातं कार्यावस्थं कारणावस्थं च मच्छरीरभूतं सूत्रे मणिगणवदात्मतयाऽवस्थिते मयि प्रोतम्—

வாதமும் தள்ளப்பட்டன. ''மத்த: பரதரம்'' என்னும் ஶ்லோகார்த்தத்தாலே ''மும்மூர்த்திகளும் ஒன்று'' ''மும்மூர்த்திகளும் ஸமர்'' ''மும்மூர்த்திகளுக்கு மேற்பட்ட வேறொருன்றே பரம்பொருள்'' ''மும்மூர்த்திகளில் பிரமனே அல்லது சிவனேதான் பரம்பொருள்'' ''மும்மூர்த்திகள் ஒவ்வொருவர் ஒவ்வொரு கல்பத்தில் பரம்பொருள்'' என்னும் வாதங்கள் தள்ளப்பட்டன- ஆக, இவ்வளவால் தானே உலகிற்குக் காரணமாகையாலும், ஶேஷிகையாலும், கல்யாண குணங்களில் ப்ரதானனுகையாலும் தானே சேதநர்க்கு மோக்ஷத்தில் ப்ராப்யனும், மோக்ஷோபாயமாயிருக்கத்தக்கவன் என்று அறுதியிடப் பட்டது. *7.

7*. இனி, முன் ஶ்லோகங்களில் தனக்குச் சொன்ன உபாதாந காரணத்வத்தால் ஏற்படும் ஸ்வரூப விகாரஶங்கையைத் தவிர்ப்பதற்காகவும், ப்ரக்ருதி புருஷர்களிருவரும் தன்னைக் காட்டிலும் தனியாயுள்ளனவோ என்னும் ஶங்கையைத் தவிர்ப்பதற்காகவும், சேதன வஸ்துவோடு, அசேதந வஸ்துவோடு வாசியறத் தனக்கு ஶரீரமாய், அத்யந்த பரதந்த்ரமாயிருக்கையலே தானே சேதநர்க்கு உபாயம் என்று உணர்த்துவதற்காகவும் ஸர்வாதாரத்வத்தைச் சொல்லுவதன் மூலம் தானே ஸர்வஶரீரியெனக் காட்டுகிருன் ஶ்லோகத்தின் பிற்பாதியாலே. (ஸர்வம் இதம்) கார்ய நிலையிலும், காரண நிலையிலும் உள்ள இந்த எல்லாச் சேதநாசேதநப்பொருள்களும். (ஸூத்ரே மணிகணா: இவ மயி ப்ரோதம்) உறுதியான நூலில் ரத்தினங்கள் போலே என்னிடம் கோர்க்கப்பட்டிருக்கின்றன, நூலில் கோர்க்கப் பட்ட ரத்தினங்களை மற்ற வஸ்துக்களுக்கும், அவற்றினுள் நுழைந்து அவற்றைத் தாங்கிநிற்கும் நூலைத் தனக்கும் த்ருஷ்டாந்தமாகக் கூறுகையாலே, மற்ற சேதநாசேதநப் பொருள்கள் தனக்கு ஶரீரமென்றும், தான் அவற்றுக்கு ஆத்மாவென்றும் காட்டுகிருன். ஒரே நூல் எல்லா மணிகளுக்கும் ஆதாரமாயிருப்பதுபோலே, தான் மற்ற எல்லாப்பொருள்களுக்கும் ஆதாரமாயிருப்பவன் என்றும், நூல் ரத்நங்களினுள் மறைந்திருப்பதுபோலே, தான் மற்ற பொருள்கள் அனைத்திலும் மறைந்திருப்பவன் என்றும், மணிகளுக்கு அதீனமாக நூலின் ஸ்திதியில்லாததுபோலே, ப்ரக்ருதிபுருஷர்களுக்கு அதீநமாகத் தனது ஸ்திதியில்லை யென்றும் ஸூத்ர (நூல்) த்ருஷ்டாந்தத்தாலே

आश्रितम्। * यस्य पृथिवी शरीरम् (बृ. ५. ७. ३) * यस्यात्मा शरीरम् (बृ. ५. ७. २२) * एष सर्वभूतान्तरात्माऽपहतपाप्मा दिव्यो देव एको नारायणः (सु. ७) इत्यात्मशरीरभावेनावस्थानं च जगद्ब्रह्मणोरन्तर्यामिब्राह्मणादिषु सिद्धम्॥ ७॥

உணர்த்துகிறான். இப்படிப் பல விதங்களில் ஸூத்ர த்ருஷ்டாந்தம் ஒத்திருந்தபோதிலும், "அந்தர் ப3ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி2த:" [உலகிலுள்ள எல்லாப்பொருள்களிலும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிறான் நாராயணன்.] என்று உபநிஷத் உத்3கோ4ஷிக்கையாலே, நூலைப் போலல்லாமல் இவன் எல்லாப் பொருள்களையும் வெளியிலும் வியாபித்திருப்பவன் என்பது உணரத் தக்கது. இப்படி எல்லாம் இவனுக்கு ஶரீரமாகவும், இவன் அனைத்துக்கும் ஆத்மாவாகவுமிருப்பவன் என்பதை "யஸ்ய ப்ருதி2வீ ஶரீரம்" [ப்3ருஹ 5-7-3] என்று தொடங்கி "யஸ்யாத்மா ஶரீரம்" [5.7-22] என்பதீறாக அந்தர்யாமி ப்3ராஹ்மணத்திலும், ஸுபா3லோபநிஷத்வாக்யங்களிலும் உபநிஷத் உத்3கோ4ஷித்தது. ஸுபா3லோபநிஷத்து "ஏஷ ஸர்வ பூ4தாந்தராத்மா அபஹதபாப்மா தி3வ்யோ தே3வ ஏகோ நாராயண:" [இவனே எல்லா பூ4தங்களுக்கும் அந்தராத்மாவாய், தாழ்வுகளற்றவனாய், அப்ராக்ருதனாய் ஒப்பற்றவனாயிருக்கும் தே3வனான நாராயணன்.] என்று இவனை நாராயணன் என்றும் காட்டி, "ஶரணம் க3திர் நாராயண:" என்று இவனே நிருபாதி4க ப்ராப்யனாகவும், ப்ராபகனாகவுமிருப்பவன் என்றும் காட்டிற்று என்பதும் இங்கு உணரத்தக்கது. ஆக இதுவரையில் எல்லாச் சேதநாசேதநப் பொருள்களுக்கும் காரணமாகவும், ஶேஷியாகவும், ஆத்மாவாகவும், சேதநரைக்காட்டிலும் கு3ணங்களில் மேலானவனாகவுமிருக்கையாலே சேதநர்க்கு இயற்கையாகவே உபாயோபேயங்களாயிருப்பவன் தானே என்று சொல்லிற்றாயிற்று. 7*.

8-11. உலகில் மற்ற பொருள்களும் ப்ராப்யங்களாகவும், ப்ராபகங்களாகவும் காணப்படுகையில், நானே ப்ராப்யப்ராபகங்களாயிருப்பவன் என்பது எப்படி? என்னும் ஶங்கையெழ, ஒவ்வொரு பதா3ர்த்த2த்திலும் உள்ள ப்ராப்யத்வ ப்ராபகத்வங்களுக்கு உறுப்பான சிறப்புகள் உண்மையில் தன்னதீ4னமே என்பதை அவற்றோடு ஸாமாநாதி4கரண்ய ப்ரயோகமும் செய்து காட்டுகிறான் இனி நாலு ஶ்லோகங்களாலே. அப்பு [நீர்] முதலான எல்லாப் பொருள்களும் முற்

॥भा॥ अतस्सर्वस्य परमपुरुषशरीरत्वेनात्मभूतपरमपुरुषप्रकारत्वात्सर्वप्रकारः परमपुरुष एवावस्थित इति सर्वैश्शब्दैस्तस्यैवाभिधानमिति तत्तत्सामानाधिकरण्येनाह—

रसोऽहमप्सु कौन्तेय प्रभाऽस्मि शशिसूर्ययोः।
प्रणवस्सर्ववेदेषु शब्दः खे पौरुषं नृषु॥ ७॥

8. ரஸோऽஹமப்ஸு கௌந்தேய ப்ரப₄ாऽஸ்மி
ஶஶிஸூர்யயோ: ।
ப்ரணவஸ் ஸர்வவேதே₃ஷு ஶப்₃த₃: கே₂ பௌருஷம்
ந்ருஷு ॥

---

8. எல்லாநா ணுதலிணு லப்பி லினிமையுநான்
சொல்லார் மதியிரவிச் சோதியுநான்—நல்லார்க
ளோங்காரம் வேதத் துயர்விண் மிசைச்சத்தம்
பாங்குநர ரிற்பௌ ருடம்.

கூறியபடி பரமபுருஷஶரீரமாயிருந்துகொண்டு, ஆத்மாவான அவனுக்கு ப்ரகாரமாயிருக்கையால், அந்த அப்பு முதலான பொருள்களை ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் ஆக்குவதற்கு உறுப்பாக அவற்றிலுள்ள ரஸம் முதலான சிறப்புகளும், அவனுக்கு ப்ரகாரமான அப்பு முதலானவற்றுக்கு ப்ரகாரமாயிருக்கையால் அவனுக்கு ப்ரகாரமாயிருக்கின்றன. இப்படி ரஸம் முதலான த₄ர்மங்களோடு, அப்பு முதலான த₄ர்மிகளோடு வாசியற எல்லாவற்றையும் ப்ரகாரமாகக் கொண்டவனாகப் பரமபுருஷன் ஒருவனேயிருப்பதால், அப்பு முதலான த₄ர்மிவாசக ஶப்₃த₃ங்களைப்போலே ரஸம் முதலான த₄ர்மவாசகமான ஶப்₃த₃ங்களும் அவனையே முக்₂யவ்ருத்தியினாலே அறிவிக்கின்றன என்பதை ரஸம் முதலான ஶப்₃த₃ங்களைப் பரமபுருஷனை தன்னைச் சொல்லும் அஹம் ஶப்₃த₃த்தோடு ஒரே வேற்றுமையில் படிப்பதன்மூலம் அறிவிக்கிறான் இந்த ஶ்லோகங்களில். ''பூமிராப:'' என்னும் நாலாம் ஶ்லோகத்திலிருந்து தொடங்கி மூன்றரை ஶ்லோகங்களாலே பே₄த₃ஶ்ருதியின் பொருள் விளக்கப்பட்டது. ''மயி ஸர்வம்'' என்னும் அரை ஶ்லோகத்தாலே க₄டகஶ்ருதியின் பொருள் விளக்கப்பட்டது. இவ்விரண்டு ஶ்ருதிகளாலும் நிர்வஹிக்கப்படும் அபே₄த₃ ஶ்ருதியின் பொருள் இந்த நாலு ஶ்லோகங்களாலே விளக்கப்படுகிறது.

கௌந்தேய!—குந்தீபுத்திரனே! **அஹம்**—நான், **அப்ஸு**—நீரில், **ரஸ: (அஸ்மி)**—நற்சுவையாயிருக்கிறேன். **ஶஶிஸூர்ய யோ:**—சந்திரஸூர்யர்களின், **ப்ரப₄ா அஸ்மி**—ஒளியாயிருக்கிறேன். **ஸர்வவேதே₃ஷு**—எல்லா வேத₃ங்களிலும், **ப்ரணவ: (அஸ்மி)** — ஓங்காரமாயிருக்கிறேன். **கே₂** — ஆகாஶத்தில், **ஶப்₃த₃: (அஸ்மி)**—ஶப்₃த₃கு₃ணமாயிருக்கிறேன். **ந்ருஷு**—ஆண்களின், **பௌருஷம் (அஸ்மி)**—புருஷத்தன்மையாயிருக்கிறேன்.

எல்லாம் நான் ஆதலினால்—எல்லாப் பொருள்களும் நானேயாயிருப்பதால், **அப்பில் இனிமையும் நான்**—நீரில் நற்சுவையாயிருப்பவன் நானே. **சொல் ஆர் மதி இரவி சோதியும் நான்**—அனைவராலும் புகழப்படும் சந்திரனிடமும், ஸூர்யனிடமும் உள்ள ஒளியும் நானே. **வேதத்து**—வேதத்தினுள், **நல்லார்கள் ஓங்காரம்**—நல்லவர்கள் விரும்பும் ஓங்காரம் நானே. **உயர் விண்மிசை சத்தம்**—உயர்ந்திருக்கும் ஆகாயத்தில் ஶப்₃த₃கு₃ணமும் நானே. **பாங்கு நரரில் பௌருடம்** — ஆண்மையுடைய ஆண்களின் ஆண்மை நானே.

8, **(அப்ஸு ரஸ: அஹம்)** நீரை ஜீவர்களுக்கு ப்ராப்யமாக்கும் கு₃ணங்களில் ப்ரத₄ானமானதான 'ரஸம்' (சுவை) என்னும் கு₃ணம் நானே. நீர் எனக்கு ப்ரகாரமாகையால், அதற்கு ப்ரகாரமான ரஸகு₃ணமும் எனக்கு ப்ரகாரமாய் என்னதீ₄னமாயிருக்கிறது என்றபடி. நீருக்குள்ள சிறப்புக் குணமான சுவை நான் நீருக்கிட்ட பிச்சை என்று கருத்து. ரஸத்தைக்கருதி நீரை ப்ராப்யமாகக்கொள்வது மயக்கம். அந்த ரஸத்தை அதற்கு அளித்த ஸர்வரஸனை என்னை ப்ராப்யமாகக் கொள்வதே தெளிவு என்பது திரண்ட பொருள். மேலே எடுக்கப்படும் ப்ராப்ய ப்ராபகப் பொருள்களிலும் இப்படியே கொள்வது. "ரஸபூ₄தே மயி ஆப: ப்ரோதா:" [ரஸமாயிருக்கும் என்னிடம் நீர் கோர்க்கப்பட்டிருக்கிறது] என்று ஶங்கரர் ப₄ாஷ்யமிட்டார். "ரஸம் முதலான த₄ர்மத்தோடு கூடிய என்னிடத்தில் நீர் முதலானவை கோர்க்கப்பட்டுள்ளன" என்று மற்றும் சிலர் வ்யாக்யானம் செய்தனர். நீர் ரஸத்திற்கு ஆத₄ாரமாயிருக்க, ரஸத்தை நீருக்கு ஆத₄ாரமாக்குகிறபடியால் இந்த உரைகள் பொருந்தமாட்டா. ஆகையால்

எனது ஶரீரமாய், ப்ரகாரமாயிருக்கும் நீரின் ப்ரகாரமான ரஸகு₃ணம் எனக்கு ப்ரகாரமாகையாலே அது என்னதீ₄னமே என்று பொருள் கொள்வதே பொருத்தம். உலகில் ரஸம் முதலான ஶப்₃த₃ங்கள் அந்தந்த கு₃ணங்களை மாத்திரம் குறிக்கும் நிஷ்கர்ஷக ஶப்₃த₃ங்களாக வழங்கப்பட்டபோதிலும், இங்கு 'ரஸம் நானே' என்று ஒரே வேற்று மையில் படிக்கையால், அவை நிஷ்கர்ஷக ஶப்₃த₃ங்களல்ல; ப்ரகார ப்ரகாரிபா₄வத்தையிட்டுப் பரமாத்ம பர்யந்தம் குறிப்பவை என்று கொள்ளவேண்டும். பூ₄மி முதலான த்₃ரவ்யங்களின் ப்ரகாரமான காடி₂ந்யம் முதலானவை பரமாத்மாவுக்கே ப்ரகாரமாகின்றன என்பதை "காடி₂ந்யவாந் யோ பி₃ப₄ர்த்தி தஸ்மை பூ₄ம்யாத்மநே நம:" [வி-பு 1-14-18] முதலானவிடங்களில் ஸ்ரீபராஶரரும் காட்டினர். இங்கு நீர் முதலான த்₃ரவ்யங்களை யெடுத்து அவற்றிலுள்ள ப்ரதா₄ன கு₃ணங்களான ரஸம் முதலானவை நானே என்று விதி₄ப்பதற்குக் கருத்து என்னென்னில்; ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் உலகில் காணப்படும் த்₃ரவ்யங்களை எடுத்து, அவற்றின் ப்ராப்ய ப்ராபகத் வத்துக்கு உறுப்பான ப்ரதா₄ந கு₃ணங்கள் என்னதீ₄னமேயாகை யால், நிருபாதி₄க (இயற்கையான) ப்ராப்ய ப்ராபகத்வம் என்னி டமேயுள்ளது என்று விதி₄ப்பதே இங்கு எம்பெருமானின் திருவுள்ளம். ரஸகு₃ணம் பூ₄மியிலுமிருக்க, நீரில் ரூபம் முதலான மற்ற குணங் களுமிருக்க, நீரின் கு₃ணமாக ரஸத்தை எடுத்தது — முந்தின தத்வமான தேஜஸ்ஸில் மறைந்திருந்து, நீரிலேயே வெளிப்பட்ட தனிக்குணமாகையாலும், ரஸத்தையிட்டே நீருக்கு ப்ராப்யத்வம் காண்கையாலுமே. "ஆத்தக₃ந்தா₄ ததா₃ பூ₄மி: ப்ரளயத்வாய கல்பதே" [வி-பு 6-4-14] [க₃ந்த₄த்தை இழந்தவுடன் பூ₄மி நீரில் லயத்தை அடைகிறது] என்று பூ₄மி, நீர் முதலான தத்வங்கள் (முறையே) அவற்றின் தனிக்குணமான க₃ந்த₄ம், ரஸம் முதலானவற்றை இழந்தால் முந்திய தத்வங்களில் லயமடைந்துவிடும் என்று ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் கூறுகையாலே நீர் முதலானவற்றில் ரஸம் முதலான வற்றின் ப்ராதா₄ந்யம் விளங்குகிறது. இவ்வண்ணமே மேலே ஒவ் வொரு த்₃ரவ்யத்திற்கு ஒவ்வொரு கு₃ணத்தை எடுத்து 'அது நானே' என்று விதி₄க்குமிடங்களிலும் கண்டுகொள்வது. அடுத்த ஶ்லோகத் தில் "புண்யோ க₃ந்த₄: ப்ருதி₂வ்யாம்" என்று பூ₄மியின் கு₃ணமான மணத்தை 'நறுமணம்' என்று விஶேஷித்திருப்பதையொட்டி, இங்கும் ப்ராப்யமான நற்சுவையே ரஸம் எனப்படுவதாகக்கொள்ளவேண்டும். (ஶஶிஸூர்யயோ: ப்ரபா₄ அஸ்மி) சந்திரனுடைய தண்மைமிக்க ஒளியும், ஸூர்யனுடைய வெம்மைமிக்க ஒளியும் நானே. இவ் வொளிகளினாலேயே அவை உலகிற்கு உபகரிக்கையாலும்,

पुण्यो गन्धः पृथिव्यां च तेजश्चास्मि विभावसौ।
जीवनं सर्वभूतेषु तपश्चास्मि तपस्विषु॥ ९ ॥

9. புண்யோ க₃ந்த₄: ப்ருதி₂வ்யாம் ச தேஜஶ்சாஸ்மி விபா₄வஸௌ

ஜீவநம் ஸர்வபூ₄தேஷு தபஶ்சாஸ்மி தபஸ்விஷு ||

ப்ருதி₂வ்யாம் ச—பூமியிலும், புண்ய: க₃ந்த₄: (அஸ்மி)—நறுமணமாயிருக்கிறேன். விபா₄வஸௌ ச — அக்₃நியிலும், தேஜ: அஸ்மி—ஒளியாயிருக்கிறேன். ஸர்வபூ₄தேஷு—எல்லா பூ₄தங்களிலும், ஜீவநம் (அஸ்மி)—மூச்சுக்காற்றுயிருக்கிறேன். தபஸ்விஷு—தவம்புரிவோரிடம், தப: ச அஸ்மி—தவமாகவுமிருக்கிறேன்.

அதனுலேயே அவற்றை உலகோர் ப்ராப்யங்களாக மதிக்கையாலும் அவ்வொளிகள் சந்த்₃ரஸூர்யர்களுக்கு ப்ரதா₄ந குணங்களாகின்றன. (ஸர்வவேதே₃ஷு ப்ரணவ:) எல்லா வேத₃ங்களுக்கும் மூலமாயிருக்கையாலே வேத₃ங்களில் ப்ரதா₄நமான ப்ரணவம் நானே. ப்ரணவத்துக்குள்ள ப்ராப்யத்வ ப்ராபகத்வங்கள் என்னதீ₄நமே என்றபடி. (ஶப்₃த₃: கே₂) ஆகாயத்தின் தனிக் குணமாய், அதற்கு ப்ராப்யத்வத்தை அளிக்கையாலே ப்ரதா₄நமான ஶப்₃த₃கு₃ணம் என்னதீ₄நமே என்றபடி. (ந்ருஷு பௌருஷம்) நரர்களிடத்திலுள்ள ப்ராப்யப்ராபகத்வஹேதுவான பௌருஷம் நானே. ந்ருஶப்₃த₃ம் ஸர்வ ஜீவர்களைக் குறிப்பதாகவும், ஆண்களை மாத்திரம் குறிப்பதாகவும் இருவிதமாகப் பொருள்கொள்ளலாம் ஸர்வ ஜீவர்களையும் குறிக்கும்போது, பௌருஷம் என்று கர்த்ருத்வஶக்தியாகிற ஸாமர்த்₂யத்தைச் சொல்லுகிறது. அதனுலேயன்றோ கர்த்தாவான ஆத்மாவுக்கு கர்த்ருத்வத்துக்கு உறுப்பான மற்ற காரகங்களைக் காட்டிலும் ப்ராதா₄ந்யம் ஏற்படுகிறது. ந்ருஶப்₃த₃ம் ஆண்களை மாத்திரம் குறிக்கும்போது, 'பௌருஷம்' என்று ஒருவனை ஆண்மகன் என்று எடுத்துக்காட்டும் ஆண்தன்மையைக் குறிக்கிறது. ஸந்ததிவ்ருத்₃தி₄க்குக் காரணமான வீர்யத்தைக் குறிக்கிறது என்றுமாம். ஸ்த்ரீ நபும்ஸகர்களைக் காட்டிலும் ஆண்களை வேறுபடுத்திக்காட்டும் ப₃லம், ஸ்வாதந்த்ர்யம், வீர்யம், ஸ்தி₂ரத்வம் முதலான கு₃ணங்களைக் குறிக்கிறது என்றுமாம். இவையெல்லாம் புருஷர்களுக்கு ப்ராப்யப்ராபகத்வத்தையளிக்கும் ப்ரதா₄ன கு₃ணங்கள் என்பது தெளிவு. 8.

9\. இப்புவிநற் கந்த மெரியிலொளி யெப்பொருட்குங்
கைப்படுயிர் சத்தை கருதுங்கா—லொப்பிலா
நற்றவத்தோர் மாட்டு நலஞ்சிறந்த நற்றவநான்
பற்றலர்கள் கோளரியே பார்.

பற்றலர்கள் கோளரியே — எதிரிகளை அடக்கும் சிங்கம் போன்றவனே! இப்புவி நல் கந்தம்-இந்த பூ$_4$மியில் நல்லமணம் நானே. எரியில் ஒளி—அக்நியின் ஒளி நானே. கருதுங்கால்—ஆராய்ந்து பார்த்தால், எப்பொருட்கும் உயிர் கைப்படு சத்தை-எல்லா ஜீவராசிகளிடமுள்ள ஸத்தை நானே. ஒப்பு இலா நல் தவத்தோர் மாட்டு நலம் சிறந்த நல் தவம் நான்—ஒப்பில்லாத நல்ல தவத்தையுடையவர்களிடமுள்ள சிறப்பு மிக்க நல்ல தவமும் நானே. பார்—இதைக் காண்பாயாக.

9\. (புண்யோ க$_3$ந்த$_4$: ப்ருதி$_2$வ்யாம் ச) பூ$_4$மியிலுள்ள நறுமணம் நானே. நறுமணமே ஸத்வகு$_3$ணத்தை வளரச்செய்வதன் மூலம் ப்ராபகமாகிறது; ஸுக$_2$த்திற்குக் காரணமாவதன் மூலம் ப்ராப்யமாகவும் ஆகிறது. துர்நாற்றம் ப்ராப்யமாகவோ, ப்ராபகமாகவோ கருதப்படாமையால், ப்ராப்ய ப்ராபகமாகக் கருதப்படும் நறுமணத்தை எடுக்கிருன். ''ரஸ:' 'ஶப்$_3$த$_3$:' என்று பொதுவாக எடுக்குமிடங்களிலும், இவ்விடத்தையொட்டி — அவற்றில் ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் கருதப்படும் நல்ல அம்ஶங்களே எடுக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். புண்ய க$_3$ந்த$_4$ம் என்று சேதநரை நல்வழிக்கு அழைத்துச் செல்லும் துளஸீமணம் முதலியவற்றைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். (தேஜஶ் சாஸ்மி விப$_4$ாவஸௌ) அக்$_3$நியை ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் ஆக்கும் எரிக்கும் ஶக்தியாகிற தேஜஸ் நானிட்ட பிச்சையே. (ஸர்வபூ$_4$தேஷு ஜீவநம்) ஶரீரமுடையவர்களான பிரமன் முதலாகப் புல்லெறும்பீருகவுள்ள ஸர்வஜீவர்களின் ஜீவனம் நானிட்ட பிச்சையே. ஜீவனமாவது – மூச்சு விடுவது. ப்ராணன் நிலைநிற்பதற்குக் காரணம் என்றும் பொருள் கொள்ளலாம். 'ஸத்தை' என்று வெண்பாவில் கொள்ளப்பட்டது. அன்றிக்கே, பிறர் உபஜீவிப்பது ஜீவநமாய், அந்த ஜீவர்களிடம் உள்ள – பிறர்க்கு ப்ராப்ய ப்ராபகமாயிருக்கும் ஆகாரத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். (தபஸ்விஷு தபஶ்ச அஸ்மி) சிறந்த தவம் புரிபவர்களிடம் அவரவர்களுடைய இஷ்ட ஸாத$_4$னமாகக் காணப்படும் அத்தவமும் என்னதீ$_4$னமே. 9.

बीजं मां सर्वभूतानां विद्धि पार्थ सनातनम्।
बुद्धिर्बुद्धिमतामस्मि तेजस्तेजस्विनामहम्॥ १० ॥

10. பீ$_3$ஜம் மாம் ஸர்வபூ$_4$தாநாம் வித்$_3$தி$_4$ பார்த்த$_2$ ஸநாதநம் |
புத்$_3$தி$_4$ர் பு$_3$த்$_3$தி$_4$மதாமஸ்மி தேஜஸ்தேஜஸ்விநாமஹம் ||

பார்த்த$_2$—குந்தீ புத்திரனே! ஸர்வபூ$_4$தாநாம்—பரிண மிக்கும் எல்லாப் பொருள்களிலும், ஸநாதநம் பீ$_3$ஜம் மாம் வித்$_3$தி$_4$ — அநாதி$_3$ஸித்$_3$த$_4$மாயிருக்கும் பரிணமஸாமர்த்$_2$ய மாக என்னை அறிவாய். அஹம்—நான், பு$_3$த்$_3$தி$_4$மதாம்—அறிவுடையவர்களுடைய, பு$_3$த்$_3$தி$_4$: அஸ்மி—அறிவாக இருக் கிறேன்; தேஜஸ்விநாம்—தேஜஸ்ஸை உடையவர்களுடைய, தேஜ: (அஸ்மி)—தேஜஸ்ஸாகவுமிருக்கிறேன்.

---

10. எப்பொருட்கும் வித்தா நிலைநின்ற வென்னைநினை
யப்புருடர் புத்தியுநா னாகின்றே—னொப்பில்
பிறரொளியை மாய்க்குமப் பேரொளிநா னாவன்
செறிதிணிதோட் பார்த்தா தெளி.

செறி திணி தோள் பார்த்தா—திரண்டு உருண்ட தோள் களையுடைய குந்தீ புத்திரனே! நிலைநின்ற என்னை—நித்ய னை என்னை, எப்பொருட்கும் வித்தா நினை—எல்லாப் பொருள்களிலுள்ள உபாத$_3$ாநமக்தியாக நினைப்பாயாக. அப்புருடர் — அறிவாளிகளான ஜீவர்களின், புத்தியும்—அறிவாகவும், நான் ஆகின்றேன்—நானே ஆகின்றேன். பிறர் ஒளியை மாய்க்கும்—மற்றவர்களுடைய தேஜஸ்ஸை இல்லை செய்யும், அப்புருடர் ஒப்பில் அப்பேரொளி நான் ஆவன்—ஒப்பில்லாத தேஜஸ்ஸை உடையவர்களுடைய தேஜஸ்ஸா நானேயாகிறேன். தெளி—இதை அறிவாய்.

---

10. *(ஸர்வபூ$_4$தாநாம் ஸநாதநம் பீ$_3$ஜம் மாம் வித்$_3$தி$_4$) பரிணம மடையும் எல்லா த்$_3$ரவ்யங்களிலும் அநாதி$_3$காலமாகவுள்ளதான பரிணமிக்கும் திறமை நானென்றே அறி. தயிர், வெண்ணெ, நெய் முதலியவையாகப் பரிணமிக்கும் பால் முதலானவற்றிலுள்ள அத்திறமை, நானிட்ட பிச்சையே என்று அறிவாயாக. பால் முத*

बलं बलवतां चाहं कामरागविवर्जितम् ।
धर्माविरुद्धो भूतेषु कामोऽस्मि भरतर्षभ ॥ ११ ॥

11. ப₃லம் ப₃லவதாம் சாஹம் காமராக₃விவர்ஜிதம் ।
த₄ர்மாவிருத்₃தே₄ா பூ₄தேஷு காமோऽஸ்மி ப₄ரதர்ஷப₄ ॥

ப₄ரதர்ஷப₄—ப₄ரதகுலத்துதித்தவர்களில் சிறந்தவனே! அஹம்—நான், ப₃லவதாம்—ப₃லமுடையவர்களுடைய, காமராக₃விவர்ஜிதம் ப₃லம் (அஸ்மி)—காம்யங்களில் ஆசையற்ற ப₃லமாகவும் இருக்கிறேன். பூ₄தேஷு—ஜீவராசிகளிடம், த₄ர்மாவிருத்₃த₄:—அறத்திற்கு முரணல்லாத, காம: அஸ்மி—காமமாயிருக்கிறேன்.

---

11. திண்மையினோர் திண்மையுநான் நீதிலாத் தேசுபெறும்
ஒண்மையறு காமரா கம்மொழிந்த—வுண்மை
யறஞ்செறியுங் காமநா னுடவர்க ளேறே
சிறந்ததெலா நானுத் தெளி.

லானவை தயிர் முதலானவையாகப் பரிணமித்து ப்ராப்யமாகவும், தே₃ஹப₃லம் முதலானவற்றுக்கு ப்ராபகமாகவும் ஆவது என்னாலேயே என்று கருத்து. ''ஸர்வபூ₄தாநாம் பீ₃ஜம்'' என்று-பரிணமித்₃ரவ்யங்களின் ப்ராப்யப்ராபகத்வங்களுக்கு உறுப்பான உபாத₃ாநத்வமாகிற தன்மை சொல்லப்படுகிறது. அன்றிக்கே, எல்லா அசேதந தத்வங்களுக்கும் காரணமான மூலப்ரக்ருதியோ, அந்தந்தக் கார்யப் பொருள்களை உண்டாக்கும் காரணப் பொருள்களோ கூறப்படுவதாகவும் கொள்ளலாமாயினும், ப்ராப்யப்ராபகத்வத்துக்கு உறுப்பான ப்ரத₄ாந த₄ர்மங்கள் தன்னதீ₄னமென்று சொல்லும் ப்ரகரணமாகையாலே, முந்திய பொருளே சிறந்தது. (பு₃த்₃தி₄மதாம் பு₃த்₃தி₄: அஸ்மி) அறிவாளிகளிடம்—அவர்களுக்கும், பிறர்க்கும் ப்ராப்யமாகவும், இஷ்டப்ராபகமாகவும் காணப்படும் அறிவும் என்னதீ₄னமே. பு₃த்₃தி₄ யென்று ஒவ்வொரு விஷயத்திலுள்ள உறுதியையோ, அல்லது ஒவ்வொரு விஷயத்தைப்பற்றிய அறிவு மாத்திரத்தையோ குறிக்கிறது. (தேஜஸ்விநாம் தேஜ: அஹமஸ்மி) ப்ரதாபமுடையவர்களிடம்—ப்ராப்யப்ராபகத்வத்துக்கு உறுப்பாகக் காணப்படும் ப்ரதாபமும் நானே; அதாவது, அவர்களுடைய அநபி₄ப₄வநீயத்வம் (எவராலும் வெல்ல முடியாமலிருக்கும் தன்மை) அல்லது பராபி₄ப₄வநஸாமர்த்₂யம் (பிறரை வெற்றிகொள்ளும் தன்மை) என்னதீ₄னமே என்றபடி. 10.

ஆடவர்கள் ஏறே—ஆண்களில் சிறந்தவனே! **தீது இலா தேசு பெறும்**—தீமையில்லாத தேஜஸ்ஸை உடையவர்களாய், **ஒண்மை அறு காமராகம் ஒழிந்த**—சிறப்பற்ற காமராக₃ங்கள் நீங்கப்பெற்றவர்களான, **திண்மையினோர்**—ப₃லமுடையவர்களின், **திண்மையும் நான்**—ப₃லமும் நானே. **உண்மை**—உயிர்களிடத்து, **அறம் செறியும் காமம் நான்**—த₄ர்மத்தோடு பொருந்திய காமம் நானே. **சிறந்தது எ(ல்)லாம்**—(இவ்வுலகில் ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் காணப்படும்) சிறப்புகள் எல்லாம், **நானு தெளி**—நான் என்றே உணர்வாயாக.

---

11. (ப₃லவதாம் காமராக₃விவர்ஜிதம் ப₃லம் ச அஹம் அஸ்மி) ப₃லஶாலிகளிடம் காமராக₃ ஸம்ப₃ந்த₄மில்லாத ப₃லமும் நானே. காமமாவது—தனக்கு இன்பத்தை விரும்புவதின் உச்சநிலே. ராக₃மாவது—அதன் முதற்படி. அன்றிக்கே, காமஶப்₃த₃ம் ''காம்யந்த இதி காமா:'' என்னும் வ்யுத்பத்தியாலே விரும்பப்படும் விஷயங்களைக் குறித்து, 'காமராக₃ம்' என்று அவற்றில் விருப்பத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். காமராக₃த்தோடு கூடிய ப₃லம் பிறரை வருத்துவதற்கும் காரணமாகி, ப்ராப்யமாகாமலும், இஷ்டப்ராபகமாகாமலும் போகக்கூடுமாகையால், அப்படி ஆகாமைக்காக ''காமராக₃மற்ற ப₃லம்'' என்று விஶேஷிக்கிருன். (பூ₄தேஷு த₄ர்மாவிருத்₃த₄: காம: அஸ்மி) தே₃வர் மனிதர் முதலான ஶரீரங்களில் வாழும் ஜீவர்களுடைய—அறத்துக்குப் புறம்பல்லாத காமமும் நானேயாகிறேன். காமமாகையாலே தானே ப்ராப்யமாய், த₄ர்மத்திற்குப் புறம்பல்லாததாகையாலே நல்ல ஸந்ததி வ்ருத்₃தி₄யைச் செய்விப்பதின்மூலம் இஷ்ட ஸாத₄னமாகவுமிருக்கும் காமமும் என்னதீ₄னமே என்றபடி. '' வம்புலாம் கூந்தல் மனேவியைத் துறந்து பிறர்பொருள் தாரமென்றிவற்றை, நம்பினர் இறந்தால் நமன்தமர் பற்றி எற்றிவைத்து எரியெழுகின்ற, செம்பினலியன்ற பாவையைப்பாவீ தழுவென மொழிவதற்கு அஞ்சி'' [பெரியதிருமொழி 1-6-4] என்கிறபடியே, அறத்துக்குப் புறம்பான காமம் நரகத்தை விளேத்துப் பெருந் துன்பமளிப்பதாகையால், ப்ராப்யமும், இஷ்டப்ராபகமும் அல்லாத அதைத் தவிர்ப்பதற்காக ''த₄ர்மாவிருத்₃த₄:'' என்று விஶேஷிக்கிருன். ''கௌந்தேய'' ''பார்த்த₂'' ''ப₄ரதர்ஷப₄'' என்று அர்ஜுனனேக் கூப்பிடுவதன் மூலம், பரமஞானியான குந்தியின் பிள்ளையாய், ப₄ரதகுலத்துதித்தவனுய், மேல்விழுந்த ஊர்வஶியின் காமத்தையும் உதறியவனுன

॥ भा ॥ एते सर्वे विलक्षणा भावा मत्त एवोत्पन्नाः, मच्छेषभूताः, मच्छरीरतया मय्येवावस्थिताः ; अतस्तत्प्रकारोऽहमेवावस्थितः ॥ ८, ९, १०, ११ ॥

ये चैव सात्त्विका भावा राजसास्तामसाश्च ये।
मत्त एवेति तान्विद्धि न त्वहं तेषु ते मयि॥ १२ ॥

12. யே சைவ ஸாத்விகா ப₄ாவா ராஜஸாஸ் தாமஸாஶ்ச யே ।
மத்த ஏவேதி தாந் வித்₃தி₄ ந த்வஹம் தேஷு தே மயி ॥

12. இன்ன குணமூன்றி லேய்ந்த பொருளனைத்து
மன்னேயென் றன்மையினல் வாய்ந்ததென-வுன்னுகநீ
யாங்கவைமென் பாலே யமைந்திடினும் யானவற்றி
னீங்கலுற நிற்ப னிகழ்ந்து.

உன்னிடம் — ப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் உள்ள பௌருஷம், தேஜஸ், தபஸ், பு₃த்₃தி₄, த₄ர்மாவிருத்₃த₄காமம், காமராக₃மற்ற ப₃லம் முதலானவையும் என்னதீ₄னமே என்று உணர்த்துகிருன்.

இங்கு சேதநாசேதநங்கள் அனைத்திலுமுள்ள நன்மைகளைத் தன்னோடு ஒரே வேற்றுமையில் படிப்பது—''அரசனே இந்த தே₃ஶம்'' என்பதுபோலே அமுக்₂யப்ரயோக₃மாய், பரமாத்மாவின் ஸாமர்த்₂யத்தால் இந்நன்மைகள் விளைந்தவை என்று காட்டுவதுமாத்திரமல்ல: அனைத்தும் யதே₂ச்சிதம் தன்னிடமிருந்தே உண்டாகின்றவையாய், தனக்கு ஶேஷபூ₄தமாய், தனக்கு ஶரீரமாகத் தன்னிடமே பிரிக்க முடியாதபடியிருப்பவையாய்த் தனக்கு ப்ரகாரமாயிருப்பவை என்று காட்டும் முக்₂யப்ரயோக₃மேயாகும். ஆக, ''நவிலக்ஷணத்வாத₃ஸ்ய'' [ப்₃ரஹ்மஸூத்ரம் 2-1-4] என்று தொடங்கும் விலக்ஷணத்வாதி₄கரணப்பொருள் இந்த ஶ்லோகங்களாலே உணர்த்தப்பட்டது ; ஆக. உலகில் ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் காணப்படும் பொருள்களில் அத்தன்மைகளுக்கு உறுப்பாயுள்ள பெருமைகளெல்லாம் ஸர்வப்ரகாரியான பரமாத்மாவினல் ஏற்படுபவையாகையால், நிருபாதி₄கப்ராப்யப்ராபகனுயிருப்பவன் அவனே என்றதாயிற்று. 8, 9, 10, 11.

யே ச ஏவ ஸாத்விகா: ப₄ாவா:—ஸத்வகு₃ணமிகுதியை யுடையவையாகவே (உலகில்) யாவை சில பொருள்கள் உள்ளனவோ, யே ச (ஏவ) ராஜஸா: தாமஸா:—ரஜோகு₃ண மிகுதியையோ, தமோகு₃ணமிகுதியையோ உடையவை யாகவே யாவை சில பொருள்கள் உள்ளனவோ, தாந் மத்த ஏவ இதி—அவற்றை என்னிடமிருந்தே உண்டானவை என்றும், தே மயி இதி—அவை என்னிடமே உள்ளன என்றும், வித்₃தி₄—அறிவாய். அஹம் து—நானோவெனில், தேஷு ந—அவற்றையொட்டி இல்லை.

இன்ன — இவைபோலே, குணம் மூன்றில் ஏய்ந்த பொருள் அனைத்தும்—ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக் குணங்களில் ஒவ்வொன்றை மிகுதியாகக்கொண்ட பொருள் கள் அனைத்தும், அன்னே—முற்கூறிய பொருள்களைப் போலே, என் தன்மையினால் வாய்ந்தது என—என் ஶக்தியி னால் படைக்கப்பட்டவை என்றும், ஆங்கு அவை—அத் தகைய அப்பொருள்கள், என்பாலே அமைந்திடினும்—என் னிடமே பிரிக்கமுடியாதபடி இருந்தபோதிலும், யான்—நான், அவற்றில் நிகழ்ந்து—அவற்றில் வியாபித்து, நீங்கல் உற நிற்பன் என—அவற்றோடு ஒட்டற்றும் நிற்பேன் என்றும், நீ உன்னுக—நீ அறிவாய்.

---

12. சென்ற நாலு ஶ்லோகங்களில் பல சேதநாசேதநப் பொருள் களை எடுத்து, ப்ராப்யத்வத்திற்கும். ப்ராபகத்வத்திற்கும் உறுப்பாக அவற்றிலுள்ள சிறந்த பெருமைகளெல்லாம் தன்னதீ₄னமே என்று காட்டினான். அப்படியானால், மற்ற பல பொருள்களில் ஸாத்விக ராஜஸதாமஸ புருஷர்களுக்கு ப்ராப்யமாகவும், இஷ்ட ஸாத₄னமாகவு முள்ள மற்றும் பல தன்மைகள் இவனதீ₄னமல்லவோ? என்றும், இத்தன்மைகளையுடைய பொருள்கள் இவனதீ₄னமல்லவோ? என்றும், அவை இவனதீ₄னமாயிருப்பதுபோலே இவன் அவையதீ₄னனாயிருக் கிறானோ? என்றும் ஐயம் ஏற்படக்கூடும். இதைத் தவிர்ப்பதற்காக, உலகில், ஸத்வரஜஸ்தமோ கு₃ணங்களில் ஒவ்வொன்றை மிகுதி யாகவுடைய எல்லாப்பொருள்களும், அவற்றை அவ்வக்குணங்களை மிகுதியாவுகைடையார்க்கு ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் ஆக்கும்

॥भा॥ किं विशिष्याभिधीयते; सात्त्विका राजसास्तामसाश्च जगति देहत्वेनेन्द्रियत्वेन भोग्यत्वेन तत्तद्धेतुत्वेन चावस्थिता ये भावाः, तान् सर्वान् मत्त एवोत्पन्नान् विद्धि; ते मच्छरीरतया मय्येवावस्थिता

எல்லாத்தன்மைகளும் தன்னதீ₄னமே என்றும், தான் அவைய தீ₄னனுயில்லை என்றும் காட்டுகிருன் இந்த ஶ்லோகத்தில். (யே சைவ) முன் ஶ்லோகங்களிற்போலே விலக்ஷணர்க்கு ப்ராப்ய ப்ராபகமாயுள்ள விலக்ஷணத் தன்மைகள் என்று தனித்துச் சொல்ல வேண்டியதில்லை; விலக்ஷணுவிலக்ஷண விப₄ாக₃மற அனைவர்க்கும் ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் உள்ள எல்லாப் பொருள்களும், அவற்றிலுள்ள எல்லாத் தன்மைகளுமே தன்னதீ₄னம் என்று சகாரத்தாலும், ஏவ காரத்தாலும் காட்டுகிருன். (ஸாத்விகா:) ஸத்வகு₃ணத்தை மிகுதி யாக உடையவையாகவும். (ராஜஸா: தாமஸாஶ்ச) ரஜோகு₃ணத்தை அல்லது தமோகு₃ணத்தை மிகுதியாக உடையவையாகவும். (யே ப₄ாவா:) உலகில் பே₄ாகோ₃பகரணங்களான தே₃ஹமாகவும், இந்திரியங்களாகவும், பே₄ாக்₃யமான ஶப்₃த₃ாதி₃ விஷயங்களாகவும், இவற்றுக்குக் காரணமான ஸமஷ்டிப்பொருள்களாகவும், "ப்ர ஹர்ஷ: ப்ரீதிராநந்த₃: ஸுக₂ம் ஸம்ஶாந்தசித்ததா" [ப₄ார-மோக்ஷ 29-27] [சிறந்த உகப்பு, பிரீதி, ஆனந்த₃ம், ஸுக₂ம், சித்தமடங்கிய தன்மை] என்று ஸத்வகு₃ணத்தால் விளைவதாகக் கூறப்படும் தன்மை களாகவும், "அதுஷ்டி: பரிதாபஶ்ச க்ரோதோ₄ மோஹஸ் தத₂ாऽக்ஷமா" [ஷை 28] [திருப்தியின்மை, பரிதாபம், கோபம், மயக்கம், பொறுமையின்மை] என்று ரஜோகு₃ணத்தால் விளைவ தாகக் கூறப்படும் தன்மைகளாகவும், "அவிவேகஸ் தத₂ா மோஹ: ப்ரமாத₃: ஸ்வப்நதந்த்₃ரிதா" [ஷை 29] [விவேகமின்மை, மயக்கம், கவனமின்மை, ஸ்வப்நநிலை, சோம்பல்] என்று தமோகு₃ணத்தால் விளைவதாகக் கூறப்படும் தன்மைகளாகவும், ஆக இப்படி அவர வர்க்கு ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் காணப்படும் எல்லாப் பொருள்களும் — இங்கு யச்ச₂ப்₃த₃த்தால் உணர்த்தப்படுகின்றன. (மத்த ஏவேதி தாந் வித்₃தி₄) அவையனைத்தும் என்னிடமிருந்தே உண்டானவை என்று அறிவாயாக. ஏவகாரத்தால், நிமித்தகாரண மாகவும், உபாத₃ாநகாரணமாகவும் தானே ஆகிருன் என்று காட்டு வதன்மூலம், நிமித்தம் வேறு, உபாத₃ானம் வேறு எனும் பக்ஷமும், ஸாத்விகம் முதலான விசித்ர ஶக்திகள் மூலப்ரக்ருதிக்குப் பரமாத்ம ஸங்கல்பத்தாலல்லாமல் இயல்வாய் ஏற்பட்டவையென்றும், இப்படி ஶக்திகள் விசித்திரமாயிருக்கிறபடியால், அவ்வவற்றுக்குத் தக்கபடி

इति च। नत्वहं तेषु—नाहं कदाचिदपि तदायत्तस्थितिः; अन्यत्रात्मायत्तस्थितित्वेऽपि शरीरस्य, शरीरेणात्मनस्स्थितावप्युपकारो विद्यते; मम तु तैर्न कश्चित्तथाविध उपकारः, केवललीलैव प्रयोजनमित्यर्थः ॥ १२ ॥

त्रिभिर्गुणमयैर्भावैरेभिस्सर्वमिदं जगत्।
मोहितं नाभिजानाति मामेभ्यः परमव्ययम् ॥ १३ ॥

பல நிமித்தகாரணங்கள் உளவென்றும் கூறும் பக்ஷங்களும் தள்ளப் பட்டன. (தே மயி இதி வித்₃தி₄) அவை என் ஶரீரமாய், என்னிடமே ஸத்தாஸ்தி₂தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைப்பெற்று நிற்கின்றன என்றும் அறிவாயாக. 'மயி' என்னும் ஏழாம் வேற்றுமையால், அவற்றை ஒரே வேற்றுமையில் படிக்கலாம்படி அவை தனக்கு ஶரீரமாய், தான் அவற்றை உள்நுழைந்து நியமிப்பவனுயிருக்கின்ற தன்மை காட்டப்படுகிறது. (அஹம் து ந தேஷு) நானேவெனில், அவை என்னை யொட்டியிருப்பதுபோலே அவற்றையொட்டி இல்லை. உலகில் ஶரீரம் ஆத்மாவினுல் ஸத்தாஸ்தி₂தி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைப் பெற்றிருந்தபோதிலும், ஆத்மாவின் வாழ்வுக்கும் ஶரீரத்தால் பயன் விளைவதுண்டு. என் விஷயத்தில் அப்படியில்லை. எனக்கு அவற்ருல் அத்தகைய உதவி எதுவுமில்லை. (அஹம்) நான் அவாப்த ஸமஸ்தகாமனுன பரிபூர்ணனுகையாலே, கேவலலீலையே எனக்கு அவற்ருல் விளையும் பயன் என்று கருத்து. "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம்" [தைத்-ஆர 3-11] "அந்தர் ப₃ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:" [தை-நா] "அஹமாத்மா" [கீ₃தை 10-20] என்று பரமாத்மாவை அனைத்தினுள்ளும் நுழைந்து நியமிப்பவனுகக்கூறும் பல ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்கு முரணுகுமாகையால், 'ந த்வஹம் தேஷு' என்பதற்கு 'நான் அவற்றில் வியாபித்திருப்பதில்லை' என்று பொருள் கொள்வது பொருந்தாது. "அவை என்னையொட்டி நின்று உதவிபெறுவதுபோலே, நான் அவற்றையொட்டிநின்று எவ்வுதவியும் பெறுவதில்லை" என்று பொருள்கொள்வதே பொருந்தும். ஆக, இவ்வளவால், "ஸ்வயாதா₂த்ம்யம்" என்று இவ்வத்தியாயத்தின் கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹத்தில் சொல்லப்பட்ட—பரமாத்மாவாகிற தன்னைப்பற்றிய உண்மையறிவு உணர்த்தப்பட்டதாயிற்று. 12.

13. த்ரிபி₄ர் கு₃ணமயைர் பா₄வைரேபி₄ஸ் ஸர்வமித₃ம் ஜக₃த் ।
மோஹிதம் நாபி₄ஜாநாதி மாமேப்₄ய: பரமவ்யயம் ॥

ஸர்வம் இத₃ம் ஜக₃த் — இவ்வுலகிலுள்ள ஜீவர் அனைவரும், ஏபி₄: த்ரிபி₄: கு₃ணமயை: பா₄வை:—இந்த முக்குண மயமான பொருள்களாலே, மோஹிதம்—மயக்கப்பெற்றவராய், ஏப்₄ய: பரம்—இவற்றைக் காட்டிலும் மிகவுயர்ந்தவனாய், அவ்யயம்—எப்போதும் ஒருபடிப்பட்டவனான, மாம்—என்னை, ந அபி₄ஜாநாதி—அறிவதில்லை.

---

13. முக்குணஞ்சே ரிப்பொருளான் மோகித்த விவ்வுலக
மக்குணங்க டம்மி லதிமேலாய்—மெய்க்குணங்க
ளொன்றதனி லோர்குறையா தோங்கிறையா
னின்றறிய மாட்டாது நேர். [மென்னைத்தா

முக்குணம் சேர் இப்பொருளால் மோகித்த இவ்வுலகம்—முக்குணங்களோடு கூடிய இந்தப் பொருள்களாலே மயங்கி நிற்கும் இவ்வுலகினர், அக்குணங்கள் தம்மில் அதிமேலாய்—அக்குணங்களையும், அவற்றையுடைய பொருள்களையுங் காட்டிலும் மிகவும் மேற்பட்டவனாய், மெய் குணங்கள் ஒன்று அதனில் ஓர் குறையாது — கல்யாண கு₃ணங்கள் ஒன்றிலும் ஒரு குறையும் இல்லாதவனாய், ஓங்கு இறையாம் என்னை — ஓங்கி நிற்கும் ஸர்வேஶ்வரனான என்னை, நேர் நின்று தான் அறியமாட்டாது — தாமாக உள்ளபடி அறிய இயலாதவராயுள்ளனர்.

---

13. இப்படி நீயே உலகம் யாவையும் ஆக்கி அளித்து அழிக்கும் காரணமாய், அவற்றுக்கு அந்தர்யாமியாய், ஶேஷியாய், கு₃ணங்களால் உயர்ந்தவனாய், ப்ராப்யனாய், ப்ராபகனாயிருப்பவனானால், இவ்வுலகினர் உன்னை ஏன் அப்படி அறியவில்லை? என்று அர்ஜுனனுக்குக் கருத்தாகக் கொண்டு, முக்குணமயமாய் என்னால் படைக்கப்பட்ட ப்ராப்ய ப்ராபகப் பொருள்களாலே மயங்கிநிற்பதாலேயே உலகினர் என்னை அறியவில்லை என்கிறான் இந்த ஶ்லோகத்தாலே. "ப்ரக்ருத்யாஸ்ய திரோதி₄:" [தன்னைப்பற்றிய உண்மையறிவு-ப்ரக்ருதியினாலே மறைக்கப்படுவது] என்று கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹத்தில் சொல்லப்பட்ட அர்த்த₂ம் இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படுவதேயாகும்.

॥भा॥ तदेवं चेतनाचेतनात्मकं कृत्स्नं जगन्मदीयं काले काले मत्त एवोत्पद्यते, मयि च प्रलीयते, मय्येवावस्थितम्, मच्छरीरभूतम्, मदात्मकं चेत्यहमेव कारणावस्थायां कार्यावस्थायां च सर्वशरीरतया सर्वप्रकारोऽवस्थितः। अतः कारणत्वेन शेषित्वेन च ज्ञानाद्यसङ्ख्येय-कल्याणगुणगणैश्चाहमेव सर्वैः प्रकारैः परतरः; मत्तोऽन्यत्केनापि

(மாம் நாபி₄ஜாநாதி) ''பூ₄மிராப:'' (4) என்று தொடங்கி, இது வரையில் சொல்லப்பட்ட ரீதியில் என்னை உள்ளபடி அறிகின்றதில்லை; அதாவது—சேதநாசேதநங்களடங்கிய உலகம் முழுவதும் என்னுடைய தாகவும், ஒருகாலத்தில் என்னிடமிருந்தே உண்டாகி, மற்றொருகாலத் தில் என்னிடமே லயத்தை அடைகிறதாகவும், என்னிடமே நிலைநிற்கிற தாகவும், எனக்கு ஶரீரமாயிருப்பதாகவும், 'நானே எல்லாம்' என்று சொல்லலாம்படி என்னைவிட்டுப் பிரியாமலிருக்கும் ப்ரகாரமாயிருப்ப தாகவுமிருக்கையாலே, நானே காரணநிலையிலும், கார்யநிலையிலும் அவையனைத்தையும் ஶரீரமாகவும், பிரியாத ப்ரகாரமாகவும் கொண்ட வனுயிருப்பவனென்றும், ஆக இப்படி உலகிற்குக் காரணமாயிருப்ப தாலும், ஶேஷியாயிருப்பதாலும், ஜ்ஞாநம், ஶக்தி முதலான கணக் கற்ற கல்யாணகு₃ணக₃ணங்களை உடையவனுயிருப்பதாலும் நானே இவ்வுலகைக் காட்டிலும் எல்லாப்படியாலும் மிகவும் மேலானவனு யிருப்பவனென்றும், என்னைக்காட்டிலும் வேறுபட்டது எதுவும் ஒரு கல்யாணகு₃ணத்தாலும் என்னைப்போலே மிக உயர்ந்ததாயில்லை யென்றும் இவ்வண்ணமாக என்னை உள்ளபடி அறிவதில்லை என்றபடி. காரணமான பிதாவாயிருப்பதால் தானே தமக்கு நன்மையை விரும்பிச் செய்பவனென்றும், ஶேஷியாயிருப்பதால் ஶேஷபூ₄தரான தமது உஜ்ஜீவனத்தையும் என் பேருகக் கருதுபவனென்றும். எல்லா மறிந்தவனுயிருக்கை, எல்லாம் வல்லவனுயிருக்கை முதலான கல்யாண கு₃ணங்களால் தமக்கு அநிஷ்டத்தைப் போக்குவதிலும், இஷ்டத்தைத் தருவதிலும் தமது முயற்சியைக்கூட எதிர்பாராதவ னென்றும் அறிவதில்லை என்று கருத்து. (நாபி₄ஜாநாதி) ''கஶ்சிந் மாம் வேத்தி தத்வத:'' [3] என்று மூன்றுவது ஶ்லோகத்தில் சொன்னபடி என்னை உள்ளபடி அறிவதில்லை என்கை. இப்படி உள்ளபடி அறியாதார் ஒருவரிருவரோ? என்னில்; (ஸர்வமித₃ம் ஜக₃த் நாபி₄ஜாநாதி) ''தே₃வர், மனிதர், திர்யக் (விலங்கு), ஸ்தா₂ர வரம்'' என்று நாலு வகைப்பட்ட யோனிகளில் இந்த லீலாவிபூ₄தியில்

कल्याणगु(णग)णेन परतरं न विद्यते। एवंभूतं मां त्रिभ्यस्सात्त्विक-राजसतामसगुणमयेभ्यो भावेभ्यः परं, मदसाधारणैः कल्याणगुणगणैः तत्तद्भोग्यताप्रकारैश्च परम्—उत्कृष्टतमम्, अव्ययं-सदैकरूपमपि तैरेव

தே$_3$ஹத்தோடு பிறந்துள்ள ப்ரவ்ருத்திபரரான எல்லா ஜீவர்களுமே என்னை உள்ளபடி அறிவதில்லை. ப்$_3$ரஹ்ம ருத்$_3$ராதி$_3$களும் இதற்கு விலக்கல்ல என்று கருத்து. நிவ்ருத்திபரனான மஹாத்மா எவனோவொருவன் உள்ளபடி அறிவதாக ''ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்$_3$யதே'' [19] என்று மேலே சொல்லப்போகிறனாகையாலே, அதனோடு முரண்படாமலிருப்பதற்காக, ப்ரவ்ருத்திபரரைக் காட்டும் ஜக$_3$ச்ச$_2$ப்$_3$த$_3$த்தையிட்டு, அவர்கள் எவருமே என்னை உள்ளபடி அறிவதில்லை என்கிறான். தே$_3$ஹத்தோடு கூடியிருக்கையாலே ப்ரவ்ருத்திபரராயிருக்கையே இவர்களுக்கு இயல்வு என்று ஜக$_3$ச்ச$_2$ப்$_3$த$_3$த்தாலே உணர்த்துகிறான். உள்ளபடி அறிவதில்லை என்றால் என்னவெனில்: (மாம் ஏப்$_4$ய: பரம் அவ்யயம் நாபி$_4$ஜாநாதி) முற்கூறியபடியுள்ள நான், எட்டாவது ஶ்லோகத்திலிருந்து தொடங்கி இந்த ஶ்லோகமீறாகச் சொல்லப்பட்ட ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் எனும் முக்கு$_3$ணமயமான பொருள்களைக் காட்டிலும் அவ்வவற்றிற்குரிய பெருமைகளில் மேலானவனாய், எனக்கேயுரிய கல்யாணகு$_3$ணங்களாலும், அந்தந்த இனிமை வகைகளில் அல்பமான அவைபோலன்றியே மிகமிக மேலானவனாயிருப்பவனென்றும், அவைபோலே அஸ்தி$_2$ரமாயிராமல், நிலையானவனாயிருப்பவனென்றும் அறியாமையே உள்ளபடி அறியாமை என்றபடி. அதாவது:—ஶப்$_3$த$_3$ம், ஸ்பர்ஶம், ரூபம், ரஸம், க$_3$ந்த$_4$ம் முதலான கு$_3$ணங்களையிட்டு ப்ராக்ருதப் பொருள்கள் இனியவையாகின்றன; பரமாத்மாவோவெனில், தன் தி$_3$வ்யமங்க$_3$ள விக்$_3$ரஹத்தில் விட்டுப் பிரியாமலிருக்கும் அப்ராக்ருதமான ஶப்$_3$த$_3$ாதி$_3$ கு$_3$ணங்களால் அவற்றைக் காட்டிலும் மிகமிக இனியவனாகிறான். ''அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு ஈசன் அடங்கெழில் அஃதென்று அடங்குக உள்ளே'' [திருவாய்மொழி 1-2-7] என்கிற ரீதியில் அவனுடைய செல்வம் என்று அநுஸந்தி$_4$க்குமளவில், அந்த ப்ராக்ருதகு$_3$ணங்களே அப்ராக்ருத கல்பங்களாய் மிகமிக இனியவையாகின்றன. இவ்வளவுக்கும் மேல், கல்யாணகு$_3$ணங்களாலும், செயல்களாலும் மிகமிக இனியவனாயிருக்கும் தன்மை அவனுக்கே உரியதொன்று. ஆக, இப்படி எல்லாவகையிலும் இவன் அவற்றைக் காட்டிலும் மிகமிக மேலானவனாய், கடலில் குளப்படிபோலே அவற்றிலுள்ள இனிமை இவனிடத்திலே அடங்கியுள்ளது என்று கருத்து. ''யச்சாஸ்யே

MFN 329 Accn. No. 2636

त्रिभिर्गुणमयैर्निहीनतरैः क्षणध्वंसिभिः पूर्वकर्मानुगुणदेहेन्द्रियभोग्यत्वेनावस्थितैः पदार्थैर्मोहितं देवतिर्यङ्मनुष्यस्थावरात्मनाऽवस्थितं सर्वमिदं जगन्नाभिजानाति ॥ १३ ॥

ஹாஸ்தி யச்ச நாஸ்தி ஸர்வம் தத₃ஸ்மிந் ஸமாஹிதம்'' [சாந் 7-1-3] [இந்த ஜீவனுக்கு இவ்வுலகில் இனியதாக எது உள்ளதோ, எது மநோரத₂த்தினளவிலேயே நிற்கிறதோ, அது அனைத்தும் பரமாத்மா விடம் சேர்ந்துள்ளது.] என்று ஓதப்படுகிறதன்றோ. ''ஏப்₄ய: பரம்'' என்று எல்லாத் தாழ்வுகளுக்கும் கொள்கலமான அவை போலன்றியே எல்லாத் தாழ்வுகளுக்கும் எதிர்த்தட்டாயிருக்கையாகிற நிகி₂லஹேய ப்ரத்யநீகத்வமும், '' மாம் '' என்று துன்பங்கலந்த சிற்றின்பமான அவைபோலன்றியே, ஒப்பற்ற ஆநந்த₃மாகவேயிருக்கையாகிற கல் யாணைகதாநத்வமும், '' அவ்யயம் '' என்று காலத்தால் அளவுபட்ட அவைபோலன்றியே, காலத்தால் அளவுபட்டிராமையாகிற நித்ய த்வமும் சொல்லப்படுகின்றன. இப்படி அவை மிகத்தாழ்ந்தவை யாய், நீ மிகவுயர்ந்தவனுயிருக்கும்போது அறிவுடையவர்களான ஜீவர்கள் ஏன் உன்னை உள்ளபடி அறிவதில்லை? எனில்: (ஏபி₄: கு₃ணமயை: த்ரிபி₄ர்ப₄ாவை: மோஹிதம்) முற்கூறிய ஸாத்விகராஜஸ தாமஸமென்னும் முக்குணமயமான மூவகைப்பட்ட பொருள்களாலே மயக்கப்பட்டவர்களாகையாலே, என்னை உள்ளபடி அறியவில்லை என்கிறுன். தே₃ாஷமுள்ளவையாயிருந்தபோதிலும் அநாதி₃காலமாக முகம் பழகிப்போந்தவையாகையாலே, அவற்றுல் மயக்கப்பட்டு, அநாதி₃காலமாக என்னை அறியவில்லை என்று கருத்து. (த்ரிபி₄: கு₃ணமயை:) ஒவ்வொரு கு₃ணம் ஒவ்வொரு பொருளில் விஞ்சி, ஒவ்வொரு பொருளில் குறைந்திருந்தபோதிலும் எல்லாப் பொருளி லும் இம்மூன்று கு₃ணங்களும் சேர்ந்தேயிருக்கையால் அவையெல் லாமே தாழ்ந்தவையாய், துன்பம் தருபவையே என்று கருத்து. (ஏபி₄ஸ் த்ரிபி₄:) கர்மாநுரூபமான அநுப₄வத்தைத் தருமவையாகை யாலே, அக்கர்மங்களைப் போலே மிகத் தாழ்ந்தவையே என்றும், அக்கர்மம் கழிந்தபின் ஒருகணங்கூட நிலைநிற்கமாட்டாதவை என் றும் கருத்து. (ப₄ாவை:) அவரவர் பூர்வகர்மாநுகு₃ணமாக தே₃ஹ மாகவும், இந்திரியங்களாகவும், பே₄ாக்₃யப்பொருள்களாகவுமிருக்கும் பத₃ார்த்த₂ங்களாலே. (கு₃ணமயை: மோஹிதம்) என்று எடுக்கப்பட்ட வற்றில் ரஜஸ்தமஸ்ஸுக்களால் மயக்கம் ஏற்படுவது சரி; ஸத்வத்தால் மயக்கம் ஏற்படுவது எப்படி? எனில்: ரஜஸ்தமஸ்ஸுக்களைக் காட்டிலும் ஸத்வத்தினுலேயே அதி₄கமான மயக்கம் ஏற்படுகிறது

॥ भा ॥ कथं स्वत एव अनवधिकातिशयानन्दे नित्ये सदैकरूपे लौकिकवस्तुभोग्यताप्रकारैश्चोत्कृष्टतमे त्वयि स्थितेऽपि, अत्यन्तनिहीनेषु गुणमयेष्वस्थिरेषु भावेषु सर्वस्य भोक्तृवर्गस्य भोग्यत्वबुद्धिरुपजायत इत्यत्राह—

दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया। *१४॥

*14. தைவீ ஹ்யேஷா கு₃ணமயீ மம மாயா து₃ரத்யயா ।

மம—என்னுடையதான, ஏஷா—இந்த, கு₃ணமயீ—முக்குணமயமான, மாயா—ப்ரக்ருதி, தைவீ—தேவனுடை என்னால் படைக்கப்பட்டதாகையாலே, து₃ரத்யயா—(எவராலும் தம் முயற்சியால் மாத்திரம்) கடக்க அரிதாயுள்ளது.

---

14. இந்தக் குணமயியா மென்றதென் மாயைதன்
சந்தத்தி னிற்கடக்குஞ் சார்வரிதாற்—சிந்தையுட
னென்னையடைந் தேயியல்வா ரிம்மா யையைக்கடக்க
முன்னையமர்ந் துற்றுன் முயன்று.

இந்த குணமயி என்றது—முற்கூறிய முக்குணமயமான பொருள் என்றது, என் மாயை ஆம்—என்னுடையதான

என்பதே உண்மை. எப்படியெனில்: விஷங்கலந்த அன்னத்தில் தேனிருப்பதைக்கண்ட அறிவிலி, பேராசையோடு அதைப் புசிக்க விழைகிறுனைகயால், அவனது அழிவு நிச்சிதமாகிறது. தேனில்லாமலிருந்திருந்தால் அவ்வன்னத்தைப் புசியாமலிருப்பானுகையால் அழிவு ஏற்பட்டிராது. அதுபோலே, ஸுக₂லேஶத்தை விளைக்கும் ஸத்வம் கலந்திருக்கையாலே, அறிவில் மிக்கவர்கள்கூட, எட்டாம் ஶ்லோகம் தொடங்கிச் சொல்லப்பட்ட கு₃ணமயமான ப்ராப்ய ப்ராபக ஆப₄ாஸங்களாலே ஈர்க்கப்பட்டு, ஆத்மநாஶத்தை அடைகிறுர்கள் என்பதை நாம் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறுேமன்றே. ஆக, "ப்₃ரஹ்மாத்₃யா: ஸகலா தே₃வா: மநுஷ்யா: பஶவஸ்தத₂ா । விஷ்ணு மாயாமஹாவர்த்த மோஹாந்த₄தமஸாவ்ருதா: ॥" [வி-பு 5-30-17] [பிரமன் உருத்திரன் முதலான எல்லா தே₃வர்களும், மனிதரும், விலங்குகளும் விஷ்ணுவின் மாயையாகிற பெருஞ்சுழலிலேயகப்பட்டு, மயக்கமாகிற பேரிருளால் சூழப்பட்டுள்ளனர்.] என்கிறபடியே ஸாத்விகராஜஸதாமஸ விப₄ாக₃மற ப்ரவ்ருத்திபரர் அனைவரும் மயங்கினவர்களே என்றதாயிற்று.

॥ भा ॥ ममैषा गुणमयी—सत्त्वरजस्तमोमयी माया यस्माद्दैवी—देवेन-क्रीडाप्रवृत्तेन मयैव निर्मिता, तस्मात्सर्वैर्दुरत्यया—दुरतिक्रमा।

ப்ரக்ருதியாகும். தன் சந்தத்தினில்—தன் விருப்பப்படி, கடக்கும் சார்வு அரிது—(இதைக்) கடக்கும் உபாயம் இல்லை. சிந்தையுடன் — (எனக்கேயான) மனத்துடன், என்னையே அடைந்து—என்னையே உபாயமாகப் பற்றி, முன்னை முயன்று இயல்வான்—முதலில் என்னிடம் ப₄க்தியோகத்தை முயற்சி செய்து அநுஷ்டி₂ப்பவன், இம்மாயையை கடக்க—இந்த மாயையைத் தாண்ட, அமர்ந்து உற்றுன்—பொருந்தி நிற்பவனுவான்.

✱ 14. "நீயோ இயல்வாகவே எல்லையற்ற பெருமையையுடைய ஆநந்த₃ ஸ்வரூபனுயிருப்பவன். காலத்தால் அளவுபடாத நித்யனுயிருப்பவன். என்றும் ஒருபடிப்பட்டவனுகவுமிருப்பவன். இவ்வுலகிலுள்ள பொருள்களிலுள்ள இனிமைவகைகளைக் காட்டிலும் மிகமிக உயர்ந்த இனிமை வகைகளை உடையவன். அப்படிப்பட்ட நீயிருக்கையில், மிகமிகத் தாழ்ந்தவையாய், நிலையற்றவையான முக்குணமயமான பொருள்களை—உயர்வு தாழ்வுகளின் தரமறியவல்ல ஜீவர்கள் அனைவரும்-குறிப்பாக ஸத்வகுணம் விஞ்சிநிற்கையாலே உண்மையறிவு நழுவப் பெருத ப்₃ரஹ்மருத்₃ராதி₃ தே₃வர்கள் கூட - இனியவையாக மயங்கி அவற்றில் அழுந்துவது எப்படிப்பொருந்தும்?" என்று அர்ஜுனனுக்குக் கருத்தாகக் கொண்டு, பதிலளிக்கிருன் இந்த ஶ்லோகத்தின் முற்பாதியாலே. சென்ற ஶ்லோகத்திற்கு விவரணமாயிருப்பது இந்த முற்பாதி. (மம ஏஷா கு₃ணமயீ மாயா) என்னுடையதென்று ஏற்கனவே நாலாம் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டதாய், முக்குணமயமான இந்த ப்ரக்ருதி. (தை₃வீ ஹ்யேஷா து₃ரத்யயா) தே₃வனுகிற என்னுல் விசித்ரஸ்தூ₂லப் பொருள்களாகப் படைக்கப்பட்டதாகையாலே, மிகவும் கடத்தற்கு அரியது. அக₄டிதக₄டநா ஸமர்த்த₂னை ஈஶ்வரனுல் தன் விளையாட்டுக்காகப் படைக்கப்பட்டது, அநீஶ்வரர் அனைவராலும் தம் முயற்சியால் மாத்திரம் கடக்கவே இயலாததன்றே; பிற்பாதியில் கூறப்பட்டபடி அவனை ஶரணமடைந்தால்தான் இதைக் கடக்கலாம் என்று கருத்து. "தி₃வு-க்ரீட₃ா" என்னும் த₄ாதுவிலிருந்து ஏற்பட்ட தே₃வஶப்₃த₃ம் உலகம் யாவையும் தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுடைய பரமாத்மாவைக் குறிக்கிறது. "தே₃வாத்ம ஶக்திம்" [ஶ்வே 1-3] என்ற ஶ்ருதியும் இத்தால் உணர்த்தப்படுகிறது. "தை₃வீ, மம" என்னும் இரண்டு பத₃ங்

अस्याः मायाशब्दवाच्यत्वं आसुरराक्षसास्त्रादीनामिव विचित्रकार्यकरत्वेन; यथाच * ततो भगवता तस्य रक्षार्थं चक्रमुत्तमम्। आजगाम समाज्ञप्तं ज्वालामालि सुदर्शनम्। तेन मायासहस्रं तच्छम्बरस्याशुगामिना। बालस्य रक्षता देह[मेकैकंच निषूदितम्]मेकैकश्येन सूदितम्॥ (वि.१-१९-२०)

களை இடுவதன்மூலம் மாயையான ப்ரக்ருதியை ஆட்டி வைக்கும் மஹேஶ்வரன் வேறு, மாயவனான கண்ணன் வேறு என்னும் மயக்கம் தவிர்க்கப்படுகிறது.

"மாயா" என்று பொய்யான பொருள்கள் உலகில் குறிக்கப் படுவதைக் காண்கிறோமாகையால், இங்கும் அதுவே பொருளாக லாம் என்று அத்₃வைதிகள் கருதுகிறார்கள். இது தவறு. ஆஶ்சர்ய மான கார்யத்தை விளைக்கும் பொருள்களே லோகவேத₃ங்களில் மாயை எனப்படுகின்றன. இங்கும் அப்பொருளே பொருந்தும்.

"ததோ ப₄க₃வதா தஸ்ய ரக்ஷார்த்த₂ம் சக்ரமுத்தமம் ।
ஆஜகா₃ம ஸமாஜ்ஞப்தம் ஜ்வாலாமாலி ஸுத₃ர்ஶநம் ॥
தேந மாயாஸஹஸ்ரம் தத் ஶம்ப₃ரஸ்யாஶுகா₃மிநா ।
பா₃லஸ்ய ரக்ஷதா தே₃ஹம் ஏகைகஶ்யேந ஸூதி₃தம் ॥"
[வி-பு 1-19-20]

[அதற்குப்பின், மிகமிகச் சிறந்த சோதிமயமான ஸுத₃ர்ஶன சக்ரா யுத₄ம், அந்த ப்ரஹ்லாத₃னை ரக்ஷிப்பதற்காக, பரமாத்மாவால் நியமிக்கப்பட்டு வந்தது. பா₃லனான ப்ரஹ்லாத₃னின் உடம்பை ரக்ஷிப்பதற்காக விரைவில் தொழில் புரியும் அந்தச் சக்கரத்தாலே ஶம்ப₃ராஸுரனுடைய ஆயிரக்கணக்கான மாயைகளும் ஒவ்வொன் றாக அழிக்கப்பட்டது] என்று சக்ராயுத₄மானது அஸுரனுடைய மாயைகளை ஒவ்வொன்றாக அழித்ததாகக் கூறுமிடத்தில், மாயை யானது பொய்ப் பொருளாயிருந்தால் அவற்றை ஆயுத₄ம் அழிப்பது ஒட்டாதன்றோ. "யாவந்த: பாம்ஸவோ பூ₄மே: ஸங்க்₂யாதா தே₃வ மாயயா" [தே₃வனின் அறிவாலே எண்ணப்பட்ட பூ₄மியிலுள்ள மண்துகள்கள் எத்தனையிருக்கின்றனவோ] என்ற ஶ்ருதியில் ஆஶ்சர்ய மான கார்யங்களைச் செய்யும் தே₃வனுடைய அறிவு "மாயா" எனப் பட்டது "மாயா வயுநம் ஜ்ஞாநம்" என்று வேத₃நிக₄ண்டுவும் [த₄ர்ம வர்க்கம் 22] கூறிற்று. "மாயயா ஸததம் வேத்தி ப்ராணிநாம் ச ஶுபா₄ ஶுப₄ம்" [ப்ராணிகளுக்கு நன்மை தீமைகளை ஆஶ்சர்யமான அறிவி னாலே எப்போதும் அறிகிறான்] என்று பரமாத்மாவின் அறிவைக் குறித்தும் அபி₄யுக்தர்களால் மாயாஶப்₃த₃ம் பிரயோகி₃க்கப்பட்டது.

इत्यादौ ॥ अतो मायाशब्दो न मिथ्यार्थवाची। ऐन्द्रजालिकादिष्वपि—केनचिन्मन्त्रौषधादिना मिथ्यार्थविषयायाः पारमार्थिक्या एव बुद्धेरुत्पादकत्वेन मायावीति प्रयोगः। तथा मन्त्रौஷधादिरेव च तत्र

''தே₃வ மாயேவ நிர்மிதா'' [ரா-பா₃ 1-16] [தே₃வமாயையைப்போலே படைக்கப்பட்டவள்] என்று ஸீதா தே₃விக்கு த்₃ருஷ்டாந்தமாக ஸ்ரீராமாயணத்தில் எடுக்கப்படும் தே₃வமாயை ஆஶ்சர்யமான கார்யங்களைச் செய்யும் மெய்ப்பொருளாகமுடியுமே யொழிய, பொய்ப் பொருளாக முடியாது. மேலும், த₃ண்ட₃நீதியில்—ஸாமம், தா₃னம், பே₄த₃ம், த₃ண்ட₃ம் என்று முக்கியமான நான்கு உபாயங்களைச் சொல்லிவிட்டு, மாயா, உபேக்ஷா, இந்த்₃ரஜாலம் என்று அமுக்கியமான மூன்று உபாயங்கள் கூறப்பட்டன. அவற்றில், ஒருபடிப்பட்ட பொருளை வேறுபடிப்பட்டதாக ஆக்குவது மாயை எனப்படுகிறது. ஒருபடிப்பட்ட வஸ்துவை மற்றொரு படிப்பட்டதாக மயங்க வைப்பது இந்த்₃ரஜாலம் எனப்படுகிறது. ஆக, இவ்வண்ணமாக ஆஶ்சர்யமான செயல்களைப் புரியும் மெய்ப் பொருள்களையே மாயாஶப்₃த₃ம் குறிக்கிறபடியால், அது பொய்ப் பொருளைக் குறிக்கமாட்டாது. இல்லாததை இருப்பதாகக் காட்டும் இந்த்₃ரஜாலம் செய்பவர்களை மாயாவீ என்று குறிப்பதால் மாயாஶப்₃த₃ம் பொய்ப் பொருளையும் குறிப்பதாக உலகில் காண்கிறதே? எனில்: இந்த்₃ரஜாலம் செய்பவர்களும், சில மந்திரம் ஔஷத₄ம் முதலியவற்றால், இல்லாததை இருப்பதாகக் காட்டும் உண்மையறிவையே உண்டுபண்ணுவதால்தான் அவர்கள் மாயாவி எனப்படுகிறார்கள். அங்கும் அறிவு உண்மையே; அவ்வறிவுக்கு விஷயம்தான் பொய்யாகிறது. அவ்விடங்களிலும் ஆஶ்சர்யமான செயலைப்புரியும் உண்மைப் பொருள்களான அந்த மந்திரம், அல்லது ஔஷத₄ம்தான் மாயையாகிறது; அதையுடையவர்களே மாயாவி எனப்படுகிறார்கள். இப்படிக் கொள்வதுதான் உலகிலும் ஶாஸ்த்ரங்களிலும் மாயாஶப்₃த₃ம் பிரயோகிக்கப்படும் எல்லா இடங்களுக்கும் பொருந்திய பொருளாகும். அறிவுக்கு விஷயமான பொய்ப் பொருள் மாயா ஶப்₃த₃த்திற்குப் பொருந்திய பொருளாகமாட்டாது. பல பொருள்கள்கொண்ட ஒரு ஶப்₃த₃த்தை ஒரு ஶக்தியைக் கொண்டே நிர்வஹிக்க இயலும்போது, பல ஶக்திகளை அந்த ஶப்₃த₃த்திற்குக் கற்பிப்பது பொருந்தாது. இனி, ''மாயாவிகளால் படைக்கப்படும் பொய்ப் பொருள்களையே குறித்து 'இது மாயை' என்று உலகில் வழங்குவதைக் காண்கிறோமே; அங்கு விசித்ரமான கார்யங்களை அப்பொய்ப் பொருள்கள் உண்டாக்காமையால், மாயாஶப்₃த₃ம் பொய்ப்பொருளை

माया, सर्वप्रयोगेष्वनुगतस्यैकस्यैव शब्दार्थत्वात्। तत्र मिथ्यार्थेषु मायाशब्दप्रयोगो मायाकार्यबुद्धिविषयत्वेनौपचारिकः, मञ्चाः क्रोशन्तीतिवत्।

யும் குறிக்கும் என்று கொள்ளத்தானே வேண்டும்'' எனில்: அவ்விடங்களில் மாயையான மந்த்ரம் முதலானவற்றினால் உண்டாகும் அறிவுக்கு விஷயமாயிருக்கும் பொய்ப் பொருள் மாயையென்று உபசாரமாகக் கூறப்படுகிறது என்றே கொண்டு நிர்வஹித்துவிடலாம். ''கங்கையில் வீடு'' முதலானவிடங்களில், கங்கை நீரில் வீடிருப்பது பொருந்தாதாகையால், க3ங்கை3க்கரை க3ங்கா3 ஸம்ப3ந்த4த்தை யிட்டு க3ங்கை3யெனப்படுகிறது என்று கொள்கிறோம். ''மஞ்சா: க்ரோஶந்தி'' [படுக்கைகள் அழுகின்றன] என்றவிடத்திலும், படுக்கையின் ஸம்ப3ந்த4த்தையிட்டு, அதிலிருப்பவர்கள் படுக்கை யெனப்படுகிறார்கள் எனக்கொள்கிறோம். ''தத்ர பூஜ்யபதா3ர்த்தோ2க்தி பரிபா4ஷா ஸமந்வித:। ஶப்3தோ3ऽயம் நோபசாரேண த்வந்யத்ர ஹ்யுபசாரத:॥'' [வி. பு. 6-5-77] [பூஜிக்கத்தக்கவர்களைக் குறிக்கும் வழக்குச் சொல்லாயிருக்கும் இந்த 'ப4க3வான்' என்னும் ஶப்3த3ம் பரமாத்மா ஒருவனிடத்திலேயே உபசார வழக்கல்லாமல் முக்2யமாக வழங்கப்படுகிறது. மற்றவர்களிடத்தில் உபசாரமாகவே வழங்கப்படுகிறது.] என்றபடியே ப4க3வான் முதலான சில ஶப்3த3ங்கள், சில கு3ணங்களிருப்பதையிட்டு பரமாத்மாவல்லாத மற்றவர்களிடமும் ஔபசாரிகமாக வழங்கப்படுகின்றன. இப்படி ஸம்ப3ந்த4த்தை யிட்டோ, கு3ணத்தையிட்டோ நிர்வஹிக்கமுடியாதவிடங்களில்தான் ஒரு பத3த்துக்குப் பல ஶக்திகளைக் கற்பிக்கலாம். மற்றவிடங்களில் கற்பிப்பது கௌரவம் என்னும் தோ3ஷத்தின்பாற்படும். இங்கு, மந்த்ரம் முதலான மாயையினால் உண்டான ஜ்ஞானத்திற்கு விஷயமாயிருக்கையாகிற ஸம்ப3ந்த4ம் பொய்ப் பொருளுக்கு உள்ளதாகையால், அதையிட்டு ஏற்பட்ட ஔபசாரிக வழக்காகக் கொள்ள இடமுள்ளது. மாயாஶப்3த3ம் பொய்ப் பொருளையே முக்2யமாகக் குறிப்பதாகக் கொண்டால், மாயாஶப்3த3த்தால் குறிக்கப்படும் ஆயுத4ம், அறிவு முதலானவற்றில் அதன் ஸம்ப3ந்த4த்தின் வாஸனையுமில்லையே. பொய்ப் பொருளுக்கு கு3ணமும் இல்லையாகையால், கு3ணத்தையிட்டு ஆயுத4ம் முதலானவற்றை மாயாஶப்3த3ம் ஔபசாரிகமாகக் கூறுவதாக நிர்வஹிக்கவும் முடியாதே. மேலும், சிப்பியில் வெள்ளி முதலான பொய்ப் பொருள்களை மாயை என்று எவரும் குறிப்பதில்லையே. ''சில பொய்ப் பொருள்களைத்தான் மாயாஶப்3த3ம் குறிக்கும்'' எனில்; ''மாயாஶப்3த3வாச்யமான ஆஶ்சர்ய கார்யங்களைச் செய்யும் மந்த்ரம் முதலானவற்றால் உண்டான அறிவுக்கு விஷயமாயிருக்கும் சில பொருள்களையே மாயாஶப்3த3ம் ஔபசாரிகமாகக் குறிக்கும்'' என்று கூறும் எங்கள் வழிக்கே வந்துவிடுவது நல்லது.

एषा गुणमयी पारमार्थिकी भगवन्मायैव * मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम् (श्वे. ४-१०) इत्यादिष्वभिधीयते। अस्याः

"த்வம் ஹி லோககத்ருதிர்தேவ ந த்வாம் கேசந ஜாநதே।
ருதே மாயாம் விஶாலாக்ஷீம் தவ பூர்வபரிக்ரஹாம்" ||
[ரா உ 110-10]

[தேவனே! நீயே உலகிற்குப் புகல். தடங்கண்ணியாய், உனது பட்டமஹிஷியான மாயையைத் தவிர உன்னை எவரும் அறியமாட்டார்கள்.] "யோகநித்ரா மஹாமாயா" [வி-பு 5-1-71] முதலானவிடங்களில் ஸ்ரீதேவியையும் யோகநித்ரையையும் மாயையென்பதும், பகவானுக்கு விசித்ர கார்யங்களைச் செய்வதற்கு உதவுவதாலாவது, மாயை எனப்படும் ப்ரக்ருதிதத்வத்திற்கு அபிமானி தேவதையாயிருப்பதாலாவது பொருந்துகிறது. ஆகையால் விசித்ரகார்யங்களைச் செய்யும் பொருள்களே மாயை எனப்படுகின்றன என்று கொள்வதே தக்கதாகும். முக்குணமயமானதாய், உண்மையானதான ப்ரக்ருதியே "மாயாம் து ப்ரக்ருதிம் வித்யாந்மாயிநம் து மஹேஶ்வரம்" [ஶ்வே 4-10] [மாயை எனப்பட்டது ப்ரக்ருதியென்றே அறி; மாயையை உடையவனைப் பெரிய ஈஶ்வரனென்றே அறி.] என்று விசித்ரகார்யங்களைப் படைக்கையையிட்டு ப்ரக்ருதி—மாயை எனப்படுகிறது. இந்த வாக்யம் காணப்படும் ஶ்வேதாஶ்வதர உபநிஷத்தில் புருஷஸூக்த மந்திரங்கள் படிக்கப்படுகையாலும், "மஹாந் ப்ரபுர் வை புருஷ: ஸத்வஸ்யைஷ ப்ரவர்த்தக:" [ஶ்வே 3] என்று இவனை மஹாபுருஷன் என்றும், ஸத்வப்ரவர்த்தகனென்றும் குறிக்கையாலும், இங்கு மஹேஶ்வரன் என்றது உருத்திரனாகமுடியாது; அவனுக்கும் ஈஶ்வரனாய், பரமஸத்வ ஸமாஶ்ரயனான நாராயணனேயாகமுடியும். உருத்திரன் படைக்கப்படுபவன் என்றும், கர்மவஶப்பட்டவன் என்றும் பல ஶ்ருதிஸ்ம்ருதிகளில் கூறப்படுவதால், இவ்வுபநிஷத்திலுள்ள ஶிவன் முதலான ஶப்தங்கள் பரமமங்களத்வம் முதலான குணங்களையிட்டு ஶாஶ்வத ஶிவனான நாராயணனைக் குறிப்பதாகவோ, ப்ரஸித்தஶிவாந்தர்யாமியாக நாராயணனைக் குறிப்பதாகவோ கொள்ளவேண்டும். "அஸ்மாந் மாயீ ஸ்ருஜதே விஶ்வமேதத் தஸ்மிம்ஶ்சாந்யோ மாயயா ஸந்நிருத்த:" [ஶ்வே 4-9] என்று முன் மந்திரத்தில் மாயையைப் பற்றியும், மாயியைப் பற்றியுமே பேச்சு வந்திருக்கிறபடியால், 'மாயை என்றது ப்ரக்ருதி' என்னும் பொருளே பொருந்துமேயொழிய, ப்ரக்ருதமல்லாத ப்ரக்ருதியையெடுத்து அது மாயை (பொய்) என்று கூறுவதாக

कार्यं भगवत्स्वरूपतिरोधानम्, स्वस्वरूपभोग्यत्वबुद्धिश्च। अतो भगवन्मायया मोहितं सर्वं जगत्, भगवन्तमनवधिकातिशयानन्दस्वरूपं नाभिजानाति ॥ * १४ ॥

॥ भा ॥ मायाविमोचनोपायमाह—

मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥ १४ ॥

14*. மாமேவ யே ப்ரபத்₃யந்தே மாயாமேதாம் தரந்தி தே ||

யே—எவர்கள், மாம் ஏவ—என்னையே, ப்ரபத்₃யந்தே—ஶரணமடைகிறார்களோ, தே—அவர்கள், ஏதாம் மாயாம்—இந்த மாயையை, தரந்தி—தாண்டுகிறார்கள்.

அத்₃வைதிகள் பொருளுரைப்பது பொருந்தாது. இந்த ப்ரக்ருதி செய்யும் விசித்ரகார்யமாவது :—ப₄க₃வானுடைய ஸ்வரூபத்தை மறைக்கையும், தன்னை இனியதாகக் காட்டுகையுமேயாகும். ஆகையால், ப₄க₃வானுடைய ப்ரக்ருதியென்னும் மாயையால் மயக்கப் பட்ட எல்லா உலகும், எல்லையற்ற பெருமையையுடைய ஆநந்த₃ ஸ்வரூபனான ப₄க₃வானை உள்ளபடி அறிவதில்லை என்றதாயிற்று. ஆக, இதுவரையில், ''ஸ்வயாதா₂த்ம்யம் ப்ரக்ருத்யாஸ்ய திரோதி₄:'' [தன்னைப்பற்றிய உண்மையறிவும், ப்ரக்ருதியினால் அது மறைக்கப் படுவதும்] என்று கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹத்தில் சொல்லப்பட்ட அர்த்த₂ங்கள் விளக்கப்பட்டன. * 14

14 *. இனி, ''ஶரணாக₃தி:'' என்று கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹத்தில் சொல்லப்பட்டதாய், முற்பாதியில் சொல்லப்பட்ட மாயையாகிற ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄த்தைப் போக்கடிக்கும் உபாயமாயிருப்பதான ஶரணாக₃தியை ஶ்லோகத்தின் பிற்பாதியாலே உபதே₃ஶிக்கிறான். (மாமேவ...) என்னையே எவர்கள் ஶரணமாக அடைகிறார்களோ, அவர்கள் இம்மாயையைத் தாண்டுகிறார்கள், (மாம்) ஸத்யஸங்கல்பனாய், பரமகாருணிகனாய், உயர்வு தாழ்வுகள் பாராமல் அனைத்துலகிற்கும் புகலாயிருப்பவனான என்னை. இவனுடைய அநாதி₃ ஸங்கல்பத்தாலே ஜீவர்களுக்கு அநாதி₃காலமாக ப்ரக்ருதிப₃ந்த₄ம் ஏற்பட்டிருக்கையால், இவனது மற்றொரு ஸங்கல்பத்தாலேயே தான் அந்த ப₃ந்த₄த்தை நீக்கமுடியுமாகையால், இங்கு ஸத்யஸங்கல்பத்வகு₃ணம் 'மாம்' எனும் ஶப்₃த₃த்துக்குப் பொருளாக அநு

।। भा ।। मामेव—सत्यसङ्कल्पं परमकारुणिकमनालोचितविशेषा-

ஸந்தி4க்கப்படவேண்டும். அவ்வண்ணமே, ப3ந்த4 விமோசனத்திற்கு உறுப்பான ஜ்ஞாநம், ஶக்தி, பூர்த்தி முதலான கு3ணங்களும் இங்கு அநுஸந்தி4க்கப்படவேண்டும். (பா4ஷ்யத்தில் ஸத்யஸங்கல்பன் என்றது இக்குணங்களுக்கும் உபலக்ஷணம்.) இப்படி ஜ்ஞாநம், ஶக்தி முதலியவற்றை உடையவனாலும், கருணையற்றவனானால், ஶரணாக3தி ப2லியாமற்போவதோடன்றியில், இவனை மேலும்மேலும் குற்றம் பார்த்து த3ண்டி3ப்பதற்கே அவை உறுப்பாகுமாகையாலே, எல்லையற்ற கருணையை உடைத்தாயிருக்கையாகிற பரமகாருணிகத்வமாகிற கு3ணமும் "மாம்" எனும் ஶப்3த3த்திற்குப் பொருளாக அநுஸந்தி4க்கப்படவேணும். பரமகாருணிகனாயிருந்தாலும், உலகிலுள்ள மற்றவர்களைப் போலே, இவனும் ஜீவனிடமுள்ள நன்மைதீமைகளைப்பார்த்து. நன்மையுடையவனையே ரக்ஷிப்பது என்னும் நியமமுடையவனாயிருந்தால், கணக்கற்ற ப4க3வத்3பா4க3வத அஸஹ்யாபசாரங்களைப் புரிந்த ஜீவனுக்கு உய்ய வழியில்லையாகையால், உயர்ந்தாரோடு தாழ்ந்தாரோடு வாசியற அனைவரையும் ரக்ஷிக்கையாகிற ஸர்வலோக ஶரண்யத்வமென்னும் கு3ணமும் "மாம்" என்னும் ஶப்3த3த்திற்குப் பொருளாக இங்கு அநுஸந்தி4க்கப்படவேண்டும். காகாஸுரன், குரங்காகிற ஸுக்3ரீவன், விபீ4ஷணனாகிற அரக்கன், த்3ரௌபதி3யாகிற பெண்பிள்ளை, கு3ஹனாகிற வேடன், ஶப3ரியாகிற வேடுவிச்சி, குசேலனாகிற ஏழையந்தணன், மதுரைக்கூனி, ஆய்ச்சிகள், மாலாகாரர் முதலானோரை இவன் தாழ்வு பாராமல் ஆட்கொண்டது ஸுப்ரஸித்3த4மன்றோ. "யதி3வா ராவண: ஸ்வயம்" [ரா-யு 18-35] என்று ராவணனையும் ஆட்கொள்ள ஆசைப்பட்டானன்றோ. "சரணாகதி மற்றோர் சாதனத்தைப்பற்றில், அரணாகாது அஞ்சனைதன் சேயை—முரணழியக் கட்டியது வேறோர் கயிறுகொண்டு ஆர்ப்பதன்முன், விட்ட படைபோல விடும்" [ஞானசாரம்] என்கிறபடியே மற்றொரு சேதனரையோ, தன் முயற்சியையோ தன் அபீ4ஷ்டஸித்3தி4க்கு இவன் உபாயமாகக் கருதினானாகில், சணற்கயிறுகண்ட ப்3ரஹ்மாஸ்த்ரம் போலே ஶரணாக3தி ப2லிக்காதாகையாலே, 'ஏவ'காரத்தாலே அவற்றைத் தவிர்க்கிறான். தன் முயற்சியாகிற உபாஸநத்தைச் சொல்லும் இப்ரகரணத்தில் தன் முயற்சியைத் தவிர்த்துக்கொள்வது ஒட்டுமோ எனில்; மோக்ஷ ஸாத4னமாக உபாஸநமாகிற ஸ்வப்ரவ்ருத்தியில் ஈடுபடுவனுக்கும், உபாஸந விரோதி4களான பாபங்களைக் கழித்துக் கொள்வதற்குத் தன் முயற்சியால் முடியாமையாலே, அதன் பொருட்டுத் தன் முயற்சியினின்றும் கைவாங்கி, அவனையே ஶரண

शेषलोकशरण्यं ये शरणं प्रपद्यन्ते, त एतां—मदीयां गुणमयीं मायां
तरन्ति—मायामुत्सृज्य मामेवोपासत इत्यर्थः ॥ १४ ॥

மடைவது ஒட்டும். ஆகையாலே, ஏவகாரத்தாலே இவ்வதி4காரி
கைம்முதலில்லாத அகிஞ்சநனாகவும், வேறு புகலற்ற அநந்யக3தி
யாகவும் இருப்பவன் என்று உணர்த்தக்குறையில்லை. (ப்ரபத்3யந்தே)
என்று தன் அபீ4ஷ்டஸித்3தி4க்கு ஸர்வேஶ்வரனையே இவன் உபாய
மாக உறுதிகொள்ளவேண்டும் என்று காட்டப்படுகிறது. ''யே''
''தே'' என்னும் ஶப்3த3ங்களாலே ''ப்ரபந்நாத3ந்யேஷாம் ந தி3ஶதி
முகுந்தோ3 நிஜபத3ம்'' [ரஹஸ்யத்ரயஸாரம்] [ப்ரபந்நர்களைத் தவிர
வேறு எவர்க்கும் முகுந்த3ன் தன் பரமபத3த்தை அருளமாட்டான்]
என்கிறபடியே, தம் முயற்சியில் ஈடுபடும் உபாஸகர்களோடு, ஸ்வப்ர
வ்ருத்தியினின்றும் நிவ்ருத்தியடையும் ப்ரபந்நரோடு வாசியற அனை
வருமே ஶரணாக3தி செய்தே தீரவேண்டும் என்னும் நியமம் உணர்த்தப்
படுகிறது. (ஏதாம் மாயாம்) ''மம மாயா து3ரத்யயா'' என்று
சற்றுமுன் கடக்கவரிதாகக் கூறப்பட்ட இந்த மாயையைக்கூட.
(தரந்தி) தாண்டுகிறார்கள். ''மாயாம் தரந்தி'' என்று ஸம்ஸார
தரணத்திற்கு ஶரணாக3தியை நேரே உபாயமாகச் சொல்லியிருக்க,
''மாயாம் உத்ஸ்ருஜ்ய மாமேவ உபாஸதே'' [மாயையாகிற ப்ரக்ருதி
யைக் கைவிட்டு (பற்றற்று), என்னையே உபாஸிக்கிறார்கள்.] என்று
பா4ஷ்யகாரர் ஶரணாக3தியை உபாஸநத்திற்கு விரோதி4களைப்
போக்கும் அங்க3ப்ரபத்திபரமாக இங்கு வ்யாக்2யானம் செய்வா
னென்னென்னில்; மேலே உபாஸந ப்ரகரணமாகையாலும், ஸம்ஸார
விமோசனமற்ற ஐஶ்வர்யார்த்தி2யான ப4க்தனையும் மேலே சொல்லப்
போகிறபடியால், அவனுக்கு அங்க3ப்ரபத்தியே அபேக்ஷிதமாகையாலும்
அங்க3ப்ரபத்திபரமாக வ்யாக்2யானம் செய்தார். ஆனால், இந்த
ஶ்லோகத்தை முக்2ய ப்ரபத்தியைச் சொல்லும் வசநமாகவே பூர்வா
சார்யர்கள் எடுக்கக் காரணமென்ன? எனில் : இங்கு சில உண்மைகளை
உணரவேண்டும். இந்த கீ3தாஶாஸ்த்ரமானது அர்ஜுனனை வியாஜ
மாகக்கொண்டு ஸகலலோகத்திற்கும் உபதே3ஶிக்கப்பட்டது. லோகத்
தில் பெரும்பாலானவர்கள் ஸ்வார்த்த2மான ஸ்வப்ருவ்ருத்தியினின்
றும் நீங்காதவர்களாகையாலே, அவர்களுக்காக-கர்மயோக3ம், ஜ்ஞாந
யோக3ம், ப4க்தியோக3ம் ஆகிற ப்ரவ்ருத்தித4ர்மங்களாகிற ஸாத4
நாந்தரங்களை விதி4த்து, ஆங்காங்கு அந்தந்த ஸாத4நங்கள் செயற்
கரியவையாயிருக்கின்றனவே என்னும் ஶோகம் ஏற்படும்போது,
அவை நிறைவடைவதற்காகத் தன் விஷயமான ஶரணாக3தியையும்

விதி₄த்து, 'இந்த ஸாத₄னங்கள் எல்லாமே செயற்கரியவையாகவும், அத்யந்த பரதந்த்ர ஸ்வரூபத்துக்குத் தகாதவையாகவுமிருக்கின்றனவே' என்னும் மோகம் விளைந்தவுடன், சரமச்லோகத்தில் தானே நிருபாதி₄கமான உபாயமெனக் காட்டுகிறுன். ஆகையால், எம்பெருமானுடைய திருவுள்ளம் தனது நிரபேக்ஷ உபாயப₄ாவத்தைக் காட்டுவதிலேயே ஊன்றிநிற்கிறபடியால், இவற்றை ஸ்வதந்த்ர ப்ரபத்திக்கு ப்ரமாணமாக எடுப்பதிலும் குறையில்லை. இவ்வண்ணமாகவே. கீ₃தையிலுள்ள மூன்று ச்லோகங்களில் சொல்லப்பட்ட ஜ்ஞாநத்தையுடையனுகவும், மூன்று ஸ்த₂ானங்களில் சொல்லப்பட்ட பரப₄க்தியை உடையவனுகவும் தன்னை ஆக்கும்படி க₃த்₃யத்தில் எம்பெருமானுர் பிரார்த்தி₂க்கையாலே. இங்கு கர்மயோக₃ம், ஜ்ஞாநயோக₃ம், ப₄க்தியோக₃ம் முதலான ஸாத₄னங்களை விதி₄க்கும்போதும், எம்பெருமானுடைய திருவுள்ளம் – ஸ்வயம் ப்ரயோஜனமான கர்ம ஜ்ஞாந ப₄க்திகளைச் சேதநர் அனைவரும் பெற்றவராகவேணும் என்பதிலேயே ஊன்றிநிற்பதாகக் கொள்ளலாம். ஆக, அர்ஜுனனைப் போன்ற ப்ரவ்ருத்திபரரைக் கருதி ப₄ாஷ்யகாரர் கர்மஜ்ஞாந ப₄க்திகளை ஸாத₄நாந்தரமாகவும், ப்ரபத்தியை அங்க₃ப்ரபத்தியாகவும் வ்யாக்₂யாநம் செய்வதிலும், ப்ரபந்நர்களைக்கருதி க₃த்₃யம் முதலானவற்றில் எம்பெருமானுர் முதலான ஸகலபூர்வாசார்யர்களும் கீ₃தா ச்லோகங்களை ஸ்வயம் ப்ரயோஜந கர்மஜ்ஞாநப₄க்தி பரமாகவும், ப₄க₃வானுடைய நிரபேக்ஷோபாயத்வபரமாகவும் கொள்வதிலும் எவ்வித முரணுமில்லை, ''கச்சிந்மாம் வேத்தி தத்வத:'' [7-3] என்னும் ச்லோகத்தின் ப₄ாஷ்யத்தில் ஸ்வார்த்த₂மான ஸ்வப்ரவ்ருத்தி செய்பவர்கள் எவருமே எம்பெருமானை உள்ளபடி அறியவில்லை என்று எம்பெருமானுர் அருளியிருப்பதிலிருந்தும், மேல் ச்லோகங்களில் எம்பெருமான் இவ்வர்த்த₂த்தை விரிவாக உபபாதி₃ப்பதிலிருந்தும், ''ஸர்வமித₃ம் ஜக₃த் மோஹிதம்'' [7-13] என்னுமிடத்தில் ப்ரவ்ருத்திபரர்களான பிரமன் முதலானுரும் மயங்கியவர்களே என்று முழங்கியிருப்பதிலிருந்தும், ''வாஸுதே₃வஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா'' [7-19] என்று வாஸுதே₃வனே நிருபாதி₄க ப்ராப்ய ப்ராபகனென்று அறிபவனே உண்மையான ஜ்ஞாநி என்று முடிவுகட்டியிருப்பதிலிருந்தும், நேரே உபதே₃சபாத்ரமாயிருக்கும் அர்ஜுனனைக் கருதி ஸாத₄நாந்தரபரமாகவும், அங்க₃பரபத்திபரமாகவும் வ்யாக்₂யானம் செய்திருக்குமிடங்களிலும், க₃த்₃யம் முதலானவற்றில் காட்டப்பட்ட ப₄க₃வானுடைய நிரபேக்ஷோபாய பரத்வமும், ஸ்வயம்ப்ரயோஜந கர்ம ஜ்ஞாந ப₄க்திபரத்வமுமே கீ₃தாச்லோகங்களுக்குப் பரமதாத்பர்யம் என்பதே கீ₃தாசார்யனும், ப₄ாஷ்யகாரரும் உகந்ததாகும்

॥भा॥ किमिति भगवदुपासनापादिनीं भगवत्प्रपत्तिं सर्वे न कुर्वत इत्यत्राह—

न मां दुष्कृतिनो मूढाः प्रपद्यन्ते नराधमाः।
माययाऽपहृतज्ञाना आसुरं भावमाश्रिताः॥ १५॥

15. ந மாம் து3ஷ்க்ருதிநோ மூட4ா: ப்ரபத்3யந்தே நராத4மா: ।
மாயயாऽபஹ்ருத ஜ்ஞாநா: ஆஸுரம் ப4ாவமாஶ்ரிதா: ॥

மூட4ா: — அறிவிலிகள், நராத4மா: — மனிசரில் கடையானவர், மாயயா அபஹ்ருத ஜ்ஞாநா: — மாயையினுல் அழிக்கப்பட்ட அறிவை உடையவர்கள், ஆஸுரம் ப4ாவம் ஆஶ்ரிதா: — அஸுரத் தன்மையைப் பெற்றிருப்பவர் என்று, து3ஷ்க்ருதிந: (சதுர்வித4ா:) — (ஒருவர்க்குமேல் ஒருவர்) பாபம் மிகுந்த நாலுவகைப்பட்டோர், மாம் — என்னை, ந ப்ரபத்3யந்தே — ஶரணமடைவதில்லை.

---

15. மூடர் நராதமர்கண் முன்மாயை யாலறிவின்
பாடழிந்தா ராசுரமாம் பாவஞ்சேர்—கேடார்ந்தார்
தீவினையார் நால்வரெனைச் சேருங் கதியதனின்
மேவியுறு வாரல்லர் மிக்கு.

மூடர் — அறிவிலிகள், நராதமர்கள் — மனிசரில் கடையானவர்கள், முன் மாயையால் அறிவின் பாடு அழிந்தார் — அநாதி3மாயையால் அறிவின் பெருமை அழியப்பெற்றவர்,

---

என்று நிரூபகர்களுக்கு நன்கு விளங்கும். மேலே ஸாத4நாந்தரபரமாகவும், அங்க3ப்ரபத்தி பரமாகவும் ப4ாஷ்யமிடுமிடங்களிலெல்லாம் இப்படியே கொள்வது. சரமஶ்லோக வ்யாக்2யாநத்தில் இப்ப்ரம தாத்பர்யத்தை விரிவாக விளக்குவோம். ''ஒரு குருவி பிணைத்த பிணையலை ஒருவரால் அவிழ்க்கப்போகிறதில்லை. ஸர்வஶக்தி கர்மாநுகு3ணமாகப் பிணைத்த பிணையலை ஒருவரால் அவிழ்க்கப்போமோ? அவனையே கால்கட்டி அவிழ்த்துக்கொள்ளுமித்தனை'' என்னும் பிள்ளை திருநறையூரரையர் வார்த்தை இந்த ஶ்லோகத்தின் பிற்பாதியின் வாக்யார்த்த2மாக அநுஸந்தி4க்கத் தக்கது.

॥ भा ॥ दुष्कृतिनः—पापकर्माणो मां न प्रपद्यन्ते। दुष्कृततारतम्येन ते चतुर्विधा भवन्ति—मूढाः, नराधमाः, माययाऽपहृतज्ञानाः, आसुरं भावमाश्रिताः इति। मूढाः—विपरीतज्ञानाः,

---

ஆசுரமாம் பாவம் சேர் கேடு ஆர்ந்தார் — அசுரத்தன்மை பொருந்தி நிற்கையாகிற தீமை நிறைந்தவர், தீவினையார் நால்வர் — (என்று மேன்மேலே) பாவம் மிக்கவர்களான நாலுவகைப்பட்ட மனிதர்கள், எனை சேரும் கதி அதனில் — என்னைப் பற்றுகையாகிற இந்த ஶரணாகதியில், மிக்கு மேவி உறுவார் அலர் — மிகப் பொருந்தியிருப்பதில்லை.

---

15. 'இப்படி உன்னுடைய உபாஸநத்தை நிறைவடைவிக்கும் உன் விஷயமான ஶரணாகதியை ஏன் அனைவரும் செய்வதில்லை? சிலரே செய்கிறார்கள்' என்று அர்ஜுனனுக்குக் கருத்தாகக்கொண்டு, 'பாப மிகுதியாலே பலர் என்னை ஶரணமடைவதில்லை' என்றும், 'புண்ணிய மிகுதியாலே சிலர் என்னைப் பற்றுகிறார்கள்' என்றும் முறையே இரண்டு ஶ்லோகங்களாலே கூறுகிறான். அதில் ஶரணமடையாத நாலு வகைப்பட்ட பாபிகளைக் கூறுவது இந்த ஶ்லோகம். (து₃ஷ்க்ருதிந: சதுர்வித₄ா:) நாலு வகைப்பட்ட பாபிகள். மேல் ஶ்லோகத்திலே 'ஸுக்ருதிந:' (புண்ணியசாலிகள்) என்று பொதுவாக ப்ரபந்நர்கள் அனைவரையும் எடுத்து, அவர்களில் நாலு வகையைக் காட்டியதுபோலே, இங்கும் ''து₃ஷ்க்ருதிந:'' [பாபிகள்] என்று பொதுவாக ப்ரபந்நரல்லாதார் அனைவரையும் எடுத்து, அவர்களில் நாலு வகையைக் காட்டுவதாகக் கொள்வதே உசிதம். இங்கும் நாலுவகை காட்டப்படுகையாலே, அங்குள்ள சதுர்வித₄ ஶப்₃த₃த்தை இங்கும் வருவித்துப் பொருள் கொள்ளவேண்டும். அவர்கள் யாரென்பதையும், அவர்களில் முன்னால் உள்ளவர்களைக் காட்டிலும் பின்னாலுள்ளவர்கள் பாபமிகுதியை உடையவர்கள் என்பதையும் அவரவர்க்குரிய தனித்தன்மைகளைக் காட்டும் ஶப்₃த₃ங்களாலே கூறுகிறான் மேலே—(மூட₄ா:) அறிவிலிகள். ஶாஸ்த்ராதி₄காரிகளான தே₃வமநுஷ்யர்களைப் பற்றிய ப்ரகரணமாகையாலே, அடியோடு பகுத்தறிவில்லாத விலங்குகளையும், ஸ்தா₂வரங்களையும் குறிக்காமல், ஒன்றை மற்றொன்றாக அறியும் அந்யதா₂ஜ்ஞாந விபரீதஜ்ஞாநங்களையுடைய தே₃வமநுஷ்யர்களைக் குறிக்கிறது இப்பத₃ம். முற்கூறிய ரீதியில் பரமபுருஷனுக்கு ஶேஷமாயிருக்கையையே இயல்வாக

पूर्वोक्तप्रकारेण भगवच्छेषतैमात्माक्रसनं भोग्यजातं च स्वशेषतया मन्यमानाः। नराधमाः—सामान्येन ज्ञातेऽपि मत्स्वरूपे, मदौन्मुख्यानर्हाः। माययाऽपहृतज्ञानाः—मद्विषयं मदैश्वर्यविषयं च ज्ञानं प्रस्तुतं येषां तदसंभावनापादिनीभिः कूटयुक्तिभिरपहृतम्, ते तथोक्ताः।

வுடைய ஆத்மாவாகிற தம்மையும், தாம் அநுபவிக்கும் போக்யப் பொருள்களையும், அவ்வநுபவத்துக்கு உறுப்பான தம் ப்ராணேந்திரி யங்களையும், அவ்வநுபவங்களைச் செய்யுமிடமான தேஹம் முதலான வற்றையும், 'இவை எம்பெருமான் ஒருவனுக்கே ஶேஷமாயுள்ளன' என்று உணராமல், தமக்கே ஶேஷமென்று மயங்குகிறவர்கள் என்றபடி. குறைந்த பாபத்தையுடைய முதல்வகைப்பட்டவர்கள் இவர்கள். (நராதமா:) மனிசரில் கடையானவர்கள். விபரீத ஜ்ஞானமுடையவர்களை முன் பதத்தாலே சொல்லிவிட்டபடியாலும், ஜ்ஞாநம் உண்டாகி அழியப்பெற்றவர்களை மேலே சொல்லுகை யாலும், அவர்களுக்கிடையில் — பொதுப்படையாக எம்பெருமான் ஶேஷியென்றும், தாமும், தமது போக்யபோகோபகரணபோக ஸ்தாநங்களும் அவனுக்கு ஶேஷமென்றும் அறிந்தபோதிலும், அவன் விஷயத்தில் ஈடுபடாதவர்களை இங்கு சொல்லுகிறது. அறிந் தும் ஈடுபடாத இவர்கள் அறிவிலிகளான முற்கூறியவர்களைக் காட்டி லும் மிகுந்த பாபத்தையுடைய இரண்டாவதுவகைப் பாபிகள். உபநிஷத்துக்களின் அர்த்தத்தைப்பற்றிய நிஶ்சயமில்லாவிடினும், எல்லா உலகிலும் ப்ரஸித்தமான இதிஹாஸபுராணங்களால் விளைந்த பகவத் விஷயமான பொதுப்படையான அறிவு இவ களுக்கு உள்ளது. அப்படியிருந்தும், ஸாலபம் என்னும் அறி வின்மையால், மேருமலை முதலானவற்றிற்போலே பகவத்விஷயத்தில் இவர்களுக்கு ஈடுபாடு ஏற்படவில்லை என்று கருத்து (மாயயா அப ஹ்ருதஜ்ஞாநா:) மாயையாலே அபஹரிக்கப்பெற்ற அறிவை உடை யவர்கள். பரமபுருஷன் விஷயமாகவும், அவனது ஐஶ்வர்ய விஷய மாகவும், ஜ்ஞாநம் உண்டாகி, வேதப்ராமாண்யத்தை ஒவ்வாத பாஹ்யர்களாலும், வேதங்களுக்கு அவப்பொருளுரைக்கும் குத்ருஷ்டி களாலும் கற்பிக்கப்பட்ட வஞ்சகயுக்திகளாலே அந்த ஜ்ஞாநத்தை இழந்த இவர்கள் மூன்றுவது வகை. விசித்திரமான மயக்கத்தை உண்டாக்குகையால், அந்த யுக்திகள் மாயை எனப்படுகின்றன. உண் டான ஜ்ஞாநம் அழியப்பெறாத முந்தியவர்களைக் காட்டிலும், அது அழியப்பெற்ற இவர்களுடைய பாபம் மிக்கது என்பது வெளிப்படை

आसुरं भावमाश्रिताः — मद्विषयं मदैश्वर्यविषयं च ज्ञानं सुदृढमुपपन्नं येषां द्वेषायैव भवति; त आसुरं भावमाश्रिताः। उत्तरोत्तराः पापिष्ठतमाः ॥ १५ ॥

चतुर्विधा भजन्ते मां जनास्सुकृतिनोऽर्जुन।
आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ ॥ १६ ॥

16. சதுர்வித₄ா ப₄ஜந்தே மாம் ஜநாஸ் ஸுக்ருதிநோ*ர்ஜுந।
ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்த₂ார்த்தீ₂ ஜ்ஞாநீ ச ப₄ரதர்ஷப₄ ॥

(ஆஸுரம் ப₄ாவம் ஆம்ரிதா:) அஸுரர்களது தன்மையை அடைந்தவர்கள். உண்டான ஜ்ஞாநம் அழியப் பெற்றவர்களைக் காட்டிலும் வேறானவர்களாக இவர்களை எடுக்கையாலே, ப₄க₃வான் விஷயமாகவும், அவனது ஐம்வர்ய விஷயமாகவும் உறுதியாக உண்டான அந்த ஜ்ஞாநம் அழியாமலிருந்தும், ப₄க₃வத்₃விஷயத்தில் த்₃வேஷத்திற்கே உறுப்பாகிறபடியால் அஸுரத் தன்மையை அடைந்தவர்கள் இவர்கள் என்று கருத்து. ஹிரண்யன், ராவணன், ம்மிமுபாலன், கம்ஸன் முதலான ஆஸுரப்ரக்ருதிகள் பரமபுருஷனை எல்லையற்ற ம்க்தியுடையவன் என்று அறிந்தும் அவனிடம் துவேஷத்தையே காட்டினூர்களன்றே. "மாம் ஆத்ம பரதே₃ஹேஷு ப்ரத்₃விஷந்த:" [16-18] என்று கீ₃தையிலும், "விஷ்ணு ப₄க்திபரோ தே₃வ: விபரீதஸ் தத₂ா*ஸுர:" [விஷ்ணு த₄ர்மம் 109-74] [விஷ்ணு ப₄க்தியுடையவன் தெய்வப்பிறவி. நேர்மாறான விஷ்ணு த்₃வேஷி அஸுரப்பிறவி] என்று மற்றவிடங்களிலும் அஸுரலக்ஷணம் சொல்லப்பட்டது. நாலாவது வகையினரான இவர்கள் மிகக் கொடியவர்கள் என்பதும் வெளிப்படை. முதலிலிருந்து நாலாவது வகை வரையில் அறிவில் மேன்மேலே சிறந்தவர்களாயிருந்தும், "விது₃ஷோ*திக்ரமே த₃ண்ட₃ பூ₄யஸ்த்வம்" [கௌ₃தம த₄ர்மம் 2-12-6] [அறிந்தவன் தவறு செய்தால் அதி₄க த₃ண்ட₃னை பெறுவான்] என்கிற ரீதியில், அவ்வறிவுச் சிறப்பே அவர்களை மேலே மேலே மிகுந்த பாவிகளாக்கி விடுகிறது என்று கருத்து. ஆக, தன்னைப் பலர் ம்ரணமடையாமைக்குக் காரணம் அவர்களது பாபத்தின் மிகுதியே என்று காட்டப்பட்டது. 15.

ப₄ரதர்ஷப₄ அர்ஜுந — ப₄ரத குலத்துதித்தவர்களில் தலைவனான அர்ஜுனனே! ஆர்த்த:-(செல்வமிழந்து) வருந்துமவனும், அர்த்தா₂ர்த்தீ₂—(புதிதாக) செல்வத்தைப் பெற விரும்புமவனும், ஜிஜ்ஞாஸு:—ஆத்மஸ்வரூபத்தை அநுப₄விக்க விரும்புமவனும், ஜ்ஞாநீ ச—ஸ்வரூபஜ்ஞானமுடையவனுமாகிய, ஸுக்ருதிந:—புண்ணியசாலிகளான, சதுர்விதா₄: ஜநா:—நாலு வகைப்பட்ட ஜனங்கள், மாம்—என்னை, ப₄ஜந்தே—உபாஸிக்கிறார்கள்.

---

16. **மாடிழந்தான் மன்னுயிரை வேண்டுணர்வோன் வான்பொருளைத்**
தேடியிருப் பான்ஞானஞ் சேர்வுற்றான்—பீடமரு
நல்வினையார் நால்வரிவ ரென்பா னலம்புனையுந்
தொல்வினையாற் சேர்வர் துணிந்து.

மாடு இழந்தான் — செல்வத்தை இழந்தவன், வான் பொருளை தேடி இருப்பான்—சிறந்த ஐஶ்வர்யத்தைப் புதிதாக விரும்புமவன், மன்னு உயிரை வேண்டி உணர்வோன்—நிலையான ஆத்மாவின் அநுப₄வத்தை விரும்புகிறவன், ஞானம் சேர்வுற்றான்—(சிறந்த) அறிவை அடைந்தவன் (என்கிற) பீடு அமரும் நல் வினையார் இவர் நால்வர் — (மேல்மேல்) பெருமை பெற்ற புண்ணியம் செய்த இந்த நாலுவகைப் பட்டவர்களும், துணிந்து—(அப்புண்ணியத்தின் ஏற்றத்தாழ்வுக்குத் தக்கவாறு ஏற்றத்தாழ்வுள்ள அந்த நான்கு ப₂லன்களிலும்) விருப்பங்கொண்டு, நலம் புனையும் தொல்வினையால்—பழையதான உபாஸநா மார்க்கத்தாலே, என்பால் சேர்வர்—என்னிடம் ப₄க்திசெய்வார்கள்.

---

16. முன் ஶ்லோகத்திற் கூறப்பட்ட பாவிகளுக்கு எதிர்த்தட்டான புண்யஶாலிகளில் நாலுவகையைக் கூறுகிறான் இந்த ஶ்லோகத்தாலே. "ப₄க்தபே₄தா₃:" [ப₄க்தர்களின் பிரிவு] என்று கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் சொல்லப்பட்ட அர்த்த₂மிது. (சதுர்விதா₄: ஸுக்ருதிந: மாம் ப₄ஜந்தே) நாலுவகைப்பட்ட புண்ணிய சாலிகள் என்னை உபாஸிக்கிறார்கள். இங்கு 'ப₄ஜந்தே' என்பதன் மூலம் இவர்களை உபாஸகர்களாகக் காட்டியபோதிலும், "ந மாம் ப்ரபத்₃யந்தே"

॥भा॥ सुकृतिनः—पुण्यकर्माणो मां शरणमुपगम्य मामेव भजन्ते। ते च सुकृततारतम्येन चतुर्विधाः, सुकृतगरीयस्त्वेन प्रतिपत्तिविशेष्यादुत्तरोत्तराधिकतमा भवन्ति। आर्तः—प्रतिष्ठाहीनः, भ्रष्टैश्वर्यः

[என்னை ஶரணமடைகிறார்களல்லர்] என்று சென்ற ஶ்லோகத்திற் கூறப்பட்டவர்களுக்கு எதிர்த்தட்டாக இவர்களை எடுக்கையாலே, ''புண்யஶாலிகள் நாலுவகையினர் என்னை ஶரணடைந்து உபாஸந விரோதி₄பாபம் நீங்கப் பெற்று என்னை உபாஸிக்கிறார்கள்'' என்று பொருள் கொள்ளவேண்டும். (சதுர்வித₄ா:) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட பாவிகளுக்கு எதிர்த்தட்டான புண்ணியசாலிகளும் நாலு வகைப்பட்டவர்களே என்றபடி. (ஸுக்ருதிந:) முறைப்படுத்தப்பட்ட இவர்களும், முன் சொல்லப்பட்டவர்களைக் காட்டிலும், பின் சொல்லப் பட்டவர்கள் புண்ணியமிகுதியை உடையவர்கள் என்றும், அதனாலேயே அவரவர் விரும்பும் ப₂லனும் மேன்மேலே சிறப்புற்றதாகிறது என் றும் கருத்து. தனக்கு வைஷம்ய நைர்க்₄ருண்யம் வாராமைக்காக, எவன் ஶாஸ்த்ரீயமான எப்ப₂லனை விரும்பித்தன்னை உபாஸிக்கிறானோ அவனுக்கு அப்பலனை அளிப்பது — என்னும் நியமத்தை எம்பெரு மான் வைத்துக் கொண்டிருக்கிறான் என்றும், ஒவ்வொருவன் ஏற்றத்தாழ்வுள்ள ஒவ்வொரு ப₂லனை விரும்புவதற்குக் காரணம் அவனவனுடைய பூர்வ புண்யத்தின் ஏற்றத்தாழ்வே என்றும் 'ஸுக்ருதிந:' என்ற பத₃த்திலுள்ள 'இநிச்' ப்ரத்யயத்தாலே உணர்த்துகிறான். இனி, அவர்கள் யாரென்பதை அவரவர்க்குரிய தனித்தன்மைகளைக் காட்டும் ஶப்₃த₃ங்களையிட்டு ஶ்லோகத்தின் பிற் பாதியாலே காட்டுகிறான். இதில், ஆர்த்தனுக்கும், அர்த்த₂ார்த் தி₂க்கும் இடையில் ஜிஜ்ஞாஸுவைப் படித்திருந்தபோதிலும், பாட₂ க்ரமத்தைக்காட்டிலும் அர்த்த₂க்ரமம் வலிமையுடையதாகையால், ஐஶ்வர்யார்த்தி₂களான ஆர்த்தனுக்கும், அர்த்த₂ார்த்தி₂க்கும் பிறகு கைவல்யார்த்தி₂யான ஜிஜ்ஞாஸுவைப் படித்துக் கொள்ளவேண்டும். (ஆர்த்த:) செல்வத்தை இழந்து வருந்துமவன். ஆர்த்திபத₃ம் வருத்தத்தைக் குறித்து, அதற்குக் காரணமான செல்வமிழந்த நிலையைக் குறிக்கிறது. ஆக, ஆர்த்தன் என்று செல்வமிழந்தவனைக் காட்டுகிறது, இப்படிச் செல்வமிழந்தவன் பரமாத்மாவை உபாஸிப் பது இழந்த செல்வத்தைப் பெறுவதற்காகவே என்பது வெளிப்படை. அல்பமும், அஸ்தி₂ரமுமான ஐஶ்வர்யத்தை விரும்புகையாலே, இவன் குறைந்த புண்ணியத்தை உடையவன் என விளங்குகிறது. செல் வத்தை இழந்த வருத்தமும் கலந்திருக்கையாலே அர்த்த₂ார்த்தி₂யைக்

पुनस्तत्प्राप्तिकामः। अर्थार्थी—अप्राप्तैश्वर्यतया ऐश्वर्यकामः। तयोर्भुक्ति-भेदमात्रम्; ऐश्वर्यविषयतयैक्यादेक एवाधिकारः। जिज्ञासुः—प्रकृति-

---

காட்டிலும் குறைந்த புண்ணியம் உடையவனென்றும் விளங்குகிறது. இப்படி மிகக் குறைந்த புண்ணியத்தை உடையவனாகையால், நால்வரில் முதல்வகையாக எடுக்கப்படுகிறான் இவன். (அர்த்தா2ர்த்தீ2) புதிதாகச் செல்வத்தைப் பெற விரும்புகிறவன். செல்வத்தை இழந்தவனை முந்திய அதி4காரியிலும் வேறுபட்டவனாக எடுக்கையால் இவன் புதிதாகச் செல்வத்தைப் பெற விரும்புகிறவன் என்று விளங்குகிறது. 'அர்த்த2' ஶப்3த3ம் ஸம்ஸாரிகளால் அர்த்தி2க்கப்படுமதாய், கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி கண்ட இன்பம் அனைத்தையும், அவ்வின்பங்களைப் பெற உதவும் இவ்வுலகச் செல்வங்களையும், பிரமன், உருத்திரன், இந்திரன் முதலானாரின் உலகங்களிலுள்ள செல்வங்களையும் குறிக்கிறது. ஆர்த்தனும், அர்த்தா2ர்த்தி2யுமான இருவருமே ஐஶ்வர்யார்த்தி2களானாலும். அவனுக்குள்ள வருத்தம் இவனுக்கு இல்லாமையாலே, இவன் அவனிலும் புண்ணியம் மிக்கவன் என்று விளங்குகிறது. ஆயினும், இருவரும்—அசித்பரிணாமமான ஐஶ்வர்யத்தையே விரும்புமவர்களாகையாலே 'ஐஶ்வர்யார்த்தி2கள்' என்னும் ஒரேவித4மான அதி4காரிகளாய், அவர்களில் இருவகையினராகின்றனர். ஒரே வகையினரானால் அவர்களைப் பிரித்து எடுப்பானென்னென்னில்: ஒரே வகையினரானாலும் முற்கூறியபடி புண்ணியத்தில் ஏற்றத்தாழ்விருக்கையாலும், அவர்கள் அநுஸந்தி4க்கவேண்டிய மந்திரங்களில் பே4த3மிருக்கையாலும் பிரித்து எடுக்கக்குறையில்லை. "அண்டக்குலத்துக்கு அதிபதியாகி அசுரர் இராக்கதரை இண்டக்குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்குத் தொண்டக்குலத்தில் உள்ளீர்" [திருப்பல்லாண்டு 5] என்று பெரியாழ்வார் ஐஶ்வர்யார்த்தி2களை அழைக்கும் பாசுரத்தில் இவர்களை இக்காரணத்தாலேயே பிரித்துக் காட்டினார். அப்பாசுரத்தின் வ்யாக்2யானத்தில் "அண்டா3தி4பதயே நம:" என்பது அர்த்தா2ர்த்தி2 அநுஸந்தி4க்கும் மந்திரமாகையாலே, "அண்டக்குலத்துக்கதிபதியாகி இருடீகேசன் தனக்குத் தொண்டக்குலத்திலுள்ளீர்" என்று அர்த்தா2ர்த்தி2களையும், "அஸுரஶத்ரவே நம:" என்பது ஆர்த்தன் அநுஸந்தி4க்கும் மந்திரமாகையாலே, "அசுரரிராக்கதரை இண்டக்குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன் தனக்குத் தொண்டக்குலத்திலுள்ளீர்" என்று ஆர்த்தர்களையும் ஆழ்வார் எடுப்பதாகப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானம் செய்திருப்பது இங்கு காணத்

वियुक्तात्मस्वरूपावाप्तीच्छुः ; ज्ञानमेवास्य स्वरूपमिति जिज्ञासुरित्युक्तम् ।

தக்கது. ஆக, ஆர்த்தன் அர்த்தா₂ர்த்தீ₂ என்று முதலிரண்டு வகையான புண்ணியஶாலிகள் காட்டப்பட்டனர். (ஜிஜ்ஞாஸு:) என்னும் பத₃ம் இவர்களிலும் மிக்க மூன்றாவதுவகைப் புண்ணியசாலியைக் குறிக்கிறது. முன் அதி₄காரிகள் விரும்பும் ஐஶ்வர்யத்தைக்காட்டிலும் சிறந்ததாக வும், நாலாவது அதி₄காரி விரும்பும் ப₄க₃வத₃நுப₄வத்தைக் காட்டிலும் தாழ்ந்ததாகவுமுள்ள ஒன்றை விரும்புகிறவனையே இங்கு எடுக்க வேண்டுமாகையால், ஐஶ்வர்யாநுப₄வத்தைக்காட்டிலும் சிறந்ததாக வும், ப₄க₃வத₃நுப₄வத்தைக் காட்டிலும் தாழ்ந்ததாகவும் இதர ஶாஸ்த் ரங்களில் ப்ரஸித்₃த₄மானதாய், பூர்வஷட்கத்திலும் உணர்த்தப்பெற்ற தாய், இவ்வத்தியாயத்தில் மேலே விவரிக்கப்படுகின்றதான ப்ரக்ருதி வியுக்தமான ஆத்மாநுப₄வத்தைப்பெற விரும்புகிறவனே இங்கு ஜிஜ்ஞாஸு பத₃த்தால் குறிக்கப்படுகிறான் என்பது வெளிப்படை. ப்ர க்ருதி ஸம்ப₃ந்த₄மற்ற நித்யமான சித்தைப்பற்றியதாகையாலே, அஸ் தி₂ரமான அசித்தாகிற ஐஶ்வர்யத்தின் அநுப₄வத்தைக் காட்டிலும் அநந்தமாய், ஸ்தி₂ரமாயிருப்பதாய், ப₄க₃வத₃நுப₄வத்தைக்காட்டிலும் அல்பமாயிருப்பதான ஆத்மாநுப₄வத்தை விரும்புகையாலே இவன் ஐஶ்வர்யார்த்தி₂களுக்கும், ப₄க₃வத₃நுப₄வ காமனுக்கும் இடைப்பட்ட புண்ணியசாலியாக எடுக்கப்படுகிறான். இனி, ஜிஜ்ஞாஸுபத₃த்தால் வேறு சிலரையும் குறிக்கலாமே என்று சில ஆக்ஷேபங்கள் எழக்கூடும். அவையாவன:-(1) ஜ்ஞாநத்தை விரும்புகிறவனைமாத்திரம் ஜிஜ்ஞாஸு பத₃த்தால் எடுக்கலாம் (2) ப₄க₃வானை அறியவிரும்புகிறவனையும் அப்பத₃த்தால் எடுக்கலாம். (3) ''யூயம் ஜிஜ்ஞாஸவோऽப₄க்தா:'' [பா₄ர-மோக்ஷ 344-31] [நீங்கள் ப₄க்தியற்றவர்களாயினும், பரம புருஷனை அறியவிரும்புகிறவர்கள்] என்னும் ஏகதர், த்₃விதர் முதலா னோரின் வாக்யத்திற்போலே, ப₄க்திஶ்ரத்₃தை₄யற்றவராய் குதூஹல மாத்ரத்தாலே ப₄க₃வானை அறியவிரும்புகிறவர்களையும் எடுக்கலாம். (4) 'ஆரோக்₃யம் பா₄ஸ்கராதி₃ச்சே₂த் ஶ்ரியமிச்சே₂த் ஹுதாஶநாத் । ஈஶ்வராத் ஜ்ஞாநமந்விச்சே₂த் மோக்ஷமிச்சே₂த் ஜநார்த்த₃நாத் ॥ '' [ஆரோக்₃யத்தை ஸூர்யனை உபாஸித்தும், செல்வத்தை அக்₃நியை ஆஶ்ரயித்தும், ஞானத்தைச் சிவனை அடைந்தும், மோக்ஷத்தை விஷ்ணுவை உபாஸித்தும் பெற விரும்பவேண்டும்.] என்னும் ஸுப்ர ஸித்₃த₄புராண ஶ்லோகத்தை நினைவுறுத்துவதாக இந்த கீ₃தா ஶ்லோக மிருக்கையாலே, ஆரோக்₃யமிழந்து வருந்துமவனை ஆர்த்தனென்றும், செல்வத்தைப் பெற விரும்புகிறவனை அர்த்தா₂ர்த்தீ₂ என்றும், பரமாத்ம ஜ்ஞாநத்தை விரும்புகிறவனை ஜிஜ்ஞாஸு என்றும், மோக்ஷ

ज्ञानी च—* इतस्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम् (५) इत्यादिनाऽभि-

---

த்தை விரும்புகிறவனை ஜ்ஞாநியென்றும் கூறுவதாகவும் கொள்ளலாம் என்பவை அவ்வாக்ஷேபங்கள். இவ்வாக்ஷேபங்கள் பொருந்தமாட்டா என்பது இப்ரகரணத்தை ஆராய்ந்தால் விளங்கும். ஜ்ஞாநத்தை விரும்புகிறவனுக்கும், ப4க3வானைப் பெற விரும்புகிறவனுக்கும் கடைசியில் ப4க3வானே ப்ராப்யமாகையால், ஜிஜ்ஞாஸுவாகிற இவ்வதி4காரி நாலாமவனான ஜ்ஞாநியைக் காட்டிலும் வேறுபடாதவனாக வேண்டிவரும். ஆகையால் இவ்வாக்ஷேபங்கள் பொருந்தமாட்டா. ஆரோக்3யம் முதலிய எல்லாச் செல்வங்களையும் இழந்தவனை ஆர்த்த ஶப்3த3ம் குறிக்கலாமாயிருக்க, ஆரோக்3யத்தை இழந்தவனை மாத்திரம் குறிப்பதாக ஸங்கோசம் செய்ய இப்ரகரணத்தில் எவ்வித4மான நியாமகமுமில்லை. ஆகையால், கீ3தையில் முன்பின் ப்ரகரணங்களில் ஐஶ்வர்யார்த்தி2க்கும், ப4க3வத3நுப4வகாமனுக்கும் இடைப்பட்டவனாக எடுக்கப்படும் ஆத்மாநுப4வகாமனையே இங்கு ஜிஜ்ஞாஸு பத3த்தால் எடுக்கிறது என்பது தெளிவு. 'ஜ்ஞாநத்தை விரும்புமவன்' என்னும் பொருளுடைய ஜிஜ்ஞாஸுபத3ம் இவனை எப்படிக் குறிக்கும்? எனில்: இவனுடைய ஸ்வரூபம் ஜ்ஞாநமயமானதாகையால், ப்ரக்ருதி ஸம்ப3ந்த4மற்றதான தன் ஆத்மாவை விரும்பும் இவனை ஜிஜ்ஞாஸு என்னக்குறையில்லை. (ஜ்ஞாநீ ச) ப4க3வானே பரமப்ராப்யம் எனும் சிறந்த ஜ்ஞானத்தையுடையவன். என்னையே அடைய விரும்பும் ஜ்ஞாநி-தான் விரும்பும் ப்ராப்யமாகிற என் சிறப்பைக் காணும்போது, முற்கூறிய புண்ணியசாலிகளைக் காட்டிலும் புண்ணியம் மிக்க நாலாவது வகைப்பட்டவனாகிறான் என்கை. முன் அதி4காரிகளுக்கு இல்லாத—''இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்3தி4 மே பராம்'' [7-5] [இவ்வசேதன ப்ரக்ருதியைக் காட்டிலும் மேலான சேதன ப்ரக்ருதியையும் என்னுடையதாக அறி] என்று தொடங்கி உபதே3ஶிக்கப்பட்ட பரமபுருஷனைப் பற்றிய உண்மையறிவையும், 'அப்பரம புருஷனுக்கு ஶேஷமாயிருப்பதையே இயல்வாகக் கொண்டது ஆத்மஸ்வரூபம்' என்னும் சிறந்த அறிவையும் உடையவனாகையால் இவன் 'ஜ்ஞாநீ' எனப்படுகிறான். புண்ணியத்தின் குறைவாலே இத்தகைய அறிவுபெறாத ஆர்த்தனும், அர்த்தா2ர்த்தி2யும் அல்பமாய். அஸ்தி2ரமான ஐஶ்வர்யத்தைப் புருஷார்த்த2மாக எண்ணி என்னை உபாஸித்து, கல்பகவ்ருக்ஷத்திடம் கௌபீநபி4க்ஷை பெறுவதுபோலே என்னிடம் ஐஶ்வர்யத்தைப்பெற்று அகல்கின்றனர். இவர்களிலும் புண்ணியம் மிக்கிருக்கையாலும், ஜ்ஞானியைக் காட்டிலும் குறைந்த புண்ணியத்தையுடையவனாகையாலும்,

हितभगवच्छेषतैकरसात्मस्वरूपवित्; प्रकृतिवियुक्तकेवलात्मन्यपर्यवस्यन् भगवन्तं प्रेप्सुः भगवन्तमेव परमप्राप्यं मन्वानः ॥१६॥

அநந்தஸ்தி2ரப2லமான என்னை விரும்பாமல், நித்யமான ஆத்மாநுப4வமாத்ரத்தைப் புருஷார்த்த2மாக எண்ணி, என்னை உபாஸிக்கும் ஜிஜ்ஞாஸுவும் அல்பப2லமான அதையே பெற்றுப் போகிறுன். இவனிலும் புண்ணியம் மிக்கவனுன ஜ்ஞானியோவெனில், இப்படி கேவலாத்மாவைப் பெற்று அகலாமல், என்னையே பரமப்ராப்யமாக எண்ணி என்னையே பெற விரும்புகின்றவனுய், அவ்விருப்பத்திற்கு அனுகு3ணமாக என்னை உபாஸித்து என்னையே பெற்று நித்யமான பேரின்ப வாழ்ச்சி பெறுகிறுன். ஆகையால் இவனே புண்ணியசாலிகளில் தலைசிறந்தவன் என்று கருத்து. கீதை ஆறுமத்தியாயத்தை அடியொற்றி, ''உற்றது வீடுயிர்'' [1-2-5] ''அதுவே வீடு'' [7-8-7] முதலானவிடங்களில் திருவாய்மொழியில் ஆழ்வார் இவ்வாத்மப்ராப்தியை மோக்ஷமாகவே அருளினுர். ''விடை கொள்வார்'' [முதல் திருவ 26] என்று கைவல்யார்த்தி2களை பரமபுருஷனிடமிருந்து எப்போதுமே விடைகொள்வாராகவும், ''ஈன் துழாயானை வழுவாவகை நினைந்து வைகல் தொழுவார்'' [ஷை-26] என்று ஜ்ஞாநிகளை எம்பெருமானை விட்டுப்பிரியாமலிருக்கைக்குறுப்பாக எப்போதும் உபாஸிப்பவர்கள் என்றும் பொய்கையாழ்வாரும் அருளினுர். இப்படி ஆழ்வாரும் கீ3தாசார்யனும் அருளியதை ஒட்டி, ''ப்ரக்ருதி வியுக்தாத்ம ஸ்வரூபாவாப்தீச்சு2:'' என்று ஜிஜ்ஞாஸுவையும். '' கேவலாத்மநி அபர்யவஸ்யந் ப4க3வந்தம் ப்ரேப்ஸு, '' [கைவல்ய நிஷ்ட2னைப் போலே கேவலாத்மாவிலேயே கால் தாழ்ந்து விடாமல், பரமபுருஷனை அடைய விரும்புகிறவன்] என்று ஜ்ஞாநியையும் பா4ஷ்யகாரர் அருளியிருப்பது குறிக்கொள்ளத் தக்கது. இவ்விஷயத்தில் தி3வ்யப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்களிடம் கருத்து வேறுபாடு கொண்ட ஸ்ரீவேத3ாந்த தே3ஶிகர், ''கேவலாத்மநி அபர்யவஸ்யந்'' என்ற பா4ஷ்யகார ஸூக்திக்கு '' நகரத்தினுள் நுழைய விரும்பிய வழிப்போக்கன் — நிழல் தரும் மரத்தடியில் தூங்குவதுபோலே (ஜிஜ்ஞாஸுவுக்கு) ஆத்மாநுப4வ ரூபமான காலதாமதம் இடையில் ஏற்படுகிறது என்று கருத்து'' என்று தாத்பர்ய சந்த்3ரிகையில் கருத்துரைத்தார். இதுபற்றி அவர் விரிவாக விசாரம் செய்திருக்கும் எட்டாம் அத்தியாயத்திலேயே நாமும் இவ்விரண்டு பக்ஷங்களையும் விரிவாக விளக்குவோம். கைவல்யம் மோக்ஷம் எனும் பக்ஷத்தில், ஸர்வகர்மங்களும் கழிந்தபின்பு கைவல்ய நிஷ்ட2னுக்குத்

தாழ்ந்த மோக்ஷமும், ஜ்ஞாநிக்கு உயர்ந்த மோக்ஷமும் எப்படி உண்டாகமுடியும்? என்னும் ஒரு கேள்விக்கு மாத்திரம் பா4ஷ்ய காரர் ''ஸுக்ருத கு3ரீயஸ்த்வேந ப்ரதிபத்தி வைஶேஷ்யாத் உத்த ரோத்தராதி4கதமா ப4வந்தி'' [புண்ணிய மிகுதியினால் உண்டான விருப்பத்தின் சிறப்பாலே மேல்மேல் அதி4காரிகள் சிறந்த ப2லனைப் பெறுகிறார்கள்.] என்னுமிடத்தில் 'ப்ரதிபத்தி வைஶேஷ்யாத்' என்னும் ஶப்3த3த்தையிட்டு பதிலை உணர்த்தியிருப்பது குறிக்கொள்ளத் தக்கது. புண்ணிய மிகுதியினால் மேல்மேல் அதி4காரிக்கு மேலே மேலே சிறந்த ப2லனில் விருப்பம் உண்டாகிறது. அந்த ரீதியில் கைவல்ய நிஷ்ட2னுக்கு அவனுடைய குறைவான புண்ணியத்தினால் தாழ்ந்த மோக்ஷமான ஆத்மாநுப4வத்தில் விருப்பமும், ஜ்ஞாநிக்கு அதி4கமான புண்யத்தினால் சிறந்த ப2லனான ப4க3வதநுப4வத்தில் விருப்பமும் ஏற்பட்டுவிடுகிறது. இருவரும் ப4க3வானை ஆஶ்ரயித்து, அவரவர்க்குரிய ஸாத4னங்களை அநுஷ்டி2த்து, தத்க்ரதுந்யாயத்தாலே அவரவர் விரும்பிய ப2லனைப் பெறுகிறார்கள். அதில், ப4க3வத் ப்ராப்தியைப் போலே, ஆத்ம ப்ராப்தியும் ''ஶப்3த3 ப்3ரஹ்ம அதி வர்த்ததே'' [6-44] என்கிறபடியே ப்ரக்ருதி மண்ட3லத்தைத்தாண்டிய பின்பே ஏற்படுவதாகையால், அதற்கும் ஸம்ஸாரஹேது ஸர்வபாப விமோசநம் அவஶ்யமாகிறது. இப்படி ஸர்வபாப விமோசநம் துல்ய மானாலும், புண்யபாபத்தில் சேராத அவரவர் ப்ரதிபத்தியின்படி (விருப் பத்தின்படி) ஒருவன் தாழ்ந்த மோக்ஷத்தையும், ஒருவன் சிறந்த மோக்ஷத்தையும் பெறக் குறையில்லை என்பதை, ''ஸுக்ருத தாரதம் யேந'' ''உத்தரோத்தராதி4கதமா ப4வந்தி'' என்னும் ஸூக்திகளுக் கிடையில் ''ப்ரதிபத்தி வைஶேஷ்யாத்'' என்னும் பத3த்தை யிட்டுக் காட்டினார் பா4ஷ்யகாரர். மோக்ஷத்திலும் இப்படி தத்க்ரது ந்யாயத்தை ஒட்டி அவனவன் விரும்பிய ப2லனை எம்பெருமான் அளிப்பவனானால்தான் அவனுக்கு வைஷம்யநைர்க்4ருண்ய தோ3ஷம் வாராதென்பதும் குறிக்கொள்ளத்தக்கது. இதுபற்றி மேலே விரிவாக விளக்குவோம். (ப4ரதர்ஷப4 அர்ஜுந) என்னும் விளிகளாலே, நீ ப4ரத குலத்திலுதித்தவர்களில் தலைவனாய், வெள்ளை நிறத்தையுடைய ஶுத்3த4 ஸ்வபா4வனாகையாலே, புண்ணியசாலி களில் சிறந்தவனான ஜ்ஞாநியாக வேண்டும் என்னும் கருத்தைக் காட்டுகிறான். ஆக, ''ப4க்தபே4த3:'' என்று கீ3தார்த்த2 ஸங் க்3ரஹத்திற் கூறியபடியே — புண்ணியத்தின் ஏற்றத் தாழ்வாலே ஏற்றத்தாழ்வுள்ள ஒவ்வொரு ப2லனில் விருப்பம் ஏற்பட்டு, அவ் விருப்பம் நிறைவேறுவதற்காக எம்பெருமானிடம் ப4க்தி செய்யும் நாலுவகைப்பட்ட ப4க்தர்களைக் கூறினாயிற்று. 16.

तेषां ज्ञानी नित्ययुक्त: एकभक्तिर्विशिष्यते ।
प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः ॥१७॥

17. தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த: ஏகப₄க்திர் விஶிஷ்யதே।
ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்த₂மஹம் ஸ ச மம ப்ரிய: ॥

தேஷாம்—அந்நால்வருக்குள், நித்யயுக்த:—என்னோடு எப்போதும் சேர்ந்திருப்பவனாய், ஏகப₄க்தி:—என்னொருவனிடமே ஈடுபாட்டை உடையவனாயிருப்பவனான, ஜ்ஞாநீ—ஞானி, விஶிஷ்யதே — சிறப்புறுகிறான். அஹம் — நான், ஜ்ஞாநிந: — ஞானிக்கு, அத்யர்த்த₂ம் ப்ரிய: — சொல்லவொண்ணாதவளவுக்கு இனியவன்; ஸ: ச—அவனும், மம—எனக்கு, ப்ரிய:—இனியவன்.

---

17. ஆங்கவரின் ஞானி யதிக னவனென்றும்
பாங்கிலெனைச் சேர்ந்தேக பத்தியனும்—நீங்கலுறு
தென்னையவன் செப்பாத வேய்ந்துகக்கும் யானுமவன்
றன்னையுகந் தேயிருப்பன் சார்ந்து.

ஆங்கு அவரில் — அத்தகைய அவர்களுக்கிடையே, ஞானி—ஞானியானவன், அதிகன்—சிறப்புற்றவன்; (ஏனெனில்) அவன் — அவன், பாங்கில் — பாங்காக, என்றும் என்னை நீங்கலுறுது சேர்ந்து—என்றுமே என்னோடு பிரியாது கூடியிருப்பவனாய், ஏகபத்தியனும் — என் ஒருவனிடமே அன்பு செலுத்துகிறவனாயிருப்பவன்; என்னை — என்னை, அவன்—அவன், செப்பாத—சொல்லமுடியாதபடி, ஏய்ந்து—பொருந்தி, உகக்கும் — உகப்பான்; யானும் — நானும், அவன் தன்னை சார்ந்து—அவனோடு பொருந்தி, உகந்தே இருப்பன்—(அவனை) உகந்தேயிருப்பேன்.

---

17. இனி, ''ப்ரபு₃த்₃த₄ஸ்ய ஶ்ரைஷ்ட்₂யம்'' [ஜ்ஞாநியின் சிறப்பு] என்று ஆளவந்தாரால் ஸங்க்₃ரஹிக்கப்பட்ட அர்த்த₂ம் மூன்று ஶ்லோகங்களாலே கூறப்படுகிறது.

॥भा॥ तेषां ज्ञानी विशिष्यते। कुतः? नित्ययुक्त एकभक्तिरिति च। ज्ञानिनो हि मदेकप्राप्यस्य मया योगो नित्यः;

"சதுர்வித$_4$ா மம ஜநா ப$_4$க்தா ஏவ ஹி தே ஶ்ருதா:।
தேஷாம் ஏகாந்திந: ஶ்ரேஷ்ட$_2$ாஸ் தே சைவ அநந்யதே$_3$வதா: ॥
அஹமேவ க$_3$திஸ் தேஷாம் நிராஶீ:கர்மகாரிணாம் ॥
யே து ஶிஷ்டாஸ் த்ரயோ ப$_4$க்தா: ப$_2$லகாமா ஹி தே மதா:।
ஸர்வே ச்யவந த$_4$ர்மாண: ப்ரதிபு$_3$த்$_3$த$_4$ஸ்து மோக்ஷப$_4$ாக் ॥"
[ப$_4$ாரதம் – மோக்ஷ 342–33,34,35]

[நாலு வகைப்பட்ட ஜநங்கள் என்னுடைய ப$_4$க்தர்கள் என்று பிரஸித்$_3$தி$_4$பெற்றவர்கள்; அவர்களுக்குள் ஏகாந்திகள் சிறந்தவர்கள்; அவர்களே வேறு தே$_3$வர்களைப் பற்றாதவர்கள். ப$_2$லன்களில் பற்றற்றுக் கர்மம் செய்யும் அவர்களுக்கு நானே ப்ராப்யனாகிறேன். மற்ற மூன்று ப$_4$க்தர்களும் என்னையொழிந்த ப$_2$லனை விரும்புகிறவர்கள். அவர்கள் மூவரும் (ஶேஷத்வமாகிற) த$_4$ர்மத்திலிருந்து நழுவியவர்கள்; நான்காமவனான ஜ்ஞாநியே மோக்ஷத்தை அடைகிறான்.] என்று இவ்வர்த்த$_2$த்தை மேலே மஹாப$_4$ாரதம் மோக்ஷ த$_4$ர்மத்திலும் கூறப்போகிறான் என்று தாத்பர்ய சந்த்$_3$ரிகை. இந்த ஶ்லோகங்களில் ஜ்ஞாநிகளை 'ஏகாந்திந;' என்று எடுக்கையாலும், அவர்களே மற்றவர்களை தெய்வமாகப் பற்றாதவர்கள் என்று கூறுகையாலும், மற்ற மூவரும் மற்ற தே$_3$வர் முதலானாரைப் பற்றியவர்களேயாகவேணும் என்றும், இந்த ஶ்லோகங்களை ஒட்டியுள்ள "ப்$_3$ரஹ்மாணம் ஶிதிகண்ட$_2$ஞ்ச ... ப்ரதிபு த்$_3$த$_4$ா ந ஸேவந்தே" [நான்காமவரான ஞானிகள் – பிரமன், உருத்திரன் முதலான தெய்வங்களை ஸேவிக்கமாட்டார்கள்] என்னும் ஶ்லோகமும் இதை வலியுறுத்துகிறது என்றும் "தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்தி" [கீ$_3$தை 9-23] [மற்ற தெய்வங்களின் ப$_4$க்தர்களும் (உண்மையில்) அந்தர்யாமியான என்னையே ஆராதி$_4$க்கிறார்கள்] என்று சொன்ன ரீதியில் அவர்களைத் தனது ப$_4$க்தர்களாகக் கண்ணன் கூறுகிறான் என்றும், இக்காரணங்களாலே, "யாந்தி தே$_3$வவ்ரதா தே$_3$வாந் பித்ரூந் யாந்தி பித்ருவ்ரதா:। பூ$_4$தாநி யாந்தி பூ$_4$தேஜ்யா யாந்தி மத்$_3$யாஜிநோऽபி மாம் ॥" [கீ$_3$தை 9-25] என்னும் ஶ்லோகத்தில் கூறப்பட்ட (1) தே$_3$வப$_4$க்தர்கள், (2) பித்ருப$_4$க்தர்கள், (3) பூ$_4$தப$_4$க்தர்கள் (4) ப$_4$க$_3$வத்$_3$ப$_4$க்தர்கள் என்னும் நாலுவகைப்பட்ட அதி$_4$காரிகளையே மோக்ஷத$_4$ர்மத்தில் "சதுர்வித$_4$ா:" என்று எடுக்கிறான்

इतरयोस्तु यावत्स्वाभिलषितप्राप्ति मया योगः। तथा ज्ञानिनो मय्ये-
कस्मिन्नेव भक्तिः; इतरयोस्तु स्वाभिलषिते तत्साधनत्वेन मयि च;

என்றும் முமுக்ஷுப்படி வ்யாக்₂யானமான தாத்பர்யதீ₃பிகையில் காட்டப்பட்டது. ப்ராஸங்கி₃கமான இது நிற்க. (தேஷாம்) ஆர்த்தன், அர்த்த₂ார்த்தி₂, ஜிஜ்ஞாஸு, ஜ்ஞாநி என்னும் நாலு வகைப் பட்ட ப₄க்தர்களுள். "தேஷாம்" என்னுமிடத்தில் ஷஷ்டி₂ (ஆரும் வேற்றுமை) "நிர்த₄ாரணே ஷஷ்டீ₂" என்னும் இலக்கண வழக்கின் படி பலரில் ஒருவரை நிர்த்த₄ாரணம் செய்வதாகிற பொருளில் வந்தது. (ஜ்ஞாநீ விஶிஷ்யதே) அந்த நால்வருள் ஜ்ஞானியானவன் சிறந்தவனுகிருன். இனி, பூர்வார்த்த₄த்திலுள்ள "நித்யயுக்த:" "ஏகப₄க்தி:" என்னும் இரு விஶேஷணங்களும் ஜ்ஞானியின் சிறப்புக்குக் காரணத்தை உணர்த்துகின்றன— (நித்யயுக்த:) எப்போதும் சேர்ந்திருப்பவன்; ஞானியானவன் எப்போதும் என்னுேடு சேர்ந்திருக்கிருனுகையால், அவன் அப்படி எப்போதும் என்னுேடு சேர்ந்திராத மற்ற இருவரைக் காட்டிலும் சிறந்தவன். ஞானியானவன் என்னையே ப்ராப்யனுகக் கொண்டவனுகையால் ஸாத₄நத₃ஶையோடு, ஸாத்₄யத₃ஶையோடு வாசியற என்னுேடு சேர்ந்திருக்கிருன். மற்ற இருவருமோ முறையே ஐஶ்வர்யத்தையும், கைவல்யத்தையும் ப்ராப்யமாகவும், என்னை அப்ப₂லன்களைக் கொடுக்கும் ஸாத₄னமாகவும் கொண்டவர்களாகையாலே, தாங்கள் விரும்பும் ப₂லன் கிடைக்கும் வரையிலேயே அதற்கு ஸாத₄னமான என்னுேடு சேர்ந்திருக்கிருர்கள்; அது கிடைத்தவுடன் என்னைவிட்டு விலகிவிடுகிருர்கள். இக்காரணத்தால் ஞானியே சிறந்தவன் என்று கருத்து. (ஏகப₄க்தி:) ஒன்றிலேயே ஈடுபாடு உடையவன்; ஜ்ஞாநிக்கு ப்ராப்யமாகவும், அந்த ப்ராயத்தை அளிக்கும் ப₂லப்ரத₃ஸாத₄நமாகவும் நானே இருக்கையால் என்னொருவனிடமே ஈடுபாடு உள்ளது. மற்ற இருவர்க்கும் முறையே அவரவர்க்கு ப்ராப்யமான ஐஶ்வர்யத்திலும் கைவல்யத்திலும் ஈடுபாடு உள்ளது. அப்ப₂லனைத் தரும் ஸாத₄நமாக என்னிடமும் ஈடுபாடு உள்ளது. இக்காரணத்தாலும் என்னொருவனிடமே ஈடுபாடுள்ள ஞானி சிறந்தவனுகிருன். ஆக, "ஏகப₄க்தி:" என்னும் பத₃த்தால் – ஐஶ்வர்யார்த்தி₂யோடு, கைவல்யார்த்தி₂யோடு வாசியற இருவரும் பரமபுருஷனை ப்ராப்யமாக எண்ணுதவர்கள் என்றும், "நித்யயுக்த:" என்னும் பத₃த்தாலே – தமது ப்ராப்யமான ஐஶ்வர்யத்தையோ, கைவல்யத்தையோ பெற்ற பின்பு எம்பெருமானுக்கும் அவர்களுக்கும் உள்ள தொடர்பு விட்டுப்போகிறது

अतस्स एव विशिष्यते। किञ्च, प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहम्—

என்றும் விளங்குகிறது. ஐஶ்வர்யார்த்தி2 விஷயத்தில் இவ்வர்த்த2த்தில் விவாத3மில்லை. கைவல்யார்த்தி2 விஷயத்தில் பூர்வாசார்யர்கள் காலத்திலிருந்தே மூன்று வித4மான பக்ஷங்கள் உள்ளன. அவற்றில் எந்தப் பக்ஷம் — ஶ்ருதி முதலான ப்ரமாணங்களுக்கும், ஆழ்வார்களின் ஸ்ரீ ஸூக்திகளுக்கும், ஸ்ரீ பா4ஷ்யம், கீ3தாபா4ஷ்யம் முதலான ஆசார்ய ஸ்ரீ ஸூக்திகளுக்கும் பொருந்தியது என்று நிர்ணயிக்கவேண்டிய கடமை நமக்கு உள்ளதாகையால், அந்தப் பக்ஷங்கள் என்னென்ன என்பதையும் அதில் எந்தப் பக்ஷம் மிக்க ஸ்வாரஸ்யத்தையுடையது என்பதையும் விளக்குவோம்.

(1) தி3வ்யப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்களுடைய பக்ஷம்:— பிள்ளான், நஞ்சீயர், பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலான தி3வ்யப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்களும், அவர்களை அடியொற்றிய பிள்ளைலோகாசாரியர், மாமுனிகள் முதலான ரஹஸ்ய வ்யாக்2யாதாக்களும் பின்வருமாறு திருவுள்ளம்பற்றியிருக்கிறார்கள்:— கர்மயோக3த்தை அங்க3மாகக் கொண்ட ஜ்ஞாந யோக3த்தினாலே ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது. ஜ்ஞாந யோக3ம் நிறைவுடைய ஶுபா4ஶ்ரய சிந்தநமும் அவஶ்யமாகையாலே, ப4க்தியோக3மும் அதற்கு அங்க3மாகிறது. இப்படி கர்மப4க்தி யோக3ங்களை அங்க3மாகக் கொண்ட ஜ்ஞாந யோக3த்தாலே (அல்லது ப4க்தியை அங்க3மாகக் கொண்ட ஜ்ஞாந ஸஹித கர்மயோக3த்தாலே) ஶப்3த3ாதி3களில் பற்று நீங்கி ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும்போது, ஶப்3த3ாதி3 விஷயங்களையே அநுப4வித்துப் போந்த இந்த யோகி3க்கு அவ்வாத்மாவில் மிகுந்த ஈடுபாடு (ப்ராப்யத்வபு3த்3தி4) ஏற்படும். இவ்வாத்மாவைக் காட்டிலும் பரமாத்மாவாகிற தனது வைலக்ஷண்யத்தை அறிந்து, தன்னிடம் ப்ராப்யத்வ பு3த்3தி4யை இவன் வைக்கவேண்டும் என்னும் திருவுள்ளத்தாலேயே எம்பெருமான் இவனுக்கு ஶுபா4ஶ்ரய சிந்தந ரூபமான ப4க்தி யோக3த்தை அங்க3மாக விதி4த்திருக்கிறான். அப்படிப் பரம போ4க்3யமான தி3வ்யமங்க3ள விக்3ரஹத்தைப் பல ஜன்மங்கள் சிந்தித்த பின்பும் அதில் இவன் ஈடுபடாமல், அதைத் தனது பாபத்தைப் போக்கும் பாவனப் பொருளாக மாத்திரம் கருதி ''ப்ரக்ருதி வியுக்தமான என் ஆத்மாவை அநுப4விப்பதாகிற கைவல்ய மோக்ஷத்தையே எனக்குக் கொடுத்துவிடவேண்டும்'' என்று ப்ராரப்3த4 கர்மம் முடியும் வரையில் இவன் விரும்பினனாகில், அவனுடைய இந்த ப்ரதி

பத்திக்கு அநுகுணமாக, ப்ரக்ருதி மண்டலத்தைத் தாண்டியிருக்கும் பரமபதத்தில் ஓர் மூலையிலுள்ள ஸ்தாநத்தில் எப்போதுமே இவனைத் தன் ஆத்மாவையே அநுபவித்துக் கொண்டிருக்கும்படி செய்கிறான் எம்பெருமான். இவனுக்கு அர்ச்சிராதிகதியும் ப்ரஹ்ம ப்ராப்தியுமில்லை. இந்த ஸ்தாநத்தில் இவன் தான் விரும்பியபடி ஆத்மாநுபவம் செய்வது தவிர, ஓர் ஸாதநாநுஷ்டாநம் செய்ய ப்ரஸக்தியில்லாமையால், இவனுக்கு என்றுமே பகவத் ப்ராப்தி யில்லை. ஆகையால் கைவல்யநிஷ்டன் இப்ரக்ருதிமண்டலத்தி லிருக்கும்போதே — விஷயாந்தரங்களில் பற்றும், அதற்குக் காரண மான ப்ராரப்த கர்மமும், அதடியாக ஸூக்ஷ்மசரீரமும் கழிவதற்கு முன் எம்பெருமானிடம் பேராக்யதாபுத்திவைத்தாலொழிய இவன் அவனை அடையான்; அவனை விட்டு நிரந்தரமாக விடைகொள்பவனு கவே ஆகிறான். எம்பெருமானை அதற்குப்பின் இவனுக்கு பகவதநு பவமே இல்லாமற் போவதால் இவன் இறந்தவனுகவே ஞானிகளால் கருதப்படுகிறான். ஆகையால், சப்தாதிவிஷயங்களில் பற்று அறு வதற்கு முன்னதாகவே எம்பெருமானிடம் ப்ராப்யத்வ புத்தியைவைத் தாலொழிய இவ்வதிகாரிக்குப் பரமபுருஷார்த்த லக்ஷண மோக்ஷம் கிடைக்க வழியே இல்லை என்பது இவ்வாசாரியர்களின் திருவுள்ளம். கீதை (3-17,18,19) பாஷ்யத்தில் ஆத்மப்ராப்தியடைந்தவனை ''ஸ ''சப்த ஹி முக்த ஏவ'' என்று பாஷ்யகாரர் முக்தனுகவே அருளியிருப் பதும். ப்ரஹ்ம அதிவர்த்ததே'' [கீதை 6-44] என்னும் கீதா ச்லோ கத்திலும், அதன் பாஷ்யத்திலும் ப்ரக்ருதி மண்டலத்திலிருந்து விடு பட்ட பின்பே இவன் ஆத்மாநுபவத்தைப் பெறுகிறான் என்று அருளியிருப்பதும், சென்ற ச்லோக பாஷ்யத்தில் இவனை ''ப்ரக்ருதி வியுக்தமான ஆத்ம ஸ்வரூபத்தைப் பெற விரும்பியிருப்பவன்'' என்று அருளியிருப்பதும், இந்த ச்லோக பாஷ்யத்தில் இவனுக்குத் தன் பலனை கைவல்யத்தைப் பெற்றபின் எம்பெருமானோடு யோகம் (தொடர்பு) விட்டுப்போகிறது என்றும், எம்பெருமானிடம் இவனுக்கு ப்ராப்யத்வ புத்தியில்லை என்றும் அருளியிருப்பதும், கைவல்ய விஷயமான ஆழ்வார்கள் ஸ்ரீ ஸூக்திகள் பலவும் இப்பக்ஷத்திற்கு மிகப் பொருந்தியிருக்கின்றன. ''எல்லாக் கர்மமும் கழிந்தபின் இவனுக்குத் தாழ்ந்த மோக்ஷமும், ஜ்ஞாநிக்கு உயர்ந்த மோக்ஷமும் எப்படி ஏற்படமுடியும்?'' என்னும் கேள்விக்கு ''ப்ரதிபத்திவைசேஷ் யாத்'' என்னும் பதத்தில் எம்பெருமானர் பதிலுணர்த்தியிருப்பதை யும் சென்ற ச்லோக வ்யாக்யானத்திலேயே காட்டினோம், மேலே யுள்ள கீதா பாஷ்ய ஸ்ரீஸூக்திகளும் இந்தப் பக்ஷத்திற்கு மிகப் பொருந்தியுள்ளன என்பதை ஆங்காங்கு காட்டுவோம்.

(2) ஸ்ரீவேதா₃ந்த தே₃ஶிகருடைய பக்ஷம்:—தாத்பர்ய சந்த்₃ரிகையிலும், ந்யாய ஸித்₃த₄ாஞ்ஜநத்திலும் பின்வருமாறு இப்பக்ஷம் விரிவாக விளக்கப் பட்டுள்ளது:—எல்லாக் கர்மங்களும் கழிந்த பின்பு ஒருவனுக்குத் தாழ்ந்த மோக்ஷமும், ஒருவனுக்கு உயர்ந்த மோக்ஷமும் ஏற்படுவதாகக் கூறுவது பொருந்தாது. ஆகையால் முந்திய பக்ஷம் சரியல்ல. ப்₃ரஹ்ம வித்₃யைகளுக்குள் பஞ்சாக்₃நி வித்₃யை என்பது ஒன்று. ப்₃ரஹ்மத்திற்கு ப்ரகாரமாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பவன் அவன். அவனுக்கு அர்ச்சிராதி₃க₃தியும், ப்₃ரஹ்ம ப்ராப்தியும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வதி₄காரியே கீ₃தையில் ''ஜிஞ்ஞாஸு'' எனப்படும் கைவல்ய நிஷ்டன். மது₄வித்₃யையின்படி உபாஸிப்பவனுக்கு ப்₃ரஹ்ம ப்ராப்திக்கு முன் வஸ்வாதி₃பத₃ ப்ராப்தி அவாந்தர ப₂லனாகக் கிடைப்பதுபோல், இவனுக்கும் ப்ரக்ருதி மண்டலத்திற்குள்ளோ, அர்ச்சிராதி₃க₃தி மத்₄யத்திலோ ஆத்மாநுப₄வம் அவாந்தர ப₂லனாகக் கிடைக்கிறது. சில காலம் ஆத்மாவை அநுப₄வித்துவிட்டு, பிறகு ப்₃ரஹ்ம ப்ராப்தியைப் பெறுகிறான் இவன். இவன் ஆத்மாநுப₄வத்தை நித்யமாக அடைகிறான் என்று கொண்டால், ஸ்ரீ பா₄ஷ்யம், கீ₃தா பா₄ஷ்யம் முதலானவற்றில் இவனுக்கு ப்₃ரஹ்ம ப்ராப்தியைச் சொல்லியிருக்கும் ஸ்ரீஸூக்திகள் விரோதி₄க்கும். ஆழ்வார்கள் கைவல்யத்தை ''வீடு'' என்று அருளியிருப்பதும், '' நித்யம் '' என்று அருளியிருப்பதும் நெடுங்காலம் இருக்கும் சிறந்த புருஷார்த்த₂ம் என்னும் கருத்தினாலேயே. இது ஸ்ரீ வேதா₃ந்ததே₃ஶிகர் திருவுள்ளம்.

(3) ஸ்ரீ வேதா₃ந்ததே₃ஶிகருடைய ந்யாயஸித்₃தா₄ஞ்ஜநத்திலிருந்து — சில ஆசார்யர்கள் ஜிஜ்ஞாஸுவைப்பற்றி வேறு வித₄மாகத் திருவுள்ளம் பற்றியிருப்பதாகவும் தெரிகிறது. அதாவது:— ''பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னே ' ஜிஜ்ஞாஸு ' எனப்படும் கைவல்யநிஷ்ட₂ன். இவன் ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பதால் அர்ச்சிராதி₃க₃திமூலம் பரமபத₃ம் சென்று, அதன் ஒரு மூலையில் தத்க்ரதுந்யாயத்தின்படி தன் ஆத்மாவை நித்யமாக அநுப₄வித்துக் கொண்டிருக்கிறான். இவனுக்கு - ஶ்ருதியிலும், ஸ்ரீ பா₄ஷ்யாதி₃களிலும் ப்₃ரஹ்மப்ராப்தியைச் சொல்லியிருப்பது ப்₃ரஹ்மலோக ப்ராப்தியையிட்டு என்றே, ப்₃ரஹ்மம் விஶேஷணமாக ப்ரகாஶிப்பதையிட்டு என்றே நிர்வஹிக்கத்தக்கது'' என்று. முதல் பக்ஷத்தில் ஆழ்வார்களுடைய ஸ்ரீ ஸூக்திகளுக்கும், கீ₃தாபா₄ஷ்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் உள்ள ஸ்வாரஸ்யம் மற்ற இரண்டு பக்ஷங்களிலும் இல்லை என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். குறிப்பாக, இந்த

अत्रार्थशब्दोऽभिधेयवचनः ; ज्ञानिनोऽहं यथा प्रियः, तथा मया सर्वज्ञेन सर्वशक्तिनाऽप्यभिधातुं न शक्यत इत्यर्थः ; प्रियत्वस्येयत्तारहितत्वात् ।

ச்லோகத்தில் உள்ள "நித்யயுக்த:" "ஏகப4க்தி:" என்னும் பத3ங்களும் அவற்றின் ப4ாஷ்யமும், ப்3ரஹ்மவித்3யைகளில் ஒன்ருன பஞ்சாக்3நிவித்3யா நிஷ்ட2னுக ஜிஜ்ஞாஸுவைக் கொள்வார்க்கு ஸ்வரஸமாகமாட்டா என்பது வெளிப்படை. ப்ராஸங்கி2கமான இது நிற்க; வ்யாக்2யானத்தைத் தொடர்வோம்.

இனி, உத்தரார்த்த4த்தாலே, ஜ்ஞாநியானவன் மற்ற இருவரைக் காட்டிலும் மிகச்சிறந்தவன் என்பதற்கு மூன்ருவது ஹேதுவைக் காட்டுகிருன்:— (ஜ்ஞாநிந: அஹம் அத்யர்த்த2ம் ப்ரியோ ஹி) ஸர்வஜ்ஞனுய், ஸர்வஶக்தியான என்னுலேயே அளவிட்டுச் சொல்லமுடியாத அளவுக்கு நான் ஞானிக்கு இனியவனன்ருே. (அத்யர்த்த2ம்) அர்த்த2ஶப்3த3ம் சொல்லத்தக்க பொருளைக் காட்டுவதாகையாலே, 'அத்யர்த்த2ம்' என்று சொல்லமுடியாத பொருளைக் காட்டுகிறது. எல்லாமறிந்த ஸர்வஜ்ஞனுல் சொல்லமுடியாத பொருள் ஒன்று இருந்தால் அது அஸத்தான (இல்லாத) பொருளாகவன்ருே இருக்கவேண்டிவரும். எல்லாம் வல்ல இவனுல் ஒன்று முடியாது எனில், இவன் ஈஶ்வரனல்லாதவனுக வேண்டிவருமே? எனில்: ஞானியின் ப்ரீதிக்கு அளவு இல்லையாகையால், இல்லாத பொருளைச் சொல்லமுடியாது என்றது மிகப் பொருந்தும்; உண்மையில் ஆகாயத் தாமரைபோலே இல்லாத பொருளைச் சொல்லுபவனே மயக்கமுடையவன் என்னப் பெறுவானன்ருே. ஆகையால், "யந்நாஸ்த்யேவ தத3ஜ்ஞதாம் அநுகு3ணும் ஸர்வஜ்ஞதாயா விது3:, வ்யோமாம்பே4ாஜம் இத3ந்தயா கில வித3ந் ப்4ராந்தோऽயமித்யுச்யதே" [ஸ்ரீஸ்தவம்] [இல்லாத பொருளை அறியாமை ஸர்வஜ்ஞத்வத்திற்குப் பொருந்தியதேயாம். 'இது ஆகாயத்தாமரை' என அறிபவன் மயங்கியவனுகவே கூறப்படுவான்] என்கிற ரீதியில் எம்பெருமானிடம் ஞானிக்குள்ள ப்ரீதிக்கு உண்மையில் அளவே இல்லையாகையால், அதை ஸர்வஜ்ஞனை எம்பெருமானுலும் சொல்ல முடியாது என்றது மிகப் பொருந்தும். ப்ரீதிக்கு அளவு இல்லாமையால், அளவைச் சொல்லும் ஶப்3த3மும் இல்லை. ஆகையால் அதைப் பிரயோகி3க்க முடியாதிருப்பது ஸர்வ ஶக்தனுக்கு எந்த அஶக்தியையும் விளைக்காது. ஆகையால், இவனுடைய ஈஶ்வரத்வத்திற்கும் எக்குறையுமில்லை. (ஹி) இது ஶாஸ்த்ரங்களில் ஸுப்ரஸித்3த4ம்.

यथा ज्ञानिनामग्रेसरस्य प्रह्लादस्य * स त्वासक्तमतिः कृष्णे दश्यमानो महोरगैः । न विवेदात्मनो गात्रं तत्स्मृत्याह्लादसंस्थितः ॥ (वि.१.१७.३९) इति। तथैव सोऽपि मम प्रियः॥ १७ ॥

"ஸ த்வாஸக்தமதி: க்ருஷ்ணே த₃ஶ்யமாநோ மஹோரகை₃: ।
ந விவேதா₃த்மநோ கா₃த்ரம் தத்ஸ்ம்ருத்யாஹ்லாத₃
ஸம்ஸ்தி₂த: ॥" [வி-பு 1-17-39]

[ஸம்ஸாரது₃:க்க₂ங்களைப் போக்கடிப்பதாலும், அனைவர்க்கும் ஆநந்த₃ ஹேதுவாகையாலும் க்ருஷ்ணனெனப்படும் பரமாத்மாவிடம் நெஞ்சு செலுத்தியவனாகையாலே, அந்த ப்ரஹ்லாத₃ன் மஹாநாக₃ங்களால் கடிக்கப்பட்டபோதிலும், அப்பரமாத்மாவின் நினைவினால் ஏற்பட்ட ஆநந்த₃த்தில் மூழ்கியவனாய் தன் ஶரீரத்தையே உணரவில்லை.] என்கிறபடியே, பிறந்தது முதல் ஒப்பற்ற ஞானமுடையவனாய், எத்தனையோ ப₄யமுறுத்தல்களாலும், கொலைபாதகச் செயல்களாலும் அழிக்கமுடியாத விஷ்ணுப₄க்தியை உடையவனாயிருந்த ப்ரஹ்லாத₃னாழ்வான், மஹாநாக₃ங்களால் கடிக்கப்பட்டதனால் ஏற்பட்ட துன்பத்தையும், அதைத்தாங்கிய ஶரீரத்தோடு கூடிய ஆத்மாவையுங்கூட மறந்திருந்தது இத்தகைய ப₄க₃வத்ப்ரீதியினாலன்றோ. "காதல் கடலின் மிகப்பெரிதால்" [திருவாய் 7-3-6] "மண்டிணி ஞாலமும் ஏழ்கடலும் நீள்விசும்பும் கழியப் பெரிதால்" [திருவாய் 7-3-8] "அதனிற் பெரிய என் அவா" [திருவாய் 10-10-10] என்று நம்மாழ்வாரும் தத்வத்ரயத்தையும் விஞ்சியிருப்பது தம் காதல் என்று அருளினாரன்றோ. (ஸ ச மம ப்ரிய:) அந்த ஞானியும் அளவிட்டுச் சொல்லமுடியாத அளவுக்கு எனக்கு இனியவன். 'ச'காரத்தாலே ' அத்யர்த்த₂ம் ' என்னும் பத₃ம் இங்கும் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. " வாரிக் கொண்டு உன்னை விழுங்குவன் காணில் என்று ஆர்வுற்ற என்னையொழிய என்னில் முன்னம் பாரித்துத் தான் என்னை முற்றப்பருகினான்" [திருவாய்9-6-10] "என் அவாவறச் சூழ்ந்தாயே" [திருவாய்10-10-10] என்று தம் ப்ரீதியிலும் அவனுடைய ப்ரீதி விஞ்சியது என்று நம்மாழ்வாரும் அருளிச்செய்தாரன்றோ. உண்மை இப்படி இருந்தபோதிலும், மஹோதா₃ரனான ஈஶ்வரன் "ஞானி என்னிடம் மிகுந்த ப்ரீதிவைக்கையாலே, நானும் அவனிடம் ப்ரீதிவைக்கிறேன்" என்று "ஸ ச மம ப்ரிய:" என்னுமிடத்தில் அப்ராத₄ாந்யத்தைக் காட்டும் சகாரத்தாலே, தன் ப்ரீதியில் அத்ருப்திதோற்றச் சொல்லுகிறான் என்று சில ஆசார்யர்கள் நிர்வஹிப்பர்கள் — என்று தாத்பர்ய சந்த்₃ரிகை. 17.

उदारास्सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम्।
आस्थितस्स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम्॥१८॥

18. உதா₃ராஸ் ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம் ।
ஆஸ்தி₂தஸ் ஸஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் க₃திம் ॥

ஏதே ஸர்வே ஏவ—இவர்கள் அனைவருமே, உதா₃ரா:—வண்மை மிக்கவர்கள்; ஜ்ஞாநீ து — ஞானியோவெனில், (மே) ஆத்மா ஏவ — (எனக்கு) த₄ாரகனாகவேயிருப்பவன் (என்று), மே மதம் — என் ஸித்₃த₄ாந்தம். யுக்தாத்மா—என்னோடு சேர விரும்புகின்ற, ஸ:—அவன், மாம் ஏவ—என்னையே, அநுத்தமாம் க₃திம் ஆஸ்தி₂த: ஹி—ஒப்பற்ற ப்ராப்யமாகக் கொண்டுள்ளானன்றோ.

---

18. உற்றிவர்க ளெல்லா முதாரரே ஞானியெனு(ம்)
மற்றிவனென் றன்னுயிரா வாய்ந்தறிவ—னற்றமற
வென்று மவனென்னை யேலும் பரகதியா
நின்றுணர்வு செய்யு(ம்) நிகழ்ந்து.

உற்ற இவர்கள் எல்லாம் உதாரரே — என்னுடைய ப₄க்தர்களான இவர்கள் அனைவரும் வள்ளல்களே; மற்று ஞானி எனும் இவன்—(இவர்களில்) விலக்ஷணனான ஞானி என்கிற நான்காமவன், என்தன் உயிரா வாய்ந்து அறிவன்—எனக்கு த₄ாரகனாகப் பொருந்தியிருப்பவன் என நான் அறுதியிடுவேன்; என்றும்—என்றும், அவன்—அவன், என்னை—என்னை, நற்றம் அற ஏலும் பரகதியா—வேறு நற்கதியில்லாதபடி பொருந்திய ஒப்பற்ற ப்ராப்யமாக, நிகழ்ந்து—கொண்டு, நின்று உணர்வு செய்யும்—என்னை நிலையாக விரும்புவன்.

---

18. முன் ஶ்லோகத்தில் கூறப்பட்ட ஞானியின் சிறப்பு மற்றொரு வகையில் உறுதிப்படுத்தப் படுகிறது இந்த ஶ்லோகத்தில். (ஏதே ஸர்வ ஏவ உதா₃ரா:) ஐஶ்வர்யார்த்தி₂, கைவல்யார்த்தி₂, என்னை விரும்புமவன் என்னும் இவர்கள் அனைவருமே வண்மைமிக்கவர்கள். "உதா₃ரா:" எனும் ஶப்₃த₃த்திற்கு 'உயர்ந்தவர்கள்' என்று

॥ भा ॥ सर्वे एवैते मामेवोपासत इत्युदाराः—वदान्याः। ये मत्तो यत्किञ्चिदपि गृह्णन्ति, ते हि मम सर्वस्वदायिनः। ज्ञानी

பொருள் கொள்வதில் சிறப்பில்லையாகையால், உலக வழக்கையொட்டி "வண்மை மிக்கவர்கள்" என்றே பொருள் கொள்ளவேண்டும். இவர்கள் எம்பெருமானிடம் யாசித்துத் தம் விருப்பத்தைப் பெரு நிற்க, அவர்கள் விருப்பத்தைக் கொடுக்கவிருக்கும் பரமோதா₃ரனை எம்பெருமான் இவர்களை 'உதா₃ரர்கள்' (வண்மை மிக்கவர்கள்) என்பது எப்படிப் பொருந்தும்? எனில்: "வேறு எவரிடமாவது செல்லாமல், இவர்கள் என்னிடமே ஏதோவொன்றை யாசித்துப் பெறுவதனுல்தானே நான் பரமோதா₃ரன் (மிகவும் வண்மைமிக்கவன்) என்று பெயர் பெற முடிகிறது. எனக்கு எல்லாச் செல்வமுமான இப்பெரும் புகழை அளிக்கும் இவர்களே உண்மையில் உதா₃ரர்கள்" என்று எம்பெருமான் திருவுள்ளமாகையாலே பொருந்தும். ஐஶ்வர்ய கைவல்யங்களைப் பெற்று அகலுமவர்களை 'உதா₃ரர்கள்' என்ன லாமோ? எனில், அதை இவனிடம் இவர்கள் பெறுவதும் இவ னுடைய ஸகல ப₂லப்ரதா₃த்வமாகிற பரமௌதா₃ர்யத்தை வெளிப் படுத்துகிறதாகையாலே சொல்லலாம். ஞானியை 'அத்யர்த்த₂ ப்ரியன்' என்று சொல்லியதன் மூலம், மற்ற இருவரும் தனக்கு ஓரளவுக்கு ப்ரியர்களே என்று சென்ற ஶ்லோகத்தில் உணர்த்தி யதையே, இந்த ஶ்லோகத்தில் அனைவரையும் உதா₃ரர்கள் என்று கூறுவதன் மூலம் தெளிவுபடுத்துகிறுன். அனைவருமே உதா₃ரர்களா ஞல், இவர்களிடையே வாசியில்லையோ? எனில், ஞானிக்கும் மற்ற வர்க்கும் நெடுவாசி உண்டு என்கிறுன் இரண்டாம் பாதத்தாலே,—(ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்) ஜ்ஞாநியோவெனில் எனக்கே ஆத்மா (தா₄ரகன்) என்பது என் ஸித்₃தா₄ந்தம். "மத:" என்று பாட₂ம் கொண்டு, "ஜ்ஞாநீ மே ஆத்மைவ மத:" என்று அந்வ யித்துச் சிலர் பொருள் கொள்ளுகிறுர்கள். ஆனுல், அப்பாட₂ம் பெரும்பான்மையினரால் ஆத₃ரிக்கப்படாத அப்ரஸித்₃த₄ பாட₂ மாகையாலே, "மதம்" என்றே பாட₂ம் கொண்டு, "இதி" ஶப்₃த₃த்தை அத்₄யாஹாரம் செய்துகொண்டு (வருவித்துக் கொண்டு) "ஜ்ஞாநீ து (மே) ஆத்மா ஏவ இதி மே மதம்" [ஞானியோவெனில், எனக்கே ஆத்மா என்பது என் முடிவு] என்று அந்வயித்துப் பொருள் கொள்ளவேண்டும். 'ஆத்மா' என்பதன் மூலம் தனக்கும் ஞானிக்கும் ஸ்வரூபைக்யம் சொல்லுவதாகக் கொள்ளுவது ஸ்வரூப பே₄த₃த்தைச் சொல்லும் பல ப்ரமாணங்களோடு முரண்படும். "ஸ ச

त्वात्मैव मे मतम्—तदायत्तधारणोऽहमिति मन्ये। कस्मादेवम्? यस्मादयं

மம ப்ரிய:'' [ஞானி எனக்கு மிகவும் இனியவன்] என்று சற்று முன் சொன்னதும் பொருந்தாமற் போய்விடும். மேலும், ஞானிக்கும், மற்றவர்களுக்கும் வாசி சொல்லும் இவ்விடத்தில் ஸ்வரூபைக்யம் சொன்னால், மற்றவர்களுக்கும் பரமாத்மாவுக்கும் ஸ்வரூபைக்யமில்லை என்று தேறும். இது ஸ்வரூபைக்யம் சொல்லுபவர்களுக்கே அநிஷ்டம். ஆகையால், ஆதா₄ரனாயிருக்கையாகிற ஆத்ம லக்ஷணமே இங்கு கருதப்படுகிறது என்று கொள்வதே உசிதமாகையால், ''ஶரீரத்தை த₄ரித்து நிற்கும் ஆத்மாவைப்போல், ஞானியானவன் என்னை த₄ரித்து நிற்கிறானாகையால் அவன் எனக்கே ஆத்மா'' என்றே பொருள் கொள்ளவேண்டும். அனைவர்க்கும் ஆத்மாவாக வேதா₃ந்தங்கள் நாராயணனாகிற உன்னைச் சொல்லியிருக்க, ஞானியை உனக்கு ஆத்மாவாக நீ சொல்லுவது எப்படிப் பொருந்தும்? எனில் (மே மதம்) (இதுவே) என் முடிவு; இது வேதா₃ந்த ஸித்₃தா₄ந்தமா யிருக்கட்டும், அல்லது இல்லாமற் போகட்டும்; இதுவே என் ஸித்₃தா₄ந்தம். ஞானியில்லாவிடில் நான் த₄ரிக்கமாட்டேன் என்பது எனது அசைக்க முடியாத முடிவு என்கிறான். ''என் நெஞ்சினால் நோக்கிக் காணீர்'' [திருவாய் 5-5-3] என்ற ஆழ்வாரைப்போலே சொல்லுகிறான். (ஆத்மைவ) ''ஞானிக்கும் நாராயணனே ஆத்மா; நாராயணனுக்கு ஞானி ஆத்மாவல்ல'' என்று எந்த வேதா₃ந்தம் சொன்னாலும், வேறு யார் சொன்னாலும், ஞானியே சொன்னாலும் நான் அங்கீ₃கரிக்கமாட்டேன்'' என்னும் கருத்தை ஏவகாரத்தாலே காட்டுகிறான். ''அத்யர்த்த₂ப்ரியன்'' என்றதை விவரிப்பதற்காக, ஞானியிடம் ஆத்மத்வத்தை ஏவகாரத்தையிட்டு அழுத்தமாக ஏறிடு கிறான் என்றதாயிற்று. இப்படி ஞானியைத் தன் ஆத்மாவாக அபி₄மானிக்கக் காரணம் என்ன என்பதை ஶ்லோகத்தின் பிற்பாதி யாலே காட்டுகிறான். பிற்பாதியிலுள்ள 'ஹி' ஶப்₃த₃ம்—இரண்டாம் பாத₃த்தில் சொல்லப்பட்ட அர்த்த₂த்திற்குக் காரணத்தை உத்தரார்த்த₄ம் சொல்லுகிறது என்று காட்டுகிறது. (யுக்தாத்மா ஸ:) என்னோடு கூடியிருக்கையை விரும்பும் அவன். யுக்த ஶப்₃த₃த்தில் ''க்த'' என்னும் விகுதி ''ஆஶம்ஸாயாம் க்த:'' என்னும் இலக்கண வழக்கின்படி வந்ததாகையாலே, '(பரமாத்மாவோடு) யோக₃த்தையே (சேர்ந்திருப்பதையே) விரும்பும் ஆத்மாவையுடையவன்' என்று பொருள்படுகிறது யுக்தாத்ம ஶப்₃த₃ம்: ஆத்ம ஶப்₃த₃ம் ஸ்வரூபத்தைக் குறிக்கிறது. எம்பெருமானை அநுஸந்தி₄த்திருக்காவிடில் இவனுக்கு ஸ்வரூபஸத்தை இல்லாமற்போய்விடும் என்றபடி.

मया विनाऽऽत्मधारणासंभावनया मामेवानुत्तमं प्राप्यमास्थितः; अतस्तेन विना ममाप्यात्मधारणं न संभवति। ततो ममात्मा हि सः॥ १८॥

"யந்முஹூர்த்தம் க்ஷணம் வாபி வாஸுதே₃வோ ந சிந்த்யதே।
ஸா ஹாநிஸ் தந்மஹச்சி₂த்₃ரம் ஸா ப்₄ராந்தி: ஸா ச விக்ரியா ||"

[யாதொரு முஹூர்த்தமோ, க்ஷணமோ வாஸுதே₃வசிந்தனம் இல்லாமல் கழிகிறதோ, அதுவே ஸ்வரூபஹாநியாகும்; அதுவே பெருங்குறையுமாகும்; அதுவே மயக்கமாகும்; அதுவே விகாரமாகும்.] என்கிறபடியே, க்ஷணநேரமானாலும் என்னை அநுஸந்தி₄க்காவிடில், உண்டியே உடையே உகந்தோடும் மற்றுள்ளாரைப் போலே வேறொன்றை அநுஸந்தி₄த்துப் போதுபோக்கவல்ல இயல்வுடையவனல்லாமையால், அழிந்து விடுவான் என்று கருத்து. (மாம் ஏவ அநுத்தமாம் க₃திம் ஆஸ்தி₂த:) இப்படி என்னையொழிய த₄ரிக்கமாட்டாதவனாகையாலே, என்னையே ஒப்பற்ற ப்ராப்யமாகக் கொண்டிருப்பவன் இவன். அவன் இப்படியிருக்கையாலே, நானும் அவனையொழிய த₄ரிக்கமாட்டேன். இம்முறையில் அவன் எனக்கு ஆத்மாவேயாகிறான்; என் நெஞ்சினால் நோக்கிக் காண்பார்க்கு இது புரியும் என்று கருத்து. (மாம் ஏவ) ப₂லனை அளிக்கும் உபாயமாகிற என்னையே பரமப்ராப்யமாகவும் கொண்டவன் என்கையால், ஐஶ்வர்ய கைவல்யார்த்தி₂களைப்போலே என்னையொழிய மற்றொன்றைக் க்ஷணநேரமும் ப்ராப்யமாகக் கொள்ள இயலாதவன் இவன் என்று ஏவகாரத்தாலே காட்டுகிறான். (க₃திம்) "க₃ம்யத இதி க₃தி:" என்னும் வ்யுத்பத்தியாலே க₃திஶப்₃த₃ம் அடையப்படும் ப்ராப்யத்தைக் காட்டுகிறது. "ஶரணம் க₃திர் நாராயண:" [உபாயமாகவும், ப்ராப்யமாகவுமாகிறான் நாராயணன்] என்று இவ்வர்த்த₂த்தை உபநிஷத்தும் ஓதிற்று. "ஸ ஸ்வேநைவ ப₂லப்ரத₃: ப₂லமபி ஸ்வேநைவ நாராயண:" [அநர்க்₄ராக₄வம்] [ப₂லனையளிக்கும் உபாயமான நாராயணனே ப₂லனாகவும் ஆகிறான்] என்று கவிகளும் இசையும்படி ஸுப்ரஸித்₃த₄மான அர்த்த₂மன்றோ இது. (அநுத்தமாம் க₃திம்) தன்னையிட்டு ப்ராப்யமாகும் பரமபத₃ம், நித்யஸூரிகள், ப₄ாக₃வதர்கள் முதலான மற்ற ப்ராப்யங்களுமிருக்கையாலே 'ஒப்பற்ற ப்ராப்யம்' என்று விஶேஷிக்கிறான். ஆக, "ஐஶ்வர்ய கைவல்யங்களை விரும்புமவர்கள் என்னை ப₂லப்ரதோ₃பாயமாகக் கொண்டு எனக்குச் சிறப்பையளிக்கையாலே எனக்கு இனியவர்கள்; ஞானியோவெனில், ப₂லப்ரத₃னான என்னையே பரம ப்ராப்யமாகவும்

बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते।
वासुदेवस्सर्वमिति स महात्मा सुदुर्लभः॥१९॥

19. ப₃ஹூ₂நாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்₃யதே।
வாஸுதே₃வஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுது₃ர்லப₄: ||

ப₃ஹூ₂நாம் ஜந்மநாம் அந்தே—பல புண்ணியப் பிறப்புகள் கழிந்தபின், ஜ்ஞாநவாந்—அறிவு முதிரப்பெற்ற ஞானியானவன், வாஸுதே₃வ: ஸர்வம் இதி—'வாஸுதே₃வனே எனக்குப் பரமப்ராப்யமாகவும், ப்ராபகனுகவும், த₄ாரகம், போஷகம், பே₄ாக்₃யம் முதலான எல்லாமாகவும் இருக்கிருன்' என்று எண்ணி, மாம் ப்ரபத்₃யதே—என்னை ஶரணமடைகிருன். ஸ:—அவன், மஹாத்மா—விஶாலமான நெஞ்சையுடையவனுவான்; ஸுது₃ர்லப₄: — (இவ்வுலகில் எனக்கும்) மிகவும் கிடைத்தற்கரியவனுவான்.

---

19. புண்ணியமார் பல்பிறவி பூண்டியன்றே னந்தத்து
நண்ணியுணர் வென்னை நயந்தடையு—மெண்ணியு
எல்லாமும் வாசுதேவ னேதா னெனவுணர்ந்த [யிர்க்(கு)
நல்லான் மிகவரிய னுட்டு.

கொள்கிருனுகையால் என் ஸ்வரூப ஸத்தைக்கே காரணம் என்னலாம்படி எனக்கு மிகவும் இனியவனுகிருன்'' என்று சொல்லிற்றுயிற்று.

"ந தஸ்யாந்ய: ப்ரியதர: ப்ரதிபு₃த்₃தை₄ர் மஹாத்மபி₄:।
வித்₃யதே த்ரிஷு லோகேஷு ததோ஽ஸ்ம்யேகாந்திதாம் க₃த:।
நாரதை₃தத்₃தி₄ தே ஸத்யம் வசநம் ஸமுதா₃ஹ்ருதம்।
நாஸ்ய ப₄க்தை: ப்ரியதரோ லோகே கஶ்சந வித்₃யதே ||"
[பா₄ரதம்-மோக்ஷ 353-65, 354-2]

[''மஹாத்மாக்களான ஞானிகளைக் காட்டிலும் பரமபுருஷனுக்கு இனியவன் ஒருவன் மூவுலகிலும் இல்லை. ஆகையால் நான் ஏகாந்தியானேன்.'' ''நாரத₃ரே! உம்முடைய இவ்வசநம் உண்மையானதேயாகும். இவ்வுலகில் பரமாத்மாவுக்கு ப₄க்தர்களைக் காட்டிலும் இனியவன் எவனுமே கிடையாது.''] என்று இவ்வர்த்தமும் மோக்ஷ த₄ர்மத்திலும் விளக்கப்பட்டது. 18.

புண்ணியம் ஆர் பல் பிறவி பூண்டு இயன்றேன்—புண்ணியம் நிறைந்த பல பிறவிகளை எடுத்து உயர்ந்தவனே, அந்தத்து—கடைசியில், உணர்வு நண்ணி—(மிகச் சிறந்த) அறிவை அடைந்து, 'உயிர்க்கு—ஜீவாத்மாக்களுக்கு, எல்லாமும் வாசுதேவனேதான் என எண்ணி — வாஸுதே$_3$வனே பரமப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும், த$_4$ாரகம், போஷகம், போ$_4$க்$_3$யம் முதலான எல்லாமாகவும் இருக்கிறான்' என்று எண்ணி, என்னை நயந்து அடையும்—என்னையே விரும்பி அடைவான்; நாட்டு—இவ்வுலகில், உணர்ந்த நல்லான்—இப்படி அறிவுபெற்ற மஹாத்மா, மிக அரியன்—(எனக்கும்) மிகவும் கிடைத்தற்கரியவனாவான்.

---

19. ''மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு'' என்று தொடங்கும் மூன்றும் ஶ்லோகத்தில், ''மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு'' என்று குறிக்கப்பட்ட ஶாஸ்த்ராதி$_4$கார யோக்$_3$யர்கள் ஐஶ்வர்யார்த்தி$_2$களென்றும், ''கஶ்சித் யததி ஸித்$_3$த$_4$யே'' என்று குறிக்கப்பட்டவர்களான மோக்ஷார்த்த$_2$மாக முயல்பவர்கள் கைவல்யார்த்தி$_2$கள் என்றும், ''யததாமபி ஸித்$_3$த$_4$ாநாம் கஶ்சிந் மாம் வேத்தி'' என்று மோக்ஷார்த்த$_2$மாக முயல்பவர்களிலும் தன்னையே ப்ராப்யமாக அறிபவர்களாகக் குறிக்கப்பட்டவர்கள் ஜ்ஞாநிகள் என்றும் சென்ற மூன்று ஶ்லோகங்களிலும் காட்டினான். இனி, ''மாம் வேத்தி தத்வத:'' என்று குறிக்கப்பட்டவனாய், ஜ்ஞாநிகளில் தலைசிறந்தவனான அதி$_4$காரியை இந்த ஶ்லோகத்தில் காட்டி, அவனது பெருமையைப் பேசுகிறான். (ப$_3$ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்) ''மநுஷ்யாணாம்'' என்று மூன்றும் ஶ்லோகத்தில் குறிக்கப்பட்ட ஶாஸ்த்ராதி$_4$காரி பல புண்யஜந்மங்கள் கழிந்தபின்பு, புண்யங்களின் ப$_2$லனாகப் பாபங்கள் கழியப்பெற்று, ''மாம் வேத்தி தத்வத:'' என்று சொல்லப்பட்ட ஞானத்தின் உச்சநிலையை அடைகிறான். சென்ற மூன்று ஶ்லோகங்களிலும் ''ஜ்ஞாநீ'' என்று குறிக்கப்பட்ட ஞானிகளிலும் ஆயிரத்தில் ஒருவனே ப$_4$க்தியோக$_3$த்தைப் பலநாள் அநுஷ்டி$_2$ந்தபின்பு இத்தகைய ஞானமுதிர்ச்சியை அடைவான் என்பதைக் காட்டுவதற்காக ''ஜ்ஞாநவாந்'' என்னும் வேறு பத$_3$த்தை இடுகிறான். இவ்விடத்தில் ஓர் கேள்வி எழுகிறது. அதாவது:—''மாதா பிதா'' என்கிறபடியே சேதனர் அனைவர்க்கும் இயற்கையிலேயே எல்லா உறவுமாயிருக்கும் எம்பெருமான் அவர்களுக்கு நிர்ஹேதுகமாக மோக்ஷத்தை

அருளவேண்டியது நியாயமாயிருக்க, பல ஜன்மங்கள் இப்படிப் பாடுபட வைப்பது நியாயமா? என்பதே அது. இதற்கு ஸமாத₄ாநம் பின்வருமாறு:— எம்பெருமானைப்போலே ஜீவர்கள் அநாதி₃யாயிருப்பவர்கள். அநாதி₃காலமாக அவர்கள் செய்யும் புண்யபாபகர்மங்களும் அநந்தமாயுள்ளன. இக்கர்மங்களின் ப₂லனாக அநாதி₃காலமாக அவர்கள் முக்குண ப்ரக்ருதியின் விகாரமான ஶரீரத்தில் கட்டுண்டு எம்பெருமானை அறியாமல் மயங்கியுள்ளனர். எம்பெருமானும், '' க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து '' [ப்₃ரஹ்ம ஸூத்ரம் 2-3-41] என்கிற ப்₃ரஹ்மஸூத்ரத்தின்படியே தனக்கு வைஷம்யநைர்க்₄ருண்யங்கள் (பக்ஷபாதமும், கருணையின்மையும்) ஏற்படாமைக்காக ஒவ்வொரு காரியத்தைத் தொடங்கும்போதும் ப்ரத₂மப்ரவ்ருத்தியில் அவர்களுக்குத் தம் இஷ்டப்படி செயல்புரியும் திறமையை அளித்து, அதற்கு அனுகு₃ணமாக அவர்கள் செய்யும் புண்யபாபங்களுக்குப் ப₂லனை அளித்து வருகிறான். இவர்களுக்கு ஶாஸ்த்ராதி₄காரயோக்₃யமான ஜந்மம் ஏற்படும்போது, ஶாஸ்த்ரத்தைக் காட்டி, அதில் இவர்கள் விரும்பும் பற்பல ப்ராக்ருதப₂லன்களுக்குப் பற்பல ஸாத₄னங்களை விதி₄க்கிறான். இப்படி ஒவ்வொரு ஸாத₄னத்தை விதி₄க்கும் பரமகாருணிகனான ஸர்வேஶ்வரனுக்கு அவரவர்கள் அந்தந்த ஸாத₄னங்களால் அவ்வப்ப₂லன்களைப் பெற்றுப்போகவேண்டும் என்பது மாத்திரம் திருவுள்ளமாயிருக்க முடியாது. அவனவன் விரும்பும் ப₂லனுக்கு ஸாத₄னமாக ஒன்றை விதி₄த்து, அவனுடைய ப்ரதிபத்தியை (எண்ணத்தை) உயர்த்தவேண்டும் என்பதே பரமதாத்பர்யமாயிருக்க முடியும். இந்த ரீதியில் எதிரியின் அழிவாகிற க்ரூரப₂லனை விரும்புகிறவனான—வேத₃த்தில் நம்பிக்கையற்ற நாஸ்திகனுக்கு, அந்த நாஸ்திகப்ரதிபத்தி நீங்கி வேத₃த்தில் விஶ்வாஸம் (நம்பிக்கை) ஏற்படுவதற்காக ஶ்யேநயாக₃த்தை விதி₄க்கிறான். வேத₃த்தில் நம்பிக்கையுண்டான பின்பும், தே₃ஹாத்மாபி₄மானியாயிருப்பவனுக்கு, இந்த தே₃ஹம் அழிந்த பின்பும் நிலைநிற்கும் ஆத்மா ஒன்று உண்டு என்னும் ப்ரதிபத்தி (எண்ணம்) ஏற்படுவதற்காக தே₃ஹம் கழிந்த பின் ஸ்வர்க்க₃த்தை அடைவதற்கு ஸாத₄னமான ஜ்யோதிஷ்டோமம் முதலானவற்றை விதி₄க்கிறான். இவ்வண்ணமாக ஸ்வார்த்த₂தையின் (சுயநலமனப்பான்மையின்) மிகுதியாலே அவனவன் விரும்பும் ப்ராக்ருத ப₂லன்களாகிற ஒவ்வோர் ஐஶ்வர்யங்களுக்கு ஸாத₄னமாக, கடுமையான வ்ரதாநுஷ்ட₂ானங்களைக் கொண்ட ஒவ்வொரு புண்ய கர்மத்தை விதி₄த்து, இவனுடைய ப்ரதிபத்தியைப் படிப்படியாக முன்னேற்றுகிறான். இதனால்—அல்பமாய், அஸ்தி₂ரமான ஐஶ்வர்யங்களை அநுப₄விக்கவேணும் என்னும் ப்ரதிபத்தி

நீங்கப்பெற்று, அநந்தஸ்திர பலமான மோக்ஷத்தைப் பெற்றுத் தான் இன்புறவேண்டும் என்னும் ப்ரதிபத்தி (எண்ணம்) இவனுக்கு ஏற்படுகிறது. அப்போதும் புண்ணியக் குறைவாலே ப₄க₃வானை அடையவேண்டும் என்னும் எண்ணம் ஏற்படாமல், ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄த்தினின்றும் நீங்கிய தன் ஆத்மாவைத் தான் கண்டு அநுப₄விப்பதாகிற கைவல்ய மோக்ஷத்தில் விருப்பம் உண்டாகிறது. அதற்கு ஸாத₄நமாகக் கர்ம ஜ்ஞாந யோக₃ங்களை எம்பெருமான் விதி₄க்கிருன். அப்படி விதி₄க்கும் போது—ப₄க₃வச் சேஷத்வாநுஸந்த₄ானத்தை விதி₄ப்பதன் மூலமும், கர்ம ஜ்ஞாந யோக₃ங்கள் தொடங்குவதற்கும் வளர்வதற்கும் தடையாயிருக்கும் பாபங்கள் போவதற்காகப் பரமபுருஷனை தன்னை ஶரணமடையவேண்டும் என்று விதி₄ப்பதன் மூலமும், ஜ்ஞாநயோக₃ம் நிறைவடைவதற்கு உறுப்பாகத் தனது திருமேனியைச் சிந்தனம்செய்யவேண்டும் என்று விதி₄ப்பதன் மூலமும் ''ஜீவாத்மாவே போ₄க்₃யம்'' என்னும் இவனுடைய ப்ரதிபத்தியை மாற்றி ''பரமாத்மாவே போ₄க்₃யம்'' என்னும் ப்ரதிபத்தியை ஏற்படுத்தவேண்டும் என்றே திருவுள்ளம் பற்றுகிருன் எம்பெருமான். இப்படி ப்ராரப்₃த₄கர்மம் முடியும் வரையில் எம்பெருமானை ஶேஷியாக அநுஸந்தி₄த்து, ஶரணடைந்து, சிந்தித்த பின்பும் இவனது ப்ரதிபத்தி மாருவிடில், தனக்கு வைஷம்ய நைர்க்₄ருண்யம் ஏற்படாமைக்காக இவனுக்குக் கைவல்ய மோக்ஷத்தையே கொடுத்துவிடுகிருன். இவர்களில் ஆயிரத்தில் ஒருவனுக்கு இப்ரதிபத்தி மாறி, எம்பெருமானைப் பெற்றுத் தான் ஆனந்தி₃க்க வேண்டும் என்னும் ப்ரதிபத்தி உண்டானல், அதற்கு ஸாத₄னமாக ப₄க்தியோக₃த்தை விதி₄க்கிருன். அப்படி விதி₄க்கும்போதும்—ஶேஷத்வாநுஸந்த₄ானம், த்ரிவித₄பரித்யாக₃ம் முதலானவற்றை விதி₄ப்பதன் மூலமும், ப₄க்தியோக₃ம் தொடங்குவதற்கும் வளர்வதற்கும் தடையாயிருக்கும் பாபங்கள் போவதற்காகத் தன்னை ஶரணமடையவேண்டும் என்று விதி₄ப்பதன் மூலமும் இவனுடைய ஸ்வார்த்த₂தா ப்ரதிபத்தியை நீக்கவும், மோக்ஷத்திலும் எம்பெருமானுடைய ஆனந்த₃மே தனக்கு உத்₃தே₃ஶ்யமென்றும், தன் ஆனந்த₃த்திற்காகத் தான் முயன்று வந்ததே அநாதி₃காலமாக எம்பெருமானை அடைவதற்குத் தடையாயிருந்ததென்றும் உணர்த்தவும் விரும்புகிருன் எம்பெருமான். இவ்வண்ணமாக ப₄க்தியோக₃நிஷ்ட₂ரான ஞானிகளில் ஆயிரத்தில் ஒருவனுக்கு ஸ்வார்த்த₂தா ப்ரதிபத்தி அடியோடு கழியப்பெற்று மோக்ஷார்த்த₂மான ஸ்வப்ரவ்ருத்தி ஸாமாந்யமும் நீங்கப்பெற்ருல், அவனுக்கு நிர்ஹேதுகமாகத் தன்னை அருளுகிருனுகையாலே எக்குறையுமில்லை—என்று கண்டு கொள்வது. இவ்வளவையும் திருவுள்ளம் பற்றியே (ப₃ஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்) என்கிருன்.

॥ भा ॥ नाल्पसंख्यासङ्ख्यातानां पुण्यजन्मनां फलमिदम्, यन्मच्छेषतैकरसात्मयाथात्म्यज्ञानपूर्वकं मत्प्रपदनम्; अपि तु बहूनां

(ப₃ஹூநாம் ஜந்மநாம் அந்தே) பல புண்யஜந்மங்கள் கழிந்தபின் கடைசியான ஜந்மத்தில். "ப₃ஹூநாம் ஜந்மநாம் அந்தே" என்பதற்கு "பல ஜந்மங்கள் கழிந்தபின்" என்று மாத்திரம் பொருள் கொள்வதில் பயனில்லை. அப்படியாகில் ப₃த்₃த₄ஜீவர்கள் அனைவர்க்கும் பல ஜந்மங்கள் கழிந்திருக்கையால், எல்லாருமே தன்னடையே இந்த ஜ்ஞாநமுடையவராகவேண்டிவரும். ஆகையால், " அறிவு பக்குவமடைவதற்குறுப்பான பல புண்ய ஜந்மங்கள் கழிந்தபின்" என்றே பொருள்கொள்ளவேண்டும். "அந்தே" என்பதற்கு "இப்படிப்பட்ட புண்ய ஜந்மங்கள் கழிந்தபின், ஒரு ஜந்மம் முடிவுறும் தருவாயில்" என்று பொருள் கொண்டால், அப்படிப்பட்ட மரண ஸமயத்தில் தான் இப்படிப்பட்ட ஜ்ஞாநமுண்டாகும் என்பதற்கு நியாமகம் இல்லையாகையால், அப்பொருள் பொருந்தமாட்டாது. ஆகையால் "கடைசியான ஜந்மத்தில்" என்றே பொருள் கொள்ளவேண்டும். (அந்தே ஜ்ஞாநவாந்) முன் ஶ்லோகத்தின் கடைசியில் ப்ரக்ருதமான "ஜ்ஞாநீ" என்னும் பத₃த்தைச் சேர்த்துக்கொண்டு, "ஜ்ஞாநியானவன் பல புண்ய ஜந்மங்களிடையே கடைசியான ஜந்மத்தில் ஜ்ஞாநவானாகி" என்று பொருள் கொள்வது பொருத்தம். இங்குள்ள "ஜ்ஞாநவாந்" என்னும் பத₃த்தையே " ஜ்ஞாநீ " என்னும் பத₃த்தின் பர்யாயமாகக் கொள்ளலாகாதோ? எனில்: முதல் ஜந்மத்திலிருந்தே ஜ்ஞாநீ எனத்தக்க உபாஸகன் கடைசி ஜந்மத்திலேயே 'ஜ்ஞானவான்' எனத்தக்கவனாகிருனாகையால் பர்யாயமாக முடியாது; " அந்தே " என்னும் பத₃ஸ்வாரஸ்யத்தையொட்டி கடைசியான ஜந்மத்தில் ஜ்ஞாநிக்கு உண்டாகும் ஒரு பரிபக்வமான (முற்றின) ஜ்ஞாநத்தை உடையவனே இங்கு ஜ்ஞானவான் என்று குறிக்கப்படுவதாகக் கொள்வதே பொருந்தும். " அந்தே " என்று ப்ராரப்₃த₄கர்மம் முடியும் கடைசியான ஜந்மத்தில் என்று பொருள் கொண்டால், அந்த ஜந்மத்தில்தான் இவனுக்கு இத்தகைய ஜ்ஞானம் உண்டாகும் என்பதற்கு நியாமகமில்லாமையால், அது பொருந்தாது. ஆகையால், இந்த ஜ்ஞாநம் உண்டாகிவிட்டால், ப்ராரப்₃த₄ கர்மம் தொடங்கிய ஜந்மமாகவோ, நடுவில் ஒரு ஜந்மமாகவோ இருந்தாலும், அதற்குப் பிறகு இவனுக்கு ஜந்மம் கிடையாது; அந்த ஜந்மத்தில், மரணமானால் வைகுந்தம் அடைந்தே தீருவான் என்று உணர்த்தப்படுகிறது.

இதிலிருந்து, இத்தகைய ஜ்ஞாநம் உண்டாவதையே எம்பெருமான் எதிர்பார்த்திருந்தான் என்றும், இத்தகைய ஜ்ஞாநம் ஏற்படாமையாலேயே ஐஶ்வர்யார்த்தி₂ தொடங்கி, உபாஸகனீருக அனைவர்க்கும் பல புண்ய ஜந்மங்களை அளித்துவந்தான் என்றும் விளங்குகிறது. "ஜ்ஞாநீ ஜ்ஞாநவாந்" என்று கர்த்ரு பத₃த்தையும் சேர்த்துப் படிக்காததிலிருந்து, ஜ்ஞாநியாகிற உபாஸகனுக்குத்தான் இந்த ஜ்ஞாநம் உண்டாகவேண்டும் என்னும் நியமமில்லை, பல புண்ய ஜந்மங்கள் கழிந்தபின் எந்த ஸம்ஸாரி ஜீவனும் உபாஸகனுகாமலே ஜ்ஞாநியின் பரிபக்வ நிலையான இந்த ஜ்ஞாநத்தை அடையலாம் என்று உணர்த்தப்படுகிறது. (ஜ்ஞாநீ ஜ்ஞாநவாந்) "ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபோ ஜ்ஞாந ஸமாதி₄பி₄: | நராணும் க்ஷீணபாபாநாம் க்ருஷ்ணே ப₄க்தி: ப்ரஜாயதே ||" [இதிஹாஸ ஸமுச்சயம்] [கர்ம ஜ்ஞாந ப₄க்தியோக₃ங்களைப் பல்லாயிரம் ஜந்மங்களில் அநுஷ்டி₂த்த பின்புதான் கண்ணனிடம் (மோக்ஷஸாத₄னமான) ப₄க்தி உண்டாகிறது] என்று சொல்லப்பட்டவன் ஜ்ஞாநி என்றும், "யே ஜந்மகோடி ஸம்ஸித்₃த₄ா: தேஷாம் அந்தேऽத்ர ஸம்ஸ்தி₂தி:" [பௌஷ்கரஸம்ஹிதை] [எவர்கள் கோடிக்கணக்கான புண்ய ஜந்மங்களில் ஜ்ஞாந ஸித்₃தி₄பெற்றவர்களோ அவர்களுக்கே கடைசியான ஜந்மத்தில் 'எம்பெருமானே எல்லாம்' என்னும், பரிபக்வநிலை உண்டாகும்.] என்று சொல்லப்பட்டவன் ஜ்ஞாநவான் என்றும் உணரத்தக்கது. (ஜ்ஞாநவாந்) "வாஸுதே₃வ: ஸர்வமிதி ப்ரபத்₃யதே" [வாஸுதே₃வனே எல்லாம் என்று அடைகிருன்] என்று இவன் செய்யும் கார்யம் குறிக்கப்படுகையால், அதற்குக் காரணமான ஜ்ஞாநமும் "வாஸுதே₃வனே எல்லாம்" என்னும் ஜ்ஞாநமாகவே இருக்கவேண்டும் என விளங்குகிறது. இந்த ஜ்ஞாநத்திற்குக் காரணம், இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் கூறப்பட்ட பரமபுருஷ யாத₂ாத்ம்ய ஜ்ஞாநமே என்றும் விளங்குகிறது. (வாஸுதே₃வ: ஸர்வமிதி ஜ்ஞாநவாந்) "ஸர்வம் வாக்யம் ஸாவத₄ாரணம்" [எல்லா வாக்யங்களும் ஏகாரத்தோடு கூடியவை] என்னும் நியாயத்தையொட்டி வாஸுதே₃வனே எனக்கு எல்லாமாயிருப்பவன் என்னும் அறிவையுடையவன் என்று பொருள்படுகிறது. அதாவது:— வாஸுதே₃வனே பரமப்ராப்யமாகவும், ப்ராபகனுகவும், மற்றும் சேதநர் விரும்பும் த₄ாரகம், போஷகம், போ₄க்₃யம் முதலான எல்லாப் பொருள்களாகவும் இருப்பவன் என்னும் அறிவையுடையவன். இவ்வறிவு இவனுக்குக் கடைசி ஜந்மத்திலேயே ஏற்படுகிறது என்று கூறுவதிலிருந்து, முந்திய ஜந்மங்களில் பூர்ணமாகக் கிடையாது என்று விளங்குகிறது. "த்வரித ஸ்தி₂ல சித்தா:"

जन्मनां-पुण्यजन्मनां अन्ते—अवसाने, वासुदेवशेषतैकरसोऽहं तदायत्त-

---

[ர-ஸ்த 2-86] என்கிறபடியே அதிவிலக்ஷணமான ப்3ரஹ்மாநந்த3த்தை அடையவேண்டும் என்னும் த்வரையாலே அறிவுகலங்கி, மோக்ஷத்தில் தான் ஆநந்த3மடையவேணும் என்று எண்ணி, அதற்கு உறுப்பாக ப4க்தியோக3த்தை ஸாத4னமாக அநுஷ்டி2க்கும்போது, இவனுக்கு எம்பெருமானும் ப்ராப்யனுய், அவனை அநுப4விப்பதால் தனக்கு ஏற்படும் ஆநந்த3மும் ப்ராப்யமாகிறது. எம்பெருமானும் த4ாரகபோஷகபே4ாக்3யங்களாகிருன்; அவனை அநுப4வித்துத் தான் பெறும் ஆனந்த3மும் த4ாரக போஷக பே4ாக்3யங்களாகின்றது. யோக3த்திலிருந்து எழுந்தவுடன் காய், கனி முதலானவையும் த4ாரகபோஷகபே4ாக்3யங்களாகின்றன. ஸாத4நப4க்திக்கு உறுப்பாக இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் உபதே3ஶிக்கப்பட்ட பரமபுருஷ யாதா2த்ம்யத்தை அநுஸந்தி4க்க அநுஸந்தி4க்க, 'பரமபுருஷனுக்கு ஶேஷமாயிருக்கையையே இயல்வாகவுடைய நான் என் ஆனந்த3த்தை உத்3தே3ஶ்யமாக நினைக்க இடமில்லை' என்று உணர்கிருன். மேலும், ''ரஸோऽஹமப்ஸு'' [7-8] என்று தொடங்கி நிருபாதி4க ப்ராப்யப்ராபகன் தானே என்கையாலே ''உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்'' [திருவாய் 6-7-1] என்கிறபடியே, 'அவனே பரமப்ராப்யமும், த4ாரகம், போஷகம், பே4ாக்3யம் முதலான எல்லாமும்' என்னும் அறிவு ஏற்படுகிறது. ''காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து'' [பெரியதிரு 3-2-2] ''வீழ்கனியும் ஊழிலையும் என்னுமிவையே நுகர்ந்து'' [பெரிய திருமடல் 12,13]என்று சொல்லுகிறபடியே காய், கனி, வேர்,கிழங்கு, நீர், காற்று முதலியவையும் இவ்வுலகிலிருக்கும்போது த4ாரகபோஷக பே4ாக்3யங்கள் என்னும் நினைவு கழிகிறது. முக்தியில் தான் அடையும் ஆனந்த3த்தில் ப்ராப்யத்வ பு3த்3தி4யும், த4ாரகபோஷக பே4ாக்3யத்வ பு3த்3தி4யும் கழிகின்றது. ''தனக்கேயாக எனைக் கொள்ளுமீதே'' [திருவாய் 2-9-4] ''உனக்கே நாம் ஆட் செய்வோம்'' [திருப்பாவை 29] ''உகக்கும் நல்லவரொடும் உழிதந்து உன்தன் திருவுள்ளம் இடர் கெடுந்தோறும் நாங்கள் வியக்க இன்புறுதும் எம் பெண்மை ஆற்ரேம்'' [திருவாய் 10-3-9] என்று ஆழ்வார்கள் அநுஸந்தி4த்த பரார்த்த2மான அநுப4வ கைங்கர்யங்களே உத்3தே3ஶ்யம் என்னும் ப்ராப்ய நிஷ்கர்ஷம் ஏற்படுகிறது. இனி, ப்ராப்ய நிஷ்கர்ஷம் இல்லாமையாலே, ப்ராபக நிஷ்கர்ஷமும் முந்திய ஜந்மங்களில் இவனுக்கு இல்லாமலிருந்தது. முக்தியில் எம்பெருமானை அநுப4வித்துத் தான் அடையும் ஆநந்

स्वरूपस्थितिप्रवृत्तिश्च, स चासङ्ख्येयैः कल्याणगुणगणैः परतर इति

த₃த்தையும் ப்ராப்யமாகக் கலங்குகையாலே, அவ்வாநந்த₃த்தை அடைவதற்கு ஸாத₄னமாக ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்டிருக்கும் ப₄க்தியோக₃த்தை அநுஷ்டி₂க்கிறுன் இவன். அதனுலே, பரம புருஷனை ப₂லப்ரத₃ ரூபமான உபாயமாகவும், ப₄க்தியை ப₂லகரண ரூபமான உபாயமாகவும் எண்ணுகிறுன் இவன். அந்த ஸாத₄ந ப₄க்திக்கு உறுப்பாக இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் உப தே₃ஶிக்கப்பட்ட சில அநுஸந்த₄ானங்கள், இவனுக்குக் காலக்ரமத்தில் ப்ராபகவிஷயத்தில் தெளிவைப் பிறப்பிக்கின்றன. எப்படியெனில்: "வாஸுதே₃வனே ஸர்வகாரணமாகவும், ஸர்வஶரீரியாகவும், ஸர்வ ப்ரகாரியாகவுமிருக்கிறுன்" என்றும், "நான் கார்யமாகவும், ஶரீர மாகவும், ப்ரகாரமாகவுமிருக்கையால் என்னுடைய ஸ்வரூப ஸ்தி₂தி ப்ரவ்ருத்திகள் எல்லாம் அவனதீ₄னமாயிருக்கின்றன. அசேதநத்தைப் போல் நான் அவனுக்குப் பரதந்த்ரனுகவுமிருக்கிறேன்" என்றும் அநுஸந்தி₄க்கையால், தன்னிடமுள்ள கர்மம், ஜ்ஞாநம், ப₄க்தி முதலானவை எல்லாமே அவனுல் விளைந்தவை என்று உணரப் பெற்று, அவற்றில் ஸாத₄நத்வபு₃த்₃தி₄ கழியப்பெறுகிறுன். ஜ்ஞாநம், ஶக்தி முதலான கல்யாணகு₃ணங்களாலும் அவனே மிகச் சிறந்தவன் என்று அநுஸந்தி₄ப்பதன் மூலம், அஜ்ஞனும் அஶக்தனுன தான், தன் முயற்சியாலே தன்னை ரக்ஷித்துக்கொள்ள முடியாதென்றும், ஸர்வஜ்ஞனும், ஸர்வஶக்தனுன அவனே தனக்குப் ப₂லப்ரத₃னு யிருப்பதோடன்றியில், ப₂லகரண ரூபமான உபாயமாகவுமிருக்கிறுன் என்றும் தெளிவு ஏற்படுகிறது. இதனுல், ப₄க்தி முதலான தன் முயற்சிகளை உபாயமாக நினைத்த கலக்கம் தீரப்பெறுகிறுன் இவன். மேலும், மோக்ஷத்திலும் தன் ஆனந்த₃ம் தனக்கு உத்₃தே₃ஶ்யமில்லை என்னும் ப்ராப்யநிஷ்கர்ஷம் ஏற்பட்டுவிடுகையாலும், அந்த ஸ்வார்த்த₂மான ஆனந்த₃த்துக்கு ஸாத₄னமான ப₄க்தி முதலான வற்றை, பரார்த்த₂மான அநுப₄வ கைங்கர்யங்களை விரும்பும் தான் அநுஷ்டி₂க்கலாகாது என்று உணர்கிறுனகையால், இவனுடைய ப்ராப்யநிஷ்கர்ஷமே இவனுடைய ப்ராபகநிஷ்கர்ஷத்தை உறுதிப் படுத்துகிறது. (அந்தே ஜ்ஞாநவாந்) இப்படி என்னைப்பற்றிய உண்மையறிவால் ப்ராப்ய ப்ராபகநிஷ்கர்ஷங்கள் ஏற்பட்டபின், "யத் ஜ்ஞாத்வா நேஹ பூ₄யோऽந்யத் ஜ்ஞாதவ்யம் அவஶிஷ்யதே" [கீ₃தை 7-2] என்கிறபடியே இவனுக்கு இனி அறியவேண்டியது ஒன்றுமில்லாமையால், இவனுக்கு இதுவே கடைசி ஜந்மமாகிறது; பிறகு இவன் ஸம்ஸார மண்ட₂லத்தில் பிறப்பதில்லை என்று கருத்து.

(அந்தே) கடைசி ஜந்மத்தில். இந்த ஜ்ஞாநம் ஏற்பட்ட க்ஷணத்திலேயே இவனுக்கு மோக்ஷம் ஏற்படவேண்டாவோ? இந்த ஶரீரம் முடியும் வரையில் எம்பெருமான் இவனை வைத்திருக்கவேணுமோ? எனில்: மிகவும் கிடைத்தற்கரிய ஞானியான இவனைக் கொண்டு சிலரைத் திருத்தலாம் என்னும் எண்ணத்தாலும், 'எம்பெருமானைப் பற்றிய உண்மையறிவு ஏற்பட்டால், நச்சுப் பொய்கையிற்போலே உடனே மரணம் ஏற்பட்டுவிடும்' என்னும் ப₄யத்தாலே ஸம்ஸாரிகள் ப₄க₃வத்₃விஷயத்தின் அருகிலும் வர அஞ்சுவர்களாகையாலும், வேர் சூடுமவர்கள், பரிமளத்தில் ஆசையாலே மண்பற்றுக் கழற்றாதாப்போலே, ஞானியினுடைய ஜ்ஞாந ப்ரேம பரிமளமெல்லாம் தோற்றும்படியிருக்கிற விமல சரம தே₃ஹத்தில் எம்பெருமானுக்குள்ள விருப்பத்தாலும், இந்த ஞானிக்கு ஆர்த்தி பரம்பரைகளை விளைத்து, பரப₄க்தி பரஜ்ஞாந பரமப₄க்தி பர்யந்தமான அதி₄கார பூர்த்தியை உண்டாக்குவதற்காகவும் இவனை இந்த ஶரீரத்திற்கு உறுப்பான கர்மங்களை அநுப₄வித்து முடியும் வரையில் வைத்திருக்கக் குறையில்லை. (ஸர்வமிதி ஜ்ஞாநவாந்) "மாதா பிதா ப்₄ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத் க₃திர் நாராயண:" [ஸுபா₃லோபநிஷத்] [தாய், தந்தை, ஸஹோத₃ரன், இருப்பிடம், நண்பன், ப்ராபகம், ப்ராப்யம் ஆகிய எல்லாமே நாராயணன்] "த்வமேவ மாதா ச பிதா த்வமேவ த்வமேவ ப₃ந்து₄ஶ்ச கு₃ருஸ்த்வமேவ। த்வமேவ வித்₃யா த்₃ரவிணம் த்வமேவ த்வமேவ ஸர்வம் மம தே₃வதே₃வ॥" [தே₃வதே₃வனே! நீயே எனக்குத் தாய், தந்தை, உறவினன், உயர்கு₃ரு, கல்வி, செல்வம் முதலான எல்லாமுமாவாய்.] "பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ மற்றையாராவாரும் நீ" [பெரியதிருவ 5] "தஞ்சமாகிய தந்தை தாயொடு தானுமாய், அவையல்லனாய்" [திருவாய் 3-6-9] "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும் மேலாத் தாய் தந்தையும் அவரே இனி ஆவாரே" [திருவாய் 5-1-8] "உண்ணும் சோறு பருகும் நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" [திருவாய் 6-7-1] முதலானவிடங்களில் சொல்லப்பட்ட எல்லாமும் இங்கு ஸர்வஶப்₃த₃த்துக்குப் பொருளாகுமாகையாலே, "அந்யதா₃பி யத் மநோரத₂வர்த்தி, ஸ ஏவ மம தத் ஸர்வம்" என்று பா₄ஷ்யகாரர் பா₄ஷ்யமிட்டருளினார். இந்த ஜ்ஞாநத்தால் இவன் செய்யும் கார்யம் யாதெனில், (வாஸுதே₃வ: ஸர்வமிதி மாம் ப்ரபத்₃யதே) "வாஸுதே₃வனே எனக்குப் பரமப்ராப்யமும், ப்ராபகமும், உண்ணும் சோறும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும், சேலேய் கண்ணியரும், பெருஞ்செல்வமும், நன்மக்களும், மேலாத் தாய் தந்தையும் முதலான எல்லாம்" என்று

ज्ञानवान् भूत्वा, वासुदेव एव मम परमप्राप्यं प्रापकं च, अन्यदपि

என்னை எல்லாமாகப் பற்றுகிறுன் என்கிறுன். எல்லாமே கண்ணனுன இவனுக்கு வேறு சிலவும் ப்ராப்யமென்று தோன்றும்படி, இங்கு ப4ாஷ்யத்தில் ''பரம ப்ராப்யம்'' என்று ப்ராப்ய ஶப்3த3த்துக்குப் 'பரம' என்னும் விஶேஷணமிட்டிருப்பதற்கும், ப்ராபக ஶப்3த3த்திற்கு அப்படி விஶேஷணமிடாமலிருப்பதற்கும் கருத்து என்ன? எனில்: பிராட்டிமார், நித்யஸூரிகள், முக்தர் ஆகியவர்களும், பரமபத3மும் அவ்வுலகிலும், ஆசார்யர்களும், ப4ாக3வதர்களும் இவ்வுலகிலும் இவனுக்கு அவனையிட்டு ப்ராப்யர்களாகிருர்களாகை யால், அவனைப் பரம ப்ராப்யன் என்று விஶேஷித்தார் என்றும், சணற்கயிறுகண்ட ப்3ரஹ்மாஸ்த்ரம் போலே சுணையுடையவனுய், நித்யாநபாயிநியான பிராட்டியையும் உபாயமாயிருக்க ஸஹியாதபடி நிரபேக்ஷோபாய பூ4தனுயிருக்கையாலே ப்ராபக ஶப்3த3த்துக்கு அப்படி விஶேஷணமிடவில்லை என்றும் குறிக்கொள்ளத்தக்கது, ''ப்ரபத்3யதே'' என்னும் ஶப்3த3ம் பற்றுவதைக் காட்டுவதாயிருக்க, ''உபாஸ்தே'' என்று ப4ாஷ்யகாரர் ப4ாஷ்யமிடுவதற்குக் கருத்தென்னவெனில், உபாஸகனுயிருந்தபோது இவனுக்கிருந்த ப4க்தி ரூபமான ஜ்ஞாநமும் அழிவதில்லை; அதில் உபாயத்வ பு3த்3தி4யே தவிர்க்கப்படுகிறது என்று உணர்த்துவதற்காக ''உபாஸ்தே'' என்று ப4ாஷ்யமிட்டார். ''நிஜகர்மாதி3 ப4க்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித: । உபாயதாம் பரித்யஜ்ய ந்யஸேத் தே3வே து தாம் அபீ4: ॥'' [31] [தனக்குரிய கர்மம் தொடக்கமாக, ப4க்தியீருக உள்ளவற்றில் உபாயத்வ பு3த்3தி4யைக் கைவிட்டு, எம்பெருமானிட த்திலேயே அவ்வுபாயத்வத்தை அநுஸந்தி4த்து ப4யமற்றவனுய், அன்பினுலேயே தூண்டப்பட்டவனுய், அவற்றைச் செய்யவேண் டும்.] என்று கீ3தார்த்த2ஸங்க்3ரஹத்தில் ஆளவந்தாரும் இவ் வதி4காரிக்கு, ப4க்திபர்யந்தமான எல்லாமே உபாயத்வ பு3த்3தி4 ரஹிதமாகவும், ஸ்வயம் ப்ரயோஜநமாகவும் உண்டு என்று காட்டினுரன்றே. ''உபாஸ்தே'' என்றதினுல் இங்கு அங்க3 ப்ரபத்தியே கருதப்படுகிறது என்று கொண்டால், ''வாஸுதே3வ: ஸர்வம் இதி ப்ரபத்3யதே'' [வாஸுதே3வனே பரம ப்ராப்யமும், ப்ராபகமும், த4ாரகபோஷக போ4க்3யங்கள் முதலிய எல்லாமும் என்று அடைகிறுன்] என்று ஶ்லோகத்திற் சொல்லி யிருப்பதும், அதன் ப4ாஷ்ய ஸ்ரீஸூக்திகளும் பொருந்தாமற் போய் விடும். ''வாஸுதே3வ: ஸர்வம்'' என்றதை ''எல்லாம் கண்ணன்'' [திருவாய்மொழி 6-7-1] என்று ப்ரபந்த ஜந கூடஸ்த2ரான நம்

यन्मनोरथवर्ति, स एव मम तत्सर्वमिति मां प्रपद्यते—मामुपास्ते ;

மாழ்வாரே வ்யாக்₂யானம் செய்கையால், இங்கு ஸித்₃தோ₄பாய நிஷ்டூத்வமாகிற முக்₂ய ப்ரபத்தியே கருதப்படுகிறது என்பது தெளிவு. இனி, " கஶ்சிந்மாம் வேத்தி தத்வத: " [7-3] என்ற உபக்ரமத்தையொட்டி, இத்தகைய அதி₄காரி தனக்கும் மிகவும் கிடைத்தற்கரியவன் என்று காட்டுகிறுன் கடைசிப் பாத₃த்தாலே — (ஸ மஹாத்மா) ஆத்ம ஶப்₃த₃ம் நெஞ்சையும், ஆத்ம ஸ்வரூபத்தையும் குறிக்குமாகையால், 'அவன் பெரு நெஞ்சினன்' என்றும், 'அவன் பெருமைபெற்ற ஸ்வரூபத்தையுடையவன்' என்றும் இருவகையாகப் பொருள்படும். ஆத்மா அணுஸ்வரூபனுகையால், இரண்டாம் பொரு ளில் ஸ்வரூபத்தால் பெருமையைச் சொல்லுகிறதன்று; சிறப்புக்களால் பெருமையையே சொல்லுகிறது. (மஹாமநா:) தனக்காக என்று எதையும் கொள்ளாமல். எனக்காகவே வாழ்பவனுகையாலே அவன் மிகப்பெரிய நெஞ்சையுடையவன் என்கை. (மஹாத்மா ஆத்மா) என்னையே ஒப்பற்ற ப்ராப்யமாகக் கொண்ட ஜ்ஞாநியை 'ஆத்மா' என்னலாம் என்ருல், அந்த ஞானம் கனியப்பெற்று என்னையே எல்லாமாகக் கொண்ட இவனை 'மஹாத்மா' என்றல்லது சொல்ல லாவதில்லையே என்று கருத்து. "சிவனொடு பிரமன் வண்திரு மடந்தை சேர் திருவாகம் என் ஆவி ஈரும்" [திருவாய் 9-10-6] என்கிறபடியே, என்னைப் பிரிந்தால் / அச்சேத்₃யமான தன் ஆத்மா சேதி₃க்கப்பெறுவதுபோலே துடிப்பான் இவன். " வேம் எமதுயிர் அழல் மெழுகில் உக்கே " [திருவாய் 10-3-6] என்ருப் போலே / அதா₃ஹ்யமான தன் ஆத்மா நெருப்பிலிட்ட மெழுகு போலே கசிந்து உருகுவதாக உணர்வான் இவன். " கண்ணனுக் கென்று ஈரியாயிருப்பாள்" [திருவாய் 6-7-9] என்கிறபடியே / அக்லே த்₃யமான தன் ஆத்மா நனைக்கப்படுவதாக நினைப்பான் இவன். "வேட்கை நோய் மெல்லாவி உள்ளுலர்த்த" [திருவாய்2-1-10] என் கிறபடியே / அஶோஷ்யமான தன் ஆத்மா விஶ்லேஷவ்யஸநத்தாலே உலர்த்தப் பெறுவதாக அநுஸந்தி₄ப்பான்இவன். இத்தகையவனை மஹாத்மாவென்றல்லது வேறு எச்சொல்லாலே சொல்லுவேன் என்ற படி. (மஹாமநா:-பெரு நெஞ்சினன்) இங்கு நெஞ்சைச் சொன்னது மற்ற இந்திரியங்களுக்கும், தே₃ஹத்துக்கும் உபலக்ஷணம். "முந்துற்ற நெஞ்சே" [பெரிய திருவ-1] என்று ஸம்ஶ்லேஷத்தில் இவனுடைய நெஞ்சு இவனிலும் முற்பட்டிருக்கும். "என் நெஞ்சு என்னை நின்னிடையேனல்லேன் என்று நீங்கி......நாண் மலர்ப்பாதம்

/ கீ₃தை 2-24.

அடைந்ததுவே'' [திருவாய் 8-2-10] என்று விஶ்லேஷத்தில்—அசேதநமான இவனுடைய நெஞ்சு, சேதந ஸமாதி$_4$யை அடைந்து, 'அவன் விட்டுப்போன உனக்குக் கரணமாகமாட்டேன்' என்று இவனை விட்டுச் சென்று அவனை அடையும். மற்ற இந்திரியங்களும் ''முடியானே'' [திருவாய் 3-8] என்னும் திருவாய்மொழியிற்போலே, சேதந ஸமாதி$_4$யாலே, ஓரிந்திரியம் மற்ற இந்திரியங்களின் அநுப$_4$வத்தைப் பெற விரும்பும். ''உடலம் நின்பால் அன்பாயே நீராய் அலைந்து கரைய'' [திருவாய் 5-8-1] என்கிறபடியே பரமபுருஷனிடம் ஆராதகாதலாலே ஆத்மா கசிந்து உருகிவிடாதபடி கட்டின கரையான ஶரீரமானதுதான் அன்புதானே ஒரு வடிவு கொண்டாற்போலேயாய், மேல்மேலே கரைந்து ஆத்ம த$_4$ர்மத்தை ஏறிட்டுக் கொள்ளும். (பெருநெஞ்சினன்) இவனுடைய நெஞ்சு ஜ்ஞாநத$_3$ஶையில் ஒப்புயர்வற்ற ப்ராப்ய நிஷ்கர்ஷமும், ப்ராபக நிஷ்கர்ஷமும் பெற்றிருப்பதுபோலே, ப்ரேமத$_3$ஶையில் எல்லையில்லாத கலக்கத்தையும் பெற்றிருக்கும். உபாஸகனுக்குள்ள கலக்கம் ஸ்வரூப யாதா$_2$த்ம்ய ஜ்ஞாநமில்லாமையினாலேயுண்டானதாகையாலே தாழ்ந்தது. இவனுடைய கலக்கம் ஞானம் கனிந்த நலமான ப$_4$க்தியினால் ஏற்படுவதாகையாலே அடிக்கழஞ்சுபெறும் (மிகச் சிறந்தது). உபாஸகனுடைய ப$_4$க்தி, ''நிதி$_3$த்$_4$யாஸிதவ்ய:'' [ப்$_3$ருஹ 4-4-5] என்கிற விதி$_4$யினால் தூண்டப்பட்டு, சேதநஸாத்$_4$யையாய், க்ரம பரிணாமிநியாய், கட்டளைப்பட்டதாய், அளவுபட்டிருக்கும். இவனுடைய ப$_4$க்தி, அதுக்கு எதிர்த்தட்டாய்க் கரைகட்டாக் காவேரிபோலே, '' அத்யந்த ப$_4$க்தி யுக்தஸ்ய ந ஶாஸ்த்ரம் நைவ ச க்ரம: '' [ப$_4$க்தி விஞ்சியிருப்பவனுக்கு ஶாஸ்திர வரம்பும், மற்ற வரம்புகளும் கிடையாது] என்கிறபடியே அளவிறந்து, வரம்பு மீறியிருக்கும். ஆனாலும், எத்தனைதான் கலக்கம் ஏற்பட்டாலும், '' தேறியும் தேறாதும் மாயோன் திறத்தனளே இத்திருவே '' [திருவாய் 4-4-7] என்கிறபடியே ஶேஷஸ்வரூபமான ஸ்வரூபம் நிலைகுலையாது. ப்ரேமத$_3$ஶையில் இவன் பெண்ணுடையுடுத்துப் பெண்பேச்சுப்பேசும். அப்போது விஷயவைலக்ஷண்யத்தாலும், ப்ராப்யத்வரையாலும் கலங்கிப் பக்ஷிகள் முதலானவற்றையும் தூதுவிடும்; அவனைப்பெற நோன்பு நோற்கும்; மடலெடுக்கவும் துணியும். ''வாயும் திரை'' [2-1] என்னும் திருவாய்மொழியிற்போலே நாரையும், அன்றிலும், கடலும், காற்றும், மேக$_4$மும், சந்திரனும், கழியும், விளக்கும் தன்னைப்போலே எம்பெருமானைப் பிரிந்து நோவுபடுவதாக எண்ணி அவற்றைக் கட்டிக்கொண்டு அழும்.

அவனைப் பெறவேண்டும் என்னும் ஆசை அளவிறந்து செல்லும் போது "முயன்றுன்னை நோற்கின்றேன் காமதேவா" [நாச்-திரு 2] "தெய்வங்காள் என் செய்கேன்" [திருவாய் 5-4-8] என்று தே₃வதாந்தர ஸமாஶ்ரயணமும் பண்ணும். இவையெல்லாவற்றுக்கும் மேலே — தனக்காகக் கலங்கிய நிலைபோய், தானான தன்மையிலேயே திருப்பல்லாண்டிற்போலே அஸ்த₂ாநே ப₄யஶங்கையாலே கலங்கி, ரக்ஷ்யரக்ஷகப₄ாவம் தட்டுமாறி, ப₄யநிவர்த்தகங்களுக்கு ப₄யப்பட்டு, ப்ரதிகூலரான ஐஶ்வர்ய கைவல்யார்த்தி₂களையும் அநுகூலராக்கிக் கொண்டு, நடந்த காலங்களில் எம்பெருமானுக்கு வந்த ஆபத்துக்களுக்குப் பிற்காலத்திலே வயிறெரிந்து, "சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே" [12] என்று அங்கு பெறும் ப₂லமும் இதுவே என்று கொண்டு, உறக்கமில்லாத நித்யஸூரிகளைப் பார்த்து "உறகல் உறகல் உறகல்" [பெரியாழ்திரு 5-2-9] என்பதாய்க்கொண்டு இதுவே யாத்ரையாயிருக்கும். ஞானியான உபாஸகன் "யுக்தாத்மா" என்கிறபடியே என்னைப் பெருவிடில் த₄ரிக்கமாட்டாதவனாயிருக்கும். "மஹாத்மபி₄ர் மாம் அவலோக்யதாம் நய க்ஷணேऽபி தே யத்₃விரஹோऽதிது₃ஸ்ஸஹ:" [ஸ்தோ-ர 56] [எவர்களைக் கணநேரம் பிரிவதும் உனக்கு மிகவும் பொறுக்கமுடியாததோ, அத்தகைய மஹாத்மாக்களாலே என்னைக் கடாக்ஷிக்கச் செய்வாய்] என்று ஞானிகளில் சிறந்தவனான இவனே — இவனைப் பெருவிடில் நான் கணமும் த₄ரிக்கமாட்டாதபடி மஹாத்மாவாயிருக்கும் என்று கருத்து. "ஸ ச மம ப்ரிய:" என்றவிடத்தில் சகாரம் அப்ராத₄ாந்யத்திலேயாய். அவனுடைய ப்ரீதியைக் காட்டிலும் என்னுடைய ப்ரீதி குறைவுபட்டது என்று ஒரு பொருள் தோற்றுகிறதன்றோ. அப்பொருள் ஞானிகளில் சிறந்தவனான இவனையே கருதியது. க₃த்₃ய வ்யாக்₂யாநத்தில் இப்ரகரணத்தில், "'அவனுக்கு நான் அத்யர்த்த₂ப்ரியன்' என்றும், 'அவனும் எனக்கு ப்ரியன்' என்றும் அவன் பக்கல் தனக்குண்டான ப்ரியத்தைக் குறையச்சொல்ல வேண்டுகிறதென்? அவனுடைய ப்ரியத்தில் தன்னுடைய ப்ரியம் குறைந்தோ இருப்பது? என்னில்: அங்ஙனன்று; அவன் தன்னளவிலே ப்ரியன்; நான் என்னளவிலே ப்ரியன்; அணுவுக்குள்ளதன்றே விபு₄வுக்குள்ளது; குளப்படி கலங்கினாற்போலன்றே கடல் கலங்குவது; இப்படியிருக்க, தன் வாத்ஸல்யத்தாலே 'அவனுடைய ப்ரியத்துக்கு என்னுடைய ப்ரியம் எங்கே கிடக்கும்' என்னும் நினைவாலே சொல்லுகிறான்" என்று உபாஸகனான ஞானிக்கும் பொருந்தும்படியான பொருளை

அருளிச்செய்துவிட்டு, ''அங்ஙனன்றியிலே, ஸர்வஶக்தியாலும் பரிஹரிக்கவொண்ணாத ப$_4$யத்தை விளைப்பதான ப்ரியமாகையாலே அதுதானே அத்யர்த்த$_2$மென்னவுமாம். * ப$_4$யாநாம் அபஹாரியாலும் பரிஹரிக்கவொண்ணாத ப$_4$யத்தை விளைப்பிப்பதொரு ப்ரியமிறே. ப$_4$யநிவ்ருத்தி ஹேதுக்கள்தானே ப$_4$யவ்ருத்$_3$தி$_4$ ஹேதுக்களாய்த்து.'' என்று, வாஸுதே$_3$வனே எல்லாம் என்னும் மஹாத்மாவான இந்த ஞானிக்கே பொருந்தும் பொருளையும் பெரியவாச்சான்பிள்ளை அருளியது காணத்தக்கது. (ஸுது$_3$ர்லப$_4$:) இப்படிப்பட்ட மஹாத்மா ஸர்வஶக்தனை எனக்கும் மிகவும் கிடைத்தற்கரியவன். ஞானியான உபாஸகன் ''ஆஸ்தி$_2$த: ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் க$_3$திம்'' என்கிறபடியே என்னை அடைவதற்காகப் பாடுபடுகிறான். நானோ பரமஞானியான இவனை அடைவதற்காக அநாதி$_3$காலமாகப் பாடுபடுகிறேன். ''ப்ரஜாபதிம் த்வோ வேத$_3$'' [யஜு காண் 1-ப்ர-6] [பரமபுருஷனை ஒருவன் அடைகிறான்.] ''யஶ்ச ராமம் ந பஶ்யேத்து'' [ரா·அ 17-14] [எவன் ராமனைக் காணவில்லையோ] என்று பரமபுருஷனைத் தன் முயற்சியாலே அடையும் வகுப்பில் சேர்ந்தவன் அவன். ''ப்ரஜாபதிஸ்த்வம் வேத$_3$ — யம் ப்ரஜாபதிர் வேத$_3$ ஸ புண்யோ ப$_4$வதி'' [யஜு-காண் 1-ப்ர-6] [பரமபுருஷன் ஒருவனை அடைகிறான். அவனே சிறந்தவன்.] ''யமேவைஷ வ்ருணுதே தேந லப்$_4$ய: தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்'' [கட$_2$ 1-2-23] [எவனை இப்பரமபுருஷன் வரிக்கிறானோ அவனாலேயே இப்பரமன் அடையத்தக்கவன். அவனுக்கு இப்பரமன் தன் திருமேனியைக் காட்டுகிறான்.] ''யஞ்ச ராமோ ந பஶ்யதி'' [ரா-அ 17-14] [எவனை ராமனும் காணவில்லையோ] என்று பரமபுருஷன் நிர்ஹேதுக க்ருபையாலே வரித்து அடையும் புண்யவான் இவன். இன்றுவரை எனக்கும் ஒருவன்கூட இத்தகைய அதி$_4$காரி கிடைக்கவில்லை என்று கருத்து. (ஸுது$_3$ர்லப$_4$:) மிகவும் கிடைத்தற்கரியவன். ''மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு'' என்ற ஐஶ்வர்யார்த்தி$_2$ ஸுஸுலப$_4$ன் (மிகவும் கிடைத்தற்கு எளியவன்); ''கஶ்சித் யததி'' என்ற கைவல்யார்த்தி$_2$ ஸுலப$_4$ன் (கிடைத்தற்கு எளியவன்); ''கஶ்சிந் மாம் வேத்தி'' என்ற ஜ்ஞாநியானவன் து$_3$ர்லப$_4$ன் (கிடைத்தற்கு அரியவன்); ''கஶ்சிந் மாம் தத்வதோ வேத்தி'' என்ற ஞானிகளில் சிறந்தவனான இவ்வதி$_4$காரி ஸுது$_3$ர்லப$_4$ன் (மிகவும் கிடைத்தற்கரியவன்) என்று கருத்து. '' மிகவும் கிடைத்தற்கரியவன் '' என்கையாலே உடைமையை அடையும் உடையவனைப்போலே சேதநரை இத்தகைய அதி$_4$காரிகளாக்கி அடைவதற்காகவே எம்

பெருமான் அநாதி₃காலமாக முயன்று வருகிருன் என விளங்குகிறது. ''வாஸுதே₃வ: ஸர்வம்'' என்கையாலே, ''ப்ராபகனும், ப்ராப்திக்கு உகப்பானும் அவனே'' [ஸ்ரீவசந 70] என்னும் அர்த்த₂மும், ''ஸுது₃ர்லப₄:'' என்கையாலே ''ப்ராப்தாவும் அவனே'' [ஸ்ரீவசந70] என்னும் அர்த்த₂மும் சொல்லப்பட்டதாயிற்று. '' அத்யர்த்த₂ப்ரியம் ஜ்ஞாநிநம் லப்₃த்₄வா '' என்று ஸ்ரீப₄ாஷ்யத்தின் கடைசியில் ப₄ாஷ்ய காரரும் 'ப்ராப்தாவும் அவனே' என்னும் இப்பரமரஹஸ்யார்த்த₂த்தை வெளியிட்டு, ஞானியைப் பற்றின இந்த மூன்று ஶ்லோகங்களையும் உதா₃ஹரித்து ஸ்ரீப₄ாஷ்யத்தை நிறைவுபடுத்தினர். (ஜ்ஞாநவாந்... ஸுது₃ர்லப₄:) இத்தகைய அத்₄யவஸாய ரூபமான ஜ்ஞாநமுடைய வன் அசேதந க்ரியாகலாபங்களைப் பற்றிநின்று என்னைப்பெறப் பாடு படவேண்டா. என்னைச் சிந்தித்திருக்கும் இவனை நான் பெரும் பேறு பெற்றுப்போலே மேல்விழுந்து அடைவேன். ''மற்றென்றில்லை சுருங்கச் சொன்னேம் மாநிலத்து எவ்வுயிர்க்கும், சிற்றவேண்டா சிந் திப்பே அமையும் கண்டீர்கள் அந்தோ!'' [திருவாய் 5-1-7] என்றார் ஆழ்வாரும். (மஹாத்மா ஸுது₃ர்லப₄:) இவனுக்கு ஒப்பானவர் உப₄ய விபூ₄தியிலும் கிடையாதாகையாலே இவன் எனக்கு மிகவும் கிடைத்தற் கரியவனே. இவ்வுலகிலுள்ள உபாஸகபர்யந்தமானவர்கள் இவனுக்கு ஒப்பானவரல்லர் என்பது மிகத் தெளிவு. தெளிவிசும்பிலிருந்து தெளிந்திருக்கும் நித்யமுக்தர்களும், இருள்தருமாஞாலத்திலிருந்தும் தெளிந்திருக்கும் இவனுக்கு ஒப்பல்லர். ''சீதனையே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியரே'' [திருவிருத்தம் 79] என்கிறபடியே. ஸ்வ தஸ் ஸர்வஜ்ஞனுகையாலே தெளிந்திருக்கும் நானும், கலக்கத்தை விளைக்கும் ஸம்ஸாரத்திலேயிருந்து இவ்வளவு தெளிந்திருக்கும் இவனுக்கு ஒப்பல்ல. ஆகையால், இவன் மிகவும் கிடைத்தற்கரிய வனே. க₃த்₃யவ்யாக்₂யானத்தில் இவ்விடத்தை வ்யாக்₂யானம் செய்யும்போது பெரியவாச்சான்பிள்ளை '' அறப்பெரியனன்றே. அவனை ஒப்பாரில்லை. அவனுக்கு நாமும் ஒப்பல்லோம். ஆவதென்? இது ப்ரஶம்ஸையோ? என்னில்: அன்று; உண்மை. இதுக்கு ஹேது வென்னென்னில்: நமக்கு ஸம்ஸார து₃ரிதமாகிற கலக்கம் தட்டா திருக்கையாலே ஸம்ப₃ந்த₄த்தை உணர்ந்திருக்கலாம். அங்ஙனன் றிக்கே, ஸம்ஸாரத்திலே ப₃த்₃த₄ஞய்க் கலங்கியிருக்கிறவன் ஸம் ப₃ந்த₄த்தை உணர்ந்திருக்கையாலே அவனுக்கு நாமும் ஒப்பல்லோம். (து₃ர்லப₄:) அவனை ஸம்ஸாரத்தில் கிடையாது. (ஸுது₃ர்லப₄:) பரமபத₃த்திலும் கிடையாது. இப்படிக் கலக்கத்திலும் தெளிந்திருக் குமவனை உப₄யவிபூ₄தியிலும் கிடையாதுகாண் என்றபடி. நாமும்

ஆசைப்பட்டே போமித்தனையல்லது, அவனை நமக்குங்கூடக் கிடையாதுகாண் என்கிறான். அதாவது என்னென்னில்: 'தெளிவிசும்பு' [திருவாய் 9-7-5] என்கிறபடியே தெளிவிக்கையே ஸ்வபா4வமாயிறே இருப்பது அத்3தே3ஶம். இது 'இருள் தருமா ஞாலம்' [திருவாய் 10-6-1] என்கிறபடியே அத்3தே3ஶிகள் இங்கே வரிலும் கலக்குகையே ஸ்வபா4வமாயிறே இருப்பது'' என்று அருளிச்செய்திருப்பது இங்கு அநுஸந்தி4க்கத்தக்கது. ''இதி ஶ்லோக த்ரயோதி3த ஜ்ஞாநிநம் மாம் குருஷ்வ'' [ஶரணாக3திக3த்3யம்-13] [''தேஷாம் ஜ்ஞாநீ'' என்று தொடங்கும் இந்த மூன்று ஶ்லோகங்களிலும் சொல்லப்பட்ட ஜ்ஞாநியாக என்னை ஆக்கவேணும்] என்று பா4ஷ்யகாரர் க3த்3யத்திலே ப்ரார்த்தி2க்கையாலே—இந்த ஶ்லோகத்தில் சொல்லப்பட்டவனாய், ''வாஸுதே3வனே எல்லாம்'' என்று அறிந்து பற்றுமவனான மஹாத்மாவான ஜ்ஞாநியே மூன்று ஶ்லோகங்களுக்கும் முக்2யார்த்த2மாயிருப்பவனென்று விளங்குகிறது. ஆயினும், முதலிரண்டு ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட பெருமைகள் உபாஸகனான ஞானிக்கும் பொருந்தும் என்பதும், இந்த ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட பெருமை உபாஸகனுக்கன்றிக்கே, மஹாத்மாவான ஞானிக்கே பொருந்தும் என்றும் உணரத்தக்கது. இவ்வண்ணமாக, கீ3தையில் மேல் ப்ரகரணங்களில் உபாஸகனின் பெருமையைச் சொல்லுமிடங்களில் மஹாத்மாவான ஞானிக்கு அவை மிகப் பொருந்தும் என்பதும் அறியத்தக்கது. பல அவதாரங்கள் செய்தும், இத்தகைய மஹாத்மாவான ஞானி ஒருவன்கூடக் கிடைக்கவில்லையே என்னும் குறைதீரச் சிலர்க்கு மயர்வற மதிநலமருளி, நம்மாழ்வார் முதலான ஆழ்வார்களாக ஆக்கினான் எம்பெருமான் என்னும் ஸம்ப்ரதா3ய ரஹஸ்யார்த்த2மும் இங்கு உணரத்தக்கது.

'' வாஸுதே3வ: ஸர்வம் '' என்பதாலே வாஸுதே3வனோடு சேதநாசேதநங்களை ஒரே வேற்றுமையில் படிப்பதாகவும், அதில் சேதந ஸாமாநாதி4கரண்யத்தால் வாஸுதே3வனோடு ஸர்வ ஜீவர்களுக்கும் ஸ்வரூபைக்யம் சொல்லப்படுவதாகவும், அசேதந விஷயத்தில் ஸாமாநாதி4கரண்யம் (வாஸுதே3வனையும் அசித்துக்களையும் ஒரே வேற்றுமையில் படிப்பது) ''திருடன் தூணே'' என்று திருடனைத் தள்ளி, தூணே உள்ளது என்று சொல்லுமிடத்திற்போலே பா3தா4ர்த்த2ம் (பொய்யானதைத் தள்ளுவதற்கு) என்றோ, ''வெள்ளி சிப்பியே'' என்னுமிடத்தில் சிப்பியில் வெள்ளியெனும் அறிவுபோலே ப்3ரஹ்மத்திடம் ஸர்வவஸ்துக்கள் எனும் அறிவு ஏறிடப்பட்டிருக்கிறது என்று காட்டுவதற்காக என்றோ ஶங்கரர் கூறுகிறார். ''இந்தக் குடம் மண்'' ''இந்தக் குண்ட3லம் பொன்'' முதலான

वासुदेवस्सर्वमित्यस्य अयमेवार्थः, * प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहम्, * आस्थितस्स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिमिति प्रक्रमात्। ज्ञानवांश्चायं उक्तलक्षण एव, अस्यैव पूर्वोक्तज्ञानित्वात्, * भूमिरापः

விடங்களிற்போலே ப்₃ரஹ்மமே சேதநாசேதந ரூபமான ஸர்வ வஸ்துக்களாகவும் பரிணமிப்பதைக் காட்டுவதாக யாத₃வ ப்ரகாசர் கூறுகிருர். விசிஷ்டாத்₃வைதிகளிலும் சிலர், இங்கு சரீர சரீரி ப₄ாவத்தையிட்டு ஐக்யம் சொல்லப்படுவதாகக் கருத இடம் உண்டு. "வாஸுதே₃வ: மம ஸர்வம்" [வாஸுதே₃வனே எனக்கு எல்லாம்] என்று 'மம' [எனக்கு] என்னும் பத₃த்தைச் சேர்த்துக்கொண்டு முற் கூறியபடி பொருள் கொள்வதிலும் அப்படி அத்₄யாஹாரம் செய்யா மல் பொருள் கொள்வதே பொருந்தும் என்றும் இவர்கள் கூறக்கூடும். இவர்கள் "ஜ்ஞாநவாந்" என்னும் வேறு பத₃த்தை இட்டிருக்கை யாலே, முன் சொல்லப்பட்ட ப₄க்தனை ஞானியைக் காட்டிலும் வேறுபட்ட அதி₄காரியே இவன் என்று வாத₃ம் செய்யவும் இட முண்டு. இக்கருத்துக்கள் இப்ரகரணத்திற்குப் பொருந்தமாட்டா வாகையால், முன் ஶ்லோகங்களில் குறிக்கப்பட்ட ஞானியே இங்கும் கருதப்படுவதாகக் கொள்ளவேண்டும். எப்படியெனில்: இப்ரகரணத் தின் தொடக்கத்தில், தன்னைப் பற்றிய பரிபூர்ணமான ஜ்ஞாநத்தைப் பற்றி ப்ரஸ்தாபித்து, அதை விவரித்து, அந்த ஜ்ஞாநம் இல்லாமற் போவதற்கு ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄மே காரணம் என்று சொல்லி, அதைக்கடக்க உபாயம் தன்னை சரணடைந்து ப₄க்தி செய்வதே என்று கூறி, புண்ணியத்தின் ஏற்றத்தாழ்வாலே அவரவர் விரும்பும் ப₂லனில் ஏற்படும் ஏற்றத்தாழ்வையிட்டு நாலுவகைப்பட்ட ப₄க்தர் களைச் சொல்லி, "ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்த₂மஹம்" [17] [ஞானிக்கு நானே மிகவும் இனியவன்] "ஆஸ்தி₂த: ஸ ஹி யுக் தாத்மா மாமேவாநுத்தமாம் க₃திம்" [18] [என்னையடைந்தாலல்லது த₄ரிக்கமாட்டாத அவன் என்னையே ஒப்பற்ற ப்ராப்யமாகக் கொண் டிருக்கிருன்.] என்று புண்ணிய மிகுதியாலே பரமபுருஷனையே ப்ராப்யமாகக் கொண்டவனுகிற நாலாவது அதி₄காரியை ஜ்ஞாநி என்றது. அடுத்த ஶ்லோகமான இதில் பரமபுருஷனையே ப்ராப்ய மாகக் கொண்ட அந்த ஜ்ஞாநியே ஜ்ஞாநவாந் எனப்படுவதாகக் கொள்ளவேண்டுமே தவிர, ப்ரகரணத்தில் இல்லாத ஸ்வரூபைக்ய ஜ்ஞாநம் முதலானவற்றை உடையவனைச் சொல்லுவதாகக் கொள்ளு வது ப்ரகரணத்திற்குப் பயனற்றதாயிருப்பதோடன்றியில் முரண் பட்டதுமாகும். "ஜ்ஞாநவாந்" என்று வேறு பத₃ம் இடப்பட்டிருக்

इत्यारभ्य * अहङ्कार इतीयं मे भिन्ना प्रकृतिरष्टधा। अपरेयमित-स्त्वन्यां प्रकृतिं विद्धि मे पराम्। जीवभूताम् (५) इति हि चेतना-चेतनप्रकृतिद्वयस्य परमपुरुषशेषतैकरसतोक्ता; * अहं कृत्स्नस्य जगत: प्रभव: प्रलयस्तथा॥ मत्त: परतरं नान्यत्किञ्चिदस्ति धनञ्जय। (७)

கிறதே எனில், 'வாஸுதே₃வனே எனக்கு ஒப்பற்ற ப்ராப்யம்' என்னும் அறிவுடைய ஞானிக்கு, காலக்ரமத்தில் 'வாஸுதே₃வனே எனக்கு ப்ராபகம், த₄ாரகம், போஷகம், போ₄க்₃யம் முதலிய எல்லாமும்' என்னும் ஞானமும் ஏற்படுவதைக் குறிப்பதற்காகவே "ஜ்ஞாநவாந்" என்னும் வேறு பத₃த்தை இட்டிருக்கிறது என்று முன்னமே விளக்கப் பெற்றது. இந்த ஜ்ஞாநம் இவனுக்கு ஏற்படவேண்டும் என்பதற்காகவே — "பூ₄மிராப:" என்னும் நாலாவது ஶ்லோகத்தில் அசேதநப்பொருள்கள் பரமபுருஷனுக்குப் பரதந்திரமானவை என்று உபதே₃ஶிக்கப்பெற்று, "அபரேயம் ...... ஜீவபூ₄தாம்" என்னும் ஐந்தாம் ஶ்லோகத்தில், சேதநப்பொருளும், அசேதநப்பொருளைப் போலே பரமபுருஷனுக்கு அடிமைப் பட்டிருக்கையையே இயல்வாகக் கொண்ட பரதந்திரப் பொருள் என்று காட்டப்பட்டது; "அஹம் க்ருத்ஸ்நஸ்ய" என்ற ஆறும் ஶ்லோகத்திலிருந்து தொடங்கி, "ந த்வஹம் தேஷு தே மயி" என்று முடியும் பனிரண்டாம் ஶ்லோகமீறாக, (1) கார்யநிலை, காரணநிலை என்னும் இரண்டு நிலைகளிலிருக்கும் சேதநாசேதநப்பொருள்கள் இரண்டுமே பரமபுருஷாதீ₄னமான ஸ்வரூபஸ்தி₂தி ப்ரவ்ருத்திகளை உடையவை என்றும், (2) பரமபுருஷன் தன் ஜ்ஞாநம் ஶக்தி முதலான கல்யாண கு₃ணங்களாலும் மற்ற எல்லா ஜீவர்களைக் காட்டிலும் மேலானவன் என்றும், மற்ற சேதநாசேதநப் பொருள்களிலுள்ள ப்ராப்யத்வ ப்ராபகத்வாதி₃களுக்குறுப்பான பெருமைகள் இவனிட்ட பிச்சையாகை யாலே, நிருபாதி₄கப்ராப்ய ப்ராபகத்வாதி₃களையுடைய இவனே, இவனுடைய ஸங்கல்பத்தாலே ப்ராப்ய ப்ராபகாதி₃களாகும் அவற்றைக்காட்டிலும் மிக மேலானவன் என்றும் காட்டப்பட்டது. ஆக, இப்ரகரணத்தின் தொடக்கத்திலிருந்து சொல்லப்படும் ஜ்ஞானத்தையுடைய ஜ்ஞாநவானே முன் ஶ்லோகங்களில் படிக்கப் பட்ட ஜ்ஞாநி ஶப்₃த₃த்திற்கு முக்₂யார்த்த₂மாகையால், "ஜ்ஞாநீ" "ஜ்ஞாநவாந்" என்னும் பத₃பே₄த₃த்தையிட்டு இப்ரகரணத்தில் அதி₄காரிகளை வேறுபடுத்துவது பொருந்தாது. ஆக, இந்த ஶ்லோகத்தால், "அஸம்ஶயம் ஸமக்₃ரம் மாம் யதா₂ ஜ்ஞாஸ்யஸி" [ஐயமறவும், பரிபூர்ணமாகவும் என்னை அறியலாம்படி] என்று

इत्यारभ्य * ये चैव सात्त्विका भावा राजसास्तामसाश्च ये। मत्त एवेति तान्विद्धि न त्वहं तेषु ते मयि॥ (१२) इति प्रकृतिद्वयस्य कार्यकारणोभयावस्थस्य परमपुरुषायत्तस्वरूपस्थितिप्रवृत्तित्वं परमपुरुषस्य च सर्वैः प्रकारैस्सर्वस्मात्परतरत्वमुक्तम्; अतस्स एवात्र ज्ञानीत्युच्यते॥ १९॥

॥ भा॥ तस्य ज्ञानिनो दुर्लभत्वमेवोपपादयति—

कामैस्तैस्तैर्हृतज्ञानाः प्रपद्यन्तेऽन्यदेवताः।
तं तं नियममास्थाय प्रकृत्या नियतास्स्वया॥ २०॥

20. காமைஸ் தைஸ்தைர் ஹ்ருதஜ்ஞாநா:
ப்ரபத்₃யந்தேऽந்யதே₃வதா:।
தம் தம் நியமமாஸ்த₂ாய ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா ॥

(உலகில் பலகோடி மனிதர்கள்)ஸ்வயா ப்ரக்ருத்யா-தமது (முக்குணமயப் பொருள்கள் விஷயமான) அநாதி₃வாஸனே யாலே, நியதா: — எப்போதும் சேர்ந்திருக்கப் பெற்றவர் களாய், தை: தை: — (தம் வாஸநாநுகு₃ணமான) அந்த அந்த, காமை: — (முக்குணமயமான) விரும்பப்படும் பொருள்களாலே, ஹ்ருத ஜ்ஞாநா: — அபஹரிக்கப்பெற்ற (என் ஸ்வரூப விஷயமான) அறிவையுடையவர்களாய், (அந்தந்தப் பொருள்கள் கிடைப்பதற்காக), அந்ய தே₃வதா:- என்னைக்காட்டிலும் வேறுபட்ட தெய்வங்களே, தம் தம் நியமம் ஆஸ்த₂ாய — அந்தந்த தே₃வதைகளேயே உகப்பிப் பதற்கு உறுப்பான நியமங்களைக் கைக்கொண்டு, ப்ரபத்₃யந்தே—அவர்களேயே ஆஶ்ரயித்து ஆராதி₄க்கிருர்கள்.

முதல் ஶ்லோகத்திலும் "யத் ஜ்ஞாத்வா நேஹ பூ₄யோऽந்யத் ஜ்ஞாதவ்யமவஶிஷ்யதே" [எவ்வறிவைப் பெற்ருல், இவ்வுலகில் அறிய வேண்டியது வேறென்று எஞ்சியிருப்பதில்லேயோ.] என்று இரண்டாம் ஶ்லோகத்திலும், "கஶ்சிந் மாம் வேத்தி தத்வத:" [பல்லாயிரவரில் ஒருவனே என்னே உள்ளபடி அறிகிருன்.] என்று மூன்ரும் ஶ்லோகத்தி லும் கூறப்பட்ட பூர்ண ஜ்ஞாநத்தையுடைய அதி₄காரி யாவன் என்று விளக்கப்பட்டதாயிற்று. 19.

20. காமங்க ளான வவற்றுற் கருத்தழிந்தார்
சேமமுற வேமற்றைத் தேவதைக—ளுமங்கள்
பற்றிநிய மங்களுடன் பண்டைத்தம் வாசனையா
லுற்றியல்வ ரன்பா லுகந்து.

பண்டை தம் வாசனையால் உற்று—தமது (முக்குணமயப் பொருள்கள் விஷயமான) அநாதி₃வாஸனையாலே எப்போதும் சேர்ந்திருக்கப் பெற்றவர்களாய், காமங்களான அஃவற்றால்—(தம் வாஸனையை ஒட்டி) விரும்பப்படும் அவ்வப் பொருள்களாலே, கருத்து அழிந்தார் — (என் விஷயமான) அறிவு அழியப்பெற்றவர்களாய், சேமம் உறவே—அந்தந்தப் பொருள்கள் கிடைப்பதற்காக, மற்றை தேவதைகள் — என்னைக்காட்டிலும் வேறுபட்ட தெய்வங்களின், நாமங்கள் பற்றி—(சிவன் இந்திரன் முதலிய) நாமங்களையே பற்றி நின்று, நியமங்களுடன் — (அவரவரையே உகப்பிப்பதற்கு உறுப்பான) நியமங்களைக் கைக்கொண்டு, அன்பால் — (அவர்களிடம்) அன்பாலே, உகந்து இயல்வர்—(அவர்களை) உகப்புடன் ஆராதி₄ப்பர்.

---

20. என்னையே ப்ராப்யமாகக் கொண்டும், மோக்ஷத்தில் தான் ஆநந்த₃மடைய விரும்பும் உபாஸகனும், என்னையே ப₂லப்ரதே₃ாபாய மாகக் கொண்டும் ஐஶ்வர்ய கைவல்யங்களை ப்ராப்யமாகக் கொள்ளு மவர்களும் ஶாஸ்த்ராதி₄காரிகளாகையாலே, அவ்வவர்க்குரிய ஸாத₄னங்களை விதி₄த்து, என்னால் படிப்படியாக முன்னேற்றி மஹாத்மா வான ஞானியாக்கத் தக்கவர்கள். பலகோடி ஜநங்கள் இப்படி ஶாஸ்த்ராதி₄காரிகளாயுமல்லாமல், ராஜஸதாமஸ நூல்களைப் பற்றி நின்று ராஜஸதாமஸ தெய்வங்களை உபாஸித்து, என்னாலும் முன்னேற்ற முடியாதபடி ஸம்ஸாரத்திலேயே உழல்வதைப் பார்க்கும் போது ஜ்ஞாநியானவன் மிகவும் கிடைத்தற்கரியவன் என்பது விளங்கும் என்று உணர்த்துவதற்காக, மேலே எட்டு ஶ்லோகங் களாலே ஸம்ஸாரிகளில் பலர் தே₃வதாந்தரபரர்களாய், தன் னிடம் பரத்வபு₃த்₃தி₄யற்றவர்களாய் வாழ்வதைக் காட்டுகிறான்.

॥ भा ॥ सर्व एव हि लौकिकाः पुरुषाः, स्वया प्रकृत्या—[पाप]वासनया गुणमयभावविषयया नियताः—नित्यान्विताः तैस्तैः

(ஸ்வயா ப்ரக்ருத்யா நியதா:) தமக்கே உரியதாய், முக்குணமய மான அந்தந்த விஷயங்களைப் பற்றியதான வாஸனையோடு எப் போதும் கூடியிருப்பவர்களாய். (ஸ்வயா) அநாதி₃காலமாகத் தமது அநுப₄வத்தால் உண்டானதாய், தமக்கே உரியதாய், தமக்கே ப₂லனளிப்பதான என்று கருத்து. (ப்ரக்ருத்யா) முக்குணவிஷயங் களைப் பற்றிய வாஸனையால். ப்ரக்ருதி ஶப்₃த₃ம் ஸ்வப₄ாவத்தைக் காட்டுவதாய், "தைஸ் தை: காமை:" என்னும் பத₃ங்களோடு சேர்த்துப் படிக்கப்படுகையால், அவ்வப் பொருள்களைப் பற்றிய விருப்பத்தை விளைக்கும் அவரவர் ஸஹஜவாஸனையை இங்கு குறிக் கிறது. (நியதா:) எப்போதும் கூடியிருப்பவர்களாய். அவனவனுடைய விஷயவாஸனை அவனவனை விட்டு எப்போதும் பிரிவதில்லை என்று கருத்து. இதனால் ஏற்படும் அநர்த்த₂த்தை முதல் பாத₃ம் கூறு கிறது, — (காமைஸ் தைஸ் தைர் ஹ்ருத ஜ்ஞாநா:) "வாயவ்யம் ஶ்வேதமாலபே₄த பூ₄திகாம:" (செல்வத்தை விரும்புமவன் வாயு விஷய மான ஶ்வேதயாக₃த்தைச் செய்யவேண்டும்) என்று வாயு முதலான அந் தந்த தே₃வதைகளால் கொடுக்கத் தக்கவையாக ஶாஸ்த்ரங்களிலிருந்து அறியப்படுமவையாய், தமது வாஸனைக்கு அநுகு₃ணமான ஐஶ்வர் யம் முதலான அந்தந்த முக்குணமயமான விஷயங்களாலே அறிவு அபஹரிக்கப் பெற்றவர்களான எல்லா லௌகிக மநுஷ்யரும். (காமை:) "லப₄தே ச தத: காமாந்" [22] என்று மேல் ஶ்லோக மொன்றில், அந்தந்த தே₃வதைகளிடமிருந்து விரும்பிப் பெறப் படும் விஷயங்களையே காமஶப்₃த₃த்தால் குறிக்கையாலே, இங்கும் காமஶப்₃த₃ம் — "காம்யந்த இதி காமா:" [விரும்பப்படுமவை காமங் களாகின்றன.] என்கிற கர்மணி வ்யுத்பத்தியால் விரும்பப்படும் புத்ரன், பசு, அந்நம் முதலிய முக்குணமயமான விஷயங்களைக் குறிக்கிறது. (தைஸ் தை:) அவரவர் வாஸனைக்கு அநுகு₃ணமாக, "யே சைவ" [12] என்னும் ஶ்லோகத்திற் கூறப்பட்டபடி இவ் விஷயங்கள் முக்குணங்களின் ஏற்றத்தாழ்வையிட்டுப் பல பலவாயிருப் பவை என்று காட்டப்படுகிறது. (ஹ்ருத ஜ்ஞாநா:) அறிவு அப ஹரிக்கப் பெற்றவர்கள். பன்மைக்கு ஸங்கோசம் (சுருக்கம்) இன்மையாலும், மேலே "ஸர்வபூ₄தாநி ஸம்மோஹம் யாந்தி" [27] என்று எல்லா ஸம்ஸாரி ஜீவர்களும் அறிவிழப்பதாகக் கூறுகை

स्ववासनानुरूपैर्गुणमयैरेव कामैः-इच्छाविषयभूतैः हृतमत्स्वरूपविषयज्ञानाः

யாலும், இங்கு உலகிலுள்ள எல்லா ஸம்ஸாரி புருஷர்களும் கருதப் படுகிறார்கள். ஆர்த்தன் முதலான நாலு வித$_4$மான ப$_4$க்தர்களும் ஶாஸ்த்ராதி$_4$காரிகளான வைதி$_3$க புருஷர்களாய், மேன்மேலே புண்ணியமிகுதியாலே என் விஷயமான அறிவைச் சிறிது சிறிதாகப் பெற்றவராய், தே$_3$வதாந்தர ஸமாஶ்ரயணமில்லாதவர்களாயிருக்கை யாலே, அவர்களுக்கு எதிர்த்தட்டாயிருப்பவர்களாய், ஶாஸ்த்ராதி$_4$கார யோக்$_3$யர்களாயிருந்தும் ஶாஸ்த்ராதி$_4$காரிகளல்லாமலிருக்கும் எல்லா லௌகிக புருஷர்களும் இங்கு கருதப்படுகிறார்கள். "மநுஷ்யாணாம் ஸஹஸ்ரேஷு" என்னும் ஶ்லோகத்தில் மநுஷ்ய ஶப்$_3$த$_3$த்தால் ஶாஸ்த்ராதி$_4$கார யோக்$_3$யராக லீலா விபூ$_4$தியிலுள்ள எல்லா ஜீவர்களும் குறிக்கப்பட்டனர். அவர்கள் கோடிக்கணக்கானவர்கள். "ஸஹஸ்ரேஷு" என்று அவர்களில் ஆயிரக்கணக்கானவர்களாய், ஶாஸ்த்ராதி$_4$காரிகளில் முதற்படியில் நிற்கும் ஐஶ்வர்யார்த்தி$_2$கள் குறிக்கப்பட்டனர். அவர்களிலும் கீழ்ப்பட்டு, "அல்பமேத$_4$ஸாம்" [23] என்கிறபடியே புல்லறிவாளராய், ஶாஸ்த்ர ஸம்ப$_3$ந்த$_4$மிருந்தும் ஶாஸ்த்ர தாத்பர்யமறியாமையாலே ஶாஸ்த்ராதி$_4$காரிகளாகாத லக்ஷக்கணக்கானவர்கள் இதுமுதல் நான்கு ஶ்லோகங்களிலும், மேல் நான்கு ஶ்லோகங்களில் "அபு$_3$த்$_3$த$_4$ய:" [24] "மூட$_4$:" [25] என்கிறபடியே ஶாஸ்த்ர ஸம்ப$_3$ந்த$_4$மேயில்லாமையாலே முற்கூறியவர்களிலும் கீழ்ப்பட்ட அறிவிலிகளாய், முன்னேற்றவே முடியாத கோடிக்கணக்கானவர்களும் குறிக்கப்படுகின்றனர் என்று உணரத்தக்கது. (ஹ்ருத ஜ்ஞாநா:) அறிவு இழந்தவர்கள். "ஜ்ஞாநம் தே஽ஹம் ஸவிஜ்ஞாநம்" [2] என்று தொடங்கி இப்ரகரணத்தில் விரிவாகக் கூறப்பட்டதாய், சென்ற ஶ்லோகத்தில் ஜ்ஞாநிக்கு ஏற்படுவதாகக் கூறப்பட்டதான, பரமபுருஷனைப் பற்றிய உண்மையறிவே இங்கு ஜ்ஞாந ஶப்$_3$த$_3$த்திற்குப் பொருளாக முடியும் என்பது ப்ரகரணத்திலிருந்து விளங்குகிறது. 'ஹ்ருத' ஶப்$_3$த$_3$ம் இவ்வறிவு அநாதி$_3$காலமாக அபஹரிக்கப் பெற்றிருப்பதைக் காட்டுகிறது. ரத்தினத்திற்கு ஒளிபோலே, இந்த ஜ்ஞாநம் ஆத்மாவுக்கு இயல்பானது என்றும், அழுக்குப் படிவதினால் ஒளி மழுங்குவதுபோலே, அநாதி$_3$வாஸனையாலே இவ்வறிவு மழுங்கிக் கிடக்கிறது என்றும் விளங்குகிறது. இப்படி அறிவிழந்தமையால் ஏற்படும் அநர்த்த$_2$த்தை இரண்டாவது, மூன்றாவது பாத$_3$ங்கள் காட்டுகின்றன — (அந்யதே$_3$வதா: தம் தம் நியமம் ஆஸ்தா$_2$ய ப்ரபத்$_3$யந்தே) என்னையொழிந்த மற்ற தே$_3$வதைகளை அவரவர்க்குரிய நியமங்களைப்பற்றி

तत्तत्कामसिद्ध्यर्थं अन्यदेवताः—मद्व्यतिरिक्ताः केवलेन्द्रादिदेवताः तं तं

நின்று ஆஶ்ரயிக்கின்றனர். "முக்குணமயமான பொருள்களில் விருப்பத்தாலே அறிவிழந்து மற்ற தே₃வதைகளை ஆஶ்ரயிக்கின்றனர்" என்று கூறுகையால், "தாம் விரும்பும் அவ்வப்பொருள்கள் ஸித்₃தி₄ப் பதற்காக, அவ்வப்பொருள்களைக் கொடுக்கவல்லவராக ஶாஸ்த்ரங் களிலிருந்து அறியப்படும் அந்தந்த தே₃வதைகளை ஆஶ்ரயிக் கின்றனர்" என்று தேறுகிறது. (அந்ய தே₃வதா:) என்னையொழிந்த இந்திரன், சிவன் முதலான தே₃வதைகளை மாத்திரம். இந்த்₃ர ப்ராணாதி₄கரணம் முதலானவற்றில் கூறப்பட்டபடி இந்த்₃ராதி₃ ஶப்₃த₃ம் அவர்களுக்கு அந்தர்யாமியான ஸர்வேஶ்வரனையே குறிக் கிறது என்று அறிந்து, இந்த்₃ராதி₃களைப் பற்றிய யாக₃ங்களைச் செய்பவர்கள் தே₃வதாந்தர பரர்களல்லாமையாலே, "இந்த்₃ராதி₃ தே₃வதைகள் மாத்திரமே இந்த யாக₃ங்களால் ஆராதி₄கப்படு கின்றனர்" என்னும் எண்ணத்துடன் அவற்றைச் செய்பவர்களே இங்கு கருதப்படுகின்றனர் என்று கொள்ளவேண்டும். இவர்களுக்கு ஶாஸ்த்ர ஸம்ப₃ந்த₄மிருந்தும், சதுர்வித₄ ப₄க்தர்களைப்போலே ஶாஸ்த்ரத்தின் தாத்பர்யமறியாமையாலே இவர்கள் ஶாஸ்த்ராதி₄ காரிகளல்லாதவராய்ப் போகிறார்கள். அதனாலேயே புல்லறிவாளர் களென்று இப்ரகரணத்தில் நிந்தி₃க்கப்படுகிறார்கள். ஆகையால், இந்த ஶ்லோகங்கள் ஞானி தவிர்ந்த மற்ற மூன்று ப₄க்தர்களையும் பற்றியது என்று சிலர் வ்யாக்₂யானம் செய்வது "அந்யதே₃வதா: ப்ரபத்₃யந்தே" என்னும் பத₃ங்களுக்குப் பொருந்தாது என விளங்கு கிறது. இதையே "ஐகாந்த்யம் ப₄க₃வத்யேஷாம் ஸமாநமதி₄காரிணாம்" [28] [இவ்வதி₄காரிகள் அனைவரும் ப₄க₃வான் ஒருவனையே (தத்தம் ப்ராப்யத்துக்கு) ப₂லப்ரத₃ ஸாத₄னமாகப் பற்றியவர்கள்.] என்று ஆளவந்தாரும் கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் அருளிச்செய்தார். இத்தால் — தே₃வதாந்தர ஸமாஶ்ரயணம் செய்பவர்களை ப₄க₃வான் 'புல்லறிவாளர்கள்' என்று நிந்தி₃த்திருக்கையாலே, அறிவாளிகள் மற்ற ப₂லன்களை விரும்பினாலும் ப₄க₃வானிடமிருந்தே பெறவிரும்ப வேண்டும் என்று தெளிவாகிறது. இல்லாவிடில், "த்ருஷிதோ ஜாஹ்நவீதீரே கூபம் க₂நதி து₃ர்மதி:" [க₃ங்கைக் கரையிலிருந்து கொண்டு த₃ாஹ ஶாந்திக்காகக் கிணறு வெட்டும் புல்லறிவாளனைப் போன்றவன், இதர ப₂லன்களுக்காக இதர தே₃வதைகளை ஆஶ்ர யிக்கும் அறிவுகெட்டவன்.] என்னும் நிலையை அடைவான் என்று கருத்து. "தே₃வதாந்தரபரர்கள் அந்தந்த தே₃வதைகளை ஆஶ்ர யிக்கும் ப்ரகாரம் எப்படி?" எனில்: (தம் தம் நியமம் ஆஸ்தா₂ய)

नियममास्थाय — तत्तद्देवताविशेषमात्रप्रीणनासाधारणं नियमम्, प्रपद्यन्ते—ता एवाश्रित्यार्चयन्ते ॥ २० ॥

ரஜஸ்தமோகு₃ணங்கள் மிக்க சிவன் ஶக்தி முதலான அந்தந்த தே₃வதைகளை மாத்திரம் உகப்பிப்பவையாக ராஜஸதாமஸ நூல்களில் சொல்லப்பட்ட விபூ₄திருத்₃ராக்ஷத₄ாரணம், சுடுகாட்டில் பிணத்தை எரித்த சாம்பலைப் பூசிக்கொண்டு கபால மாலை த₄ரித்து கட்குடத்தில் உருத்திரனைப் பூஜிப்பது, நிர்வாண ஸ்த்ரீயை ஶக்தியாகப் பூஜிப்பது முதலான க்ஷுத்₃ர நியமங்களைப் பின்பற்றி நின்று ஆஶ்ரயிக்கிறார்கள். தே₃வதைகள் பலராகையாலும், அவர்களை உகப்பிக்கும் நியமங்கள் வாய்விட்டுச் சொல்லமுடியாதபடி மிகத் தாழ்ந்தவையாயிருப்பதாலும் ''தம் தம் நியமம்'' என்கிறான். (தம் தம் நியமம்) ''சக்ராதி₃த₄ாரணம் பும்ஸாம் பரஸம்ப₃ந்த₄வேத₃நம் । பதிவ்ரதா நிமித்தம் ஹி வளயாதி₃விபூ₄ஷணம் ॥'' [சக்ரம், ஶங்க₂ம், ஊர்த்₄வ புண்ட்₃ரம் முதலானவற்றை மனிதர்கள் த₄ரிப்பது—அவர்களுக்கும், பரமாத்மாவுக்குமுள்ள ஸம்ப₃ந்த₄த்தை உணர்த்துவது; பதிவ்ரதைக்கு வளை முதலிய ஆப₄ரணங்கள் போன்றவை இவை.] என்கிற பரம ஸாத்விகமான நியமங்கள் போன்றவையன்றே இவை. இப்படிப்பட்ட தாழ்ந்த காரியங்களையும் சிலர் செய்வார்களோ? என்னும் ஸந்தே₃ஹத்தைப் போக்குகிறது கடைசிப் பாத₃ம், — (ப்ரக்ருத்யா நியதா: ஸ்வயா... ப்ரபத்₃யந்தே) ராஜஸ தாமஸ விஷயங்களில் அநாதி₃வாஸனையாலே, அவற்றைப் பெறுவதற்காக, அவ்விஷயங்களைக் கொடுக்கவல்லவரான இதர தே₃வதைகளை அந்தந்த நியமங்களையுடையராய், மஹா விஶ்வாஸத்தோடு பற்றி, அந்தந்தக் கர்மங்களாலே. அந்தந்த தே₃வதைகளையே ஆராதி₄க்கிறார்கள் என்று கருத்து. '' அந்யதே₃வதா: ப்ரபத்₃யந்தே '' என்கையாலே, என்னைப்பற்றுகிறவர்களுக்கும், இவர்களுக்கும் விஶ்வாஸத்தில் வாசியில்லை; பற்றுகிற விஷயத்திலேயே வாசி என்று காட்டுகிறான்.

''அநந்ய ஸாத்₄யே ஸ்வாபீ₄ஷ்டே மஹாவிஶ்வாஸ பூர்வகம் ।
ததே₃கோபாயதாயாச்ஞா ப்ரபத்தி: ஶரணாக₃தி: ॥''

[தன் விருப்பம் வேறு எதனாலும் ஸாதி₄க்கமுடியாமற் போனவளவில், அதைக்கொடுக்க வல்லவன் ஒருவனை மஹா விஶ்வாஸத்தோடு உபாயமாக வரிப்பதே 'ப்ரபத்தி' என்றும், 'ஶரணாக₃தி' என்றும் சொல்லப்படுகிறது.] என்பது ப்ரபத்தி லக்ஷணமன்றோ. ஆக, ப்ராக்ருத ப₂லன்களில் விருப்பத்தாலே உலகினரில் பலர் மற்ற தெய்வங்களை ஆஶ்ரயிக்கிறார்கள் என்றதாயிற்று. 20.

यो यो यां यां तनुं भक्तः श्रद्धयाऽर्चितुमिच्छति ।
तस्य तस्याचलां श्रद्धां तामेव विदधाम्यहम् ॥ २१ ॥

21. யோ யோ யாம் யாம் தநும் ப₄க்த: ஶ்ரத்₃த₄யார்ச்சிதுமிச்ச₂தி।
தஸ்ய தஸ்யாசலாம் ஶ்ரத்₃த₄ாம் தாமேவ வித₃த₄ாம்யஹம் ||

ய: ய: ப₄க்த: — எந்த எந்த தே₃வதாந்தர ப₄க்தன், யாம் யாம் தநும்—(எனது) ஶரீரமான எந்த எந்த தே₃வதையை, ஶ்ரத்₃த₄யா — விஶ்வாஸத்தோடு, அர்ச்சிதும் — ஆராதி₄ப்பதற்கு, இச்ச₂தி—விரும்புகிறுரே, தஸ்ய தஸ்ய— அந்த அந்த ப₄க்தனுக்கு, தாம் ஏவ ஶ்ரத்₃த₄ாம் — அந்த (தே₃வதா விஷயமான) விஶ்வாஸத்தையே, அசலாம் — (இடையூறுகளால்) அசையாததாய், அஹம் — நான், வித₃த₄ாமி—நிலைநிறுத்துகிறேன்.

---

21. இங்கெ னுருவா மிமையோரை யாரையா
ரங்கருத்தி லர்ச்சிப்பா னிச்சிப்பார்—சங்கையற
நானவருக் காங்கவர்பா னன்றிருப்புத் தான்சலியா
தானவகை செய்வ னமர்ந்து.

இங்கு—இவ்வுலகில், யார் (யார்) — எந்த (எந்த) தே₃வதாந்தரப₄க்தர், என் உருவாம் இமையோரை யாரை (யாரை)— என் ஶரீரமான எந்த (எந்த) தே₃வதையை, சங்கை அற அம் கருத்தில் அர்ச்சிப்பான் இச்சிப்பார்—உறுதியான மஹா விஶ்வாஸத்தோடு ஆராதி₄க்க விரும்புகிறுரோ, (அவர்) அவருக்கு—அந்த (அந்த) தே₃வதாந்தர ப₄க்தருக்கு, ஆங்கு அவர் (அவர்) பால் — அந்த (அந்த) தே₃வதையிடத்திலே, நன்று இருப்பு தான் சலியாதான வகை—உறுதியான விஶ்வாஸமானது (இடையூறுகளால்) அசையாதபடி, நான் அமர்ந்து செய்வன்—நான் பொருந்திச் செய்வேன்.

---

21. *ஶாஸ்த்ராதி₄காரிகளல்லாதவர்களில் [24-வது ஶ்லோகத்திலிருந்து சொல்லப்படும்] ஶாஸ்த்ரஸம்ப₃ந்த₄மேயில்லாதவர்களைக் காட்டிலும், ஶாஸ்த்ரஸித்₃த₄ரான தே₃வதைகளின் ப₄க்தர்களாயிருப்பதன்மூலம் ஒவ்வொரு ப₂லனைப் பெறவிரும்பி ஶாஸ்த்ரஸம்*

॥ भा ॥ ता अपि देवता मदीयास्तनवः ॥ य आदित्ये तिष्ठन्...यमादित्यो न वेद, यस्यादित्यश्शरीरम् (बृ. ५. ९) इत्यादिश्रुतिभिः प्रतिपादिताः। मदीयास्तनव इत्यजानन्नपि यो यो यां यां

ப2ந்த4ம் கொண்டிருப்பவர்கள் சிறந்தவர்களன்றோ. அவர்களுக்கு, அந்த தே3வதைகளை ஆராதி4ப்பதற்கு உறுப்பான ப4க்தி ஶ்ரத்3தை4கள் தளர்ந்ததாகில், ஶாஸ்த்ர விஶ்வாஸமின்மையாகிற கீழ்ப்படிக்கு இழிந்து, ''அலாபே4 மத்தகாஶிந்யா த்3ருஷ்டா திர்யக்ஷு காமிதா'' [ரமிப்பதற்கு ஸ்த்ரீ கிடைக்காதபோது, மனிதன் மிருகங்களிடமும் ரமிப்பதைக் காண்கிறோம்] என்கிற ந்யாயத்தாலே, அநர்த்த2த்தை விளைக்கும் மிகத்தாழ்ந்த உபாயங்களில் ஈடுபட்டு அழிவார்கள் என்னும் ப4யத்தாலே, பரமகாருணிகனான நான் இவர்களையும் க்ரமமாக முன்னேற்றுவதற்காக அந்த தே3வதைகளை ஆராதி4ப்பதற்கு உறுப்பான ப4க்திஶ்ரத்3தை4களையே அவர்களுக்கு நிலைநிறுத்துகிறேன் என்கிறான் இந்த ஶ்லோகத்தில். (யோ யோ யாம் யாம் தநும்) எந்த எந்த மனிதன், (எனது) ஶரீரமான எந்த எந்த அந்ய தே3வதையை. '' அந்யதே3வதா: '' என்று சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட தே3வதாந்தரங்கள், தனக்கு ஶரீரமாயிருப்பதையிட்டு இங்கு தநுஶப்3த3த்தாலே குறிக்கப்படுகிறார்கள் என்று விளங்குகிறது. இப்படியல்லாமல், ராமன், க்ருஷ்ணன் முதலான அவதாரரூபங்கள் போலே, சிவன், இந்திரன், ஸூர்யன் முதலான தே3வதைகளும் ஸர்வேஶ்வரனுடைய அவதாரரூபங்களே என்று 'தநு' ஶப்3த3த்திற்குப் பொருள்கொள்ளப் பார்த்தால், முந்தின ஶ்லோகத்தில் அவர்களை 'அந்யதே3வதைகள்' என்று தன்னைக் காட்டிலும் வேறுபடுத்திப் பேசியிருப்பதும், 23-வது ஶ்லோகத்தில் அவர்களின் ப4க்தர்களைப் புல்லறிவாளர்கள் என்று நிந்தி3த்து, தன் ப4க்தர்களுக்கு அநந்த ஸ்தி2ர ப2லமென்றும், இதர தே3வப4க்தர்களுக்கு அல்பாஸ்தி2ர ப2லன் என்றும் உரைத்திருப்பதும் பொருந்தாமற் போய்விடும். ஆகையால் பரமாத்மாவான தன்னிலும் மிகவும் வேறுபட்ட ஜீவர்களான மற்ற தே3வதைகளும் தனது ஶரீரமே என்று உணர்த்துவதற்காகவே இங்கு 'தநு' ஶப்3த3த்தை இட்டிருப்பதாகக் கொள்ளவேண்டும். '' ய ஆதி3த்யே திஷ்ட2ந்...யமாதி3த்யோ ந வேத3 யஸ்ய ஆதி3த்ய: ஶரீரம்'' [ப்3ருஹ 5-9] என்று ஶ்ருதியும், ஆதி3த்யன் முதலான தே3வர்களைப் பரமாத்மாவை உள்ளபடி அறியாதவராய், அவனுக்கு ஶரீரமாயிருக்கும் ஜீவர்களாகவே காட்டிற்று. (யாம் யாம் தநும் ய: ய: ப4க்த: ஶ்ரத்3த4யா அர்ச்சிது

मदीया[मादित्या]मिन्द्रादिकां तनुं भक्तः श्रद्धयाऽर्चितुमिच्छति ; तस्य तस्य अजानतोऽपि मत्तनुविषयैषा श्रद्धेत्यहमनुसन्धाय तामेव अचलां—निर्विघ्नां विदधाम्यहम्॥ २१ ॥

மிச்ச₂தி) எனக்கு ஶரீரமான எந்த எந்த தே₃வதையை எந்த எந்த ப₄க்தன் விஶ்வாஸத்தோடு ஆராதி₄க்க விரும்புகிருனே. ஆராதி₄க்கும் ப₄க்தன் புல்லறிவாளனுகையாலே, அந்த தே₃வதையை பரமாத்மா வின் ஶரீரமென்று அறிந்து ஆராதி₄ப்பதில்லே; அப்படி ஆராதி₄த்தா னுகில், ப்ரதர்த₃நவித்₃யை முதலானவற்றிற்போலே அது பரமபுருஷ னின் ஆராத₄னமாகி அநந்தஸ்தி₂ரப₂லனேக் கொடுத்துவிடும். இவ னுக்கோ அல்பாஸ்தி₂ர ப₂லனென்று மேலே சொல்லப்படுகிறது. ''ந து மாம் அபி₄ஜாநாதி தத்வேந'' [9-24] [என்னே (ஸர்வதே₃வாந்தர் யாமியாக) உள்ளபடி அறிவதில்லே] என்னுமிடத்தில் அந்யதே₃வதா ப₄க்தர்கள் அந்த தே₃வதைகள் ஸர்வேஶ்வர ஶரீரம் என்று அறிவ தில்லே என்றும் கூறப்படுகிறது. அப்படியிருக்க, இங்கு பொருந்தா ததும், பயனற்றதுமான 'தநு' ஶப்₃த₃த்தை இடாமல் தே₃வதா ஶப்₃த₃த்தையன்றோ இட்டிருக்கவேண்டும் எனில், '' அவன் தான் ஆராதி₄க்கும் தே₃வதையை என் ஶரீரமென்று அறியாமல் ஆராதி₄த்தாலும், ஆராதி₄க்கப்படும் நான் 'நம் ஶரீர விஷயமான ஆராத₄னந்தானே இது' என்று எண்ணி. அவனுக்கு அந்த ஶ்ரத்₃தை₄ யையே இடையூறில்லாதபடி நிலேநிறுத்துகிறேன்'' என்று உத்த ரார்த்த₄த்திற் சொல்லுவதற்கு அநுகு₃ணமாகத் தநு ஶப்₃த₃த்தை இடுகிருன் என்று கண்டுகொள்வது. (தஸ்ய தஸ்ய தாமேவ ஶ்ரத்₃தா₄ம் அசலாம் வித₃தா₄மி) அந்தந்த தே₃வதா ப₄க்தனுக்கு, அந்தந்த தே₃வதா ப₄க்தி விஶ்வாஸங்களேயே இடையூறுகளால் தளராதபடி நிலேநிறுத்துகிறேன். இங்கு ஶ்ரத்₃தை₄யாகிற விஶ்வா ஸத்தைச் சொன்னது ப₄க்திக்கும் உபலக்ஷணம். தே₃ஹத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மா உண்டென்று அறியாத ஒருவன், அரசனின் உடலுக்கு உபசாரங்களேச் செய்து, அதற்கான பரிசை அவ்வுடல் கொடுப்பதாக நினேத்தாலும், உண்மையில் அந்த ராஜ ஶரீரத்திலிருக்கும் ஆத்மாவே 'தன் ஶரீரத்தை உபசரித்தான்' என்று உகந்து பரிசளிப்பதுபோலே இங்கும் என்று கண்டுகொள்வது. (ஶ்ரத்₃தா₄ம் அசலாம் வித₃தா₄மி) விஶ்வாஸத்தை அசையாததாகச் செய்கிறேன். உண்டான விஶ்வாஸத்தை அசையாததாகச் செய்கை யாவது,— அதற்கு இடையூறில்லாதபடி செய்வதன்மூலம் ப₂லன் கிடைக்கும் வரையில் அதை இடைவிடாமல் வளர்க்கையேயாகும்.

स तया श्रद्धया युक्तस्तस्याराधनमीहते ।
लभते च ततः कामान् मयैव विहितान् हि तान् ॥ २२ ॥

22. ஸ தயா ஶ்ரத்₃த₄யா யுக்தஸ் தஸ்யாராத₄நமீஹதே ।
லப₄தே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந் ॥

ஸ: (ஸ:)—அந்த (அந்த) தே₃வதாந்தரப₄க்தன், தயா ஶ்ரத்₃த₄யா யுக்த:—அந்த விஶ்வாஸத்தோடு கூடியவனாய், தஸ்ய (தஸ்ய) — அந்த (அந்த) தே₃வதைக்கு, ஆராத₄நம் ஈஹதே—ஆராத₄னம் செய்ய முயல்கிறான்; தத:—அந்தந்த தே₃வதையிடமிருந்து, மயா ஏவ ஹி விஹிதாந்—என்னாலேயே கொடுக்கப்பட்ட, தாந் (தாந்) காமாந் — தான் விரும்பிய அந்த (அந்தப்) பொருள்களை, லப₄தே ச — அடையவும் செய்கிறான்.

(தாமேவ வித₃த₄₄ாமி) அந்த விஶ்வாஸத்தையே நிலைநிறுத்துகிறேன். "நாட்டினான் தெய்வமெங்கும்" [திருமாலை 10] என்கிறபடியே, கொடியைப் பந்தலிலே படரவிடுவதற்குச் சுள்ளிக்கால் நாட்டுவாரைப் போலே,

"ஸூர்யஸ்யைவ து யோ ப₄க்த: ஸப்தஜந்மாந்தரம் நர: ।
தஸ்யைவ து ப்ரஸாதே₃ந ருத்₃ரப₄க்த: ப்ரஜாயதே ॥
ஶங்கரஸ்ய து யோ ப₄க்த: ஸப்தஜந்மாந்தரம் நர: ।
தஸ்யைவ து ப்ரஸாதே₃ந விஷ்ணுப₄க்த: ப்ரஜாயதே ॥"

[ஏழு ஜன்மம் சூரியனுக்கு ப₄க்தனாயிருப்பவன், அவனருளால் சிவ ப₄க்தனாகப்பிறக்கிறான். ஏழுஜன்மம் சிவப₄க்தனாயிருப்பவன் அவனருளால் விஷ்ணுப₄க்தனாகிறான்] என்கிற ப்ரமாணத்தில் சொன்னபடி, தன்னிடம் காலக்ரமத்தில் ப₄க்திவிஶ்வாஸங்கள் உண்டாவதற்கு உறுப்பாக, அந்த ஜன்மத்தில் அந்த தே₃வதாந்தர ப₄க்திவிஶ்வாஸங்களையே பரமகாருணிகனான நான் நிலைநிறுத்துகிறேன் என்றபடி. அப்படி நிலைநிறுத்தாவிடில், ஒரு வகையில் ஶாஸ்த்ரஸம்ப₃ந்த₄ம் கொண்டிருக்குமிவர்கள் ஶாஸ்த்ரவிஶ்வாஸமில்லாத நாஸ்திகர்களாகப் போய்விடுவார்களாகையாலே, அந்த ஶாஸ்த்ர விஶ்வாஸத்தைப் பற்றுசாகக்கொண்டு, படிப்படியாக அவர்களை முன்னேற்றி என் ப₄க்தர்களாக்குவதற்காக, அந்த ஜன்மத்தில் அந்த தே₃வதாந்தர விஶ்வாஸத்தையே நிலைநிறுத்துகிறேன் என்று கருத்து. 22.

॥ भा ॥ स तया—निर्विघ्नया श्रद्धया युक्तः तस्य—इन्द्रादेः आराधनं प्रति ईहते। ततः—मत्तनुभूतेन्द्रादिदेवताराधनात् तानेव हि स्वाभिलषि-

22. அந்த விருப்பத் துடனே யவரையவர்
தந்த மனமிறைஞ்சிச் சார்வுறுவர்—சிந்தையுட
னென்பாற் செயப்பட்டே யிங்கவராற் காமமவை
தம்பா லவரடைவர் தாம்.

அவர் (அவர்)—அந்த (அந்த) தே₃வதாந்தர ப₄க்தர்கள், அவரை (அவரை)—அந்த (அந்த) தே₃வதையை, அந்த விருப்பத்துடனே — அந்த விஶ்வாஸத்தோடு கூடவே, சிந்தையுடன் — அந்த (அந்த) தே₃வதைகளைப் பற்றிய நினைவுடன், தம் தம் மனம் இறைஞ்சி சார்வுறுவர் — தத்தம் மனத்தினுலே ஆராதி₄த்து ஆஶ்ரயிப்பார்கள்; என்பால் செயப்பட்டே—(உண்மையில்) என்னுல் கொடுக்கப் பட்டவையேயான, காமம் அவை (அவை)—தாம் விரும்பிய (அந்தந்தப்) பொருள்களை, அவரால்—அந்த தே₃வதையிட மிருந்து, அவர் தாம்—அந்த தே₃வதாப₄க்தர்கள், தம்பால் அடைவர்—தமக்கென்றே அடைவர்.

22. அந்தந்த தே₃வதைகளிடம் ப₄க்தி விஶ்வாஸங்களை நிலைநிறுத்தினுலும், கர்மவஶ்யரான அந்தந்த தே₃வர்கள் அவ்வப் ப₂லன்களை அளிக்க வல்லமையுடையவர்கள் என்று எப்படி நம் புவது? எனில்: அந்தந்த தே₃வதாராத₄னங்களைச் செய்வார்க்கு அவ்வப்ப₂லன்கள் கிடைக்கும் என்று ஶாஸ்த்ரங்களில் விதி₄த்தவன் நானேயாகையால், அந்தந்த தே₃வதைகளுக்கு நானே அந்தர்யாமி யாயிருந்துகொண்டு, அவர்கள் மூலம் அவ்வப்ப₂லன்களை ஆராத₄கர் களுக்கு அளிக்கிறேனுகையால், அவ்வப்ப₂லன்களையும் அவர்கள் குறைவறப்பெற்றுப் போகிறுர்கள் என்கிறுன். (ஸ தயா ஶ்ரத்₃த₄யா யுக்த:) முன் ஶ்லோகத்தில் ''ய: ய:'' என்றிருப்பதையொட்டி, இங்கு 'ஸ:' முதலான பத₃ங்களையும் ஆவ்ருத்தி செய்து கொள்ளவேண்டும். அந்தந்த தே₃வதாந்தரப₄க்தன் அந்தந்த தே₃வதாவிஷயமான ப₄க்தி விஶ்வாஸங்களோடு கூடியவனுய்; (தயா ஶ்ரத்₃த₄யா யுக்த;) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடி என்னுல் இடையூறில்லாதபடி நிலை

तान् कामान् मयैव विहितान् लभते। यद्यप्याराधनकाले आराध्येन्द्रादयो मदीयास्तनवः, तत एव तदर्चनं च मदाराधनमिति न जानाति ;

நிறுத்தப்பட்ட ஶ்ரத்₃தை₄யோடு கூடியவனாய் என்றபடி. (தஸ்ய ஆராத₄நம் ஈஹதே) இந்திரன் முதலான அந்தந்த தே₃வர்களுடைய ஆராத₄னத்தைச் செய்ய முயல்கிறான். முன் இரண்டு ஶ்லோகங்களிலும் 'தே₃வதா:' 'தநும்' என்று தே₃வர்களைக்குறிக்கும் ஸ்த்ரீலிங்க₃ ஶப்₃த₃ம் பிரயோகி₃க்கப்பட்டிருந்தபோதிலும், அடுத்த ஶ்லோகத்திற் போலே இங்கும், புல்லிங்க₃மான தே₃வஶப்₃த₃மே கருதப்படுகிறதாகையாலே, 'தஸ்ய' என்னும் புல்லிங்க₃ஶப்₃த₃த்தாலே அநுவதி₃ப்பது பொருந்தும். 'தஸ்யா:' என்று ஸ்த்ரீலிங்க₃ஶப்₃த₃மாகவே கொண்டு, "தஸ்யா: ராத₄நம்" என்று பத₃ம் பிரித்து இதே பொருளைக் கொள்ளலாமாயினும், அப்படிக் கொள்ளும்போது, ஆராத₄னம் என்னும் பொருளில் அப்ரஸித்₃த₄மான ராத₄நஶப்₃த₃த்தைப் பிரயோகி₃த்திருப்பதாகக் கொள்ளவேண்டிய அஸ்வாரஸ்யம் வருகையால், "தஸ்ய—இந்த்₃ராதே₃: ஆராத₄நம்" என்று ப₄ாஷ்யமிடுவதன்மூலம் அப்படிப் பத₃ம் பிரிப்பது அநாத₃ரிக்கப்பட்டது. முன்னிரண்டு ஶ்லோகத்திலுமிருப்பதையொட்டி 'தஸ்யா:'என்று ஸ்த்ரீலிங்க₃ஶப்₃த₃ம் இருப்பதே பொருந்தும் என்று கருதினால், 'தஸ்யா: ராத₄னம்' என்றே ஶ்லோகத்தில் பத₃ச்சே₂த₃ம் கொண்டு, ப₄ாஷ்யத்தில் ப₂லிதார்த்த₂த்தைச் சொல்லுவதாகவும் கொள்ளலாம். இனி, உத்தரார்த்த₄த்தில், "இவர்களைப் படிப்படியாக ஶாஸ்த்ராதி₄காரிகளாக்குவதற்காக, அந்தந்த தே₃வதைகளுக்கு அந்தர்யாமியான நானே, அவர்கள் மூலம் அந்தந்த ப₄க்தர்கள் விரும்பிய ப₂லன்களையும் அளிக்கிறேன்" என்று காட்டுகிறான்:— (தத:) எனது ஶரீரமாயிருக்கும் இந்த்₃ராதி₃களின் ஆராத₄னத்தினால். "தத:" என்று இந்த்₃ராதி₃ தே₃வதைகளிடமிருந்து என்று பொருள்கொள்வதில் பயன் அதி₄கமில்லை; "மயைவ விஹிதாந் ஹி தாந்" என்று தானே ப₂லனை அளிப்பதாகக் கூறுகையால். ஆகையால், "தஸ்யாராத₄நம்" என்று முற்பாதியில் சொல்லப்பட்ட இந்த்₃ராதி₃களின் ஆராத₄னமே இங்கு "தத:" என்று அநுவதி₃க்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். (தாந் காமாந் லப₄தே ச) அவனவன் விரும்பிய அந்தந்தக் காமங்களை அடையவும் செய்கிறான். கர்மவஶ்யராய், அல்ப ஶக்தியுடையவர்களான அந்த தே₃வதைகள் அதைக் கொடுக்கவல்லவரோ? எனில்; (மயைவ ஹி விஹிதாந்) அவர்களுக்கு அந்தர்யாமியான என்னாலேயே அப்ப₂லன்கள் அளிக்கப்படுகிறதாகையால், ஆராத₄கர்கள்

तथाऽपि तस्य वस्तुतो मदाराधनत्वादाराधकाभिलषितमहमेव विदधामि ॥ २२॥

ப₂லனைப்பெறுவதில் ஒரு குறையுமில்லை என்கை. (ஹி) இவ்விஷயம், "சதுர்ஹோதாரோ யத்ர ஸம்பத₃ம் க₃ச்ச₂ந்தி தே₃வை:" [யஜு-ஆர 3-11-21] [பரமாத்மா தே₃வர்களுக்கு அந்தர்யாமியாயிருப்பதாலேயே யஜ்ஞங்கள் தே₃வர்களோடு தொடர்பு பெறுகின்றன] முதலான ஶாஸ்த்ரங்களில் ப்ரஸித்₃த₄ம் என்று கருத்து. "ஹிதாந் காமாந்" என்று கூட்டி, "தனக்கு ஹிதமான அந்தந்தப்பொருள்களை அடைகிருன்" என்று கொள்ளக்கூடாதோ? எனில்: அடுத்த ஶ்லோகத்தில் புல்லறிவாளர்களான அவர்கள் அல்பாஸ்தி₂ரப₂லன்களையே பெறுகிருர்கள் என்று நிந்தி₃த்திருக்கையாலே, அறிவின்மையால் அவர்கள் விரும்பும் அப்ப₂லன்களை இங்கு ஹிதமென்பது பொருந்தாது. "ஸ:" "தயா ஶ்ரத்₃த₄யா" "தஸ்ய" என்றதைப்போலே, "தாந் காமாந்" என்றிருக்கவேண்டியது நியாயமாகையாலும், மற்ற தெய்வங்கள் அவ்வப்ப₂லன்களைக் கொடுப்பதாக வெளிப்படையாகத் தோன்றுகையால், உண்மையில் தே₃வதைகளுக்கு உள்ளிருந்து எல்லாப்ப₂லன்களையும் கொடுப்பவன் தானே என்பதில் ஶாஸ்த்ரப்ரஸித்₃தி₄யைக் காட்டவேண்டியது அவஶ்யமாகையாலும் "ஹி" "தாந்" என்று பிரித்து முற்கூறியபடி பொருள் கொள்வதே பொருந்தும். (மயைவ) "ஆராதி₄ப்பது தே₃வதாந்தர்யாமியான உன்னையே என்றும், ப₂லனளிப்பதும் நீயே என்றும் அறியாதவர்களுக்கு நீ ப₂லனளிப்பது எப்படிப்பொருந்தும்?" என்னும் ஐயத்தை ஏவகாரத்தாலே நீக்குகிருன். இவ்வாராத₄கன் இந்திரன் முதலிய அந்த தே₃வதைகளை ஆராதி₄க்கும்போது, ஆராதி₄க்கப்படும் அவர்கள் எனது ஶரீரங்களென்றும், ஆகையால் அவர்களை ஆராதி₄ப்பது எனது அர்ச்சனமே என்றும் அறியாவிடினும், அது உண்மையில் எனது ஆராத₄னமாகையாலே, அவன் விரும்பும் அவ்வப் ப₂லன்களை நான் அளிக்கக் குறையில்லை என்று கருத்து. எப்படியாயினும், ப₃ந்த₄கமான (ஸம்ஸாரத்தில் கட்டிவைக்கும்) ப₂லன்களைக் கொடுத்து, பரமகாருணிகனன எம்பெருமான் இவர்களை ஸம்ஸாரத்தில் அழுந்தச் செய்யலாமோ? எனில்: அவர்கள் விரும்பும் இப்ப₂லன்களை அளிக்காவிடில் அவர்களுக்கு ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் ஶாஸ்த்ரவிஶ்வாஸமும் அழிந்து நாஸ்திகர்களாகிவிடுவார்களாகையாலே. அப்படியாகாமல், மேல் ஜன்மங்களில் படிப்படியாக முன்னேறித் தன்னை அடைவதற்காக இந்த ஜன்மங்களில் அந்த தே₃வதைகள் மூலம் அப்ப₂லன்களை அளிப்பது தவறல்ல. இவ்வர்த்த₂த்தையே நம்மாழ்வார்

अन्तवत्तु फलं तेषां तद्भवत्यल्पमेधसाम्।
देवान् देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि ॥२३॥

23. அந்தவத்து ப$_2$லம் தேஷாம் தத்$_3$ப$_4$வத்யல்பமேத$_4$ஸாம் ।
தே$_3$வாந் தே$_3$வயஜோ யாந்தி மத்$_3$ப$_4$க்தா யாந்தி மாமபி ||

அல்பமேத$_4$ஸாம் தேஷாம்—புல்லறிவாளர்களான அவர்களுக்கு, தத் ப$_2$லம் — அவ்வாராத$_4$னபலன், அந்தவத்து — (அல்பமாகவும்) முடிவுடையதாகவும் ஆகிறது; (ஏனெனில்:) தே$_3$வயஜ: — தே$_3$வர்களை ஆராதி$_4$ப்பவர்கள், தே$_3$வாந் — தே$_3$வர்களை, யாந்தி — அடைகின்றனர்; மத்$_3$ ப$_4$க்தா: அபி—என்னுடைய ப$_4$க்தர்களும், மாம் — என்னை, யாந்தி—அடைகின்றனர்.

---

23. அற்ப மதியான வவர்க்கங் கமைபலந்தா
னிற்பதில தாக நிகழுமே—கற்பமரர்
பின்சேர்ந்தா ரங்கவரைப் பெற்று ரவரென்னையே
யின்சேர்ந்தா ரும்பெறுவ ரிங்கு.

"ஓடியோடிப் பல பிறப்பும் பிறந்து மற்றோர் தெய்வம்
பாடியாடிப் பணிந்து பல்படிகால் வழியேறிக் கண்டீர்
கூடிவானவர் ஏத்தநின்ற திருக்குருகூரதனுள்
ஆடுபுட்கொடி ஆதிமூர்த்திக்கு அடிமைபுகுவதுவே"

[திருவாய் 4-10-7]

என்று அருளிச்செய்தார். "காமைஸ் தைஸ்தை:" என்று தொடங்கி, இந்த ஶ்லோகமீறாகவுள்ள மூன்று ஶ்லோகங்களின் அர்த்தத்தை

"அவரவர் தமதமது அறிவறி வகைவகை
அவரவர் இறையவர் எனஅடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர்; இறையவர்
அவரவர் விதிவழி அடையநின் றனரே" [திருவாய் 1-1-5]

என்று ஒரு பாசுரத்தில் ஆழ்வார் அருளிச்செய்ததும் இங்கு அநுஸந்தி$_4$க்கத்தக்கது.

||भा|| तेषामल्पमेधसाम् — अल्पबुद्धीनामिन्द्रादिमात्रयाजिनां तदाराधनफलमल्पम्, अन्तवच्च भवति। कुतः? देवान् देवयजो

அற்பமதியான அவர்க்கு — புல்லறிவாளரான அவர்களுக்கு, அங்கு அமை — தேவர்களிடம் கிடைக்கும், பலம் தான்—பயனானது, நிற்பதிலது ஆக நிகழுமே—நிலை நில்லாததாகவே ஆகிறது. (ஏனெனில்) கற்ப அமரர் — கற்ப காலத்திற்குட்பட்ட வாழ்வையுடைய தேவர்களை, பின் சேர்ந்தார் — ஆராதிப்பவர்கள், அங்கு — (நிலைநில்லாத) அமரருலகில், அவரை பெற்றார்—அவ்வமரரையே அடைவர்; இங்கு—இவ்வுலகில். எனையே இன் சேர்ந்தாரும்—என்னிடமே இனிதாக ஈடுபட்டவர்களும், (எனையே) பெறுவர்—என்னையே அடைவர்.

23. உனது அருளாலேயே தேவதாந்தரபக்தர்களும் பலனடைகிறார்கள் எனில்: அவர்களுக்கும், உனது பக்தர்களுக்கும் வாசியில்லையோ? என்ன, நெடுவாசி உண்டு என்கிறான் இந்த ஶ்லோகத்தில். (அல்பமேதஸாம் தேஷாம்) அல்பர்களான தேவதைகளிடமும், அவர்களளிக்கும் அற்பபலன்களிலும் புத்தியைச் செலுத்திய அவர்களுக்கு. அன்றிக்கே, ஶாஸ்த்ரங்களில் அல்பமே அறிகையால் புல்லறிவாளர்களான அவர்களுக்கு என்றுமாம். எல்லா தேவர்களுக்கும் (ஏன் எல்லா உலகுக்குமே) அந்தர்யாமியாக நாராயணன் நிற்கிறான் என்னும் வேதாந்த ஜ்ஞாநம் இல்லாதவர்களாய், இந்திரன் முதலிய அவர்களைமாத்திரம் குறித்து யாகம் செய்பவர்களாகையாலே, இவர்களைப் புல்லறிவாளர்கள் என்கிறான். ஶாஸ்த்ர ஜ்ஞாநமேயில்லாத நாஸ்திகர்களை, மேலிரண்டு ஶ்லோகங்களிலும் 'அபுத்தய:' 'மூட:' என்று அறிவேயில்லாதவர்களாகக் கூறப்போகிறான். இங்கு ஶாஸ்த்ரத்தையும், அதிற்சொல்லப்பட்ட தேவதைகளையும் மேலெழ அறிந்து, ஶாஸ்த்ர தாத்பர்யமறியாதவர்களை 'அல்பமேதஸ்ஸுகள்' (புல்லறிவாளர்கள்) என்கிறான். இனி அறிவாளிகள் யாரெனில்: பரமபுருஷனிலும் மிகத் தாழ்ந்த ஐஶ்வர்ய கைவல்யங்களை ப்ராப்யமாக மயங்கியபோதிலும், அவற்றுக்குப் பலப்ரத ஸாதனமாயிருப்பவன் ஸர்வதேவாந்தர்யாமியான நாராயணனே என்று அறிபவர்கள் (முற்கூறியவர்களைக் காட்டிலும்) மேதாவான்கள் என்றும், நாராயணனே பரமப்ராப்யமாய், தன்னை அடைவிக்கப் பலப்ரத ஸாதனமாயிருப்பவன் என்று

यान्ति—यत इन्द्रादीन् देवान् तद्याजिनो यान्ति। इन्द्रादयोऽपि हि परिच्छिन्नभोगाः परिमितकालवर्तिनश्च; ततस्तत्सायुज्यं प्राप्ताः तैस्सह

அறிந்தும், தமது முயற்சிகளைப் ப₂லகரண ஸாத₄னமாக (ப்ராபக மாக) மயங்குகிற உபாஸகர்களான ஜ்ஞாநிகள் மேத₄ாவ்யத்தரர்கள் என்றும், அவனையே பரமப்ராப்யம், ப்ராபகம் முதலிய அனைத்துமாக அறிபவர்களான மஹாத்மாக்களான ஜ்ஞாநிகள் மேத₄ாவத்தமர்கள் என்றும் கண்டுகொள்வது. (தத் ப₂லம் அந்தவத் து) அப்படி இந்த்₃ராதி₃களைமாத்திரம் ஆராதி₄ப்பதால் கிடைக்கும் ப₂லம் அற்ப மாகவும், நிலைநில்லாததாகவும் உள்ளது. 'அந்தவத்' என்றே சொல்லப்பட்டபோதிலும், 'து' காரம் சகாரப் பொருளதாய். அநுக்த ஸமுச்சாயகமாகையாலே, அல்பர்களான தே₃வதைகளிடமிருந்து கிடைக்கும் ப₂லம் அல்பமும் ஆகிறது என்று உணர்த்துகிறது. (தேஷாம் து) என்று கூட்டி, கடைசிப் பாத₃த்தில் சொல்லப்பட்ட ப₁க₃வத்₃ப₄க்தர்களைக் காட்டிலும் வேறுபாட்டை 'து'காரம் காட்டுவ தாகவும் கொள்ளலாம்; அப்போது 'அந்தவத்' என்னும் பத₃ம் அர்த்த₂ ஸித்₃த₄மான அல்பத்வத்துக்கு உபலக்ஷணம். இவ்வண்ண மாகப் பூர்வார்த்த₄த்தை ஒரே வாக்யமாகக் கொண்டு பொரு ளுரைக்க இடமிருக்கையால், "தேஷாம் ப₂லம் அந்தவத்து" 'அல்பமேத₄ஸாம் தத் ப₄வதி' என்று இரு வாக்யமாக்கிப் பொரு ளுரைப்பது பொருந்தாது. இப்படி இவர்கள் மற்ற தெய்வங்களிட மிருந்து அடையும் ப₂லம் அற்பமாகவும், நிலை நில்லாததாகவும் இருப்பதற்குக் காரணம் என்ன? என்பதைக்காட்டுகிறது மூன்றாவது பாத₃ம்-(தே₃வாந் தே₃வயஜோ யாந்தி) து₃ராராத₄ர்களாய், அல்பராய், அநித்யரான இந்திரன் முதலான தெய்வங்களைக் குறித்து அரும்பாடு பட்டு யஜ்ஞம் முதலான ப்ரவ்ருத்திகளைச் செய்பவர்கள். அந்த தெய்வங்களையேயன்றோ அடைகிறார்கள்; அதனால் அவர்கள் பெறும் ப₂லன் அற்பமாய், முடிவுடையதாய் உள்ளது என்றபடி. இந்திரன் முதலிய தே₃வர்கள் அளவுபட்ட போ₄கத்தையுடையவர் களாய், அளவுபட்ட காலமே வாழ்பவர்களாகையாலும், அவர்களை ஆராதி₄ப்பவர்கள் அவர்களிடமிருந்து அதி₄கபக்ஷமாகப் பெறக்கூடி யது அவர்களோடு ஸமாநபோ₄க₃ராயிருக்கையாகிற அந்த தே₃வதா ஸாயுஜ்யமேயாகையாலும், அந்தப் ப₂லம் அந்த தே₃வதைகளின் ஐச்வர்யத்தைப்போலே அல்பமாய், அவர்களது காலத்துக்கு மேற் படாததாகையாலே அஸ்தி₂ரமாயல்லது இருக்கமுடியாது என்று கருத்து. ஆக, தே₃வதாந்தரங்களிடமிருந்து ஐச்வர்யத்தை விரும்பு

प्रच्यवन्ते। मद्भक्ता अपि तेषामेव कर्मणां मदाराधनरूपतां ज्ञात्वा परिच्छिन्नफलसङ्गं त्यक्त्वा मत्प्रीणनैकप्रयोजनाः मां प्राप्नुवन्ति; न च

மவன் அற்பபு₃த்₃தி₄யுடையவன் என்றதாயிற்று. இப்படி இகழப்பட்ட இவர்களை "மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கஸ்சித் யததி ஸித்₃த₄யே" (7-3) என்று எம்பெருமான் கொண்டாடுவது பொருந்தாதாகையால், அங்கு கொண்டாடப்பட்டவர்கள் எம்பெருமானிடமிருந்து மோக்ஷ ஸித்₃தி₄யின் பொருட்டு ஸித்₄தி₄பர்யந்தம் யத்னம் பண்ணுபவர்களே என்றும், 'யததாமபி.........கஸ்சிந்மாம் வேத்தி' என்று அவர்களில் சிறந்தவனாகச் சொல்லப்பட்டவன் எம்பெருமானையே பரமப்ராப்யமாகக்கொண்டு, அவனை அடையும் பொருட்டுத் தன் முயற்சியைச் செய்பவன் என்றும், "தத்வதோ வேத்தி" என்று அவர்களில் சிறந்தவனாகச் சொல்லப்பட்டவன் தனக்காகத் தான் முயற்சி செய்வதினின்றும் கைவாங்கி, சாதகம்போல் நாதன்தனதருளே பார்த்திருக்கும் ஸித்₃தே₄ாபாயநிஷ்ட₂ப்ரபந்நன் என்றும் விளங்குகிறது. இனி, புல்லறிவாளர்கள் என்று முற்பாதியில் இகழப்பட்டவர்களுக்கு நேர் எதிர்த்தட்டாயிருப்பவர்களாய், பத்தொன்பதாவது ஸ்லோகத்தில் விவரிக்கப்பெற்றவர்களாய், பேரறிவாளர்களான இந்த மஹாத்மாக்கள் அடையும் ப₂லனைக் கடைசிப் பாத₃த்தில் காட்டுகிறான். (மத்₃ப₄க்தா அபி மாம் யாந்தி) என்னிடம் ஈடுபாடுடைய மஹாத்மாக்கள் — முற்கூறிய புல்லறிவாளர்களைப்போலே அற்பப₂லனைக்குறித்துச் செயற்கரிய கர்மாநுஷ்ட₂ானம்செய்து அரும்பாடு படாமல், அக்கருமங்கள் எனக்கு ஆராத₄னமாயிருப்பவை என்று அறிந்து, அக்கருமங்களுக்குச் சொல்லப்பட்ட அற்பப₂லன்களில் ஆசைவைக்காமல், அவற்றில் விலக்கவொண்ணாத நித்யநைமித்திக கர்மங்களை மாத்திரம் என் உகப்பையே கருதி பே₄ாக₃ரூபமாகச் செய்பவர்களாய், அவற்றை மோக்ஷஸாத₄னமென்றும் நினையாதவர்களாய், என்னை எனது நிர்ஹேதுககிருபையாலேயே அடைகிறார்கள். பு₄ர்த்ருபே₄ாக₃த்தை விலக்குறுப்பாக்குமாபோலே, ப₄க்தியை மோக்ஷஸாத₄னமாக்குவதும் ஸ்வரூபவிருத்₃த₄மாகையாலே, ஸ்வயம் ப்ரயோஜந ப₄க்திநிஷ்ட₂னை இவனே ப₄க்தஸப்₃த₃த்திற்கு முக்₂யார்த்த₂ம் என்று கருதி, "அஹம் ஸ்மராமி மத்₃ப₄க்தம்" என்று வராஹசரமஸ்லோகத்திற்சொன்னதுபோலே "மத்₃ப₄க்தா:" என்கிறான். "தே₃வயஜ:" என்று, தே₃வர்களைக் குறித்து யஜ்ஞாதி₃களைச் செய்து அரும்பாடுபடுபவர்கள் என்று

पुनर्निवर्तन्ते। * मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते (८. १६) इति हि वक्ष्यते ॥ २३ ॥

அவர்களை வர்ணித்து, ''மத்₃ப₄க்தா:'' என்று இவர்களை, என்னிடம் ஈடுபாட்டில் தலைமைபெற்றவர்கள் என்று வர்ணிப்பது குறிக்கொள்ளத் தக்கது. '' சதுர்வித₄ா ப₄ஜந்தே '' என்று இதர புருஷார்த்த₂ங்களை விரும்புமவர்களையும் உபாஸக ஜ்ஞாநியையும் ப₄க்தர்களாகச் சொன்னானாயினும், ஐஸ்வர்யார்த்தி₂கள் இவனை உடனே அடைவதில்லையாகையாலும், கைவல்யார்த்தி₂கள் இவனை அடைவதேயில்லையாகையாலும், அல்பபுருஷார்த்த₂ங்களை விரும்புகையாகிற குறை அவ்விருவரிடமும் உள்ளதாகையாலும், மோக்ஷத்திலும் தன் ஆநந்த₃த்தை விரும்புகையாகிற குறை உபாஸக ஜ்ஞானியிடமும் உள்ளதாகையாலும், இங்கு ''மத்₃ப₄க்தா:'' என்றது, மோக்ஷத்திலும் அவனது ஆனந்த₃த்தையே விரும்பும் பேரறிவாளர்களாய், குற்றமற்றவர்களாய், தலைசிறந்தவர்களான ப₄க்தர்களைக் குறிப்பதாகக் கொள்வதே உசிதம் என்பதை ''மத்ப்ரீணனைக ப்ரயோஜநா:'' என்னும் பதத்தாலே ப₄ாஷ்யகாரர் காட்டியருளினார். ''நிஜ கர்மாதி₃ ப₄க்த்யந்தம் குர்யாத் ப்ரீத்யைவ காரித:, உபாயதாம் பரித்யஜ்ய'' [கீ₃-ஸம் 31] [தான் அவஶ்யம் செய்யவேண்டிய கர்மம் தொடக்கமாக, ப₄க்தியீறாக, ப்ரீதியினாலேயே செய்விக்கப்பட்டு, அவற்றில் உபாயத்வபு₃த்₃தி₄யை வாஸனையோடுவிட்டுச் செய்யக்கடவன்.] '' கதா₃ ஹம் ப்ரஹர்ஷயிஷ்யாமி '' [எப்போது நான் உன்னை உகப்பிக்கக்கடவேன் ?] [ஸ்தோ·ர 46] என்றாரன்றோ ஆளவந்தாரும். இவர்கள் இப்படி அருளிச்செய்கைக்கு அடி — '' தனக்கேயாக எனைக்கொள்ளுமீதே எனக்கே கண்ணனை யான் கொள் சிறப்பே '' [திருவாய் 2-9-4] என்று நம்மாழ்வாரும், ''உனக்கே நாம் ஆட்செய்வோம்'' [திருப்பாவை 29] என்று ஆண்டாளும் அருளிச்செய்கை. (மாம் யாந்தி) இனிமை உபேயமாகையாலே, ப்ரீதிவிஶிஷ்டமான எனது ஸ்வரூபமே இவர்களுக்கு ப்ராப்யமாகையாலும், அதையும் ஸ்வப்ரவ்ருத்தியாகிற ஆயாஸமில்லாமல் பெறுகையாலும், இவர்களே மற்ற எல்லா அதி₄காரிகளைக் காட்டிலும் தலைசிறந்த ப₂லனைப் பெறுகிறார்கள் என்று கருத்து. '' போ₄க₃மாத்ர ஸாம்யலிங்கா₃ச்ச '' [4-4-17] என்று ஸூத்ரத்திலும், ''பரமம் ஸாம்யமுபைதி'' [முண்ட₃ 3-1-3] என்று ஶ்ருதியிலும், '' மம ஸாத₄ர்ம்ய மாக₃தா: '' [கீ₃தை 14-2] என்று கீ₃தையிலும் சொல்லப்பட்டபடி, உபாஸகன் பல ஜன்மங்கள் அரும்பாடுபட்டுப் பெறும் ப₂லனை இவன் ஆயாஸமில்லாமல் ஸ்வரூபப்ராப்தமான பரார்த்த₂ப்ரதிபத்திமாத்ரத்தாலே பெறுகிறானன்றோ.

॥भा॥ इतरे तु सर्वसमाश्रयणीयत्वाय मम मनुष्यादिष्ववतार-मप्यकिञ्चित्करं कुर्वन्तीत्याह—

अव्यक्तं व्यक्तिमापन्नं मन्यन्ते मामबुद्धयः।
परं भावमजानन्तो ममाव्ययमनुत्तमम्॥ २४॥

24. அவ்யக்தம் வ்யக்திமாபந்நம் மந்யந்தே மாமபு₃த்₃த₄ய:।
பரம் ப₄ாவமஜாநந்தோ மமாவ்யயமநுத்தமம்॥

அபு₃த்₃த₄ய :—அறிவு கெட்டவர்களான பெரும்பாலான ஜீவர்கள், அவ்யயம்—குறைவற்றதாய், அநுத்தமம்—ஒப்பில்லாதபடி உயர்ந்திருப்பதான, மம பரம் ப₄ாவம்—எனது மேலான நிலையை, அஜாநந்த:—அறியாதவர்களாய், மாம்—என்னை, அவ்யக்தம்—இதுவரையில் இப்படி இல்லாதவனாய், வ்யக்திம் ஆபந்நம்—(இப்போது சில புண்யகர்மங்களாலே) இப்படிப் பிறந்திருப்பவனாக, மந்யந்தே—எண்ணுகிறார்கள்.

---

24. ஒன்றோர் குறையற் றுயர்ந்த வென்றன்மை
நின்றோ ரறியார் நிகழ்ந்தென்னை—யின்றோர்பால்
வந்தியல்வான் முன்றெரியா னென்றே மதித்துயிர்போற்
புந்தியிலா ரோர்ந்தார் புணர்ந்து.

இப்படி ஆயாஸமில்லாமல் பெறுவதாகில் அப்ப₂லம் வைதி₃கபுத்ர விஷயத்திற்போலே அழிவுள்ளதாயிருக்குமோ? எனில்: கிடைத்தற்கரிய மஹாத்மாவான இவனை அரும்பாடுபட்டுப் பெற்றபின் பரமபுருஷன் இவனை ஒருகாலும் மறுபடி ஸம்ஸாரத்திற்கு அனுப்பமாட்டானுகையால், "அநாவ்ருத்தி: ஶப்₃தா₃த் அநாவ்ருத்தி: ஶப்₃தா₃த்" [ப்₃ரஹ்ம ஸூத்ரம் 4-4-22] "ந ச புநராவர்த்ததே" [சா₂ந்8-15-1] "ஸர்க்கே₃ऽபி நோபஜாயந்தே ப்ரளயே ந வ்யத₂ந்தி ச" [கீ₃தை 14-2] என்கிற புநராவ்ருத்தியின்மையாகிற ப₂லன் இவனுக்கும் உண்டு. இவனுக்குள்ள பரார்த்த₂ ப்ரதிபத்தி சிறுகுழந்தைகளான வைதி₃கபுத்ரர்களுக்கு இல்லாமையாலே, இவனுக்கு அவர்கள் த்₃ருஷ்டாந்தமாகமாட்டார்கள். "தே₃வயஜ:" "மத்₃ப₄க்தா:" "யாந்தி மாமபி" என்னும் பத₃ங்களின் ஸ்வாரஸ்யத்தை உணரார்மையாலே நாராயணார்யர் என்னும் இதர மதஸ்த₂ர், இவனிடம் இதர ப₂லன்களை விரும்புபவர்களும் இங்கு ப₄க்த ஶப்₃த₃த்தாலே குறிக்கப்படுபவர்கள் என்று கொண்டு, அவர்களும் காலக்ரமத்தில் இவனை அடைவதாகப் பொருள்கொண்டார். 23.

॥भा॥ सर्वैः कर्मभिराराध्योऽहं सर्वेश्वरो वाङ्मनसापरिच्छेद्य-स्वरूपस्वभावः परमकारुण्यादाश्रितवात्सल्याच्च सर्वसमाश्रयणीयत्वाय

புந்தியிலார்—அறிவு கெட்டவர்களான பெரும்பாலான ஜீவர்கள், ஒன்று ஓர் குறை அற்று—ஒரு வித$_4$த்தாலும் ஒரு குறையும் இல்லாமல், உயர்ந்து உயர்ந்த—ஒப்பில்லாத படி உயர்ந்திருப்பதான, என் தன்மை—எனது மேலான நிலையை, நின்று ஓர் அறியார்—நிலைநின்று ஒருபடியும் அறியமாட்டாதவர்களாய், நிகழ்ந்த என்னை—நிகழ்காலத்தில் விளங்காநிற்கும் என்னை, முன் தெரியான்—இதுவரையில் இப்படி இல்லாதவனாய், இன்று—இப்போது, ஓர்பால்—(புண்யகர்மமாகிற) ஒரு காரணத்தாலே, வந்து—சிறப்போடு வந்து, இயல்வான் — பிறந்திருப்பவன், என்றே மதித்து — என்றே நினைத்து, உயிர்போல் புந்தியில் புணர்ந்து ஓர்ந்தார்—மற்ற ஜீவர்களைப்போலே தங்கள் நெஞ்சில் அறுதியிட்டிருக்கிறார்கள்.

24. ஶாஸ்த்ராதி$_4$காரிகளல்லாத புல்லறிவாளராயினும். ஶாஸ்த்ர விஶ்வாஸமிருக்கையாலே ஜந்மாந்தரத்தில் படிப்படியாக ஶாஸ்த்ராதி$_4$ காரிகளாக்கவல்ல முற்கூறிய தே$_3$வதாந்தரப$_4$க்தர்களும் சிறுபான்மையினர் என்னும்படி — இவர்களிலும் கீழ்ப்பட்டவர்களாய், ஶாஸ்த்ர விஶ்வாஸமின்மையாலே, ‘அனைவரும் ஆஶ்ரயிப்பதற்காக ஸர்வேஶ்வரன் மனிதனாய் அவதரித்திருக்கிறான்’ என்று ஶாஸ்த்ரங்கொண்டு உணரமாட்டாமல், ப்ரத்யக்ஷமான எனது ரூபசேஷ்டிதங்களாலும் தே$_3$வர் தலைவன் என்று அறுதியிடமாட்டாமல் இருக்கையால் என்னாலும் முன்னேற்றவே முடியாதபடி உலகில் பெரும்பாலோர் அறிவுகெட்டுக்கிடக்கிறார்களே என்று வருந்துகிறான் இரண்டு ஶ்லோகங்களில். (அபு$_3$த்$_3$த$_4$ய:) அறிவுகெட்டவர்கள். அறிவில்லாமலிருப்பதோடன்றியில் அறிவில்லையே எனக்குறைபடவுமறியாதவர்கள். அடுத்த ஶ்லோகத்தில் ‘‘லோக:’’ ‘‘ஸர்வஸ்ய’’ என்று இவர்களை எடுக்கையாலே, உலகில் பெரும்பான்மையினர் இப்படி அறிவுகெட்டுக்கிடக்கிறார்கள் என்று விளங்குகிறது. சென்ற ஶ்லோகத்தில் புல்லறிவாளர்களான தே$_3$வதாந்தர ப$_4$க்தர்களாகக் கூறப்பட்டவர்கள் லக்ஷக்கணக்கானவர்கள் என்றால் பகுத்தறிவேயில்லாத இவர்கள் கோடிக்கணக்கானவர்கள் என்று கருத்து. இவர்களை இப்படி நிந்தி$_3$ப்

अजहत्स्वभाव एव वसुदेवसूनुरवतीर्ण इति ममैवं परं भावमव्ययमनुत्तम-

பதற்குக் கருத்து என்ன? எனில், பரமகாருணிகனுன கண்ணன் இவர்களுங்கூட ஶாஸ்த்ரவிஶ்வாஸம் பெற்றுத் தன்னை அறியவேண்டும் என்னும் கருத்தாலேயே, உலகமெல்லாம் கொண்டாடும் கீ3தையை அருளி, அதில் நெறியெல்லாம் எடுத்துரைத்து, இந்த நெறிகளில் ஒன்றையும் அறியவில்லையே, அறியவில்லை என்னும் இழவும் இல்லையே என்று இவர்களை நிந்தி3க்கிருன். "ஓ! ஓ! உலகினதியல்வே" (திருவாசிரியம் 6) என்னும் பாசுரத்திலே சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட தே3வதாந்தர ப4க்தர்களை 'உலகு' என்று பெரும் பாலோராக எடுத்து, "அல்பமேத4ஸ்ஸு:க்கள்" என்று சென்ற ஶ்லோகத்தில் அருளியதை அடியொற்றி "படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து அளந்து தேர்ந்து உலகளிக்கும் முதற்பெரும் கடவுள் நிற்ப, புடைப்பல தானறி தெய்வம் பேணுதல், தனது புல்லறிவு ஆண்மை பொருந்தக் காட்டி" என்று அவர்களைப்புல்லறிவாளர்கள் என்று நிந்தித்ததும், "அறிவினுல் குறைவில்லா அகல்ஞாலத்தவரறிய நெறி எல்லாம் எடுத்துரைத்த நிறைஞானத்து ஒரு மூர்த்தி" [திருவாய் 4-8-6] என்னும் பாசுரத்திலே—இந்த ஶ்லோகத்தில் "அபு3த்3த4ய:" என்று கூறப்பட்டவர்களை அறியவில்லையே என்று குறைவுபடவும் அறியாதபடி அறிவு கெட்டவர்களாக எடுத்து, "அகல் ஞாலத்தவர்" என்பதன் மூலம் முற்கூறியவர்களைக்காட்டிலும் மிகப்பெரும்பான்மையினர் இவர்களே என உணர்த்தி, இவர்களும் தன்னை அறியவேண்டும் என்னும் பரமகருணையாலேயே கீ3தையில் கண்ணன் தன்னை அடைவதற்கான எல்லா நெறிகளையும் எடுத்துரைத்தான் என்று அருளியதும் இங்கு அநுஸந்தி4க்கத்தக்கது. இப்படி அறிவில்லாமலிருப்பதனுல், இவர்களுக்கு விளையும் அநர்த்த2த்தைப் பிற்பாதியாலும், முற்பகுதியாலும் கூறுகிருன்,— (பரம் பா4வம்... அநுத்தமம்) எல்லையற்ற பரத்வஸௌலப்4யங்களை உடையவனுயிருக்கும் எனது மேலான நிலையை அறிவதில்லை இவர்கள் என்று கருத்து. (மம) வஸு:தே3வனுக்குப் பிள்ளையாய், பரத்வ ஸௌலப்4யங்களின் எல்லையைக் காட்டிக்கொண்டு நிற்கிற என்னுடைய. (மம அவ்யயம் அநுத்தமம் பரம் பா4வம்) எல்லையற்ற இப்பரத்வ ஸௌலப்4யங்கள் என்றும் அழிவற்றவையாயினும் எனது பரத்வநிலையிலே ஸௌலப்4யம் ப்ரகாஶிப்பதில்லை. அவதார நிலையான இப்போதே இரண்டும் ப்ரகாஶிக்கின்றன என்று கருத்து. (அநுத்தமம் அவ்யயம் பரம் பா4வம் அஜாநந்த:) தனக்கு மேலில்லாததும் அழிவற்றதுமான பரத்வ ஸௌலப்4யங்களின் எல்லை

मजानन्तः प्राकृतराजसूनुसमानं इतःपूर्वमनभिव्यक्तमिदानीं कर्म-

நிலையை அறியாதவர்களாய்; எல்லாக் கர்மங்களாலும், ஆராதிக்கப்படும் ஸர்வேஶ்வரனான நான் வாக்குக்கும் மனத்துக்கும் எல்லைகாணமுடியாத தன்மைகளை உடையவன் என்று எனது எல்லையற்ற பரத்வத்தையும் (மேன்மையையும்) அறிவதில்லை; பரம கருணையாலும், என் குழந்தைகளான சேதனரிடம் வாத்ஸல்யத்தாலும், எல்லோருமே என்னை ஆஶ்ரயிக்கவேண்டும் என்னும் எண்ணத்தாலே முற்கூறிய மேன்மையையும் விடாமலே வஸுதேவனின் பிள்ளையாக அவதரித்திருக்கிற எனது எல்லையற்ற ஸௌலப்யத்தையும் (நீர்மையையும்) அறிவதில்லை என்று கருத்து. இப்படி அறியாததற்குக் காரணம் — இவ்விருள்தருமாஞாலத்திலே, அஞ்ஞானமாகிற இருளைப்போக்கி ஸத்தையும், அஸத்தையும் (1. உள்ளதையும், இல்லாததையும்; 2. நல்லதையும், தீயதையும்) பகுத்தறிய உதவும் ஶாஸ்த்ரமாகிற கைவிளக்கைத் துணைகொள்ளாமையே என்பது வெளிப்படை. "ஹர்த்தும் தம: ஸத,ஸதீ ச விவேக்துமீஶ: மாநம் ப்ரதீபமிவ காருணிகோ ததாதி" [ர-ஸ்த 2-1] [(அஞ்ஞான) இருளைப் போக்குவதற்கும், ஸத்தையும், அஸத்தையும் பகுத்தறிவதற்கும் உறுப்பாக ஶாஸ்த்ரத்தை ஸர்வேஶ்வரன் கை விளக்கைப்போலே காட்டித் தருகிறான்.] என்றாரன்றோ பட்டர். இப்படி அறியாமையாகிற அஜ்ஞானம் மாத்திரமன்று, அந்யதா ஜ்ஞான விபரீத ஜ்ஞாநங்களும் இவர்களுக்கு உள்ளன என்று ஶ்லோகத்தின் முற்பகுதியாலே காட்டுகிறான், — (மாம் அவ்யக்தம் வ்யக்திமாபந்நம் மந்யந்தே) மற்ற ப்ராக்ருதரான ராஜகுமாரர்களைப் போலே, முற்பிறவிகளில் இப்படிப் பிறவாதவனாய், இப்போது புண்யவிஶேஷத்தாலே இப்படிப் பிறந்திருப்பவனாக என்னையும் எண்ணுகிறார்கள். ஶாஸ்த்ர விஶ்வாஸமில்லாவிடிலும், 'இப்போது சிறந்த குலத்தில் சிறப்புடன் பிறந்திருப்பவர்கள் முற்பிறவிகளிலும் இப்படியே பிறந்திருப்பார்கள் என்னும் நியமமில்லை; முற்பிறவிகளில் மிகவும் புண்ணியம் பண்ணியதாலேயே இப்பிறவியில் இப்படிப் பிறந்திருக்கிறார்கள்' என்னும் பொதுஜன நம்பிக்கையைப் பின்பற்றி, நானும் அப்படிப் பூர்வஜன்ம புண்யத்தாலே வஸுதேவனின் பிள்ளையாய், சிறப்புற்றுப் பிறந்திருப்பவன் என்று எண்ணுகிறார்கள் என்று கருத்து. மூல ப்ரக்ருதியாகிற அவ்யக்தம், அதன் கார்யமாகிற வ்யக்தம் முதலானவை இப்ரகரணத்திற்குப் பொருந்தமாட்டாவாகையால், 'அவ்யக்தம்' 'வ்யக்திமாபந்நம்' என்று அவற்றைக் குறிப்பதாகக் கொள்வது ஒட்டாது; முற்கூறியபடியே பொருள்

वशाज्जन्मविशेषं प्राप्य व्यक्तिमापन्नम्— प्राप्तं मामबुद्धयो मन्यन्ते; अतो मां नाश्रयन्ते; न कर्मभिराराधयन्ति च॥ २४॥

॥ भा॥ कुत एवं न प्रकाश्यत इत्यत्राह—

नाहं प्रकाशस्सर्वस्य योगमायासमावृतः।
मूढोऽयं नाभिजानाति लोको मामजमव्ययम्॥ २५॥

25. நாஹம் ப்ரகாஶ: ஸர்வஸ்ய யோக₃மாயாஸமாவ்ருத:।
மூடே₄ா₅யம் நாபி₄ஜாநாதி லோகோ மாமஜமவ்யயம்॥

---

25. என்பிறவி யோகமெனு மிம்மாயை யான்மறைந்தே
யன்பிலர்கள் யார்க்கு மறிவரியேன்—என்பதனு
லென்னை யியல்பிறப்பற் றேதுங் குறைவிலனு
வுன்னலுற வோரா துலகு.

கொள்ளவேண்டும். ‘அஜாநந்த:’ என்று பிற்பாதியில் ஜ்ஞாநாபா₄வமாகிற அஜ்ஞாநம் சொல்லிற்று; ‘மந்யந்தே’ என்று முற்பாதியில் ஸ்வரூப ஸ்வபா₄வங்களை உள்ளபடி உணராமையாகிற அந்யதா₂ ஜ்ஞாந விபரீத ஜ்ஞாநங்களைச் சொல்லுகிறது. முன் நாலு ஶ்லோகங்களில் சொல்லப்பட்டவர்கள் சிறிது ஶாஸ்த்ர ஜ்ஞாநமுடையவர்களாகையாலே, மற்ற தே₃வர்களைப்போலே என்னை ஒரு தே₃வனுகவாவது நினைப்பார்கள்; இவர்கள் அடியோடு ஶாஸ்த்ர ஜ்ஞாநமில்லாதவர்களாகையாலே என்னை அடியோடு அறிவதில்லை என்று ‘அல்பமேத₄ஸாம்’ [23] ‘அபு₃த்₃த₄ய:’ [24] எனும் பத₃ங்களுக்குக் கருத்து. இப்படி அடியோடு அறிவில்லாமையாலே, முற்கூறப்பட்டவர்களைப்போலே தே₃வதாந்தரங்களை இடையிட்டும் என்னை ஆஶ்ரயிப்பதில்லை; ‘தம் தம் நியமம்’ என்று சொல்லப்பட்ட, அந்த தே₃வதைகளை உகப்பிக்கும் கர்மங்களாலும் என்னை ஆராதி₄ப்பதில்லை; இவர்களை என்னை நேரே ஆஶ்ரயித்து, ஆராதி₄க்கும் ஶாஸ்த்ராதி₄காரிகளாக்குவது எனக்கே மிகக்கடி₂நமாயுள்ளது, அதனுலேயே து₃ஷ்டப்பிள்ளையைத் திட்டித்திருத்தப்பார்க்கும் பிதாவைப்போலே ‘அபு₃த்₃த₄ய:’ என்று திட்டித்திருத்தப்பார்க்கிறேன். முடியாவிடில் த₃ண்டி₃த்துத் திருத்தப்பார்க்கும் பிதாவைப்போலே பல ஜன்மங்களில் இவர்களைப் பாபப₂லனை அனுப₄விக்கச் செய்து திருத்தப் பார்க்கிறேன் என்பது ஶ்லோகத்திலிருந்து தேறிய பொருள். 24.

।।भा।। क्षेत्रज्ञासाधारणमनुष्यत्वादिसंस्थानयोगाख्यमायया समावृतोऽहं न सर्वस्य प्रकाशः। मयि मनुष्यत्वादिसंस्थानदर्शनमात्रेण

யோக₃மாயா ஸமாவ்ருத: அஹம்—மனிதவுருக்கொண்டிருக்கையாகிற மாயையாலே மறைக்கப்பட்ட நான், ஸர்வஸ்ய—உலகில் பெரும்பான்மையினர்க்கு, ந ப்ரகாஶ:—(பரமாத்மாவாகப்) பிரகாஶிப்பதில்லை; மூட₄: அயம் லோக:—அறிவற்றவரான இவ்வுலகினர், மாம்—என்னை, அஜம்—(கர்மம் காரணமான) பிறப்பற்ற காரணப்பொருளாகவும், அவ்யயம்—குறையெதுவுமற்ற ஸர்வேஶ்வரனாகவும், ந அபி₄ஜாநாதி—ஆராய்ந்து அறிவதில்லை.

என் பிறவி யோகம் எனும் இம்மாயையால் மறைந்தே—மனிதப் பிறவியில் பிறந்திருக்கையாகிற எனது இந்த மாயையினால் மறைக்கப்பட்டு, அன்பிலர்கள் யார்க்கும்—அன்பில்லாதவர்கள் எவர்க்கும், அறிவரியேன்—(நான்) அறிய அரியவன்; என்பதனால்—இக்காரணத்தால், உலகு—இவ்வுலகமானது, என்னை—என்னை, இயல் பிறப்பு அற்று—கர்மவஶத்தாலுண்டான எப்பிறப்புமற்றவனாய், ஏதும் குறைவு இலன்—எக்குறைவுமில்லாதவனாக, உன்னலுற ஓராது—ஆராய்ந்து அறியாது.

25. தடையற்ற ஸங்கல்பத்தை உடைய நீ, உனது குழந்தைகளான சேதனரை உன்னை ஆஶ்ரயிக்கச் செய்வதற்காகவே இவர்கள் கண்காண அவதரித்திருக்கும்போது, இவர்கள் உன்னை அறியத் தடையென்ன? ஏன் உன் விருப்பம் நிறைவேறுவதில்லை? என்னும் கேள்விக்கு பதிலுரைக்கிறது இந்த ஶ்லோகம். (யோக₃மாயா ஸமாவ்ருத: அஹம்) ஜீவர்களுக்கே உரிய மனிதப்பிறவியில் பிறந்து, அவர்களுடையதைப் போன்ற உருக்கொண்டிருக்கையாகிற மாயா யோக₃த்தாலே சூழப்பட்டிருக்கும் நான். "யோக₃மாயா" என்று யோக₃நித்₃ரையாகிற கள்ளநித்திரையில் ப்ரஸித்₃தி₄ உண்டாயினும், அது இப்ரகரணத்திற்குப் பொருந்தாதாகையாலே யோக₃மாகிற மாயை என்றே பொருள் கொள்ளவேண்டும். "ஸம்ப₄வாம்யாத்மமாயயா" [4-6] "மம மாயா" [7-14] "மாயயாऽபஹ்ருதஜ்ஞாநா:" [7-15] முதலானவிடங்களில் விசித்ரஸ்ருஷ்டியைச் செய்வது எப்பொருளாயினும், அது மாயாஶப்₃த₃த்தினால் குறிக்கப்படலாம் என்று காட்டப்பட்டது. "மம மாயா" என்னுமிடத்திற்போலே முக்

मूढोऽयं लोको मामतिवाय्विन्द्रकर्माणमतिसूर्याग्नितेजसमुपलभ्यमानमपि

குணமயமான ப்ரக்ருதியை இங்கு மாயாஶப்₃த₃ார்த்த₂மாகக் கொள்ளப்பார்த்தால், அதனுல் மறைக்கப்பட்டிருக்கை பரவாஸு-தே₃வநிலைக்கும், அவதார வாஸுதே₃வ நிலைக்கும் ஸமாநமாகையால், அவதாரநிலை மறைக்கப்படுவதற்குரிய காரணத்தையே சொல்ல வேண்டிய இப்ரகரணத்திற்குப் பொருந்தாது. ''ஆத்மமாயயா'' [4-6] என்றவிடத்தில் மாயை எனப்பட்ட ஸங்கல்பமும் எல்லா நிலைக்கும் பொதுவானதாகையால், முற்கூறிய காரணத்தாலேயே அதையும் மாயாஶப்₃த₃ார்த்த₂மாக இங்கு கொள்ளமுடியாது. யோக₃ஶப்₃த₃மும் ப்ரகரணவிருத்₃த₄மாகையாலே கர்மயோக₃ம் முதலானவற்றைக் குறிக்கமுடியாது; ஆகையால், 'சேர்த்தி' என்னும் ப்ரஸித்₃த₄மான பொருளையே குறிக்கிறது என்று கொள்ளவேண்டும். ஆக, ஸமா வ்ருதனுகச் சொல்லப்படும் கண்ணனுக்கு ஆஶ்சர்ய ஸ்ருஷ்டிகரமான ஏதோவொன்றின் சேர்த்தியே இங்கு சொல்லப்படவேண்டும் என்று தேறியவளவில், இதிஹாஸ புராணங்களிலும், இந்த கீ₃தையிலும் தெளிவாக விளங்கும் ஆஶ்சர்யமான வேஷம், சொல், செயல் முதலானவற்ருேடு கூடிய மனிதவுருவின் சேர்த்தியே இங்கு 'யோக₃மாகிற மாயை' என்று கூறப்படுவதாகக் கொள்வதே பொருந்தும். இந்த மனிதவுருவானது இந்த்₃ரஜாலம் போன்று பொய்யானதாகையால் மாயை எனப்படுகிறது என்று அத்₃வைதிகள் கூறுவதும் பொருந்தாது என்பது நாலாம் அத்₄யாயத்தின் தொடக்கத்திலேயே விரிவாக நிரூபிக்கப்பட்டதும் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கது. (ஸர்வஸ்ய ந ப்ரகாஶ:) உலகில் பெரும்பாலானவர்களுக்கு நான் பரத்வமுடையவனுக அடியோடு பிரகாஶிப்பதில்லை. இருபதாவது ஶ்லோகம் தொடங்கி நாலு ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட புல்லறிவாளர்களுக்கு ஒரு சிறிது பிரகாஶிக்கையாலும், ஐஶ்வர்யார்த்தி₂கள் முதலானுர்க்கு மேன்மேலே ப்ரகாஶிக்கையாலும், அவர்களையொழிந்த பெரும்பாலான ஶாஸ்த்ர ஜ்ஞாநமற்ற ஜனங்களே இங்கு ஸர்வ ஶப்₃த₃த்தால் சொல்லப்படுகிருர்கள். இது உன் குற்றமாய், உன்னிடம் ப்ரகாஶமில்லாமையாலே ப்ரகாஶிப்பதில்லையோ? எனில், என்னிடம் ப்ரகாஶமில்லாமையாகிற குற்றமில்லை; அவர்களிடமுள்ள அறிவின்மையாகிற குற்றத்தாலேயே நான் ப்ரகாஶிப்பதில்லை என்று காட்டுகிருன் ஶ்லோகத்தின் பிற்பாதியாலே,—(மூட₄: அயம் லோக:) அறிவிலியாய், அறிவில்லையே என்னும் இழவுமில்லாமலிருக்கும் இவ்வுலகினர். இவர்களையே ''அறிவினுல் குறைவில்லா அகல் ஞாலத்தவர்'' [திருவாய் 4-8-6] என்ருர் நம்மாழ்வார். (மூட₄:) எனது மனிதவுருவையே கண்டு மயங்கி நிற்கிருர்கள் என்று கருத்து. (மாம் நாபி₄ஜாநாதி) என்னை ஆராய்ந்து அறிவதில்லை; ஶாஸ்த்ர ஜ்ஞாநமில்லாமையாலே

अजमव्ययं निखिलजगदेककारणं सर्वेश्वरं मां सर्वसमाश्रयणीयत्वाय मनुष्यत्वसंस्थानमास्थितं नाभिजानाति ॥ २५ ॥

ஶாஸ்த்ரங்கொண்டுதான் அறியவில்லையெனில், ப்ரத்யக்ஷமாக என்னைப்பார்த்தாவது ஆராய்ந்து அறியலாமே, அதுவுமில்லை என்கிறுன். (ந அபி₄ஜாநாதி) அடியோடு அறிவதில்லை என்றும் பொருள் கொள்ளலாம். இருபதாவது ஶ்லோகம் தொடங்கி நாலு ஶ்லோகங்களால் கூறப்பட்ட புல்லறிவாளர்கள் ஒரு சிறிதாவது அறிகிறுர்கள்; இவர்கள் அடியோடு அறிவதில்லை என்று கருத்து. உனது ஸௌலப்₄யத்தை இவர்கள் அறிகிறுர்களே எனில், பரத்வத்தை அடியோடு அறியவில்லையே; ஸௌலப்₄யமாத்ரத்தை அறிந்தது என்னைக் கைவிடவன்றே காரணமாயிற்று என்கிறுன். (அஜம் அவ்யயம் நாபி₄ஜாநாதி) இவர்களுக்கு எளியனுவதற்காக என் விருப்பத்தாலே பிறந்திருக்கிறேனுயினும், கர்ம வஶப்பட்ட பிறப்பு எனக்குக் கிடையாது என்று அறிவதில்லை; பரத்வத்தை முழுவதும் மறைத்துக் கொள்ளாமையாலே, “ அதிவாய்விந்த்₃ர கர்மாணம் அதிஸூர்யாக்₃நிதேஜஸம் ” [வாயு இந்திரன் முதலான தே₃வர்களைக் காட்டிலும் சிறந்த செயல்களைச் செய்பவனும், ஸூர்யன் அக்₃னி முதலானுரைக் காட்டிலும் சிறந்த தேஜஸ்ஸை உடையவனுமான இவனை] என்று அறிவுடையார் பேசும்படி ப்ரத்யக்ஷமாகக் காணப்படும் என்னுடைய பெருமையைக்கண்டு, நானே உலகனைத்துக்கும் ஒரே காரணனுன ஸர்வேஶ்வரனென்றும், அனைவரும் என்னை ஆஶ்ரயிப்பதற்காக மனிதவுருக்கொண்டிருப்பவன் என்றும் அறிவதில்லை. (நாபி₄ஜாநாதி) எனது பரவாஸுதே₃வ நிலையை இவ்வுலகிலுள்ள அனைவருமே ப்ரத்யக்ஷமாக அறிவதில்லை; அது நியாயம்; இவர்களோவெனில், மனிதனுய் அவதரித்தவிடத்திலும் ப்ரத்யக்ஷமாகக் காணப்படும் எனது (மநுஷ்யத்வே) பரத்வத்தையும் அறிவதில்லை. (அஜம் நாபி₄ஜாநாதி) இச்சை₂யால் ஏற்படும் பிறப்பு உண்டாகையால், கர்மம் காரணமாக உண்டாகும் பிறப்பற்றவன் என்று அறிவதில்லை என்று கொள்ள வேண்டும். (அவ்யயம் நாபி₄ஜாநாதி) ஸ்வரூபத்தாலும் ஸ்வபா₄வத்தாலும் விகாரமற்ற ஸர்வேஶ்வரனுக அறிவதில்லை. (அஜமவ்யயம்) “ அஜோऽபி ஸந் அவ்யயாத்மா ” [கீ₃தை 4-6] ஏன்னுமிடத்தில் சொல்லப்பட்டபடி அவதார நிலையிலும் (கர்மம் காரணமாகப்) பிறப்பற்றவனுகவும், குறைவற்றவனுகவுமிருக்கிறேன் என்பதையும் அறிவதில்லை என்றுமாம். இப்படி எனது மநுஷ்யத்வே பரத்வத்தை அறியாமையாலே, இவர்கள் என்னைக் கர்மவஶத்தால் பிறந்த ஜீவர்களில் ஒருவனுகவும், அதனுல் ஏற்பட்ட ஜ்ஞாந ஸங்கோசம் முதலான குறைவுகளை உடையவனுகவுமே எண்ணி ஸ்வரூப நாஶத்தை அடைகிறுர்கள் என்று கருத்து.

25.

वेदाहं समतीतानि वर्तमानानि चार्जुन ।
भविष्याणि च भूतानि मां तु वेद न कश्चन ॥ २६ ॥

26. வேத$_3$ாஹம் ஸமதீதாநி வர்த்தமாநாநி சார்ஜுந ।
ப$_4$விஷ்யாணி ச பூ$_4$தாநி மாம் து வேத$_3$ ந கஶ்சந ॥

அர்ஜுந—அர்ஜுனா! ஸமதீதாநி—இறந்தகாலத்தவரும், வர்த்தமாநாநி—நிகழ்காலத்தவரும், ப$_4$விஷ்யாணி ச—வருங் காலத்தவருமான, பூ$_4$தாநி—எல்லா ப$_3$த்$_3$த$_4$ ஜீவர்களையும், அஹம்—நான், வேத$_3$—அறிவேன்; மாம் து—என்னையோ வெனில், கஶ்சந—(இவர்களில்) ஒருவனும், ந வேத$_3$— உள்ளபடி அறிவதில்லை.

---

26. நன்றறிவ னேனே நாடோறும் பூதங்கள்
சென்று நிகழ்ந்துவருஞ் செம்பொருள்க—ளின்றிவற்று
ளொன்று மெனையுணர மாட்டா துளதன்றே
குன்றுயர்ந்த தோளாய் குறி.

குன்று உயர்ந்த தோளாய்—மலைபோல் உயர்ந்த தோளை உடையவனே! சென்று நிகழ்ந்து வரும் செம்பொருள்கள் பூதங்கள்—இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், வருங் காலத்திலுமுள்ள நற்பொருள்களாகிற ஸம்ஸாரி ஜீவர்கள் அனைவரையும், நாள்தோறும்—எப்போதும், நானே நன்று அறிவன்—நான் ஒருவனே நன்றாக அறிவேன்; இவற்றுள் ஒன்றும்—இந்த ஜீவர்களில் ஒருவர்கூட, எனை—என்னை, நின்று உணரமாட்டாது உளதன்றே—நிலைநின்று நன்றாக அறியமாட்டாமல் உள்ளனரன்றோ; குறி—இதைக் குறிக் கொள்வாயாக.

---

26. இவ்வுலகில் இக்காலத்தில் பெரும்பான்மையினர் என்னை அடியோடு அறிவதில்லை என்றான் சென்ற ஶ்லோகத்தில்; வருங் காலம், நிகழ்காலம், கழிகாலம் என்னும் முக்காலத்திலும், சிறு பான்மையினரான மற்றவர்களிலாவது எவரேனும் எப்போதும் உன்னை உள்ளபடி அறிகிறார்களோ? எனில், தேஹவதாந்தரப$_4$க்தர்கள்

॥ भा ॥ अतीतानि वर्तमानान्यनागतानि च सर्वाणि भूतान्यहं वेद— जानामि। मां तु वेद न कश्चन—मयाऽनुसंधीयमानेषु कालत्रयवर्तिषु भूतेषु मां—एवंविधं वासुदेवं सर्वसमाश्रयणीयत्वायावर्तिण

ஐஶ்வர்யார்த்தி₂கள், கைவல்யார்த்தி₂கள், ஜ்ஞாநி ஆகிய மற்ற வர்கள் மேன்மேலே என்னைப்பற்றிய அறிவு அதி₄கமாக உடைய வர்களாயிருந்தபோதிலும் எப்போதும் என்னை உள்ளபடி அறிவார், அவர்களிலும் ஒருவர்கூட எக்காலத்திலும் இல்லை என்கிறான் இந்த ஶ்லோகத்தில். " கஶ்சிந் மாம் வேத்தி தத்வத: " என்று மூன்றும் ஶ்லோகத்தில் அருளியதற்கு விவரணமாயிருப்பது இந்த ஶ்லோகம். (ஸமதீதாநி வர்த்தமாநாநி ப₄விஷ்யாணி ச பூ₄தாநி அஹம் வேத₃) இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்னும் முக்காலத்திலும் உள்ள ஜீவர்களை நான் அறிவேன். 'ஸமதீதாநி' என்று இறந்த காலத்தில் இருந்தவர்களைச் சொல்லிவிட்டபடியால், " பூ₄தாநி " என்று பூ₄த(இறந்த)காலத்தில் இருந்தவர்களைச் சொல்லாது; பஞ்ச பூ₄தங்களும் ப்ரகரணத்திற்குப் பொருந்தாமையாலே பூ₄தஶப்₃த₃த் திற்குப் பொருளாகமாட்டா. " மாம் து வேத₃ ந கஶ்சந " என்று மேலே ' இவர்களில் எவரும் என்னை அறியமாட்டார்கள் ' என்கை யாலே சேதநாசேதநங்களாகிற ஸத்தாயோகி₃யான (உள்ளவை யான) எல்லாப் பொருள்களையும் பூ₄தஶப்₃த₃ங்களால் குறிப்பதும் ஒட்டாது. ஆகையால், ப்ராக்ருத ஶரீரத்தோடு கூடின சேதனரான ப₃த்₃த₄ஜீவரை மாத்திரம் இவ்விடத்தில் பூ₄தஶப்₃த₃ம் குறிப்பதாகக் கொள்ளவேண்டும். இப்படி 'எல்லா ஜீவர்களையும் நான் அறிவேன்' என்று கூறுவது எதற்காக எனில்; ' இவர்களில் என்னை அறிந்த வர்கள் ஒருவருமில்லை ' என்று (நாலாம் பாத₃த்தில்) அறுதியிட்டுச் சொல்லுவது தனக்கே பொருந்தும் என்று காட்டுவதற்காக என்று கொள்வது. (மாம் து வேத₃ ந கஶ்சந) என்னை உள்ளபடி ஸர்வ காலமும் அறிபவன் எவனுமே இல்லை. ஶாஸ்த்ர ஜ்ஞாநமில்லாத பெரும்பாலானவர் என்னை மனிதனாகவே நினைக்கையாலே அடி யோடு அறிவதில்லை; புல்லறிவாளர்களான தே₃வதாந்தரப₄க்தர்கள் என்னை ஒரு தே₃வனென்றே அறிகிறார்களாகையாலே சிறிதே அறிகிறார்கள். தே₃வர்தலைவனென்று அறிந்தும் என்னை ப்ராப்ய மென்று அறியாமல், மற்றொன்றை ப்ராப்யமாக நினைத்து அதற்குப் ப₂லப்ரத₃ ஸாத₄னமாக மாத்திரம் என்னை நினைக்கும் ஐஶ்வர்ய கைவல்யார்த்தி₂களும் அறைகுறை அறிவாளிகளாகவே உள்ளனர். என்னையே ப்ராப்யமாகவும், ப₂லப்ரத₃ ஸாத₄னமாகவும் அறிந்தும்

विदित्वा मामेव समाश्रयन् न कश्चिदुपलभ्यत इत्यर्थः। अतो ज्ञानी सुदुर्लभ एव ॥ २६ ॥

॥ भा ॥ तथा हि—

इच्छाद्वेषसमुत्थेन द्वन्द्वमोहेन भारत।
सर्वभूतानि संमोहं सर्गे यान्ति परन्तप ॥ २७ ॥

27. இச்ச2ாத்3வேஷஸமுத்தே2ந த்3வந்த்3வமோஹேந ப4ாரத।
ஸர்வபூ4தாநி ஸம்மோஹம் ஸர்கே3 யாந்தி பரந்தப ॥

ப4ாரத—ப4ரதகுலத்துதித்தவனே! பரந்தப—எதிரிகளை வாட்டுமவனே! இச்ச2ாத்3வேஷ ஸமுத்தே2ந — (ப்ராக்ருத விஷயங்களில்) சிலவற்றைப்பற்றிய விருப்பத்தாலும், சில வற்றைப்பற்றிய வெறுப்பாலும் உண்டாகும், த்3வந்த்3வ மோஹேந—ஸுக2ம் து3:க்க2ம் முதலான மயங்கவைக்கும் சுயநல உணர்ச்சிகளாலே, ஸர்வபூ4தாநி—எல்லா ப3த்3த4 ஜீவர்களும், ஸர்கே3—பிறக்கும்போதே, ஸம்மோஹம் யாந்தி—பெருமயக்கத்தை அடைகின்றனர்.

என்னைப் ப2லகரண ஸாத4னமாக அறியாமல், தன் முயற்சி யான கர்ம ஜ்ஞாந ப4க்திகளைப் ப2லகரண ஸாத4னமாக மயங்கும் உபாஸக ஜ்ஞாநியும் அறிவில் குறையுடையவனாகவேயிருக்கிறான். என்னையே ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும், மற்ற எல்லாமாகவும் அறிந்து பற்றும் மஹாத்மாவான ஜ்ஞாநியும், அப்படி அறிவதற்கு முன்னால் தத்வ ஜ்ஞாநமில்லாதவனாகவேயிருக்கிறானாகையால், அவனும் எப்போதும் என்னை உள்ளபடி அறிபவனல்லன் – என்று கருத்து. இப்படி மஹாத்மாவான ஜ்ஞாநி எனக்கே மிகவும் கிடைத் தற்கரியவனாகையாலே, அப்படி ஒருவன் கிடைக்கப்பெற்றால், அந்த க்ஷணத்திலேயே "ஸர்வபாபேப்4யோ மோக்ஷயிஷ்யாமி" [கீ3தை 18-66] என்னும் ஸங்கல்பத்தை அவன் விஷயத்தில் செய்து அவனை மேலும் ஜன்மங்களைக் கொடுத்து என் பேற்றை இழக்காமல், மரண மானால் வைகுந்தம் கொடுத்து அவனை நிரந்தரமாகப்பெற்று நான் இன்புறுகிறேன் என்பது இந்த ஶ்லோகத்திலிருந்து தேறும் பொருள். இது சரமஶ்லோகத்திலே [கீ3தை 18-66] தெளிவாகும். (அர்ஜுந) வெள்ளை நிறத்தவனான நீ எனக்கே கிடைத்தற்கரிய வெள்ளை மனத்தனான மஹாத்மாவான ஜ்ஞாநியாக ஆகவேணும் என்று கருத்து. 26.

॥ भा ॥ इच्छाद्वेषाभ्यां समुत्थितेन शीतोष्णादिद्वन्द्वाख्येन मोहेन सर्वभूतानि सर्गे—जन्मकाल एव संमोहं यान्ति। एतदुक्तं

27. முன்னியலு மிச்சை முனிவான் முயன்றெழுந்து
பின்னிருமை கொண்ட பெருந்துயரா—லிந்நிலத்துப்
பூதங்க ளெல்லாம் புணர்பொழுதே யெய்துமே
யேதங்க ளாமோக மிங்கு.

முன் இயலும் இச்சை முனிவால் முயன்று எழுந்து—முதல் முயற்சியில் ஏற்பட்ட (சில ப்ராக்ருத விஷயங்களைப் பற்றிய) விருப்பத்தாலும், (மற்றும் சில ப்ராக்ருத விஷயங்களைப் பற்றிய) வெறுப்பாலும் மிகுதியாக உண்டாகி, பின் இருமை கொண்ட பெரும் துயரால்—மேலும் மேலும் ஸுகம் து₃:க்க₂ம் முதலான இரட்டைகளாகப் பெருகிப் பெரும்துன்பத்தை விளைக்கும் சுயநல உணர்ச்சிகளாலே, இந்நிலத்து பூதங்கள் எல்லாம்—இவ்வுலகிலுள்ள ஸம்ஸாரி ஜீவர்களெல்லாம், இங்கு புணர் பொழுதே—இவ்வுலகில் பிறக்கும் காலத்திலேயே, ஏதங்களாம் மோகம் எய்தும் — பெரும் துன்பத்தை விளைக்கும் மயக்கத்தை அடைகின்றனர்.

27. இப்படி முக்காலத்திலுள்ள அனைவருமே தன்னை எப்போதும் உள்ளபடி அறியாமலிருப்பதற்குக் காரணத்தை இந்த ஶ்லோகத்தில் கூறுவதின் மூலம் ஞானியின் அருமையை வலியுறுத்துகிறான். (இச்சா₂த்₃வேஷ ஸமுத்தே₂ந) அநாதி₃காலமாக இந்த ஜீவர்களுக்கு ப்ராக்ருத விஷயங்களில் ஏற்பட்டிருக்கும் விருப்பு வெறுப்புகளினால் உண்டாகின்றதான. (த்₃வந்த்₃வமோஹேந) இவர்களை மயக்குகின்ற முக்குண விஷயங்களைப்பற்றி நிற்கும் ஶீதம் உஷ்ணம், ஸுக₂ம் து₃:க்க₂ம், லாப₄ம் அலாப₄ம், ஜயம் அபஜயம் முதலான இரட்டைகளாலே. இச்சா₂த்₃வேஷங்களும் த்₃வந்த்₃வங்களில் (இரட்டைகளில்) ஒன்றாயிருக்க, த்₃வந்த்₃வங்களைக் காட்டிலும் அதைத் தனியாக எடுப்பது, அது மற்ற த்₃வந்த்₃வங்களுக்குக் காரணமாயிருக்கையாலேயே என்பதை 'ஸமுத்தே₂ந' என்னும் பத₃ம் காட்டுகிறது. (ஸர்வபூ₄தாநி ஸர்க்கே₃ ஸம்மோஹம் யாந்தி)

भवति — गुणमयेषु सुखदुःखादिद्वन्द्वेषु पूर्वपूर्वजन्मनि यद्विषया-विच्छाद्वेषावभ्यस्तौ ; तद्वासनया पुनरपि जन्मकाल एव तदेव द्वन्द्वाख्यमिच्छाद्वेषविषयत्वेन समुत्थितं भूतानां मोहनं भवति ; तेन

இந்த எல்லா ஜீவர்களும் தாங்கள் பிறக்கும்போதே அந்த ப்ராக்ருத விஷயங்களில் உறுதியான விருப்பு வெறுப்புகள் உள்ளவராகவே அமைகின்றனர்; என்னோடு சேர்ந்தால் இன்பமடைகின்றவர்களாகவும், என்னைப் பிரிந்தால் துன்பமடைபவராகவும் அமைவதில்லை. ஜ்ஞாநியோவெனில் என்னைச் சேர்வதால் இன்பத்தையும், என்னைப் பிரிவதால் துன்பத்தையும் அடைவதையே இயல்வாகக் கொண்டவன். ஆகையால் பிறக்கும்போது அவ்வியல்வையுடையவனாக எவனுமே பிறப்பதில்லை. ஆகையால், பிறந்தபின்பு ஸதா₃சார்ய கடாக்ஷம் முதலானவற்றாலே ஜ்ஞாநியாகின்றவன் மிகவும் கிடைத்தற்கரியவனே என்று கருத்து. இவ்விஷயத்தை மேலும் விளக்குவதற்காக இந்த ஶ்லோகம் மறுபடியும் விவரிக்கப்படுகிறது. (இச்சா₂த்₃வேஷ) "ஜாநாதி இச்ச₂தி யததே" (அறிகிறான், விரும்புகிறான், முயல்கிறான்) எனப்படும் மூன்றுக்கும் இது உபலக்ஷணம். "ஆத₃ாவீஶ்வரத₃த்தயைவ புருஷ: ஸ்வாதந்த்ர்யஶக்த்யா ஸ்வயம் தத்தத் ஜ்ஞாநசிகீர்ஷண ப்ரயதநாங்யுத்பாத₃யந் வர்த்ததே" [தத்வஸாரம்] [ஸர்வேஶ்வரன் கொடுத்த ஸ்வாதந்த்ர்ய ஶக்தியாலே ஜீவன் ஒவ்வொரு செயல்களைச் செய்யும்போதும் ப்ரத₂மக்ஷணத்திலே தானே ஒவ்வொரு ஜ்ஞாநேச்ச₂ாப்ரயத்நங்களைச் செய்கிறான்.] என்கிறபடியே அநாதி₃ காலமாக ஸர்வேஶ்வரன் கொடுத்த ஸ்வாதந்த்ர்ய ஶக்தியைக் கொண்டு ப்ராக்ருத விஷயங்களில் ஜ்ஞாநம், இச்ச₂ாத்₃வேஷங்கள், அதற்கனுகு₃ணமான ப்ரயத்னம் ஆகியவற்றையே இந்த ஜீவர்கள் வளர்த்துக்கொண்டு வருகிறார்கள். இவர்கள் செய்யும் கர்மமான இதன் ப₂லன் யாதெனில், – (ஸமுத்தே₂ந த்₃வந்த்₃வமோஹேந) அந்தக் கர்மம் புண்யமாயிருந்து ப்ராக்ருதர்களான பஶு, புத்ரன், அந்நம் முதலானவற்றோடு தொடர்பு ஏற்பட்டால் ஸுக₂மும், அது பாபமாயிருந்து எதிரிகள், நெருப்பு, அம்பு முதலானவற்றோடு தொடர்பு ஏற்பட்டால் துன்பமும் ஏற்படுகிறது. அந்தப் புண்யபாப ரூப கர்மங்களாலேயே ஶீதம் உஷ்ணம், லாப₄ம் அலாப₄ம், ஜயம்அபஜயம் முதலான இரட்டைகளும் ஏற்படுகின்றன. இந்த இரட்டைகள் மேன்மேலும் முக்குணமயமான ப்ராக்ருத விஷயங்களிலேயே விருப்பு வெறுப்புகள் உண்டாகும்படி இவர்களை மயக்குகின்றன. இப்படிப் புண்யபாப கர்மங்கள் வளர்ந்து ப்ராக்ருத விஷயங்களிலேயே ஓர் அநாதி₃வாஸனை

मोहेन सर्वभूतानि संमोहं यान्ति; तद्विषयेच्छाद्वेषस्वभावानि भवन्ति, न मत्संश्लेषवियोगसुखदुःखस्वभावानि। ज्ञानी तु मत्संश्लेषवियोगैक-सुखदुःखस्वभावः ; न तत्स्वभावं किमपि भूतं जायते—इति ॥ २७॥

ஏற்பட்டுவிடுகிறது. (ஸர்வபூ4தாநி ஸர்க்கே3 ஸம்மோஹம் யாந்தி) அந்த அநாதி3வாஸநையாலே ஜ்ஞாநேச்சா2ப்ரயத்நங்களைச் செய்ய இயலாத ஜநநகாலத்திலேயே இவர்களுக்கு ப்ராக்ருத விஷயங்களிலேயே விருப்பு வெறுப்புகள் உறுதியான இயல்வாக ஏற்பட்டு விடுகின்றன. இதனால் என்னோடு சேர்ந்தால் இன்புறுவதும், என்னைப் பிரிந்தால் துன்புறுவதுமான ஜ்ஞாநியின் இயல்வு ஜநந காலத்தில் எவர்க்குமே இல்லாமல் போகிறது. பிறந்தபின்பு புண்ணியமிகுதியால் ஏற்படும் ஸதா3சார்ய கடாக்ஷம் முதலானவற்றாலே இவர்களில் சிலரே மஹாத்மாவான ஜ்ஞாநிகளாகிறார்கள் என்று கருத்து. (த்3வந்த்3வமோஹேந ஸம்மோஹம் யாந்தி) மோஹத்தாலே மோஹத்தை அடைகிறார்கள் என்று ஆத்மாஶ்ரய தோ3ஷம் ஏற்படாமைக்காக, மோஹநமான (மயக்குவதான) த்3வந்த்3வத்தாலே உறுதியான மோஹத்தை அடைகிறார்கள் என்று கொள்ளப்பட்டது. (ஸர்க்கே3) இப்படி அநாதி3காலமாக வளர்ந்து வரும் புண்யபாபகர்மங்களில், ப்ரக்ருதி ஸம்ப3ந்த4முள்ளவர்களுக்குப் பாபமே பள்ளமடையாகையாலே, ப3த்3த4 ஜீவர்களில் பெரும்பாலானவர்கள் பாபமிகுதியாலே — முன் கூறப்பட்ட "அபு3த்3த4ய:" எனப்பட்ட பெரும்பாவிகளான அறிவுகெட்டவர்களாகவும், அவர்களில் சற்று மேலான பாவிகளான அல்பமேத4ஸ்ஸுக்களான புல்லறிவாளர்களாகவுமே ஜநநகாலத்தில் பிறக்கின்றனர் என்று கருத்து. பிறந்தபிறகு மஹாத்மாவான ஜ்ஞாநிகளாகின்றவர்களும் பிறக்கும் போது என்னை உள்ளபடி அறியாதவர்களாகவே இருக்கிறார்களாகையாலே 'என்னை முக்காலத்திலுள்ள எவனுமே எப்போதும் உள்ளபடி அறிவதில்லை' என்று சென்ற ஶ்லோகத்தில் சொன்னது சரியானதே என்றும் கருத்து. இப்படி பிறக்கும்போது மஹாத்மாவாக ஒரதி4காரியுமில்லை என்னும் து3ர்ப்பி4க்ஷம் ஏற்படக் கூடாது என்று திருவுள்ளம்பற்றியே தன் நிரங்குஶ ஸ்வாதந்த்ர்யத்தாலே ஸர்வேஶ்வரன் "பொலிக பொலிக பொலிக" என்னும்படி நாட்டை விஶேஷமாகத் திருத்துவதற்காக நம்மாழ்வாருக்கு க3ர்ப்ப4த்திலிருக்கும்போதே நிர்ஹேதுகமாக மயர்வற மதிநலமருளி, ஜநநகாலத்திலேயே அவரை, ஞானத்தை மறைக்கும் ஶட2வாயுவைக் கோபிக்கும் ஶட2கோபராக்கி, எப்போதுமே உண்ணும் சோறு பருகு நீர் தின்னும்

येषां त्वन्तगतं पापं जनानां पुण्यकर्मणाम्।
ते द्वन्द्वमोहनिर्मुक्ताः भजन्ते मां दृढव्रताः॥२८॥

28. யேஷாம் த்வந்தக$_3$தம் பாபம் ஜநாநாம் புண்யகர்மணும்|
தே த்$_3$வந்த்$_3$வமோஹ நிர்முக்தா: ப$_4$ஜந்தே மாம்
த்$_3$ருட$_4$வ்ரதா: ||

புண்யகர்மணும் யேஷாம் து ஜநாநாம் — புண்ணியச் செயல்களை மிகுதியாகச் செய்த எந்த ஜீவர்களுக்கு, பாபம் அந்த க$_3$தம் — (முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட) பாபம் முடிவை நெருங்குகின்றதோ, தே—அவர்கள், த்$_3$வந்த்$_3$வ மோஹ நிர்முக்தா: — (அவர்களது புண்ணியத்திற்கேற்ப) மயக்கும் இரட்டைப் பயன்களிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டவர்களாய், த்$_3$ருட$_4$வ்ரதா:-(புண்ணியத்தின் மிகுதிக்கேற்ப ஐஶ்வர்யம், கைவல்யம், ப$_4$க$_3$வத் ப்ராப்தி ஆகியவற்றைப் பெறவேண்டுமென்று) உறுதியான ஸங்கல்பமுடையவர்களாய், மாம் ப$_4$ஜந்தே — (அப்ப$_2$லன்களைப் பெறுவதற்காக) என்னைக் குறித்து ப$_4$க்தி செய்கிருர்கள்.

வெற்றியையும் எல்லாம் கண்ணன் என்னும் ஞானியாக்கி வைத்திருந்தான் என்பது உணரத்தக்கது. "மாம் து வேத$_3$ ந கஶ்சந" என்னும் பொதுவிதி$_4$க்கு நம்மாழ்வார் ஒரு விதி$_4$விலக்கு என்று அறியத்தக்கது. (பா$_4$ரத) ப$_4$ரத குலத்துதித்தவனுன நீ, நான் இதுவரையில் விளக்கிய கிடைத்தற்கரிய ஞானியாக வேண்டாவோ? என்று கருத்து. (பரந்தப) வெளி எதிரிகளை அடக்கி. அவர்களால் கலங்காமலிருக்கும் நீ, உனது உள் எதிரிகளான இச்சா$_2$த்$_3$வேஷங்களையும், த்$_3$வந்த்$_3$வமோஹங்களையும் அடக்கி, அவைகளால் கலங்காமலிருக்க வேண்டாவோ என்று கருத்து. ஆக, இந்த ஶ்லோகத்தால், ஈஶ்வரன் ப்ரத$_2$ம ப்ரவ்ருத்தியில் கொடுக்கும் ஸ்வாதந்த்ர்ய ஶக்தியைக் கொண்டு, ஜீவர்கள் அனைவரும் புண்யபாப கர்மங்களைச் செய்து, அதன் ப$_2$லமான இரட்டைகளில் உழல்வதாலேயே பிறக்கும்போதே ஜ்ஞாநியாகப் பிறக்கமுடிவதில்லை என்று காட்டினுயிற்று. ஆக, இதுவரையில் ஞானியின் அருமை விளக்கப்பட்டதாயிற்று. 27.

॥ भा ॥ येषां तु अनेकजन्मार्जितेनोत्कृष्टपुण्यसंचयेन गुणमयद्वन्द्वेच्छा-द्वेषहेतुभूतं मदोन्मुख्यविरोधि चानादिकालप्रवृत्तं पापमन्तगतम्-क्षीणम् ;

28\. புண்ணியஞ் செய்புருடர் யார்க்கும் புணர்பாவ
நண்ணியிருந் தான்முடிவை நன்றாகத்—திண்ணியராய்
நின்றவர்க ளவ்விருமை நீங்கும்பே றென்னையே
யொன்ற வுகந்தடைவ ருற்று.

புண்ணியம் செய் புருடர் யார்க்கும்—புண்ணியச் செயல்களை மிகுதியாகச் செய்த எந்த ஜீவர்களுக்கும், புணர்பாவம் முடிவை நன்றாக நண்ணியிருந்தால் — அவர்கள் செய்த பாவங்கள் அழிவை மேன்மேலே நெருங்கியிருந்தால், அவ்விருமை நீங்கும் பேறு நின்றவர்கள் — (அவர்களது புண்ணியத்திற்கேற்ப) அந்த இரட்டைப் பயன்கள் சிறிது சிறிதாக நீங்கப்பெற்றவர்கள், திண்ணியராய்—(புண்ணியத்தின் மிகுதிக்கேற்ப ஐஶ்வர்யம், கைவல்யம், ப₄க₃வத் ப்ராப்தி ஆகியவற்றைப் பெறவேண்டுமென்று) உறுதியான ஸங்கல்பமுடையவர்களாய், என்னையே உற்று — என்னையே அப்ப₂லன்களுக்குப் ப₂லப்ரத₃ஸாத₄னமாகக் கொண்டு, ஒன்ற உகந்து அடைவர்—ஒருமனப்பட்ட ப₄க்தியை (அவற்றுக்குப் ப₂லகரண ஸாத₄னமாக) அநுஷ்டி₂ப்பர்.

28\. அநாதி₃காலமாகச் செய்துவரும் பாபகர்மங்களாலும், அதனால் ஏற்படும் பாபவாஸனையாலும், பிறக்கும்காலத்தில் பெரும்பாலான ஜீவர்கள் என்னை அறியாமலிருக்கிறார்கள் என்று சென்ற ஶ்லோகத்தில் உணர்த்தினான். அப்படியானால் "சதுர்வித₄ா ப₄ஜந்தே மாம்" என்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ப₄க₃வது₃பாஸநம் எப்படி உண்டாகமுடியும் என்னும் கேள்வியெழ, அதற்கு பதிலுரைக்கிறது இந்த ஶ்லோகம். (யேஷாம் புண்யகர்மணாம் ஜநாநாம் பாபம் அந்தக₃தம்) மநுஷ்யர்களில் பெரும்பாலானவர்கள் பாபிகளாயிருந்தபோதிலும், "ஸஹஸ்ரேஷு கஶ்சித்" என்று கூறப்பட்ட ஆயிரக்கணக்கான எவர்க்கு, அநேக ஜன்மங்களில் ஸம்பாதி₃க்கப்பட்ட உயர்ந்த புண்ணியங்களாலே,—மேலும் மேலும் முக்குணமயமான பொருள்கள் விஷயமான இன்பதுன்பங்கள் முதலான இரட்டைகளில் இச்சா₂த்₃வேஷங்களை வளர்ப்பதாய், என்னிடம் ஈடுபாட்டுக்குத் தடையாயிருப்பதாய், அநாதி₃காலமாகத் தொடர்ந்து வருவதாக முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட பாபமானது அழிவைச் சிறிது சிறிதாக நெருங்கிக்கொண்டிருக்கிறதோ.

ते पूर्वोक्तेन सुकृततारतम्येन मां शरणमनुप्रपद्य गुणमयान्मोहाद्विनिर्मुक्ताः

(யேஷாம் து)சென்ற ஶ்லோகத்தில் சேதனர்கள் அனைவரையும் பற்றிய பொதுவிதி$_4$ சொல்லப்பட்டது என்றும், இந்த ஶ்லோகத்தில் அதற்கு ஓர் விதி$_4$விலக்கு சொல்லப்படுகிறது என்றும் துஶப்$_3$த$_3$ம் காட்டுகிறது. (புண்யகர்மணாம் ஜநாநாம் பாபம் அந்தக$_3$தம்) "த$_4$ர்மேண பாபம் அபநுத$_3$தி" [தை-நா 50] [புண்ணியத்தினாலே பாபத்தைப் போக்குகிறான்] என்று சொல்லப்பட்டபடி பலகோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட புண்ணியத்தாலே பாபமானது முடிவை எவர்க்கு நெருங்கிக் கொண்டிருக்கிறதோ. (ஜநாநாம்) ஜந்மமுடையவர்களுக்கு. இப்படிப் பாபம் முடிவடைவதற்கு அநேக புண்ய ஜந்மங்கள் ஏற்பட்டிருக்கவேண்டும் என்று உணர்த்தப்படுகிறது. (அந்தக$_3$தம்) "அந்தம் க$_3$தம்" [பாபம் அழிந்துவிட்டது] என்னும் நிலை முக்தர்களுக்கே ஏற்படுமாகையால், "அந்தம் ப்ரதி க$_3$தம்" [முடிவைக் குறித்து நெருங்கிவிட்டதோ] என்று கொண்டு, "க்ஷீணம்" என்று பா$_4$ஷ்யமிடப்பட்டது. எவர்களுடைய பாபம் முடிவை நெருங்கிக் கொண்டிருக்கிறதோ என்றபடி. (தே த்$_3$வந்த்$_3$வமோஹ நிர்முக்தா:) அவர்கள் தங்கள் தங்கள் புண்ணியத்தின் ஏற்றத்தாழ்வுக்கு அநுகு$_3$ணமாக முற்கூறிய மயக்கும் த்$_3$வந்த்$_3$வங்களிலிருந்து ஒவ்வோரளவுக்கு விடுபட்டவர்களாய். இதில் முதற்படியில் நிற்பவர்கள்—முக்குணமயமான அல்பமான ப்ராக்ருத விஷயங்களைப் பற்றி நிற்கும் இன்பம் துன்பம் முதலியவற்றிலிருந்து விடுபட்டு, ப்$_3$ரஹ்மாவின் பத$_3$வி, உருத்திரனின் பத$_3$வி, இந்திரனின் பத$_3$வி முதலான பெரிய ப்ராக்ருத ஐஶ்வர்யங்களைப்பெற விரும்பி நிற்பவர்கள். அதற்கு மேல் படியில் நிற்பவர்கள்—ப்ராக்ருதமான எல்லா விஷயங்களைப் பற்றி நிற்கும் இன்பம் துன்பம் முதலியவற்றிலிருந்தும் விடுபட்டு, ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தம் ஆத்மாவைத் தாம் பெற்று அநுப$_4$விப்பதாகிற கைவல்ய மோக்ஷாநந்த$_3$த்தைப் பெற விரும்பி நிற்பவர்கள். அதற்கும் மேற்படியில் நிற்பவர்கள் — மோக்ஷத்தில் என்னைப்பெற்று அநுப$_4$விக்கும் ஒப்பற்ற ப்$_3$ரஹ்மாநந்த$_3$த்தைப் பெற விரும்பி நிற்பவர்கள். (ப$_4$ஜந்தே மாம் த்$_3$ருட$_4$வ்ரதா:) தம் தம் விருப்பத்தைப் பெறுவதற்காக உறுதியான ஸங்கல்பமுடையவர்களாய், என்னைப் * ப$_2$லப்ரத$_3$ஸாத$_4$னமாகக் கொண்டு, என் விஷயமான ஶரணாக$_3$தியை அங்க$_3$மாகக் கொண்ட ப$_4$க்தியைப் * ப$_2$லகரணஸாத$_4$நமாக அநுஷ்டி$_2$க்கிறார்கள். புண்யத்தால் பெரும்பான்மையான பாபங்

* ப$_2$லப்ரத$_3$ன்—ப$_2$லனை அளிப்பவன். ப$_2$லகரணம்—ப$_2$லப்ரத$_3$ன் ப$_2$லனை அளிக்கத் தனிக்காரணம்.

जरामरणमोक्षाय, महते चैश्वर्याय, मत्प्राप्तये च दृढव्रताः—दृढसङ्कल्पाः मामेव भजन्ते ॥ २८ ॥

களிலிருந்து விடுபட்டு, என்னை ஶரணமடைந்ததினால் ப்ராக்ருதங்களான த்3வந்த்3வங்களிலிருந்து பெரும்பாலும் விடுபட்டவர்கள் — மிகுந்த புண்யமும், சிறிது பாபமும் எஞ்சியிருக்கையாலே, மிகப்பெரிய ப்3ரஹ்மாதி3களின் ஐஶ்வர்யத்தில் ஆசைகொண்டு அதைப்பெற என்னிடம் வருகிறார்கள் : அவ்வாசையையே பற்றாசாகக்கொண்டு அவர்களுக்கு ப்ராக்ருதப்பற்று நீங்கச் செய்வதற்காக, என் விஷயமான ஶரணாக3தியை அங்க3மாகக்கொண்ட ப4க்தியை அங்க3மாகக்கொண்ட ஜ்ஞாநஸஹிதகர்மயோக3த்தை நான் அவர்களுக்குப் ப2லகரண ஸாத4னமாக விதி4க்கிறேன். அவர்களும்அதையே உறுதியான ஸங்கல்பத்துடன் அனுஷ்டி2க்கிறார்கள். முன்கூறியவர்களுடையதைக் காட்டிலும் மிகுந்த புண்யத்தாலே ப்ராக்ருதத்3வந்த்3வங்களுக்குக்காரணமான எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபட்டபோதிலும், என்னையே பரம ப்ராப்யமென்று அறியாமைக்கு உடலான ஓர் ப்ரப3லபாபம் எஞ்சியிருக்கப்பெற்றவர்கள், தம் ஆத்மாநுப4வமாகிற கைவல்யாநுப4வத்திலே ஆசைகொண்டு அதைப்பெற என்னிடம் வருகிறார்கள். அவ்வாசையையே பற்றாசாகக்கொண்டு அவர்களுக்குத் தம் ஆத்மாவில் பரம ப்ராப்யத்வபு3த்3தி4 நீங்கச்செய்வதற்காக என் விஷயமான ஶரணாக3தியை அங்க3மாகக் கொண்ட ப4க்தியை அங்க3மாகக்கொண்ட கர்மஸஹித ஜ்ஞாநயோக3த்தை நான் அவர்களுக்குப் ப2லகரண ஸாத4னமாக விதி4க்கிறேன். அவர்களும் அதையே உறுதியான ஸங்கல்பத்துடன் அநுஷ்டி2க்கிறார்கள். முற்கூறியவர்களுடையதைக் காட்டிலும் மிகுந்த புண்யத்தால், என்னையே ப்ரமப்ராப்யமென்று அறியாமைக்கு உடலான எல்லாப்பாபங்களும் நீங்கப்பெற்றவர்கள்— மோக்ஷத்திலும் என் ஆநந்த3த்தையே உத்3தே3ஶ்யமாகவும், மோக்ஷத்திற்கு என்னையே ப2லகரணஸாத4னமாகவும் அறியாமைக்கு உடலான ஓர் பாபம் எஞ்சிநிற்கையாலே மோக்ஷத்தில் தாம் ஆநந்த3மடைய ஆசைகொண்டு, அதைப்பெற என்னிடம் வருகிறார்கள். அவ்வாசையையே பற்றாசாகக்கொண்டு, அவர்களுக்குத் தம் ஆநந்த3த்தில் ப்ராப்யத்வபு3த்3தி4யும், அதற்கான தமது முயற்சியில் ப2லகரணத்வ பு3த்3தி4யும் நீங்கச்செய்வதற்காக, கர்மஜ்ஞாநயோக3ங்களையும், என் விஷயமான ஶரணாக3தியையும் அங்க3மாகக்கொண்ட ப4க்தியோக3த்தைப் ப2லகரண ஸாத4னமாக விதி4க்கிறேன். இவ்வண்ணமாக அங்க3மாகவோ, அங்கி3யாகவோ ப4க்திசெய்யும்படி

விதி₄க்கப்பெற்ற அவர்களும், தத்தம் ப்ராப்யத்தைப் பெறுவதாகிற ஒரே குறிக்கோளை உடையவர்களாய், முற்கூறியபடி என் விஷய மான ப₄க்தியைப் ப₂லகரண ஸாத₄னமாக அநுஷ்டி₂க்கிறார்கள் என்று கருத்து. (த்₃ருட₄வ்ரதா:) அவ்வவர்களுடைய ப்ரதிபத்தியை (எண்ணத் தைச்) சீர்திருத்தவேண்டும் என்னும் நினைவாலே நான் விதி₄த் திருக்கும் ஸாத₄னத்தை, என் கருத்தை அறியாமலே, தம் விருப்பம் நிறைவேறவேண்டும் என்னும் ஒரே குறிக்கோளோடு அநுஷ்டி₂க் கிறார்கள் என்று கருத்து. (ப₄ஜந்தே) என்னும் ஆத்மநே பத₃த்தாலே இவர்களுடைய ஸ்வார்த்த₂தை தோற்றுகிறது.

சென்ற ஶ்லோகத்திலும், இந்த ஶ்லோகத்திலும் புண்ய பாப லக்ஷணம் கீ₃தாசார்யனாலே உணர்த்தப்படுகிறது என்பது இங்கு குறிக் கொள்ளத்தக்கது. எப்படியெனில்:— ''யேஷாம் து'' என்னுமிடத்தில் துகாரத்தாலே, சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட உத்ஸர்க்க₃த் திற்கு (பொதுவிதி₄க்கு), இந்த ஶ்லோகத்தில் அபவாத₃த்தை (விதி₄ விலக்கை) உணர்த்துகிறான் என்று விளங்குகிறது. இப்படியிருக்கும் போது, அந்த ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட எல்லா அம்ஶங்களும் இந்த ஶ்லோகத்திலும் வரவேண்டுமென்பது வெளிப்படை. இவ்விரு ஶ்லோகங் களை ஆராய்ந்தால், இரு ஶ்லோகங்களிலும் த்₃வந்த்₃வ மோஹம் வந்தபோதிலும், சென்ற ஶ்லோகத்தில் த்₃வந்த்₃வமோஹத்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்ட இச்சா₂த்₃வேஷங்கள் இங்கு இல்லாம லிருப்பதையும். அதற்கு பதிலாக த்₃வந்த்₃வமோஹங்கள் நீங்குவதோடு தொடர்புகொண்ட புண்ய பாபங்களைப்பற்றிய ப்ரஸ்தாவம் புதிதாக வந்திருப்பதையும் காண்கிறோம். இதிலிருந்து—அங்கு த்₃வந்த்₃வ மோஹத்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்ட இச்சா₂த்₃வேஷங்களின் இரு பகுதிகளே, இங்கு புண்யமென்றும், பாபமென்றும் சொல்லப் படுகிறதென்றும், அதில், படிப்படியாகப் புண்ணியப் பகுதி மிகுந்து, பாபப்பகுதி குறையப்பெற்றவர்களுக்கு, புண்யபாப ரூபமான இச்சா₂ த்₃வேஷகார்யமான த்₃வந்த்₃வமோஹம் படிப்படியாகக் குறைகிறது என்றும் எம்பெருமான் கருதுகிறான் என்று தெளிவாக விளங்கு கிறது. ஒவ்வொரு செயலைத் தொடங்கும்போதும் ''ஜாநாதி, இச்ச₂தி அத₂வா த்₃வேஷ்டி, யததே'' [அறிகிறான், விரும்புகிறான் அல்லது வெறுக்கிறான், (அதற்கு அனுகு₃ணமாக) முயல்கிறான்.] என்னும் க்ரமத்திலேயே ஜீவன் முதன்முதலில் செயல்படுகிறான் என்பது அனுப₄வஸித்₃த₄ம். ஆகையால், முன் ஶ்லோகத்தில் சொல் லப்பட்ட இச்சா₂த்₃வேஷங்கள், இவற்றுக்கு முன்வரும் ஜ்ஞாநத் திற்கும், பின்வரும் ப்ரயத்னத்திற்கும் உபலக்ஷணமென்றும் விளங்கு

கிறது. தனக்கு வைஷம்யநைர்க்₄ருண்யங்கள் வாராமைக்காகவும், ஶாஸ்த்ரங்களிலுள்ள விதி₄நிஷேத₄ங்கள் வீணாகாமைக்காகவும் எம்பெருமான் "ஜ்ஞாந இச்ச₂ாத்₃வேஷ ப்ரயத்ந" ரூபமான இந்த ப்ரத₂மப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு ஓர் ஸ்வாதந்த்ர்யம் அளித்து விடுகிறான் என்பது—"க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்₃த₄ அவையர்த்₂யாதி₃ப்₄ய:" [ப்₃ரஹ்ம ஸூத்ரம் 2-3-41] [எம்பெருமான்—விதி₄ நிஷேத₄ங்கள் வீணாகாமை முதலான தோ₃ஷங்கள் வாராமைக்காக—ஜீவன் செய்யும் முதல் ப்ரவ்ருத்தியை எதிர்பார்த்தே ஜீவனை மேலே செயல்புரியும்படி தூண்டுகிறான்] "வைஷம்ய நைர்க்₄ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்" [ப்₃ரஹ்மஸூத்ரம் 2-1-34] [(விஷம ஸ்ருஷ்டியினாலே பரம்பொருளுக்கு) பக்ஷபாதமும், கருணையின்மையும் ஏற்படமாட்டா; (ஜீவன் செய்யும் கர்மங்களை) எதிர்பார்த்தே (பரம்பொருள் விஷமஸ்ருஷ்டியைச்) செய்வதால்.] என்று ப்₃ரஹ்ம ஸூத்ரங்களிலும், "ந ச மாம் தாநி கர்மாணி நிப₃த்₄நந்தி த₄நஞ்ஜய। உதா₃ஸீநவதா₃ஸீநம் அஸக்தம் தேஷு கர்மஸு ॥" [கீ₃தை 9-9] [விஷமஸ்ருஷ்டி முதலான செயல்கள் எனக்கு வைஷம்யம் (பக்ஷபாதம்), நைர்க்₄ருண்யம் (கருணையின்மை) முதலான தோ₃ஷங்களை உண்டாக்கமாட்டா; (ஏனெனில்:) (விஷமஸ்ருஷ்டிக்குக் காரணமாக) ஜீவர்கள் செய்யும் கர்மங்களில் ஒட்டற்றவனாய், உதா₃ஸீநனாயிருக்கிறேனாகையால்.] என்று கீ₃தையில் மேலேயும் சொல்லப்பட்டுள்ளது. ஆக, ஈஶ்வரனால் கொடுக்கப்பட்ட ஸ்வாதந்த்ர்ய ஶக்தியால் உண்டாகும் ப்ராக்ருத விஷயமான ஜ்ஞாந, இச்ச₂ாத்₃வேஷ, ப்ரயத்நங்களே ஜீவன் செய்யும் புண்யபாபங்கள் என்றதாயிற்று. இதில் ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்ட ப்ராக்ருத விஷயங்களில் ஜ்ஞாநத்தை முன்னிட்ட இச்சை₂யும் அதற்கு அநுகு₃ணமான ப்ரயத்னமும், ஶாஸ்த்ரங்களில் நிஷேதி₄க்கப்பட்ட ப்ராக்ருத விஷயங்களில் ஜ்ஞாநத்தை முன்னிட்ட த்₃வேஷமும், அதற்கு அநுகு₃ணமான ப்ரயத்நமும் புண்யமென்று சொல்லப்படுகிறது; ஶாஸ்த்ரங்களில் நிஷேதி₄க்கப்பட்ட ப்ராக்ருத விஷயங்களில் ஜ்ஞாநத்தை முன்னிட்ட இச்சை₂யும், அதற்கு அநுகு₃ணமான ப்ரயத்னமும், ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்ட ப்ராக்ருத விஷயங்களில் ஜ்ஞாநத்தை முன்னிட்ட த்₃வேஷமும் அதற்கு அநுகு₃ணமான ப்ரயத்நமும் பாபம் என்று சொல்லப்படுகிறது. பா₄ஷ்யத்தில் "த்₃வந்த்₃வேச்ச₂ா த்₃வேஷ" என்பதற்கு "கு₃ணமய" என்று விஶேஷணமிட்டிருப்பதினால், ப்ராக்ருத விஷயமான ப்ரத₂ம ப்ரவ்ருத்திகளே முற்கூறியபடி அநாதி₃காலமாக ஜீவனால் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன, அவையே புண்யபாபங்கள் எனப்படுகின்றன என்று உணர்த்தப்படுகிறது; ப்ராக்ருதமல்லாத கேவலாத்ம

விஷயமாகவோ, பரமாத்ம விஷயமாகவோ ஏற்படும் ஜ்ஞாநத்தை முன்னிட்ட இச்சா₂த்₃வேஷங்களும், அவற்றுக்கு அநுகு₃ணமான ப்ரவ்ருத்திகளும் புண்யபாப ஶப்₃த₃வாச்யமாகமாட்டா என்பதும், அவை மோக்ஷஸாத₄னம் என்றே வழங்கப்படுபவை என்றும் விளங்குகிறது. இனி, "புண்யாபுண்யாவீஶ்வரப்ரீதிகோபௌ" "யத் த்வத்-ப்ரியம் ததி₃ஹ புண்யமபுண்யமந்யத்" என்று ஈஶ்வரனுடைய ப்ரீதியே புண்யமாகவும், ஈஶ்வரனுடைய கோபமே பாபமாகவும் வழங்கப் படுவதுமுண்டு. ஜீவனுடைய புண்யபாப கர்மங்கள் க்ஷணத்₄வம்ஸிகளாய், அவற்றால் விளைந்த எம்பெருமானுடைய ப்ரீதிகோபங்களே இவனுடைய புண்யபாபகர்மங்களுக்குப் ப₂லனளிக்கின்றன என்பதையிட்டு அவ்வழக்கு ஏற்பட்டுள்ளது. ஆக, ஜீவனுடைய ப்ராக்ருத விஷயமான புண்யகர்மத்தினால் எம்பெருமானுக்கு விளைந்த ப்ரீதி புண்யமென்றும், அவனுடைய ப்ராக்ருத விஷயமான பாபகர்மத்தினால் எம்பெருமானுக்கு விளைந்த கோபம் பாபமென்றும் வழங்கப்படுகிறது என்றதாயிற்று. எம்பெருமானுடைய இந்த ப்ரீதிகோபங்கள்—ஜீவனுடைய மோக்ஷஸாத₄நாநுஷ்டா₂னத்தாலுண்டான அநுக்₃ரஹத்தாலோ, ஸ்வார்த்த₂மான ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியாகிய ஶரணாக₃தி ரூபமான அதி₄காரி விஶேஷணத்தால் வெளிப்பட்ட நிர்ஹேதுக க்ருபையாலோ அழிந்து விடுகின்றன. அந்தந்த அதி₄காரிகள் விரும்பும் அந்தந்த மோக்ஷத்தைக் கொடுக்கைக்கு உறுப்பான அநுக்₃ரஹம் அழியாமல் யாவதா₃த்மபா₄வி நிலைத்து நிற்கிறது. ஆகையால், இது புண்ய ஶப்₃த₃வாச்யமாகாது. ஆக, கர்மஸஹித ஜ்ஞாநயோக₃த்தாலே ஆத்மாவைக் கண்டு, ப₄க்தியோக₃த்தைப் ப₂லகரண ஸாத₄நமாகக் கொண்டு எம்பெருமானிடம் அந்திமஸ்ம்ருதிபர்யந்தம் தன் ஆத்மாவையே அநுப₄விக்கவேணும் என்று வேண்டுகிறவனுக்கு, முற்கூறிய ப்ராக்ருத விஷயமான புண்யபாபகர்மங்களும், அதனால் விளைந்த ப்ரீதிகோபங்களும் அழிந்த பின்பும், அவனுடைய நிலைநின்ற ப்ரதிபத்திக்கு அநுகு₃ணமாக ஸ்வாத்மப்ராப்தி ரூபமான தாழ்ந்ததான கைவல்ய மோக்ஷம் ஏற்படுகிறது; இது அவனுடைய மோக்ஷஸாத₄நாநுகு₃ணமாக எம்பெருமானுக்கு விளைந்த அநுக்₃ரஹகார்யமேயொழிய, புண்யபாபங்களால் விளைந்த ப்ரீதிகோபகார்யமல்ல. கர்மஜ்ஞாநாங்கி₃கையான ப₄க்தியாலே எம்பெருமானைக் கண்டு, அந்த ப₄க்தியையே ப₂லகரணஸாத₄னமாகக் கொண்டு, அந்திமஸ்ம்ருதி பர்யந்தம் மோக்ஷத்தில் தான் ஆநந்த₃மடைய வேண்டுகிறவனுக்கு, முற்கூறிய ப்ராக்ருதவிஷயமான புண்யபாபகர்மங்களும், அதனால் விளைந்த ப்ரீதிகோபங்களும் அழியப்பெற்று, அவனுடைய நிலைநின்ற ப்ரதிபத்திக்கு அநுகு₃ணமாக ஸ்வார்த்த₂மான ப்₃ரஹ்மாநு

॥ भा ॥ अत्र त्रयाणां भगवन्तं भजमानानां ज्ञातव्यविशेषान् उपादेयांश्च प्रस्तौति—

जरामरणमोक्षाय मामाश्रित्य यतन्ति ये।
ते ब्रह्म तद्विदुः कृत्स्नमध्यात्मं कर्म चाखिलम् ॥ २९ ॥

ப₄வரூபமான மோக்ஷம் ஏற்படுகிறது ; இதுவும், அவனுடைய மோக்ஷஸாத₄நாநுகு₃ணமாக எம்பெருமானுக்கு விளைந்த அநுக்₃ரஹ கார்யமேயொழிய, புண்யபாபங்களால் விளைந்த ப்ரீதிகோப கார்ய மல்ல. அநாதி₃காலமாக எம்பெருமான் செய்துவரும் க்ருஷிகள் பரிபூர்ணமாகப் ப₂லிக்கப்பெற்று, எவனுக்கு ஒரு ஜந்மத்தில் பரார்த்த₂ப்ரதிபத்தி ஏற்பட்டு, வாஸு₃தே₃வனே பரமப்ராப்யமாக வும், ப₂லப்ரத₃ஸாத₄னமாகவுமிருப்பதோடன்றியில், ப₂லகரண ஸாத₄நமாகவுமிருக்கிறான் என்னும் ஜ்ஞாநம் விளைந்து, ப₄க₃வத்ப்ர வ்ருத்தி விரோதி₄யான ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்திரூபமான ஶரணாக₃தி விளைகிறதோ, ப்ரபந்நர்களில் தலைசிறந்தவனான அவனுக்கு, அந்த ஜந்மத்திலேயே அந்திம ஸ்ம்ருதியையும் எதிர்பாராமல், எம்பெரு மான் அவனது ப்ரதிபத்திக்கேற்ப பரார்த்த₂மோக்ஷத்தை அருள் கின்றான். இது ஜீவனுடைய ஸ்வப்ரவ்ருத்தி ரூபமான ப்ரதி ப₃ந்த₄கம் (தடை) நீங்கியதால் வெளிப்பட்ட ஸ்வாபா₄விக ப₄க₃வந் நிர்ஹேதுக க்ருபாகார்யமாகையாலே, இதுவும் புண்யபாபங்களால் விளைந்த ப்ரீதிகோப கார்யமல்ல என்பது வெளிப்படை. ஆக, எல்லாக் கர்மங்களும் கழிந்தபின்பும், ஸுக்ருத தாரதம்யத்தினால் விளைந்த ப்ரதிபத்திகளின் தாரதம்யத்தினால் மோக்ஷத்திலும் தார தம்யத்தை ஒப்புக்கொண்டே தீரவேண்டும் என விளங்குகிறது. பரமகாருணிகனான எம்பெருமான், கைவல்ய நிஷ்ட₂ன் முதலானார்க்குத் தாழ்ந்த ப்ரதிபத்திகளை மாற்றி உயர்ந்த ப்ரதிபத்திகளை விளைக்க வேண்டாவோ ? எனில்: அப்படி ப்ரதிபத்தியை உயர்த்துவதற்குத் தான், அவரவர்களது ப்ரதிபத்தியை உயர்த்தக்கூடிய ஸாத₄நாநுஷ் ட₂ானங்களைப் பல ஜந்மங்கள் அநுஷ்டி₂க்கும்படியும், ஆத்ம பரமாத்ம ஸ்வரூபங்களை அநுஸந்தி₄க்கும்படியும் விதி₄த்திருக்கிறான் எம்பெரு மான். இப்படி அநுஷ்டி₂த்து, அநுஸந்தி₄த்தபின்பும் அந்திம ஸ்ம்ருதி பர்யந்தம் அவர்களது ப்ரதிபத்தி மாறாவிடில், அவரவர் விரும்பிய மோக்ஷத்தை அளிக்கிறான். ப₃லாத்காரமாக அவர்களது ப்ரதிபத்தியை மாற்றவல்லவனாயினும், அப்படி மாற்றுவது அச் சேதனனுக்கு அநிஷ்டமாகையாலும், அப்படி மாற்றினால் முற் கூறியபடி எம்பெருமானுக்கு வைஷம்யம் நைர்க்₄ருண்யம் முதலான தோ₃ஷங்கள் வருமாகையாலும் அப்படி மாற்றுவதில்லை என்று கண்டுகொள்வது. 28.

29. ஜராமரணமோக்ஷாய மாமாஶ்ரித்ய யதந்தி யே।
தே ப்₃ரஹ்ம தத்₃விது₃: க்ருத்ஸ்நமத்₄யாத்மம்
கர்ம சாகி₂லம் ॥

ஜராமரணமோக்ஷாய — கிழத்தனம், மரணம் முதலான ஆறு ஊர்மிகளும் அடியோடி கழிந்து ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄ மற்ற ஆத்மாநுப₄வரூபமோக்ஷம் கிடைப்பதற்காக, **மாம் ஆஶ்ரித்ய** — என்னை அடைந்து, **யே யதந்தி** — எவர்கள் யத்னம் பண்ணுகிறார்களோ, **தே**—அவர்கள், **தத் ப்₃ரஹ்ம**— ப்₃ரஹ்மமெனப்படுவதையும், **க்ருத்ஸ்நம் அத்₄யாத்மம்**— அத்₄யாத்மம் எனப்படுவது முழுவதையும், **அகி₂லம் கர்ம ச** — கர்மமெனப்படுவது அனைத்தையும், **விது₃:** — அறிய வேண்டும்.

---

29. மூப்பிறப்புத் தீர முயன்றென்னை வந்தடைவ
ராப்புறமந் தப்பிரம மாங்கறிவர்—கோப்புடைய
வெவ்வத்தி யாத்துமத்து மெல்லாக் கருமத்துஞ்
செவ்வை தெரிவுறுவர் சேர்ந்து.

மூப்பு இறப்பு தீர — கிழத்தனம், மரணம் முதலான ஆறு ஊர்மிகளும் அடியோடு கழிந்து, ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ மற்ற ஆத்மாநுப₄வரூபமான மோக்ஷம் கிடைப்பதற்காக, **முயன்று**—முயற்சி செய்கின்றவர்களாய், **என்னை வந்து அடைவர்** — என்னைப் ப₂ல ப்ரத₃ஸாத₄னமாகப் பற்றுகிற வர்கள், **ஆப்புறம்**—அதன்பிறகு, **அந்தப் பிரமம் ஆங்கு அறிவர்** — ப்₃ரஹ்மம் எனப்படும் அப்பொருளை அதன் பொருட்டு அறியவேண்டும்; **கோப்புடைய** — கட்டுக்கோப் புடைய, **எவ்வத்தியாத்துமத்தும்**—அத்₄யாத்மம் எனப்படு வது முழுவதைப்பற்றியும், **எல்லா கருமத்தும்**—கர்மம் எனப்படுவது முழுவதைப் பற்றியும், **செவ்வை**— உண்மையை, **சேர்ந்து தெரிவுறுவர்**—(முற்கூறியதோடு) கூடவே அறியவேண்டும்.

॥ भा ॥ जरामरणमोक्षाय — प्रकृतिवियुक्तात्मस्वरूपदर्शनाय मामाश्रित्य ये यतन्ते; ते तद्ब्रह्म विदुः, अध्यात्मं च कृत्स्नं विदुः, कर्म चाखिलं विदुः॥ २९॥

---

29. இனி, இவ்வத்தியாயத்தின் கடைசியான இரண்டு ஶ்லோகங்களில், ஐஶ்வர்யத்தின் பொருட்டு எம்பெருமானை உபாஸிக்கும் ஐஶ்வர்யார்த்தி₂, கைவல்யமோக்ஷத்தின் பொருட்டு அவனை உபாஸிக்கும் கைவல்யார்த்தி₂, ப₄க₃வானையே பரமப்ராப்யமாகக் கொண்டு அவனை உபாஸிக்கும் ஜ்ஞாநி ஆகிய மூன்று அதி₄காரிகளுக்கும் அறியவேண்டும் அர்த்த₂விஶேஷங்களையும், கைக்கொள்ளவேண்டியவைகளையும் ப்ரஸ்தாபிக்கிறான். அதில் இந்த ஶ்லோகத்தில், கைவல்யார்த்தி₂க்கு அறியவேண்டும் அர்த்த₂விஶேஷங்களும், கைக்கொள்ளவேண்டியவைகளும் ப்ரஸ்தாபிக்கப்படுகின்றன. (ஜராமரணமோக்ஷாய மாம் ஆஶ்ரித்ய யதந்தி யே) ஜரை எனப்படும் கிழத்தனம், மரணம் எனப்படும் இறப்பு ஆகியவைகள் நீங்குவதற்காக என்னைப் ப₂லப்ரத₃ஸாத₄நமாகக்கொண்டு எவர்கள் முயற்சி செய்கிறார்களோ. ஜரை, மரணம் என்னும் இரண்டைச் சொன்னது, தே₃ஹத்துக்கு உள்ள அஶநாயா(பசி), பிபாஸா(த₃ாஹம்), ஶோகம், மோஹம், ஜரை, மரணம் என்னும் ஆறு ஊர்மிகளுக்கும், அபக்ஷயம் (குறைதல்), வ்ருத்₃தி₄ (வளர்தல்), ஜந்மம் (பிறப்பு), விநாஶம் (அழிதல்), பரிணமம் (மாறுபாடடைதல்) அஸ்தி (இவ்விகாரங்களோடேயே இருத்தல்) என்னும் ஷட்₃ப₄ாவவிகாரங்களுக்கும் உபலக்ஷணம். ஆக, "ஶாந்திம் நிர்வாணபரமாம் மத்ஸம்ஸ்த₂ாம் அதி₄க₃ச்ச₂தி" [6-15] [ஶரீரமோக்ஷத்தின் எல்லையாயிருப்பதாய், என்னிடமுள்ள (ஷடூ₃ர்மி அல்லது ஷட்₃ப₄ாவவிகார) ஶாந்தியை அடைகிறான்.] என்று கீ₃தையின் ஆறாம் அத்தியாயத்திலே கர்மத்தை அங்க₃மாகக் கொண்ட ஜ்ஞாநயோக₃த்தாலே ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தன் ஆத்மாவைப்பெற்று அநுப₄விப்பவனாகச் சொல்லப்பட்டவனே இவன் என்று விளங்குகிறது. (மாமாஶ்ரித்ய யதந்தி) ஜ்ஞாநயோக₃த்தாலே ஆத்மாவைக்கண்டு, அதையே நித்யமாக அநுப₄விக்கையாகிற கைவல்யமோக்ஷத்தைப் பெறவிரும்பும் அதி₄காரிக்கு ப₄க₃வது₃பாஸநமாகிற ப₄க்தி ப₂லகரணஸாத₄னமாக இங்கு விதி₄க்கப்படுகிறது. "மநஸ்ஸம்யம்ய மச்சித்தோ யுக்த ஆஸீத மத்பர:" [கீ₃தை 6-14] என்று அந்த ப்ரகரணத்திலும் தன் ஆத்மாவலோகந விரோதி₄பாபம் நீங்குவதற்குறுப்பாக ஶுப₄ாஶ்ரயமான எம்பெருமான்திருமேனியில் நெஞ்சைச் செலுத்திநிற்கவேணும் என்னும் நியமம் காட்டப்பட்டது.

இப்படி எம்பெருமான் விதி₄த்திருப்பதற்குக் கருத்து,— இவன் தன் ஆத்மாவைக் காட்டிலும் ப₄க₃வத்₃விக்₃ரஹம் பரமபோ₄க்₃யமானது என்று உணர்ந்து, தன் ஆத்மாநுப₄வத்தில் ஆசையைவிட்டு, ப₄க₃வ த₃நுப₄வத்தில் ஆசையையுடையவனுகவேணும் என்பதே. புண்ய ஶாலிகள் சிலர்க்கு எம்பெருமானுடைய இந்த க்ருஷி (முயற்சி) ப₂லித்து, அவர்கள் அவனைப் பாவநமாகவும், விரோதி₄நிவர்த்தக னுகவும் மாத்திரம் எண்ணிய நிலை தவிர்ந்து, போ₄க்₃யனுகவும் எண்ணத்தொடங்குகிறுர்கள். இப்படி ஜ்ஞாநயோக₃ம் அல்லது ஜ்ஞாநஸஹிதகர்மயோக₃ம் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்குக் காரண மாகி, ப்ராசீந புண்யவஶத்தால் அவ்வாத்மாவிடம் போ₄க்₃யதா பு₃த்₃தி₄ தவிரப்பெற்று பரமாத்மாவிடம் போ₄க்₃யதாபு₃த்₃தி₄ ஏற்பட் டால், இவ்வாத்மஸாக்ஷாத்காரம், பரமமோக்ஷஸாத₄னமான பர ப₄க்தியை விளைத்துவிடுகிறது. அப்படியல்லாமல் புண்ணியக்குறை வுள்ள சிலர்க்கு ஆத்மஸாக்ஷாத்காரம் விளைந்தபின்பும் அவ்வாத்மா விலேயே போ₄க்₃யதாபு₃த்₃தி₄ நிலைத்து விடுகிறது. அவர்களுக்கு எம் பெருமான், கர்மப₄க்திகளை அங்க₃மாகக்கொண்ட ஜ்ஞாநயோக₃த்தை அல்லது ப₄க்தியோக₃த்தை அங்க₃மாகக்கொண்ட ஜ்ஞாநஸஹித கர்மயோக₃த்தை ஸாத₄நமாக விதி₄த்து, ஸாத₄நம் நிறைவேறிய வுடன் ஆத்மப்ராப்தியாகிற மோக்ஷத்தை அருளுகிறுன் என்பது முதல் ஷட்கத்திலேயே காட்டப்பட்டது. அப்படியிருக்க, இங்கு "சதுர்வித₄ா ப₄ஜந்தே" [7-16] முதலானவிடங்களில் ப₄க்தியே இவனுக்கு ப்ரத₄ாந ஸாத₄னமாகக் கூறப்படுவது எப்படி? எனில்: "ஆத்மத்₃ருஷ்டேஸ்த்ரயோऽப்யேதே யோக₃த்₃வாரேண ஸாத₄கா:" [கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹம்-25] [கர்மயோக₃ம், ஜ்ஞாநயோக₃ம், ப₄க்தி யோக₃ம் ஆகிய மூன்றுமே அஷ்டாங்க₃யோக₃த்தின்மூலம் ஆத்ம ஸாக்ஷாத்காரத்திற்கு ஸாத₄னமாகின்றன] என்று ஆளவந்தார் அருளியிருக்கையால், ப₄க்தியோக₃மும் பரப₄க்தியாக முற்றுவதற்கு முன் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமாவதுண்டு என்று விளங்கு கிறது. இவ்வதி₄காரிக்கு கர்மஜ்ஞாநங்களை அங்க₃மாகக்கொண்ட ப₄க்தியோக₃ம் ஆத்மஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமாகி, ப்ராசீந புண்யவசத்தால் அவ்வாத்மாவிடம் போ₄க்₃யதாபு₃த்₃தி₄ தவிரப் பெற்று பரமாத்மாவிடம் போ₄க்₃யதாபு₃த்₃தி₄ ஏற்பட்டால், இவ் வாத்ம ஸாக்ஷாத்காரம் பரமமோக்ஷஸாத₄னமான பரப₄க்தியை விளைத்துவிடுகிறது என்றும், இவர்களிலும் புண்ணியக்குறைவுள்ள சிலர்க்கு அவ்வாத்மாவிலேயே போ₄க்₃யதாபு₃த்₃தி₄ நீடித்தால்,

அவர்களுக்கு அந்தக் கர்மஜ்ஞாநங்களை அங்க3மாகக்கொண்ட ப4க்தி யோக3த்தையே ஸாத4நமாக விதி4த்து, அந்த ஸாத4நம் நிறைவேறிய வுடன் ஆத்மப்ராப்தியாகிற கைவல்யமோக்ஷத்தை அருளுகிறுன் எம் பெருமான் என்றும் கீ3தை ஏழு, எட்டு அத்தியாயங்களில் காட்டப்படு கிறது என்று விளங்குகிறது. இதனுலேயே இவ்விரண்டு ஷட்கங் களிலும் தேறிய அர்த்த2த்தை திருவுள்ளத்திற்கொண்டு ஆளவந்தார் "ஆத்மார்த்தீ2 சேத் த்ரயோऽப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாத4கா:" [கீ3தா-ஸங்-27] [ஆத்மாவை அடைய விரும்பினுகில் கர்மயோக3ம், ஜ்ஞாநயோக3ம், ப4க்தியோக3ம் ஆகிய மூன்றுமே ஆத்மகைவல் யத்தை ஸாதி4த்துக்கொடுக்கும்.] என்று அருளினுர். ஆக, "மாம் ஆஶ்ரித்ய" என்று கைவல்ய ப்ராப்திக்குத் தான் ப2லப்ரத3ஸாத4ன மென்றும், "யதந்தி" என்றதால்,— "த்ரயாணுமபி யோக3ாநாம் த்ரிபி4ரந்யோந்ய ஸங்க3ம:" [கீ3தா-ஸங் 24] என்று ஆளவந்தார் அருளியபடியே மற்ற இரண்டு யோக3ங்களை அங்க3மாகக்கொண்ட— கர்மயோக3மோ, அல்லது ஜ்ஞாநயோக3மோ, அல்லது ப4க்தி யோக3மோ இதற்குப் ப2லகரணஸாத4னமென்றும் விளங்குகிறது. இப்படி எம்பெருமான் விதி4ப்பதற்குக் காரணமும், முற்கூறியபடி இவனுக்கு எப்படியாவது தன்னிடம் பே4ாக்3யதாபு3த்3தி4யை விளைத்துவிடவேணும் என்னும் அருளே என்றும் விளங்குகிறது. (ஜராமரண மோக்ஷாய) என்று, ஷடூ3ர்மிகளும், ஷட்3பா4வவிகாரமும் நீங்கிவிடுவதாகக் காட்டுகையாலே, அவற்றுக்குக் காரணமான ஸூக்ஷ்மஶரீரமும் இம்மோக்ஷத்தில் அடியோடு நீங்கிவிடுகிறது என விளங்குகிறது. இவ்வர்த்த2த்தை "ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம்" [திருப்பல் 4] என்று பெரியாழ்வாரும் காட்டினுர். (மோக்ஷாய) என்று கூருமல், (ஜராமரண மோக்ஷாய) என்று விஶேஷிக்கையாலே, ஸம்ஸாரத் துன்பங்களுக்குக் காரணமான ஸ்தூ2லஸூக்ஷ்ம ப்ரக்ருதியின் மோக்ஷமும், அதனுல் தன்னடையே ஏற்படும் ஸ்வாத்மாநுப4வமும்தான் இவன் பெறும் ப2லன் என்றும், ப4க3வத3நுப4வ கைங்கர்யங்களாகிற முக்2யமோக்ஷம் இவனுக்குக் கிடையாது என்றும் உணர்த்தப்படுகிறது. இக்கைவல்யஸ்த2ாநத்தி லிருந்துகொண்டே ஸாத4நாநுஷ்ட2ாநங்களைச்செய்து இவன் பரம மோக்ஷத்தை அடையலாகாதோ? எனில்: "விரஜா பரமவ்யோம் நோரந்தரா கேவலம் ஸ்ம்ருதம் | தத்ஸ்த2ாநமநுபே4ாக்தவ்யம் அவ் யக்தப்3ரஹ்மஸேவிபி4: ||" [விரஜைக்கும் பரமபத3த்திற்கும் இடையே (நித்யவிபூ4தியிலுள்ள) ஓர் ஸ்த2ாநமே கேவலனுக்கு இருப்பிடமாகச் சொல்லப்படுகிறது; கைவல்யார்த்தி2களால் அந்த ஸ்த2ானத்திலிருந்துகொண்டே கேவலாத்மாநுப4வம் செய்யப்படு

கிறது.] என்னும் பாத்₃மபுராண வசநத்திலிருந்தும், இதை அடி யொற்றி, ஸஹஸ்ரநாமத்தில் "முக்தாநாம் பரமா க₃தி:" என்னு மிடத்திற்கு வ்யாக்₂யானம் செய்யும்போது, "பரமேதி விஶேஷணேந முக்தாநாமேவ கேஷாஞ்சித் அர்வாசீநா க₃திர் க₃ம்யதே! ஸம்ஸார பரமபத₃யோர் மத்₄யே தேஷாம் ஸ்த₂ாநஞ்ச" ['பரமா' என்னும் விஶேஷணத்தினாலே, முக்தர்களிலேயே சிலர்க்குத் தாழ்ந்தக₃தி உள்ள தாக உணர்த்தப்படுகிறது. ஸம்ஸாரத்திற்கும், பரமபத₃த்திற்கும் இடையே அவர்களுக்கு அநுப₄வஸ்த₂ானமும் கூறப்பட்டுள்ளது.] என்று ப₄ட்டர் அருளியிருப்பதிலிருந்தும் இவன் போ₄க₃பூ₄மியான நித்யவிபூ₄திக்குச் சென்றுவிடுகிறான் என விளங்குகையால், ஸாத₄ நாநுஷ்ட₂ாநம் செய்ய இடமில்லை. "ஶப்₃த₃ப்₃ரஹ்ம அதிவர்த்ததே" [6-44] என்று இவன் ப்ரக்ருதி மண்ட₂லத்தைத் தாண்டிவிடுகிறான் என்று கீ₃தையிலும் கூறப்பட்டது. "நிர்வாண பரமாம்" [கீ₃தை 6-15] "ஜராம்ரண மோக்ஷாய" என்கிறபடியே இவன் ஸூக்ஷ்ம ஶரீரமும் அற்றவனாகையால் ஸாத₄நாநுஷ்ட₂ாநம் செய்யவும் முடி யாது. "யஸ்த்வாத்மரதிரேவ ஸ்யாத் ஆத்மத்ருப்தஶ்ச மாநவ:! ஆத்மந்யேவ ச ஸந்துஷ்ட: தஸ்ய கார்யம் ந வித்₃யதே!!" [கீ₃தை 3-17] என்று கீ₃தையில் சொன்னபடியே தன் ஆத்மாவையே எல்லா மாகக் கொண்ட இவன் ப₄க₃வத்ப்ராப்தியை விரும்பி ஸாத₄நாநுஷ் ட₂ாநம் செய்ய ப்ரஸக்தியுமில்லை. ஆகையால், ஆத்மமாத்ராநுப₄வ மாகிற இக்கைவல்யமோக்ஷத்தை அடைந்துவிட்டால், யாவத₃ாத்ம பா₄வி கைவிடவொண்ணாமல், அது நித்யமாகவே ஆகிவிடுகிறது என விளங்குகிறது. இவ்வநர்த்த₂த்தைக் கண்டே பெரியாழ்வார், இக்கைவல்யார்த்தி₂களைத் திருத்தும் "ஏடு நிலத்தில்" [திருப்பல் 4] என்னும் பாசுரத்தில், "ஏடு நிலத்தில் இடுவதன்முன்னம் வந்து எங்கள் குழாம் புகுந்து கூடும் மனமுடையீர்கள் வரம்பொழி வந்து ஒல்லை கூடுமினோ!" என்று "'நம் ஆத்மாவையே அநுப₄விக்க வேணும்' என்னும் வரம்பை ஸூக்ஷ்ம ஶரீரம் கழிவதற்குமுன் விட்டொழித்துவிட்டு விரைவில் வந்துசேருங்கள். உங்களுடைய மனத்திலுள்ள ப்ரதிபத்தியை உடனே மாற்றிக்கொள்ளவேண்டிய வித்தனையே நீங்கள் செய்யவேண்டியது" என்று பதறினார். நம்மாழ் வாரும் "அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்" [திருவாய் 1-2-4] என்னும் பாசுரத்தில், முதல் பாதியாலே "விஷயங்களில் பற்று அறுந்துவிட்டால் கைவல்ய மோக்ஷம் உண்டாகிவிடும்" என்று அருளி, பிற்பாதியில் "அது செற்று மன்னுறில் அற்று இறை பற்றே" என்று "அக்கைவல்ய மோக்ஷத்தில் அகப்படாதே, ப₄க₃வச்சே₂ஷதைகரஸ மான உன்னுடைய ஸ்வரூபத்தைப் பெற்று நிலைநிற்கவேண்டி

யிருந்தால், முதலிலே விஷயஸங்க₃த்தை விடும்போதே எம்பெரு மானைப் பற்றிவிடுங்கள்'' என்று அருளுவதன்மூலம் கைவல்ய மோக்ஷத்தை அடைந்துவிட்டால் நிலைநின்ற (ஸ்வரூபப்ராப்தமான) புருஷார்த்த₂மான ப₄க₃வத₃நுப₄வகைங்கர்யங்களை அடையமுடியாது என்று காட்டினர். "குறுகா நீளா இறுதி கூடா எனையூழி சிறுகா பெருகா அளவில் இன்பம்" [திருவாய் 6-9-10] என்னுமிடத்தில் இக்கைவல்ய மோக்ஷத்திற்கு எவ்வித₄மான அழிவும் கிடையாது என்று மிகத் தெளிவாகக் காட்டினர். இதே கருத்தில்தான் "ஜரா மரண மோக்ஷாய மாம் ஆஶ்ரித்ய யதந்தி'' என்று ''கற்பகவ்ருக்ஷத் திடம் கௌபீநபி₄க்ஷை கேட்பதுபோலே, என்னை ஆஶ்ரயித்து ஶரீர மோக்ஷமாத்ரத்தைச் சிலர் பெற விரும்புகிறார்களே!'' என்று உள் வெதுப்போடே அருளிச்செய்து, அவர்களையும் திருத்தவேண்டும் என்னும் பரமகருணையாலே "யதந்தி" என்று ப₄க₃வச்சே₂ஷத்வாநு ஸந்த₄ாநம் முதலானவற்றையுடைய கர்மஜ்ஞாநப₄க்தியோக₃ங்களில் ஏதாவதொன்றை நிறைவடையும்வரை அநுஷ்டி₂க்கும்படி விதி₄க் கிறான் கண்ணன் இங்கு. "பல ஜந்மங்களில், தமது ஆத்மா நமக்கு ஶேஷம் என்று அநுஸந்தி₄த்து, நமது திருமேனியைச் சிந்தித்து, த்ரிவித₄பரித்யாக₃ங்களையும் செய்து, அங்க₃ப்ரபத்தியை அநுஷ்டி₂த் தாலாவது தம் ஆத்மாவில் நசைநீங்கப்பெற்றுத் தன்னிடம் பே₄ாக்₃ யதாபு₃த்₃தி₄ உண்டாகாதா'' என்பதே ப₄க₃வானுடைய ப்ரத்யாஶை என விளங்குகிறது. "யே யதந்தி'' "விது₃:'' என்று இந்த ஶ்லோ கத்திலும், அடுத்த ஶ்லோகத்திலும் நிகழ்காலப்ரயோக₃மாகவும், அநுவாத₃மாகவும் இருந்தபோதிலும், விதி₄ப்பதிலேயே நோக்கு என்று ஶ்ரீ பா₄ஷ்யகாரர் அடுத்த ஶ்லோகபா₄ஷ்யத்திலும், ஶ்ரீ தே₃ஶிகன் இந்த ஶ்லோகத்தின் தாத்பர்யசந்த்₃ரிகையிலும் அருளிச்செய்தனர். "மேன்மேலே புண்ணிய மிகுதியாலே உண் டான ப்ரதிபத்தியின் சிறப்பால், மேன்மேலே சிறந்தவர்கள் ஆகிறார்கள்'' என்று பதினாறுவது ஶ்லோகபா₄ஷ்யத்திற் சொன்ன வரிசைக்கிரமப்படி பார்த்தால், ஐஶ்வர்யார்த்தி₂யை முதலில் அழைக்கவேண்டியிருக்க, அநர்த்த₂த்தின் மிகுதியைக் கண்டு திருப்பல்லாண்டில் கைவல்யார்த்தி₂யை முதலில் அழைத்த பெரியாழ்வாரைப்போலே, இவர்களை முதலில் திருத்தவேண்டும் என்னும் பதற்றத்தாலே, ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு முன் இவர்களுக்கு ஸாத₄நங்களை விதி₄க்கிறான் கண்ணன் என்று விளங்குகிறது. (மாம்) என்றது, பாவநத்வ விரோதி₄ நிவர்த்தகத்வ கு₃ணங்களை யுடைய என்னை என்றபடி. இக்கு₃ணங்களேயன்றோ இவனுக்கு உதவுகின்றன. இக்கைவல்ய நிஷ்ட₂னைப்பற்றிய பாசுரங்கள் பல

வற்றிலும் "எம்பெருமானுடைய பாவநத்வ விரோதி₄ நிவர்த்தகத்வ கு₃ணங்களையே இவர்கள் கண்டார்களேயொழிய, போ₄க்₃யத்வரூப மஹாகு₃ணத்தைக் கண்டார்களில்லையே" என்னும் நிர்வேத₃த்தை (வருத்தத்தை) ஆழ்வார்கள் காட்டியிருப்பது இங்கு அநுஸந்தி₄க்கத் தக்கது. குறிப்பாக, "செடியாராக்கை அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை" [திருவாய் 1-5-7] "பிறவித் துயரற ஞானத்துள்நின்று துறவிச்சுடர் விளக்கம் தலைப் பெய்வார் அறவனை ஆழிப்படை அந் தணனை மறவியையின்றி மனத்து வைப்பாரே" [திருவாய் 1-7-1] "கனலாழி அரணத் திண்படை ஏந்திய ஈசற்கு ஆளாயே - மரணம் தோற்றம் வான்பிணி மூப்பென்று இவை மாய்த்தோம்" [திருவாய் 8 3-2] என்று "ஜராமரணமோக்ஷாய" என்னும் இந்த ஶ்லோ கத்தை விவரிக்கும் பாசுரங்களில் நம்மாழ்வார்,— பரிஶுத்₃த₄ப் படுத்தும் தன்மையாகிற பாவனத்வத்தையும், விரோதி₄களை நிர ஸிக்கும் தன்மையாகிற விரோதி₄ நிவர்த்தகத்வத்தையும் அநுஸந் தி₄த்திருப்பது காணத்தக்கது. பரமபாவனனாகையால், தங்களுடைய ஸ்தூ₂ல ஸூக்ஷ்ம ஶரீரமான அஶுத்₃தி₄யைக் கழிப்பானென்றும், விரோதி₄ நிவர்த்தகனாகையாலே தம் ஆத்மாவைத் தாம் அநு ப₄விக்கத் தடையாயிருக்கும் ஸர்வகர்மங்களையும், அதுகாரணமாக வரும் ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄த்தையும் கழிப்பானென்றும் கருதி, இவர்கள் எம்பெருமானை ஆஶ்ரயிக்கிறார்கள் என்று விளங்குகிறது. இப்படி விரோதி₄ நீங்கப்பெற்று, அழுக்குக் கழியப்பெற்றால், ஆத்மா தன் னடையே பரிபூர்ணமாக ப்ரகாஶிக்குமாகையால் "ஜராமரணமோ க்ஷாய" என்பதற்கு "ப்ரக்ருதி வியுக்தாத்ம ஸ்வரூப த₃ர்ஶநாய" என்று பா₄ஷ்யகாரர் அர்த்த₂ம் அருளினார். இதனால் "ஜிஜ்ஞாஸு:- ப்ரக்ருதி வியுக்தாத்ம ஸ்வரூபாவாப்தீச்சு₂:" என்று பதினாறும் ஶ்லோக பா₄ஷ்யத்தில் குறிக்கப்பட்ட ஜிஜ்ஞாஸுவே இவன் என்று விளங்குகிறது. "ஆத்மார்த்தீ₂ சேத் த்ரயோऽப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாத₄கா:" [கீ₃தா-ஸம் 27] என்று ஆளவந்தார் இவ்வதி₄காரிக்கு மூன்று யோக₃ங்களில் ஏதாவதொன்றைப் ப₂லகரண ஸாத₄நமாகக் காட்டுகையாலே, பஞ்சாக்₃நிவித்₃யையாகிற வித்₃யை ஒன்றையே ப₂லகரணஸாத₄நமாகக்கொண்டு ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸநம் செய்யும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னைக் காட்டிலும் கீ₃தையில் கூறப் படும் கைவல்யார்த்தி₂யாகிற ஜிஜ்ஞாஸு வேறுபட்டவன் என விளங்குகிறது. இவன் யார்? எனில்: ஸ்ரீபா₄ஷ்யகாரராலே கார் யாதி₄கரண [4-3-5] ஸ்ரீ பா₄ஷ்யத்தின் கடைசியில் "கேவலம் சித்₃வஸ்து ப்₃ரஹ்மத்₃ருஷ்டியோகே₃ந உபாஸீந:" என்று சொல்லப் பட்டவனாய், சா₂ந்தோ₃க்₃ய உபநிஷத்தில் [7-15] ப்ராணஶப்₃த₃த்

साधिभूताधिदैवं मां साधियज्ञं च ये विदुः ।
प्रयाणकालेऽपि च मां ते विदुर्युक्तचेतसः ॥ ३० ॥

॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु विज्ञानयोगो नाम सप्तमोऽध्यायः ॥ ७ ॥

தாலே சொல்லப்பட்ட ஸ்வாத்மமாத்ரத்தையே உபாஸிப்பவனாகக் கூறப்பட்டவனே இவன் என்று விளங்குகிறது. அவ்வதி4கரணத்தில் ஸ்ரீபா4ஷ்யகாரரோ, ஸ்ருதப்ரகாஸிகாசார்யரோ அவ்வதி4கரணத்துக்கு முக்2யப்ரமேயமான பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக் குறித்துக் கேவல ஸப்3த3த்தையோ, கைவல்யார்த்தி2ஸப்3த3த்தையோ பிரயோகி3க்க வில்லையென்பதும், அவனுக்குக் கைவல்யமோக்ஷத்தை முக்2யப2ல மாகவோ, அவாந்தரப2லனாகவோ அருளவில்லையென்பதும். நேர் மாறாக அவனுக்கு ப்3ரஹ்மாநுப4வத்தையே காட்டியிருக்கிறார்கள் என்பதும், கேவலாத்மோபாஸகனைப்பற்றியே "கேவலம் (வா) சித்3 வஸ்து ... உபாஸீந:" என்று கேவலஸப்3த3த்தை பா4ஷ்யகாரர் ப்ர யோகி3த்திருக்கிறார் என்பதும் இங்கு குறிக்கொள்ளத்தக்கது. சா2ந் தோ3க்3யத்தில், நாமம் தொடக்கமாக, ஆஸாபர்யந்தமான மற்ற பொருள்களை உபாஸிப்பவர்களுக்கு அஸ்தி2ரப2லனைச் சொல்லியிருப் பதும், அவைகளுக்கு மேற்பட்ட இவ்வாத்மாவை உபாஸிப்பவனுக்கு, அஸ்தி2ரப2லனைச் சொல்லாததோடன்றியில் அதிவாதி3த்வத்தையே சொல்லியிருப்பதும் இவனடையயும் ப2லன் ஸ்தி2ரமானது எனக் காட்டுகிறது. ப்ராஸங்கி3கமான இவை நிற்க.

ஸ்லோகத்தின் முற்பாதியால் கைவல்யநிஷ்ட2னாகிற அதி4கா ரியை அநுவதி3த்து, பிற்பாதியால் அவன் அறியவேண்டும் அர்த்த2 விஸேஷங்களையும், கைவிடவேண்டியதையும் விதி4க்கிறான்-(தே தத்3 ப்3ரஹ்ம விது3:) அவர்கள் ப்3ரஹ்மமெனப் படுவதையும் (ஏற்கத் தக்க ப்ராப்யமாக) அறியவேண்டும். (க்ருத்ஸ்நம் அத்4யாத்மம் விது3:) அத்4யாத்மம் எனப்படுவது முழுவதையும் (விலக்கத்தக்க த்யாஜ்யமாக) அறியவேண்டும். (கர்ம ச அகி2லம் விது3:) கர்ம மெனப்படுவது அனைத்தையும் (கைவிடத்தக்கதாக) அறியவேண்டும். (கர்மமின்மை கைக்கொள்ளத்தக்கது என்றபடி). 'ப்3ரஹ்ம' 'அத்4யாத்மம்' 'கர்ம' என்னும் மூன்றும் எவையென்பதை அடுத்த அத்தியாயம் இரண்டாம் ஸ்லோகத்தில் கண்ணனே விவரிக்கப் போகிறானாகையால், அங்கேயே இவற்றின் பொருளையும், இவற்றை எதற்காகக் கண்ணன் கைவல்யார்த்தி2க்கு அறியவேண்டும் அல்லது கைவிடவேண்டும் என்று விதி4க்கிறான் என்பதையும் காண்போம். ஆக, இந்த ஸ்லோகத்தால். கைவல்யார்த்தி2க்கு மாத்திரம் அறியவேண்டிய அர்த்த2விஸேஷங்களும்,. கைவிடவேண்டியதும் சொல்லப்பட்டது. 29.

30. ஸாதி₄பூ₄தாதி₄தை₃வம் மாம் ஸாதி₄யஜ்ஞம் ச யே விது₃: ।
ப்ரயாணகாலேऽபி ச மாம் தே விது₃ர் யுக்தசேதஸ: ॥
॥ இதி₃ ஸ்ரீமத்₃ப₄க₃வத்₃கீ₃தாஸு
உபநிஷத்ஸு விஜ்ஞாநயோகோ₃ நாம ஸப்தமோऽத்₄யாய: ॥

யே — ஐஶ்வர்யார்த்தி₂கள், ஸாதி₄பூ₄தாதி₄தை₃வம் — அதி₄பூ₄தத்தன்மையோடும், அதி₄தை₃வத்தன்மையோடும் கூடியவனாக, மாம்—என்னை, விது₃:—அறியவேண்டும்;(மாம்) ஸாதி₄யஜ்ஞம் ச விது₃:—(மற்ற இருவரைப்போலே) (என்னை) அதி₄யஜ்ஞத் தன்மையோடு கூடியவனாகவும் அறியவேண்டும்; தே ச—(அந்தந்தப் ப₂லனுக்காக என்னிடம் ஈடுபட்ட நெஞ்சையுடைய) இம்மூவரும், ப்ரயாணகாலே அபி—(தத்தமக்குரிய ப்ராப்யத்தைப் பெறுவதற்காக) உடலை விடும் ஸமயத்திலும், யுக்தசேதஸ:—(ப₂லனுக்குத் தக்கவாறு)என்னை நினைப்பவர்களாய், மாம் விது₃:—என்னை அறியவேண்டும்

30. அதிபூத மற்றிங் கதிதெய்வ மெல்லா
மதியெச்ச நாமா வறிந்தோர்—கதிபெற்றுப்
போம்பொழுது மென்னையே பேராத நெஞ்சரா
யாம்பொருளாக் காண்ப ரமர்ந்து.

மற்று இங்கு அதிபூதம் அதிதைவம் நாமா அறிந்தோர் — மேலும் இவ்வுலகில் அதி₄பூ₄தமும் அதி₄தை₃வமும் நாமாக அறிந்த ஐஶ்வர்யார்த்தி₂களும், அதியெச்சம் நாமா அறிந்தோர் எல்லாம் — அதி₄யஜ்ஞம் நாமே என்று அறிந்த மூவகை அதி₄காரிகளும், கதி பெற்றுப் போம் பொழுதும்— (உபாயாநுஷ்டா₂னம் முடிந்து தத்தமக்குரிய) ப்ராப்யத்தைப் பெறுவதற்காக உடலை விடும் ஸமயத்திலும், பேராத நெஞ்சராய் — மறக்காத நெஞ்சையுடையவராய், ஆம் பொருளா அமர்ந்து—தாம் தாம் விரும்பும் ப₂லனுக்குத் தக்கவாறு, என்னையே காண்பர்—என்னையே காண்பார்கள்.

30. இனி, இந்த ஶ்லோகத்தில்—ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு அறிய வேண்டும் அர்த்த₂விஶேஷங்களையும், கைக்கொள்ளவேண்டியவை களையும், இவ்வைஶ்வர்யார்த்தி₂க்கும், முன் ஶ்லோகத்தில் சொல்லப் பட்ட கைவல்யார்த்தி₂க்கும், பதினாருவது ஶ்லோகத்தில் இவர்களோடு சேர்த்துப்படிக்கப்பட்ட அநந்யப்ரயோஜநனை உபாஸகஜ்ஞாநிக்கும் பொதுவாக அறியவேண்டியவற்றையும் கைக்கொள்ளவேண்டியவற்

றையும் காட்டுகிறுன். இப்படி அதி4காரிகளை மூன்றுவித4மாகப் பிரிப்ப தற்குக் காரணம் என்னவெனில்: அசித் (அறிவற்ற ஜட3ப்பொருள்), சித் (அறிவுள்ள பொருள்), ஈஶ்வரன் (இவ்விரண்டையும் நியமிக்கும் பரமாத்மா) என்று தத்துவங்கள் மூன்றேயாகையால், இம்மூன்றில் முதலாவதான அசித்திஞல் வரும் மிகச்சிறந்த போ4க3ங்களை அநுப4 விக்க விரும்பும் அதி4காரி ஐஶ்வர்யார்த்தி2 என்றும், இரண்டாவதாய், அவரவர்க்குத் தத்தம் ஆத்மாவாயிருக்கும் சித்தை—அதை அநுப4 விக்கத் தடையாயிருக்கும் அசித்ஸம்ஸர்க்க3ம் அடியோடு கழிந்தபின் பூர்ணமாக அநுப4விக்கவிரும்பும் அதி4காரி கைவல்யார்த்தி2 என்றும், மூன்ருவதான ஈஶ்வரதத்வத்தைப் பரிபூர்ணமாக அநுப4விக்கவிரும்பும் அதி4காரி ப4க3வச்சரணார்த்தி2 என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டுகொள்ளவேண்டும். கீ3தையில் மாத்திரமல்லாமல் இதர ஶாஸ்த்ரங்கள் பலவற்றிலும் இப்படி அதி4காரிகள் மூவராகவே பிரிக்கப்பட்டிருக்கிருர்கள். கீ3தையிற்போலே ஐஶ்வர்யார்த்தி2களை ஆர்த்தன் (இழந்த செல்வத்தைப் பெறவிரும்புமவன்), அர்த்தா2ர்த்தி2 (புதிய செல்வத்தைப் பெறவிரும்புமவன்) என இருவகையாக்கி அதி4காரிகளை நாலுவகையாகக் கூறுவதுமுண்டு. "ந தே3வலோகா க்ரமணம் நாமரத்வமஹம் வ்ருணே। ஐஶ்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா ॥" [ரா-அ 31-5] [வானவர் நாடான பரம பத3மடைவதையும், சாவாமையாகிற கைவல்யமோக்ஷமடைவதையும், இவ்விபூ4தியிலுள்ள அனைத்துலக ஐஶ்வர்யத்தையும் நீயில்லாவிடில் நான் வேண்டேன்] என்று ஸ்ரீராமாயணத்தில் லக்ஷ்மணனாலும், "ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்க்கா3த்3யம் பாரலௌகிகம்। கைவல்யம் ப4க3வந்தஞ்ச மந்த்ரோऽயம் ஸாத4யிஷ்யதி ॥" [வ்ருத்3த4 ஹாரீதஸ்ம்ருதி 6-50] [இவ்வுலகச் செல்வத்தையும், சுவர்க்கம் முத லான மறுமைச் செல்வத்தையும், கேவலாத்மாநுப4வமாகிற கைவல்ய மோக்ஷத்தையும், ப4க3வத3நுப4வத்தையும் (அதையதை விரும்பு வார்க்கு) இந்த அஷ்டாக்ஷரமந்திரம் ஸாதி4த்துக்கொடுக்கும்.] என்று வ்ருத்3த4ஹாரீதஸ்ம்ருதியிலும், "தாவதா3ர்த்திஸ் தத2ா வாஞ்சா2 தாவந்மோஹஸ் தத2ாऽஸுக2ம்। யாவந்ந யாதி ஶரணம் த்வாம ஶேஷாக4நாஶநம் ॥" [வி-பு1-9-73] [அவரவர் ப்ராப்யத்திற்குத் தடை யாயிருக்கும் அந்தந்தப் பாபங்களைப் போக்கும் உன்னை ஶரணமடையும் வரையில்தான் ஆர்த்தனுக்கு ஆர்த்தியும், அர்த்தா2ர்த்தி2க்குச்செல்வத் தில் விருப்பமும், கைவல்யார்த்தி2க்கு ஆத்மாநுப4வமின்மையால் வரும் மயக்கமும், ஜ்ஞாநிக்கு ப4க3வத3நுப4வமின்மையால் வரும் ஸுக2மின் மையும் இருக்கும்.] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் சொல்லப்பட்டது இங்கு அநுஸந்தி4க்கத்தக்கது. திருப்பல்லாண்டில் பெரியாழ்வாரும், "ஒருநாயகம்" [திருவாய்மொழி 4-4] முதலான திருவாய்மொழிகளில் நம்மாழ்வாரும் இவ்வதி4காரிகளைச் சேர்த்து எடுத்ததும் காணத்தக்கது.

॥भा॥ अत्र य इति पुनर्निर्देशात्पूर्वनिर्दिष्टेभ्योऽन्ये अधिकारिणो ज्ञायन्ते; साधिभूतं साधिदैवं मामैश्वर्यार्थिनो ये विदुः—इत्येतदनुवादसरूपमप्यप्राप्तार्थत्वाद्विधायकमेव; तथा साधियज्ञमित्यपि त्रयाणा-

---

(யே) ஐஶ்வர்யார்த்தி₂கள். முன் ஶ்லோகத்தில் "யதந்தி யே" என்று கூறப்பட்ட கைவல்யார்த்தி₂களே இங்கும் குறிக்கப்படுபவர்களானால், இங்கு 'தே விது₃:' என்றே பாட₂மிருக்கவேண்டும். பாட₂மோ "யே விது₃:" என்றே உள்ளது. 'யே' என்று மறுபடியும் சொல்லுவதற்கு வேறு பயனும் கூறமுடியாது; ஆகையால், இங்கு சொல்லப்படுகிறவர்கள் முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அதி₄காரிகளைக் காட்டிலும் வேறுபட்டவர்களாகவேயிருக்கவேண்டும். இங்கு அர்ஜுனன் கேட்ட கேள்விகளுக்கு, அடுத்த அத்தியாயத்தில் கண்ணன் கூறும் பதிலைப் பார்த்தாலும், இந்த ப்ரகரணத்தில், "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு:..." [7-16] என்று கூறப்பட்ட ஐஶ்வர்ய கைவல்ய ப₄க₃வச்சரணார்த்தி₂களைப் பற்றியே கேள்வி பதில்கள் அமைந்திருக்கின்றன என விளங்கும். அதில், "அதி₄பூ₄தம்" "அதி₄ தை₃வம்" என்னும் பத₃ங்களின் விவரணத்தைக் கருத்திற் கொள்ளும்போது, இங்கு 'யே' எனப்படுபவர்கள் ஐஶ்வர்யார்த்தி₂களே என விளங்குகிறது. (யே ஸாதி₄பூ₄தாதி₄தை₃வம் மாம் விது₃:) ஐஶ்வர்யார்த்தி₂கள் அதி₄பூ₄தத்தன்மையோடும், அதி₄தை₃வத்தன்மையோடும் கூடியவனாக என்னை அறியவேண்டும். 'யே விது₃:' என்பது ஏற்கனவே சொன்னதை அநுவாத₃ம் செய்வது போல் தோன்றினாலும், ஏற்கனவே இவ்வர்த்த₂ம் இங்கு சொல்லப் படாமையால், முன் ஶ்லோகத்தில் 'யே யதந்தி' என்றவிடத்திற் போலே, இங்கும் புதிதாக விதி₄க்கப்படுவதாகவே கொள்ளவேண்டும். ஏற்கனவே சொல்லி முடிக்கப்பட்டிருந்தால் அவற்றைப்பற்றிக் கேள்வி கேட்பதும், பதில் சொல்லுவதும் பொருந்தாது. ஆகையால், "யத₃ாக்₃நேயோ அஷ்டாகபால:" [ஶதபத₂ 2-5-1-11] முதலான விடங்களில் யச்ச₂ப்₃த₃மிருப்பதால் அநுவாத₃ம்போல் தோன்றினாலும், அப்ராப்தமான (ஏற்கனவே கிடைக்காத) அர்த்த₂மாகையாலே விதி₄யாகவே கொள்வதுபோலே, இவ்விரு ஶ்லோகங்களிலும் சில அர்த்த₂ங்கள் புதிதாக விதி₄க்கப்படுவதாகவே கொள்ளவேண்டும். 'அதி₄பூ₄தம்' 'அதி₄தை₃வம்' ஆகியவற்றை மேல் அத்தியாயத்தில் நாலாம் ஶ்லோகத்தில் கண்ணனே விவரிக்கப்போகிறுனகையால், அங்கேயே இவற்றின் பொருளையும், இவற்றை அறிவதை எதற்

मधिकारिणामविशेषेण विधीयते, अर्थसामान्यात्। त्रयाणां हि नित्यनैमित्तिकरूपमहायज्ञाद्यनुष्ठानमवर्जनीयम्। ते च प्रयाणकालेऽपि स्वप्राप्यानुगुणं मां विदुः। ते चेति चकारात् पूर्वे जरामरणमोक्षाय यतमानाश्च प्रयाणकाले विदुरिति समुच्चीयन्ते; अनेन ज्ञानिनोऽप्यर्थ-

---

காக விதி₄க்கிறுன் என்பதையும் விளக்குவோம். (மாம் ஸாதி₄யஜ்ஞம் ச விது₃:) (மற்ற இரு அதி₄காரிகளைப்போலே) இவ்வைஶ்வர்யார்த்தி₂களும் என்னை அதி₄யஜ்ஞத்தன்மையோடு கூடியவனுகவும் அறிய வேண்டும். இங்கு ஐஶ்வர்யார்த்தி₂களைக்குறித்து விதி₄த்திருந்த போதிலும், எல்லா அதி₄காரிகளுக்கும் பொதுவாக ஶாஸ்த்ரங்களில் ப்ரஸித்₃த₄மான 'யஜ்ஞம்' என்னும் பத₃ப்பொருளின் இயல்வைக் காணும்போது, இது மூவகை அதி₄காரிகளுக்கும் பொதுவானது என விளங்கும். "ஸந்த்₄யாஹீநோ Sஶுசிர் நித்யமநர்ஹ: ஸர்வ கர்மஸு" [த₃க்ஷஸ்ம்ருதி] [ஸந்த்₄யாவந்த₃னமாகிற நித்யகர்மத்தை விட்டவன் எப்போதும் பரிஶுத்₃தி₄யற்றவன்; வேறு எந்தக் கர்மத்தையும் அநுஷ்டி₂க்கத் தகாதவன்.] முதலானவிடங்களில் நித்ய நைமித்திகரூபமான பஞ்சமஹாயஜ்ஞங்களின் அநுஷ்டா₂னம் எல்லா அதி₄காரிகளுக்கும் பொதுவாகவே விதி₄க்கப்படுகையாலும், இவற்றை அநுஷ்டி₂யாவிடில் தோ₃ஷங்களைக் கூறுகையாலும், இது மூவகை அதி₄காரிகளுக்கும் அவஶ்யமானது எனத் தெளிவாகிறது. இனி, மூவகை அதி₄காரிகளுக்கும் பொதுவான மற்றொரு விஷயம் கூறப் படுகிறது ஶ்லோகத்தின் பிற்பாதியில்,— (தே ச) அவ்வப்ப₂லனுக்காக என்னை ஆஶ்ரயிக்கும் இம்மூவரும். சகாரம் முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட கைவல்யார்த்தி₂களை ஸமுச்சயிக்கிறது என்பது தெளிவாகிறது. அந்திமகாலத்திலும் தன்னை நினைக்கவேண்டும் என்று இங்கு விதி₄ப்பது இவர்களுடைய ஸ்வார்த்த₂தையைக்கழிப்பதற்காகவே என்று விளங்குகையால், ஸ்வார்த்த₂தாலேஶமுடைய உபாஸகஜ்ஞானிக்கும் இவ்வந்திம ஸ்ம்ருதிவிதி₄ பொருந்தும் என்பது அந்திமஸ்ம்ருதி பத₃த்தின் அர்த்த₂ஸ்வபா₄வத்தைப் பார்க்கும்போது தெளிவாகிறது. ஆகையால், 'ஸாதி₄யஜ்ஞம் ச' என்றவிடத்திற்போலே இங்கும் சகாரத்தாலே மற்ற இரு அதி₄காரிகளும் ஸமுச்சயிக்கப் (கூட்டிக்கொள்ளப்)படுகிறுர்கள். 'அபி ச' என்று கூட்டிப் பொருள் கொள்வதில் பயனில்லையாகையாலும், சகாரத்தைப்பிரித்து 'தே ச' என்று கூட்டிப்பொருள்கொள்வதில் இவ்வண்ணம் சிறந்த பயனிருப்பதாலும், 'ச' 'அபி' என்னும் இரண்டு பத₃ங்களையும் பிரித்து அந்

स्वाभाव्यात् साधियज्ञं मां विदुः, प्रयाणकालेऽपि स्वप्राप्यानुगुणं मां विदुरित्युक्तं भवति ॥ ३० ॥

॥ इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये सप्तमोऽध्यायः ॥

வயித்துப் பொருள் உரைக்கப்படுகிறது. (யுக்தசேதஸ:) தாம் தாம் விரும்பும் ப₂லனுக்குத் தக்கவாறு என்னை நினைப்பவர்களாய். மேல் அத்தியாயத்தில் இம்மூவரும் அவரவர் அடைய ஆசைப்படும் ப₂ல னுக்குத் தக்கவாறு எப்படி எம்பெருமானை நினைக்கவேண்டும் என்று விவரிக்கப்படவிருக்கிறதாகையால், இங்கு அதுவே கருதப்படுகிறது என விளங்குகிறது. (ப்ரயாணகாலேऽபி மாம் விது₃:) தத்தமக் குரிய ப்ராப்யத்தைப் பெறுவதற்காக—உடலைவிடும் ஸமயத்திலும் என்னை (அந்தந்த ப்ராப்யத்துக்குத் தக்கவாறு) அறியவேண்டும். "ப்ரயாணகாலேऽபி" என்னும் அபிப்ராயம் உபாஸநத₃மையில் பல ஜன்மங்கள் இவர்கள் இவ்வண்ணம் நினைப்பதை ஸமுச்சயிக் கிறது. எந்த ஜந்மத்தில் இவர்களுக்கு அந்திமஸ்ம்ருதி ஏற்படு கிறதோ, அந்த ஜந்மத்தின் முடிவிலேயே இவர்களுக்கு இவர்கள் விரும்பும் ப₂லம் கிடைக்கும் என்று கருத்து. மஹாத்மாவான ஜ்ஞானி எம்பெருமானுடைய ஆனந்த₃ம் தவிரத் தனக்காக எப்ப₂லனை யும் விரும்பாதவனுகையால், அவனுக்கு எம்பெருமான் தானே உபாயமாகி, அவன் கையில் எதையும் எதிர்பாராமல் அந்த ஜன் மத்தின் முடிவிலேயே அவனுக்கு மோக்ஷமளித்து அவனைத் தனக்கே யாக்கிக்கொள்கிறுன். அந்திமகாலத்திலும் "அஹம் ஸ்மராமி" என்ற வராஹசரமஶ்லோகத்தின்படியே, அவன் நினைவை எதிர் பாராமல், எம்பெருமான்தானே அவனை நினைக்கிறுன். இதையே பெரியாழ்வாரும், "எய்ப்பென்னைவந்து நலியும்போது அங்கு ஏதும் நான் உன்னை நினைக்கமாட்டேன். அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன் அரங்கத்தரவணைப் பள்ளியானே" என்று அருளினுர். தனக்காக ஒவ்வொரு ப₂லனை விரும்பும் அதி₄காரிகளுக்கு அந்தந்த ப்ராப்யத்துக்குத் தக்கவாறு அந்திமஸ்ம்ருதியை விதி₄ப்பதற்குக் காரணத்தையும் அவரவர்க்கு அந்திமஸ்ம்ருதியை ஒவ்வொரு வித₄ மாக விதி₄க்கும் எட்டாம் அத்தியாயஶ்லோகங்களில் விளக்குவோம். ஆக, இவ்விரு ஶ்லோகங்களாலே, ஐஶ்வர்ய கைவல்ய ப₄க₃வச்சரணுர்த் தி₂களான ஸ்வப்ரவ்ருத்திபரர்களுக்கு அறியவேண்டிய அர்த்த₂ங்களை யும், கைக்கொள்ளவேண்டியவற்றையும் ப்ரஸ்தாபித்தாயிற்று. 30.

ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி த₃ாஸன் இயற்றிய
கீ₃தார்த்த₂ விவரணத்தில் ஏழாம் அத்தியாயம் நிறைவுபெற்றது.

பகவத் கீதை வெண்பா

(ஏழாம் அத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாசுரம்)

இத்தகவா லேழாமோத் தெந்தை பொருளனைத்து(ம்)
மெய்த்தகையான் ஞானி வியப்புடனே—சுத்தனெனச்
சொன்ன வகையே துளக்கமற வாராய்ந்தே
யின்ன வகைமுடிந்த திங்கு.

வாதிகேஸரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவில் ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

இத்தகவால்—இம்முறையில், **பொருள் அனைத்தும்**—எல்லாப் பொருளையும், **மெய்த் தகையான்**—உள்ளபடி அறிபவனென, **ஞானி**—ஞானியானவன், **சுத்தன்**—சிறந்தவன், **என**—என்று, **எந்தை**—கண்ணபிரான், **துளக்கம் அற ஆராய்ந்தே சொன்ன வகையே**—ஐயமில்லாமல் ஆராய்ச்சி செய்து சொன்ன ரீதியில், **ஏழாம் ஓத்து**—ஏழாம் அத்தியாயம், **இன்ன வகை**—இம்முறையில், **இங்கு முடிந்தது**—இத்துடன் முடிவுற்றது.

கீதார்த்த சங்கிரகம்

(ஸ்ரீ வேதாந்த தேசிகர்)

ஏழாம் அத்தியாயத்தின் ஸாரப்பொருள்

8. **தானின்ற வுண்மையைத் தன்றனி மாயை மறைத்தமையுந்**
தானன்றி மாயை தனைத்தவிர்ப் பான்விர கற்றமையு
மேனின்ற பத்தர்க ளுலவரின் ஞானிதன் மேன்மைகளுந்
தேனின்ற செங்கழ லான்றெளி வித்தனன் பார்த்தனுக்கே.

தேன் நின்ற—தேன் நிலையாகப் பெருகுகின்ற, **செம் கழலான்**—சிறந்த திருவடி(த் தாமரை)யையுடைய கண்ணன், **பார்த்தனுக்கு**—அர்ஜுனனுக்கு, **தான் நின்ற உண்மையை**—(ஈசுவரனாகிய) தன்னைப்பற்றிய உண்மையறிவையும், **தன் தனி மாயை**—(இவ்வறிவை) தன்னுடையதான ஒப்பற்ற ப்ரக்ருதி, **மறைத்தமையும்**—மறைத்துநிற்பதையும், **தான் அன்றி**—தன்னைத தவிர, **மாயைதனைத் தவிர்ப்பான்**—ப்ரக்ருதியின் தொடர்பை (ஜீவனுக்கு) ஒழிப்பதற்கு, **விரகு அற்றமையும்**—உபாயம் ஒன்றுமில்லாதிருத்தலையும், **மேல் நின்ற**—(முன்னவருக்குப் பின்னவர்) உயர்ந்தவர் என்னும்படி நின்ற,

பக்தர்கள் நால்வரில்-(ஆர்த்தன், அர்த்தா₂ர்த்தி₂, ஜிஜ்ஞாஸு, ஜ்ஞாநி என்ற) ப₄க்தர்கள் நால்வரில், ஞானிதன் மேன்மைகளும்—ஜ்ஞாநியின் ஏற்றங்களையும், தெளிவித்தனன்—தெளிவாக உபதேசித்தான்.

கீ₃தாஸ்லோகார்த்த₂ச் சுருக்கம்

ஏழாம் அத்தியாயம்

ஸ்லோ — அர்த்த₂ம்

I 1–12. ஸ்வயாதா₂த்ம்யம் — பரமபுருஷனைப்பற்றிய உண்மையறிவு.

1. உண்மையறிவைக் கூறுவதாக ப்ரதிஜ்ஞை.

2. இவ்வறிவைப் பூர்ணமாகப் பெற்றால், அறியவேண்டியது வேறொன்றுமில்லை.

3. மோக்ஷஸித்₃தி₄யின் பொருட்டுக் கடைசிவரை முயல்பவன் ஆயிரத்தில் ஒருவன்; அவர்களிலும் ஆயிரத்தில் ஒருவன் பரமபுருஷனையே ப்ராப்யமாய் அறிபவன். அவர்களிலும் ஆயிரத்தில் ஒருவனே அவனை ப்ராபகமாகவும் அறிபவன்.

4. எட்டுவிதமான அசேதன ஸமஷ்டிப்பொருளும் பரமபுருஷ பரதந்த்ரமானது.

5. அசேதந ப்ரக்ருதிக்கு மேற்பட்ட சேதநஸமஷ்டியும் பரம புருஷபரதந்த்ரமானது.

6. முற்கூறிய சேதநாசேதந ஸமஷ்டிகளைக் காரணமாகக் கொண்ட வ்யஷ்டிப் பொருள்களுக்கும் பரமபுருஷனே காரணமாகவும், ஶேஷியாகவுமிருப்பவன்.

*7. கல்யாண கு₃ணங்களால் ஜீவர்களைக்காட்டிலும் மிகவுயர்ந்தவனும் பரமபுருஷனே.

7*. அவனே அனைத்துக்கும் ஶரீரியாகவுமிருப்பவன். இக்காரணங்களால் அவனே இயற்கையான ப்ராப்யப்ராபகங்களாயிருப்பவன்.

8-11. சேதநாசேதநப் பொருள்களில் அவற்றின் ப்ராப்யத்வத்திற்கும், ப்ராபகத்வத்திற்கும் உறுப்பாக உள்ள சிறந்த பெருமைகள் பரமபுருஷாதீ₄னமாய் வருபவையே.

12. ஸாத்விகர்களுக்கு ப்ராப்யப்ராபகங்களாயிருக்கும் முற்கூறியவைபோலே, ராஜஸதாமஸர்களுக்கு ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவுமிருக்கும் பொருள்களின் தன்மைகளும், அவ்வப்பொருள்களும் பரமபுருஷாதீ₄நமே; பரமபுருஷன் அவற்றுக்கு அதீ₄னமானவனல்லன்.

II 13-14 பரமபுருஷனைப்பற்றிய முற்கூறிய உண்மையறிவை—அவனுக்கு அதீனமான ப்ரக்ருதியின் ஸம்பந்தம் ஜீவனுக்கு மறைக்கிறது.

III 14. ஜீவனுக்குள்ள ப்ரக்ருதி ஸம்பந்தம் பரமபுருஷ ஶரணாகதியாலேயே நீங்குகிறது.

15. மேன்மேலே பாபிஷ்டர்களான நாலுவகைப்பட்ட பாபிகள் பரமபுருஷனை ஶரணமடைவதில்லை.

IV பக்தபேதம்

16. மேன்மேலே புண்ணியமிகுதியால் உண்டாகும் ப்ரதிபத்திச் சிறப்பாலே சிறப்புற்ற நாலுவகை பக்தர்கள் பரமபுருஷனை ஶரணமடைகின்றனர். அவர்களாவார்,— (1) ஆர்த்தன் (2) அர்த்தார்த்தி (இருவரும் சேர்ந்து ஐஶ்வர்யார்த்திகள்) (3) ஜிஜ்ஞாஸு (கைவல்யார்த்தி) (4) ஜ்ஞாநி (பகவச்சரணார்த்தி).

V 17-27. ஞானியின் சிறப்பு.

17. மூவரில், ஸாதனதசையிலோடு ஸாத்யதசையிலோடு வாசியற எப்போதும் எம்பெருமானுடன் சேர்ந்திருப்பவனாகையாலும், எம்பெருமான் ஒருவனிடமே அன்பு பூண்டவனாகையாலும் ஜ்ஞாநியானவன்,—ஸாதநதசையில் மாத்திரம் எம்பெருமானோடு சேர்ந்திருப்பவர்களும், ஸ்வஸாத்யமான ஐஶ்வர்ய கைவல்யங்களிலும், அவற்றுக்கு ஸாதனமாக எம்பெருமானிடமும் அன்பு பூண்டவர்களுமான ஐஶ்வர்ய கைவல்யார்த்திகளைக் காட்டிலும் சிறப்புற்றவன். எம்பெருமானிடம் பேரன்புபூண்டவன்; எம்பெருமானுக்கு மிக இனியவன்.

18. மூவருமே பகவான் ஒருவனையே பலப்ரதஸாதனமாகப் பற்றியவர்களாகையாலே உதாரர்கள்; ஜ்ஞாநியோவெனில், எம்பெருமானையே பரமப்ராப்யமாகவும் பற்றியவனாகையாலே அவனுக்கே ஆத்மாவாய் (தாரகனாய்) இருப்பவன்.

19. பல ஜன்மங்கள் கழித்து உபாஸகஜ்ஞானிக்குப் பரமபுருஷனைப் பற்றிய உண்மையறிவை அநுஸந்திப்பதாலே 'அவனே ப்ராப்யனாகவும் ப்ராபகனாகவுமிருப்பவன்' என்னும் அறிவு ஏற்பட்டு, அவனையே எல்லாமாகப் பற்றுகிறான், இவ்வறிவு ஏற்பட்ட ஜன்மமே இவனுக்குக் கடைசி ஜன்மம். இத்தகைய ஜ்ஞானி மஹாத்மாவாவான். எம்பெருமானுக்கே கிடைத்தற்கரியவன் இவன்.

20. ராஜஸதாமஸ நூல்களில் சொன்ன நியமங்களைப்பற்றி நின்று தாழ்ந்த பலன்களுக்காக மற்ற தெய்வங்களை வழிபடுகிறார்கள் பலர்.

21. அவர்களுக்கும் தனது ஶரீரமான அந்த தெய்வங்களிடம் ப₄க்திஶ்ரத்₃தை₄களை எம்பெருமானே ஏற்படுத்துகிறான்.

22. ப₄க்திஶ்ரத்₃தை₄களோடு அந்த தெய்வங்களை ஆராதி₄ப்பவர்களுக்கு, அந்த தெய்வங்களுக்கு அந்தர்யாமியான எம்பெருமானே ப₂லனளிக்கிறான்.

23. புல்லறிவாளர்களான அவர்களுக்குக் கிடைக்கும் ப₂லன் அல்பமாகவும் அஸ்தி₂ரமாகவுமே இருக்கிறது. ப₄க₃வத்₃ ப₄க்தர்கள் அநந்தஸ்தி₂ரப₂லனையே எளிதில் பெறுகிறார்கள்.

24. முற்கூறியவர்களிலும் கீழ்ப்பட்ட அறிவிலிகள் பலர் பரம புருஷனை ஸாமாந்ய ஜீவனாக நினைக்கிறார்கள்.

25. மனிதவுருக்கொண்டு அவதரித்திருக்கும் ஸர்வேஶ்வரனை இவ்வறிவிலிகள் அறிவதில்லை.

26. பரமபுருஷனை உள்ளபடி அறிபவன் முக்காலத்திலும் ஒருவனுமேயில்லை.

27. இதற்குக்காரணம்—அநாதி₃காலமாக ஜீவர்கள் ப்ரத₂மப்ரவ்ருத்தியில் ப்ராக்ருத விஷயமான ஜ்ஞாநேச்சா₂ப்ரயத்னங்களையே செய்து புண்ய பாப கர்மங்களைக் குவித்து வைத்திருப்பதால், பிறக்கும்போதே ப்ராக்ருதவிஷயத்தில் மயங்கி நிற்கையேயாகும்.

VI முடிவுரை.

28. இவர்களில், புண்யத்தாலே பாபம் சிறிதுசிறிதாக அழியப்பெற்றவர்கள், தத்தம் புண்ணியத்தின் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப, ஐஶ்வர்யத்தையோ, கைவல்யத்தையோ, பரம புருஷனையோ பெறவிரும்பி உறுதியுடன் ப₄க்திசெய்கிறார்கள். புண்யபாப லக்ஷணம்.

29. கைவல்யார்த்தி₂க்கு அறியவேண்டிய அர்த்த₂விஶேஷங்களும், கைவிடவேண்டியதும் பற்றிய ப்ரஸ்தாவம்.

30. ஐஶ்வர்யார்த்தி₂க்கு அறியவேண்டும் அர்த்த₂விஶேஷங்களும் கைக்கொள்ளவேண்டியவையும், ஐஶ்வர்யகைவல்ய ப₄க₃வச்சரணார்த்தி₂களான ப்ரவ்ருத்திபரர் அனைவர்க்கும் பொதுவாக அறியவேண்டியவையும், கைக்கொள்ளவேண்டியவையும் பற்றிய ப்ரஸ்தாவம்.

ஆளவந்தார் அருளிய

கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம்

[எட்டாவது அத்தியாயப் பொருளின் சுருக்கம்]

ऐश्वर्याक्षरयाथात्म्यभगवच्चरणार्थिनाम् ।
वेद्योपादेयभावानां अष्टमे भेद उच्यते ॥ १२ ॥

12. ஐஶ்வர்யாக்ஷரயாத₂ாத்ம்ய ப₄க₃வச்சரணார்த்தி₂நாம் ।
வேத்₃யோபாதே₃யபா₄வாநாம் அஷ்டமே பே₄த₃
உச்யதே ॥

ஐஶ்வர்யாக்ஷரயாத₂ாத்ம்ய ப₄க₃வச்சரணார்த்தி₂நாம் — (1) ஐஶ்வர்யார்த்தி₂ (2) ப்ரக்ருதியினின்று நீங்கிய ஆத்ம ஸ்வரூபத்தை அநுப₄விக்க விரும்பும் கைவல்யார்த்தி₂ (3) ப₄க₃வானுடைய திருவடித்தாமரையைப் பெறவிரும்பும் ஞானி ஆகிய மூவர்க்கும், வேத்₃யோபாதே₃யபா₄வாநாம்— அறியவேண்டும் அர்த்த₂விஶேஷங்கள், கைக்கொள்ள (அநுஷ்டி₂க்க) வேண்டியவை ஆகியவற்றின், பே₄த₃:— வேறுபாடு, அஷ்டமே — எட்டாம் அத்தியாயத்தில், உச்யதே—சொல்லப்படுகிறது.

வாதிகேஸரி ஜீயர் அருளிய

பகவத்கீதை வெண்பா—அத்தியாயம் 8

அப்யாஸயோகம்

அத்தியாயப் பொருளின் சுருக்கம்

போக முயிருண்மை பூமகள்கோனைப்பெறுதற்
காக முயல்வார்க் கறிவமர—மேகநிறத்
தெம்மா னருள்கீதை யெட்டாமோத் திற்பொருள்கள்
செய்ம்மா வகையுரைக்குஞ் சேர்ந்து.

போகம்—ஐஶ்வர்ய போ₄க₃ங்கள், ***உயிருண்மை***—ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மாநுப₄வம், ***பூமகள்கோனை***—ஸ்ரீமந் நாராயணன் ஆகிய இம்மூன்று ப்ராப்யங்களில் ஒன்றை, *பெறுதற்காக*—பெறுவதற்காக, *முயல்வார்க்கு*—முயற்சி செய்பவர்களுக்கு, ***அறிவு அமர வகை***—அறியவேண்டியவைகளையும், ***செய் மா வகை***—அநுஷ்டி₂க்கவேண்டியவைகளையும், ***மேகநிறத்து எம்மான் அருள் கீதை எட்டாம் ஓத்தில் பொருள்கள்***-மேக₄ம்போன்ற நிறத்தையுடைய எம்பெருமானை கண்ணன் அருளிய கீ₃தையின் எட்டாம் அத்தியாயத்தின் ஶ்லோகங்கள், ***சேர்ந்து உரைக்கும்***—ஒன்றுகூடிச் சொல்லும்.

श्रीः
श्रीमते रामानुजाय नमः

॥ अथ अष्टमोऽध्यायः ॥ ८ ॥

॥ भा ॥ सप्तमे परस्य ब्रह्मणो वासुदेवस्य उपास्यत्वम्, निखिलचेतनाचेतनवस्तुशेषित्वम्, कारणत्वम्, आधारत्वम्, सर्वशरीरतया सर्वप्रकारत्वेन सर्वशब्दवाच्यत्वम्, सर्वनियन्तृत्वम्, सर्वैश्च कल्याणगुणगणैस्तस्यैव परतरत्वम्, सत्त्वरजस्तमोमयैर्देहेन्द्रियत्वेन भोग्यत्वेन

ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி தா₃ஸன் இயற்றிய

கீதார்த்தவிவரணம் - எட்டாம் அத்தியாயம்

முன் அத்தியாயத்தோடு ஸங்க₃தியும், இவ்வத்தியாயார்த்த₂ச் சுருக்கமும்.

ஏழாம் அத்தியாயத்தில் சொல்லப்பட்ட விஷயங்களாவன:—

ஏழாமத்தியாயத்தின் முதல் ஶ்லோகம் தொடங்கி இறுதிவரை பலவிடங்களில் பரப்₃ரஹ்மமான வாஸுதே₃வன் உபாஸிக்கத்தக்கவன் என்று சொல்லப்பட்டது. அவ்வுபாஸனத்திற்கு அங்க₃மாக அவனைப் பற்றிய உண்மையறிவும் முதல் பனிரண்டு ஶ்லோகங்களால் சொல்லப்பட்டது. அதில், 4, 5, 6 ஶ்லோகங்களாலே, அவனே எல்லாச் சேதநாசேதநங்களுக்கும் ஶேஷி என்றும் காரணம் என்றும் கூறப் பட்டது. ஏழாவது ஶ்லோகத்தின் பிற்பாதியால், எல்லாவற்றுக்கும் ஆதா₄ரமாயிருப்பவனென்றும் எல்லாப்பொருள்களையும் ஶரீரமாகக் கொண்டவனென்றும் கூறப்பட்டது. 8 முதல் 12 வரை இப்படி ஸர்வஶரீரியாயிருக்கையால், அனைத்தையும் தனக்கு ப்ரகாரமாகக் கொண்டிருக்கையால், அந்தந்தப் பொருள்களையும், அவற்றுக்குப் பெருமையளிக்கும் கு₃ணங்களையும் குறிக்கும் சொற்கள் தன்னையும் குறிக்கும்படியிருக்கும் பெருமை சொல்லப்பட்டது. அவை அனைத்தும் தன்னதீ₄னமே என்கையாலே, அனைத்தையும் நியமிப்பவன் பரம புருஷனே என்றும் கூறப்பட்டது. ஏழாவது ஶ்லோகத்தின் முற்பாதி யால், எல்லாக் கல்யாணகு₃ணங்களாலும் அவனே மிகவுயர்ந்தவன் என்று கூறப்பட்டது. 13-வது ஶ்லோகத்தாலும், 14-வதின் முற் பாதியாலும், அநாதி₃காலமாய் வரும் பாபபரம்பரையின் ப₂லமாக தே₃ஹமாகவும் இந்திரியமாகவும், போ₄க்₃யப்பொருள்களாகவும் பரிணமித்திருப்பதாய், ஸத்வரஜஸ்தமோ மயமானதான ப்ரக்ருதியின்

चावस्थितैर्भावैरनादिकालप्रवृत्तदुष्कृतप्रवाहहेतुकैस्तस्य तिरोधानम्, अत्युत्कृष्टसुकृतहेतुकभगवत्प्रपत्त्या च तन्निवर्तनम्, सुकृततारतम्येन च प्रतिपत्तिवैशेष्यादैश्वर्याक्षरयाथात्म्यभगवत्प्राप्त्यपेक्षया उपासकभेदम्, भगवन्तं प्रेप्सोर्नित्ययुक्ततया एकभक्तितया चात्यर्थपरमपुरुषप्रियत्वेन च श्रैष्ठ्यम् दुर्लभत्वं च प्रतिपाद्य, एषां त्रयाणां ज्ञातव्योपादेयभेदांश्च प्रास्तौषीत्। इदानीमष्टमे, प्रस्तुतान् ज्ञातव्योपादेयभेदान् विविनक्ति॥

விகாரப்பொருள்களாலே தன்னைப்பற்றிய உண்மையறிவு மறைக்கப் படுகிறது என்று கூறப்பட்டது 14-வது ஶ்லோகத்தின் பிற்பாதி யாலே, மிகவுயர்ந்த புண்ணியத்தினால் ஏற்படும் ப4க3வத்ப்ரபத்தி யினாலே அந்த ப்ரக்ருதி ஸம்ப3ந்த4ம் படிப்படியாகப் போக்கடிக்கப் படுகிறது என உத்3கோ4ஷிக்கப்பட்டது பதினாறாவது ஶ்லோகத்தாலே, புண்ணியத்தின் ஏற்றத்தாழ்வால் ஏற்பட்ட எண்ணத்தின் ஏற்றத் தாழ்வாலே, ஐஶ்வர்யத்தையோ, ஆத்மாநுப4வத்தையோ, ப4க3வத் ப்ராப்தியையோ விரும்பும் மூவகையான அதி4காரிகள் தன்னை ஶரணமடைந்து உபாஸிக்கிறார்கள் என்று கூறப்பட்டது. பதினேழா வது ஶ்லோகம் தொடங்கி, இருபத்தேழாவது ஶ்லோகமீறாக— இம்மூவரில் ப4க3வானை அடையவிரும்பும் ஞானியின் பல்வகைச் சிறப்பும், அருமையும் காட்டப்பட்டது; எல்லா த3ஶையிலும் எம் பெருமானோடு சேர்ந்திருக்கை, ப4க3வான் ஒருவனையே ப்ராப்யமாகக் கொண்டிருக்கையாலே அவனிடமே அன்பு செய்கை, அவனிடம் மிகவும் ஈடுபட்டிருக்கை ஆகியவை மற்ற இருவரைக் காட்டிலும் ஞானிக்குள்ள சிறப்புக்குக் காரணங்கள் என்றும், உலகில் பெரும் பாலான ஜனங்கள் புண்யபாபங்களை மிகுதியாகச் செய்து, ப்ராக்ருத விஷயங்களிலேயே பிறவி தொடங்கி மயங்கி நிற்கையாலே, நாஸ் திகர்களாகவும், தே3வதாந்தரபரர்களாகவும் ஆகிவிடுகிறார்களாகை யால் ஞானி மிகவும் கிடைத்தற்கரியவன் என்றும் காட்டப்பட்டது. கடைசியில் 28-வது ஶ்லோகம் முதல் முப்பதாவது ஶ்லோகமீறாக, முற்கூறிய ஐஶ்வர்ய கைவல்ய ப4க3வச்சரணார்த்தி2களுக்கு அறிய வேண்டியவையும், கைக்கொள்ளவேண்டியவையும் பற்றி ப்ரஸ்தா விக்கப்பட்டது. இனி, இவ்வெட்டாம் அத்தியாயம் முழுவதும், ஏழாம் அத்தியாயக் கடைசியில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட இம்மூவகை அதி4காரிகளுக்கு அறியவேண்டியவையும் கைக்கொள்ளவேண்டியவை யும் எவையெவை என்று விவரிக்கிறான் கண்ணன்.

अर्जुन उवाच—

किं तद्ब्रह्म किमध्यात्मं किं कर्म पुरुषोत्तम।
अधिभूतं च किं प्रोक्तम् अधिदैवं किमुच्यते॥ १ ॥

अधियज्ञः कथं कोऽत्र देहेऽस्मिन्मधुसूदन।
प्रयाणकाले च कथं ज्ञेयोऽसि नियतात्मभिः॥ २॥

அர்ஜுந உவாச —

1. கிம் தத் ப்₃ரஹ்ம கிமத்₄யாத்மம் கிம் கர்ம புருஷோத்தம।
அதி₄பூ₄தம் ச கிம் ப்ரோக்தம் அதி₄தை₃வம் கிமுச்யதே ॥

2. அதி₄யஜ்ஞ: கத₂ம் கோऽத்ர தே₃ஹேऽஸ்மிந் மது₄ஸூத₃ந।
ப்ரயாணகாலே ச கத₂ம் ஜ்ஞேயோऽஸி நியதாத்மபி₄: ॥

புருஷோத்தம — புருஷோத்தமனே !, மது₄ஸூத₃ந — மது₄வெனும் அஸுரனை அழித்தவனே ! (ஜராமரண மோக்ஷத்திற்காக உன்னை ஆஶ்ரயித்து முயல்பவர்களாகக் கூறப்பட்ட கைவல்யார்த்தி₂கள் அறியவேண்டியவையாகச் சொல்லப்பட்டவையான) — தத் ப்₃ரஹ்ம கிம் — ப்₃ரஹ்மம் எனப்படும் அது யாது ? அத்₄யாத்மம் கிம் — அத்₄யாத்மம் என்பது யாது ? கர்ம கிம் — கர்ம எனப்படுவது யாது ? (ஐஶ்வர்யார்த்தி₂கள் அறியவேண்டியவையாகச் சொல்லப் பட்டவையான) — அதி₄பூ₄தம் கிம் ப்ரோக்தம் — அதி₄பூ₄தம் எனப்படுவது யாது ? அதி₄தை₃வம் ச கிம் உச்யதே—அதி₄

---

1. ஏது பிரமமதா மேதத்தி யாத்துமமா
மேது கருமமா மிங்கிறைவா—வேதா
மதிபூத மேதா மதிதெய்வ மேதா
மதியெச்ச மெங்ஙனிய லாம்.

2. எவ்வகையா லிவ்வுடல்விட் டேகுங்கா னன்னெஞ்சின்
மெய்வகையார் நின்னினைக்க மேவுதியென்—றிவ்வகை
பார்த்தனவன் கேட்ட படிக்கேற்க வாங்கடைவே [யாற்
வார்த்தையருள் செய்தான்மைம் மால்.

தை$_3$வம் எனப்படுவதும் யாது? **அத்ர அஸ்மிந் தே$_3$ஹே**—ஶாஸ்த்ரங்களில் உனது தே$_3$ஹமாக ப்ரஸித்$_3$தி$_4$பெற்ற இந்த இந்த்$_3$ராதி$_3$களிடத்தில், (மூவகை அதி$_4$காரிகளுக்கும் அறியவேண்டியதான) — **அதி$_4$யஜ்ஞ: க:** — அதி$_4$யஜ்ஞும் எனப்படுவது யாது? **கத$_2$ம்**—அதற்கு அதி$_4$யஜ்ஞத்தன்மை எப்படி வந்தது? **நியதாத்மபி$_4$:** — மனத்தை அடக்கிய இம்மூவராலும், **ப்ரயாணகாலே ச** — (தத்தம் ப$_2$லனைப்பெறுவதற்காக) உடலை விடும்போதும், **கத$_2$ம் ஜ்ஞேய: அஸி**—எப்படி நீ அறியத்தக்கவனாயிருக்கிறாய்? ([**இதி**] **அர்ஜுந: உவாச**—என்று அர்ஜுனன் கேட்டான்.)

இறைவா — ஈசனே! இங்கு — கைவல்யார்த்தி$_2$கள் அறியவேண்டியவையான, **பிரமமது ஏதாம்** — ப்$_3$ரஹ்மம் எனப்படுவது யாது? **அத்தியாத்துமம் ஏதாம்**—அத்$_4$யாத்மம் எனப்படுவது யாது? **கருமம் ஏதாம்**—கர்மம் எனப்படுவது யாது? (இங்கு—ஐஶ்வர்யார்த்தி$_2$கள் அறியவேண்டியவையான) **அதிபூதம் ஏதாம்**—அதி$_4$பூத$_4$ம் எனப்படுவது யாது? **அதி தெய்வம் ஏதாம்**—அதி$_4$தை$_3$வம் எனப்படுவது யாது? (இங்கு — மூவகை அதி$_4$காரிகளும் அறியவேண்டியதான) **அதி யெச்சம் ஏதாம்** — அதி$_4$யஜ்ஞும் எனப்படுவது யாது? **எங்ஙன் இயலாம்** — அதற்கு அதி$_4$யஜ்ஞத்தன்மை எப்படி வந்தது? **நல் நெஞ்சின் மெய் வகையார்**—நல்ல நெஞ்சையுடையராகையாலே உண்மையான இயல்வையுடையவர்கள், **இவ்வுடல் விட்டு ஏகுங்கால்** — (தத்தம் பயனைப் பெறுவதற்குறுப்பாக) இவ்வுடலை விட்டுப் போம்போது, **எவ்வகையால் நின் நினைக்க மேவுதி** — (அவர்களால்) எவ்வகையில் நீ நினைக்கத்தக்கவனாயிருக்கிறாய்? **என்று இவ்வகையால்** — என்று இவ்வண்ணமாக, **பார்த்தனவன் கேட்டபடிக்கேற்க** — அர்ஜுனன் கேட்ட கேள்விகளுக்குப் பொருந்தும்படியாக, **ஆங்கு அடைவே** — அதே முறையில், **மை மால்**—அஞ்சன வண்ணனான கண்ணன், **வார்த்தை அருள் செய்தான்**—பதில் வார்த்தைகளை அருளிச்செய்தான்.

॥ भा ॥ जरामरणमोक्षाय भगवन्तमाश्रित्य यतमानानां ज्ञातव्यतयोक्तं तद्ब्रह्म अध्यात्मं च कर्म च किमिति वक्तव्यम्। ऐश्वर्यार्थिनां

1-2. முன் அத்தியாயத்தில் கண்ணனால் ப்ரஸ்தாபிக்கப்பட்ட மூவகை அதி₄காரிகளும் அறியவேண்டிய ஜீவஸ்வரூபம் முதலானவைகளையும், கைக்கொள்ளவேண்டிய உபாஸநம் முதலானவைகளையும் பற்றி விளக்கமாகக் கூறும்படி இவ்விரண்டு ஶ்லோகங்களில் அர்ஜுனன் கேட்கிறான். "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு:" [7-16] என்று முன்னமே இம்மூவகை அதி₄காரிகள் சொல்லப்பட்டுள்ளனர். "ஜரா மரணமோக்ஷாய" [7-29, 30] என்று தொடங்கும் இரு ஶ்லோகங்களிலும் "யே" "யே" என்று அம்மூன்று அதி₄காரிகளை எடுக்கையாலும், அர்த்த₂ஸ்வப₄ாவத்தாலும் அவரவர்க்கு அறியவேண்டியவைகளும், கைக்கொள்ளவேண்டியவைகளும் இவையிவை என்று பொதுவாகப் புரிந்துகொண்டிருக்கிறான் அர்ஜுனன். அவைபற்றி விளக்கத்தை விரும்பி இங்கு கேள்வி கேட்கிறான். மேல் ஶ்லோகங்களில் கண்ணன் அவற்றை விளக்குகிறான். (கிம் தத் ப்₃ரஹ்ம) 7-29-வது ஶ்லோகத்தில் கைவல்யார்த்தி₂க்கு அறியவேண்டியதாகக் கூறப்பட்ட 'ப்₃ரஹ்ம' எனப்படுவது யாது? (கிம் அத்₄யாத்மம்) அங்கு அவனுக்கே அறியவேண்டியதாகக் கூறப்பட்ட 'அத்₄யாத்மம்' என்பது யாது? (கிம் கர்ம) அங்கு அவனுக்கே அறியவேண்டியதாகக் கூறப்பட்ட 'கர்ம' எனப்படுவது யாது? (புருஷோத்தம) புருஷனுகிற ஆத்மாவை அடைய விரும்புகிறவனுக்கு அறியவேண்டியதையும், கைக்கொள்ளவேண்டியதையும் புருஷோத்தமனான நீயே கூறமுடியும் என்கை. (அதி₄பூ₄தம் கிம் ப்ரோக்தம்) 7-30-வது ஶ்லோகத்தின் முதற் பாத₃த்தில் ஐஶ்வர்யார்த்தி₂க்கு அறியவேண்டியதாகக் கூறப்பட்ட 'அதி₄பூ₄தம்' என்பது யாது? (அதி₄தை₃வம் ச கிம் உச்யதே) அங்கு அவனுக்கே அறியவேண்டியதாகக் கூறப்பட்ட 'அதி₄தை₃வம்' என்பதும் யாது? இனி, இரண்டாம் ஶ்லோகத்தில் மூவர்க்கும் பொதுவானவை பற்றிக் கேட்கிறான்,— (அத்ர அஸ்மிந் தே₃ஹே) (அத்ர தே₃ஹே) இதற்கு பதிலான 4-வது ஶ்லோகத்தில் "அத்ர தே₃ஹே" என்றவிடத்திற்கு ப₄ாஷ்யமிடும்போது "அத்ர இந்த்₃ராதெ₃ள மம தே₃ஹ பூ₄தே" என்று ப₄ாஷ்யகாரர் அருளியிருப்பதால், இங்கும் 'இந்த்₃ரன் முதலான எனது தே₃ஹத்தில்' என்று பொருள்கொள்ள வேண்டும். "ஸ ஆத்மா அங்க₃ாந்யந்யா தே₃வதா:" [தைத்-ஶீக்ஷா 5-1] [பரமாத்மா தே₃வதைகளுக்கு ஆத்மாவாயிருப்பவன்; மற்ற தே₃வதைகள் அவனுக்கு அங்க₃ங்களாயுள்ளனர்] "யஸ்ய ப்ருதி₂வீ ஶரீரம்" [ப்₃ருஹ 5-7-7] முதலான ஶாஸ்த்ரங்களில் எனக்கு தே₃ஹ

ज्ञातव्यमधिभूतमधिदैवं च किम्? तयाणां ज्ञातव्योऽधियज्ञशब्दनिर्दिष्टश्च कः? तस्य चाधियज्ञभावः कथम्? प्रयाणकाले च एभिस्त्रिभिर्नियतात्मभिः कथं ज्ञेयोऽसि? ॥ १, २ ॥

மாக ப்ரஸித்₃தி₄ பெற்ற இந்திரன் முதலானரிடத்தில் என்றபடி. ஏதச்ச₂ப்₃த₃த்திலிருந்து நிஷ்பந்நமான (உண்டான) 'அத்ர' என்னும் ஶப்₃த₃ம் ஶாஸ்த்ரப்ரஸித்₃தி₄யைக் காட்டுகிறது. (அஸ்மிந் தே₃ஹே) இந்த தே₃ஹமான இந்திரன் முதலானரிடத்தில். இத₃ம் ஶப்₃த₃த்தின் ஏழாம் வேற்றுமையான 'அஸ்மிந்' என்னும் ஶப்₃த₃ம் இந்த்₃ராதி₃ தே₃வர்கள் க்ருஷ்ணனுக்கும் அர்ஜுனனுக்கும் ப்ரத்யக்ஷமாக விளங்குவதைக் காட்டுகிறது "ஸ ஏஷ த்₃வாப்₄யாம் த₃ர்ஶநீப்₄யாம் விராட்₃ப்₄யாம் அநயோர் த்₃வாவிம்ஶயோ: த்₃விவசநயோ: அயம் புருஷ: ப்ரதிஷ்டித:" முதலானவிடங்களில் ஏதச்ச₂ப்₃த₃மும், இத₃ம் ஶப்₃த₃மும் ஒரே வாக்யத்தில் ஒரே வேற்றுமையில் வழங்கப் பட்டிருப்பதைக் காண்கையால். இங்கு 'அத்ர அஸ்மிந்' என்று அவற்றை ஒரே வேற்றுமையில் வழங்குவதில் குறையில்லை. அன்றிக்கே, 'அத்ர' என்று யஜ்ஞஸ்வரூபத்தைச் சொல்லுகிறதாகவுமாம். (அதி₄யஜ்ஞ: க:) 30-வது ஶ்லோகத்தின் இரண்டாம் பாத₃த்தில் முற்கூறிய அதி₄காரிகள் மூவர்க்கும் அறியவேண்டியதாகக் கூறப்பட்ட அதி₄யஜ்ஞும் என்பது யாது? (கத₂ம்) அதற்கு அதி₄யஜ்ஞத்தன்மை எப்படி வந்தது? இனி, 30-வது ஶ்லோகத்தின் பிற்பாதியில் மூவர்க்கும் பொதுவாகச் சொல்லப்பட்ட விஷயத்தைப் பற்றிக் கேட்கிறன், (நியதாத்மபி₄:) மனத்தை அடக்கிய இம்மூவராலும். பன்மை, இதுவும் மூவர்க்கும் பொதுவானது எனக் காட்டுகிறது. (ப்ரயாணகாலே ச) தத்தம் ப்ராப்யத்தைப் பெறுவதற்குறுப்பாக உடலைவிடும் சமயத்திலும். சகாரம் உபாஸநத₃ஶையிலும் இவர்கள் இப்படி நினைப்பதை ஸமுச்சயிக்கிறது. (கத₂ம் ஜ்ஞேய: அஸி) நீ இம்மூவகை அதி₄காரிகளுக்கும் எப்படி எப்படி உபாஸிக்கத்தக்கவனாக இருக்கிறாய்? இந்த இரண்டாம் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் மூவர்க்கும் பொதுவானவை என்று சென்ற அத்தியாயம் 30-வது ஶ்லோக வ்யாக்₂யானத்திலேயே விளக்கப்பட்டது காணத்தக்கது. (மது₄ஸூத₃ந) மது₄வெனும் அஸுரனை அழித்தாற் போலே, அந்தந்த அதி₄காரிகள் தத்தம் ப்ராப்யத்தைப் பெறுவதற்கு விரோதி₄யான பாபங்களை அழிக்கும் நீயே இவற்றை அருளிச்செய்ய வேணும் என்கை. ஆக, சென்ற அத்தியாயத்தின் கடைசியில் கண்ணன் மூவகை அதி₄காரிகளுக்கும் அறியவேண்டியவையாகவும்,

श्रीभगवानुवाच—
अक्षरं ब्रह्म परमं स्वभावोऽध्यात्ममुच्यते ।
भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः ॥ ३ ॥

ஶ்ரீ ப₄க₃வாநுவாச —
3. அக்ஷரம் ப்₃ரஹ்ம பரமம் ஸ்வபா₄வோऽத்₄யாத்மமுச்யதே ।
பூ₄தபா₄வோத்₃ப₄வகரோ விஸர்க்க₃: கர்மஸம்ஜ்ஞித: ॥

ஶ்ரீப₄க₃வாந் உவாச—ப₄க₃வான் பின்வருமாறு கூறினன்:—

ப்₃ரஹ்ம — 'ப்₃ரஹ்ம' எனப்பட்டது, பரமம் அக்ஷரம்— ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபமாகும்; அத்₄ யாத்மம் — 'அத்₄யாத்மம்' எனப்பட்டது, ஸ்வபா₄வ: உச் யதே — ப்ரக்ருதி எனப்படுவதே; பூ₄தபா₄வோத்₃ப₄வகர: விஸர்க்க₃:—மனிதர் முதலான ஜீவராசிகளை உண்டாக்கு வதற்கு உறுப்பாக (ஆண் பெண்ணிடம் வீர்யத்தை) விடுவது, கர்மஸம்ஜ்ஞித:—'கர்ம' எனப்படுகிறது.

---

3. அக்கர மப்பிரம மாமத்தி யாத்துமமாந்
தொக்க வசித்தின் றொடர்தன்மை—மிக்க
கருமமாங் கண்டதொழில் காரண மாக
வருமங் குயிர்புணர்வார் மாட்டு.

அப்பிரமம் — 'ப்ரஹ்மம்' என்று என்றல் சொல்லப் பட்டது, அக்கரமாம்—முக்தாத்மஸ்வரூபமாகும். அத்தியாத் துமம்—'அத்₄யாத்மம்' என்று என்றல் சொல்லப்பட்டது. தொக்க அசித்தின் தொடர் தன்மை ஆம்—ஆத்மாவோடு (அநாதி₃காலமாகத்) தொடர்புகொள்ளும் இயல்வுகொண்ட ப்ரக்ருதியாகும். மிக்க கருமம்—மிகுதியாகவுள்ள கர்மம் எனப்படுவது, புணர்வார் மாட்டு—ஒன்றுசேரும் ஆண் பெண்களிடத்திலே, அங்கு—அப்புணர்ச்சியின்போது, உயிர் வரும் காரணமாக கண்ட தொழில் ஆம்—மனிதர் முதலான ஜீவராசிகள் உண்டாவதற்குக் காரணமாகக் கண்ட (வீர் யத்தை விடுதலாகிற) தொழிலேயாகும்.

கைக்கொள்ளத்தக்கவையாகவும் ப்ரஸ்தாபித்ததைப் பொதுவாகப் புரிந்துகொண்ட அர்ஜுனன், அவற்றைப்பற்றிய விளக்கத்தை இவ் விரு ஶ்லோகங்களிலும் வினவினுயிற்று. 1–2.

॥भा॥ तद्ब्रह्मेति निर्दिष्टं परममक्षरम्। न क्षरतीत्यक्षरं, क्षेत्रज्ञसमष्टिरूपम्। तथा च श्रुतिः — ‘अव्यक्तमक्षरे लीयते अक्षरं तमसि लीयते [सु. २] इत्यादिका। परममक्षरं - प्रकृतिविनिर्मुक्तमात्मस्वरूपम्। स्वभावोऽध्यात्ममुच्यते — स्वभावः - प्रकृतिः, अनात्मभूतम्, आत्मनि संबध्यमानं, भूतसूक्ष्मतद्वासनादिकं

---

3. இந்த ஶ்லோகத்தில் கைவல்யார்த்தி₂களைப் பற்றிய முதல் மூன்று கேள்விகளுக்கு பதிலிறுக்கிறுன் கண்ணன். (ப்₃ரஹ்ம பரமம் அக்ஷரம்) ப்₃ரஹ்மம் என்று என்றால் கூறப்பட்டது. ப்ரக்ருதி யினின்றும் நீங்கியதாகையாலே மேலானதான முக்தாத்மஸ்வரூபமே. "அந்யத்ர ஹ்யுபசாரத:" [வி-பு 6-5-77] என்னும் நியாயத்தாலே, பல பெருமைகள் பெற்றிருக்கையாலே, முக்தாத்மஸ்வரூபம் இங்கு ப்₃ரஹ்மஶப்₃த₃த்தாலே ஔபசாரிகமாகக் குறிக்கப்படுகிறது. " ந க்ஷரதீத்யக்ஷரம் " [அழியாததாகையாலே அக்ஷரமாகும்] என்னும் வ்யுத்பத்தியாலே அக்ஷரஶப்₃த₃ம் ஜீவாத்மஸமஷ்டியைக் குறிப்பிடுகிறது. "அவ்யக்தம் அக்ஷரே லீயதே அக்ஷரம் தமஸி லீயதே" [ஸு-2] [அவ்யக்தம் அக்ஷரம் எனப்படும் ஜீவஸமஷ்டியோடு ஒடுங்கு கிறது. அக்ஷரம் தமஸ் எனப்படும் மூலப்ரக்ருதியோடு ஒடுங்குகிறது.] என்று ஸுபா₃லோபனிஷத்திலும் ஜீவாத்மஸமஷ்டியைக் குறித்து அக்ஷரஶப்₃த₃ம் பிரயோகி₃க்கப்பட்டது. இங்கு ‘பரமம் அக்ஷரம்’ என்று விஶேஷித்திருக்கிறபடியால், ப₃த்₃த₄ஜீவர்களைக் காட்டிலும் மேலான, ப்ரக்ருதியினின்றும் நீங்கிய முக்தாத்மாவின் ஸ்வரூபம் சொல்லப்படுகிறது. இந்த ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தன் முக்தாத்ம ஸ்வரூபமே இக்கைவல்யநிஷ்டனுக்கு ப்ராப்யமாகையாலே, முதன் முதலில் அதை அறியவேண்டியதாகக் கூறுகிறுன் கண்ணன். அடுத்த படியாக, இந்த ப்ராப்யத்தை அடைவதற்கு அநாதி₃காலமாகத் தடையாயிருக்கும் ப்ரக்ருதியானது இவனுக்கு த்யாஜ்யமாகையாலே, அதை அறியவேண்டுமென்கிறுன்,— (அத்₄யாத்மம் ஸ்வபா₄வ: உச்யதே) ‘அத்₄யாத்மம்’ எனப்பட்டது ப்ரக்ருதியாகும். அநாதி₃காலமாக ஜீவனோடு இயல்வானதுபோலே ஒட்டிக்கொண்டிருக்கிறபடியாலே, ப்ரக்ருதி இங்கு ஸ்வபா₄வம் எனப்படுகிறது. " அத்₄யாத்மமாவது — ஆத்மாவோடு ஸம்ப₃ந்த₄ப்பட்டிருக்கும் அநாத்மவஸ்து. அதாகிறது, — கல்பத்தின் தொடக்கத்திலிருந்தே ஜீவனோடு ஒட்டிக் கொண்டிருக்கும் பூ₄தஸூக்ஷ்மம், அதன் வாஸனை முதலானவை.

ஒவ்வொரு பிறப்பிலும் ஜீவனடையும் பஞ்சபூ₄த பரிணாமமான ஸ்தூ₂லஶரீரம், மரணத்தின்போது அழிந்தபோதிலும், ஸூக்ஷ்மமான பஞ்சபூ₄தங்களாலான ஸூக்ஷ்மஶரீரம் இவனைப் பிறப்பு தோறும் தொடர்கிறது. கல்பாதி₃யிலிருந்து கல்பமுடிவு வரை, இவனடையும் ஒவ்வொரு பிறப்பிலும் இந்த ஸூக்ஷ்மஶரீரம் இவனை விட்டுப்பிரியாமலிருக்கையால், அதன் தொடர்பு காரணமாக ப்ராக்ருதமான விஷயஜ்ஞாநவாஸனையும், ப்ராக்ருதகர்மவாஸனையும், அதுகாரணமாக ஏற்படும் ப்ராக்ருதவிஷயங்களில் ருசி முதலானவையும் இவனோடு தொடர்ந்து வருகின்றன. இந்த ஸூக்ஷ்மஶரீரமும், வாஸனை முதலானவையும் இவனோடு கூடியிருக்கும்வரையில், இவனால் தன்னுடைய ஆத்மாவைப் பூர்ணமாக அநுப₄விக்க முடியாது. ஆகையால், ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄த்தினின்றும் அறவே நீங்கிய தனது ஆத்மாவை அநுப₄விக்கையையே ப்ராப்யமாகக்கொண்ட இக் கைவல்யநிஷ்ட₂னுக்கு, இவை த்யாஜ்யமாக (கைவிடவேண்டியவையாக) அறியவேண்டியவையாகும். முமுக்ஷுக்களில் மற்றொரு வகைப்பட்ட ப்₃ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸகனான பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னுக்கும், அவனுக்கு ஸாத₄னமான பஞ்சாக்₃னி வித்₃யையில் இக்காரணத்தினாலேயே பூ₄தஸூக்ஷ்மம், அதன் வாஸனை முதலான இவை த்யாஜ்யமாக அறியத்தக்கவையாக விதி₄க்கப் பட்டன. எங்கேயெனில்: "வேத்த₂ யதா₂ பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ ப₄வந்தி" [சா₂ந் 5-3-3] [ஐந்தாவது ஆஹுதியில், 'அப்புக்கள்' எனப்படும் (பஞ்ச)பூ₄தஸூக்ஷ்மங்கள் 'புருஷன்' என்று சொல்லத்தக்கவையாவதை அறிவாயா?] என்று தொடங்கி, "இதி து பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ ப₄வந்தி" [சா₂ந் 5-9-1] [இவ்வண்ணமாக—ஸ்வர்க்க₃லோகம், பர்ஜந்யன், பூ₄மி புருஷன், மனைவி எனும் ஐந்து அக்₃னிகளில் முறையே ஹோமம் செய்யப்படும் ஶ்ரத்₃த₄ா, ஸோமன், வ்ருஷ்டி (மழை), அந்நம், ரேதஸ் (ஆண்பிள்ளையின் வீர்யம்) என்னும் ஐந்து ஆஹுதிகளுக் கிடையே ஐந்தாவதான ரேதஸ் என்னும் ஆஹுதியில் பூ₄தஸூக்ஷ்மங்களோடு கூடிய ஜீவன் புருஷன் என்னும் பெயருடையவனாகிறான்.] என்பதிற்க—புண்ணியம்செய்த ஸம்ஸாரி ஜீவன், ஸ்வர்க்க₃லோகத்தில் ஸ்வர்க்க₃ாநுப₄வம் செய்துவிட்டு, புண்ணியம் தீர்ந்தவுடன் ஸ்வர்க்க₃ லோகத்திலிருந்து பூ₄தஸூக்ஷ்மங்களோடு கூடியவனாய், மழைவழியாக பூ₄மியை அடைந்து அந்நத்தில் கலந்து, புருஷனின் வீர்யத்

मुमुक्षुभिर्ज्ञातव्यम्। भूतभावोद्भवकरो विसर्गः कर्मसंज्ञितः—भूत-

தில் சேர்ந்து, புருஷனும் மனைவியும் புணர்வதாலே மனைவியின் யோனியை அடைவதைக் கூறி, "தத்3ய இத்த2ம் விது3:" [சா2ந் 5-10-1] என்று ப்3ரஹ்மாத்மக ஸ்வாத்மாநுப4வமாகிற முக்தியை அடையவிரும்பும் பஞ்சாக்3னி வித்3யாநிஷ்ட2னுக்கு த்யாஜ்யமாக அறியத்தக்கவையாக பூ4தஸூக்ஷ்மம், அதன் வாஸனை முதலியவை கூறப்பட்டனவன்றோ. அது போலவே கேவலாத்மாநுப4வமாகிற (கைவல்ய) முக்தியை அடையவிரும்பும் இவனுக்கும் தன் ஆத்மாவை அநுப4விக்கத் தடையான இவை த்யாஜ்யமாக அறியத்தக்கவை என்று கருத்து. இந்தப் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னே கைவல்ய நிஷ்ட2ன் என்று கொண்டுவிடலாமே எனில்: கார்யாதி4கரணத்திலும் அதன் ப4ாஷ்யத்திலும், கீ3தை [8-23,24] ப4ாஷ்யத்திலும் பஞ்சாக்3னிவித்3யாநிஷ்ட2னை ப்3ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸகனாகவும், அவனுக்கு அர்ச்சிராதி3க3தியும் ப்3ரஹ்மாநுப4வமும் உண்டென்றும் அருளப்பெற்றுள்ளது. கீ3தையில் 7,8 அத்4யாயங்களில் பல ஶ்லோகங்களிலும், அவற்றின் ப4ாஷ்யங்களிலும், ஜிஜ்ஞாஸு எனப்படும் இக்கைவல்யநிஷ்ட2னை கேவலாத்மோபாஸகனென்றும், அவனுக்கு ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தன் ஆத்மா மாத்திரமே ப்ராப்யமென்றும், ப்3ரஹ்மம் ப்ராப்யமல்லவென்றும், கீ3தை [8-16] ப4ாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸுவான இவனுக்கு அர்ச்சிராதி3க3தி இல்லையென்றும் அருளப்பெற்றிருப்பதால் இவன் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னுயிருக்க இடமேயில்லை என்பது விளங்கும். "ஆத்மார்த்தீ2 சேத் த்ரயோऽப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாத4கா:" [கீ3தார்த்த2ஸங்க்3ரஹம் 27] என்று இக்கைவல்யநிஷ்ட2னுக்குக் கர்ம ஜ்ஞாந ப4க்தியோக3ங்களில் எதுவும் ஸாத4னமாகலாம் என்று ஆளவந்தார் அருளுகையாலும், ப4க்தியோக3த்தில் ஒரு வகையான பஞ்சாக்3நிவித்3யையையே ஸாத4னமாகக்கொண்ட பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக் காட்டிலும் இவன் வேறுபட்டவன் என விளங்கும். "தது3ப4யம் ப்ராப்யதயா த்யாஜ்யதயா ச முமுக்ஷுபி4ர் ஜ்ஞாதவ்யம்" [ப்ரக்ருதி வியுக்தமான தன் ஆத்மா ப்ராப்யமாகவும், பூ4தஸூக்ஷ்மம் வாஸனை முதலானவை த்யாஜ்யமாகவும் முமுக்ஷுக்களால் அறியத்தக்கது] என்று இங்கு ப4ாஷ்யத்தில் அருளியிருப்பதால், பஞ்சாக்3நி வித்3யாநிஷ்ட2னைப் போலே இவனும் முமுக்ஷு என்றும், இவன் பெறுவதும் மோக்ஷமே என்றும் விளங்குகிறது. இது, மேல் ஶ்லோகங்களை விளக்கும்போதும் தெளிவாகும். பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னுக்கும், இக்கைவல்யநிஷ்ட2னுக்கும் உள்ள வாசிகளும் மேலே விளக்கப்படும்.

"நன்ருய், ஞானம் கடந்துபோய் நல்லிந்திரியம் எல்லாம் ஈர்த்து
ஒன்ருய்க்கிடந்த அரும்பெரும்பாழ் உலப்பில் அதனை உணர்ந்துணர்ந்து
சென்ருங்கு இன்பத்துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்ருல்
அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே" [திருவாய் 8-8-6]

என்று ஆத்மோபாஸகனைப்பற்றிப்பேசும் பாசுரத்திலே நம்மாழ்வார், "அத்₄யாத்மம்" [ஆத்மாவோடு ஒன்ருய்க்கிடக்கும் ப்ரக்ருதி] என்று இங்கு சொல்லப்பட்டதை "ஒன்ருய்க்கிடந்த அரும்பெரும் பாழ் உலப்பில் அதனை" என்று கூறி, "உணர்ந்து உணர்ந்து" "ஞானம் கடந்து போய்" "நல்லிந்திரியம் எல்லாம் ஈர்த்து" "பசை அற்ருல்" என்னும் பகுதிகளாலே, ப்ரக்ருதியையும், அதன் கார்யமான விஷயங்களையும், இந்திரியங்களையும், ருசிவாஸனைகளையும் த்யாஜ்ய மாக உணர்ந்து கைவிடவேண்டும் என்று கூறியதும், இங்கு "ப்₃ரஹ்ம" எனப்பட்டதை "ஆங்கு நன்ருய்ச் சென்று" என்று ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄மற்ற ஆத்மாவை ப்ராப்யமாக அநுஸந்தி₄க்க வேண்டுமென்று கூறியதும், இங்கு 'கர்ம' எனப்பட்டதை "ஞானம் கடந்து" "இந்திரியம் எல்லாம் ஈர்த்து" என்று கைவிடத்தக்கதாக உணர்த்தியதும், கடைசி அடியாலே இவன் பெறுவது மோக்ஷமே என்று கூறியதும் காணத்தக்கது. இவ்வெட்டாம் திருவாய்மொழி யில் ஐந்து முதல் எட்டாம்பாட்டு ஈருக கேவலாத்மோபாஸகனைச் சொல்லுகிறது என்று எம்பாரும், ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸ கனைச் சொல்லுகிறது என்று ஆண்டானும் நிர்வஹிப்பதாக (8-8-5; 8-8-8) ஈட்டில் காட்டியிருப்பதிலிருந்து, கேவலாத்மாநுப₄வத்தைப் பெறும் கைவல்யநிஷ்டனும், ப்ரஹ்மாத்மகஸ்வாத்மாநுப₄வத்தைப் பெறும் பஞ்சாக்₃னிவித்₃யாநிஷ்டனும் வெவ்வேருனவரென்று விளங் கும். இதையும் மேலே விளக்குவோம். ஆக, இந்த ஶ்லோகத்தின் முற்பாதியாலே, 'ப்₃ரஹ்ம' எனப்படும் ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபம் ப்ராப்யமாகவும், 'அத்₄யாத்மம்' எனப்படும் ப்ரக்ருதி யும், அதன் கார்யப்பொருள்களும் த்யாஜ்யமாகவும் கைவல்யார்த் திக்கு அறியத்தக்கவை என்று கூறப்பட்டது. இனி, 'கர்ம' (7-29) என்று கூறப்பட்டது யாது என்று விளக்கப்படுகிறது பிற்பாதியிலே,— (பூ₄தபா₄வோத்₃ப₄வகர: விஸர்க்க₃: கர்மஸம்ஜ்ஞித:) மனிதர் முத லான ஶரீரங்களோடு கூடிய ஜீவராசிகள் உண்டாவதற்குக் காரண மான விஸர்க்க₃ம் (ஆண் பெண்ணிடம் வீர்யத்தை விடுதல்) 'கர்மம்' எனப்படுகிறது. 'விஸர்க்க₃' ஶப்₃த₃த்தோடு சேர்த்துப்படித்திருப்ப

तावापः पुरुषवचसो भवन्ति (छा. ५. ९. १) इति श्रुतिसिद्धो योषित्संबन्धजः, स कर्मसंज्ञितः। तच्चाखिलं सानुबन्धम् उद्वेजनीयतया, परिहरणीयतया च मुमुक्षुभिर्ज्ञातव्यम्। परिहरणीयता चानन्तरमेव वक्ष्यते, * यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन்தி (१०) इति ॥ ३ ॥

தால், இங்கு பூ1தஶப்3த3ம் பஞ்சபூ1தம் முதலானவற்றைக் காட்டாமல், மனுஷ்யர் முதலான ஶரீரங்களோடு கூடிய ஜீவர்களைக் காட்டுகிறது. 'பூ4தப4ாவோத்3ப4வகர:' [மநுஷ்யாதி3 ஶரீரங்கள் உண்டாவதற்குக் காரணமான] என்று விஶேஷித்திருக்கையால், விஸர்க்க3ஶப்3த3ம்—மலம், மூத்ரம், அபாநவாயு முதலானவற்றை விடுதலைக்காட்டாமல், புருஷன் மனைவியிடம் வீர்யத்தை விடுதலையே காட்டுகிறது. ''பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ ப4வந்தி'' [சா2ந் 5-9-1] என்று முன் [பக்கம் 169ல்] எடுக்கப்பட்ட ஶ்ருதி வாக்யத்தில் முமுக்ஷுக்களில் மற்றொரு வகையான பஞ்சாக்3னி வித்3யாநிஷ்ட2னுக்கும் இந்த விஸர்க்க3ம் அறியத்தக்கதாகக் கூறப் பட்டதன்றோ. இது இவர்களுக்கு எதற்காக அறியவேண்டியதாகக் கூறப்படுகிறது? எனில்: இந்த விஸர்க்க3மாகிற கர்மமே—

''அந்யத்ர பீ4ஷ்மாத் க3ாங்கே3யாத் அந்யத்ர ச ஹநூமத:।
ஹரிணீகு2ரமாத்ரேண சர்மணா மோஹிதம் ஜக3த் ॥''

[க3ங்க3ாபுத்திரனான பீ4ஷ்மரையும், ஹநூமானையும் தவிர, உலகிலுள்ள மற்ற எல்லா ஜீவர்களும், மான்குளம்பளவுள்ள (ஸ்த்ரீயின் யோனியாகிற) தோலாலே மயக்கமுற்றிருக்கின்றனர்.] என்கிறபடியே இவனுக்குக் ''காலிடைப் பாசம்'' [பெரியாழ்வார்திருமொழி 5-2-3] என்று சொல்லப்படுகிற காமபாசத்தை விளைத்து, கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவரை வளர்த்து, இவனை ப்ரக்ருதியோடு கழற்றமுடியாதபடி கட்டிவைத்து, ஆத்மஜ்ஞானத்தை அடியோடு மழுங்கச்செய்கிறதாகையாலே, மனிதர், விலங்குகள் முதலான பலவகைப்பட்ட படைப்புக்களுக்குக் காரணமான இக்கர்மம் முழுவதும், அதற்கு உறுப்பான காமஶாஸ்த்ரம் முதலானவற்றோடும், அதன் பயனான க3ர்ப்ப4வாஸம் முதலானவற்றோடும் வெறுக்கத்தக்கதாகவும், கைவிடத்தக்கதாகவும் ஆத்மாநுப4வத்தை விரும்பும் முமுக்ஷுக்களால் அறியத்தக்கது என்று கருத்து. முமுக்ஷுக்களான ஆத்மோபாஸகர்களில் ஒருவகைப்பட்ட பஞ்சாக்3னிவித்3யாநிஷ்ட2ர்களுக்கு ஸாத4னமான பஞ்சாக்3னிவித்3யையில் — ஐந்தாவது ஆஹுதியான ஸ்த்ரீபுருஷஸம்ஸர்க்க3ம் (ஆண் பெண் சேர்க்கை) ஈருன

अधिभूतं क्षरो भावः पुरुषश्चाधिदैवतम्।
अधियज्ञोऽहमेवात्र देहे देहभृतां वर॥ ४॥

4. அதி₄பூ₄தம் க்ஷரோ ப₄ாவ: புருஷஶ் சாதி₄தை₃வதம் ।
அதி₄யஜ்ஞோऽஹமேவாத்ர தே₃ஹே தே₃ஹப்₄ருதாம் வர ॥

தே₃ஹப்₄ருதாம் வர — தே₃ஹமுடையவர்களில் சிறந்த அர்ஜுநு! அதி₄பூ₄தம் — (ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு அறிய வேண்டியதாகக் குறிக்கப்பட்ட) அதி₄பூ₄தம் எனப்பட்டது, க்ஷர: ப₄ாவ:—மாறுவதை இயற்கையாகக்கொண்ட (சிறந்த) ஶப்₃த₃ம் முதலான விஷயங்களே; அதி₄தை₃வதம் ச— (அவர்களுக்கு அறியவேண்டியதாகக் குறிக்கப்பட்ட) 'அதி₄தை₃வம்' என்று சொல்லப்பட்டதும், புருஷ:— இந்திரன் முதலான தே₃வர்களைக்காட்டிலும் உயர்ந்த புருஷனின் நிலையேயாம். அதி₄யஜ்ஞ:—(மூவருக்கும் அறிய வேண்டியதாகக் கூறப்பட்ட) அதி₄யஜ்ஞும் எனப்பட்டதும், அத்ர தே₃ஹே அஹம் ஏவ—எனது தே₃ஹமாயிருக்கும் இந்திரன் முதலாஞரிடம் அவர்களுக்கு அந்தர்யாமியா யிருந்துகொண்டு யஜ்ஞங்களால் ஆராதி₄க்கப்படும் நானே.

---

4. அதிபூதம் பூத பரிணும மாகு
மதிதெய்வந் துய்க்கு மவனுகு—மதியெச்ச
மாங்குயிருண் ணின்றே யாராத் தியனுகி
யோங்கிறையா நானென் றுணர்.

எல்லா நிலையிலும், "ஆப:" என்று குறிக்கப்படும் அசித் ஸம்ப₃ந்த₄ம் ஜீவனைத் தொடர்ந்து வருகிறது, அது கைவிடமுடியாமலிருக்கிறது, க₃ர்ப்ப₄ம், ஜன்மம் முதலான துன்பங்களை விளைப்பதாயிருக்கிறது என்று காட்டப்படுகிறதாகையால், இந்த விஸர்க்க₃ம் மிகவும் வெறுக்கத்தக்கதாயுள்ளது என்பது தெளிவு. "யதி₃ச்ச₂ந்தோ ப்₃ரஹ்மசர்யம் சரந்தி" என்று இவ்வத்தியாயத்திலேயே பதினேராவது ஶ்லோகத்தில், அசித்ஸம்ப₃ந்த₄மற்ற ஆத்மாநுப₄வத்தைப் பெறவிரும்பும் இக்கைவல்யார்த்தி₂க்கு, அசித் ஸம்ப₃ந்த₄த்தைப் பூண்கட்டித்தரும் இவ்விஸர்க்க₃ம் கைவிடத்தக்கது, இது இல்லாமையாகிற ப்₃ரஹ்மசர்யம் ஏற்கத்தக்கது என்று கூறியிருப்பதும் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கது. ஆக, கைவல்யார்த்தி₂க்கு அறியவேண்டியதும், கைவிடவேண்டியதும் காட்டப்பட்டதாயிற்று. 3.

।।भा।। ऐश्वर्यार्थिनां ज्ञातव्यतया निर्दिष्टमधिभूतं- क्षरो भावः- वियदादिभूतेषु वर्तमानस्तत्परिणामविशेषः क्षरणस्वभावो विलक्षणश्शब्द- स्पर्शादिस्साश्रयः; विलक्षणास्साश्रयाश्शब्दस्पर्शरूपरसगन्धाः ऐश्वर्यार्थिभिः

அதிபூதம் — (ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு அறியவேண்டிய தாகக் கூறப்பட்ட) அதி₄பூ₄தம் எனப்பட்டது, பூத பரிணா மம் ஆகும் — பஞ்சபூ₄தங்களின் பரிணாமமான (சிறந்த) ஶப்₃த₃ம் முதலான விஷயங்களே; அதிதெய்வம்—(அவர் களுக்கு அறியத்தக்கதாகக் கூறப்பட்ட) அதி₄தை₃வம், துய்க்கும் அவனும் — (அந்தச் சிறந்த ஶப்₃த₃ாதி₃ விஷ யங்களை) அநுப₄விக்கும் புருஷனின் நிலையேயாம்; அதி யெச்சம் — (மூவர்க்கும் அறியவேண்டியதாகக் கூறப்பட்ட) அதி₄யஜ்ஞும் எனப்பட்டது, ஆங்கு உயிருள் நின்றே— எனது தே₃ஹமான இந்திரன் முதலான ஜீவர்களுக்குள் அந்தர்யாமியாய் நின்று, ஆராத்தியன் ஆகி—ஆராதி₄க் கப்படுபவனாகி, ஓங்கு இறையாம் நான்—ஓங்கிநிற்கும் ஸர்வேஶ்வரனான நானே, என்று உணர் — என்று அறிவாயாக.

---

4. இந்த ஶ்லோகத்தின் முற்பாதியாலே, ஐஶ்வர்யார்த்தி₂ களைப் பற்றிய இரண்டு கேள்விகளுக்கும், பிற்பாதியால் மூவகை அதி₄காரிகளுக்கும் பொதுவான அதி₄யஜ்ஞத்தைப்பற்றிய இரு கேள்விகளுக்கும் பதிலிறுக்கிருன் கண்ணன். (அதி₄பூ₄தம் க்ஷரோ ப₄ாவ:) ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு அறியத்தக்கதாகச் சொல்லப்பட்ட 'அதி₄பூ₄தம்' எனப்பட்டது,—ஆகாஶம், வாயு, தீ, நீர், நிலம் எனும் பூ₄தங்களிலிருப்பதாய், அந்த பூ₄தங்களின் பரிணாமவிஶேஷங்களாய், மாறுவதையே இயல்வாகக் கொண்டவையான சிறந்த ஶப்₃த₃ ஸ்பர்ஶ ரூப ரஸ க₃ந்த₄ங்களாகிற ஐந்து விஷயங்களும், அவற்றை யுடைய பே₄ாக்₃யப்பொருள்களுமேயாம். ''க்ஷரோ ப₄ாவ:'' என்று விகாரமடையும் பொருளாக விளக்கியிருப்பதால், '' அதி₄பூ₄த '' ஶப்₃த₃த்திலுள்ள பூ₄தஶப்₃த₃ம் ஜீவராஶிகளைக் குறிக்கமாட்டாது. ஆகையால், பஞ்சபூ₄தங்களிலுள்ள ஶப்₃த₃ாதி₃பே₄ாக்₃யங்களே இங்கு ஐஶ்வர்யமாகச் சொல்லப்படுகின்றன என்பது தெளிவு. இங்கு ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு ப₄க்தியோக₃மே ஸாத₄னமாக விதி₄க்கப்

प्राप्यास्तैरनुसन्धेयाः। पुरुषश्चाधिदैवतम् — अधिदैवतशब्दनिर्दिष्टः- पुरुषः। अधिदैवतम्—देवतोपरि वर्तमानः; इन्द्रप्रजापतिप्रभृतिकृत्स्न- देवतोपरि वर्तमानः, इन्द्रप्रजापतिप्रभृतीनां भोग्यजाताद्विलक्षणशब्दादेः भोक्ता पुरुषः। सा च भोक्तृत्वावस्था ऐश्वर्यार्थिभिः प्राप्यतयाऽनु-

---

படுகிறதாகையால், நூறு அஶ்வமேத₄யாக₃ம் முதலான கர்மங்களைச் செய்து ஸாதி₄க்கப்படும் இந்திர பதவியிலுள்ள ஐஶ்வர்யங்கள் இங்கு கருதப்படவில்லை. ப்₃ரஹ்மாவின் பதவி, அல்லது அதை ஒத்த போ₄க₃மே இங்கு ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு ப்ராப்யமாக அநு ஸந்தி₄க்கத்தக்கதாக அதி₄தை₃வதஶப்₃த₃த்தால் எடுக்கப்படுகிறது என்று கொள்ளவேண்டும். அதனாலேயே, ஶப்₃தா₃தி₃போ₄க₃ங்களை விலக்ஷண ஶப்₃த₃த்தாலே விஶேஷித்தார் பா₄ஷ்யகாரர். ஆளவந்தாரும், " ப₄க்தியோக₃ஸ் தத₃ர்த்தீ₂ சேத் ஸமக்₃ரைஶ்வர்ய ஸாத₄க:" [கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹம்-23] [விரும்பினானாகில், ப₄க்தியோக₃ம் நிறைந்த செல்வத்தை ஸாதி₄த்துக்கொடுக்கும்.] என்று ப₄க்தியோக₃த் தால் ஸாதி₄க்கப்படும் ஐஶ்வர்யம் ஸமக்₃ரமானது (நிறைந்தது) என்று காட்டினார். (புருஷஶ்ச அதி₄தை₃வதம்) ஐஶ்வர்யார்த்தி₂ களுக்கு அறியத்தக்க அதி₄தை₃வமும், இந்திரன் முதலான தே₃வதை களுக்கு மேலானவனாய், அவர்களிலும் மேற்பட்ட போ₄க₃ங்களை யுடைய புருஷனே. கைவல்யார்த்தி₂க்கே அநுஸந்தி₄க்கத்தக்க ப்ர க்ருதிவியுக்தாத்மஸ்வரூபமாகிற புருஷன், இங்கு புருஷஶப்₃த₃த்தால் குறிக்கத்தக்கவனல்லன்; இங்கு சொல்லப்படும் ஐஶ்வர்யம் மிகச் சிறந்த அசித₃நுப₄வமேயாகையால், இந்தப் புருஷன், தாழ்வுக ளற்றதாய், மிகச்சிறந்த அசித₃நுப₄வத்தையுடைய பிரமனோ, அல்லது அவனுக்கு ஸமானமான போ₄க₃த்தையுடைய ஒருவனோ ஆகவேண்டும். ஐஶ்வர்யார்த்தி₂யான இவ்வுபாஸகன் தன்னிலும் வேறுபட்ட அப்புருஷனாகவே ஆகமுடியாதாகையாலும், அவனையொத்த போ₄க₃மே இவன் விரும்புவதாகையாலும், இங்கு புருஷஶப்₃த₃ம் பா₄வப்ரதா₄னமாய், ஐஶ்வர்யார்த்தி₂க்கு ப்ராப்யமான அத்தகைய புருஷனின் நிலையைக் குறிக்கிறது. ஆக, "அதி₄தை₃வ மென்பது புருஷனே" என்றதால், இந்திரன், ப்ரஜாபதிகள் முதலான தே₃வதைகளுக்கு மேலேயிருப்பவனாய், அவர்களைக் காட்டிலும் மேலான போ₄க₃ங்களை உடையவனான பிரமன் அல்லது அவனை ஒத்த போ₄க₃ங்களையுடையானொரு புருஷனின் போ₄க்த்ருத்வாவஸ்தை₂யே (போ₄க₃நிலையே) இங்கு ஐஶ்வர்யார்த்தி₂களால் ப்ராப்யமாக அநு

सन्धेया। अधियज्ञोऽहमेव [—अधियज्ञशब्दनिर्दिष्टोऽहमेव]। अधियज्ञः—यज्ञैराराध्यतया वर्तमानः। अत्र इन्द्रादौ मम देहभूते आत्मतयाऽवस्थितोऽहमेव यज्ञैराराध्य इति महायज्ञादिनित्यनैमित्तिकानुष्ठानवेलायां त्रयाणामधिकारिणामनुसन्धेयमेतत्॥ ४॥

ஸந்தி4க்கத்தக்கது என விளங்குகிறது ''அண்டக்குலத்துக்கு அதிபதியாகி'' [திருப்பல்லாண்டு-5] என்னும் பாசுரத்தில், ஐஶ்வர்யார்த்திகள் அண்டா3தி4பதியான பிரமனின் பே4ாக3த்தை விரும்பி ''அண்டா3தி4பதயே நம:'' என்னும் கரணமந்திரத்தாலே அண்டக் குலத்திற்கு அதி4பதியான எம்பெருமானை உபாஸிப்பதாகப் பெரியாழ்வார் அருளியதும் இங்கு காணத்தக்கது. ஆக, ஶ்லோகத்தின் முற்பாதியாலே, இந்திரன் முதலான தே3வர்களுக்கு மேலே விளங்கும் அண்டா3தி4பதியான பிரமனின் நிலையும், அவன் அனுப4விக்கும் ஶப்3தா3தி3பே4ாக3ங்களும் ஐஶ்வர்யார்த்திகளால் ப்ராப்யமாக அநுஸந்தி4க்கத்தக்கவை என்று காட்டப்பட்டது. இனி, பிற்பாதியாலே, மூவகை அதி4காரிகளுக்கும் பொதுவான அதி4யஜ்ஞத்தைப் பற்றிய இரு கேள்விகளுக்கு பதில் கூறுகிறான், – (அதி4யஜ்ஞ: அஹமேவ) அதி4யஜ்ஞம் எனப்பட்டவன் நானே. '' அதி4யஜ்ஞ: க: '' என்னும் கேள்விக்கு இது பதிலாகிறது. இனி, ''கத2ம்'' [அதி4யஜ்ஞம் எனப்படுகிறவனுக்கு அத்தன்மை எப்படி வந்தது ?] என்ற இரண்டாவது கேள்விக்கு பதில் 'அதி4யஜ்ஞ' ஶப்3த3த்தை ஆராய்ந்தால் விளங்கும். எப்படியெனில்: யஜ்ஞத்தோடு தொடர்புகொண்டவன் அதி4யஜ்ஞம் எனப்படுகிறான். ஸர்வேஶ்வரனான நான் யஜ்ஞங்களோடு ஆராத்4யனாக (ஆராதி4க்கப்படுபவனாகத்) தொடர்புகொண்டவனாகையால் ' அதி4யஜ்ஞம் ' எனப்படுகிறேன் என்று கருத்து. ''இந்திரன் முதலான தே3வர்களன்றோ யஜ்ஞங்களால் ஆராதி4க்கப்படுபவர்களாக அந்தந்த வேத3வாக்யங்களில் குறிக்கப்படுகிறார்கள்; அப்படியிருக்க, நீயே யஜ்ஞங்களால் ஆராதி4க்கப்படுபவன் என்பது எப்படி ?'' எனில், – (அத்ர தே3ஹே) * என்னுடைய தே3ஹமாகவே அவ்விந்திரன் முதலானோர் இருக்கையாலே, அவர்களுக்கு உள்ளே அந்தர்யாமியாயிருக்கும் நானே, யஜ்ஞங்களால் ஆராதி4க்கப்படும் அதி4யஜ்ஞம் என்னக் குறையில்லை என்றபடி.

---

* பக்கம் 165-ல் 32-வது வரியில் 'எனது' என்பதை 'உனது' என்றும், 36-வது வரியில் 'எனக்கு' என்பதை 'உனக்கு' என்றும் திருத்திக்கொள்க.

''அதி₄யஜ்ஞோऽஹமேவ அத்ர தே₃ஹே'' என்று சொல்லுகிறவன் ஸர்வேஶ்வரனான கண்ணன். ஆகையால், 'அத்ர தே₃ஹே' என்றது அவனுடைய தே₃ஹத்தைப்பற்றியதாகவேயிருக்கவேண்டும். 'அதி₄யஜ்ஞம்' என்று யஜ்ஞப்ரஸ்தாவம் வந்திருக்கையாலும், ''யஜ - தே₃வ பூஜாயாம்'' என்று த₄ாதுபாட₂ம் இருக்கையாலும், இங்கு தே₃ஹமாகக் கூறப்படுகிறவர்கள், யஜ்ஞங்களால் பூஜிக்கப்படுகிறவர்களாகப் பிரஸித்₃தி₄ பெற்ற இந்திரன் முதலான தே₃வர்கள் என்று கொள்வதே பொருத்தம்; ''யோ யோ யாம் யாம் தநும்'' [கீ₃தை 7-21] என்னுமிடத்தில் இந்திரன் முதலான தெய்வங்களைத் தன் தே₃ஹமாகக் கண்ணனே சென்ற அத்தியாயத்தில் கூறியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது. ஸம்ஸாரி ஜீவர்களுக்குக் கர்மத்தால் ஏற்பட்ட அநித்யமான ஶரீரம்போல் அல்லாமல், எப்போதும் பரமாத்மாவுக்கு இவ்விந்திரன் முதலான தெய்வங்கள் இயற்கையாகவே ஶரீரமாயுள்ளன என்பதை '' மம தே₃ஹபூ₄தே '' என்னும் பத₃த்தினால் காட்டினார் ப₄ாஷ்யகாரர். (அஹமேவ) என்னும் ஏவகாரத்தாலே, வேதா₃ந்தஜ்ஞாநமில்லாதார் இந்திராதி₃களையே யஜ்ஞங்களால் ஆராதி₄க்கப்படுபவராக நினைப்பது தவறு; உண்மையில் அவர்களுக்கு அந்தர்யாமியான தானே யஜ்ஞங்களால் ஆராதி₄க்கப்படுபவன் என்று காட்டுகிறான். ''ஸ ஆத்மா! அங்கா₃ந்யந்யா தே₃வதா:'' [தைத்ரீக்ஷா-5] [அப்பரமபுருஷனே ஆத்மாவாயிருப்பவன். மற்ற தெய்வங்கள் அவனது அங்க₃ங்களாயிருப்பவை.] ''விஷ்ணு: ஸர்வா தே₃வதா:'' [ஐதரேயப்₃ராஹ்மணம்] [விஷ்ணுவே எல்லா தே₃வதைகளுக்கும் அந்தர்யாமி] என்று வேத₃மும் ஓதிற்றன்றோ. முன் சொல்லப்பட்ட 'ப்₃ரஹ்ம', 'அத்₄யாத்மம்', 'கர்ம' 'அதி₄பூ₄தம்', 'அதி₄தை₃வம்' ஆகியவைபோலே அதி₄யஜ்ஞம் வேறு தத்வமல்ல; நானேயாகிறேன் என்று 'அஹமேவ' என்னும் ஏவகாரம் காட்டுகிறதாகவும் கொள்ளலாம். ஆக, ஶரீரமான இந்திரன் முதலான அந்தந்த தே₃வதைகளோடு கூடிய ஆத்மாவான நாராயணனே யஜ்ஞங்களால் ஆராதி₄க்கப்படுபவன் என்று தேறுகையால், ''அதி₄யஜ்ஞ: கத₂ம்'' [அதி₄யஜ்ஞம் எனப்படும் தத்துவத்திற்கு அதி₄யஜ்ஞத்தன்மை எப்படி வந்தது ?] என்னும் கேள்விக்கு பதிலிறுக்கப்பட்டதாயிற்று. (தே₃ஹப்₄ருதாம் வர) சிறந்த தே₃ஹத்தை உடையவனே! ஸத்வகு₃ணத்தை மிகுதியாகக் கொண்டவனாகையாலே, ரஜஸ்தமங்கள் மிகுந்த ஸாமாந்யஜனங்களைப்போலே இந்திரன் முதலானோரை மாத்திரம் யஜ்ஞங்களால் ஆராதி₄க்கப்படுபவராகக் கொள்ளாமல், அவர்களுக்கு

अन्तकाले च मामेव स्मरन् मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥ ५ ॥

5. அந்தகாலே ச மாமேவ ஸ்மரந் முக்த்வா களேப₃ரம் ।
ய: ப்ரயாதி ஸ மத்₃பா₄வம் யாதி நாஸ்த்யத்ர ஸம்ஶய: ॥

அந்தகாலே ச — (தான் விரும்பிய பலனைப்பெறும்) கடைசிக்காலத்திலும், ய:—எவனொருவன், மாம் ஏவ ஸ்மரந்—(தான் விரும்பிய நிலையோடு கூடிய) என்னையே நினைத்துக்கொண்டு, களேப₃ரம் த்யக்த்வா ப்ரயாதி — தே₃ஹத்தை விட்டுச்செல்கிறானோ, ஸ: — அவன், மத்₃பா₄வம் யாதி — அந்த எனது நிலையையே அடைகிறான். அத்ர—இவ்விஷயத்தில், ஸம்ஶய: ந அஸ்தி—ஐயமில்லை.

---

5. அந்தகா லத்திலு மாங்கென்னை யேநினைந்திங்
கிந்த வுடலினைவிட் டேகுமவன்—சிந்தைநிகழ்
என்றன்மை தானெய்து மீங்கிதனிற் சங்கைசேர்
தன்றன்மை யொன்றில்லை தான்.

அந்தர்யாமியான என்னையே நீ ஆராத்₄யனாகக் கொள்ளவேணும் என்று கருத்து. உனக்குச் சிறந்ததொரு தே₃ஹம் அமைந்திருப்பது போலே, எனக்கு இந்திரன் முதலானோர் சிறந்த தே₃ஹமாவர் என்று காட்டுவதற்காக இப்படி விளிப்பதாகவும் கொள்ளலாம். அதி₄யஜ்ஞத்தைப் பற்றிய இவ்வறிவு, யஜ்ஞங்களை அநுஷ்டி₂ப்பார் அனைவர்க்கும் வேண்டியதாகையாலே, இது மூவகை அதி₄காரிகளுக்கும் பொதுவானது என விளங்குகிறது. ''ஸந்த்₄யாஹீநோ ऽஶுசிர் நித்யம் அநர்ஹ: ஸர்வகர்மஸு'' [ஸந்த்₄யாவந்த₃னம் செய்யாதவன் எப்போதும் அஶுத்₃த₄ன்; எக்கர்மத்தையும் செய்யத் தகாதவன்] முதலான ஶாஸ்த்ரவசனங்கள் பஞ்சமஹாயஜ்ஞங்கள் முதலான நித்யநைமித்திக கர்மங்களைச் செய்யாவிடில், எக்கர்மமும் பயனளிக்காது என்று கூறுகையாலே, அதி₄யஜ்ஞத்தைப்பற்றிய இவ்வநுஸந்தா₄நம், மூவகை அதி₄காரிகளுக்கும் நித்யநைமித்திக கர்மங்களைச் செய்யும் போது அவஶ்யம் வேண்டியது என விளங்குகிறது. ஆக, 'ஐஶ்வர்யார்த்தி₂களைப் பற்றிய இரு கேள்விகளுக்கும், மூவகை அதி₄காரிகளுக்கும் பொதுவான அதி₄யஜ்ஞத்தைப்பற்றிய இரு கேள்விகளுக்கும் பதிலிறுக்கப்பட்டதாயிற்று. 4.

॥ भा ॥ इदमपि त्रयाणां साधारणम्। अन्तकाले च मामेव स्मरन् कलेवरं त्यक्त्वा यः प्रयाति; स मद्भावं याति—मम यो

அந்த காலத்திலும்—(தான் விரும்பிய ப₂லனைபபெறும்) கடைசிக்காலத்திலும், ஆங்கு என்னையே நினைந்து—(தான் விரும்பிய நிலையோடு கூடிய) என்னையே நினைத்து, இந்த் உடலினை இங்கு விட்டு ஏகுமவன்—இவ்வுடலை இங்கு விட்டுச் செல்பவன், சிந்தை நிகழ் என் தன்மைதான் எய்தும்—தான் நினைத்த அந்த எனது நிலையையே அடைவான் ஈங்கு இத னில் சங்கை சேர் தன் தன்மைதான் ஒன்று இல்லை—இங்கு இவ் விஷயத்தில் தான் ஐயமுறுவதற்குச் சிறிதும் இடமில்லை.

---

5. இவ்வத்தியாயத்தின் முதல் ஒன்றரை ஶ்லோகத்தாலே அர்ஜுனன் கேட்ட கேள்விகளுக்கு இதுவரையில் கண்ணனால் பதி லளிக்கப்பட்டது. இரண்டாவது ஶ்லோகத்தின் பிற்பாதியில் "ப்ர யாணகாலே" என்று தொடங்கி, அந்திமஸ்ம்ருதி விஷயமாகக் கேட்ட கேள்விக்குச் சுருக்கமாக பதிலளிக்கிறான் இந்த ஶ்லோ கத்தில். இதுவும் மூவகை அதி₄காரிகளுக்கும் பொது என்பது "நியதாத்மபி₄:" [8-2] என்று கேள்வி கேட்கும்போது பன்மை யாலே விளக்கப்பட்டது. அதி₄யஜ்ஞபத₃ார்த்த₂ஸ்வரூபத்தை ஆராய்ந் தால் அது மூவர்க்கும் பொதுவானது என விளங்குவதுபோலே, இந்த ஶ்லோகத்தில் சொல்லப்படும் அந்திமஸ்ம்ருதிபத₃ார்த்த₂ஸ்வ ரூபத்தை ஆராய்ந்தாலும் அது மூவர்க்கும் பொது என விளங்கும். (அந்த காலே ச) கடைசிக்காலத்திலும்; இங்கு, அவரவர்க்கு ப்ராப்ய விரோதி₄பாபங்களெல்லாம் கழிந்து, ப₂லம் பெறும் தருவாயிலுள்ள மரணகாலத்தைக் காட்டுகிறது. (மாமேவ ஸ்மரந்) தாம் தாம் விரும்பும் ப₂லனுக்கு அநுரூபமான நிலையோடு கூடியவனாக என்னையே நினைப்பவனாய். (ய: களேப₃ரம் முக்த்வா ப்ரயாதி) எவனொருவன் அந்த ஶரீரத்தை விட்டுச் செல்கின்றானோ. (ஸ மத்₃ பா₄வம் யாதி) அவன் அந்த எனது நிலையை அடைகிறான். இங்கு 'நானாகவே ஆகிறான்' என்று ஸ்வரூபைக்யபரமாகப்பொருள் கொள்வது ஶ்ருதி முதலான ப்ரமாணங்களோடு முரண்படும்; 'ப்₄ரமரகீடந்யாயத்தாலே ஈஶ்வரனை ஒத்த தன்மையை உடையவனா கிறான்' என்று கொண்டாலும், பல ஈஶ்வரர்கள் உண்டாகையாகிற தோ₃ஷம் ஏற்படும். மூவகை அதி₄காரிபே₄த₃மும் ஸித்₃தி₄க்காது.

भावः-स्वभावः तं याति; तदानीं यथा मामनुसन्धत्ते, तथाविधाकारो भवतीत्यर्थः; यथा आदिभरतादयस्तदानीं स्मर्यमाणमृगसजातीयाकारास्संभूताः ॥ ५ ॥

॥ भा ॥ स्मर्तुस्स्वविषयसजातीयाकारतापादनमन्तिमप्रत्ययस्य स्वभाव इति सुस्पष्टमाह—

यं यं वाऽपि स्मरन् भावं त्यजत्यन्ते कलेवरम्।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः॥ ६ ॥

6. யம் யம் வாऽபி ஸ்மரந் ப₄ாவம் த்யஜத்யந்தே களேப₃ரம் ।
தம் தமேவைதி கௌந்தேய! ஸதா₃ தத்₃ப₄ாவப₄ாவித: ॥

ஆகையால், " மம யோ ப₄ாவ: மத்₃ப₄ாவ: " என்னும் வ்யுத்பத்தியாலே "எனது நிலையை அடைகிறுன்" என்று பொருள் கொள்ள வேண்டும். சரீரம் விடும்போது, தான் விரும்பிய எந்த நிலையோடு கூடியவனுய் என்னை உபாஸித்தானே, அந்த நிலையையே அடைகிறுன் என்றபடி. மூவகை அதி₄காரிகளுக்கும் ஈஶ்வரனேடு ஸ்வரூபம் வேருயிருக்கச்செய்தே, ப₂ல த₃ஶையில் தாங்கள் விரும்பிய ஒவ்வொரு வகையிலே ஈஶ்வரனேடு ஸாம்யத்தை அடைகிருர்கள்; ஐஶ்வர்யார்த்தி₂ ஈஶ்வரனேடு ஐஶ்வர்ய விஷயத்தில் ஒரு வகையில் ஸமனுகிறுன்; கைவல்யார்த்தி₂ ' அபஹதபாப்மத்வம் ' முதலான எட்டு கு₃ணங்கள் தன் ஆத்மாவில் விளக்கமடைவதாகிற வகையில் ஈஶ்வரனேடு ஸமனுகிறுன். ஜ்ஞாநியோவெனில், இத்தோடன்றியில் ஈஶ்வர ஸ்வரூபரூபகு₃ணவிபூ₄திகளை அநுப₄விப்பதிலும் ஈஶ்வரனேடு ஸமனுகிறுன். அவனுக்கும் ஈஶ்வரனுக்கேயுள்ள ஜக₃த்ஸ்ருஷ்டி முதலானவை கிடையாது — என்று கண்டு கொள்வது. (அத்ர ஸம்ஶய: நாஸ்தி) இவ்விஷயத்தில் ஐயமே கிடையாது; ஆதி₃ ப₄ரதன் முதலானேர் அந்த காலத்தில் மானையே நினைத்திருந்ததினுல் மானுகவே ஆனுர்கள் என்பது ஶாஸ்த்ரங்களில் ப்ரஸித்₃த₄மன்ருே. இந்த விருத்தாந்தத்திலிருந்து, அந்திமஸ்ம்ருதியால் ஸ்வரூபைக்யம் ஏற்படும் என்னும் மயக்கமும் தவிர்க்கப்படுகிறது. ஜட₃ப₄ரதன் அந்தகாலத்தில் மானை நினைத்ததினுல் அந்த மானுகவே ஆகிவிடவில்லையே; அதுபோன்றதான வேருெரு மானுகத்தானே ஆனுன். ஆக, அந்திமஸ்ம்ருதி விஷயமான கேள்விக்குச் சுருக்கமாக பதிலுரைக்கப்பட்டதாயிற்று.

கௌந்தேய—அர்ஜுந! அந்தே—கடைசிக் காலத்தில், யம் யம் வாபி ப₄ாவம் ஸ்மரந் களேப₃ரம் த்யஜதி — எந்த எந்த நிலையை நினைத்துக்கொண்டு ஶரீரத்தை விடுகிறானோ, தம் தம் ஏவ ஏதி — அந்தந்த நிலையையே அடைகிறான். (ஏனெனில்:) ஸதா₃ தத்₃ப₄ாவப₄ாவித: — எப்போதும் அந்த நிலையிலேயே நினைவைச் செலுத்தினவனன்றோ (அவன்).

---

6. தானெந்த வெந்தப் பொருளுன்னித் தன்முடிவி
லூன்வந்த வாக்கை யொழித்தேகுந்—தானந்த
வந்தவது தன்னையே யாங்கணையு மெக்காலுஞ்
சிந்தையது செய்தலினாற் சேர்ந்து.

தன் முடிவில்—தனக்கு மரணம் வந்தபோது, தான் எந்த எந்தப் பொருள் உன்னி—தான் எந்த எந்த நிலையை நினைத்துக்கொண்டு, ஊன் வந்த ஆக்கை ஒழித்து ஏகும்—மாம்ஸமயமான சரீரத்தை விட்டுப் போகிறானோ, தான் அந்த அந்த அதுதன்னையே ஆங்கு அணையும் — அந்த அந்த நிலையையே அடுத்தபடி அடைவான். எக்காலும் அது சேர்ந்து சிந்தை செய்தலினால்—எப்போதும் அந்நிலையிலேயே நினைவைச் செலுத்தியவனாகையாலே.

---

6. ஈஶ்வரன் விஷயமான அந்திமஸ்ம்ருதி, அவரவர் விரும்பும் வகையில் ஈஶ்வரனோடு ஸாம்யத்தை விளைக்கும் என்று சென்ற ஶ்லோகத்தில் சொன்னான்; இது ஈஶ்வர விஷயத்தில் மட்டுமல்ல; கடைசிக்காலத்தில் எந்த விஷயத்தை மனிதன் நினைத்தாலும், அவ்வந்திமஸ்ம்ருதியானதுதானே அடுத்த பிறப்பில் அவ்விஷயம் போன்றதொரு நிலையை அவனுக்கு விளைத்துவிடும் என்று கூறுவதன் மூலம் சென்ற ஶ்லோகத்தை விவரிக்கிறான் இங்கு. (அந்தே) அந்த காலத்தில். சென்ற ஶ்லோகத்தில் "அந்தகாலே" என்று சொல்லப் பட்டதையே, இங்கு 'அந்தே' என்கிறான். (யம் யம் வாऽபி ஸ்மரந்) எதை எதை நினைத்துக்கொண்டு. 'யம் யம்' என்ற வீப்ஸையால் இன்னதைத்தான் நினைக்கவேண்டும் என்னும் நியமமில்லை என்று காட்டப்படுகிறது. (வா அபி) என்னும் பத₃ங்களாலே நினைக்கப் படுவதின் உயர்வுதாழ்வுகளைப் பற்றியும் ஒரு நிர்ப₃ந்த₄மில்லை என்று காட்டப்படுகிறது. (தம் தமேவ) அதை அதையே. 'தம் தம்' என்னும் வீப்ஸையால் ஒன்றை நினைத்தவன் வேறொன்றை

॥ भा ॥ अन्ते — अन्तकाले यं यं वापि भावं स्मरन् कलेवरं त्यजति, तं तं भावमेव मरणानन्तरमेति। अन्तिमप्रत्ययश्च पूर्वभावित-विषय एव जायते॥ ६॥

அடைவதென்பதில்லை, அதையே அடைகிருன் என்று காட்டப்படுகிறது. 'ஏவ'காரத்தாலே ப்ரப3லமான வேறு புண்யமிருந்தாலும், அது இதைத் தடைசெய்ய முடியாது; அடுத்த பிறவியில் முன் நினைத்த பொருளைப்போல் ஆனபின்பே, அப்புண்யத்தின் பலன் ஏற்படும் என்று காட்டுகிறது. மஹாபுண்யஶாலியான ஜட3ப4ரதன் அடுத்த பிறவியில் மானுகி, அதற்கடுத்த பிறவியிலேயே புண்ணியத்தின் பயனுக உயர்பிறவியை அடைந்தான் என்பது காணத்தக்கது. (யம் யம் ப4ாவம் அந்தே ஸ்மரந் களேப3ரம் த்யஜதி தம் தமேவ ஏதி) கடைசிக்காலத்தில் எந்த எந்த நிலையை நினைத்துக்கொண்டு உடலை விடுகிருனே, அந்த அந்த நிலையையே அடைகிருன். இங்கு 'ப4ாவ' ஶப்3த3ம் பத3ார்த்த2ங்களைக் குறிப்பதாகக்கொண்டால், அந்தப் பத3ார்த்த2த்தை அடுத்த பிறவியில் அடைவதாகவோ, அல்லது அதோடு ஸ்வரூபைக்யம் அடைவதாகவோ கொள்ளவேண்டிவரும்; ஜட3ப4ரதன் தான் நினைத்த மானையோ, அதோடு ஸ்வரூபைக்யத்தையோ அடையவில்லையாகையால், இது பொருந்தாது. மேலும், ஸ்வரூபைக்யம், "அந்யத் த்3ரவ்யம் ஹி நைதி தத்3த்3ரவ்யதாம் யத:" [வி-பு 2-14-27] [ஒரு பொருள் மற்றொரு பொருளாக ஆகமுடியாதன்றே] என்கிற ரீதியில் ப்ரமாணங்களுக்கும் யுக்திகளுக்கும் பொருந்தாது. இதைத் தவிர்ப்பதற்காக, 'தம் தமேவ' என்றதற்கு லக்ஷணையாக 'அவ்வப்பொருள்போன்றதாக ஆகிருன்' என்று பொருள் கொள்ளவேண்டிவரும். ஆகையால், முன் ஶ்லோகத்திற்போலே 'ப4ாவ' ஶப்3த3ம் அந்தந்தப் பொருள்களின் நிலையையே குறிப்பதாகக்கொள்வது பொருத்தம். முன் பிறவியில் ஒரு நிலையையுடைய பொருளை நினைத்தவன், மறு பிறவியில் அதே நிலையையுடையவனுக ஆகிருன் என்று பொருள். (தம் தமேவ ஏதி) என்னும் ஏவகாரத்தாலே ஏதோவொரு ஜன்மத்திலல்லாமல் அடுத்த பிறவியிலேயே அந்நிலையை அடைவதைக் காட்டுகிறது. ஆதி3ப4ரதன் அடுத்த பிறவியிலேயே மானுனதை நினைப்பது. இப்படி நினைத்த நிலையையே உடையவனுவதற்குக் காரணமென்னவெனில்: (ஸதா3 தத்3ப4ாவ ப4ாவித:) எப்போதும் இவன் அந்த நிலையிலேயே நினைவைச் செலுத்தினனன்றே; அந்திமஸ்ம்ருதி வரையில் நீடித்த அந்நினைவே இவனை அந்நிலையை அடைவிக்கிறது என்று கருத்து. (தத்3ப4ாவ ப4ாவித:) 'அந்த நிலையின் ப4ாவனையின்

तस्मात्सर्वेषु कालेषु मामनुस्मर युध्य च।
मय्यर्पितमनोबुद्धिः मामेवैष्यस्यसंशयः॥७॥

7. தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு மாமநுஸ்மர யுத்₄ய ச ।
மய்யர்ப்பிதமநோபு₃த்₃தி₄: மாமேவைஷ்யஸ்யஸம்ஶய: ॥

தஸ்மாத்—ஆகையால், **ஸர்வேஷு காலேஷு**—(மரணமடையும் வரையில்) எல்லாக்காலத்திலும், **மாம் அநுஸ்மர**—என்னையே நினைப்பாயாக; **யுத்₄ய ச**—யுத்₃த₄மும் செய்வாயாக; **மய்யர்ப்பிதமநோபு₃த்₃தி₄:** — (இவ்வண்ணம்) என்னிடமே செலுத்தப்பட்ட நெஞ்சையும் அறிவையும் உடையவனாய், **மாம் ஏவ ஏஷ்யஸி**—என்னையே (நீ விரும்பிய வகையில்) அடைவாய்; **அஸம்ஶய:**—இவ்விஷயத்தில் ஐயமில்லை.

---

7. ஆதலா லெக்காலு மங்ஙனெனை நின்றுநினை
நீதறுசீர் வெஞ்சமத்தைச் செய்குதிநீ—காதலா
லென்பான் மனம்புத்தி யேய்ந்தா னெனையடையுந்
தன்பாலோர் சங்கையறச் சார்ந்து.

ஆதலால் — முற்கூறிய காரணத்தால், **எக்காலும்** — (மரணமடையும் வரை) எல்லாக்காலத்திலும், **அங்ஙன்**—முற்கூறிய மூன்று வகைகளில் ஒரு விதமாக, **எனை** — என்னை, **நின்று நினை** — நிலையாக நினைப்பாயாக; **நீ**—நீ **தீது அறு சீர் வெம் சமத்தை**—(க்ஷத்ரியனுக்கு) குற்றமற்றதாய், பெருமையையுடைய கடும்போரை, **செய்குதி** — செய்வாயாக, **காதலால்** — அன்போடுகூட, **என்பால்**—என்னிடம், **மனம் புத்தி ஏய்ந்தான்** — மனத்தையும் அறிவையும் செலுத்தியவன், **தன்பால் ஓர் சங்கை அற சார்ந்து**—தான் பலன் பெறுவதுபற்றி ஓர் ஐயமும் இல்லாமல ஸாத₄னத்தை அநுஷ்டித்து, **எனை அடையும்** — (தான் விரும்பிய வகையில்) என்னை அடைவான்.

(தியானத்தின்) வாஸனையை உடையவன்' என்றோ, 'அந்நிலையில் நினைவைச் செலுத்தினவன்' என்றோ பொருள்கொள்ளலாம். (கௌந்தேய) என்னையே நினைக்க விரும்பும் குந்தியின் புத்திரனை நீ. என் விஷயமான அநவரதப₄ாவனையை உடையவனாகவேணும் என்று கருத்து. ஆக, அந்திமஸ்ம்ருதி பற்றிய பொதுவான விளக்கம் இந்த ஶ்லோகத்தில் தரப்பட்டதாயிற்று. 6.

॥ भा ॥ यस्मात् पूर्वकालाभ्यस्तविषय एवान्तिमप्रत्ययो जायते, तस्मात् सर्वेषु कालेष्वाप्रयाणादहरहर्मामनुस्मर। अहरहरनुस्मृतिकरं

---

7. இவ்வண்ணமாக, தான் விரும்பும் ப₂லம்பெறுவது அந்திம ஸ்ம்ருதியை அபேக்ஷித்திருக்கிறதென்றும், அந்த அந்திமஸ்ம்ருதி அப்பலனையே எப்போதும் தியானிப்பதால் ஏற்படுவது என்றும் சொல்லப்பட்டது. ஆகையால், நீயும் சிறந்த விஷயமான என்னைப் பற்றிய அந்திமஸ்ம்ருதியைப் பெறுவதற்காக, என்னைப் பற்றிய ப₄ாவனையையும், அதை விளக்கும் க்ஷத்ரியத₄ர்மமான யுத்₃த₄த்தை யும் செய்யவேண்டும் என்று கூறுகிறான் இந்த ஶ்லோகத்தில். (தஸ்மாத்) ஆகையாலே; முற்காலத்தில் பழகிய விஷயத்திலேயே அந்திமஸ்ம்ருதி ஏற்படுகிறது என்னும் காரணத்தால் என்றபடி. (ஸர்வேஷு காலேஷு மாம் அநுஸ்மர) எல்லாக் காலங்களிலும் சிறந்த விஷயமான என்னையே நினைப்பதாகிற ப₄ாவனை (உபாஸ ஸனை)யைச் செய். இப்படி என் விஷயமான அநவரதப₄ாவனை செய்தால், கடைசிக்காலத்தில் என் விஷயமாகவே அந்திமஸ்ம்ருதி ஏற்படும் என்று கருத்து. ''ஸ க₂ல்வேவம் வர்த்தயந் யாவதா₃யுஷம் ப்₃ரஹ்மலோகமபி₄ஸம்பத்₃யதே'' [சா₂ந் 8-15-1] [அந்த உபாஸகன் இவ்வண்ணமாகவே சரீரம் முடியும் வரையில் வாழ்ந்தானாகில், ப்₃ரஹ்ம லோகத்தை அடைகிறான்] '' ப்ராயணாந்தமோங்காரமபி₄த்₄யாயீத '' [ப்ரஶ்ந 5-1] [சரீரத்தை விடும் வரையில் ஓங்காரத்தை தியானிக்கக் கடவன்.] என்னும் ஶ்ருதிகளை ஒட்டி '' ஸர்வேஷு காலேஷு '' என்னும் பத₃ங்கள் ஶரீரம் முடியும் வரையில் உள்ள காலத்தைக் காட்டுகின்றன. ''ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்₃ருஷ்டம்'' [4-1-12] [சரீரம் முடியும் வரை உபாஸநம் செய்யவேண்டும் ; ஏனெனில்: ஶாஸ்த்ரவசனமும் அப்படியே காணப்படுகிறது.] என்று ஸூத்ரகார ரும் இவ்வர்த்த₂த்தையே அருளினார். '' ஸர்வேஷு காலேஷு '' என்னும் பன்மையாலே, மரணம் வரையில்—மாஸத்துக்கோ, பக்ஷத் துக்கோ ஒரு முறையல்லாமல், தினந்தோறும் உபாஸிக்கவேண்டும் என்று உணர்த்தப்படுகிறது. அதிலும், ''தம் பூர்வாபரராத்ரேஷு யுஞ்ஜாந:'' [அவனை விடியற்காலையில் விழித்தெழும்போதும், இரவில் படுக்கச்செல்லும்போதும் சிந்திக்கவேண்டும்] முதலான வசனங்களில் சொல்லப்பட்ட ரீதியில் ஸத்வகு₃ணம் மிகுந்த எல்லாக் காலங்களிலும் உபாஸிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டதாயிற்று. ''யத்ரை காக்₃ரதா தத்ராவிஶேஷாத்'' [4-1-11] [வேறு தே₃ஶகாலங்களைக் குறிப்பிட்டுச் சொல்லாமையால், எந்த தே₃ஶகாலங்களில் உபா ஸநம் ஒருமுகப்படுமோ, அந்த தே₃ஶகாலங்களில் (உபாஸநம் செய்யவேண்டும்.)] என்று ப்₃ரஹ்மஸூத்ரகாரரும் அருளினார்.

युद्धादिकं वर्णाश्रमानुबन्धि श्रुतिस्मृतिचोदितं नित्यनैमित्तिकं च कर्म कुरु। एवमुपायेन मय्यर्पितमनोबुद्धिः अन्तकाले च मामेव स्मरन् यथाभिलषितप्रकारं मां प्राप्स्यसि; नात्र संशयः॥७॥

இப்படி எல்லாக் காலத்திலும் பரமபுருஷனை நினைப்பதாகிற உபாஸநம் மிகவும் செயற்கரிதாயிருக்கிறதே என்னும் கேள்வியெழ, அந்தந்த வர்ணாஶ்ரமங்களுக்குரிய யுத்₃த₄ம் முதலான கர்மங்களை முற்கூறியபடி த்ரிவித₄பரித்யாக₃ங்களோடு செய்துவந்தால், உபாஸநம் தன்னடையே ஸித்₃தி₄க்கும் என்று காட்டுகிருன் மேலே,—(யுத்₄ய ச) 'யுத்₄யஸ்வ ச' என்றதாய், 'யுத்₃த₄ம் செய்வாயாக' என்று பொருள்படுகிறது இங்கு யுத்₃த₄ம் என்றது உபலக்ஷணமாய், அந்தந்த வர்ணாஶ்ரமங்களுக்குரியதாய், ஶ்ருதிஸ்ம்ருதிகளில் விதி₄க்கப்பட்ட நித்ய நைமித்திக கர்மங்கள் அனைத்தையும் காட்டுகிறது. "மாமநுஸ்மர" என்று முதலில் உபாஸனத்தைச் சொல்லி, "மாமேவைஷ்யஸி" என்று கடைசியில் அதற்குப் ப₂லம் சொல்லியிருக்கையாலே, "யுத்₄ய ச" என்று நடுவே தனிப்ப₂லன் இல்லாமல் படிக்கப்பட்டிருக்கும் யுத்₃த₄ம் முதலான வர்ணாஶ்ரமத₄ர்மங்கள்—"ப₂லவத்ஸந்நிதௌ₄ அப₂லம் தத₃ங்க₃ம்" [ப₂லனையுடைய ஒரு காரியத்தின் அருகில் ப₂லனில்லாமல் மற்றொரு காரியம் விதி₄க்கப்பட்டிருந்தால் பிந்தியது முந்தியதற்கு அங்க₃ம்] என்னும் மீமாம்ஸா நியாயத்தின்படி, இங்கு ப₂லனோடு படி₂க்கப்பட்டிருக்கும் உபாஸநத்திற்கு அங்க₃மாய் நின்று அதை விளைப்பவை என்று தேறுகிறது. இனி, இவ்வுபாஸனத்தினுல் அடையும் ப₂லனை விளக்குகிறது ஶ்லோகத்தின் பிற்பகுதி,— (மய்யர்ப்பித மநோபு₃த்₃தி₄:) முற்கூறியபடி மூன்று வித₄மான பரித்யாக₃ங்களுடன் யுத்₃த₄ம் முதலானவற்றை அநுஷ்டி₂க்கையாகிற கர்மயோக₃மாகிற உபாயத்தாலே, என்னிடம் மனத்தை அர்ப்பணம் செய்வதாகிற உபாஸனத்தையும், என்னிடம் பு₃த்₃தி₄யை அர்ப்பணம் செய்வதாகிற 'இவனே ப₂லனையளிக்கும் உபாயம்' என்னும் உறுதியையும் பெற்றவன் என்றபடி. இப்படிக் கொள்ளும்போது, 'அந்திம காலத்திலும் என்னையே நினைப்பவன்' என்னும் அர்த்த₂ம் ப்ரகரண ஸித்₃த₄மாக ஏற்படும். அன்றிக்கே, "மாமநுஸ்மர யுத்₄ய ச" என்று பூர்வார்த்த₄த்திலேயே கர்மத்தை அங்க₃மாகக்கொண்ட உபாஸனமாகிற உபாயம் சொல்லப்பட்டு விட்டபடியால், "மய்யர்ப்பித மநோ

॥ भा ॥ एवं सामान्येन स्वप्राप्त्यावाप्तिरन्तिमप्रत्ययाधीनेत्युक्त्वा तदर्थं त्रयाणामुपासनप्रकारभेदं वक्तुमुपक्रमते ; तत्र ऐश्वर्यार्थिनामुपासनप्रकारं यथोपासनमन्तिमप्रत्ययप्रकारं चाह—

பு$_3$த்$_3$தி$_4$:'' என்று அந்திமஸ்ம்ருதியே சொல்லப்படுவதாகவும் கொள்ளலாம். பா$_4$ஷ்யத்தில் ''உபாயேந'' என்று—முதல் நிர்வாஹத்தில் கர்மயோக$_3$த்தையும், இரண்டாவது நிர்வாஹத்தில் கர்மத்தை அங்க$_3$மாகக் கொண்ட உபாஸனத்தையும் குறிக்கிறது. (மாமே வைஷ்யஸி) அந்த உபாஸநம், அந்திமஸ்ம்ருதி இவற்றின் ப$_2$லனாக, நீ விரும்பிய ஆகாரத்தையுடைய என்னை அடைவாய்; ஐஶ்வர்யத்தை விரும்பினாயாகில், என்னையொத்த ஐஶ்வர்யத்தை உடையவனாகவும், கேவலாத்மாநுப$_4$வமாகிற கைவல்யத்தை விரும்பினாயாகில், ப்ரக்ருதி ஸம்ப$_3$ந்த$_4$மற்று ஸ்வரூப விளக்கம் பெற்றிருக்கும் விஷயத்தில் என்னையொத்த ஆத்மாவின் அநுப$_4$வத்தை உடையவனாகவும், உப$_4$யவிபூ$_4$திவிஶிஷ்டனான என்னையே பெறவிரும்பினாயாகில், அத்தகைய என்னுடைய அனுப$_4$வத்தையே உடையவனாகவும் ஆவாய் என்று கருத்து. முன்னும் பின்னும் இங்கு இந்த மூவகை அதி$_4$காரிகளைப் பற்றியும் ப்ரஸ்தாவம் வந்திருக்கையால், ''மாமே வைஷ்யஸி'' என்றதற்கு மூவகை அதி$_4$காரிகளுக்கும் பொருந்தும்படி இப்படியே பொருள்கொள்ளவேண்டும். (அஸம்ஶய: ஏஷ்யஸி) ஐயமற்றவனாய் விரும்பிய ப$_2$லனை அடைவாய். நீ விரும்பிய ப$_2$லனை அடைவதில் ஐயமில்லை என்றபடி ; 'அஸம்ஶய:' என்றது ப$_3$ஹுவ்ரீஹியாய் அர்ஜுனனுக்கு விஶேஷணமாகிறது ; ''நிஸ்ஸம்ஶயேஷு ஸர்வேஷு நித்யம் வஸதி வை ஹரி: । ஸஸம்ஶயாந் ஹேதுப$_3$லாத் நாத்$_4$யாவஸதி மாத$_4$வ: ॥'' [பா$_4$ர-மோக்ஷ 369-71] [ஐயமற்றவர்கள் அனைவரிடமும் ஹரி எப்போதும் வஸிக்கிறார் ; குயுக்திகளாலே ஸந்தே$_3$ஹப்பட்டுக்கொண்டேயிருப்பவர்களிடம் மாத$_4$வன் வாழ்வதில்லை.] என்கிறபடியே ஐயமற்றவனாய் ஸாத$_4$னத்தை அநுஷ்டி$_2$க்கவேண்டும் என்று காட்டுகிறது. அன்றிக்கே, ''அ மா நோ நா: ப்ரதிஷேதே$_4$'' என்னும் காவ்யாநுஶாஸனத்தின் படியே, 'அஸம்ஶய:' என்பதில் 'அ' என்னும் எழுத்தை ப்ரதிஷேத$_4$த்தைக் காட்டும் தனி எழுத்தாகக்கொண்டு 'இவ்விஷயத்தில் ஐயம் இல்லை' என்பதாகவும் கொள்ளலாம். ஆக, 'என்னைப் பற்றிய அந்திமஸ்ம்ருதியைப் பெறுவதற்காக, என்னைப் பற்றிய உபாஸனத்தையும், அதை விளக்கும் யுத்$_3$த$_4$ம் முதலான நித்ய நைமித்திக கர்மங்களையும் செய்யவேண்டும்' என்று கூறப்பட்டதாயிற்று. 7.

अभ्यासयोगयुक्तेन चेतसा नान्यगामिना।
परमं पुरुषं दिव्यं याति पार्थानुचिन्तयन् ॥८॥

8. அப்₄யாஸயோக₃யுக்தேந சேதஸா நாந்யக₃ாமிநா ।
பரமம் புருஷம் தி₃வ்யம் யாதி பார்த்தா₂நுசிந்தயந் ॥

பார்த்த₂ — அர்ஜுநா ! அப்₄யாஸ யோக₃ யுக்தேந— அப்₄யாஸத்தோடும், யோக₃த்தோடும் கூடியதாய், நாந்ய க₃ாமிநா—வேறெதிலும் செல்லாததான, சேதஸா—நெஞ்சாலே, பரமம் தி₃வ்யம் புருஷம் — தலைசிறந்த தி₃வ்ய புருஷனை என்னை, அநுசிந்தயந்—(பின்வருமாறு கடைசிக் காலத்தில்) நினைப்பவன், (பரமம் தி₃வ்யம் புருஷம்) யாதி— அத்தகைய புருஷனை என்னையே அடைகிறான்; (ஐஶ்வர்ய விஶிஷ்டனாகிறான் என்றபடி.)

---

8. எஞ்சாத சீலத் தியோகஞ் செறிந்தியலு
நெஞ்சால்வே றொன்றை நினையாதே—துஞ்சாத
தன்னினைவாற் செல்வந் தருபரம பூருடனு
மென்னியல்வே வந்தடையு மிங்கு.

எஞ்சாத சீலத்து — விடாமல் என்னை நினைப்பதாகிற அப்₄யாஸத்தையும், யோக₃ம் — என்விஷயமான ப₄க்தி யோக₃மாகிற உபாஸனத்தையும், செறிந்து இயலும் நெஞ்சால் — நெருங்கிச் சேர்ந்திருக்கும் நெஞ்சாலே, வேறொன்றை நினையாதே—வேறொன்றையும் நினையாமல், துஞ்சாத தன் நினைவால்—(பின்வருமாறு கடைசிக்காலத்தில்) மறவாமல் என்னை நினைப்பதால், இங்கு — இந்த லீலா விபூ₄தியில், செல்வம் தரு பரம பூருடனும் என் இயல்வே வந்து அடையும் — அனைவர்க்கும் செல்வத்தை அளிக்கும் பரமபுருஷனை எனது ஐஶ்வர்யத்தோடு கூடிய நிலையே (நினைப்பவனுக்கு) வந்துசேரும்.

---

8. கடந்த மூன்று ஶ்லோகங்களிலே—ஐஶ்வர்ய கைவல்ய ப₄க₃வச் சரணார்த்தி₂களான மூவகை உபாஸகர்களுக்கும், அவரவர் உபாஸனத் தால் அவரவர் ப்ராப்யத்தைப்பற்றிய அந்திமஸ்ம்ருதி ஏற்பட்டால்

॥ भा ॥ अहरहरभ्यासयोगाभ्यां युक्ततया नान्यगामिना चेतसा अन्तकाले परमं पुरुषं दिव्यं मां वक्ष्यमाणप्रकारं चिन्तयन् मामेव

தான் அவரவர்க்குரிய ப2லன் கிடைக்கும் என்னும் பொது விஷயம் சொல்லப்பட்டது. இப்படி இவர்களுக்கு அந்திமஸ்ம்ருதியை விதி4ப்பதற்குக் காரணம் என்ன? என்பதை நாம் ஆராய்ந்தால், ஒவ்வொரு அதி4காரிக்கும் உள்ள ஸ்வார்த்த2தையின் மிகுதியைக் குறைத்து, அவரவர் ப்ராப்யத்திற்கும், பரமபுருஷனுக்கே ஆட்செய்கைக்கும் உள்ள நெடுவாசியைக்காட்டி, அவரவர் ப்ராப்யத்தில் ருசியைக் கழித்துச் சிறிது சிறிதாக அவர்களை உயர்த்தி, அவரவரைப் படிப் படியாகத் தனக்கேயுரியராக்கவேண்டும் என்னும் பரமகருணையாலேயே எம்பெருமான் அந்திமஸ்ம்ருதி ஏற்படும் வரையில் பல ஜன்மங்கள் இவர்களைத் தத்தம் ப்ராப்யாநுகு3ணமாக உபாஸிக்கவேண்டும் என்று விதி4த்திருக்கிறான் என்பது விளங்கும். இனி, இந்தப் பரமலக்ஷ்யத்தைக்கொண்ட அந்திமஸ்ம்ருதி ஏற்படுவதற்கு உறுப்பாக அவரவர்க்குரிய உபாஸநபே4த3த்தைப் பதினைலாவது ஶ்லோகமீருகக் காட்டமுற்பட்டு, இது தொடங்கி மூன்று ஶ்லோகங்களாலே ஐஶ்வர்யார்த்தி2க்குரிய உபாஸநமுறையையும், அதையொட்டியே அந்திமஸ்ம்ருதி ஏற்படுவதையும் விளக்குகிறான். (அப்4யாஸயோக3 யுக்தேந சேதஸா) அப்4யாஸம், யோக3ம் ஆகிய இரண்டும் கூடிய நெஞ்சாலே. ''அப்4யாஸத்தின் யோக3ம் (சேர்த்தி)'' என்று தத்புருஷ ஸமாஸமாகக்கொண்டால், யுக்தபத3மிருக்கும்போது, யோக3பத3ம் அநாவஶ்யகமாகிறது; மேலும், உத்தர (மேல்) பதா3ர்த்த2த்திற்குமாத்திரம் ப்ராதா4ந்யம் ஏற்படும் தத்புருஷத்தைக் காட்டிலும், இரு பதா3ர்த்த2ங்களுக்கும் ப்ராதா4ந்யம் ஏற்படும் த்3வந்த்3வஸமாஸம் சிறந்தது. ஆகையால், 'அப்4யாஸயோக3ங்களோடு கூடிய நெஞ்சால்' என்றே பொருள்கொள்ளவேண்டும். அப்4யாஸமாவது,—''ஆரம்ப3ணஸம்ஶீலநம் புந: புநரப்4யாஸ:'' [விக்3ரஹவிஶிஷ்டனை ப4க3வானை மறுபடியும், மறுபடியும் சிந்திப்பது அப்4யாஸமாகும்.] என்று வாக்யகாரர் அருளியபடியே, நித்யநைமித்திக கர்மங்களை அனுஷ்டி2ப்பதற்குத் தடையாயிராத எல்லாக்காலங்களிலும் நெஞ்சாலே இடையறுது பரமபுருஷனைச் சிந்திப்பதேயாகும். யோக3மாவது, — தத்தம் ப்ராப்யத்தைப் பெறுவதற்குப் ப2லப்ரதா3ஸாத4னமாக எம்பெருமானைச் சிந்திக்கும் ப4க்தி யோக3மேயாகும். அந்தச் சிந்தனையும், தத்தம் ப்ராப்யத்தை அளிப்பதாகையாலே மிகமிக இனியதாகவும், மிகமிகத் தெளிவாகவும், ப்ரத்யக்ஷம்போலேயுள்ளதாகவுமிருக்கும் என்பது ப4க்தியோக3ப்ர

यानि—आदिभरतमृगत्वप्राप्तिवदैश्वर्यविशिष्टतया मत्समानाकारो भवति।

கரணங்களில் தெளிவாக்கப்பட்டது. தியானம் செய்யும் யோக₃காலம், நித்யநைமித்திககர்மங்களைச்செய்யும் காலம் தவிர்ந்த காலங்களில் விக்₃ரஹவிஶிஷ்டனை எம்பெருமானைச் சிந்தித்தல் அப்₄யாஸஶப்₃த₃த்தின் தேர்ந்தபொருள். இவ்வண்ணமாக, தனது ப்ராப்யத்தையும், அதையளிக்கும் ஸாத₄னமாக எம்பெருமானையும் இடையறாது சிந்தித்து வந்தால், இனிமையில் தனது ப்ராப்யம் தாழ்ந்தது என்றும், ப₄க₃வத₃நுப₄வம் இனிமையில் மிகவுயர்ந்தது என்றும், அதிலும் அவனுக்கே ஆட் செய்கை மிகமிக உயர்ந்தது என்றும் விவேகியான உபாஸகன் கால க்ரமத்தில் உணர்ந்துவிடுவான் என்னும் திருவுள்ளத்தாலேயே அந்திம ஸ்ம்ருதிவரையில் அப்₄யாஸயோக₃ங்களைச் செய்யும்படி எம்பெருமான் விதி₄க்கிறான் என்பதை இங்கு உய்த்துணரவேண்டும். (நாந்யகா₃மிநா) 'நக₃ம்' 'நைகம்' போன்ற ஶப்₃த₃மாகையாலே, 'அநந்யகா₃மிநா' என்று பொருள்படுகிறது. தனது ப்ராப்யத்தைக்காட்டிலும் தாழ்ந்த வையான விஷயங்களில் செல்லாத நெஞ்சாலே என்றபடி. ஐஶ்வர்ய கைவல்யார்த்தி₂கள் அவரவர் ப்ராப்யத்தைக் காட்டிலும் உயர்ந்த ப₄க₃வத்₃விஷயத்திலும், ப₄க₃வச்சரணார்த்தி₂யான உபாஸகன் தனக்கு ப்ராப்யமான ஸ்வார்த்த₂ப₄க₃வத₃நுப₄வத்தைக் காட்டிலும் உயர்ந்ததான பரார்த்த₂ப₄க₃வத₃நுப₄வகைங்கர்யங்களிலும் செல்லத் தடையில்லை என்பதும், அப்படி உயர்ந்த விஷயத்தில் சென்றால் அதி₄காரிகள் உயர்ந்துவிடுகிறார்கள் என்பதும், இப்படி உயரவேண்டும் என்பதே எம்பெருமானின் பரமலக்ஷ்யம் என்பதும் குறிக்கொள்ளத் தக்கது. (பரமம் தி₃வ்யம் புருஷம் அநுசிந்தயந்) "ந தத்ஸமஶ்சாப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே" [ஶ்வே 6-8] [அவனை ஒத்தாரும் மிக்காரும் காணப்படவில்லை.] "ஒத்தார் மிக்காரை இலையாய மாமாயா!" [திருவாய் 2-3-2] என்கிறபடியே, தனக்கு ஸமானமானவர்களோ, உயர்ந்தவர்களோ இல்லாதவனாய். புருஷஸூக்தத்திலும், இங்கு அடுத்த ஶ்லோகத்திலும் "ஆதி₃த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்று இருள்தருமாஞாலமான இவ்வுலகிற்கு அப்பால் அப்ராக்ருத தே₃ஶத்தில் இருப்பவனாக முழங்கப்பட்ட புருஷோத்தமனான என்னை, அந்திமகாலத்தில் அடுத்த இரண்டு ஶ்லோகங்களிலும் சொல்லப் போகிற ரீதியில், தனது ப்ராப்யத்துக்கு அநுகு₃ணமாக ஐஶ்வர்ய விஶிஷ்டனாகச் சிந்திப்பவன். அப்₄யாஸயோக₃ஶப்₃த₃த்தினால் அந்திம காலத்திற்கு முந்தின காலத்தில் சிந்தனம் கூறப்பட்டுவிட்டபடியால், இங்கு அந்திமகாலத்தில் ஸ்ம்ருதியே கூறப்படுகிறது என்று கொள்ள

अभ्यासः—नित्यनैमित्तिकाविरुद्धेषु सर्वेषु कालेषु मनसोपास्यसंशीलनम्। योगस्त्वहरहर्योगकालेऽनुष्ठीयमानं यथोक्तलक्षणमुपासनम्॥ ८॥

வேண்டும். (பரமம் புருஷம்) சிந்தனத்திற்கும், தியானத்திற்கும் விஷயமான புருஷனைப் பரமஶப்3த3த்தாலே விஶேஷித்திருக்கிறபடியால், புருஷோத்தம வித்3யாப்ரகரணத்தில் (கீ3தை 15.17,18) புருஷோத்தமனாகக் கூறப்பட்ட கண்ணனே இப்பரமபுருஷன் என விளங்குகிறபடியால் "மாம் ... சிந்தயந் மாமேவ யாதி" என்று பா4ஷ்யகாரர் அருளினார். (தி3வ்யம் புருஷம்) இதன் விவரணமான அடுத்த ஶ்லோகத்தில் "ஆதி3த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்" என்று கூறப்படுகையால், இங்கு தமஸ்ஸுக்கு அப்பாற்பட்டதாய், அப்ராக்ருதமான பரமபத3த்தில் இருக்கும் பரவாஸுதே3வனே தி3வ்ய புருஷனெனப்படுகிறான் என்று விளங்குகிறது. இதனால், 'தி3வ்யம்' என்றதற்கு 'ஸூர்யமண்ட3லத்தில் இருப்பவன்' என்று ஶங்கரர் உரையிட்டது ப்ரகரணத்திற்குப் பொருந்தாது என விளங்குகிறது. (பரமம் தி3வ்யம் புருஷம் யாதி) ஒத்தாரும் மிக்காருமில்லாத அந்த அப்ராக்ருதபுருஷனையே அடைகிறான். ஐஶ்வர்யார்த்தி2யான இவனுக்கு, பரமபுருஷனை அடைகையைப் ப2லனாகச் சொல்லுவது எப்படிப்பொருந்தும்? எனில்; 'அந்திமகாலத்தில் மானையே சிந்தித்த ப4ரதன் மானாக ஆனான்' என்னுமிடத்திற்போலே, பரமபுருஷனை ஐஶ்வர்ய விஶிஷ்டனாகச் சிந்தித்த இவன், அத்தகைய ஐஶ்வர்ய விஶிஷ்டனாக ஆவதே பரமபுருஷனை அடைவதாகும் என்று கருத்து. "யம் யம் வாபி" என்று தொடங்கும் ஆறாம் ஶ்லோகத்தில் இவ்விஷயம் தெளிவாக விளக்கப்பட்டது. (அநுசிந்தயந்-யாதி) அந்திம ஸ்ம்ருதிவரையிலும் இவன் ஐஶ்வர்யத்தையே விரும்பி என்னை ஐஶ்வர்ய விஶிஷ்டனாகச் சிந்தித்தானாகில், அடுத்த பிறவியில் அத்தகைய ஐஶ்வர்யத்தை உடையவனாயிருக்கும் விஷயத்தில் என்னை ஒத்தவனாகிறான் என்று கருத்து. அந்திமஸ்ம்ருதி ஸமயத்திலும், எம்பெருமானுடைய முயற்சி ப2லித்து இவன் ஐஶ்வர்யத்தின் தாழ்வை உணர்ந்து, எம்பெருமானையே இனியவனாக நினைத்துவிட்டானாகில், அப்போதே இவன் ப4க3வச்சரணார்த்தி2யாகி ப4க3வத3நுப4வத்தையே பெற்றுவிடுவான் என்பது சொல்லாமலே விளங்கும். (பார்த்த2) குந்தியின் பிள்ளையே! எனது அத்தை பிள்ளையான நீ சிறந்த ஐஶ்வர்யத்தை விரும்புகிறவனானாலும், என்விஷயமான அந்திம ஸ்ம்ருதியைப் பெறுவதற்கு உறுப்பாக யுத்3த4ம் முதலான ஸ்வத4ர்மத்தை அநுஷ்டி2த்தே தீரவேண்டும் என்று கருத்து. ஆக, ஐஶ்வர்

कविं पुराणमनुशासितारम् अणोरणीयांसमनुस्मरेद्यः ।
सर्वस्य धातारमचिन्त्यरूपम् आदित्यवर्णं तमसः परस्तात् ॥ ९ ॥

9. கவிம் புராணமநுஶாஸிதாரம்
அணோரணீயாம்ஸமநுஸ்மரேத்$_3$ய: ।
ஸர்வஸ்ய த$_4$ாதாரமசிந்த்யரூபம்
ஆதி$_3$த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் ॥

प्रयाणकाले मनसाऽचलेन भक्त्या युक्तो योगबलेन चैव ।
भ्रुवोर्मध्ये प्राणमावेश्य सम्यक् स तं परं पुरुषमुपैति दिव्यम् ॥ १० ॥

10. ப்ரயாணகாலே மநஸாऽசலேந
ப$_4$க்த்யா யுக்தோ யோக$_3$ப$_3$லேந சைவ ।
ப்$_4$ருவோர் மத்$_4$யே ப்ராணமாவேஶ்ய ஸம்யக்
ஸ தம் பரம் புருஷமுபைதி தி$_3$வ்யம் ॥

கவிம்—எல்லாமறிந்தவனும், புராணம்—பழையவனும், அநுஶாஸிதாரம் — (எல்லா உலகையும்) நியமிப்பவனும், அணோ: அணீயாம்ஸம்—அணுவான ஜீவனைக்காட்டிலும் அணுவாயிருப்பவனும், ஸர்வஸ்ய த$_4$ாதாரம்—எல்லாவற்றையும் படைப்பவனும், அசிந்த்யரூபம்—நினைக்க அரியஸ்வரூபத்தை உடையவனும், ஆதி$_3$த்யவர்ணம் — சூரியன்போன்ற ஒளியுடையவனும், தமஸ: பரஸ்தாத் — 'தமஸ்' என்னும் மூலப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவனுமான பரமபுருஷனை, ப$_4$க்த்யா யுக்த:—ப$_4$க்தியோடு கூடியவனாய், யோக$_3$ப$_3$லேந—யோக$_3$ பலத்தினால், அசலேந மநஸா — தாழ்ந்த விஷயங்களில் செல்லாதிருக்கும் நெஞ்சினால், ப்ரயாணகாலே — அந்திமகாலத்தில், ப்$_4$ருவோ: மத்$_4$யே ப்ராணம் ஆவேஶ்ய—புருவங்களுக்கு நடுவில் ப்ராணனை நிலைநிறுத்தி, ய:—எவனொருவன், (ப்$_4$ருவோ: மத்$_4$யே - புருவத்தின் நடுவிலேயே), தி$_3$வ்யம் பரம் புருஷம் — அப்ராக்ருதனான பரமபுருஷனை, ஸம்யக் அநுஸ்மரேத் — நன்கு நினைக்கிறானோ, ஸ: — அவன், தம்

யார்த்தி$_2$க்குரிய உபாஸநமுறையும், அதையொட்டிய அந்திமஸ்ம்ருதியும் சுருக்கமாகக் காட்டப்பட்டது.

ஏவ — அந்தப்பரமபுருஷனையே, உபைதி — அடைகிறான் ; (அவனை ஒத்த ஐம்வர்யத்தை உடையவனாகிறான் என்றபடி.)

---

9. **எண்மதியன் றொல்லையா னெல்லா நியமிப்பா**
னுண்மைப் பொருளுக்கு நுண்ணியான்—திண்மை
யுலகளிப்பா னுன்னரியா னோங்கிரவி வண்ணன்
இலகுமந்தத் துப்பரனை மிக்கு.

10. **இந்த உடலினைவிட் டேகுங்காற் றன்சலியாச்**
சிந்தையுறு பத்தி திகழ்யோகம்—முந்துற்றே
வாயுவினைத் தன்புருவ மத்தியத்தில் வைத்துணர்வான்
சேயுயரு மப்பரனைச் சேர்ந்து.

எண்மதியன் — எல்லாவற்றையும் அறிபவனும், **தொல்லையான்** — பழையவனும், **எல்லாம் நியமிப்போன்** — எல்லாவுலகையும் நியமிப்பவனும், **உண்மைப் பொருளுக்கு நுண்ணியான்**—மாறுபாடற்ற அணுப்பொருளான ஜீவனைக் காட்டிலும் அணுவாயிருப்பவனும், **உலகு திண்மை அளிப்பான்**—எல்லாவுலகையும் திடமாகப் படைப்பவனும், **உன்னரியான்** — நினைக்க அரிய ஸ்வரூபத்தை உடையவனும், **ஓங்கு இரவி வண்ணன்** — ஒளிமிக்க சூரியன்போன்ற ஒளியுடையவனும், **அந்தத்து பரனை** — அந்த₄தமஸ்ஸான ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவனுமான பரமபுருஷனை, **இந்த உடலினை விட்டு ஏகுங்கால்**—இந்த உடலை விட்டுச்செல்லும் அந்திமகாலத்தில், **உறு பத்தி திகழ் யோகம் முந்துற்றே**— ப₄க்தியோடும், யோக₃ப₃லத்தோடும் சேர்ந்து, **தான் சலியா சிந்தை**—தாழ்ந்த விஷயங்களில் செல்லாமலிருக்கும் நெஞ்சினால், **வாயுவினை** — ப்ராணனை, **தன் புருவ மத்தியில் வைத்து** — தன்னுடைய புருவங்களுக்கு மத்தியில் நிலை நிறுத்தி, **உணர்வான்**—(முற்கூறிய பரமபுருஷனை அங்கு) தியானிப்பவன், **சேய் உயரும் அப்பரனை** — மிக உயர்ந்த அப்பரமபுருஷனை, **சேர்ந்து**—அடைந்து, **மிக்கு இலகும்**— மிகவும் விளங்குவான். (அவனை ஒதத செல்வத்தை உடையவனுவான் என்றபடி.)

॥ भा ॥ कविं—सर्वज्ञम्, पुराणम्—पुरातनम्, अनुशासितारम्—विश्वस्य प्रशासितारम्, अणोरणीयांसम्—जीवादपि सूक्ष्मतरम्,

---

9,10. "அநுசிந்தயந்" என்று சென்ற ஶ்லோகத்தில் ஐஶ்வர்யார்த்திக்குச் சொன்ன அந்திமஸ்ம்ருதியை விவரித்துக்கொண்டு, அவன் அடையும் பலனைக்காட்டுகிருன் இவ்விரு ஶ்லோகங்களில். (கவிம்) "கவி: க்ராந்ததர்ஶீ" என்னும் லக்ஷணத்தின்படி எதையும் ஊடுருவிப்பார்க்குமவனைக் கவிஶப்தம் குறிக்குமாயினும், இங்கு ஸர்வேஶ்வரனைப்பற்றியதாகையால், 'ஸர்வஜ்ஞனை' என்று பொருள் படுகிறது. முண்டகோபனிஷத்தில் [1-1-10] "யஸ்ஸர்வஜ்ஞ: ஸர்வவித்" எனப்பட்டானன்றே. இங்கு ஒவ்வொரு விஶேஷணமும் இவன் அநுஸந்திக்கவேண்டிய பகவத்குணங்களைக் காட்டுகின்றன. "ஸர்வஜ்ஞன்" என்று உணர்ந்தால், அல்பஜ்ஞனை தான் தனக்கு நன்மையென்று கருதி, ஸம்ஸாரத்தில் தன்னைக் கட்டிவைக்கும் ஐஶ்வர்யத்தைப் பலனாக விரும்பியது தவறென்று உணர்ந்து, 'ஸர்வஜ்ஞனை நீயே எனக்கு எது நன்மையோ அதைச்செய்' என்று கேட்டுவிடுவான் என்னும் கருத்தாலே தன் ஸர்வஜ்ஞத்வத்தை அநுஸந்திக்கச் சொல்லுகிருன் கண்ணன். (புராணம்) "புராபி நவ: புராண:" என்கிற வ்யுத்பத்தியின்படி, புராதனனாயிருந்த போதிலும், "எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டூழியூழிதொறும் அப்பொழுதைக்கப்பொழுது என் ஆராவமுதமே" [திருவாய் 2-5-4] என்கிறபடியே புதியவனாகவேயிருப்பவன். இத்தகைய ஆராவமுதமானவன் இருக்கும்போது, அல்பமும், அஸ்திரமுமான ஐஶ்வர்யத்தை விரும்பியது தவறு என்று உணர்ந்துகொள்வதற்காகத் தன் புராணத்வத்தை அநுஸந்திக்கச் சொல்லுகிருன். (அநுஶாஸிதாரம்) உலகனைத்தையும் ஆள்பவனை. உபயவிபூதியையும் நியமிக்கும் அவனை அடைந்து, "பொன்னுலகாளீரோ புவனிமுழுதாளீரோ" [திருவாய் 6-8-1] என்கிறபடியே உபயவிபூதிச் செல்வத்தையும் அடைய ப்ராப்தமாயிருக்க, அதில் ஏகதேஶமான செல்வத்தை அடைய நினைப்பது தவறு என்று உணர்த்தவே உபயவிபூதிநாயகத்வத்தை அநுஸந்திக்கச் செய்கிருன். "ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்க்கி த்யாவாப்ருதிவ்யௌ வித்ருதே திஷ்டத:" [ப்ருஹ 5-8-8] [கார்க்கி! இந்த அக்ஷரபுருஷனுடைய ஆளுகையினுலேயே எல்லாவுலகங்களும் தரித்து நிற்கின்றன.] முதலான ஶ்ருதிகள் இங்கு அநுஸந்திக்கத்தக்கவை. எல்லாவுலகங்களையும் நியமிப்ப

सर्वस्य धातारम्—सर्वस्य स्रष्टारम्, अचिन्त्यरूपम्—सकलेतरविस-

வனுல் அனைத்தினுள்ளும் வியாபித்திருப்பவனுகவேணுமே; மிகப் பெரியவனுன இவன் அனைத்துள்ளும் வியாபித்திருக்கமுடியுமோ? எனில்: (அணோரணீயாம்ஸம்) அசேதனப் பொருள்களைக்காட்டிலும் ஸூக்ஷ்மனுயிருக்கையாலே அவற்றில் வியாபிக்கவல்ல அணுவான ஜீவனைக்காட்டிலும் ஸூக்ஷ்மனுய், அவனிடமும் வியாபிக்கவல்லவனே. "அணோரணீயாந் மஹதோ மஹீயாந்" [கட₂ 1-2-20; தை-நா 10-1] [அணுவைக்காட்டிலும் அணுவாகவும், பெரியதைக்காட்டிலும் பெரிய வனுகவுமிருப்பவன்] "ய ஆத்மநி திஷ்ட₂ந் ஆத்மநோऽந்தர:" [ப்₃ருஹ 5-7-22] [எவன் ஆத்மாவின் வெளியிலும் உள்ளும் வியாபித்து நிற் கிருனே] "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம்" [யஜுர்-ஆரண்யகம் 3-11] [எல்லா ஜீவர்களினுள்ளும் நுழைந்து நியமிப்பவன் பரமாத்மா] முதலான ப்ரமாணங்கள் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கவை. ஜீவனைக்காட்டிலும் ஸூக்ஷ்மமானவன், அவனை உள் நுழைந்து நியமிப்பவன் என்றதால் ஜீவன் ஶரீரம் என்றும், இவன் ஆத்மா என்றும் தேறுகிறது. ஶரீரியான பரமனிருக்க, ஶரீரமான தான் தனக்கு நன்மையென்று நினைத்து ஒன்றை அபேக்ஷிப்பது தவறென்று உணர்ந்துகொள்வதற்காக இதை அநுஸந்தி₄க்கச் சொல்லுகிருன் ஈஶ்வரன். (ஸர்வஸ்ய தா₄தாரம்) அனைத்துலகையும் ஸ்ருஷ்டிப்பவனே. "தா₄தா புரஸ்தாத்₃ யமுதா₃ஜஹார" [பு-ஸூ] [ஸ்ருஷ்டிப்பவனுன பிரமன் ஸ்ருஷ்டிகாலத்தில் எந்தப் பரமபுருஷனை தியானித்தானே] "ஸூர்யாசந்த்₃ரமஸௌ தா₄தா யதா₂பூர்வம கல்பயத்" [தை-நா 1-38] [ஸ்ருஷ்டிக்கும் பிரமன் ஸூர்யசந்திரர்களை முன் கல்பத்திற்போலவே படைத்தான்.] என்று தா₄த்ரு ஶப்₃த₃த்தை ஸ்ரஷ்டாவைக்குறித்துப் பிரயோகி₃ப்பதுண்டாகையால், இங்கு "ஸர்வஸ்ய தா₄தா" என்று ஸர்வஸ்ரஷ்டாவான நாராயணனைக் குறிக்கிறது. அன்றிக்கே, "விஷ்ணுநா வித்₄ருதே பூ₄மீ" [யஜுர் ஆரண்யகம் 8-1] [த்₃யாவாப்ருதி₂விகள் விஷ்ணுவினுலே தா₄ரிக்கப் படுகின்றன] "ஸர்வாதா₄ரம் தா₄ம விஷ்ணு ஸம்ஜ்ஞும்" [மைத்ராயணீய உபநிஷத்] [விஷ்ணுவெனப்படும் பரஞ்சோதியே அனைத்துக்கும் ஆதா₄ரமாயிருப்பது] என்று சொல்லப்படும் ஸர்வாதா₄ரத்வத்தையே குறிக்கிறதாய், இந்த ஸர்வாதா₄ரத்வம் ஸர்வஸ்ரஷ்டாவுக்கே பொருந்துமாகையால், "ஸர்வஸ்ய ஸ்ரஷ்டாரம்" என்று பா₄ஷ்ய காரர் ப₂லிதார்த்த₂த்தை அருளினுர் என்றும் கொள்ளலாம். அனைத் தையும் படைத்து தா₄ரிக்கும் பிதாவான அவனை விரும்பாமல், அவ னுல் படைக்கப்பட்டு அவனது புத்ரனுன தான் தனக்கு நன்மையாக

जातीयस्वरूपम्, आदित्यवर्णं तमसः परस्तात्—अप्राकृतस्वासाधारण-

ஒன்றை விரும்புவது தவறு என்று உணர்த்துவதற்காகவே ஸர்வ ஸ்ரஷ்ட்ருத்வத்தை அநுஸந்தி₄க்க விதி₄க்கிறுன் கண்ணன். (அசிந்த்யரூபம்) த்₃ருஷ்டாந்தம் காட்டமுடியாதபடி மற்ற எல்லாப் பொருள்களைக் காட்டிலும் மிகச்சிறந்தவனுயிருக்கையால், எவராலும் 'இப்படிப்பட்டது' என்று எண்ணமுடியாத இனிமையையும் பெருமையையும் உடைய ஸ்வரூபத்தை உடையவனே. "நேதி நேதி" [ப்₃ருஹ 4-3-6] [இப்படிப் பெருமையுடையது எதுவுமில்லை] "ந தத்ஸமஶ்சாப்₄யதி₄கஶ்ச த்₃ருஶ்யதே" [ஶ்வே 6-8] [அவனுக்கு ஒத்தவரும் மிக்கவரும் காணப்படவில்லை] முதலான ப்ரமாணங்கள் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கவை. இப்படி இனிமையிலும், பெருமையிலும் மிக விஞ்சியிருப்பவனைவிட்டு அவற்றில் மிகத் தாழ்ந்த ஐஶ்வர்யத்தை விரும்புவது தவறு என்று உணர்த்தவே எம்பெருமான் இந்த அசிந்த்யரூபத்வத்தை அநுஸந்தி₄க்கச் செய்கிறுன். (ஆதி₃த்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்) 'தமஸ்' எனப்படும் ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்டவனுய், சூரியன்போல் ஒளியுள்ளவனுயிருப்பவனே. புருஷஸூக்தம் உத்தராநுவாகத்தில் இரண்டாம் மந்திரத்தில் உள்ளதை இங்கு அப்படியே படிக்கிறுன். "தத₃ாநீம் தம ஆஸீத்" [ருக்₃வேத₃ம் அஷ்டகம் 8-7-17; யஜுர் அஷ்டகம் 2-7-9] "தமஸஸ் தந்மஹிநா ஜாயதைகம்" [யஜுர்வேத₃ம் அஷ்டகம் 2-4-9] "யதா₃ தம:" [ஶ்வே 4-18] முதலான வேத₃வாக்யங்களில் தம:ஶப்₃த₃ம் மூலப்ரக்ருதியைக் குறிக்கையால், "தமஸ: பரஸ்தாத்" என்றது மூலப்ரக்ருதிக்கு அப்பாற்பட்ட அப்ராக்ருத தே₃ஶத்தில் இருப்பவன் என்பதைக் காட்டுகிறது. இதனுல் கர்மவசப்படாதவன், நித்யமானவன், குற்றமற்றவன் என்று உணர்த்தப்படுகிறது. "ஆதி₃த்ய வர்ணம்" என்கையாலே — "யேந ஸூர்யஸ்தபதி தேஜஸேத்₃த₄:" [காட₂க 3-9-7] [எந்தப் பரஞ்சோதியாலே ஒளியூட்டப்பட்டு ஸூர்யன் ஒளிவிடுகிறுனே] "தஸ்ய பா₄ஸா ஸர்வமித₃ம் விபா₄தி" [முண்ட₃க 2-2-11] [அப்பரமபுருஷனுடைய ஒளியாலே இவையனைத்தும் ஒளி விடுகின்றன.] "ஜ்யோதிஷாம் ஜ்யோதி:" [ப்₃ருஹ 6-4-16] "நாராயண பரோ ஜ்யோதி:" [தை-நா] "யஸ்யாதி₃த்யோ பா₄முபயுஜ்ய பா₄தி" [பா₄ர-ஆநு 158-22] [எந்தப் பரமபுருஷனுடைய ஒளியைக்கொண்டு சூரியன் ஒளிவிடுகிறுனே] என்று ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் சூரியனுக்கும் ஒளிகொடுப்பதான பரமபுருஷனின் தி₃வ்யமங்க₃ள விக்₃ரஹத்தின் ஒப்பற்ற ஒளி காட்டப்படுகிறது. "தி₃வி ஸூர்ய ஸஹஸ்ரஸ்ய" [11-12] என்னும் ஶ்லோகத்தில்

दिव्यरूपम्, तमेवंभूतमहरहरभ्यस्यमानभक्तियुक्तयोगबलेनारूढसंस्कारतया

இது மேலேயும் விவரிக்கப்படவிருக்கிறது. ஆகையால், ஆதித்ய ஶப்த₃ம் நித்யசைதந்ய ப்ரகாஶத்தையும், தமஶ்ஶப்த₃ம் அஜ்ஞானத்தையும் குறிக்கிறது என்று ஶங்கரர் உரையிட்டது இந்த ஶ்ருதி ஸ்ம்ருதி கீ₃தா வாக்யங்களுக்குப் பொருந்தாதாகையால் அநாத₃ரிக்கத்தக்கது. இப்படி ஒப்பற்ற ஒளியுடையவனாய், அப்ராக்ருதனாய், கர்மவஶப்படாதவனாய், நித்யமானவனாய், குற்றமற்றவனான அவனிருக்கும்போது, ஒளியில் குறைந்ததாய், ப்ராக்ருதமாய், கர்மம் காரணமாக ஏற்படுவதாய், அநித்யமான ஐஶ்வர்யத்தை விரும்புவது தவறு என்று உணர்த்துவதற்காகவே இப்பெருமையை அநுஸந்தி₄க்கச் சொல்லுகிறான் கண்ணன். இவன் இப்படி ஒன்றை நினைத்து இப்பெருமைகளை அநுஸந்தி₄க்கச் சொல்லியிருக்க, பெரும்பாலான ஐஶ்வர்யார்த்தி₂கள் விஷயத்தில் இந்நினைவு ப₂லிக்காமல், இவ்வநுஸந்த₄ானங்கள் ஐஶ்வர்யத்தில் விருப்பத்தையே உறுதிப்படுத்தி விடுகின்றன. ஸர்வஜ்ஞனாய், பழையவனாய், உலகத்தை ஆள்பவனாய், அணுவுக்கும் அணுவாய், எல்லாவற்றையும் படைப்பவனாய், எவராலும் த்₃ருஷ்டாந்தங்கொண்டு அறியமுடியாதவனாய், அப்ராக்ருத தே₃ஶத்தில் ஒப்பற்ற ஒளியையுடையவனாயிருக்கையாகிற பெருஞ்செல்வத்தை உடையவன், நாம் விரும்பும் ஐஶ்வர்யத்தை அறிந்து ஸாதி₄த்துத்தரவல்ல ஜ்ஞானம், ஶக்தி, வண்மை முதலான கு₃ணங்களை உடையவனாகையாலே இதை அவஶ்யம் நமக்குத் தருவான் என்று அறுதியிட்டு அந்திம ஸமயத்திலும் அவ்வைஶ்வர்யத்தையே பிரார்த்தி₂க்க உறுப்பாகி விடுகின்றன.

"ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸமணீயஸாம் |
ருக்மாப₄ம் ஸ்வப்நதீ₄க₃ம்யம் வித்₃யாத் து புருஷம் பரம் ||"
[மநு 12-122]

[அனைவரையும் ஆள்பவனும், அணுக்களான ஜீவர்களைக் காட்டிலும் அணுவாயிருப்பவனும், பொன்போன்ற ஒளியுடையவனும், கனவு போன்ற த்₄யானரூபமான மாநஸமான அறிவில் அறியப்படுபவனுமான பரமபுருஷனை அறியக்கடவன்.] என்ற மநுஸ்ம்ருதி ஶ்லோகம் இந்த ஶ்லோகத்தை ஒத்திருப்பது காணத்தக்கது. அநுகூலருக்குப் பொன்போல் ஹிதமாகவும் (ப்ராபகமாகவும்), ரமணீயமாகவும் (ப்ராப்யமாகவும்) கண்ணுக்குக் குளிர்ச்சியாகவும் இருக்கையையிட்டு 'ஹிரண்மய: புருஷ:' [ச₂ாந்] என்று சொன்ன ஶ்ருதியைப்போலே 'ருக்மாப₄ம்' என்கிறார் மநு. ப்ரதிகூலரைத் தபிப்பதாய், காண

अचलेन मनसा प्रयाणकाले भ्रुवोर्मध्ये प्राणमावेश्य—संस्थाप्य; तत्र

வொண்ணுததாய், ஒளிவிஞ்சியதாயிருக்கையையிட்டுப் புருஷஸூக்தத்திற்போலே இங்கு 'ஆதி₂த்யவர்ணம்' எனப்படுகிறது. "கதிர் மதியம்போல் முகத்தான்" [திருப்பாவை 1] என்று இரண்டு ஆகாரங்களையும் சேர்த்து அநுஸந்தி₄த்தாள் ஆண்டாள். இனி, இப்படிப் பிரார்த்திப்பவன் பெறும் ப₂லனை "ய: அநுஸ்மரேத்" என்னும் இந்த ஶ்லோகப் பகுதியாலும், அடுத்த ஶ்லோகத்தாலும் காட்டுகிறான்,— (ப₄க்த்யா யோக₃ப₃லேந யுக்த:) "அப்₄யாஸ யோக₃ யுக்தேந" என்று சென்ற ஶ்லோகத்திற் சொன்னபடி தினந்தோறும் அப்₄யாஸம் செய்யப்படும் ப₄க்தியோடு கூடிய யோக₃ாப்₄யாஸ ப₃லத்தாலே — உறுதியான ஸம்ஸ்காரம் பெற்றவனாய். யுக்த ஶப்₃த₃ம் ஸம்ஸ்காரத்தின் உறுதியைக் காட்டுகிறது. இனி, இதனால் ஏற்படும் ப₂லனைச் சொல்லுகிறது,— (அசலேந மநஸா) தாழ்ந்த விஷயங்களில் செல்லாத நெஞ்சால். "நாந்யகா₃மிநா" என்று சென்ற ஶ்லோகத்தில் சொன்னதையே இங்கும் கூறுகிறான். (ப்ரயாணகாலே ச ய: அநுஸ்மரேத்) அந்திமஸமயத்திலும் எவன் நினைக்கிறானோ, "சைவ" என்றதில் 'ச'காரத்தை இங்கு சேர்த்துக் கொள்ளவேணும். இதனால் அந்திமஸமயத்திற்கு முந்திய உபாஸந காலத்திலும் "ப்ரஶாஸிதாரம்" முதலானவற்றில் சொன்ன கு₃ணங்கள் இவனால் அநுஸந்தி₄க்கத்தக்கவை என்று உணர்த்தப் படுகிறது. மேலே கைவல்யார்த்தி₂ விஷயத்திலும், அந்திமஸ்ம்ருதி ஸமயத்தில் அநுஸந்தி₄க்கத்தக்கவையாக விதி₄க்கப்பட்ட கு₃ணங்கள் உபாஸநகாலத்திலும் அநுஸந்தி₄க்கத்தக்கவை என்று கண்டு கொள்ளவேணும். இப்படி நீண்டநாள் இவனுடைய பெருமைகளை அநுஸந்தி₄த்தபின்பும் அந்திமஸ்ம்ருதி வரையில் இவர்களுடைய க்ஷுத்₃ரபுருஷார்த்த₂ருசி நீங்கவில்லையாகில், இவர்கள் விரும்பிய ப₂லனைக் கொடுக்கிறானாகையாலே, தாழ்ந்த ப₂லனைக்கொடுக்கையாகிற குற்றம் ஹிதபரனான பரமன் மேல் வராது என்பது காணத்தக்கது. இனி உபாஸநகாலத்திலில்லாததாய், அந்திமகாலத்திற்கே உரிய தான காரியம் சொல்லப்படுகிறது,— (ப்₄ருவோ: மத்₄யே ப்ராணம் ஸம்யக் ஆவேஶ்ய தி₃வ்யம் பரம் புருஷம் ய: அநுஸ்மரேத்) எவனொருவன் புருவங்களுக்கு இடையில் ப்ராணனை நிலைநிறுத்தி அந்தப் புருவங்களுக்கு இடையிலேயே முற்கூறிய தி₃வ்யபரமபுருஷனை அந்திமகாலத்தில் நினைக்கிறானோ, "ஆவேஶ்ய" என்றதால், யோக₃ப்ரகரணங்களில் சொல்லப்பட்டதான 'அசையாமல் நிலைநிறுத்துதல்' கூறப்படுகிறது. வேறு ஸ்த₂ானம் சொல்லப்

अमध्ये दिव्यं पुरुषं योऽनुस्मरेत्; स तमेवोपैति—तद्भावं याति, तत्समानैश्वर्यो भवतीत्यर्थः ॥ ९ ॥ १० ॥

॥ भा ॥ अथ कैवल्यार्थिनां स्मरणप्रकारमाह—

यदक्षरं वेदविदो वदन्ति विशन्ति यद्यतयो वीतरागाः ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति तत्ते पदं सङ्ग्रहेण प्रवक्ष्ये ॥ ११ ॥

11. யத₃க்ஷரம் வேத₃விதே₃ா வத₃ந்தி
விமந்தி யத்₃யதயோ வீதராக₃ா: ।
யதி₃ச்ச₂ந்தோ ப்₃ரஹ்மசர்யம் சரந்தி
தத் தே பத₃ம் ஸங்க்₃ரஹேண ப்ரவக்ஷ்யே ॥

---

11. அக்கரமா யாதொன்றை யாய்ந்தமறை யோருரைப்பர்
செக்கநசை யார்யாதைச் சென்றடைவர்—மிக்கதுற
வேய்ந்தியவ ரிச்சித்தார் யாதையுனக் குச்சுருங்க
வாய்ந்துரைப்ப னப்பதத்தை மற்று.

படாமையாலும், மோக்ஷம் தவிர்ந்த ப₂லன்களை அபேக்ஷிப்பவர்கள் ப்ராணனைப் புருவமத்தியில் நிறுத்திப் பரமபுருஷனை அங்கேயே தியானிக்கவேண்டும் என்று யோகப்ரகரணங்களில் கூறப்பட்டிருக்கையாலும், பரமபுருஷத்₄யானமும் புருவமத்தியிலேயே எனக்கொள்ள வேண்டும். (ஸ: தி₂வ்யம் பரம் புருஷமேவ உபைதி) இப்படி அந்திமகாலத்தில் நினைப்பவன் அந்த தி₃வ்யபரமபுருஷனையே அடைகிறுன். "சைவ" என்றதிலுள்ள ஏவகாரத்தை இங்கு சேர்த்துக் கொள்ளவேண்டும். "தம் தமேவைதி" [8-6] என்றவிடத்திற்போலே, உத்தமைம்வர்யவிமிஷ்டனுகச் சிந்தித்த இவன் அத்தகைய ஐம்வர்யத்தோடு கூடியிருக்கும் நிலையையே அடைகிறுன் என்றபடி. "ய: ப்ரயாதி ஸ மத்₃ப₄ாவம் யாதி" [8-5] என்று எந்த நிலையோடு கூடிய பரமபுருஷனை உபாஸிக்கிறுனே, அந்த நிலையையே அடைவதாகவே முதலில் கூறப்பட்டதன்றே. "புருஷம் உபைதி" என்றது ப₄ாவப்ரத₄ாந நிர்த்தே₃மமாய், "புருஷத்வமுபைதி" என்றபடி. ஆக, இவ்வளவால் அந்திமஸ்ம்ருதிவரையில் சிறந்த ஐம்வர்யத்தோடு கூடியவனுக உபாஸிக்கும் ஐம்வர்யார்த்தி₂, ஆதி₃ப₄ரதந்யாயத்தாலே அத்தகைய சிறந்த ஐம்வர்யத்தை உடையவனுக ஆகிறுன் என்று காட்டப் பட்டதாயிற்று.
9,10.

யத் — யாதொன்றை, **அக்ஷரம்** — அக்ஷரமாக, **வேத₃வித₃:** — வேத₃த்தை அறிந்தவர்கள், **வத₃ந்தி** — சொல்லுகிறார்களோ, **யத்** — யாதொன்றை, **இச்ச₂ந்த:** — விரும்புகின்றவர்களாய், **வீதராக₃ா: யதய:**—ஆசையற்றுப் புலன்களை அடக்கியவர்கள், **ப்₃ரஹ்மசர்யம் சரந்தி**—ப்₃ரஹ்மசர்யத்தை அநுஷ்டி₂க்கிறார்களோ, **யத் விஶந்தி** — (அப்படி அநுஷ்டி₂த்ததின் ப₂லனாக) எதை அடைகிறார்களோ, **தத் பத₃ம்**—(உபாஸிக்கத்தக்கதான) அந்த என்னுடைய ஸ்வரூபத்தை, **தே** — உனக்கு, **ஸங்க்₃ரஹேண ப்ரவக்ஷ்யே** — சுருக்கமாகச் சொல்லுகிறேன்.

யாதொன்றை — எதை, **அக்கரமாய்** — அக்ஷரமாக, **ஆய்ந்த மறையோர் உரைப்பர்**—வேத₃த்தை ஆராய்ந்தவர்கள் சொல்லுகிறார்களோ, **செக்க நசையார் இயவர்**—ஆசையை அறுத்த எவர்கள், **யாதை இச்சித்தார்**—எதைப் பெற விரும்பி, **மிக்க துறவு ஏய்ந்து**—மிகுந்த ப்₃ரஹ்மசர்யத்தை அநுஷ்டி₂த்து, **யாதைச் சென்று அடைவர்**—எதைச் சென்று அடைவார்களோ, **மற்று அப்பதத்தை**—(உபாஸிக்கத்தக்கதான) அந்த என்னுடைய அக்ஷரஸ்வரூபத்தை, **உனக்கு சுருங்க ஆய்ந்து உரைப்பன்**-ஆராய்ந்து, உனக்குச் சுருக்கமாகச் சொல்லுவேன்.

---

11. *இனி, மூன்று ஶ்லோகங்களிலே, கைவல்யார்த்தி₂யின் உபாஸன ப்ரகாரத்தையும், அந்திமஸ்ம்ருதி ப்ரகாரத்தையும் கூறுகிறான். முன் சொல்லப்பட்ட அதி₄காரிக்குப் புருவமத்தியில் ப்ராணனை நிறுத்துவதை விதி₄த்திருக்கையாலே, அவன் மோக்ஷத்தைக் காட்டிலும் தாழ்ந்த ஐஶ்வர்யத்தை விரும்புமவன் என்றும், இவ்வதி₄காரிக்குத் தலையில் ப்ராணனை நிறுத்துவதை விதி₄த்திருக்கையால் இவன் மோக்ஷத்தை விரும்புகிறவன் என்றும் விளங்குகிறது. மேலே "அநந்யசேதா:" என்று தொடங்கும் பதினாலாவது ஶ்லோகத்தில் பரமமோக்ஷத்தை விரும்பும் ஜ்ஞானி சொல்லப்படுகிறான் என விளங்குகையால், இம்மூன்று ஶ்லோகங்களிலும் கேவலாத்மப்ராப்தி ரூபமான தாழ்ந்த மோக்ஷத்தை விரும்பும் ஜிஜ்ஞாஸுவே சொல்லப்படுகிறான் என்று விளங்குகிறது. "வியன்*

॥ भा ॥ यत् अक्षरम्—अस्थूलत्वादिगुणकं वेदविदो वदन्ति, वीतरागाश्च यतयो यदक्षरं विशन्ति, यदक्षरं प्राप्तुमिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति, तत्पदं सङ्ग्रहेण ते प्रवक्ष्ये। पद्यते गम्यते चेतसेति पदम्; तत् निखिलवेदान्तवेद्यं मत्स्वरूपमक्षरं यथोपास्यम्, तथा संक्षेपेण प्रवक्ष्यामीत्यर्थः ॥ ११ ॥

மூவுலகு பெறினும்'' [திருவாய் 8-10-2[என்று ஐஶ்வர்யார்த்தி₂யின் ப₂லனைச் சொன்னவுடன், ''போய்த் தானே தானேயானாலும்'' என்று இக்கைவல்யார்த்தி₂யின் ப₂லனைச் சொல்லும்போது, இவனுக்கு ப்ராக்ருதமான ஐஶ்வர்யானுப₄வமும், ப₄க₃வத₃னுப₄வமும் இல்லை, தன் ஆத்மானுப₄வம் மாத்திரமேயுள்ளது என்பது தோற்ற ''தானே தானே'' என்று இருமுறை படிக்கையாலே, இவனை நமது ஆசார்யர்கள் கைவல்யார்த்தி₂ என்றே உரைப்பர். இவ்வதி₄காரியின் ப₂லஸாத₄னங்களை ''ஆத்மார்த்தீ₂ சேத் த்ரயோऽப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாத₄கா:'' [27] [ஆத்மானுப₄வத்தைப் பெறவிரும்பினானாகில், கர்மஜ்ஞாநப₄க்தி யோக₃ங்கள் மூன்றுமே (தனித்தனியே) ஆத்மகைவல்யத்தை ஸாதி₄த்துக்கொடுக்கவல்லவை.] என்று ஆளவந்தார் கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் அருளியதை அடியொற்றி, பா₄ஷ்யகாரரும் இங்கு இவனைக் கைவல்யார்த்தி₂யென்று அவதாரிகையில் அருளிச்செய்கிறார். இக்காரணத்தாலேயே, ஸ்ரீபா₄ஷ்யத்தில் கார்யாதி₄கரணத்தில்—ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸனம் செய்து அர்ச்சிராதி₃க₃தியாலே ப்₃ரஹ்மத்தை அடைபவனாகக் கூறப்பட்ட பஞ்சாக்₃னிவித்₃யாநிஷ்ட₂னல்லன் இவன் என்று விளங்கும். பதின்மூன்றாவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் இரண்டாம் ஷட்கத்திற்கும், மூன்றாம் ஷட்கத்திற்கும் ஸங்க₃தியை அருளிச்செய்யும்போது, ''ஆத்மகைவல்யமாத்ராபேக்ஷாணாம்'' என்று அருளினார் பா₄ஷ்யகாரர். ''ஆத்மகைவல்யாபேக்ஷாணாம்'' என்று அருளினால், இவ்வதி₄காரிக்குக் கைவல்யத்தை அநுபவித்தபின் ப₄க₃வத₃னுப₄வமும் ஏற்படலாம் என்று சிலர் நினைக்கக்கூடும் என்றே பா₄ஷ்யகாரர் '' மாத்ர '' ஶப்₃த₃த்தையும் சேர்த்துப் பிரயோகி₃த்தார் என்பது குறிக்கொள்ளத்தக்கது. '' தானே தானேயானாலும்'' என்றவிடத்திலும், மற்றும் பலவிடங்களிலும் ஐஶ்வர்யானுபவம்போலே ப₄க₃வத₃னுப₄வமும் இவனுக்குக் கிடையாது என்று ஆழ்வார் அருளிச்செய்ததே, பா₄ஷ்யகாரர் இப்படி அருளிச்செய்வதற்குக் காரணமாகும். இதுபற்றின விரிவான விளக்கம் இவ்வத்தியாயம் 23, 24-வது ஶ்லோகங்களுக்கு உரையிடுகையில் எழுதப்படும்.

(வேத₃வித₃: யத் அக்ஷரம் வத₃ந்தி) வேத₃த்தை அறிந்தவர்கள் எதை அக்ஷரமாகச் சொல்லுகிறார்களோ ; "நாவேத₃வித் மநுதே தம் ப்₃ருஹந்தம்" [காட₂கம் 3-9-7] [வேத₃த்தை அறியாதவன் அந்தப் பரம்பொருளை அறியமாட்டான்] என்று வேத₃ம் வ்யதிரே கத்தாலே சொன்னதே இங்கு அந்வயத்தாலே சொல்லப்படுகிறது. (அக்ஷரம்) "அஶ்நோதி - வ்யாப்நோதி - இதி அக்ஷரம்" [எல்லாப் பொருள்களையும் வியாபித்திருப்பதாகையால் அக்ஷரம் எனப்படுகிறது பரம்பொருள்] என்றும், "ந க்ஷரதி இத்யக்ஷரம்" [அழியாததாகை யாலே அக்ஷரம் எனப்படுகிறது பரம்பொருள்] என்றும் இருவகையில் பொருள்கொள்ளலாமாயினும், இங்கு கைவல்யார்த்தி₂யின் உபாஸந ப்ரகரணமாகையாலே இரண்டாவது பொருள் பொருத்தம் மிக்கது. "ஏதத்₃வை தத₃க்ஷரம் கா₃ர்க்கி₃ ப்₃ராஹ்மணா அபி₄வத₃ந்தி அஸ்தூ₂லம் அநணு அஹ்ரஸ்வம் அதீ₃ர்க்க₄ம் அலோஹிதம் அஸ் நேஹம் அச்ச₂ாயம் அதம: அவாயு அநாகாஶம் அஸங்க₃ம் அரஸம் அக₃ந்த₄ம் அசக்ஷுஷ்கம் அஶ்ரோத்ரம் அவாக் அமந: அதேஜஸ்கம் அப்ராணம் அமுக₂ம் அமாத்ரம் அநந்தரம் அபா₃ஹ்யம்" [ப்₃ருஹ 5-8-7] [வேத₃மறிந்தவர்கள் இப்பரம்பொருளை அக்ஷரமாகவே கூறுகின்றனர்:— ஸ்தூ₂லப் பொருள், அணுப் பொருள், குட்டைப் பொருள், நீண்ட பொருள், சிவந்த பொருள், பசையுடைய பொருள், நிழலுடைய பொருள், இருண்ட பொருள், வாயு, ஆகாஶம், சேரும் பொருள், சுவையுடைய பொருள், மணமுடைய பொருள், காணத்தக்க பொருள், கேட்கத்தக்க பொருள், சொல்லத்தக்க பொருள், நினைக்கத் தக்க பொருள், ஒளியுடைய பொருள், ப்ராணனுடைய பொருள், முக முடைய பொருள், அளவுடைய பொருள், உட்பகுதியுடைய பொருள், வெளிப்பகுதியுடைய பொருள் ஆகிய ப்ராக்ருதப்பொருள்கள் அனைத்தைக்காட்டிலும் வேறுபட்டிருப்பதாக அப்பரம்பொருளைக் கூறுகின்றனர்.] என்று உபனிஷத்தில் சொல்லப்பட்ட அஸ்தூ₂ல த்வம் முதலான தன்மைகளோடு கூடிய பரம்பொருளே இங்கு அக்ஷரஶப்₃த₃த்திற்குப் பொருளாகிறது. கைவல்யார்த்தி₂க்கு—அஸ் தூ₂லத்வம் முதலானவற்றோடு கூடியதாய், ப்ரக்ருதியினின்றும் நீங்கியதான தன் ஆத்மாவே ப்ராப்யமாகையால், தத்க்ரதுந்யாயத் தையும், ஆதி₃பூ₄ரத ந்யாயத்தையும் ஒட்டி, அஸ்தூ₂லத்வாதி₃ விஶிஷ்டமான பரமாத்மஸ்வரூபம் அவனுக்கு உபாஸிக்கத்தக்கதாக விதி₄க்கப்படுகிறது என்பது குறிக்கொள்ளத்தக்கது. (வீதராக₃ா: யதய: யத் விஶந்தி) "அற்றது பற்றெனில் உற்றது வீடு உயிர்"

[திருவாய் 1-2-5] என்கிறபடியே ப்ராக்ருத விஷயங்களில் பற்றற்ற புலனடக்கமுடைய கைவல்யார்த்தி2கள் எந்த அக்ஷரநிலையை அடைகிறார்களோ. இப்படி அக்ஷரமான பரம்பொருளை உபாஸித்து, ப்ரக்ருதிவியுக்த ஆத்மஸ்வரூபமாகிற அக்ஷரநிலையை அடைவதாலேயே இவர்கள் அக்ஷரயாதா2த்ம்யவித்துக்கள் என்றும், இவர்களுடைய ப2லம் 'அக்ஷரக3தி' என்றும் குறிக்கப்படுகிறது என்பது குறிக்கொள்ளத்தக்கது. இதனால் கைவல்யார்த்தி2க்குரிய ப2லம் சொல்லப்பட்டது; இனி, அவனுக்குரிய உபாயம் சொல்லப் படுகிறது,— (யதி3ச்ச2ந்தோ ப்3ரஹ்மசர்யம் சரந்தி) எந்த அக்ஷர நிலையை விரும்புகிறவர்கள் ஸ்த்ரீ ஸங்க3மமின்மையாகிற ப்3ரஹ்ம சர்யத்தை அநுஷ்டி2க்கிறார்களோ. இத்தால், "பூ4தபா4வோத்3ப4வகர: விஸர்க்க3: கர்மஸம்ஜ்ஞித:" [8-3] என்னும் ஶ்லோகப்பகுதியில் இக் கைவல்யநிஷ்ட2னுக்கு அறியத்தக்கதாகச் சொல்லப்பட்ட ஸ்த்ரீ ஸம்பே4ாக3ம் — இவன் இதை அடியோடு வெறுத்து விலக்கவேண்டும் என்பதற்காகவே அங்கு அறியத்தக்கதாகப் படி2க்கப்பட்டது என்று தெளிவாக விளங்குகிறது. ப4க3வத் ப்ராப்திகாமனான உபாஸகனுக்கு, விஹித விஷயமான தன் மனைவியோடு, யோக3த்திற்கு முரணல்லாத விஹித காலத்தில் தொடர்பு கொள்வது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவனுக்கு அத்தகைய ஸ்த்ரீஸங்க3மமும் கூடாது என்று இதிலிருந்து விளங்குகிறது. இதற்குக் காரணம் என்னவெனில்: ஸ்த்ரீஸங்க3ம லேஶமிருந்தாலும், ஆத்மா ப்ரகாஶிப்பதற்கு அவஶ்யாபேக்ஷிதமான ப்ரக்ருதியில் பற்றறுகை ஸித்3தி4க்காது என்பதேயாகும். சா2ந் தோ3க்3யத்தில் "அத2யத்3யஜ்ஞ இத்யாசக்ஷதே ப்3ரஹ்மசர்யமேவ தத்" [8-5-1] என்று தொடங்கி ப்3ரஹ்மத்தை அடைவிக்கும் சர்யைக ளாகையாலே ப்3ரஹ்மசர்யமாகப் படிக்கப்பட்ட யஜ்ஞம் முதலான வற்றையும் இங்கு ப்3ரஹ்மசர்ய ஶப்3த3தா3ர்த்த2மாகக் கொள்ளலாம் என்று தாத்பர்யசந்த்3ரிகையில் அருளிச்செய்யப்பட்டது. கீ3தா (8-3) பா4ஷ்யத்தையொட்டி, இவ்வர்த்த2த்திலும், ஸ்த்ரீஸங்க3மமின்மை யாகிற ப்3ரஹ்மசர்யம் அடங்கியிருப்பதாகக் கொள்ளவேண்டும். இப்படி ப்3ரஹ்மசர்யமாகிற உபாயாநுஷ்ட2ானத்தைக் குறிக்கொண்டு நோக்கவேண்டியவர்களாகையாலேயே, இவர்கள் "வீதராக3ா: யதய:" [பற்றற்றவர்கள்; புலனடக்கம் உள்ளவர்கள்] என்று இந்த ஶ்லோ கத்தின் இரண்டாம் பாத3த்திலும் குறிக்கப்பட்டுள்ளனர். (தத் பத3ம் தே ஸங்க்3ரஹேண ப்ரவக்ஷ்யே) எல்லா வேதா3ந்தங்களிலும் ப்ர ஸித்3த4மான எனது ஸ்வரூபமான அந்த அக்ஷரத்தை, (அக்ஷர நிலையை அடைவதற்காக) எப்படி உபாஸிக்கவேண்டும் என்பதை, (மேலே இரண்டு ஶ்லோகங்களாலே) சுருக்கமாகக் கூறுகிறேன். 'யத்'

सर्वद्वाराणि संयम्य मनो हृदि निरुध्य च ।
मूर्ध्न्याधायात्मनः प्राणम् आस्थितो योगधारणाम् ॥ १२ ॥
ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्मामनुस्मरन् ।
यः प्रयाति त्यजन् देहं स याति परमां गतिम् ॥ १३ ॥

12. ஸர்வத்3வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி3 நிருத்4ய ச ।
மூர்த்4ந்யாதா4யாத்மந: ப்ராணம் ஆஸ்தி2தோ
யோக3தா4ரணாம் ॥

13. ஓமித்யேகாக்ஷரம் ப்3ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந் ।
ய: ப்ரயாதி த்யஜந் தே3ஹம் ஸ யாதி பரமாம் க3திம் ॥

ஸர்வத்3வாராணி—(அறிவு வெளிப்படும்) த்3வாரங்களாயிருக்கும் எல்லா ஞானேந்திரியங்களையும், **ஸம்யம்ய**—(தமது தொழிலைச் செய்யாதபடி) அடக்கி, **மந:**—மனத்தை, **ஹ்ருதி3**—ஹ்ருத3யகமலத்திலிருக்கும் அக்ஷர புருஷனான என்னிடத்தில், **நிருத்4ய**—ஈடுபடுத்தி, **யோக3 தா4ரணாம்**—என்னிடத்தில் அசையாத நிலையை, **ஆஸ்தி2த:**-

---

12. பொறிவாச லெல்லா மடைத்தகவாய்ப் புந்தி
நெறியாக்கி மீது நிறுத்திச்—செறியோக
னோங்காரஞ் செப்பியெனை யுன்னி யுடலொழித்துப்
போங்காற் பரமகதி போம்.

'தத்' என்னும் பத3ங்கள் வேதா3ந்த ப்ரஸித்3தி4யைக்காட்டுகின்றன. பத3ஶப்3த ப்ரஸித்3தா4ர்த்த2ங்களான திருவடி, பரமபத3ம் என்னும் அர்த்த2ங்கள் இங்கு ப்ரகரணத்திற்குப் பொருந்தமாட்டாவாகையால், ''பத்3யதே-க3ம்யதே சேதஸா'' [மனத்தால் நினைக்கப்படுவது பத3ம்] என்னும் வ்யுத்பத்தியாலே, உபாஸிக்கப்படும் பரமாத்மஸ்வரூபத்தைப் பத3ஶப்3த3ம் குறிக்கிறது. அது அக்ஷரஶப்3த3த்தால் விஶேஷிக்கப்பட்டிருக்கையால், ப்ராக்ருதவிகாரம் முதலான தோ3ஷங்களற்ற பரமாத்மஸ்வரூபத்தைக் குறிக்கிறது. ப்ராக்ருதவிகாராதி3 தோ3ஷமற்ற தன் ஆத்மஸ்வரூபத்தை அடைவதற்காகவே இங்கு இத்தகைய பரமாத்மோபாஸனம் விதி4க்கப்படுகிறது என்பது தெளிவு. 11.

அடைந்தவனாய், ப்3ரஹ்ம—ப்3ரஹ்மமாகிற எனக்கு வாசகமான, ஓம் இதி ஏகாக்ஷரம்—ப்ரணவமாகிற முக்2யாக்ஷரத்தை, வ்யாஹரந் — சொல்லாநிற்பவனாய், மாம்—(அதற்குப் பொருளான) என்னை, அநுஸ்மரந்-அநுஸந்தி4யாநிற்பவனாய், ஆத்மந:— தன்னுடைய, ப்ராணம்—ப்ராணவாயுவை, மூர்த்4நி—(தனது) தலையில், ஆதா4ய—(தலையிலிருக்கும் ஸுஷும்நா நாடி வழியாகப்) பிரவேசிக்கச் செய்து, தே3ஹம்—ஶரீரத்தை, த்யஜந் ய:—விடுகின்றவன் எவனோ, ஸ:—அவன், பரமாம்—(ஸம்ஸாரத்திற்குத்) திரும்பி வருதல் இல்லாத, க3திம்—ப்ராப்யமான ப்ரக்ருதி வியுக்தமான தன் ஆத்மஸ்வரூபத்தை, யாதி—அடைகிறான்.

பொறி வாசல் எல்லாம்—(அறிவு வெளிப்படும்) வாசல்களாயிருக்கும் ஞானேந்திரியங்கள் அனைத்தையும், அடைத்து—(தமது தொழிலைச் செய்யாதபடி) அடக்கி, புந்தி—மனத்தை, அகவாய்—ஹ்ருத3ய கமலத்திலிருக்கும் அக்ஷரபுருஷனான என்னிடத்திலே, நெறியாக்கி—ஈடுபடுத்தி, செறி யோகன் — (என்னிடத்தில்) அசையாத நிலையை அடைந்தவனாய், ஓங்காரம் செப்பி—(என்னைச் சொல்லும்) ப்ரணவமாகிற ஓரெழுத்தைச் சொல்லி, எனை உன்னி—(அதன் பொருளான) என்னை அநுஸந்தி4த்து, மீது நிறுத்தி — (தனது ப்ராணவாயுவைத்) தலையிலே (மூர்த்த4ன்ய நாடி வழியாகப்) புகச்செய்து, உடல் ஒழித்து போங்கால்—உடலை விட்டுப்போகும் ஸமயத்தில், பரமக3தி போம்—(முற்கூறிய கைவல்யார்த்தி2) ஸம்ஸாரமண்ட3லத்திற்குத் திரும்பி வருதலில்லாததாகையாலே மிகச்சிறந்த ப்ராப்யமான ப்ரக்ருதிவியுக்தமான தன் ஆத்மஸ்வரூபத்தை அடைவான்.

12, 13. சுருக்கமாகச் சொல்லுவதாகச் சென்ற ஶ்லோகத்தில் ப்ரதிஜ்ஞை செய்தபடி உபாஸநப்ரகாரத்தையும், அந்திமஸ்ம்ருதி ப்ரகாரத்தையும் இவ்விரு ஶ்லோகங்களில் கூறுகிறான். (ஸர்வ

॥भा॥ सर्वाणि श्रोत्रादीनीन्द्रियाणि ज्ञानद्वारभूतानि संयम्य— स्वव्यापारेभ्यो विनिवर्त्य, हृदयकमलनिविष्टे मय्यक्षरे मनो निरुध्य, योगाख्यां धारणामास्थितः — मय्येव निश्चलां स्थितिमास्थितः,

த்₃வாராணி ஸம்யம்ய) ஜ்ஞானம் வெளிப்படும் வழிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து இந்திரியங்களையும் நன்கு அடக்கி, யோக₃ப்ரகரணமாகையாலே, தே₃ஹத்திலுள்ள நவத்₃வாரங்களை த்₃வாரஶப்₃த₃த்திற்குப் பொருளாகச் சொல்லுவது பொருந்தாது. ஸூக்ஷ்மமான ஜ்ஞானத்திற்கே இவை வழிகளாகை யாலே. வெளியே தெரியும் த்₃வாரமற்ற மெய், வாய் (நா) என்னும் இந்திரியங்களையும் த்₃வாரம் என்னக் குறையில்லை. இவற்றை நன்கு அடக்குவதாவது, — அஷ்டாங்க₃யோக₃த்தில் ஓரங்க₃மான ப்ரத்யாஹாரத்தில் சொன்ன முறையில் ஶப்₃த₃ம், ஸ்பர்ஶம், ரூபம், ரஸம், க₃ந்த₄ம் என்னும் தத்தமக்குரிய ப்ராக்ருத விஷயங்களில் பட்டிமேயாதபடி இவ்விந்திரியங்களைத் திருப்புகையே யாகும். (மநோ ஹ்ருதி₃ நிருத்₄ய ச) மனத்தை ஹ்ருத₃யகமல வாஸியான என்னிடத்தில் ஈடுபடுத்தி. 'ஹ்ருத்' என்னும் ஹ்ருத₃யத்தைக் குறிக்கும் ஶப்₃த₃ம் அதில் அந்தர்யாமியாக எழுந்தருளி யிருக்கும் பரமபுருஷனை லக்ஷணையாலே காட்டுகிறது. இப்படிக்கொண்டால்தான் 'மாம் அநுஸ்மரந்' என்று அடுத்த ஶ்லோகத்தில் கூறியிருப்பது பொருந்தும். "ஆத்மந: ப்ராணம் மூர்த்₄நி ஆத₄ாய" என்றவிடத்தில் சொல்லப்படும் காரியம் உடலை விடும்போது செய்யவேண்டியதாகையால், 'பாட₂க்ரமத்தைக்காட்டி லும் அர்த்த₂க்ரமம் வலிமைமிக்கது' என்னும் நியாயத்தையொட்டி அவ்விடத்திலேயே ப₄ாஷ்யத்தில் விவரிக்கப்பட்டது. அதன் கருத்தை அங்கேயே காண்போம். (யோக₃ த₄ாரணாம் ஆஸ்தி₂த:) யோக₃ம் எனப்படும் த₄ாரணையை – ஸ்தி₂தியை – அடைந்தவனாய்; என்னிடத் தில் அசையாத நிலையை அடைந்தவனாய் என்றபடி. "யோக₃ஸ்ய த₄ாரணா" என்று ஷஷ்டீ₂ தத்புருஷஸமாஸம் கொள்வதைக்காட்டி லும், யோக₃ம் எனப்படும் த₄ாரணை' என்னும் கர்மத₄ாரயஸமாஸம் கொள்வது சிறந்தது என்பது நிஷாத₃ஸ்த₂பதி ந்யாயஸித்₃த₄மாகை யால், இங்கு அஷ்டாங்க₃யோக₃த்தில் ஓரங்க₃மான த₄ாரணையைச் சொல்லாமல், யோக₃மாகிற த₄ாரணையைச் சொல்லுகிறது. (ஓமித் யேகாக்ஷரம் ப்₃ரஹ்ம வ்யாஹரந்) ப்₃ரஹ்மமாகிற என்னைச் சொல்லுவ தாகையாலே 'ப்₃ரஹ்ம' எனப்படும் ஒற்றை எழுத்தான ஓங்காரத்தை மூன்று மாத்திரைகளோடும், நாலாவதான அர்த்த₄மாத்திரையோடும்

ओमित्येकाक्षरं ब्रह्म व्याहरन्, मामनुस्मरन्,

உச்சரித்து. "ப்ரதமா ரக்தபீதா மஹத் ப்ரஹ்மதைவத்யா, த்விதியா வித்யுமதீ க்ருஷ்ணா விஷ்ணுதைவத்யா, த்ருதியா ஶுபா ஶுக்லா ருத்ரதைவத்யா, யாऽவஸாநேऽஸ்ய சதுர்த்யர்த்தமாத்ரா வித்யுமதீ ஸர்வவர்ணா புருஷதைவத்யா" [அதர்வஶிகை] [சிவப்பும் மஞ்சளும் கலந்த பெரியோனான பிரமனை தெய்வமாகக் கொண்டது முதல் மாத்திரை. மின்னலோடு கூடிய கார்நிறமுடைய விஷ்ணுவை தெய்வமாகக் கொண்டது இரண்டாவது மாத்திரை. ஶுத்த வெள்ளைநிறங்கொண்ட ருத்ரனை தெய்வமாகக்கொண்டது மூன்றாவது மாத்திரை. மின்னலோடுகூடிய எல்லா வர்ணங்களும் கொண்ட புருஷனை தெய்வமாகக்கொண்டது கடைசியில் நாலாவதாக உள்ள அர்த்தமாத்திரை] என்கிறபடியே மூன்றரை மாத்திரையோடும் கூடிய ப்ரணவத்திற்குப் புருஷனெனப்படும் ப்ரஹ்மமாகிற நாராயணனே பொருள் என்று உபநிஷத் ஓதிற்றன்றோ. இரண்டாவது மாத்திரைக்குப் பொருளான விஷ்ணு நாராயணனின் அவதாரமாயிருப்பவன் என்பதும், முதல் மூன்றாவது மாத்திரைகளுக்குப் பொருளான ப்ரஹ்மருத்ரர்கள் பரமபுருஷனுடைய அம்ஶம்பெற்ற ஶரீரமாயிருப்பவர்கள் என்பதும் ஸர்வஶாஸ்த்ர ப்ரஸித்தம். (ஏகாக்ஷரம்) 'அ' 'உ' 'ம்' என்று மூன்று எழுத்துக்கள் கொண்டதாயினும், ஸம்ஹிதாகாரத்தில் 'ஓம்' என்று ஒரே எழுத்தாயிருக்கையாலே 'ஏகாக்ஷரம்' (ஒற்றையெழுத்து) எனப்பட்டது. அன்றிக்கே, வேதமனைத்துக்கும் வித்தாய், மூலமாயிருக்கையாகிற முக்கியத்துவத்தையிட்டு 'ஏகாக்ஷரம்' என்கிறதாகவுமாம்.

"மூலமாகிய ஒற்றையெழுத்தை
மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி
வேலைவண்ணனை மேவுதிராகில்
விண்ணகத்தினில் மேவலுமாமே"

[பெரியாழ்வார் திரு 4-5-4]

என்றார் பெரியாழ்வாரும். இனி, "ப்ருஹயதி இதி ப்ரஹ்ம" என்னும் வ்யுத்பத்தியின்படி தன்னை அநுஸந்திப்பவனுக்கு இந்த ப்ரணவமானது தனக்குப் பொருளான ஸர்வேஶ்வரனை நினைவுறுத்துவதன் மூலம் உபகாரகமாகவுமிருக்கிறது என்று காட்டுகிறான் மேலே (மாம் அநுஸ்மரந்) இந்த ப்ரணவத்திற்குப் பொருளான என்னை

அநுஸந்தி₄த்துக்கொண்டிருப்பவனும்; ப்ரணவத்திற்குப் பொருளாயிருப்பவன் ஸ்ரீமந் நாராயணனே என்பதைப் பல ஶ்ருதிஸ்ம்ருதிகள் அறிவித்தன:— கட₂வல்லியில், "ஸர்வே வேதா₃ யத் பத₃மாமநந்தி தபாம்ஸி ஸர்வாணி ச யத்₃வத₃ந்தி । யதி₃ச்ச₂ந்தோ ப்₃ரஹ்மசர்யம் சரந்தி தத் தே பத₃ம் ஸங்க்₃ரஹேண ப்₃ரவீமி — ஓமித்யேதத் ॥ " [கட₂ 2-15] [எல்லா வேத₃ங்களும் எந்த ப்₃ரஹ்மஸ்வரூபத்தை ஓதுகின்றனவோ, ப்₃ரஹ்ம ப்ராப்தி ஸாத₄னமான தவங்களை ப்ரதா₄னமாகக் கூறும் உபனிஷத்துக்களும் எதைக் கூறுகின்றனவோ, எதை அடையவிரும்பி ப்₃ரஹ்மசர்யத்தை அநுஷ்டி₂க்கின்றனரோ, அந்த ப்₃ரஹ்மஸ்வரூபத்தை உனக்குச் சுருக்கமாகக் கூறுகிறேன்; ஓம் என்பதே அது.] என்று ஓங்காரம் ப்₃ரஹ்மஸ்வரூபத்தைச் சுருக்கமாகக் காட்டுவது என்று விளக்கப்பட்டது. "ப்ரணவோ த₄நு: ஶரோ ஹ்யாத்மா ப்₃ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே । அப்ரமத்தேந வேத்₃த₄வ்யம் ஶரவத் தந்மயோ ப₄வேத் " [முண்ட₃க 2-2-8] [ப்ரணவம் வில்லாகும்; ஆத்மா அம்பாகும்; ப்₃ரஹ்மம் இவ் வம்புக்கு இலக்காகும். ப்ரணவமாகிற வில்லில் ஆத்மாவாகிற அம்பைப்பூட்டி கவனத்துடன் ப்₃ரஹ்மத்தைக் குறித்து எய்யவேண்டும். (அப்படி எய்தால் அம்பு இலக்கோடு ஒன்றுவதுபோலே) ஆத்மா ப்₃ரஹ்மத்தோடு ஒன்றுகிறான்.] என்று முண்ட₃கோபனிஷத்திலும் இவ்வர்த்த₂ம் அழகாக உருவகப்படுத்தப்பட்டது. " ஆத்மாநமரணிம் க்ருத்வா ப்ரணவம் ச உத்தராரணிம் । த்₄யாந நிர்மத₂நாப்₄யாஸாத் பஶ்யேத் ப்₃ரஹ்மாக்₃நிகூ₃ட₄வத் ॥ " [ஆத்மாவைக் கீழேயுள்ள அரணிக்கட்டையாகவும், ப்ரணவத்தை மேலேயுள்ள அரணிக் கட்டையாகவும் கொண்டு, த்₄யானமாகிற கடைதலை விடாமற்செய்தால், அரணியில் மறைந்திருக்கும் நெருப்பைக் காண்பதுபோல், ப்ரணவத்தில் பொருளாகவும், ஆத்மாவில் அந்தர்யாமியாகவும் மறைந்திருக்கும் ப்₃ரஹ்மத்தைக் காணலாம்.] என்று த்₄யாநபிந்தூ₃பனிஷத்தில் இவ்வர்த்த₂ம் மற்றொரு வகையாக உருவகப் படுத்தப்பட்டது. " ஓமித்யேவம் த்₄யாயத₂ாத்மாநம் " [முண்ட₃க 2-2-6] [இவ்வண்ணமாக ஓங்காரத்தாலேயே பரமாத்மாவை தியானிக்கவேண்டும்] " ய: புநரேதம் த்ரிமாத்ரேண ஓமித்யநேநைவ அக்ஷரேண பரம் புருஷமபி₄த்₄யாயீத...ஸ பராத்பரம் புரிஶயம் புருஷமீக்ஷதே ॥ " [ப்ரஶ்ந 5-5] [எவனொருவன் மூன்று மாத்திரைகள் கொண்ட 'ஓம்' என்னும் இந்த எழுத்தாலேயே பரம புருஷனை தியானிக்கிறானோ......அவன் மேலானவற்றைக் காட்டிலும் மேலானவனாய், அந்தர்யாமியான புருஷனைக் காண்கிறான்.]

"வஹ்நேர் யதா₂ யோநிக₃தஸ்ய மூர்த்திர் ந த்₃ருஶ்யதே நைவ ச லிங்க₃நாஶ: । ஸ பூ₄ய ஏவேந்த₄நயோநிக்₃ருஹ்யஸ் தத்₃வோப₄யம் வை ப்ரணவேந தே₃ஹே ॥ ஸ்வதே₃ஹமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம் । த்₄யாநநிர்மத₂நாப்₄யாஸாத் தே₃வம் பஶ்யேத் நிகூ₃ட₄வத் ॥" [ஶ்வே 1-13, 14] [நெருப்புக்குக் காரணமான அரணியிலுள்ள நெருப்பின் ஸ்வரூபம் (கடையாமலிருக்கும்போது) காணப்படுவதில்லை; அதனால் அதில் நெருப்பு இல்லை என்ன முடியாது. மறுபடி கடைந்தால் அதிலுள்ள நெருப்பு உண்டாகவே செய்கிறது. அதுபோலே பரமாத்மதே₃ஹமான ஜீவஸ்வரூபத்தை ப்ரணவத்தைக்கொண்டு ஆராய்ந்தால், அந்த ஜீவனுக்குள் அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்மா காணப்படுகிறான். பரமாத்மதே₃ஹமான தன் ஆத்மாவைக் கீழ் அரணிக்கட்டையாகவும், ப்ரணவத்தை மேல் அரணிக்கட்டையாகவும் கொண்டு த்₄யானமாகிற கடைதலை விடாமற்செய்தால், அரணியில் மறைந்திருக்கும் நெருப்பைக் காண்பதுபோல், ப்ரணவத்தில் பொருளாகவும், ஆத்மாவில் அந்தர்யாமியாகவும் மறைந்திருக்கும் ப்₃ரஹ்மத்தைக் காணலாம்.] என்று மற்றும் பல உபனிஷத்துக்களில் இவ்வர்த்தம் உரைக்கப்பட்டது. யோக₃யாஜ்ஞவல்க்யத்தில், இங்கு கடைசியில் எடுத்த ஶ்வேதாஶ்வதர மந்திரம் அப்படியே படிக்கப்பட்டு, கடைசிப் பாதம் மாத்திரம் "விஷ்ணும் பஶ்யேத் ஹ்ருதி₃ ஸ்தி₂தம்" என்று படித்திருப்பதால் இப்பரமாத்மா விஷ்ணுவே என விளங்கிறது. "காம்ஸ்யக₄ண்டாநிநாத₃ஸ்து யதா₂ லீயதி ஶாந்தயே । ஓங்காரஸ்து ததா₂ யோஜ்ய; ஶாந்தயே ஶாந்திமிச்ச₂தா ॥ யஸ்மிந் ஸ லீயதே ஶப்₃த₃ஸ் தத் பரம் ப்₃ரஹ்ம கீ₃யதே ॥" [வெண்கலமணியில் ஓசை படிப்படியாக ஶாந்தி (ஓய்வு) அடைவதுபோல், ஶாந்தியை விரும்புகிறவன் ஓங்காரத்தையும் படிப்படியாக ஶாந்தியடைவதாக உச்சரிக்கவேண்டும். அந்த ஓங்காரம் எவனிடம் லயமடைகிறதோ அவனே பரப்₃ரஹ்மம் எனப்படுகிறான்] என்று மற்றொருபனிஷத்திலும் படிக்கப்பட்டது. "ஓம் க₂ம் ப்₃ரஹ்ம ஓம் க₂ம் புராணம்" [ப்₃ருஹ 7-1-2] "ஓமிதி ப்₃ரஹ்ம ஓமிதி₃ம் ஸர்வம்" [தை-ஶீக்ஷா 8-1] "ஓங்காரமேவேத₃ம் ஸர்வம்" [சா₂ந் 2-23-2] என்று ஓங்காரமானது ப்₃ரஹ்மத்தைச் சொல்லுவதாகையாலே, ப்₃ரஹ்மத்துள்ளடங்கிய எல்லாப் பொருள்களையுமே சொல்லும் என்று பல உபனிஷத்துக்கள் காட்டின. "ய ஓங்கார: ஸ ப்ரணவோ ய: ப்ரணவ: ஸ ஸர்வவ்யாபீ யஸ் ஸர்வவ்யாபீ ஸோऽநந்த:" என்று அத₂ர்வஶிரஸ்ஸிலும் ஓங்காரம் ஸர்வவ்யாபியான அநந்தனைச் சொல்லுவதென்று காட்டப்பட்டது.

"அஹமேக: ப்ரத$_2$மமாஸம் வர்த்தாமி ச ப$_4$விஷ்யாமி ச நான்ய: கஶ்சிந் மத்தோ வ்யதிரிக்த:" [நான் ஒருவனே முக்காலத்திலுமிருப்பவன்; என்னைத் தவிர வேறு எவனும் அப்படியிருக்கவில்லை.] என்று ருத்$_3$ரன் கூறுவதாக வரும் இவ்வத$_3$ர்வ ஶிரஸ்ஸு ருத்$_3$ரபரமன்றோ? என்னில்: ப்ரதர்த்த$_3$ந வித்$_3$யையில் இந்திரன் தன்னைப் பரமாத்மாவாகப் பேசிக்கொண்டது அந்தர்யாமியான பரமாத்மாவைக்கருதி என்று நிர்வஹித்ததுபோல் இங்கும் நிர்வஹிக்கவேண்டும் என்பது பூர்வாசார்ய க்$_3$ரந்த$_2$ங்களிலும், அவற்றையொட்டி நமது விஷ்ணு சித்தவிஜயத்திலும் நிரூபிக்கப்பட்டது. ஸ்ம்ருதி வசனங்களும் ஓங்கார வாச்யன் கேசவனே என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. "ஓமித்யேவம் ஸத$_3$ா விப்ரா: பட$_2$த்$_4$வம் த்$_4$யாத கேஶவம்" [ஹரிவம்ஶம் விஷ்ணுபர்வம் 133-10] [அந்தணர்களே! 'ஓம்' என்றே எப்போதும் அநுஸந்தி$_4$த்துக்கொண்டு, கேஶவனை தியானியுங்கள்.] என்று ஹரிவம்ஶத்தில் கூறப்பட்டது.

"தே$_3$வதாயா: பராயாஶ்ச ஹ்யாலம்ப$_3$: ப்ரணவ: ஸ்ம்ருத: |
கஶ்சிதா$_3$ராத$_4$நாகாமோ விஷ்ணோர் ப$_4$க்த்யா கரோதி வை ||
தத$_3$ாராத$_4$ந ஸாந்நித்$_4$யே ப்ரதிமாம் வ்யஞ்ஜிகாம் யத$_2$ா |
த$_4$ாதுத்$_3$ரவ்யாதி$_3$பாஷாணை: க்ருத்வா ப$_4$ாவம் நிவேஶயேத் ||
ஶ்ரத்$_3$த$_4$ாப$_4$க்த்யாத$_3$ராத்$_3$யைஶ்ச தஸ்ய தே$_3$வ: ப்ரஸீத$_3$தி |
ஓங்காரேண தத$_2$ா சாத்மா ஹ்யுபாஸ்தே ஸ ப்ரஸீத$_3$தி ||
ஓமித்யேகாக்ஷரம் ப்$_3$ரஹ்ம வ்யாஹரந்...ஸ யாதி பரமாம் க$_3$திம் ||
ய ஏதம் ப்ரணவேநாத்$_3$யம் அக்ஷரம் ப்ரதிபத்$_3$யதே |
ததோऽக்ஷரேண வேதே$_3$ந வேத்$_3$யம் ப்$_3$ரஹ்மாதி$_4$க$_3$ச்ச$_2$தி ||
ஏதத$_3$ாலம்ப$_3$நம் ஶ்ரேஷ்ட$_2$ம் ஏதத$_3$ாலம்ப$_3$நம் பரம் |
ஏதத$_3$ாலம்ப$_3$நம் ஜ்ஞாத்வா ப்$_3$ரஹ்மபூ$_4$யாய கல்பதே ||
அத்$_3$ருஷ்டவிக்$_3$ரஹோ தே$_3$வோ ப$_4$ாவக்$_3$ராஹ்யோ நிராமய: |
தஸ்யோங்கார: ஸ்மருதம் நாம தேநாஹூத: ப்ரஸீத$_3$தி ||
தஸ்மாதே$_3$ாமிதி பூர்வம் து க்ருத்வா யுஞ்ஜீத தத்பர: |
ப்$_3$ரஹ்மோங்காரவித$_4$ாநேந தத்த்வேந ப்ரதிபத்$_3$யதே ||"

[பரதே$_3$வதையைப் பற்றிநிற்பதற்கு ப்ரணவமானது பற்றுசாயிருக்கிறது. விஷ்ணுவை ப$_4$க்தியுடன் ஆராதி$_4$க்க விரும்புமவன், அவ்வாராத$_4$னைக்கு எளிமையை உடைய அர்ச்சைத் திருமேனியை, லோஹம் முதலானவற்றாலும், கற்களாலும் ஏறியருளப்பண்ணி அதில் ப$_4$க்தியைச் செலுத்தக்கடவன். அத்திருமேனியில் செலுத்தும் ஶ்ரத்$_3$தை$_4$, ப$_4$க்தி, அன்பு முதலியவற்றால் அவனிடம் எம்பெருமான்

பேரன்பைச் செய்கிறான். அவ்வெம்பெருமானுக்கும் ஆத்மாவான (த₄ாரகனான) இந்த ஜ்ஞானியன்றோ அவனை ஓங்காரத்தால் உபாஸிக்கிறான். ஆகையால் இவன் விஷயத்தில் அவன் பேரன்பைச் செய்கிறான். "எல்லா இந்திரியங்களையும் அடக்கி, மனத்தை ஹ்ருத₃யத்தில் உள்ள என்னிடம் ஈடுபடுத்தி, என்னிடம் அசையாத நிலையை அடைந்தவனாய், ப்₃ரஹ்மமாகிற எனக்கு வாசகமான 'ஓம்' எனும் ஒற்றையெழுத்தைச் சொல்லாநிற்பவனாய், அதற்குப் பொருளான என்னை அனுஸந்தி₄யாநிற்பவனாய், தனது ப்ராணவாயுவைத் தனது தலையில் பிரவேசிக்கச்செய்து, ஶரீரத்தை விடுகிறவன் எவனோ, அவன் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதல் இல்லாத ப்ராப்யமான ப்ரக்ருதிவியுக்தமான தன் ஆத்மஸ்வரூபத்தை அடைகிறான்." எவனொருவன் இப்ரணவத்தினால், ஆதி₃புருஷனாய், அழிவற்றவனான பரம்பொருளையே அடைய விரும்புகிறானோ, அவன் (ப்ரணவ விவரணமாய்) அழிவற்றதாய், வேத₃மனைத்தையும் தன்னுள்ளே அடக்கியிருப்பதான அஷ்டாக்ஷரத்தினால் அறியத்தக்க பரப்ரஹ்மத்தையே அடைகிறான், (விவரணத்தோடு கூடிய) இந்த ப்ரணவத்தைப் பற்றிநிற்பதே சிறந்ததும், மேலானதுமாகும். பற்றுசான இதை அறிவதனால் ப்₃ரஹ்மம்போலே ஆகிறான். குறையற்ற பரமாத்மா, கண்ணால் காண்பரிய திருமேனியை உடையவனாய், தியானத்தினாலேயே அறியத்தக்கவனாயிருக்கிறான். அவனுக்கு ஓங்காரமே நாமமாகிறது. அதையிட்டு அழைத்தால் அவன் பேரன்பு செய்கிறான். ஆகையால் ப₄க₃வானைக் குறித்து யோகம் செய்பவன், ஓங்காரத்தை முன்னிட்டுக்கொண்டே யோக₃ம் செய்யக் கடவன். இப்படி ஓங்காரத்தைக்கொண்டு உபாஸிப்பதனால் ப்₃ரஹ்மமானது உள்ளபடி அறியப்படுகிறது] என்று தாத்பர்யசந்த்₃ரிகையில் எடுக்கப்பட்ட யோக₃யாஜ்ஞவல்க்ய வசனம் இவ்வர்த்த₂த்தை விரிவாகக் கூறியது. இவ்வசனத்தில் இந்த கீ₃தா ஶ்லோகங்கள் இரண்டும் அப்படியே எடுத்தாளப்பட்டிருப்பதால் "மாமநுஸ்மரந்" என்னுமிடத்தில் 'மாம்' என்றதை ப₄க₃வத்₃விஷயமாகக்கொள்ள வேண்டும் என்பது தெளிவு. இந்த இரு ஶ்லோகங்களால் கைவல்ய ப்ராப்தியைச் சொல்லிவிட்டு, மேலே அழியாத வேதத்தால் ப்₃ரஹ்மத்தை அடைகிறான் என்றது,— "ததே₃தத₃தே₃ாமிதி। யமுக்த்வா முச்யதே யோகீ₃ ஜந்மஸம்ஸாரப₃ந்த₄நாத்। ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோபாஸக: வைகுண்ட₂பு₄வந லோகம் க₃மிஷ்யதி" [நாராயணோபநிஷத்-அத₂ர்வஶிரஸ்] ['அ, உ, ம்' என்னும் மூன்று அக்ஷரங்களும் சேர்ந்தது 'ஓம்' என்னும் ப்ரணவம். அதை அநுஸந்தி₂ப்பவன் பிறவித்துயரால் ஜீவனைக் கட்டும் ஸம்ஸாரக்கட்டிலிருந்து விடுபடுவான். 'ஓம் நமோ நாராயணாய' என்னும் (ஓங்கார விவரணமான) திருவஷ்டாக்ஷரத்தை உபாஸிப்பவன் வைகுண்ட₂ லோகத்

திற்கே சென்று எம்பெருமானை அடைவான்.] என்னும் நாராயணோபநிஷத்₃ வாக்யத்தை விவரிப்பதாகையாலே 'ஓம்' என்னும் மந்திரத்தை மாத்திரம் உபாஸிப்பவன் ப்ரக்ருதி மண்ட₃லத்திற்கு அப்பாற்பட்டதாய், வைகுண்ட₂லோகத்திற்கு வெளிப்பட்டதான ஓர் ஸ்த₂ானத்தில் பிறவித்துயராறுகையாகிற கைவல்ய மோக்ஷத்தை மாத்திரம் அடைகிறான் என்றும், திருவெட்டெழுத்தையும் ஓதுமவன் 'நமோ நாராயணாய' என்னும் விவரணத்தாலே தன்னிடத்தில் ப்ராப்யத்வபு₃த்₃தி₄ கழியப்பெற்றவனாய், கைவல்ய ப்ராபகனாக நினைத்த எம்பெருமானையே ப்ராப்யமாகவும் விரும்பி ஸ்ரீவைகுண்ட₂ம் சென்று அவனையே அடைகிறான் என்றும் விளங்குகிறது. "அக்ஷரேண வேதே₃ந வேத்₃யம்" என்னும் யாஜ்ஞவல்க்ய வசனம், நாராயணோபநிஷத்தில் "ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோபாஸக:" என்னும் பகுதியையே ரஹஸ்யமாகையாலே மறைத்துச் சொல்லுகிறது. பெரியாழ்வார்—கைவல்யார்த்தி₂யைப் பற்றிய 'ஏடுநிலம்' எனும் பாசுரத்தில், "ஓங்காரத்தை மாத்திரமே அநுஸந்திப்பது என்னும் நியமத்தைவிட்டு, 'நாடும் நகரமும் நன்கறிய நமோ நாராயணாய என்று பாடும்' மனமுடையவர்களாய் வரவேண்டும்" என்று இந்த ஶ்ருத்யர்த்த₂த்தையே வெளிப்படையாகப் பேசினார்.

"விரஜா பரமவ்யோம்நோரந்தரா கேவலம் ஸ்ம்ருதம் ।
தத் ஸ்த₂ாநமநுபே₄ாக்தவ்யமவ்யக்த ப்₃ரஹ்மஸேவிபி₄: ॥"

[விரஜைக்கும், பரமபத₃த்திற்கும் இடைப்பட்டது கேவலஸ்த₂ானம்; தம் ஆத்மாவை அநுப₄விப்பவர்கள் அவ்விடத்திலிருந்தே அநுப₃விப்பார்கள்.] என்னும் பூர்வர்கள் எடுத்துள்ள புராணவசனமும், "பரமேதி விஶேஷணேந முக்தாநாமேவ கேஷாஞ்சித அர்வாசீநா க₃திர் க₃ம்யதே।...ஸம்ஸார பரமபத₃யோர் மத்₄யே தேஷாம் ஸ்த₂ாநம் ச ॥" ['முக்தாநாம் பரமா க₃தி:' (முக்தர்களுக்கு மேலான ப்ராப்யம்) என்று 'பரமா' (மேலான) என்று விஶேஷித்திருப்பதால், முக்தர்களிலேயே சிலர்க்கு (கேவலாத்ம ப்ராப்திரூபமான) தாழ்ந்த ப்ராப்யம் உள்ளதென்று உணர்த்தப்படுகிறது ...... ஸம்ஸாரத்திற்கும் பரமபத₃த்திற்குமிடையே அவர்களுக்கு ஸ்த₂ானமும் சொல்லப்படுகிறது] என்று ப₄ட்டர் அருளிய ஸஹஸ்ரநாம ப₄ாஷ்ய ஸ்ரீஸூக்தியும் இதை வலியுறுத்துகின்றன. நிற்க; இந்த யோக₃யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதியில், ஹைரண்யக₃ர்ப்ப₄ காபில அவாந்தரதபஸ் ஸநத்குமார ப்₃ரஹ்மிஷ்ட₂ பாஶுபத நாமங்களையுடைய ஸித்₃த₄ாந்தங்களில் ஓங்காரத்திற்கு ஹிரண்யக₃ர்ப்ப₄ாதி₃பரமாகப் பல வித₄மான பொருள்களை விவரித்திருந்தபோதிலும், கடைசியில்,

"த்ரிராத்மா த்ரிஸ்வப₄ாவஶ்ச ததா₂ த்ரிவ்யூஹ ஏவ ச ।
பஞ்சராத்ரே ததா₂ ஹ்யேஷ ப₄க₃வத்₃வாசக: ஸ்ம்ருத: ॥

பு3லம் வீர்யம் தத₂ா தேஜ: த்ரிராத்மேதி ச ஸம்ஜ்ஞித: ।
ஜ்ஞாநைஶ்வர்யே தத₂ா ஶக்திஸ் த்ரிஸ்வப₄ாவ இதி ஸ்ம்ருத: ।।
ஸங்கர்ஷணோऽத₂ ப்ரத்₃யும்நோ ஹ்யநிருத்₃த₄ஸ்ததை₂வ ச ।
த்ரிவ்யூஹ இதி நிர்தி₃ஷ்ட ஓங்காரோ விஷ்ணுரவ்யய: ।।
ப₄க₃வத்₃வாசக: ப்ரோக்த: ப்ரக்ருதேர் வாசகஸ் தத₂ா ।
வ்யக்தாவ்யக்தோ வாஸுதே₃வ: ப்ரப₄வ: ப்ரளயஸ் தத₂ா ।।"

[மூன்று ஸ்வருபங்களையும், மூன்று ஸ்வப₄ாவங்களையும், மூன்று வ்யூஹங்களையும் சொல்லும் இவ்வோங்காரம் பஞ்சராத்ரத்தில் ப₄க₃வானைச் சொல்லுவதாகக் கூறப்படுகிறது. ப₃லம், வீர்யம், தேஜஸ் எனும் மூன்றும் அந்த ஸ்வருபங்கள்; ஜ்ஞாநம், ஐஶ்வர்யம், ஶக்தி என்னும் மூன்றும் அந்த ஸ்வப₄ாவங்கள், (ஜ்ஞாநப₃லங்களையுடைய) ஸங்கர்ஷணனும், (ஐஶ்வர்ய வீர்யங்களையுடைய) ப்ரத்₃யும்நனும், (ஶக்தி தேஜஸ்ஸுக்களையுடைய) அநிருத்₃த₄னும் அந்த மூன்று வ்யூஹங்கள். இவ்வண்ணமாக அழிவற்ற விஷ்ணுவாகவேயிருப்பது ஓங்காரம். இது ப₄க₃வானுக்கும், அவனுடைய ப்ரக்ருதி (ப்ரகாரங்) களான சித₃சித்துக்களுக்கும் வாசகமாகும். ஸ்தூ₂ல ஸூக்ஷ்மமான உலகை ஶரீரமாகக்கொண்ட வாஸுதே₃வனே உலகிற்கு உத்பத்தி விநாஶகாரணமாகிறான்.] என்று இவ்வோங்காரம் ப₄க₃வத்பரமாகவே வர்ணிக்கப்பட்டிருக்கையாலும், "ஓங்காரம் விபுலமசிந்த்யமப்ரமேயம் ஸூக்ஷ்மாக்₂யம் த்₄ருவமஜரம் ச யத் புராணம் । தத்₃விஷ்ணோ: பத₃மபி பத்₃மஜப்ரஸூதம் தே₃ஹாந்தே மம மநஸி ஸ்தி₂திம் கரோது ।।" [பெரியதும். அளத்தற்கரியதும் நுண்ணியதும், நிலையானதும், அழியாததும், பழையதும், விஷ்ணுவைச் சொல்லுவதும், (ஆதி₃காலத்தில்) ப்₃ரஹ்மாவினால் உச்சரிக்கப்பட்டதுமான ஓங்காரம் ஶரீரத்தை விடும்போது என் மனத்தில் நிலைநிற்கட்டும்] என்று அந்தியகாலத்தில், விஷ்ணுவைச் சொல்லுவதாக ஓங்காரத்தை நினைக்கவேண்டும் என்று கூறுகையாலும், ஹைரண்யக₃ர்ப்ப₄ாதி₃ ஸித்₃த₄ாந்தங்களில் 'ஹிரண்யக₃ர்ப்ப₄ன்' முதலானோரைச் சொல்லு வதாகக் கூறியது, அவர்களுக்கு அந்தர்யாமியான ப₄க₃வானைச் சொல்லுவது என்னும் கருத்தை உடையது என்றே கொள்ளவேண்டும்.

"தல்லிங்கை₃ரர்ச்சயேந் மந்த்ரைஸ் ஸர்வாந் தே₃வாந் ஸமாஹித: ।
நமஸ்காரேண புஷ்பாணி விந்யஸேத் து யதா₂க்ரமம் ।।
ஆவாஹநாதி₃கம் கர்ம யந்ந ஸூக்தம் மயா த்விஹ ।
தத் ஸர்வம் ப்ரணவேநைவ கர்த்தவ்யம் சக்ரபாணயே ।।
த₃த்₃யாத் புருஷஸூக்தேந ய: புஷ்பாண்யப ஏவ வா ।
அர்ச்சிதம் ஸ்யாத் ஜக₃தி₃த₃ம் தேந ஸர்வம் சராசரம் ।।

விஷ்ணுர் ப்3ரஹ்மா ச ருத்3ரஶ்ச விஷ்ணுரேவ தி3வாகர: ।
தஸ்மாத் பூஜ்யதமம் நாந்யமஹம் மந்யே ஜநார்த்த3நாத் ॥"

[எல்லா தே3வர்களையும், அவரவரைக்குறிக்கும் மந்திரங்களாலே, (அவை அந்தர்யாமியான நாராயணனையே குறிக்கின்றன என்னும் நினைவுடையவனாய் உபாஸகன்) அர்ச்சிக்கக்கடவன். நமஸ்காரத்தோடு புஷ்பங்களையும் முறைப்படி ஸமர்ப்பிக்கக்கடவன். (இன்ன மந்திரங்களைக்கொண்டு செய்யவேண்டும்) என்று என்னால் சொல்லப்படாத இடங்கள் அனைத்திலும் ப்ரணவத்தினாலேயே, சக்ரபாணிக்கு ஆவாஹநம் முதலானவற்றைச் செய்யவேண்டும். புருஷஸூக்தத்தைக்கொண்டு சக்ரபாணிக்குப் பூக்களையும் நீரையும் ஸமர்ப்பிப்பவன், எல்லாச் சராசரங்களுமடங்கிய உலகனைத்தையும் அர்ச்சித்தவனாவான், விஷ்ணுவே பிரமன், உருத்திரன், ஸூர்யன் ஆகிய அனைவர்க்கும் அந்தர்யாமி. ஆகையால் ஜநார்த்த3னனைக் காட்டிலும் வேறெவனையும் பூஜிக்கத்தவன் என்று நான் எண்ணவில்லை.] என்று இந்த யோக3 யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதியில் ப்ரணவத்தினாலேயே ப4க3வத3ர்ச்சனம் சொல்லப்பட்டிருப்பதும் ஓங்காரவாச்யன் ப4க3வானே என்பதை வலியுறுத்துகிறது.

"ஓம்பூ4ர் பு4வஸ்ஸுவர்மஹர்ஜநஸ் தபஸ் ஸத்யமிதி வைதி3கம் ।
ஏதது3ச்சார்ய வை ப்3ரஹ்ம பரே வ்யோம்நி நியோஜயேத் ॥
ஹ்ருத3யேऽக்3நிஶ்ச வாயுஶ்ச ஜீவோ யஸ் ஸமுத்3ராஹ்ருத: ।
ஓங்காரபத்3மநாளே து உத்3த்4ருத்யோபரி யோஜயேத் ॥
அப்ராணச்சூ2ந்யபூ4தாத்து சேதோऽங்க3ம் ஜீவஸம்ஜ்ஞிதம் ।
ஜாயதே து யதஸ் தஸ்மாத் புநஸ் தத்ர நிவேஶயேத் ॥
க4ண்டாஶப்3த3வதே3ாங்காரமுபாஸித ஸமாஹித: ।
புருஷம் நிர்மலம் ஶுப்4ரம் பஶ்யேத்3வை நாத்ர ஸம்ஶய: ॥"

என்று இந்த யோக3யாஜ்ஞவல்க்யத்தில் யோக3ஶாஸ்த்ர ப்ரக்ரியையில் ப4க3வது3பாஸனத்தைச் சொல்லிவரும்போது, மணியோசைபோல் (படிப்படியாக ஓய்வதாக) ஓங்காரத்தை உபாஸிப்பதன்மூலம் பரம புருஷனை ஸாக்ஷாத்கரிக்கலாம் என்று கூறியிருப்பதும் இதை உறுதிப்படுத்துகிறது. பதஞ்ஜலியின் யோக3ஸூத்ரத்தில், "க்லேஶ கர்மவிபாகாஶயைரபராம்ருஷ்ட: புருஷவிஶேஷ ஈஶ்வர: । தஸ்ய வாசக: ப்ரணவ: ॥" [1-24, 25] [க்லேஶம், கர்மம், விபாகம், ஆஶயம் ஆகியவற்றால் தொடப்படாத சிறந்த புருஷனே ஈஶ்வரன். அவனைச் சொல்லுவது ப்ரணவம்] என்று இவ்வர்த்த2ம் சொல்லப்பட்டிருப்பது ஸுப்ரஸித்3த4ம். (மாமநுஸ்மரந்) 'மாம்' என்று தன்னைக்காட்டுகையால், ஓங்காரத்தை உச்சரித்துக் கொண்டிருக்கும்போதே தி3வ்ய மங்க3ளவிக்3ரஹத்தோடு கூடிய தன்னைச் சிந்திக்கவேண்டும் என்றும்

आत्मनः प्राणं मूर्ध्न्याधाय देहं त्यजन् यः प्रयाति ; स याति परमां गतिं—प्रकृतिवियुक्तं मत्समानाकारमपुनरावृत्तिमात्मानं प्राप्नोतीत्यर्थः।

விதி4க்கிறான். இப்படி விதி4ப்பதற்குக் கருத்து என்னவெனில்: ஓங்காரத்தினாலே, 'அகாரவாச்யனான பரமபுருஷனுக்கு நான் ஶேஷபூ4தன்' என அறிந்து, பரமபே4ாக்3யமான அவனது திருமேனியையும் சிந்தித்தானாகில், இக்கைவல்யார்த்தி2க்கு அணுவான ஆத்மாவில் போ4க்3யதாபு3த்3தி4 கழியப்பெற்றுப் பரமபுருஷோபாஸகனாக ஆகக்கூடும் என்னும் திருவுள்ளத்தாலேயே எம்பெருமான் இப்படி விதி4க்கிறான் என்று கண்டுகொள்வது "பிறவித்துயரற ஞானத்துள் நின்று துறவிச்சுடர்விளக்கம் தலைப்பெய்வார் அறவனை ஆழிப்படை அந்தணனை மறவியையின்றி மனத்து வைப்பாரே" [திருவாய் 1-7-1] என்று ஆழ்வார் அருளிச்செய்தபடியே அந்திமஸ்ம்ருதி பர்யந்தம் இப்படி ஆழியானை அநுஸந்தி4த்த பின்பும், பாபப்ராசுர்யத்தாலே கையும் திருவாழியுமான அழகில் ஈடுபடாமலும், தங்களுடைய ஆத்மாவில் நசை தீரப் பெறாமலும் அவனைத் தங்களது ப்ராப்யமான கைவல்யத்தைப் பெறுவதற்கு விரோதி4யான பாபங்களைப் போக்கடிக்கவல்ல திருவாழியையுடையவன், ப்ராக்ருத தோ3ஷங்களில்லாத ஶுத்3த4ன் என்றே அநுஸந்தி4த்தார்களாகில், வேறு வழியில்லாமல் இவர்கள் விரும்பிய கேவலாத்மாநுப4வரூபமான கைவல்யமோக்ஷத்தைக் கொடுக்கிறான் என்று கண்டுகொள்வது. (ஆத்மந: ப்ராணம் மூர்த்4நி ஆதா4ய) தனது ப்ராணவாயுவைத் தனது தலையிலேயிருக்கும் மூர்த்த4ன்ய நாடி எனப்படும் ஸுஷும்நாநாடி வழியில் பிரவேஶிக்கச்செய்து. "ஶதம் சைகா ச ஹ்ருத3யஸ்ய நாட்3யஸ் தாஸாம் மூர்த்தா4நமபி4நிஸ்ஸ்ருதைகா | தயோர்த்4வமாயந் அம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே ப4வந்தி" [சா2ந் 8-6-6] [ஹ்ருத3யத்திலிருந்து நூற்றொரு நாடிகள் செல்கின்றன. அவற்றில் தலையை நோக்கிச்செல்வது ஒரு நாடி. அதன் வழியாகச் செல்பவனே மோக்ஷமடைகிறான். மற்ற நாடிகளின் வழியாகச் செல்பவர்கள் மற்ற ஸாம்ஸாரிக ப2லன்களை அடைகிறார்கள்.] என்று உபனிஷத் ஓதுகையாலே, மோக்ஷத்தை அடைய விரும்பும் இவன் தனது ப்ராணனை அந்திமகாலத்தில் தலையிலுள்ள மூர்த்த4ந்யநாடி எனப்படும் ஸுஷும்நாநாடியில் பிரவேசிக்கச் செய்யவேண்டும் என்று கூறுகிறான். இதிலிருந்து இக்கைவல்ய நிஷ்ட2ன் மோக்ஷத்தை அடைய விரும்பும் முமுக்ஷுவேயொழிய, ஸம்ஸாரமண்ட3லத்திலேயே இருந்து ஒரு ப2லனை அநுப4விக்க விரும்பும் பு3பு4க்ஷுவல்லன் என விளங்குகிறது. (தே3ஹம் த்யஜந் ய: ப்ரயாதி) ஸ்தூ2லஸூக்ஷ்ம தே3ஹங்களை அடியோடு விட்டு எவன் ப்ரக்ருதிமண்ட3லத்தைத் தாண்டிச் செல்கிறானோ. "ஏடு நிலத்திலிடுவதன் முன்னம் வந்து" என்னும்

* यस्स सर्वेषु भूतेषु नश्यत्सु न विनश्यति॥ अव्यक्तोऽक्षर इत्युक्तस्त-माहुः परमां गतिम्॥ (२०, २१) इत्यनन्तरमेव वक्ष्यते॥१२॥१३॥

திருப்பல்லாண்டு நாலாம் பாசுரத்தில் இவனுக்கு ஸூக்ஷ்மஶரீரமும் கழிந்துவிடுகிறது என்பதைப் பெரியாழ்வார் காட்டினார். (ஸ: பரமாம் க₃திம் யாதி) அவன் ப்ரக்ருதியினின்றும் நீங்கியதாய், (ப்ராக்ருத தோ₃ஷங்களில்லாமலிருக்கும் அம்ஶத்தில்) எனக்கு ஸமானமானதாய், ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதல் இல்லாமையாலே மிக மேலானதான தன் ஆத்மாவை ஆடைகிறான்; அதை என்றும் அநுப₄விப்பதாகிற கைவல்யமோக்ஷத்தை அடைகிறான் என்று கருத்து. (பரமாம் க₃திம்) 'தனக்கு மேலில்லாத க₃தி' என்னும் பொருள் இங்கு பொருந்தாதாகையால், அசித₃நுப₄வமாகிற ஐஶ்வர்யாநுப₄வத்தைக்காட்டிலும் மேலான பரக₃தி என்னத்தக்கது அசிந்மிஶ்ர ஸ்வாத்மாநுப₄வம் என்றும், அதைக்காட்டிலும் மேலான பரமக₃தி என்னத்தக்கது அசித்₃வியுக்த ஸ்வாத்மாநுப₄வம் என்றும் கருத்து. ''யஸ்ஸ ஸர்வேஷு பூ₄தேஷு நஶ்யத்ஸு ந விநஶ்யதி। அவ்யக்தோऽக்ஷர இத்யுக்தஸ் தமாஹு: பரமாம் க₃திம்॥'' [கீ₃தை 8-20,21] என்னும் ஶ்லோகத்தில் இது எப்படிப் பரமக₃தியாகிறது என்பதைக் கண்ணனே விவரிக்கப்போகிறான். ''தத்வேந யஶ்சித₃சித்₃ஈஶ்வர'' [ஸ்தோ-ர 4] என்னும் ஶ்லோகத்தில் அபவர்க்க₃மாகிற மோக்ஷத்தையும், அதை அடைவதற்குரிய உபாயத்தையும் உள்ளபடி அறிவித்தவர் என்று ஆளவந்தாரால் புகழப்பெற்ற பராஶர மஹர்ஷி, இக்கைவல்யமோக்ஷத்தைப்பற்றியும், அதற்குரிய உபாயத்தைப்பற்றியும் பேசியுள்ள பகுதி, கீ₃தோபனிஷத்திலுள்ள இவ்விரு ஶ்லோகங்களை விளக்குமதாய் அமைந்துள்ளது. அதாவது:—

''யோகி₃நோ முக்திகாமஸ்ய ப்ராணாயாமாதி₃ ஸாத₄நம்।
ஸாத்₄யம் ச பரமம் ப்₃ரஹ்ம புநர் நாவர்த்ததே யத:॥
ஸாத₄நாலம்ப₃நம் ஜ்ஞாநம் முக்தயே யோகி₃நாம் ஹி யத்।
ஸ பே₄த₃: ப்ரத₂மஸ் தஸ்ய ப்₃ரஹ்மபூ₄தஸ்ய வை முநே॥
யுஞ்ஜத: க்லேஶமுக்த்யர்த்த₂ம் ஸாத்₄யம் யத்₃ப்₃ரஹ்ம யோகி₃ந:।
தத₃ாலம்ப₃நவிஜ்ஞாநம் த்₃விதீயோऽம்ஶோ மஹாமுநே॥
உப₄யோஸ்த்வவிபா₄கே₃ந ஸாத்₄யஸாத₄நயோர் ஹி யத்।
விஜ்ஞாநமத்₃வைதமயம் தத்₃பா₄கோ₃ऽந்யோ மயோதி₃த:॥
ஜ்ஞாநத்ரயஸ்ய சைதஸ்ய விஶேஷோ யோ மஹாமுநே।
தந்நிராகரணத்₃வாரத₃ர்ஶிதாத்மஸ்வரூபவத்॥
நிர்வ்யாபாரமநாக்₂யேயம் வ்யாப்திமாத்ரமநூபமம்।
ஆத்மஸம்போ₃த₄விஷயம் ஸத்தாமாத்ரமலக்ஷணம்॥
ப்ரஶாந்தமப₄யம் ஶுத்₃த₄ம் து₃ர்விபா₄வ்யமஸம்ஶ்ரயம்।
விஷ்ணோர் ஜ்ஞாநமயஸ்யோக்தம் தத் ஜ்ஞாநம் ப்₃ரஹ்மஸம்ஜ்ஞிதம்॥

தத்ர ஜ்ஞாநநிரோதே₄ந யோகி₃நோ யாந்தி யே லயம் /
ஸம்ஸாரகர்ஷணேப்தெள தே யாந்தி நிர்பீ₃ஜதாம் த்₃விஜ //''
[வி·பு 1-22-45...52]

[(ஜரை, மரணம் முதலான இவ்வுலகத் துன்பங்களிலிருந்து) விடுபடுவதையே விரும்பும் கைவல்யார்த்திக்கு—ப்ராணுயாமம் முதலானவற்றை அங்க₃மாகக்கொண்ட அஷ்டாங்க₃யோக₃ம் ஸாத₄னமாகிறது; 'ப்₃ரஹ்ம' எனப்படும் ப்ரக்ருதியைக் காட்டிலும் சிறந்த 'பரப்₃ரஹ்ம' எனப்படும் ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄முள்ள ப₃த்₃த₄ஜீவனைக் காட்டிலும் சிறந்ததாகையாலே 'பரமப்₃ரஹ்ம' எனத்தக்க திரும்பிவருதலில்லாத (தனது) முக்தஸ்வரூபம் ஸாத்₄யமாகிறது.(இது பின்வரும் நாலு பகுதிகளாக ஸாதி₄க்கப்படுகிறது:-) யோக₃ஶாஸ்த்ரத்திலிருந்து அறியத்தக்கதாய், ப்ராணுயாமம் முதலான ஸாத₄னத்தைப்பற்றியதான அறிவு முதல் பகுதி. ஷடூ₃ர்மி முதலான க்லேஶங்கள் போவதற்காக இப்படி யோக₃ம் செய்யும் இவனுக்கு, ஸாத்₄யமாய், ப்ரக்ருதியினின்றும் நீங்கியதான தனது ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிய அறிவு இரண்டாவது பகுதி. முற்கூறிய ஸாத்₄யஸாத₄னங்களை ஸாத்₄யஸாத₄னபா₄வ ஸம்ப₃ந்த₄த்தோடு அறிந்து, தே₃வர் மனுஷ்யர் முதலான (ஶரீரஸம்ப₃ந்த₄த்தினுல் ஆத்மாவுக்கு ஏற்படும்) பே₄த₃ங்களை நீக்கித் தன் ஆத்மாவை த்₄யானிப்பது மூன்ருவது பகுதி. முற்கூறிய மூன்று வகைப்பட்ட ஜ்ஞானங்களின் வேறுபாடுகளை மறக்கையாலே தன் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதாயிருக்கும் அறிவு நாலாவது பகுதியாகும். (ஸாத₄னம் முதலானவற்றை நினைப்பது ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு விரோதி₄யாகையாலே, அவற்றை மறந்தால் தான் இவ்வாத்மாவலோகனம் ஏற்படும் என்று கருத்து.) (நாலாவதான இவ்வாத்ம ஸாக்ஷாத்கார நிலையில் இவன் காணும்) ஆத்மஸ்வரூபமானது, ஸாத₄நாநுஷ்டா₂னமற்றது; ரூபம், வர்ணம் முதலானவையற்றது; (அறிவால்) எங்கும் வியாபித்திருப்பது ஒப்பற்றது. தனது அறிவாலேயே அறியத்தக்கது. (ஷட்₃பா₄வவிகாரங்களில்—குறைதல், அழிதல், மாறுதல், வளர்தல், பிறத்தல் என்னும் ஐந்துமற்றதாய்) ஸத்தையொன்றே உடையதாயிருப்பது. (ஆண், பெண் முதலான) அடையாளங்களற்றது. (பசி முதலான) ஷடூர்மிகளற்றது. இத்தகையது என்று நினைக்க அரியது. ஜ்ஞாநமயனை விஷ்ணுவுக்கு உருவமாய், ப்₃ரஹ்மமெனப்படும் ஜ்ஞாநஸ்வரூபமான அவ்வாத்மஸ்வரூபம் இத்தகையதாகச் சொல்லப்படுகிறது. மற்ற ஶப்₃த₃ாதி₃ விஷய அறிவுகளற்று, அந்தத் தமது ஆத்மஸ்வரூபத்தில் (அந்திமஸ்ம்ருதிப₃லத்தாலே) எவர்கள் லயத்தை (ஸ்தூ₂ல ஸூக்ஷ்ம ஶரீரநாஶத்தை) அடைகிருர்களோ, அவர்கள் உமிநீங்கிய நெல்போலே, ஸம்ஸாரமாகிற வயலில் விதைக்கத்தகாதவர்களாகின்றனர்] என்னும் எட்டு ஶ்லோகங்கள்கொண்ட பகுதியே அது.

இந்த ஶ்லோகங்களின் வ்யாக்₂யானத்தில், ஸ்ரீ ப₄ாஷ்யகார ஶிஷ்ய ரான ஸ்ரீ விஷ்ணுசித்தரெனும் எங்களாழ்வான் இக்கைவல்யத்தின் தன்மையை மிகவும் தெளிவுபடுத்தியிருக்கிருர். எப்படியெனில் : முதல் ஶ்லோகத்தில் இவனுக்கு ஸாத்₄யமாகச் சொல்லப்பட்ட "பரமம் ப்₃ரஹ்ம" என்பதை "முக்த ஸ்வரூபம்" என்று வ்யாக்₂யானம் செய்வதன்மூலமும், மூன்ரும் ஶ்லோகத்தில் உள்ள "தத₃ாலம்ப₃நவிஜ்ஞாநம்" என்பதை "ப்ரக்ருதிவிவிக்தாத்மவிஷயம் விஶிஷ்ட ஜ்ஞாநம்" என்று விவரிப்பதன்மூலமும், ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ம் அடியோடு நீங்கப்பெற்ற தன் முக்தாத்ம ஸ்வரூபமே இவனுக்கு ப்ராப்யம் எனக் காட்டினுர். ஐந்தாம் ஶ்லோகத்தில் "தந்நிராகரண த்₃வாரத₃ர்ஶிதாத்மஸ்வரூபவத்" என்றதற்கு, "விஶிஷ்டபங்க ஸமாதே₄:, இதரபராமர்ஶஸ்ய ஆத்மாவலோகநவிரோதி₄த்வாத் தந் நிராகரணம் த்₃வாரம் இத்யுக்தம்" [ஸமாதி₄ நிறைவடையப்பெற்ற இவனுக்கு ஸாத₄னம் முதலியவற்றை நினைப்பது ஆத்மாநுப₄வத் திற்கு விரோதி₄யாகையால், அவற்றை மறப்பது ஆத்மாநுப₄வத் திற்கு த்₃வாரம் (காரணம்) என்று சொல்லப்பட்டது.[என்று உரை யிட்டதன்மூலம், ஸாத₄னமாயிருந்த ப₄க₃வானைப்பற்றிய சிந்தனமும் ஆத்மாநுப₄வத்திற்குத் தடையாகையாலே, ஸாத்₄யத₂ஶையில் இவனுல் கைவிடப்படுகிறது என்று உணர்த்தினுர். "இதரயோஸ்து யாவத்ஸ்வாபி₄லஷிதப்ராப்தி மயா யோக₃:" [ஐஶ்வர்ய கைவல்ய நிஷ்ட₂ர்களுக்குத் தம் ஸாத்₄யம் ஸித்₃தி₄க்கும் வரையில்தான் (ஸாத₄னமான) என்னேடு சேர்த்தி] என்று கீ₃தை(7-17)யில் நித்ய யுக்தஶப்₃த₃ப₄ாஷ்யத்தில் ப₄ாஷ்யகாரர் அருளியதை அடியொற்றியபடி. இதனுலேயன்ரே இக்கைவல்யநிஷ்ட₂ரை "விடை கொள்வார்" [முதல்திருவ-26] என்று பொய்கையாழ்வார் அருளினுர். இக் கைவல்யநிஷ்ட₂னுக்கு ப்ராப்யமான இவனது (ப்ரக்ருதியினின்று நீங்கிய) ஆத்மஸ்வரூபத்தை விவரிக்கும் ஆரும் ஶ்லோகத்தில் "நிர்வ்யாபாரம்" என்னும் பத₃த்திற்கு "ஸாத₄நாநுஷ்ட₂ாந ரஹிதம்" என்று ஸாத₄நாநுஷ்ட₂ாநமாகிற செயலற்றவன் என்று வ்யாக்₂யானம் செய்வதன்மூலம், இவன் கைவல்ய மோக்ஷத்தை அடைந்த பின்பு ப₄க்தியோக₃ம் முதலான ஸாத₄னத்தை அநுஷ் டி₂த்து ப₄க₃வத₃நுப₄வத்தைப் பெற இடமில்லை என்று காட்டினுர். "முக்திகாமஸ்ய" (1) "முக்தயே" (2) "க்லேஶமுக்த்யர்த்த₂ம் யுஞ்ஜத:" (3) என்னும் பகுதிகளாலும், இவனுக்கு ப்ராப்யமான கேவலாத்மஸ்வரூபத்தை விவரிக்கும் 6, 7 ஶ்லோகங்களாலும் — "ஜராமரண மோக்ஷாய" [கீ₃தை 7-29] "பிறவித்துயரற"

[திருவாய் 1-7-1] "மரணம் தோற்றம் வான் பிணி மூப்பென்று இவை மாய்த்தோம்" [திருவாய் 8-3-2] முதலானவிடங்களில் சொல்லப்பட்ட பிறப்பு, இறப்பு முதலான ஷடூ₃ர்மிகளற்றிருக்கையாகிற மோக்ஷமே இவனால் பெறப்படுவது என்று ஸ்ரீ பராசரர் திருவுள்ளம் பற்றுவதாகக் காட்டினார் எங்களாழ்வான். அவரே "தத்ர" என்று தொடங்கும் எட்டாவது ஸ்லோகத்திற்கு அவதாரிகையாக "ஆத்மயோகி₃ நாம் அந்திமப்ரத்யயோ அவஸ்யம் ப₄ாவ்யம், அந்யதா₂ புநராவ்ருத்திரித்யாஹ" [தம் ஆத்மாவைப் பெறவிரும்பி யோக₃ம் செய்பவர்களுக்கு அந்திமஸ்ம்ருதி அவஸ்யம் வேண்டும்; இல்லாவிடில் மறுபடி ஸம்ஸாரத்திற்குத் திரும்பி விடுவார்கள்.] என்று அருளிச் செய்வதன்மூலம்,

"குறுகமிக உணர்வத்தொடு நோக்கி எல்லாம் விட்ட
இறுகல் இறப்பென்னும் ஞானிக்கும் அப்பயன் இல்லையேல்
சிறுக நினைவதோர் பாசமுண்டாம் பின்னும் வீடில்லை
மறுகலில் ஈசனைப் பற்றி விடாவிடில் வீடஃதே"
[திருவாய் 4-1-10]

என்று ஆழ்வார் அருளிச்செய்த ரீதியில், இந்தக் கேவலாத்மயோகி₃யான கைவல்யநிஷ்ட₂னுக்கும் அந்திமஸ்ம்ருதியிருந்தால்தான் புநராவ்ருத்தி (மறுபடியும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதல்) இல்லாத இக்கைவல்யமோக்ஷம் ஏற்படுகிறது என்று காட்டி, இவ்வெட்டாவது ஸ்லோகத்தில் 'லயம்' என்னும் ஸப்₃த₃த்திற்கு 'உபாதி₄வியோக₃ம்' என்று வ்யாக்₂யானம் செய்வதன்மூலம், இக்கைவல்யநிஷ்ட₂னுக்கு ஸூக்ஷ்ம ஸரீரமும் அடியோடு அற்றுப்போகிறதென்றும், "ஸம்ஸார க்ஷேத்ரேப்தௌ தே யாந்தி நிர்பீ₃ஜதாம் த்₃விஜ" என்னும் பிற்பகுதிக்கு வ்யாக்₂யானமாக "க்ருஷ்யத இதி க்ஷேத்ரம் கேத₃ார: | ஸம்ஸார கேத₃ாரே உப்தௌ - ஸஸ்யாவாபே விதுஷவ்ரீஹிவத் அபீ₃ஜதாம் யாந்தி ||" [க்ருஷி செய்யப்படுகையாலே க்ஷேத்ரம் என்று வயல் சொல்லப்படுகிறது; அவர்கள் — உமிநீங்கிய நெல் போலே, ஸம்ஸாரமாகிற வயலில் விதைக்கத்தகாதவர்களாகிறார்கள்.] என்று அருளிச்செய்வதன்மூலம் இவன் ஸம்ஸாரத்தில் பிறப்பற்ற முக்தனே என்றும் தெளிவுபடுத்தினார்.

"ஏவம்ப்ரகாரம் அமலம் நித்யம் வ்யாபகம் அக்ஷயம் |
ஸமஸ்தஹேயரஹிதம் விஷ்ணவாக்₂யம் பரமம் பத₃ம் ||"
[வி-பு 1-22-53]

[நிர்வ்யாபரனாயிருக்கை முதலான முக்தனுக்குக் கூறிய எல்லாப் பெருமைகளையும் உடையதாய், அதற்கு மேலே (அவனுக்கு இல்

லாத) நித்யஸாத்₃தி₄யையும், ஸர்வவஸ்துக்களையும் ஸ்வரூபத்தால் வியாபித்திருக்கையையும், ப்ரதிவஸ்து பூர்ணத்வத்தையும், (பாரதந்த்ர்யம் முதலிய) எல்லாத் தாழ்வுகளும் அற்றிருக்கையையும் உடையது 'விஷ்ணு' எனப்படும் பரமப்ராப்யமான ப₄க₃வத்ஸ்வரூபம்] என்று ப₄க₃வத்ஸ்வரூபத்திற்கு முற்கூறிய முக்தஸ்வரூபத்தைக் காட்டிலும் சிறப்பைத் தெரிவிக்கும் ஶ்லோகத்தில் "அஸ்ய நித்ய ஸாத்₃த₄த்வ ஸர்வாத்மத்வ பூர்ணத்வ ஹேயராஹித்யாநி ப்ரக்ருதி ப₃ந்த₄முகதேப்₄யோ விஶேஷ:" [(முற்கூறிய) ப்ரக்ருதிப₃ந்த₄த்தினின்றும் விடுபட்டவனைக் காட்டிலும், இந்தப் பரமபுருஷனுக்கு (1) எப்போதும் ஸாத்₃த₄னாயிருக்கை, (2) ஸர்வாத்மாவாயிருக்கை, (3) பூர்ணனாயிருக்கை, (4) தாழ்வற்றவனாயிருக்கை என்னும் நாலு பெருமைகள் உண்டு.] என்று வ்யாக்₂யானமிடுமிடத்திலும், இக்கைவல்யநிஷ்டனை 'ப்ரக்ருதிப₃ந்த₄முக்தன்' (ப்ரக்ருதியாகிற ப₃ந்த₄த்தினின்றும் விடுபட்டவன்] என்றே குறிப்பிடுவது குறிக்கொள்ளத்தக்கது.

"தத்₃ ப்₃ரஹ்ம பரமம் யோகீ₃ யதோ நாவர்த்ததே புந: |
ஶ்ரயத்யபுண்யோபரமே க்ஷீணக்லேஶோऽதிநிர்மலே ||"

[ப₄க₃வது₃பாஸகன், புண்யபாபங்கள் க்லேஶங்கள் முதலியவை நீங்கியவுடன், திரும்பிவருதலில்லாத அந்தப் ப்ரப்₃ரஹ்மத்தையே அடைகிறான்] என்னும் ப₄க₃வது₃பாஸகனைப்பற்றிய அடுத்த ஶ்லோகத்தில், "யோகீ₃—ப₄க₃வத்₃யோகீ₃ | அஸ்யாப்யந்திமப்ரத்யயப₃லேந ப₄க₃வதி லீநஸ்ய அபுநராவ்ருத்திர் த்₃ரஷ்டவ்யா" [இங்கு 'யோகீ₃' எனப்படுபவன் ப₄க₃வானை ப்ராப்யமாகப்பற்றி உபாஸிப்பவனாவான். அந்திமஸ்ம்ருதி ப₃லத்தாலே ப₄க₃வானை அடைந்த இவனுக்கும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருதலில்லை என்பது குறிக்கொள்ளத் தக்கது.] என்று ப₄க₃வத்₃யோகி₃யை ஆத்மயோகி₃யைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று தெளிவாகக்காட்டி, அந்திம ஸ்ம்ருதி ப₃லத்தால் ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தன் ஆத்மாவையடைந்த ஆத்ம யோகி₃யைப்போலே, அந்திமஸ்ம்ருதி ப₃லத்தால் ப₄க₃வானை அடைந்த இவனுக்கும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதல் இல்லை என்று காட்டினார். இவற்றிலிருந்து—பிள்ளான், ப₄ட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்கள் திருவுள்ளமும், எங்களாழ்வானது திருவுள்ளமும் இக்கைவல்ய விஷயத்தில் ஒருபடிப்பட்டதே என விளங்குகிறது.

"யோகி₃நாம் அம்ருதம் ஸ்த₂ாநம்" [வி-பு 1-6-38] என்னுமிடத்தில் அம்ருத பத₃த்திற்கு முக்₂யார்த்த₂ம்கொண்டு, அந்த

ஶ்லோகத்தில், கைவல்யநிஷ்டர்கள் தம் ஆத்மாவை அநுபவிக்கும் அழியாத ஸ்தாநத்தைச் சொல்லுவதாக பட்டர், பெரியவாச்சான் பிள்ளை முதலானோர் அருளியிருக்க, அம்ருத பதத்திற்கு 'நீண்டகால மிருப்பது' என்னும் அமுக்யார்த்தம்கொண்டு, அவ்விடத்தில் த்ருவநக்ஷத்திரத்திற்கு மேலேயுள்ள விஷ்ணுபதம் என்னும் (ப்ரக்ருதி மண்டலத்திற்குட்பட்ட) ஸ்தானத்தைச் சொல்லுவதாக எங்களாழ் வான் வியாக்கியானம் செய்திருப்பதிலிருந்து கைவல்யம் அநித்யம் என்று அவர் கருதியிருப்பதுபோல் தோன்றுகிறதே? எனில்: ''அம்ருதம் ஸ்தாநம்'' என்றவிடத்தில் கைவல்ய ஸ்தானம் சொல்லப்படுவ தாகவே அவர் திருவுள்ளம் பற்றவில்லையாகையால், இதுகொண்டு கைவல்ய விஷயத்தில் கருத்துவேற்றுமையைக் கற்பிக்கவொண்ணாது. எப்படி? எனில்: ''யோகிநாமிதி || ஆஶ்ரமிஷ்வேவ யே ப்ரதீ கோபாஸகா யோகிந: தேஷாம் அம்ருதம் — விஷ்ணுபதாக்யம் த்ருவாதுபரி ஸ்தாநம் — யதோ கங்கா ப்ரவஹதி இதி வக்ஷ்ய மாணம் ||'' [நாலு ஆஶ்ரமங்களில் இருப்பவர்களிலேயே, ப்ரதீக மான தம் ஆத்மாவை உபாஸிக்கும் யோகிகளுக்கு, (நீண்டகால மிருக்கையாலே) அழியாதது எனப்படுவதாய், 'விஷ்ணு பதம்' என்று பெயர்பெற்றதாய், த்ருவநக்ஷத்திரத்திற்கு மேற்பட்டதான ஸ்தாநம் இங்கு சொல்லப்படுகிறது. இந்த ஸ்தாநத்திலிருந்தே கங்கை, பெருகுகிறது என்று மேலே (2-8) சொல்லப்படப்போகிறது.] என்று இவ்விடத்தில் வியாக்கியானம் செய்தார் எங்களாழ்வான். மேலே (2-8-98, 99, 100) இந்த விஷ்ணுபதஸ்தானத்தைப்பற்றிப் பேசு மிடத்தில், ''அதோऽத்ர விஷ்ணுபதே ஸ்வர்க்காதிகஸௌக்யாத், ஸத்யலோகாத் அர்வாசீநத்வாச்ச மோக்ஷோக்தி: க்ரமமுக்த்யர்த்தா | தத்ஸ்தா: க்ரமாத் ப்ரஹ்மலோகமேத்ய ப்ரஹ்மணா ஸஹ முச்யந்தே | விஷ்ணுபதே ஸ்திதா: தத்ர லப்தஜ்ஞாநா முச்யந்தே; ந து தந்முக்தைர் லப்யம் ஸ்தாநமித்யர்த்த:'' [ஆகையால், இந்த விஷ்ணுபதத்தில் ஸ்வர்க்கத்தைக் காட்டிலும் மேற்பட்ட இன்பம் உள்ளதாகையாலும், ப்ரஹ்மாவின் ஸத்யலோகத்தைக் காட்டிலும் இது தாழ்ந்ததாகையாலும், இதை 'அம்ருதம்' என்பது, இவ் விடத்திலிருப்பவர்களுக்கும் காலக்ரமத்தில் மோக்ஷம் கிடைக்கும் என்னும் கருத்துடையது; விஷ்ணுபதத்திலிருப்பவர்கள், அங்கு ஜ்ஞானம்பெற்று, காலக்ரமத்தில் ப்ரஹ்மாவின் ஸத்யலோகத்தை அடைந்து, ப்ரஹ்மாவோடுகூட முக்தி அடைகிறார்கள்; அவ்விஷ்ணு பதம் முக்தர்கள் அடையும் ஸ்தானமன்று என்று கருத்து.] என்று வியாக்கியானமிட்டார். இதிலிருந்து, இது ஸத்யலோகத்தைக் காட்டி லும் தாழ்ந்த ஸுகத்தையுடைய (அசிந்மிஶ்ரமான) தம் ஆத்மாவை

அநுப₄விப்பவர்களின் ஸ்த₂ானமேயொழிய, ஸத்யலோகத்தைக் காட்டிலும் சிறந்ததாய், ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதலில்லாததாக [வி-பு 1-22-52ல்] படிக்கப்படும் ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தம் ஆத்மாவை அநுப₄விக்கும் கைவல்யஸ்த₂ானமன்று என விளங்குகிறது. ஆக, ''யோகி₃னாமம்ருதம் ஸ்த₂ாநம்'' என்றவிடத்தில், கைவல்யஸ்த₂ானம் சொல்லப்படுகிறதா, அதைக்காட்டிலும் தாழ்ந்த அசிந்மிஶ்ர ஸ்வாத்மாநுப₄வஸ்த₂ானம் சொல்லப்படுகிறதா என்பதில் கருத்து வேற்றுமையேயொழிய, கைவல்யநித்யத்வாதி₃விஷயத்தில் இவ்வாசார்யர்களிடையே கருத்து வேற்றுமை இல்லை என்று தேறிற்று.

வேதா₃ர்த்த₂ ஸங்க்₃ரஹத்தில்—(1) நித்யவிபூ₄தி, (2) ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபம், (3) ப₄க₃வத்ஸ்வரூபம் ஆகிய மூன்றுமே 'பரமபத₃ம்' என்று சொல்லப்படுவதைப்பற்றி விசாரித்து வரும்போது, ''பரமம் பத₃ம் தஸ்யாகு₃ணம் மஹத்'' [வி-பு 1-22-41] என்று, இந்த விஷ்ணுபுராண ப்ரகரணத்தில் ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபத்தைப் பரமபத₃ ஶப்₃த₃த்தால் சொல்லியிருப்பதை எடுத்துக்காட்டி, '' ஸர்வகர்மப₃ந்த₄விநிர்முக்தாத்ம ஸ்வரூபாவாப்திர் ப₄க₃வத்ப்ராப்திக₃ர்ப்ப₄ா '' [எல்லாக் கர்மப₃ந்த₄ங்களினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபத்தை அடைவது ப₄க₃வத்ப்ராப்தியை உள்ளடக்கியது] என்று ப்ரக்ருதியினின்றும் விடுபட்ட ஆத்மஸ்வரூபாவாப்தியைப் பெறும்போது ப₄க₃வத்ப்ராப்தியும் ஏற்பட்டே தீரும் என்று ப₄ாஷ்யகாரர் அருளியிருப்பதால், கைவல்ய நிஷ்ட₂னுக்கும் ப₄க₃வத்ப்ராப்தி உண்டென்று தோன்றுகிறதே ? எனில் : அவனுக்கும் ப₄க₃வத்ப்ராப்தியிருந்தபோதிலும், ப₄க₃வத₃நுப₄வமில்லாமையாலே குறையில்லை இவ்விடத்தில் தாத்பர்யதீ₃பிகையில், '' ப₄க₃வத்ப்ராப்தி க₃ர்ப்ப₄த்வாத் — ப₄க₃வத்ப்ராப்தி ஸஹிதத்வாதி₃த்யர்த்த₂:'' [ப₄க₃வத்ப்ராப்தியை உள்ளடக்கியது என்றது—ப₄க₃வத்ப்ராப்தியோடு கூடியது என்றபடி] என்றும், ''ப₄க₃வத்₃கு₃ணாநாமபி திரோத₄ாயகம் கர்மேதி, தந்நிவ்ருத்திபூர்வகாத்மப்ராப்தௌ ப₄க₃வத்₃கு₃ணதிரோத₄ாயக நிவ்ருத்தேரபி ப₄ாவாத் ப₄க₃வத்ப்ராப்தி: ஸித்₃த்₄யதி'' [ப₄க₃வத்₃ கு₃ணங்களையும் கர்மமே மறைக்கிறதாகையால், ஸர்வகர்மங்களும் கழிந்து ஆத்மப்ராப்தி ஏற்படும்போது, ப₄க₃வத்₃கு₃ணங்களை மறைக்கும் கர்மமும் நீங்குகிறதாகையால், ப₄க₃வத்ப்ராப்தியும் ஸித்₃தி₄க்கிறது.] என்றும் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் இவனுக்கு ப₄க₃வத்ப்ராப்தியை அருளிச்செய்திருக்கிறரேயொழிய, அநுப₄வத்தை அருளிச்செய்யவில்லை என்பது காணத்தக்கது. ப்ராப்தி ஏற்பட்டால் அநுப₄வம் ஏற்படாமல் இருக்குமோ?

எனில் : அந்திமஸ்ம்ருதிவரையில் இவனுக்குப் பரமாத்மாவிடம் பே₄ாக்₃யதாபு₃த்₃தி₄ ஏற்படாமல், தன் ஆத்மாவிலேயே பே₄ாக்₃யதா பு₃த்₃தி₄ நிலைநிற்கையாலும், பரமபத₃த்திற்குச் சென்றபிறகு பரமாத்மாவிடம் பே₄ாக்₃யதாபு₃த்₃தி₄ ஏற்படத்தக்க ஸாத₄நாநுஷ்ட₂ாநம் செய்யமுடியாது என்பதை ''நிர்வ்யாபாரம்'' என்னும் பத₃த்தால் ஸ்ரீபராஶர மஹர்ஷி காட்டியிருக்கையாலும், இவனுக்கு ப₄க₃வத் ப்ராப்தியிருந்தபோதிலும் ப₄க₃வத₃நுப₄வமில்லை என்றே தேறும். கர்மம் கழிகையாலே, ப₄க₃வானும், அவனது கு₃ணங்களும், நித்ய விபூ₄தியும், நித்யமுக்தர்களும் ஸாத்₄யத₃ஶையில் இவனுக்குப் பிரகாஶித்தபோதிலும், ஸாத₄நத₃ஶையில் அந்திமஸ்ம்ருதிவரையில், அவற்றில் பே₄ாக்₃யதா ப்ரதிபத்தி ஏற்படாமல், தன் ஆத்மாவிலேயே பே₄ாக்₃யதா ப்ரதிபத்தி நிலைநிற்கையாலே ஸாத்₄யத₃ஶையிலும் முக்தனை இவனுக்கு என்றுமே அவற்றில் பே₄ாக்₃யதா ப்ரதிபத்தி ஏற்பட இடமில்லை என்று கருத்து. இந்த து₃ர்க்க₃தியைக் கண்டே பெரியாழ்வார் '' ஏடுநிலத்திலிடுவதன் முன்னம் ...... ஒல்லை கூடுமினோ'' என்று பதற்றத்துடன், ஐஶ்வர்யார்த்தி₂க்கு முன்னமே இக்கைவல்யார்த்தி₂களை அழைத்தார்; என்றுமே ப₄க₃வ த₃நுப₄வமில்லாமையால், இது ஆத்மவிநாஶதுல்யம் என்னும் திரு வுள்ளத்தாலே, திருமங்கையாழ்வார் '' இறப்பதற்கே எண்ணாது '' [திருநெடு-1] என்று இக்கைவல்யத்தை இறப்பாகவே அருளிச் செய்தார். இத்தகைய து₃ர்க்க₃தியான இதில் பரமகாருணிகனை எம்பெருமான் இவர்களைத் தள்ளலாமோ? எனில்: அந்திமஸ்ம்ருதி வரையில் பல ஜன்மங்கள் இவர்களைப் பரமபே₄ாக்₃யமான தனது திருமேனியையும், ஸ்வரூபத்தையும் சிந்திக்கும்படி விதி₄த்திருப்பதே இவர்களைத் திருத்தவேண்டும் என்னும் பரமகருணையாலேதான். இப்படிப் பல ஜன்மங்கள் அநுஸந்தி₄த்த பின்பும், இவர்களுக்கு ப₄க₃வானிடத்தில் பே₄ாக்₃யதாபு₃த்₃தி₃ ஏற்படவில்லையாகில், அவன் என்செய்வான்? இவர்கள் விரும்பாத ஒரு ப₂லனை இவர்கள் பெறும்படி நிர்ப₃ந்தி₄த்தால் அது புருஷார்த்த₂மாகாதே! அவ னுக்கு வைஷம்ய நைர்க்₄ருண்ய தோ₃ஷங்களும் ஏற்படுமே! அத னாலே, ஆனவரையில் இவர்களுக்குத் தன்னிடம் பே₄ாக்₃யதா பு₃த்₃தி₄யை விளைக்கமுயன்று, 'இனி விளையவே விளையாது' என்னும் நிலைவந்த பிறகுதான், இவர்கள் விரும்பும் கைவல்யமோக்ஷத்தைத் தருகிறானாகையாலே அவன் கருணைக்கு எக்குறையுமில்லை. இதுபற்றின விரிவு, மேலே 23,24 ஶ்லோகங்களின் வியாக்கியானத்தில் காணலாம்.

அந்திமஸ்ம்ருதியின்போது, இவனுக்கு எம்பெருமானிடம் பே₄ாக்₃யதாபு₃த்₃தி₄ ஏற்பட்டால் என்னகும்? எனில்: அந்திம

ஸ்ம்ருதியின்போது, தன் ஆத்மாவை ஶரீரமாகக்கொண்ட பரமாத்மாவிடம் இவனுக்கு பே$_4$ாக்$_3$யதாபு$_3$த்$_3$தி$_4$ ஏற்பட்டால், த$_3$ஹராதி$_3$ வித்$_3$யாநிஷ்ட$_2$ர்களைப்போலே, இவனும் அர்ச்சிராதி$_3$க$_3$தியாலே பரமபத$_3$ம்சென்று, ஸ்வாத்மஶரீரகனான பரமாத்மாவையே அநுப$_4$விக்கிறான். அந்திமஸ்ம்ருதியின்போது, பரமாத்மாவை ஆத்மாவாகக் கொண்ட தன் ஆத்மாவில் இவனுக்கு பே$_4$ாக்$_3$யதாபு$_3$த்$_3$தி$_4$ ஏற்பட்டதாகில், இவன் பஞ்சாக்$_3$நிவித்$_3$யாநிஷ்ட$_2$னைப்போலே, அர்ச்சிராதி$_3$ க$_3$தியாலே பரமபத$_3$ம்சென்று, பரமாத்மாவை ஆத்மாவாகக்கொண்ட தன் ஆத்மாவை அநுப$_4$விக்கிறான். இப்படி இரண்டுவித$_4$மான ப$_2$லத்தை அடைகிற இவ்விருவகை அதி$_4$காரிகளுக்குமே ப்$_3$ரஹ்மாநந்த$_3$ம் துல்யமானது என்பது விகல்பாதி$_4$கரண (3-3-25) ஸித்$_3$த$_4$ம். ஜ்ஞாநயோக$_3$த்தாலே கைவல்யத்தைப் பெற நினைப்பவனுக்குப் பரமாத்மாவிடம் இப்படி பே$_4$ாக்$_3$யதாபு$_3$த்$_3$தி$_4$ ஏற்பட்டால் அவனுக்குப் பரமாத்மாநுப$_4$வமும் கிடைக்கும், ஏற்படாவிட்டால் அவனுக்குக் கேவலாத்மாநுப$_4$வமே கிடைக்கும் என்னும் இவ்விஷயத்தைத் திருவுள்ளம்பற்றியே,

“ப்ரத்யஞ்சம் ஸ்வம் பஞ்சவிம்ஶம் பராச:
ஸஞ்சக்ஷாணஸ் தத்த்வராஶேர் விவிச்ய |
யுஞ்ஜாநாஶ்ச ருதம்ப$_4$ராயாம் ஸ்வபு$_3$த்$_3$தௌ$_4$
ஸ்வம் வா த்வாம் வா ரங்க$_3$நாத$_2$ாப்நுவந்தி ||” [ர-ஸ்த 2-75]

[ஸ்ரீரங்க$_3$நாத$_2$ரே! இருபத்தைந்தாம் தத்துவமாய், தனக்குத்தானே பிரகாஶிக்கும் தன் ஆத்மாவை, மற்ற இருபத்துநாலு தத்துவங்களிலிருந்து பிரித்து அறிகின்றவர்களாய், (ஸமாதி$_4$நிலையில்) உண்மையைக்காணும் தங்கள் அறிவில் தம் ஆத்மாவை தியானிக்கிற ஜ்ஞாநயோக$_3$நிஷ்ட$_2$ர்கள் தம் ஆத்மாவையோ, அல்லது உம்மையோ அடைகிறார்கள்.] என்று ப$_4$ட்டர் அருளிச்செய்தார்.

“ஆத்மார்த்தீ$_2$சேத் த்ரயோऽப்யேதே தத் கைவல்யஸ்ய ஸாத$_4$கா:”
என்று ஆளவந்தார் கீ$_3$தார்த்த$_2$ஸங்க்$_3$ரஹத்தில் (27) கர்மஜ்ஞாந ப$_4$க்தி யோக$_3$ங்கள் மூன்றையுமே கைவல்யமோக்ஷத்திற்குத் தனித்தனியே ஸாத$_4$னமாக அருளியிருக்கிறார். கைவல்யார்த்த$_2$மாக இவற்றில் ஒன்றை அநுஷ்டி$_2$க்கும் எவனுக்கும் அந்திமஸ்ம்ருதியில் ப$_4$க$_3$வானிடம் பே$_4$ாக்$_3$யதாபு$_3$த்$_3$தி$_4$ ஏற்பட்டால், உடனே ப$_4$க$_3$வத் ப்ராப்தி ஸித்$_3$தி$_4$க்குமாகையால், மற்ற இரண்டையும் அங்க$_3$மாகக்கொண்ட கர்மஜ்ஞாந ப$_4$க்தியோக$_3$ங்களில் ஒவ்வொன்றையும் பரமபுருஷார்த்த$_2$லக்ஷண மோக்ஷஸாத$_4$னமாக தி$_3$வ்யப்ரப$_3$ந்த$_4$ வ்யாக்$_2$யானங்களில் (திருமாலை (25) ‘‘குளித்து மூன்றனலை’’ முதலானவிடங்களில்) பூர்வாசார்யர்கள் அருளியதும் பொருந்திவிடுகிறது என்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

॥भा॥ एवमैश्वर्यार्थिनः कैवल्यार्थिनश्च स्वप्राप्यानुगुणं भगवदुपासनप्रकार उक्तः; अथ ज्ञानिनो भगवदुपासनप्रकारं प्राप्तिप्रकारं चाह—

अनन्यचेताः सततं यो मां स्मरति नित्यशः।
तस्याहं सुलभः पार्थ नित्ययुक्तस्य योगिनः॥ १४॥

14. அநந்யசேதாஸ் ஸததம் யோ மாம் ஸ்மரதி நித்யஶ:।
தஸ்யாஹம் ஸுலப₄: பார்த்த₂! நித்யயுக்தஸ்ய யோகி₃ந:॥

பார்த்த₂ — குந்தீபுத்திரனே! நித்யஶ: — உபாஸனம் தொடங்கும் காலம் முதலாக, ஸததம்—எல்லாக்காலமும், அநந்யசேதா:—வேறு எதிலும் நெஞ்சு செலுத்தாதவனாய், மாம்—என்னை, ய: ஸ்மரதி — எவனொருவன் (மிக இனியவனாக) நினைக்கிறானோ, நித்யயுக்தஸ்ய தஸ்ய யோகி₃ந: — (என்னோடு) எப்போதும் சேர்ந்திருக்கையை விரும்பும் அந்த உபாஸகனுக்கு, அஹம் — நான், ஸுலப₄: — மிக எளிதில் அடையத்தக்கவனாகிறேன்.

---

13. செல்வமுயி ரின்பத்துச் செல்லாத நெஞ்சனாய்
நல்விரகா லென்னினைந்து நாடோறும்—தொல்வகையா
லென்றுமெனைக் கூடு மியோகிக்குப் பார்த்தனே
நன்று பெறவெளிய னான்.

பார்த்தனே!—குந்தீபுத்திரனே! செல்வம் உயிரின்பத்துச் செல்லாத நெஞ்சனாய்-ஐஶ்வர்யம், கைவல்யம் ஆகியவற்றில் நெஞ்சு செலுத்தாதவனாய், நாள்தோறும்—உபாஸநகாலம் தொடங்கி எப்போதும், நல்விரகால் என்னினைந்து — மிக இனியவனாக என்னை நினைத்து, தொல்வகையால் — ப₄க்தி யோக₃மாகிற அநாதி₃மார்க்க₃த்தால், என்றும் எனைக் கூடும் இயோகிக்கு — எப்போதும் என்னோடு சேர நினைக்கும் உபாஸகனுக்கு, நான் — நான், பெற நன்று எளியன் — அடைவதற்கு மிக எளியவனாயிருக்கிறேன்.

ஆக, கைவல்யார்த்திக்குரிய உபாஸநப்ரகாரமும், அந்திம ஸ்ம்ருதிப்ரகாரமும் இவ்விரு ஶ்லோகங்களில் விவரிக்கப்பட்டதாயிற்று.
12,13.

14. எட்டாவது ஶ்லோகம் முதல், சென்ற ஶ்லோகமீறாக ஐஶ்வர்யார்த்திக்கும், அவனைக் காட்டிலும் புண்ணியம் மிக்க கைவல்யார்த்திக்கும் தமது ப்ராப்யத்திற்குத் தக்கவாறு பகவானை உபாஸிக்கும் முறை கூறப்பட்டது. இந்த ஶ்லோகத்தில் அக்கைவல்யார்த்தியைக் காட்டிலும் புண்ணியம் மிக்கவனான ஜ்ஞானி பகவானை உபாஸிக்கும் முறையும், அடையும் முறையும் காட்டப் படுகிறது. முந்தியவனைக் காட்டிலும் பிந்தியவன் புண்ணியம் மிக்கவனாயிருக்கையாலே ஐஶ்வர்ய கைவல்ய பகவத் ப்ராப்திகாமர்களுக்குத் தேவையானவற்றை இந்த க்ரமத்திலே உபதேஶித்துள்ளான் என்று கண்டுகொள்வது. முந்தின அத்தியாயத்தின் கடைசியில் இவர்களைப் பற்றி ப்ரஸ்தாவிக்கும்போதும், இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் அர்ஜுனனுடைய கேள்விகளுக்கு பதிலுரைக்கும் போதும் இந்த க்ரமத்தைப் பின்பற்றாமல் ஐஶ்வர்யார்த்திக்கு முன் கைவல்யார்த்தியை வைத்ததற்குக் கருத்து என்ன? எனில்: முமுக்ஷுவான கைவல்யார்த்திக்கு, தனது ப்ராப்யமான கைவல்ய மோக்ஷத்தை அடைந்து விட்டால், பிறகு எம்பெருமானை அடைய வழியே இல்லாமற்போகையாலே, அவனுடைய இந்த துர்க்கதியைக் கண்டு, ஐஶ்வர்யார்த்தியை "அண்டக்குலத்துக்கு" [திருப்பல் 5] என்னும் பாசுரத்தில் அழைப்பதற்கு முன் "ஏடுநிலத்தில்" [திருப்பல்4] என்னும் பாசுரத்தில் அவனை (கைவல்யார்த்தியை) அழைத்த பெரியாழ்வாரைப்போலே, அர்ஜுனனைக் கைவல்யார்த்தியாகாதபடி தடுக்கவேண்டும் என்னும் திருவுள்ளத்தாலே, முதலில் அவனுக்குரிய ப்3ரஹ்மசர்யம் முதலான கடுமையான ஸாதனங்களைக் காட்டினான் சென்ற அத்தியாயத்தின் கடைசியிலும், இவ்வத்தியாயத்தின் தொடக்கத்திலும். அர்ஜுனனுக்குக் கைவல்ய ப்ராப்தியில் ருசி யில்லை என்பதை முகக்குறிப்பாலே தெரிந்துகொண்டபின், மூன்று அதிகாரிகளுக்கும் அறியவேண்டியவற்றை எட்டாவது ஶ்லோகம் முதலாக க்ரமமாகவே உபதேஶிக்கிறான் என்று கண்டுகொள்வது. பனிரண்டாவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் அர்ஜுனனுடைய கேள்விக்கு பதிலுரைக்கும்போது இக்கைவல்ய நிஷ்டனுக்கு அதிகமான க்லேஶத்தை வெளிப்படையாகவே கண்ணன் உரைப்பதிலிருந்தும், இவ்வத்தியாயத்தில் ஐஶ்வர்யார்த்திக்கு தூமாதிகதியையும், ஜ்ஞானிக்கு அர்ச்சிராதிகதியையும் சொன்னதுபோலே, ஜிஜ்ஞாஸுவாகிற இக்கைவல்யநிஷ்டனுக்குரிய கதியைச் சொல்லாமலிருப்பதிலிருந்தும் அர்ஜுனன் இக்கைவல்யத்தை விரும்பிவிடக்கூடாது என்னும் கண்ணனுடைய திருவுள்ளம் விளங்குவது காணத்தக்கது.

"ஏவமைஶ்வர்யார்த்திந:" என்று தொடங்கும் இந்த ஶ்லோகத்தின் அவதாரிகாபாஷ்யம், சிலருக்கு எழக்கூடிய மற்றொரு

ஶங்கையைப் போக்குவதாகவும் அமைந்துள்ளது என்பது தாத்பர்ய சந்த்ரிகையில் விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. அந்த ஶங்கையாவது:— "தே ப்ரஹ்ம தத் விது:" [7-29] "கிம் தத் ப்ரஹ்ம" [8-1] "அக்ஷரம் ப்ரஹ்ம பரமம்" [8-3] என்று இங்கு படிக்கப்படும் ப்ரஹ்மஶப்தம் பரம்பொருளையே குறிப்பதாகக் கொள்வதில் என்ன தடை? அந்த ப்ரஹ்மம் ஸர்வாத்மாவாயிருப்பதால், ப்ரஹ்ம ஶப்தத்தோடு கூடப்படிக்கப்படும் "அத்யாத்ம" ஶப்தமும் அந்த ப்ரஹ்மத்திடமுள்ள அனைத்தையும் குறிக்கக்கூடும். அடுத்து "பூதபாவோத்பவகர: விஸர்க்க: கர்மஸம்ஜ்ஞித:" [8-3] எனப்படும் விஸர்க்கமாகிற கர்மமும் பூதங்கள் அனைத்தின் ஸ்ருஷ்டியே என்று கொண்டுவிடலாம். அல்லது, "விஸர்க்க: — விஸர்ஜநம்; தேவதோத்தேஶேந சருபுரோடாஶாதே: த்ரவ்யஸ்ய பரித்யாக:; ஸ ஏஷ விஸர்க்கலக்ஷணோ யஜ்ஞ: கர்மஸம்ஜ்ஞித:; ஏதஸ்மாத் ஹி பீஜபூதாத் வ்ருஷ்ட்யாதிக்ரமேண ஸ்தாவரஜங்கமாநி பூதாநி உத்பவந்தி" என்று ஶங்கரருடைய கீதாபாஷ்யத்தில் வியாக்கியானம் செய்த ரீதியில், தேவதையைக்குறித்து யஜ்ஞத்தில் ஹவிஸ்ஸை யிடுவதே மழை முதலானவற்றை விளைத்து பூதங்கள் உண்டாகக் காரணமாவதால் அதுவே இங்கு விஸர்க்கரூபமான கர்மம் எனப் படுவதாகக் கொள்ளலாம். அதிபூதஶப்தம் பாஷ்யத்தில், "அதி பூதம் ப்ராணிஜாதம்—அதிபவதீதி" என்று ஶங்கரர் காட்டிய வ்யுத் பத்தியின்படி அது ப்ராணிஸமூஹத்தைக் குறிக்கலாம். நாலாவது ஶ்லோகத்தில் அதிதைவதம் எனப்படும் புருஷனும் பரம்பொருளின் ஒரு நிலையென்றோ, ஸமஷ்டி புருஷனென்றோ கொள்ளலாம். அதி யஜ்ஞஶப்தத்திற்கும் "அதியஜ்ஞ: — ஸர்வயஜ்ஞாபிமாநீ விஷ்ண வாக்யா தேவதா; 'யஜ்ஞோ வை விஷ்ணு:' இதி ஶ்ருதே:" என்று ஶங்கரர் உரையிட்டபடியே ஸர்வயஜ்ஞாபிமானியாக வேதங் களில் ஓதப்படும் விஷ்ணுவைப் பொருளாகக் கொள்ளலாம். "அந்த காலே" என்று தொடங்கும் ஐந்தாவது ஶ்லோகம் முதலாக மூன்று ஶ்லோகங்களும் முமுக்ஷுவுக்கு அந்திமஸ்ம்ருதியை விதிப்ப தாகவே கொள்ளவேண்டும். அர்ஜுனனின் கேள்வியும், கண்ணனின் பதிலில் நாலு முடியவுள்ள ஶ்லோகங்களும் ஏழாம் அத்தியாயத்தில் "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு:" [கீதை 7-16] என்று படிக்கப்பட்ட மூவகை அதிகாரிகள் விஷயமானாலும், நாலுக்கு மேல் உள்ள ஶ்லோகங்கள் ஏழாம் அத்தியாயத்தில் அவ்வதிகாரிகளில் ப்ரதானனாகவும் மிகவும் துர்லபனாகவும் கூறப்பட்ட ஞானியைப் பற்றிய வையே ஆகவேண்டும். இல்லாவிடில் "மாமேவ ஸ்மரந்" [5] "மாமேவைஷ்யஸி" [5] என்று தன்னைப்பற்றிய ஸ்மரணத்தையும், தன்னையே ப்ராப்யனாகவும் சொல்லியிருப்பது ஒட்டாது. ஆகையால், "ப்ரயாண காலே ச கதம்" [2] என்னும் கேள்விக்கு பதிலான "அந்த காலே ச மாம்" [5] என்னும் ஶ்லோகம் மூவகை அதிகாரி

களுக்கும் அந்திமஸ்ம்ருதியை விதி$_4$க்கிறதென்றும், இப்பதினைலாவது ஶ்லோகம் அவ்வந்திமஸ்ம்ருதியை ஜ்ஞாநி விஷயத்தில் விவரிக்கிற தென்றும் கூறுவது பொருந்தாது. ஐந்தாவது ஶ்லோகம் மூவகை அதி$_4$காரிகளுக்கும் அந்திமஸ்ம்ருதியை விதி$_4$க்கிறது என்பதே அந்த ஶ்லோகத்திலிருந்து தேறவில்லை. மேலும், தாழ்ந்த ப$_2$லனை ஐஶ்வர்யத்தைப் பெறுகிறவனுக்குப் பரமபுருஷனைப்பற்றிய அந்திம ஸ்ம்ருதி தேவைப்படுகிறது என்பதற்கும் ப்ரமாணமில்லை. ஆகையால், ஐந்தாவது ஶ்லோகத்திலும், அதற்கு மேற்பட்ட ஶ்லோகங்களிலும் ஜ்ஞானியாகிற ஒரே அதி$_4$காரியைப் பற்றியே பேசப்பட்டிருக்கிறதென்றும், அவனுக்கு அறியத்தக்க விஷயமொன்றே மறுபடியும் மறுபடியும் ஸங்க்$_2$ரஹவிஸ்தரரூபமாக ஒவ்வொரு ஶ்லோகத்திலும் எடுத்து விளக்கப்படுகிறது என்றும் கொள்ளவேண்டும். ஜ்ஞாநியின் ப்ராத$_4$ான்யத்தை விளக்குவதற்காகத் திருப்பித் திருப்பி அவனைப் பற்றியே பல ஶ்லோகங்கள் பேசுகின்றன என்று கொண்டுவிடலாமாகையால், புநருக்தி தோ$_3$ஷமும் வராது. ''ஸம்ஸித்$_3$தி$_4$ம் பரமாம் க$_3$தா:'' [15] ''ஸ யாதி பரமாம் க$_3$திம்'' [13] ''தமாஹு: பரமாம் க$_3$திம்'' [21] என்னும் தொடர்கள் ஒரே அதி$_4$காரிக்கு ப்ராப்யத்தைச் சொல்லுவதாக விளங்குகையில், பரமஸம்ஸித்$_3$தி$_4$ என்பது ஜ்ஞாநியின் ப்ராப்யத்தையும், பரமக$_3$தி யென்பது கைவல்யார்த்தி$_2$யின் ப்ராப்யத்தையும் சொல்லுவதாகப் பிரிப்பது பொருந்தாது. இரு பத$_3$ங்களும் ஒப்பற்ற ப்ராப்யத்தைத் தானே காட்டுகின்றன. ''தம் பரமாம் க$_3$திம்'' என்று ஒன்றைத் தன்னைக்காட்டிலும் வேறுபடுத்திக் கூறுகையாலே, இரண்டும் வெவ்வேறு ப்ராப்யங்கள் என்று கொள்ளலாமே எனில், ''புருஷ: ஸ: பர:'' [22] என்று பரமபுருஷனாகிற தன்னைப்பற்றி ''அந்தப் பரமபுருஷன்'' என்று படர்க்கையில் பேசுவதுபோலே, இங்கும் 'தம் பரமாம் க$_3$திம் ஆஹு:' என்று படர்க்கையில் பேசுவதாகக் கொள்ளலாமாகையாலே இதுவும் பொருந்தாது. 'பர(ம)ம் புருஷம்' என்னும் ஒரே ஶப்$_3$த$_3$த்திற்கு, ''பரமம் புருஷம் தி$_3$வ்யம்'' [8] ''ஸ தம் பரம் புருஷமுபைதி தி$_3$வ்யம்'' [10] என்றவிடத்தில் ஐஶ்வர்யவிஶிஷ்டனை ப்ரமாத்மாவையும், ''புருஷ: ஸ பர: பார்த்த$_2$'' [22] என்றவிடத்தில் உப$_4$ய விபூ$_4$தியோடும், ஸமஸ்தகல்யாணகு$_3$ணங்களோடும் கூடிய பரமாத்மாவையும் பொருளாகக்கொள்வதும் பொருந்தாது, மற்ற கீ$_3$தா ப$_4$ாஷ்யகாரர்கள் அனைவருமே நாலுக்கு மேற்பட்ட ஶ்லோகங்கள் ஒரே அதி$_4$காரியைப்பற்றிப் பேசுவதாகவும், ப்$_3$ரஹ்மஶப்$_3$த$_3$ம் பரம் பொருளையே குறிப்பதாகவுமே உரையிட்டிருக்கிறார்கள். ஆகையால், இங்கு ப்$_3$ரஹ்மஶப்$_3$த$_3$ம் ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஜீவஸ்வரூபத்தைக் குறிப்பதாகவும், அத்தியாயத்திலுள்ள ஶ்லோகங்கள் எல்லாமே மூவகை அதி$_4$காரிகளையும் மாற்றி மாற்றிக் குறிப்பதாகவும் பொருள் கொள்வது எப்படிப் பொருந்தும்? என்பது அந்த ஶங்கை.

இனி இதற்குப் பரிஹாரம் பின்வருமாறு:— "அதி₄யஜ்ஞோऽஹமேவ" [4] என்றவிடத்திற்போலே "அஹமேவ ப்₃ரஹ்ம" என்று சொல்லாமையாலே. "ஸ்வபா₄வோऽத்₄யாத்மம்" முதலானவிடங்களிற்போலே ப்₃ரஹ்மஶப்₃த₃மும் பரம்பொருளைக்காட்டிலும் வேறொன்றைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். "ப்ரஹ்ம — பரமம் அக்ஷரம்" [3] என்று ப்₃ரஹ்மஶப்₃த₃த்தை அக்ஷரமென்று விவரிப்பதனாலும் இங்கு பரம்பொருள் குறிக்கப்படவில்லையென விளங்கும். பரம்பொருளைக் குறிப்பதாகப் பிரஸித்₃தி₄பெற்ற ப்₃ரஹ்ம ஶப்₃த₃த்தை அத்தகைய ப்ரஸித்₃தி₄யற்ற அக்ஷரஶப்₃த₃த்தால் விவரிப்பது ஒட்டாதன்றோ. "ஏவம் ஸததயுக்தா யே ப₄க்தாஸ்த்வாம் பர்யுபாஸதே। யே சாப்யக்ஷரமவ்யக்தம்॥" [கீ₃தை 12-1] முதலானவிடங்களில், பரமாத்மாவைக்காட்டிலும் வேறுபட்ட உபாஸ்யப்பொருளையே அக்ஷரஶப்₃த₃த்தால் கண்ணன் குறிப்பதைக் காண்கிறோம் "த்₃வே ரூபே ப்₃ரஹ்மணஸ் தஸ்ய மூர்த்தம் சாமூர்த்தமேவ ச। க்ஷராக்ஷரஸ்வரூபே தே ஸர்வபூ₄தேஷ்வவஸ்தி₂தே॥ அக்ஷரம் தத் பரம் ப்₃ரஹ்ம க்ஷரம் ஸர்வமித₃ம் ஜக₃த்॥" [வி. பு. 1-12-55, 56] ['க்ஷரன்' எனப்படும் ஶரீரத்தோடு கூடிய ப₃த்₃த₄ஜீவஸ்வரூபமும், 'அக்ஷரன்' எனப்படும் ஶரீரமற்ற முக்தஸ்வரூபமுமாகிற இரண்டு பரமாத்ம ஶரீரங்களும் எல்லாப் பொருள்களிலும் உள்ளன. 'அக்ஷரம்' எனும் முக்தஸ்வரூபம் ப₃த்₃த₄ஸ்வரூபத்தைக் காட்டிலும் சிறந்ததாகையால் 'பரம் ப்₃ரஹ்ம' எனப்படுகிறது. 'க்ஷரம்' எனப்படும் ப₃த்₃த₄ஸ்வரூபம் இவ்வுலகிலுள்ள பலவகையான ஜீவராசிகளாய் உள்ளது.] முதலானவிடங்களில் புராணங்களில் அக்ஷரஶப்₃த₃த்தையும் பரப்₃ரஹ்மஶப்₃த₃த்தையும் முக்தஸ்வரூபத்தைக் குறித்துப் பிரயோகி₃த்திருக்கும் விஷயம் ஶ்ரீபா₄ஷ்யம், வேதா₃ர்த்த₂ ஸங்க்₃ரஹம் முதலானவற்றில் நிலைநாட்டப்பட்டுள்ளது. ஆகையால், இங்கு 'பரமம் அக்ஷரம்' என்று விவரிக்கப்படும் ப்₃ரஹ்மஶப்₃த₃ம்— ப்ரக்ருதியைக்காட்டிலும் மேலானதாகையாலே 'பரமம்' என்று விஶேஷிக்கத் தக்கதாய், பரமாத்மாவைக்காட்டிலும் வேறுபட்டதான முக்தஸ்வரூபத்தை ஔபசாரிகமாகக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும். இந்த முக்தஸ்வரூபமே "அவ்யக்தோऽக்ஷர:" [21] என்னுமிடத்திலும் அக்ஷரம் எனப்படுகிறது. "தமாஹு: பரமாம் க₃திம்" [21] என்கையாலே இந்த ஶ்லோகம் பரமாத்மவிஷயம் என்று நினைக்கக்கூடாது. "யே சாப்யக்ஷரமவ்யக்தம்" [12-1] "யே த்வக்ஷரமநிர்தே₃ஶ்யம்" [12-3] "க்ஷரஶ்சாக்ஷர ஏவ ச" [15-16] முதலானவிடங்களிற்போலே இங்கும் அக்ஷரஶப்₃த₃ம் ப₄க₃வானைக் காட்டிலும் வேறுபட்டதைக் குறிக்கிறதென்று முற்கூறிய காரணங்களால் விளங்குகிறதன்றோ. "பரமாம் க₃திம்" [8-13, 21] என்று சொல்லப்பட்ட ப்ராப்யத்தைக் காட்டிலும் சிறந்ததானதொரு ப்ராப்யமே "ஸம்ஸித்₃தி₄ம் பரமாம் க₃தா:" [15] என்றவிடத்தில் ஸம்

ஸித்$_3$தி$_4$ ஶப்$_3$த$_3$த்தால் சொல்லப்படுகிறது என்பதை 'ஸம்' என்னும் உபஸர்க்க$_3$மும் காட்டுகிறது. ஆக, இவ்வண்ணமாக எட்டாமத்தியாயத்தில் மேல் ஶ்லோகங்களும் வெவ்வேறு அதி$_4$காரிகளைக் காட்டுவதென்று தெளிவாக விளங்குகையாலே, 'ஸ்வப$_4$ாவம்' முதலான ஶப்$_3$த$_3$ங்கள் அந்தந்த அதி$_4$காரிகளுக்கு அறியவேண்டியவைகளையும், கைக்கொள்ளவேண்டியவைகளையும் குறிப்பதாகக் கொள்வதே உசிதம். இவ்வண்ணமாக இந்த எட்டாம் அத்தியாய ஶ்லோகங்களையும், முன் அத்தியாயத்தில் மூவகை அதி$_4$காரிகளைக் குறிப்பிடும் ஶ்லோகங்களையுங்கொண்டு ஆராயும்போது, இவ்வத்தியாயத்திலுள்ள கேள்விபதில்கள் அந்த மூவகை அதி$_4$காரிகளைப் பற்றியதே எனத் தேறும். ஆகையால், மேல் உள்ள ஶ்லோகங்களையும், இக்கேள்வி பதில்களை அநுஸரித்து அந்த மூவகை அதி$_4$காரிகளுக்குரிய உபாஸன ப்ரகாரம். அந்திமஸ்ம்ருதி ப்ரகாரம் முதலானவற்றைச் சொல்லுவதாகக் கொள்வதே தகும். "அநுஸ்மரேத்$_3$ய:" [9] என்றும், "ய: ப்ரயாதி" [13] என்றும், "யோ மாம் ஸ்மரதி" [14] என்றும் ப்ரகரணத்தில் தொடங்கப்பெற்ற மூவகை அதி$_4$காரிகளும் மூன்று யச்ச$_2$ப்$_3$த$_3$ங்களாலே அநுவதி$_3$க்கப்படுகின்றனர் என விளங்குகிறது. இவர்களில் "ய: ப்ரயாதி" [13] எனப்பட்டவன், "மூர்த்$_4$ந்யாத$_4$ாய" என்று முமுக்ஷுக்களுக்குரிய ப்$_3$ரஹ்மரந்த்$_4$ரம் வழியாக வெளிச்செல்வதாகவும், பரமக$_3$தியை அடைவதாகவும் குறிக்கையாலும், "யோ மாம் ஸ்மரதி" [14] எனப்பட்டவன் அதைவிடச் சிறந்த பரமமான ஸம்ஸித்$_3$தி$_4$யை அடைவதாகக் குறிக்கையாலும் இவ்விருவரும் (முறையே) கைவல்யத்தையும், ப$_4$க$_3$வத்ப்ராப்தியையும் அடைபவர்களே என விளங்குகிறது. ஆகையால், இவர்களுக்கு முன் "அநுஸ்மரேத்$_3$ய:" [9] என்று சொல்லப்பட்டவன் மூவகை அதி$_4$காரிகளில் எஞ்சிநிற்கும் ஐஶ்வர்யார்த்தி$_2$யேயாகவேண்டும். ஐஶ்வர்யார்த்தி$_2$க்குப் பரமபுருஷன் விஷயத்தில் அந்திமஸ்ம்ருதி அவஶ்யம் என்பதற்கு ப்ரமாணமில்லை என்றதும் பொருந்தாது. ப$_4$ாக$_3$வத புராணத்தில் ஐஶ்வர்யார்த்தி$_2$யான த்$_4$ருவன் விஷயத்தில் அந்திமஸ்ம்ருதி கூறப்பட்டுள்ளது. மானைப் பற்றிய அந்திம ஸ்ம்ருதியாலே ஜட$_3$ப$_4$ரதன் மானாக ஆனான் என்னும் சரித்ரத்தைக்கொண்டு பார்க்கும்போது, ஐஶ்வர்யவிஶிஷ்டனாக எம்பெருமானை அந்திம காலத்தில் சிந்திப்பவனே ஐஶ்வர்யத்தை அடைவான் என்பது தன்னடையே தேறும். இங்கு 'ப்$_3$ரஹ்ம' 'புருஷ:' 'பரா க$_3$தி:' முதலான ஶப்$_3$த$_3$ங்களிருப்பதால், எல்லா ஶ்லோகங்களிலும் பரமாத்மாவை உபாஸிப்பதும், அவனை அடைவதுமே பொருளாகத் தோன்றியபோதிலும், முற்கூறிய காரணங்களாலே, அதைக்கொண்டு அதி$_4$காரி ஒருவனே என்று கூறமுடியாது. "அநுஸ்மரேத்$_3$ய:" என்னுமிடத்தில் புருவமத்தியில் ப்ராணனை நிலைநிறுத்தி ப$_4$க$_3$வானை தியானிக்கவேண்டும் என்றும், "ய: ப்ரயாதி" என்னுமிடத்தில்

॥ भा ॥ नित्यशः—मां उद्योगप्रभृति सततं—सर्वकालम् अनन्यचेता यः स्मरति—अत्यर्थमत्प्रियत्वेन मत्स्मृत्या विना आत्मधारणमलभमानो निरतिशयप्रियां स्मृतिं यः करोति; तस्य नित्ययुक्तस्य—

ஹ்ருத$_3$யகமலத்தில் பரமாத்மாவை த்$_4$யானம் செய்யவேண்டுமென்றும், தலையில் (ப்$_3$ரஹ்மரந்த்$_4$ரத்தில்) ப்ராணனை நிலைநிறுத்த வேண்டும் என்றும் கூறுகையாலும், இரண்டிடத்திலும் அந்திமகாலம் என்று விளங்குவதால் காலபே$_4$த$_3$மில்லாமையாலே, அதைக்கொண்டு ஒரே அதி$_4$காரியாக்க முடியாதாகையாலே, அதி$_4$காரிகள் இருவர் என்று கொண்டே தீரவேண்டும். ''ஶதம் சைகா ச'' [ச$_2$ாந் 8-6-6] என்கிறபடியே தலைவழியாக ப்ராணன் செல்வது மோக்ஷத்தை அடைபவனுக்கேயாகையாலும், மற்ற வழிகளில் ப்ராணன் செல்வது மற்ற ப$_2$லன்களுக்காகையாலும், இவ்விரு அதி$_4$காரிகளும் வெவ்வேறு என விளங்குகிறது. ஆகையால், ஏழாம் அத்தியாயத்தில் ''சதுர் வித$_4$ா ப$_4$ஜந்தே'' [7-16] என்னும் ஶ்லோகத்தில் தொடங்கப்பட்ட மூவகை அதி$_4$காரிகளே—அவ்வத்தியாயத்தின் கடைசி ஶ்லோகங்களில் யச்ச$_2$ப்$_3$த$_3$த்தின் ஆவ்ருத்தியாலே எடுக்கப்படுகிறார்கள் என்றும், இவ்வத்தியாயத்தில் முற்கூறிய மூன்று இடங்களில் மூன்று யச்ச$_2$ப்$_3$த$_3$ங்களாலே அவர்களே அநுவதி$_3$க்கப்படுகிறார்கள் என்றும் கொள்வதே பொருந்தும். ஆகையால், இங்கு ஸ்ரீப$_4$ாஷ்யகாரர் காட்டும் பொருளே பொருத்தமுடையது. இனி, வ்யாக்$_2$யானத்தைத் தொடர்வோம்.

(நித்யஶ: ஸததம் அநந்யசேதா:) உபாஸநம் தொடங்கிய காலத்திலிருந்து, அந்திமகாலம் வரையில் எப்போதும் வேறொன்றில் நெஞ்சு செலுத்தாதவனாய். உபாஸனத்தொடக்கம் முதல் அந்திம ஸ்ம்ருதி வரையில் உள்ள காலத்தை 'நித்யஶ:' என்னும் பத$_3$மும், இக்காலத்தில் இடைவிடாமல் அன்புசெலுத்தவேண்டும் என்பதை 'ஸததம்' என்னும் பத$_3$மும் காட்டுகையாலே புநருக்தியில்லை. இதனால், இடையே ஐஶ்வர்யத்திலோ, கைவல்யத்திலோ நெஞ்சு செலுத்தி விட்டால் 'ஜ்ஞாநி' லக்ஷணம் நீங்கப்பெற்று ஐஶ்வர்யார்த்தி$_2$யாகவோ, கைவல்யார்த்தி$_2$யாகவோ ஆகிவிடுவான் என்று காட்டுகிறான். இதனால் உபாஸகஜ்ஞாநிக்கு அந்திமஸ்ம்ருதி வேண்டும் என்றும் உணர்த்தப்படுகிறது. மஹாத்மாவான ஜ்ஞானிக்கும் உபாயமான எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையாலே அந்திமஸ்ம்ருதி ஏற்படுமாகையாலே குறையில்லை. ஐஶ்வர்யார்த்தி$_2$க்கும், கைவல்யார்த்தி$_2$க்கும்போலே அந்திமகாலத்தில் ப்ராணனை நிலைநிறுத்துவது முதலான முயற்சிகளைச் சொன்னால் அது மஹாத்மாவான ஜ்ஞானிக்குப் பொருந்தாதாகையாலே, அதைச்சொல்லாமல், பொதுவாக ''யோ மாம் ஸ்மரதி நித்யஶ:'' என்கிறான். (அநந்யசேதா: ய: மாம் ஸ்மரதி) ''அஹம் அத்யர்த்த$_2$ம் ப்ரிய:'' [7-17] [நான் ஜ்ஞானிக்கு

नित्ययोगं काङ्क्षमाणस्य योगिनोऽहं सुलभः—अहमेव प्राप्यः : न मद्भाव ऐश्वर्यादिकः ; सुप्रापश्च। तद्वियोगमसहमानोऽहमेव तं वृणे। मत्प्राप्त्यनुगुणोपासनविपाकं तद्विरोधिनिरसनमत्यर्थमत्प्रियत्वादिकं च

மிகவும் இனியவன்] என்கிறபடியே என்னிடத்தில் எல்லையில்லாத ப்ரீதிவைத்தவனாகையாலே, என்னிடம் அன்பு செலுத்தினாலொழிய த$_4$ரிக்கமாட்டாதவனாய் ஒப்பற்ற ப$_4$க்தியை என்னிடம் எவன் செய்கிறானோ. உபாஸகஜ்ஞானியும் அன்பு அதி$_4$கமாகும்போது தனது ப$_4$க்திக்குப் ப$_2$லமாக மோக்ஷத்தையும் கருதாமல், அன்பு செலுத்தினாலொழிய த$_4$ரிக்கமாட்டாத ஸ்வயம்ப்ரயோஜந ப$_4$க்தியுடைய மஹாத்மாவாக ஆகிவிடுவான் என்பதையும் 'அநந்யசேதா:' என்னும் பத$_3$த்தாலே உணர்த்துகிறான். (நித்ய யுக்தஸ்ய யோகி$_3$ந: தஸ்ய) இப்படி எப்போதும் என்னிடம் சேர்ந்திருக்கையை விரும்பும் யோகி$_3$யாகிற அவனுக்கு. நித்யயுக்தஶப்$_3$த$_3$த்தில் உள்ள 'க்த'ப்ரத்யயம் 'ஆஶம்ஸை' எனப்படும் விருப்பத்தைக்காட்டுகிறது. (தஸ்ய அஹம் ஸுலப$_4$:) நானே அவனுக்கு ப்ராப்யனாகிறேன்; ஐஶ்வர்யத்தோடு கூடிய என் நிலையாகிற ஐஶ்வர்யமோ, அஸ்தூ$_2$லத்வம் முதலான தன்மைகளோடு கூடிய என் நிலையாகிற கைவல்யமோ அவனுக்கு ப்ராப்யமாவதில்லை. (ஸுலப$_4$:) ஐஶ்வர்யகைவல்யங்களை விரும்புகிறவர்களுக்கு அவற்றைப் பெறுவதில் உள்ள அருமை, என்னைப் பெறுவதில் இவனுக்கு இல்லை. அவை ஸ்வரூபத்திற்குத் தகாத பயன்களாகையாலே, அவற்றை விரும்பும் இவனுடைய ப்ரதிபத்தியை உயர்த்துவதற்காக, கடுமையான ப்$_3$ரஹ்மசர்யம் முதலானவற்றை அவற்றுக்கு ஸாத$_4$னமாக விதி$_4$த்து நீண்டநாள் அலைக்கழித்து, அப்போதும் இவனுடைய ப்ரதிபத்தி மாறாவிடிலே அவற்றை அளிக்கிறேன். என்னைப் பெறும்போது அவ்வருமை இல்லாததோடன்றியில் மிக எளியவனாகவும் ஆகிறேன். "ஈஷத்$_3$து$_3$ஸ்ஸுஷு க்ருச்$_2$ராக்ருச்$_2$ரார்த்தே$_2$ஷு க$_2$ல்" [அஷ்டாத்$_4$யாயீ 3-3-126] என்கிறபடியே ஸுலப$_4$பத$_3$த்தில் 'ஸு' என்பது அருமையின்மையைக் காட்டுகிறதன்றோ. அவர்களுக்குள்ள அருமை இவனுக்கு ஏன் இல்லை? எனில்: அவர்கள் என்னையொழிந்த ப$_2$லன்களை விரும்புகிறவர்களாகையாலே, அதைப் பெறுவதற்குரிய ஸாத$_4$னத்தைப் பரிபூர்ணமாகச் செய்தாலொழிய அவற்றை நான் அவர்களுக்கு அளிப்பதில்லை. இவன் என்னையே விரும்புகிறவனாகையாலும், உண்மையில் உடைமையான இவனைப் பெறுவது உடையவனான எனக்கே பேறாகையாலும், அவனைப் பிரிந்திருப்பது பொறுக்கமாட்டாமல் பரமகாருணிகனான நானே அவனை வரிக்கிறேன். அவன் உபாஸகஜ்ஞானியாயிருந்தால், அவனுடைய உபாஸனத்தைத் தைலதா$_4$ரையைப்போல் இடைவிடாத நினைவாயிருப்பதாய், நேரே காண்பதை ஒத்திருப்ப

अहमेव ददामीत्यर्थः। * यमेवैष वृणुते तेन लभ्यः (क. २. २३; मु. ३. २. ३) इति हि श्रूयते। वक्ष्यते च—* तेषां सततयुक्तानां भजतां प्रीतिपूर्वकम्। ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते॥ तेषामेवानुकम्पार्थमहमज्ञानजं तमः। नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता॥ (१०. १०, ११) इति॥ ॥१४॥

தான பக்தியாக முற்றும்படி நானே செய்கிறேன். அவனுக்கு விரோதியாயிருக்கும் பாபங்கள், ரஜஸ்தமஸ்ஸுக்கள், ப்ராக்ருத விஷயங்களில் விருப்பு வெறுப்புகள், அந்யதாஜ்ஞாந விபரீத ஜ்ஞாநங்கள் முதலானவற்றை நானே போக்குகிறேன். பக்தியின் முதிர்ச்சியாலும், ஏழாமத்தியாயத்தில் சொல்லப்பட்ட என்னைப்பற்றிய உண்மையறிவாலும் அவன் மோக்ஷத்திற்கும் தனது பக்தியை ஸாதனமாக்காதவனாய், என்னையே பரமப்ராப்யமாகவும், மூலகாரண ஸாதனமாகவும் கொண்ட மஹாத்மாவான ஜ்ஞானியாக ஆகிவிட்டானாகில், அவனுக்கு அவன் கையில் ஒரு ஸாதனத்தை எதிர் பாராமல் அந்த ஜன்மத்திலேயே நிர்ஹேதுகமாக மோக்ஷமளித்து, ஒப்பற்ற புருஷார்த்தமான என் விஷயமான பரார்த்தாநுபவ கைங்கர்யங்களைப் பெறும்படி செய்கிறேன்—என்னும் இவ்வளவையும் ஸாலபப்ஸப்தத்தாலே காட்டுகிறான். "யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:" [கட 2-23; முண்டக 3-2-3] [எவனை இப்பரமபுருஷன் வரிக்கிறானோ, அவனாலேயே இவன் அடையத்தக்கவன்.] என்று உபநிஷத்திலும் இவ்வர்த்தம் ஓதப்பட்டதகையாலே இதை அதிவாதமாக (உயர்வுநவிற்சியாக) நினைக்கவேண்டாம் என்று கருத்து. இப்படி ஶ்ருதியிலிருந்து தேறும் இவ்வரும்பொருளை "தேஷாம் ஸதத யுக்தாநாம் பஜதாம் ப்ரீதிபூர்வகம்। ததாமி புத்தியோகம் தம் யேந மாம் உபயாந்தி தே॥ தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம:। நாஶயாம்யாத்மபாவஸ்த: ஜ்ஞாநதீபேந பாஸ்வதா॥" [கீதை 10-10,11] [எப்போதும் என்னோடு சேர்ந்திருக்க வேணுமென விரும்புகிறவர்களாய் என்னிடம் பக்திசெலுத்துகிறவர்களுக்கு, என்னை அடைவிக்கும் அந்த பக்தியை நானே மிக விருப்பத்துடன் முதிர்ச்சியடையச் செய்கிறேன். அவர்களுக்கு அருள் புரிவதற்காகவே, அவர்கள் நினைவில் இருந்துகொண்டு, என்விஷயமான ஜ்ஞானமெனும் ஒளிவிளக்கால், பாபத்தால் ஏற்பட்ட (ப்ராக்ருத) விஷயங்களில் ஈடுபாடாகிற இருளைப்போக்குகிறேன்.] என்று தானே மேலே சொல்லப்போகிறானன்றோ. ஆகையாலே, இவ்வர்த்தத்தில் ஐயத்திற்கு இடமேயில்லை. (பார்த்த) 'என் அத்தைபிள்ளையாகையாலே இவ்வரும்பொருளை உனக்கு உரைத்தேன். நீ இத்தகைய ஜ்ஞாநியாகவேணும்' என்று கருத்து. 14.

॥ भा ॥ अतःपरं अध्यायशेषेण ज्ञानिनः कैवल्यार्थिनश्चापुनरावृत्तिमैश्वर्यार्थिनः पुनरावृत्तिं चाह—

मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम्।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः॥ १५॥

15. மாமுபேத்ய புநர்ஜந்ம து₃:க்க₂ாலயமஶாஶ்வதம் ।
நாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்₃தி₄ம் பரமாம் க₃தா:॥

பரமாம் ஸம்ஸித்₃தி₄ம் க₃தா: — மேலான ஸம்ஸித்₃தி₄ ரூபமான என்னை அடைந்தவர்களான, மஹாத்மாந: — மஹாத்மாக்களான ஜ்ஞாநிகள், மாம்—என்னை, உபேத்ய— அடைந்தபின், து₃:க்க₂ாலயம்—எல்லாத் துன்பங்களுக்கும் இருப்பிடமாயிருப்பதாய், அஶாஶ்வதம்—நிலைநில்லாததான, ஜந்ம—தே₃ஹத்தை, புந:—மறுபடியும், ந ஆப்நுவந்தி— அடைகிறதில்லை.

---

14. என்னை யடைந்ததற்பி னெஞ்சாத் துயர்விளக்கு
மின்னை நிகர்பிறப்பு மேவலுறார்—அன்ன
பெருமனத்த ராய்ப்பிறங்கும் பேரின்ப மன்னுந்
திருமனத்த ராஞர் சிறந்து.

அன்ன பெருமனத்தராய்-முற்கூறியபடி பெரியநெஞ்சை யுடைய மஹாத்மாக்களாய், சிறந்து பிறங்கும் பேரின்பம் மன்னும் திருமனத்தராஞர் — மிகச்சிறந்து விளங்கும் பரமாத்மாநுப₄வத்தில் ஊன்றிய நன்னெஞ்சை உடையவர்கள், என்னை அடைந்ததன்பின்-என்னைப் (பரமபத₃த்தில்) அடைந்த பின், எஞ்சா துயர் விளக்கும்—முடிவில்லாத துன்பத்தை உண்டாக்குவதாய், மின்னை நிகர்—மின்னலைப்போல் நிலை நில்லாததான, பிறவி — தே₃ஹத்தை, மேவல் உறார் — (மறுபடியும்) அடையமாட்டார்கள்.

---

15. இதுவரையில்—மூவகை அதி₄காரிகளுக்கும் அறியவேண்டியவையும், அநுஷ்டி₂க்க வேண்டியவையுமான சில விஷயங்கள்

||भा|| मां प्राप्य पुनर्निखिलदुःखालयमशाश्वतम् — अस्थिरं जन्म न प्राप्नुवन्ति। यत एते महात्मानः— महामनसः, यथा-

சொல்லப்பட்டன இதற்குமேல்—அதி₄காரஸித்₃தி₄க்காகப் ப₂லனைப் பற்றி அறியவேண்டியதொன்றைக் கூறுகிறான். அதாவது :— பரம புருஷனையே ப்ராப்யமாகக்கொண்ட ஜ்ஞாநிக்கும். ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தன் கேவலாத்மாவை அநுப₄விப்பதை ப்ராப்யமாகக்கொண்ட கைவல்யார்த்தி₂க்கும் மறுபடியும இந்த ஸம்ஸாரமண்ட₃லத்திற்குத் திரும்பிவருதலாகிற தாழ்வு இல்லை என்றும், ஐஶ்வர்யார்த்தி₂க்கே தான் பெற்ற உயர்ந்த ப₂லனிலிருந்து தாழ்ந்த ப₂லன்களுக்குத் திரும்பிவருதல் உண்டு என்றும் இவ்வத்தியாயத்தின் எஞ்சிய பகுதியாலே கூறுகிருன். ஐஶ்வர்யார்த்தி₂யினுல் அடையப்படும் உயர்ந்த ஐஶ்வர்யமும் நிலையானதல்ல என்றும், கைவல்யார்த்தி₂யினுல் அடையப்படும் கேவலாத்மாநுப₄வமும், ஜ்ஞாநியினுல் அடையப்படும். ப₄க₃வத₃நுப₄வமும் நிலையானவை (நித்யமானவை) என்றும் இவ்வத்தியாயத்தின் எஞ்சிய பகுதியினுல் உணர்த்தப் புகுகிறவன்;— இந்த ஶ்லோகத்தில் ஜ்ஞாநி அடையும் ப₂லனை ப₄க₃வத₃நுப₄வம் நித்யமானது என்று உணர்த்துகிருன். (மாம் உபேத்ய) என்னைப் (பரமபத₃த்தில்) ப்ராப்யமாக அடைந்தபின். (து₃:க்கா₂லயம் ஜந்ம) எல்லாத் துன்பங்களுக்கும் இருப்பிடமான பிறப்பை; இன்ன து₃:க்க₂ம் என்று குறிப்பிடாமையாலே, இந்தப் பிறப்பு இறப்பு முதலானவற்றில் உழலுவது எல்லா து₃:க்க₂ங்களுக்கும் இருப்பிடம் என்று காட்டப்படுகிறது "ஸம்ஸார ஸாக₃ரம் கோ₄ரம் அநந்தக்லேஶப₄ாஜநம்" [ஜிதந்தே] [மிகக்கொடியதான ஸம்ஸாரக் கடல் கணக்கற்ற துன்பங்களுக்கு இருப்பிடமாயிருப்பது.] என்று ப்ரமாணங்களும் பேசினவன்றோ. இது அனைவர்க்கும் ப்ரத்யக்ஷ ஸித்₃த₄முமாகும் (அஶாஶ்வதம் ஜந்ம) நிலைநில்லாததான பிறப்பு. இங்கு பிறப்புக்குச் சொல்லப்படும் நிலைநில்லாமை — பிறப்போடு பிரிக்கமுடியாத தே₃ஹம், அதைக்கொண்டு அநுப₄விக்கும் இன்பங்கள் ஆகியவற்றின் நிலைநில்லாமை என்றே கொள்ளவேண்டும். அன்றிக்கே, ஜந்மஶப்₃த₃மே இங்கு ஜனனத்தையுடைய ஶரீரத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம் ஶரீரம். துன்பங்கள் அனைத்துக்கும் இருப்பிடமாகவும், நிலைநில்லாததாகவும் இருப்பதன்றோ. (ஜந்ம நாப்நுவந்தி) இத்தகைய பிறப்பை அடைவதில்லை. யார் இவர்கள்? இவர்களுக்கு இப்பெருமை எப்படி வந்தது? எனில்: (மஹாத்மாந:) "ஸ மஹாத்மா ஸுது₃ர்லப₄:" [7-19] என்று மஹாத்மாவாக

वास्थितमत्स्वरूपज्ञाना अत्यर्थमत्प्रियत्वेन मयां विना आत्मधारणमलभमाना मय्यासक्तमनसो मदाश्रया मामुपास्य परमसंसिद्धिरूपं मां प्राप्ताः ॥ १५ ॥

(பெருநெஞ்சினனுகச்) சொல்லப்பட்ட ஜ்ஞாநிகளே இத்தகைய பெருமையைப் பெறுகிருர்கள். உபாஸக ஜ்ஞாநிகளும் ப4க்தி யோக3த்தை ஸாத4னமாக அநுஷ்டி2த்துப் படிப்படியாக மஹாத்மாவான ஜ்ஞானியாக ஆகவேண்டும் என்று திருவுள்ளம்பற்றி, ஞானிகள் அனைவரையுமே ''மஹாத்மாந:'' என்று குறிக்கிருன். ''உதா3ரா: ஸர்வ ஏவைதே'' என்று அதி4காரிகள் மூவரையும் 'உதா3ரர்கள்' என்று ஒருபடியாக அருளிய எம்பெருமானின் திருவுள்ளத்திற்கும் இது தகும். (மஹாத்மாந:) பெருநெஞ்சினர். 'ஸ மஹாத்மா' [7-19] என்றவிடத்தின் வ்யாக்2யானத்தில் சொன்ன பெருமைகள் இங்கும் அநுஸந்தி4க்கத்தக்கவை. இவர்கள் ''பூ4மிராப:'' [7-4] என்று தொடங்கி, ''ந த்வஹம் தேஷு தே மயி'' [7-12] என்ப தீருகச் சொல்லப்பட்ட என்னைப்பற்றிய உண்மையறிவை உடையவர்களாகையாலும், ''ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்த2மஹம்'' [7-17] என்கிறபடியே என்னிடம் அளவற்ற ப்ரீதியை உடையவர்களாகையாலும், இக்காரணத்தாலேயே என்னைப் பிரிந்து த4ரிக்கமாட்டாதவர்களாகையாலும், 'மய்யாஸக்தமநா: பார்த்2 யோக3ம் யுஞ்ஜந் மதா3ச்ரய:'' [7-1] என்கிறபடியே என்னிடம் ஈடுபட்ட நெஞ்சையுடையவர்களாகையாலும், என்னையே ஆதா4ரமாகக் கொண்டவர்களாகையாலும் இவர்கள் இப்பெருமை பெறுவதில் வியப்பில்லை என்றபடி. (பரமாம் ஸம்ஸித்3தி4ம் க3தா:) மேலான புருஷார்த்த2மாயிருக்கும் என்னை அடைந்தவர்களாகையாலும் இவர்கள் இப்பெருமை பெறுவதில் வியப்பில்லை என்றபடி. இப்படி என்னிடம் ப்ரீதிவைத்து என்னை அடைந்தவர்கள் என்னைவிட்டு மறுபடியும் ஸம்ஸாரமண்ட3லத்திற்குச் செல்ல விரும்பமாட்டார்கள்; அரும்பாடுபட்டு என்னால் அடையப்பெற்ற இத்தகையவர்களை நானும் ஸம்ஸாரமண்ட3லத்திற்குத் திருப்பி அனுப்பமாட்டேன் என்று கருத்து. ''கஶ்சித் யததி ஸித்3த4யே'' [7-3] என்று சொல்லப்பட்ட கைவல்யார்த்தி2யின் ப்ராப்யம் ''ஸ யாதி பரமாம் க3திம்'' [8-13] ''தமாஹு: பரமாம் க3திம்'' [8-21] என்று சொல்லப்படுகிறது. ''கஶ்சிந்மாம் வேத்தி தத்த்வத:'' [7-3] என்று முற்கூறியவனைவிடச் சிறந்தவனுகக் கூறப்பட்ட ஜ்ஞாநியின் ப்ராப்யம் இங்கு ''பரமா ஸம்ஸித்3தி4:'' என்று முற்கூறிய ப்ராப்யத்தை

॥ भा ॥ ऐश्वर्यगतिं प्राप्तानां भगवन्तं प्राप्तानां च पुनरावृत्तावपुनरावृत्तौ च हेतुमाह—

आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ॥ १६ ॥

16. ஆப்₃ரஹ்மபு₄வநால்லோகா: புநராவர்த்திநோऽர்ஜுந !
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்₃யதே ॥

அர்ஜுந — அர்ஜுநனே ! ஆப்₃ரஹ்மபு₄வநாத் லோகா: — (ப்₃ரஹ்மாண்ட₃த்தினுள்ளிருக்கும்) ப்₃ரஹ்மலோகம் வரையிலுள்ள எல்லா உலகங்களும், புநராவர்த்திந: — அழிவை உடையவை; கௌந்தேய — குந்தீபுத்திரனே ! மாம் உபேத்ய து — என்னை அடைந்தபின் போவெனில் ; புநர் ஜந்ம—மறுபிறப்பு, ந வித்₃யதே—இல்லை.

---

15. வேதா வுலகளவு மீண்டு வருமுலகென்
றோதாநின் றார்க ளுணர்வுடையோர்—போதார்ந்த
தாராருங் கௌந்தேயா வென்னடைந்தார் தாமீண்டு
வாரார் மறுபிறப்பின் வாய்.

போதார்ந்த தாராரும் கௌந்தேயா-புஷ்பங்கள் நிறைந்த மாலையணிந்த குந்தீபுத்திரனே ! வேதாவுலகளவும் உலகு—ப்₃ரஹ்மலோகம் வரையிலுமுள்ள எல்லா உலகங்களும், மீண்டு வரும் — அழிவையுடையவை, என்று உணர்வுடையோர் ஓதாநின்றார்கள் — என்று அறிவாளிகள் சொல்லுகின்றனர். என்னை அடைந்தார் தாம் — என்னை அடைந்தவர்களோவெனில், மறுபிறப்பின் வாய் மீண்டு வாரார்—மறுபடியும் (இவ்வுலகில்) பிறப்பை அடையமாட்டார்கள்.

விடச் சிறந்ததாகக் காட்டப்படுகிறது என்று கண்டுகொள்வது. அவனுடையது ஸித்₃தி₄; இவனுடையது ஸம்ஸித்₃தி₄; ஸமீசீநமான (ஸ்வரூபாநுகு₃ணமான) ஸித்₃தி₄. ஆக, ஜ்ஞானியின் ப₂லனுக்கு அழிவில்லை என்று காட்டப்பட்டது. மற்றேரதி₄காரியான ஐஸ்வர்யார்த்தி₂யின் ப₂லனுக்கு அழிவுண்டு என்பதும் இத்தால் உணர்த்தப் பட்டதாயிற்று.

॥भा॥ ब्रह्मलोकपर्यन्ता ब्रह्माण्डोदरवर्तिनस्सर्वे लोका भोगैश्वर्यालयाः पुनरावर्तिनः—विनाशिनः। अत ऐश्वर्यगतिं प्राप्तानां प्राप्य-

16. சென்ற ஶ்லோகத்தில் பரமபுருஷனை தன்னை அடைந்தவர்களின் ப₂லனுக்கு அழிவின்மையைக் கூறியதன்மூலம், மற்றோரதி₄காரியான ஐஶ்வர்யார்த்தி₂யின் ப₂லனுக்கு அழிவுண்டு என்று உணர்த்தப்பட்டது. இந்த ஶ்லோகத்தில்—இவ்விரு அதி₄காரிகளின் ப₂லனில் இவ்வண்ணம் வாசியிருப்பதற்குக் காரணத்தைக் காட்டுகிறான். (ஆப்₃ரஹ்மபு₄வநாத் லோகா:) ப்₃ரஹ்மாண்ட₃த்தினுள்ளிருக்கும் ப்₃ரஹ்மலோகமீறுகவுள்ள எல்லா உலகங்களும். "ஆங்" உபஸர்க்க₃ம் 'எது வரையில் உள்ளது' என்பதைக் காட்டும் மர்யாதை₃ (எல்லைப்) பொருளிலும், 'எதை உள்ளடக்கி உள்ளது' என்னும் அபி₄விதி₄ப்பொருளிலும் பிரயோகிக்கப்படும். இங்கு 'மாமுபேத்ய' என்று ப்ரதிகோடியாகத் தன்னை எடுக்கையாலும், ப்₃ரஹ்மலோகத்திற்கும் அழிவை அடுத்தபடி கூறுகையாலும், ப்₃ரஹ்மலோகத்தையும் உள்ளடக்கிய அபி₄விதி₄ப்பொருள் கொள்ளப்பட்டது. "மம மாயா" என்று ப₄க₃வானுடைய மாயையாகச் சொல்லப்படும் மூலப்ரக்ருதியாகிய பெருங்கடலில், "ஜலபு₃த்₃பு₃த₃வத் ஸமம்" என்கிறபடியே ப்₃ரஹ்மாண்ட₃ங்களே நீர்க்குமிழிபோலே அழிபவையாயிருக்கும்போது, அதற்குள்ளிருக்கும் ஸத்யலோகம் முதலான உலகங்கள் அழிபவை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ என்று கருத்து. ஆக, "மாமுபேத்ய" என்றவிடத்தில் கருதப்பட்ட பரமபத₃த்திற்குக் கீழுள்ள எல்லா உலகங்களும் அழிபவையே என்றபடி. (லோகா: புநராவர்த்திந:) போ₄க₃ஸாத₄னமான ஐஶ்வர்யத்திற்கு இருப்பிடமாயிருக்கும் ப்ராக்ருத லோகங்கள் அழிபவையே. (புநராவர்த்திந:) "லோகஸ்து பு₄வநே ஜநே" என்று லோக ஶப்₃த₃ம் உலகங்களையும், ஜனங்களையும் குறிக்கும். இங்கு பு₄வந ஶப்₃த₃த்தோடு சேர்த்துப் படிக்கப்பட்ட லோகஶப்₃த₃ம் ஜனங்களைக் குறிக்கமாட்டாதாகையாலே, "ஜனங்கள் திரும்பிவருகிறார்கள்" என்னும் பொருளைக்கொள்ளமுடியாது. உலகங்கள் போவதுவருவதில்லாமையாலே, அவை திரும்பிவரமுடியாது. ஆகையால், புநராவ்ருத்தி ஶப்₃த₃ம் இங்கு உலகங்கள் மாறிமாறி அழிவதை லக்ஷணையாலே காட்டுகிறது. அன்றிக்கே, லோகஶப்₃த₃ம் அஜஹல்லக்ஷணையாலே ஜனங்களோடுகூடிய உலகங்களைக் காட்டுகிறதாய், ஜனங்கள் திரும்பிவருவதையிட்டு, 'உலகங்கள் திரும்பிவருகின்றன' என்று கூறுவதாகவும் கொள்ளலாம். ஆக, ஐஶ்வர்யக₃தியை அடைந்தவர்களுக்கு, அவர்கள் பயனை அநுப₄விக்கும் இடம் அழியக்கூடியதாகை

स्यानविनाशाद्विनाशित्वमवर्जनीयम् । मां—सर्वज्ञं सत्यसङ्कल्पं निखिल-
जगदुत्पत्तिस्थितिलयलीलं परमकारुणिकं सदैकरूपं प्राप्तानां विनाश-
प्रसङ्गाभावात्तेषां पुनर्जन्म न विद्यते ॥ १६ ॥

॥ भा ॥ ब्रह्मलोकपर्यन्तानां लोकानां तदन्तर्वर्तिनां च परम-
पुरुषसङ्कल्पकृतामुत्पत्तिविनाशकालव्यवस्थामाह —

सहस्रयुगपर्यन्तमहर्यद्ब्रह्मणो विदुः ।
रात्रिं युगसहस्रान्तां तेऽहोरात्रविदो जनाः ॥ १७ ॥
अव्यक्ताद्व्यक्तयस्सर्वाः प्रभवन्त्यहरागमे ।
रात्र्यागमे प्रलीयन्ते तत्रैवाव्यक्तसंज्ञके ॥ १८ ॥
भूतग्रामस्स एवायं भूत्वा भूत्वा प्रलीयते ।
रात्र्यागमेऽवशः पार्थ प्रभवत्यहरागमे ॥ १९ ॥

யாலே, அவர்களுடைய பயனும் அழிவதைத் தவிர்க்கமுடியாது என்று தேறிற்று. இனி, உத்தரார்த்த4த்தாலே ப்ரதிகோடியான தன்னை அநுப4விப்பதற்காகப் பரமபத3த்தை அடைந்தவர்களுக்கு அழிவில்லை என்று காட்டுகிறான், — (மாம் உபேத்ய து புநர்ஜந்ம ந வித்3யதே) எல்லாமறிந்தவனாய், ஸத்யஸங்கல்பனாய், எல்லாவுலகையும் படைத்தளித்து அழிப்பதை விளையாட்டாகக் கொண்டவனாய், பரமகாருணிகனாய், எப்போதும் ஒருபடிப்பட்டவனாயிருக்கும் என்னை அடைந்தவர்களுக்கோவெனில், மறுபிறப்பு கிடையாது. எல்லாமறியாதவனாய், நினைத்ததை நடத்தமுடியாதவனாய், ஒருவனால் படைக்கப்படுபவனாய், கருணையற்றவனாய், ரஜஸ்தமஸ்ஸுக்களால் ஏற்படும் ராக3த்3வேஷங்களால் பலவித4மான மாறுபாடுகளை அடைபவனான பேசநின்ற சிவன், பிரமன் முதலான க்ஷுத்3ரதெய்வங்களை அடைந்திருந்தாலன்றோ, அந்த தெய்வத்தாலேயோ, அல்லது வேறொருவனாலேயோ மறுபிறப்பு ஏற்படலாம் என்று ஶங்கிக்கக்கூடும்; எல்லா நற்குணங்களும் நிறைந்த என்னை அடைந்தவர்களுக்கு இப்படி ஶங்கிக்கவும் இடமில்லை என்று கருத்து. (புநராவர்த்தி நோऽர்ஜுந) அர்ஜுனன் (ஶுத்3த4ஸ்வபா4வன்) என்று பெயர் படைத்த நீ, அழியும் ப2லனை விரும்பலாகாது என்று கருத்து. (கௌந்தேய) என் அத்தை பிள்ளையான நீ என்னையடைவதாகிற அழியாப்பயனைப் பெறவேணும் என்று கருத்து. 16.

17. ஸஹஸ்ரயுக₃பர்யந்தமஹர்யத்₃ப்₃ரஹ்மணோ விது₃: ।
ராத்ரிம் யுக₃ஸஹஸ்ராந்தாம் தேऽஹோராத்ரவிதோ₃ ஜநா: ॥
18. அவ்யக்தாத்₃வ்யக்தய: ஸர்வா: ப்ரப₄வந்த்யஹராக₃மே ।
ராத்ர்யாக₃மே ப்ரலீயந்தே தத்ரைவாவ்யக்தஸம்ஜ்ஞகே ।
19. பூ₄தக்₃ராமஸ்ஸ ஏவாயம் பூ₄த்வா பூ₄த்வா ப்ரலீயதே ।
ராத்ர்யாக₃மேऽவஶ: பார்த₂ ப்ரப₄வத்யஹராக₃மே ॥

பார்த₂ — குந்தீபுத்திரனே! (யே), அஹோராத்ரவித₃: ஜநா: — (மனிதர் தொடக்கமாக நான்முகனீருக்வுள்ள அனைவாக்கும்) இரவு பகல்களை அறியும் அறிவாளிகள் எவர்கள் உளரோ, தே—அவர்கள், ப்₃ரஹ்மண: அஹ:— பிரமனின் பகலை, ஸஹஸ்ரயுக₃பர்யந்தம் விது₃: — ஆயிரம் சதுர்யுக₃காலத்தில முடிவதாக அறிகின்றனர்; ராத்ரிம்— (பிரமனின்) இரவையும், யுக₃ஸஹஸ்ராந்தாம் (விது₃:) — ஆயிரம் சதுர்யுக₃காலத்தில் முடிவதாக அறிகின்றனர்; அஹராக₃மே — (பிரமனின்) பகல் தொடங்கும்போது, ஸர்வா: வ்யக்தய:—(உலகிலுள்ள) எல்லாப்பொருள்களும், அவ்யக்தாத்-(பிரமனின் தே₃ஹமான) அவ்யக்தத்தினின்றும், ப்ரப₄வந்தி—உண்டாகின்றன; ராத்ர்யாக₃மே—(பிரமனின்) இரவு தொடங்கும்போது, அவ்யக்த ஸம்ஜ்ஞகே தத்ரைவ— அவ்யக்தம் எனப்படும் அந்தப் பிரமனின் தே₃ஹத்திலேயே, ப்ரலீயந்தே — (அவை) ஒடுங்குகின்றன அவஶ: ஸ ஏவ அயம் பூ₄தக்₃ராம: — கர்மத்திற்கு வஶப்பட்ட அத்தகைய இந்த ஜீவஸமூஹம், (அஹராக₃மே) பூ₄த்வா பூ₄த்வா— (ஒவ்வொரு பகலின் தொடக்கத்திலும்) உண்டாகி உண்டாகி, ராத்ர்யாக₃மே ப்ரலீயதே — இரவின் தொடக் கத்தில் லயத்தை அடைகிறது, அஹராக₃மே ப்ரப₄வதி— (மறுபடியும்) பகலின் தொடக்கத்தில் உண்டாகிறது.

---

16. ஆயிர மேலுகங்க ளாங்கயனுக் கோர்பகலா
மாயிர மாமிரவு மற்றதுவென்—றேயும்
பகலிரவு தானறியும் பண்புடையா ரின்னே
நிகரறிவு தாஞ்செய்வர் நின்று.

17. தோன்று வயனுடம்பிற் றேன்றும் பொருளெல்லா
மேன்றும் பகலி னிடையுதிக்கு—மான்றூர்ந்தங்
காகு மவையெல்லா மவ்வுருவுள் ளேயடங்கிப்
போகு மிரவாகும் போது.

18. தொக்கமரிப் பூதமெலாந் தோன்றித்தோன் றித்தொடர
மிக்கவச மாயிரவில் வீயுமே—தக்கபகல்
என்றுவருங் காலத் திவையுண்டா மென்பதனு
லொன்றுநிலே தன்னேயுரு துற்று.

(16) ஆங்கு அயனுக்கு—ஸத்யலோகத்தில் உள்ள பிரமனுக்கு, ஆயிரம் மேல் உகங்கள்—ஆயிரம் சதுர்யுக₃ங்கள், ஓர் பகலாம்—ஒரு பகலாகின்றது; இரவு—(அவனுடைய) ஓர் இரவும், ஆயிரம் மற்றது ஆம்—ஆயிரம் சதுர்யுக₃மாகும்; என்று—என்று இவ்வண்ணமாக, ஓயும் பகல் இரவுதான்—(பிரமனுடைய) அநித்யமான பகலேயும் இரவையும், அறியும் பண்புடையோர் தாம் — அறியும் பெருமைபெற்றவர்கள், இன்னே—இந்த ரீதியில், நிகரறிவு நின்று செய்வர்—சிறந்த அறிவை நிலேயாக உடையவராகின்றனர். (17) தோன்றும் பொருள் எல்லாம்—புலனுகக்கூடிய எல்லாப் பொருள்களும், தோன்று அவன் உடம்பில் — புலனுகாத பிரமனின் உடம்பில், ஏன்று ஆம் பகலினிடை உதிக்கும்—(அவனது) பகல் தொடங்கும்போது உண்டாகும். ஆன்று ஆர்ந்து அங்கு ஆகும் அவையெல்லாம் — அப்படிப் பகலில் அவ்வுடலில் தோன்றும் அப்பொருள்கள் எல்லாம், இரவாகும்போது—பிரமனுக்கு இரவு ஏற்படும்போது, அவ்வுருவுள்ளே அடங்கிப்போகும் — அப்பிரமனுடைய உருவினுள்ளே லயித்துவிடும். (18) தொக்கு அமர் இப்பூதம் எலாம்-சேர்ந்திருக்கும் இந்த ஜீவராசிகள் அனைத்தும், தொடர மிக்கு அவசமாய்—தொடர்ந்து மிகவும கர்மவயப்பட்டதாய், தோன்றி தோன்றி—(பகலில்) உண்டாகி உண்டாகி, இரவில் வீயுமே—இரவுப்போதில் அழிந்துவிடும். தக்க பகல் என்று வரும் காலத்து இவை உண்டாம்—(மறுபடியும்) பகற்காலத்தில் இவை உண்டாகின்றன. என்பதனுல்—இக்காரணத்தால், ஒன்றும் உற்று றிலே தன்னே உருது—ஒரு பொருளும் உள்ளபடி நிலேயான தன்மையை அடைவதில்லே.

17—19. ப்3ரஹ்மலோகமீருகவுள்ள உலகங்களுக்கும், அவற்றி னுள்ளிருப்பவர்களுக்கும், பரமபுருஷனுடைய ஸங்கல்பத்தால் ஏற் படும் உத்பத்தி விநாஶங்களின் காலவரம்பைக் காட்டுவதன்மூலம் சென்ற ஶ்லோகத்தில் சொன்ன அர்த்த2த்தை விவரிக்கிருன் இம் மூன்று ஶ்லோகங்களில். இராப்பகல்கள் முதலான காலங்கள் தத்தமக்குரிய அளவில் ஏற்றத்தாழ்வில்லாமல் வரம்புக்குட்பட்டி ருப்பதற்கு ஸர்வேஶ்வரனை நாராயணனுடைய ஸங்கல்பமே காரணம் என்னும் விஷயம்—

"காலசக்ரம் ஜக3ச்சக்ரம் யுக3சக்ரம் ச கேஶவ: |
ஆத்மயோகே3ந ப4க3வாந் பரிவர்த்தயதேऽநிஶம் ||
காலஸ்ய ச ஹி ம்ருத்யோஶ்ச ஜங்க3மஸ்த2ாவரஸ்ய ச |
ஈஷ்டே ஹி ப4க3வாநேக: ஸத்யமேதத் ப்3ரவீமி தே ||"
[ப4ார-உத்3யோக3 67-12, 13]

[(சுழன்று சுழன்று வருகையாலே) சக்கரம் எனத்தக்கவையான காலத்தையும், உலகத்தையும், யுக3ங்களையும் கேஶவனுகிற ப4க3வான் தன் ஸங்கல்பத்தாலே தினந்தோறும் சுழலச்செய்கிருன். ஜ்ஞாநம், ஶக்தி முதலான கு3ணங்களால் நிறைந்த ப4க3வானுகிற அவனே காலத்தையும், 'ம்ருத்யு' எனத்தக்க ஸம்ஸார வாழ்க்கையையும், (அதில் உழலும்) அசைவனவும், அசையாதனவுமான பொருள்களை யும் நியமிக்கிருன். இதை ஸத்யம் செய்து உனக்குக் கூறுகிறேன்.] என்றும்,

"ததோ யுக3ஸஹஸ்ராந்தே ஸம்ஹரிஷ்யே ஜக3த் புந: |
க்ருத்வா மத்ஸ்த2ாநி பூ4தாநி சராணி ஸ்த2ாவராணி ச ||"
[ப4ார-மோக்ஷ 347-71]

[அதற்குப்பின் ஆயிரக்கணக்கான யுக3ங்களுக்குப் பிறகு, அசை வனவும், அசையாதனவுமான எல்லாப் பொருள்களையும் என்னுள் ஆக்கி, இவ்வுலகத்தை மறுபடியும் ஸம்ஹாரம் செய்வேன்.] என் றும் மஹாபா4ரதத்தில் சொல்லப்பட்டது.

17. இம்மூன்று ஶ்லோகங்களில் முதல் ஶ்லோகத்தாலே பிரம னின் இரவும் பகலும் தனித்தனியேஆயிரம் சதுர்யுக3ங்களளவுள்ளவை என்று கூறப்படுகிறது. இதே விஷயம் மநுஸ்ம்ருதியின் முதல் அத்தியாயத்திலும் விரிவாக விளக்கப்பட்டது. அதில் 69, 70-வது ஶ்லோகங்களில் (ஸந்தி4களோடு கூடிய) நாலு யுக3ங்களின் அளவுகள்

॥ भा ॥ ये मनुष्यादिचतुर्मुखान्तानां मत्सङ्कल्पकृताहोरात्रव्यव-स्थाविदो जनाः, ते ब्रह्मणश्चतुर्मुखस्य यदहः, तच्चतुर्युगसहस्रावसानं

கூறப்பட்டன. 71-வது ஶ்லோகத்தில் இந்த நாலு யுக3ங்களும் சேர்ந்து ஒரு தே3வயுக3ம் என்று கூறப்படுகிறது என்று கூறினர். 72-வது ஶ்லோகத்தில் தனித்தனியே இத்தகைய ஆயிரம் தே3வ யுக3ங்களின் அளவுகொண்டவை பிரமனின் பகலும் இரவும் என்று காட்டினர். அடுத்ததான "தத்3யே யுக3ஸஹஸ்ராந்தம் ப்3ராஹ்மம் புண்யமஹர்விது3: । ராத்ரிம் ச தாவதீமேவ தே(அ)ஹோராத்ரவிதோ3 ஜநா: ॥" [1-73] [அந்த தே3வயுக3ங்கள் ஆயிரம்கொண்ட காலத்தைப் பிரமனின் புண்யமான பகலாகவும், அதே அளவுகொண்ட காலத்தை அவனுடைய ராத்ரியாகவும் எவர்கள் அறிகிறார்களோ, அவர்கள் 'பகலிரவுகளை அறிந்த ஜனங்கள்' என்று புகழப்படுகின்றனர்.] என்னும் ஶ்லோகம் இந்த கீ3தாஶ்லோகத்தைப் பெரும்பாலும் அடியொற்றியிருக்கிறது. ஆயினும், இந்த கீ3தாஶ்லோகம், அந்த மனுஸ்ம்ருதி ஶ்லோகத்தைப்போலே அஹோராத்ரவித்துக்களான (பகலிரவுகளை அறிந்த) ஜனங்களைப் புகழவந்ததல்ல, பிரமனின் பகலிரவுகளின் அளவை விளக்கும் மநுஸ்ம்ருதி (69 முதல் 73 வரையுள்ள) ஶ்லோகங்களின் ஸங்க்3ரஹமாகவேயிருக்கிறது என்பது இந்த கீ3தாப்ரகரணத்தையும், இந்த ஶ்லோகத்தின் அமைப்பில் உள்ள வேறுபாடுகளையும் காண்பார்க்கு நன்கு விளங்குமாகையாலே அவ்வண்ணமே இது விவரிக்கப்படுகிறது. (யே அஹோராத்ரவிதோ3 ஜநா:) மநுஸ்ம்ருதி முதலான ஶாஸ்த்ரங்களில் பகலிரவுகளை அறிந்தவர்களாக எந்த ஜனங்கள் கூறப்படுகிறார்களோ; இந்த ப்ரகரணம் அஹோராத்ரவித்துக்களைப் புகழவந்ததல்லவாகையால், "யே விது3ஸ் தே அஹோராத்ரவிதோ3 ஜநா:" [எவர்கள் அறிகிறார்களோ அவர்கள் அஹோராத்ரவித்துக்கள்] என்று அவர்களைப் புகழவந்த மநுஸ்ம்ருதி ஶ்லோகத்திற்போலே, இங்கு பொருள் கொள்ளமுடியாது ஆக, ஶ்லோகத்தின் முற்பாதியிலுள்ள 'யத்' என்னும் நபும்ஸகலிங்க3ஶப்3த3ம் 'அஹ:' என்பதற்கு விஶேஷணமாக அந்வயித்து விடுகிறதாகையால் பிற்பாதியிலுள்ள 'தே' என்னும் பத3த்திற்கு ப்ரதிஸம்ப3ந்தி4யாக 'யே' என்னும் பத3த்தை வருவித்துக்கொண்டு மநுஸ்ம்ருதி முதலான ஶாஸ்த்ரங்களில் 'அஹோராத்ரவித்துக்கள்' [பகலிரவுகளை அறிந்தவர்கள்] என்று புகழப்படுகிறவர்கள் இங்கு அநுவதி3க்கப்படுவதாகவே கொள்ள வேண்டும். இங்கு பொதுவாக 'அஹோராத்ரவித்துக்கள்' [பகலிரவு

विदुः; रात्रिं च तथारूपाम्। तत्र ब्रह्मणोऽहरागमसमये

களை அறிந்தவர்கள்] என்கையால், மனிதர் முதலாக, தே₃வர் நடுவாகப் பிரமன் ஈருகவுள்ள ஸம்ஸாரிகள் அனைவருடையவும் பகலிரவு வரம்பையறிந்தவர்கள் இவர்கள் என்று விளங்குகிறது. அவதாரிகையில் எடுத்த ப்ரமாணங்களின்படி பரமபுருஷனின் ஸங்கல்பத்தாலேயே இப்பகலிரவு வரம்புகள் ஏற்படுகின்றன என்பதையும் இவர்கள் அறிந்தவர்களாகவேண்டும் என்பது தானே விளங்கும். ஆக, பரமாத்மா ஒருவனே அழிவில்லாதவன், பிரமனோடு, மனிதரோடு வாசியற அனைவரும் அழிபவர்களே என அறிந்தவர்கள் என்கை. (தே ப்₃ரஹ்மண: யத் அஹ: (தத்) ஸஹஸ்ரயுக₃பர்யந்தம் விது₃:) அந்த அஹோராத்ரவித்துக்கள் ப்₃ரஹ்மாவின் பகலை ஆயிரம் சதுர்யுக₃ங்களில் முடிவடைவதாக அறிகிருர்கள். (ராத்ரிம் யுக₃ ஸஹஸ்ராந்தாம் விது₃:) அவ்வண்ணமே அப்பிரமனின் இரவும் மற்றொரு ஆயிரம் சதுர்யுக₃ங்களில் முடிவடைவதாக அறிகிருர்கள். (ப்₃ரஹ்மண:) பிரமனுக்கு. பரம்பொருளாகிற ப்₃ரஹ்மத்திற்குக் காலவரம்பு கிடையாதாகையாலும், பிரமனுக்கே ஆயிரம் சதுர் யுக₃ங்களைத் தனித்தனியே பகலாகவும், இரவாகவும் கொண்டிருக்கையாகிற காலவரம்பு மநுஸ்ம்ருதி, ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலான ஶாஸ்த்ரங்களில் காண்கையாலும், இங்குள்ள ப்₃ரஹ்ம ஶப்₃த₃ம் ப்₃ரஹ்மாவாகிற நான்முகனைக் குறிக்கிறது என்பது தெளிவு. (ஸஹஸ்ரயுக₃ பர்யந்தம் விது₃:) ஆயிரம் சதுர்யுக₃ங்களை எல்லையாகக் கொண்டதாக அறிகின்றனர். "சதுர்யுக₃ம் தே₃வானாம் யுக₃முச்யதே" [மநு 1-71] என்று 'க்ருதம், த்ரேதா, த்₃வாபரம், கலி' எனப்படும் மனிதர்களுடைய ஒரு சதுர்யுக₃ம் தே₃வர்களுக்கு ஒரு யுக₃மாகிறதாகையால், இங்கு 'யுக₃ம்' என்றது மனிதர்களின் சதுர்யுக₃த்தைக் குறிக்கிறது. ஸ்ரீ விஷ்ணுபுராணம் ஆரும் அம்ஶம் முதல் அத்தியாயத்திலும் பிரமனின் பகல் ஆயிரம் சதுர்யுக₃ங்கள் கொண்டது என்று கூறப்பட்டிருப்பது காணத்தக்கது. "ஆயிரம் சதுர்யுக₃ங்களை எல்லையாக உடைய பிரமனின் பகலை அறிகிருர்கள்" என்று பகலைப்பற்றிய அறிவை விதி₄ப்பதாக ஶ்லோகத்தின் அமைப்பு இருந்தபோதிலும், "யே அஹோராத்ர விதே₃ா ஜநா:" என்று இவர்களைப் பகலிரவுகளை அறிந்தவர்களாக அநுவதி₃த்துவிட்டபடியாலும், "ஸவிஶேஷணௌ விதி₄நிஷேதௌ₄ விஶேஷணமுபஸங்க்ராமத:" [ஒரு விஶேஷணத்தோடு கூடிய விஶேஷ்யத்தைப் பற்றிய விதி₄யோ, நிஷேத₄மோ விஶேஷணத்தைச் சென்றடையும்]

त्रैलोक्यान्तर्वर्तिन्यो देहेन्द्रियभोग्यभोगस्थानरूपा व्यक्तयश्चतुर्मुखदेहा-वस्थादव्यक्तात् प्रभवन्ति । तत्रैवाव्यक्तावस्थाविशेषे चतुर्मुखदेहे

என்னும் நியாயத்தாலும் ''பிரமனின் பகலை ஆயிரம் சதுர்யுக3ங்களை எல்லையாக உடையதாக அறிகிறார்கள்'' என்று பகலின் எல்லையைப் பற்றிய அறிவை விதி4ப்பதாகவே பொருள்கொள்ளவேண்டும்.

18. பிரமனின் பகலிரவுகளின் வரம்புகளை முன் ஶ்லோகத்தில் சொன்னதினால் தேறிய அர்த்த2த்தை இந்த ஶ்லோகத்தில் கூறுகிறான். (ஸர்வா: வ்யக்தய: அஹராக3மே அவ்யக்தாத் ப்ரப4வந்தி) உலகில் காணப்படும் எல்லாப் பொருள்களும், (பிரமனின்) பகல் தொடங்கும்போது, (பிரமனின் ஶரீரமான) அவ்யக்தத்தினின்றும் உண்டாகின்றன. (ராத்ர்யாக3மே அவ்யக்த ஸம்ஜ்ஞகே தத்ரைவ ப்ரலீயந்தே) (பிரமனின்) இரவு தொடங்கும்போது, அவ்யக்தம் எனப்படும் அந்தப் பிரமனின் தே3ஹத்திலேயே அவை ஒடுங்குகின்றன. பொதுவாக 'அவ்யக்தம்' என்று ஸூக்ஷ்மமான மூல ப்ரக்ருதியையும், 'வ்யக்தம்' என்று அதிலிருந்து தோன்றும் மஹான் முதலான ஸ்தூ2லப்பொருள்களையும் குறிப்பதுண்டாயினும், பிரமனின் பகலின் தொடக்கத்தில் உண்டாவதாகக் கூறப்படும் 'வ்யக்தி'கள், ப்3ரஹ்மஸ்ருஷ்டிக்கு முன்னால் ஸர்வேஶ்வரனால் செய்யப்படும் ஸமஷ்டி ஸ்ருஷ்டியின்போது உண்டாகும் மஹான் முதலானவையாக முடியாது; ஆகையால், ''வ்யஜ்யந்தே—இதி வ்யக்தய:'' [வெளிப்படுத்தப்படுகின்றனவாகையால் வ்யக்திகள் எனப்படுகின்றன.] என்னும் வ்யுத்பத்தியால், நான்முகனால் ஸ்ருஷ்டிக்கப்படும் பொருள்களே இங்கு 'வ்யக்திகள்' எனப்படுவதாகக் கொள்ளவேண்டும். அதிலும் பிரமனின் இரவின் தொடக்கத்தில் ப்ரளயமும், பகலின் தொடக்கத்தில் ஸ்ருஷ்டியும் ஏற்படுவது பூ4ர் பு4வஸ் ஸுவ: என்னும் மூன்று லோகங்களுக்கே என்று இந்த நைமித்திகஸ்ருஷ்டி ப்ரளயங்களைச் சொல்லும் மற்ற ஶாஸ்த்ரங்களிலிருந்து விளங்குகிறதாகையால், இம்மூவுலகிலுமுள்ள தே3ஹம் இந்த்3ரியம் ஆகிய போ4கோ3பகரணங்கள், போ4க்3யப்பொருள்கள், போ4க3ஸ்தா2னங்கள் முதலான அசேதனப்பொருள்களே இங்கு வ்யக்திஶப்3த3த்தால் குறிக்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். இவ்வசேதனப்பொருள்கள் ப்3ரஹ்மாவின் ஶரீரத்திலிருந்தே ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன என்பதும் பல ஶாஸ்த்ர வசனங்களில் காணப்படுகிறது. ஆகையால், இங்கு வ்யக்திகாரணமாகக் கூறப்படும் 'அவ்

रात्र्यागमसमये प्रलीयन्ते। स एवायं कर्मवश्यो भूतग्रामोऽहरागमे भूत्वा भूत्वा रात्र्यागमे प्रलीयते। पुनरप्यहरागमे प्रभवति। तथा

யக்தம்' மூலப்ரக்ருதியன்றென்றும், அதிலிருந்து உண்டானபடியால் 'அவ்யக்தம்' எனப்படும் ப்₃ரஹ்மாவின் ஶரீரமே என்றும் விளங்குகிறது. அவ்யக்த ஶப்₃த₃ம் ஶரீரத்தைக் குறிக்கும் என்பது ''மஹத: பரமவ்யக்தம்'' [கட₂ 3-11] என்னும் உபநிஷத்₃ வாக்யத்திலிருந்தும், இந்த வாக்யத்தில் அவ்யக்தஶப்₃த₃ம் வ்யக்தமான ஶரீரத்தைக் குறிப்பதின் பொருத்தத்தை விளக்கும் ''ஸூக்ஷ்மம் து தத₃ர்ஹத்வாத்'' [1-4.2] என்னும் ப்₃ரஹ்ம ஸூத்ரத்திலிருந்தும் விளங்கும். ஆக, மூவுலகிலுமுள்ள தே₃ஹம் இந்த்₃ரியம் முதலான அசேதனப் பொருள்கள் பிரமனின் பகலின் தொடக்கத்தில் அவனது ஶரீரத்திலிருந்து தோன்றி, இரவின் தொடக்கத்தில் அந்த ஶரீரத்திலேயே ஒடுங்குகின்றன என்று நைமித்திக ஸ்ருஷ்டி ப்ரளயங்கள் கூறப்பட்டன.

19. முற்கூறிய ஸ்ருஷ்டி ப்ரளயங்களுக்குக் காரணம் அந்தந்த ஜீவர்கள் செய்யும் புண்யபாபகர்மங்கள் என்றும், அக்கர்மங்கள் அடியோடு அழியாமல் தொடர்ந்து வருகையால், அந்த ஸ்ருஷ்டி ப்ரளயங்களும் தொடர்ந்து வருகின்றனவென்றும், இக்காரணத்தால் அக்ருதாப்₄யாக₃மம் (செய்யாத செயலுக்குப் ப₂லனை அநுப₄விப்பது) க்ருதவிப்ரணாஶம் (செய்த செயலுக்குப் ப₂லனில்லாமற்போவது) எனும் தோ₃ஷங்கள் ஏற்படுவதில்லை என்றும், இந்த நைமித்திக ஸ்ருஷ்டி ப்ரளயங்கள் பிரமனின் கல்பங்கள் எனப்படும் ஒவ்வொரு பகலிராக் காலங்களிலும் ஏற்படுகின்றன என்றும், ஒவ்வொரு கல்பத்திலும் முன் கல்பங்களிற்படியே பிரமனால் ஸ்ருஷ்டிக்கப்படுகிறது என்றும் இந்த ஶ்லோகத்தில் காட்டுகிறான். (ஸ ஏவாயம் அவஶ: பூ₄தக்₃ராம: (அஹராக₃மே) பூ₄த்வா பூ₄த்வா ராத்ர்யாக₃மே ப்ரலீயதே; அஹராக₃மே ப்ரப₄வதி) அத்தகைய இந்தக் கர்மவஶப்பட்ட ஜீவராஶிகள் பிரமனின் (பகற்காலங்களின் தொடக்கங்களில்) மறுபடியும் மறுபடியும் உண்டாகி, இராக்காலங்களின் தொடக்கங்களில் லயமடைகின்றன. மறுபடியும் அடுத்த பகற்காலத்தின் தொடக்கத்தில் உண்டாகின்றன. (அவஶ: பூ₄தக்₃ராம:) 'அவஶ:' என்று கர்மபரவஶமாகக் கூறுகையால், பூ₄தஶப்₃த₃ம் இங்கு பஞ்சபூ₄தங்களைக் குறிக்காமல் முற்கூறிய தே₃ஹேந்திரியங்களோடு கூடிய ஜீவராஶிகளைக் கூறுகிறது. (அவஶ: பூ₄தக்₃ராம: பூ₄த்வா பூ₄த்வா ப்ர

वर्षशतावसानरूपयुगसहस्रान्ते ब्रह्मलोकपर्यन्ता लोकाः ब्रह्मा च *पृथि-
व्यप्सु प्रलीयते आपस्तेजसि लीयन्ते (सु. २) इत्यादिक्रमेण अव्य-

லீயதே) கர்மவஶப்பட்ட இந்த ஜீவராஶிகள் மறுபடியும் மறுபடியும் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன என்று கருத்து. 'அவஶ:' என்னும் விஶேஷணம் இந்த ஜீவராஶிகள் ஸ்ருஷ்டி ப்ரளயங்களுக்கு விஷயமாவதற்குக் காரணத்தைக் கூறுவதாகக் கொள்வதே உசிதமாகையாலே, கர்மவஶப்பட்டிருக்கையே அவஶஶப்₃த₃த்திற்குப் பொருளாயிருக்கத்தகும். (ஸ ஏவாயம்) கல்பந்தோறும் ஒரே ஜீவராஶிகள் தொடர்ந்து ஸ்ருஷ்டி ப்ரளயங்களுக்கு விஷயமாவதாகக் கூறுவதால், கர்மவஶப்பட்ட ஜீவர்கள் நித்யமானவர்கள் என்றும், கர்மங்களும் தொடர்ந்து வருகின்றன என்றும் காட்டப்படுகிறது. (பூ₄த்வா பூ₄த்வா ப்ரலீயதே) என்கையால், இக்கர்மங்கள் தொடர்ந்து வருகையால் இந்த ஸ்ருஷ்டி ப்ரளயங்களும் இடைவிடாமல் தொடர்ந்து வருகின்றன என்று உணர்த்தப்படுகிறது. இதனால் இந்த ஜீவராஶிகள் அநுப₄விக்கும் ஸுக₂ம் து₃:க்க₂ம் முதலான ஒவ்வோரநுப₄வமும் முன்வினைப்பயனே என்றும் உணர்த்தப்படுகிறது. இதனால் 'அக்ருதாப்₄யாக₃மம்' [செய்யாத செயலுக்குப் பயனை அனுப₄விப்பது] 'க்ருதவிப்ரணாஶம்' [செய்த செயலுக்குப் பயனில்லாமற்போவது] ஆகிய குற்றங்கள் ஏற்படுவதில்லை என்னும் பொது விதி₄ உணர்த்தப்பட்டதாயிற்று. (அஹராக₃மே பூ₄த்வா பூ₄த்வா ராத்ர்யாக₃மே ப்ரலீயதே; அஹராக₃மே ப்ரப₄வதி) என்கையால் பிரமனால் அவனது இராப்பகல்களாகிற கல்பங்களில் செய்யப்படும் நைமித்திக ஸ்ருஷ்டி ப்ரளயங்களே இங்கு சொல்லப்படுகின்றன என்பதும், 'ஸ ஏவாயம்' என்றதால், முன் கற்பங்களிற்போலவே பின்கற்பங்களிலும் பிரமன் ஸ்ருஷ்டிக்கிறான் என்பதும் காட்டப்படுகிறது.

''ஆப்₃ரஹ்மபு₄வநால் லோகா: புநராவர்த்திந:'' என்று சென்ற (16வது) ஶ்லோகத்தில் ப்₃ரஹ்மலோகமே அழிவதாகக் கூறுகையாலே, இங்கு பிரமனின் ஒவ்வொரு நாளிலும் நடக்கும் ஸ்ருஷ்டி ப்ரளயங்களைச் சொன்னது, ஶ்ருதி முதலான எல்லா ஶாஸ்த்ரங்களிலும் ப்ரஸித்₃த₄மான ப்ராக்ருத ஸ்ருஷ்டி ப்ரளயங்களுக்கும் உபலக்ஷணமென்றும், அதனால் பிரமனின் ஸத்யலோகமும் அழிவுள்ளதே என்று காட்டுவதாகவும் கொள்ளவேண்டும். இப்படி உபலக்ஷணமுறையாலே இவ்விஷயம் உணர்த்தப்படுவதாகக் கொள்ளாமல், 'ராத்ர்யாக₃ம'

स्याक्षरतमःपर्यन्तं मय्येव प्रलीयन्ते। एवं मद्व्यतिरिक्तस्य कृत्स्नस्य कालव्यवस्थया मत्त उत्पत्तेर्मयि प्रलयाच्चोत्पत्तिविनाशयोगित्वमवर्जनीय-

---

ஶப்₃த₃மே பிரமனின் ஆயுளான நூறு வருஷங்களின் இறுதியில் ஆயிரக்கணக்கான யுக₃ங்களுக்குப் பின்பு ஏற்படும் கடைசி ராத்ரியை உணர்த்தி, "ப்ருதி₂வ்யப்ஸு ப்ரலீயதே, ஆபஸ்தேஜஸி லீயந்தே.... மஹாநவ்யக்தே லீயதே. அவ்யக்தமக்ஷரே லீயதே, அக்ஷரம் தமஸி லீயதே, தம: பரே தே₃வ ஏகீப₄வதி" [ஸுபா₃ல 2] [பூ₄மி நீரில் லயமடைகிறது; நீர் நெருப்பில் லயமடைகிறது; ...மஹான் அவ்யக்தத்தில் லயமடைகிறது; அவ்யக்தம் அக்ஷரத்தில் லயமடைகிறது; அக்ஷரம் தமஸ்ஸில் லயமடைகிறது; தமஸ்ஸு பரமாத்மாவிடம் ஒன்றுகிறது.] என்று அந்த ராத்ரியில் நடைபெறுவதாக ஶாஸ்த்ரங்களில் முழங்கப் படும் மஹாப்ரளயத்தை உணர்த்தி, அதன்மூலம் ப்₃ரஹ்மலோக மிருகவுள்ள எல்லாவுலகங்களின் அழிவும், பிரமனின் அழிவும் நேரேயே உணர்த்தப்படுவதாகவும் கொள்ளலாம். "நிஜேந தஸ்ய மாநேந ஆயுர் வர்ஷஶதம் ஸ்ம்ருதம் । தத் பராக்₂யம் தத₃ர்த்த₄ம் ச பரார்த்த₄மபி₄தீ₄யதே ॥" [வி-பு 1-3-5] [பிரமனின் இராப்பகல்களின் அளவு கொண்டு, அவனுக்கு நூறு வருடம் ஆயுளாகச் சொல்லப்படுகிறது. அதுவே 'பரம்' எனப்படும் காலம்; அதன் பாதியே 'பரார்த்த₄ம்' எனப்படுகிறது.] என்று இவ்விஷயம் ஸ்ரீ விஷ்ணுபுராணத்திலும் சொல்லப்பட்டது. முன் எடுத்த ஶ்ருதியில் ப்ருதி₂வீ முதலான அண்ட₃காரணமான பூ₄தங்களே லயமடைவதாகக் கூறப்படுகையில், அண்ட₃த்தினுள்ளிருக்கும் ஸத்யலோகம் முதலானவை அழியக் கூடியவை என்பது சொல்லாமலே விளங்கும். அந்த ஶ்ருதியில் 'தமஸ்' எனப்படும் மூலப்ரக்ருதிக்குப் பரதெய்வத்துடன் ஏகீபா₄வம் (ஒன்றுதல்) கூறப்பட்டது. அப்பரதெய்வம் தானே என்பதை "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜக₃த: ப்ரப₄வ: ப்ரளயஸ்தத₂ா" [7-6] [நானே எல்லாவுலகிற்கும் ஸ்ருஷ்டி ஸம்ஹாரகாரணம்] என்று கண்ணன் உணர்த்தினான். இந்தக் கடைசி ஶ்லோகத்தில் சொல் லப்பட்ட அஹராக₃மஶப்₃த₃மும் ராத்ர்யாக₃மஶப்₃த₃மும் பிரமனின் முதற்பகலையும் உணர்த்தி, "யோ ப்₃ரஹ்மாணம் வித₃தா₄தி பூர்வம்" [ஶ்வே 6-18] [எவன் பிரமனை முதலில் படைக்கிறானோ] "ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்₃ரஹ்மா நேஶாந:" [மஹோபனிஷத் 1-1] [நாராயணன் ஒருவனே இருந்தான்; பிரமனுமில்லை, சிவனுமில்லை] "நாராயணாத் ப்₃ரஹ்மா ஜாயதே" [நாராயணோபநிஷத்] [நாராயணனிடமிருந்து பிரமன் உண்டாகிறான்] முதலான

सित्यैश्वर्यगतिं प्राप्तानां पुनरावृत्तिरपरिहार्या। मामुपेतानां तु न पुनरावृत्तिप्रसङ्गः ॥ १७—१९ ॥

॥ भा ॥ अथ कैवल्यं प्राप्तानामपि पुनरावृत्तिर्न विद्यत इत्याह—

परस्तस्मात्तु भावोऽन्योऽव्यक्तोऽव्यक्तात्सनातनः।
यस्स सर्वेषु भूतेषु नश्यत्सु न विनश्यति ॥ २० ॥

अव्यक्तोऽक्षर इत्युक्तस्तमाहुः परमां गतिम्।
यं प्राप्य न निवर्तन्ते तद्धाम परमं मम ॥ २१ ॥

20. பரஸ்தஸ்மாத்து $பா_4$வோऽந்யோऽவ்யக்தோऽவ்யக்தாத் ஸநாதந: ।
யஸ்ஸ ஸர்வேஷு $பூ_4$தேஷு நஶ்யத்ஸு ந விநஶ்யதி ॥

21. அவ்யக்தோऽக்ஷர இத்யுக்தஸ்தமாஹு: பரமாம் $க_3$திம் ।
யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே $தத்_3தா_4$ம பரமம் மம ॥

ஶ்ருதிகளில் சொல்லப்படும் பிரமன் முதலானோரின் ஸ்ருஷ்டியும், மறுபடியும் அவர்களின் ப்ரளயமும் தொடர்ந்து நடப்பதையும் காட்டுகின்றன. இவ்வண்ணமாக இந்த லீலாவி$பூ_4$தியிலுள்ள எல்லாப்பொருள்களுக்கும் காலவரம்பு உள்ளதாகையால், அவை அழிபவையென்றும், தான் ஒருவனே அழியாமலிருப்பவனென்றும், தன்னிடமிருந்து உண்டாகி அழியும் எல்லா உலகங்களுக்கும் உத்பத்தி விநாஶங்கள் தவிர்க்கமுடியாதாகையால் ஐஶ்வர்ய $க_3$தியை அடைந்தவர்களுக்குப் புநராவ்ருத்தி தவிர்க்கவொண்ணாதென்றும், தன்னை யடைந்தவர்களுக்குப் புநராவ்ருத்தியேற்பட இடமேயில்லை என்றும் உணர்த்துவதன்மூலம் சென்ற (16-வது) ஶ்லோகத்தை விவரித்தானாயிற்று. "நித்யம் ஹி நாஸ்தி ஜக$து_3$ $பூ_4$தம் ஸ்$தா_2$வரஜங்$க_3$மம் । ருதே தமேகம் புருஷம் வாஸு$தே_3$வம் ஸநாதநம் ॥" [$பா_4$ரதம் - மோக்ஷ$த_4$ர்மம் 347-32] [பழையோனாய், புருஷனான வாஸு$தே_3$வன் ஒருவனைத் தவிர, இவ்வுலகிலுள்ள அசைவதும், அசையாததுமான எப்பொருளும் நித்யமானதல்ல.] என்று இவ்விஷயம் மஹா$பா_4$ரதத்திலும் சொல்லப்பட்டது. (பார்$த்த_2$) என் அத்தைபிள்ளையான நீ அழியும் $ப_4$லனான ஐஶ்வர்யத்தை விட்டு, அழியாப்$ப_2$லனான என்னைப் பற்றவேண்டாமோ? என்று கருத்து. 17,18,19.

தஸ்மாத் அவ்யக்தாத்—'அவ்யக்தம்' எனப்படும் அந்த அசேதன தத்துவத்தைக்காட்டிலும், **பர:**—மேலானவனாய், **அந்ய:** — வேறுவகைப்பட்டவனாயிருக்கும், **ப₄ாவ:** — பொருளாய், **அவ்யக்த:**—(ஒரு ப்ரமாணத்தாலும் முழுவதும்) அறியவொண்ணாதவனாய், **ஸநாதந:** — நித்யனாய், **ஸர்வேஷு பூ₄தேஷு நஶ்யத்ஸு ந விநஶ்யதி ய:** — காரணகார்யப் பொருள்களோடுகூடிய எல்லா மஹாபூ₄தங்களும் அழியும் போது (அவற்றினுள்ளிருந்த காலத்திலும்) அழியாதவனாக எவனிருக்கிறானோ, **ஸ:**—அந்த முக்தஜீவனே, **அவ்யக்த: அக்ஷர: இத்யுக்த:**—'அவ்யக்தம்' என்றும் 'அக்ஷரம்' என்றும் சொல்லப்படுகிறான். **தம்** — அவனை, **பரமாம் க₃திம்** — மேலான ப்ராப்யமாக, **ஆஹு:** — (கைவல்யார்த்தி₂கள்) கூறுகிறார்கள். **யம்**—யாதொரு அந்த முக்தஸ்வரூபத்தை, **ப்ராப்ய**—அடைந்தபின்பு, **ந நிவர்த்தந்தே**—(கைவல்யார்த்தி₂கள்) புநராவ்ருத்தியடைவதில்லையோ, **தத்**—அந்த முக்தஸ்வரூபம், **மம**—என்னுடைய, **பரமம் த₄ாம**—மேலான நியமன ஸ்தா₂னமாகும்.

---

19. எல்லாப் பொருளு மிறுதியினைக் கூடியே
நில்லாத காலத்து நிற்குமதாய்ச்—சொல்லார்ந்த
வக்கரமாய் நின்றபொரு ளாங்கசித்தின் மேலாகி
மிக்கபெரு நுண்மையதாம் வேறு

20. நுண்ணோர்கொ ளக்கரமா நூலுரைக்கு மப்பொருளை
யெண்ணோர் பரமகதி யென்றுரைப்பர்—நண்ணியது
மீளா ரெனக்கதுதான் மேலா யொளிசிறந்து
மாளா விருப்பிடமா மற்று.

எல்லா பொருளும் — காரணகாரியங்களோடு கூடிய எல்லா மஹாபூ₄தங்களும், **இறுதியினை கூடியே**—அழிவை அடைந்து, **நில்லாத காலத்து** — நிலைநில்லாமற்போகும் ப்ரளயகாலத்தில், **நிற்குமதாய்** — (அவற்றினுள்ளிருக்கும் போதும்) அழியாததாய், **சொல்லார்ந்த அக்கரமாய்** —

'அக்ஷரம்' என்று ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுவதாய், ஆங்கு அசித்தின் மேலாகி—முற்கூறிய அசேதனப்பொருளைக் காட்டிலும் மேலானதாய், வேறு(ஆகி)—வேறுவகைப்பட்டதாய், மிக்க பெரு நுண்மையதாம்—மிகுந்த பெருமைபெற்று (ஒரு ப்ரமாணத்தாலும் முழுவதும் அறியமுடியாதபடி) ஸூக்ஷ்மமானதாயிருக்கும் (முக்தஸ்வரூபம்.)

நுண் நேர் கொள் அக்கரமா—நுண்ணியதாகையாலே 'அவ்யக்தம்' என்றும், 'அக்ஷரம்' என்றும். நூல் உரைக்கும் அப்பொருளை — ஶாஸ்த்ரங்கள் கூறும் அந்த முக்தஸ்வரூபத்தை, எண்ணுவோர்—(அதை) உபாஸிப்பவர்கள், பரமகதி என்று உரைப்பர் — மேலான ப்ராப்யம் என்று கூறுவர். அது நண்ணி மீளார் — அதை அடைந்தபின் (அவர்கள்) வேறு பயனை அடையார். மற்று — மேலும், மேலா ஒளி அதுதான்—மேலான ஒளியாயிருக்கும் அந்த முக்தஸ்வரூபமானது, எனக்கு—எனக்கு, மாளா இருப்பிடமாம்—அழியாத நியமன ஸ்தானமாகும்.

20,21. சென்ற ஐந்து ஶ்லோகங்களில்—தனக்கு அழிவில்லாமையாலே, தன்னையடைந்தவர்களுக்கு பகவதநுபவமழிந்து ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதலாகிற புநராவ்ருத்தியில்லை என்றும், 'ப்ரஹ்மாவின் லோகம் ஈறான ஐஶ்வர்யங்கள் அனைத்தும் அழிவுள்ளவையாகையாலே, அவற்றை அடைந்தவர்களுக்கு அவ்வைஶ்வர்யாநுபவம் அழிந்து மற்றோரநுபவத்திற்குச் செல்லுதலாகிற புநராவ்ருத்தி உண்டு' என்றும் காட்டினான். இவ்விரண்டு ஶ்லோகங்களிலும்—ப்ரக்ருதியினின்றும் நீங்கித் தன் ஆத்மாவை அநுபவிக்கும் கைவல்யார்த்திக்கும், அவ்வநுபவத்திற்கு அழிவில்லையாகையாலே, மற்றோரநுபவத்திற்குச் செல்லுதலாகிற புநராவ்ருத்தி இல்லை என்று காட்டுகிறான். இங்கு புநராவ்ருத்தி ஶப்தத்திற்கு எல்லா ஸ்தலங்களுக்கும் பொருத்தமான லக்ஷணத்தை ஆராயவேண்டும். "புநராவர்த்திந:— விநாஶிந" என்று பாஷ்யகாரர் 19-வது ஶ்லோகத்தின் பாஷ்யத்தில் அருளிச்செய்கையால், ஓரநுபவமழிந்து, அங்கிருந்து, கீழ் அல்லது மேலுலகங்களுக்குச் செல்லும் எல்லா விடங்களிலும் புநராவ்ருத்தி ஶப்தப்ரயோகம் செய்யலாம் என விளங்குகிறது. "இந்த்ரலோகாத் பரிப்ரஷ்டோ மம கேயபராயண: |

ப்ரமுக்த: ஸர்வஸம்ஸாரை: மம லோகம் ச கச்ச₂தி ||" [வராஹ புராணம் 139-98; கைஶிகமாஹாத்ம்யம் - 5] [இந்த்₃ரலோகத்திலிருக்குமளவும் என்னைப் பாடுவதையே தொழிலாகக்கொண்டவனாய், அங்கிருந்து நழுவியபின்பு, ஸம்ஸாரஸம்ப₃ந்த₄மனைத்திலிருந்தும் விடுபட்டு என்னுடைய உலகத்தை அடைகிறான்.] என்று புராணத்திலும், "ப்ரச்யுதோ வா ஏஷோऽஸ்மால்லோகாத₃ாகதோ தே₃வலோகம்" [யஜுர்வேத₃ம் 6-1-1-5] [இவ்வுலகிலிருந்து நழுவி தே₃வலோகத்தை வந்தடைந்தவன்] என்று ஶ்ருதியிலும் கீழுலகிலிருந்து மேலுலகம் செல்வதும் ப்₄ரம்ஶம், என்றும், ச்யுதி என்றும் நழுவுதலாகக் குறிக்கப்பட்டதுபோலே, அழியும் உலகங்களில் ஓரனுப₄வத்தை இழந்து, அதைவிடத் தாழ்ந்ததாகவோ, உயர்ந்ததாகவோ இருக்கும் மற்றோருலகிற்குச் செல்லும் எல்லா இடங்களிலும் புநராவ்ருத்திஶப்₃த₃ம் இங்கு பிரயோகி₃க்கப்படுவதாகக் கொள்ளவேண்டும். இப்படிக்கொள்ளாவிடில், பலவித₄மான ஏற்றத்தாழ்வுகளையுடைய ஐஶ்வர்யக₃திகள் அனைத்தும் புநராவ்ருத்தியுள்ளவை என்று முன் ஶ்லோகங்களில் கண்ணன் அருளிச்செய்ததை நிரூபிக்கவொண்ணாமற்போய்விடும். ஆக, கைவல்யார்த்தி₂க்குப் புநராவ்ருத்தியில்லை என்று இங்கு கூறப்படுவதிலிருந்து, அவன் தன் அநுப₄வத்தை இழந்து அதிலிருந்து கீழான ஐஶ்வர்யானுப₄வத்திற்கோ, அதைக் காட்டிலும் உயர்ந்த ப₄க₃வத₃நுப₄வத்திற்கோ செல்வதில்லை எனத் தேறுகிறது. "ஏடுநிலத்தில் இடுவதன்முன்னம்......வரம்பொழிவந்து ஒல்லைக் கூடுமினோ" [திருப்பல் 4] என்னும் பாசுரத்தில் இவர்களுக்குப் பிற்காலத்திலும் என்றும் ப₄க₃வத₃நுப₄வமில்லாமற்போய்விடும் என்பதைக் கருதியே, "ஸூக்ஷ்மஶரீரம் கழிவதற்குமுன் 'ஆத்மாவைமாத்திரம் அநுப₄விப்பது' என்னும் வரம்பை விட்டு வந்துசேருங்கள்" என்றார் பெரியாழ்வார். "அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்" [திருவாய் 1-2-5] என்று விஷயங்களில் பசையற்றால் கைவல்ய மோக்ஷம் கிடைத்துவிடும் என்ற நம்மாழ்வார் "செற்றது மன்னுறில் அற்றிறை பற்றே" [திருவாய் 1-2-5] என்று 'அந்த மோக்ஷத்தை விட்டு ஸ்வரூபப்ராப்தமான பயனைப்பெற விரும்பியிருந்தால் ஈஶ்வரனை போ₄க்₃யமாகப்பற்றி விஷயங்களில் பற்றை அறுத்துக்கொள்ளுங்கள்' என்றார். மேலும், "தானே தானேயானாலும்" [திருவாய் 8-10-2] என்னும் பாசுரத்தில் இருமுறை "தானே" என்று அருளுவதன் மூலம் இவனுக்கு ஐஶ்வர்யானுப₄வமும், பரமாத்மாநுப₄வமும் என்றுமில்லை எனக் காட்டினார். "குறுகாநீளா இறுதிகூடா எனையூழி சிறுகா பெருகா அளவிலின்பம்" [திருவாய் 6-9-10] என்னும் பாசுரத்தில் இக் கைவல்யாநுப₄வத்திற்கு எத்தகைய அழிவுமில்லை என்று காட்டினார்.

॥भा॥ तस्मादव्यक्तात्—अचेतनप्रकृतिरूपात् पुरुषार्थतया परः—उत्कृष्टो भावोऽन्यः—ज्ञानैकाकारतया तस्माद्विसजातीयः, अव्यक्तः—

"யாதுமில்லை மிக்கதினில் என்றென்றது கருதிக் காதுசெய்வான் கூதை செய்து கடைமுறைவாழ்க்கையும் போம்" [திருவாய் 9 1.9] என்னும் பாசுரத்தில், "கடைமுறைவாழ்க்கையும்" என்ற உம்மையோடு கூடிய பத3த்தாலே, இவனுக்கு ஸம்ஸாரவாழ்க்கையும், ப4க3வத3நுப4வவாழ்க்கையுமாகிற இரண்டும் போய்விடுகிறது என்று காட்டினார். இவர்கள் ப4க3வானிடமிருந்து என்றுமே (அநுப4வமில்லாமையால்) பிரிந்துவிடுகிறார்கள் என்பது தோற்ற "விடைகொள்வார்" [முதல் திருவந்தாதி 26] என்று இவர்களுக்குப் பெயர் வைத்தார் பொய்கையாழ்வார். இத்தகைய பிரிவு இவர்களுக்கு இருக்கையால் இந்த மோக்ஷம் ஆத்மவிநாஶதுல்யம் என்பதை "இறப்பதற்கே எண்ணாது" [திருநெடு 1] என்றவிடத்திலே திருமங்கையாழ்வார் காட்டினார். இங்கு கீ3தையிலும், பா4ஷ்யத்திலும் இதை ப்ரக்ருதிஸம்ப3ந்த4ம் நீங்கப்பெற்ற மோக்ஷமாகக் கூறுகையாலும், மோக்ஷத்தில் ஸாத4நாநுஷ்டா2நம் செய்து மேலே செல்ல வழியில்லையாகையாலும் இவ்வநுப4வம் நித்யம் என்பது கீ3தையையும், பா4ஷ்யத்தையும் ஸேவிப்பார்க்கே தெளிவாக விளங்கும். இவ்விரண்டு ஶ்லோகங்களிலும் அழிவின்மையையிட்டே அபுநராவ்ருத்தியை நிரூபித்திருப்பதும் இதை வலியுறுத்தும். இவ்விரண்டு ஶ்லோகங்களும் கைவல்யார்த்தி2யைப் பற்றியவையே என்பதை எப்படி நிர்ணயிப்பது? எனில்: 15,16-வது ஶ்லோகங்களில் ப4க3வானை அடைந்தவர்களுக்குப் புநராவ்ருத்தியில்லை என்னும் விஷயம் சொல்லப்பட்டது. 16-முதல் பத்தொன்பதாவது ஶ்லோகமீறாக ஐஶ்வர்யார்த்தி2க்குப் புநராவ்ருத்தியுண்டு என்று கூறப்பட்டது. இனி, இந்த ப்ரகரணத்தில் ப்ரஸ்தாபிக்கப்படும் மூவகை அதி4காரிகளில் எஞ்சிநிற்கும் கைவல்யார்த்தி2யைப்பற்றியதாகவே இவ்விரு ஶ்லோகங்களைக்கொள்வது உசிதம். இங்கு 'அவ்யக்தத்தைக்காட்டிலும் மேலானவன்' என்றும், 'எல்லா பூ4தங்களும் நஶிக்கையில் நஶியாமலிருப்பவன்' என்றும் கூறப்படுபவன் ஜீவனாகவேயிருக்கமுடியும். இரண்டாமத்தியாயத்திலும், "அபரேயமிதஸ்த்வந்யாம்" [கீ3தை 7-5] முதலானவிடங்களிலும் இப்பெருமைகள் ஜீவனுக்கே சொல்லப்பட்டுள்ளன. ஆகையால், இவ்விரு ஶ்லோகங்களும் ஜீவனுடைய நிஷ்க்ருஷ்டஸ்வரூபாநுப4வமாகிற கைவல்யாநுப4வத்தைப் பற்றியவையேயாகவேண்டும்.

केनचित्प्रमाणेन न व्यज्यत इत्यव्यक्तः, स्वसंवेद्यस्वासाधारणाकार इत्यर्थः; सनातनः—उत्पत्तिविनाशानर्हतया नित्यः, यस्सर्वेषु विय-

---

(தஸ்மாத் அவ்யக்தாத் பர:) முன் ஶ்லோகங்களில் அழித்து அழித்துப் படைக்கப்படுவதாகச் சொல்லப்பட்ட அசேதனமான மூல ப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானவன். அவ்யக்தம் எனப்படும் மூல ப்ரக்ருதியைப் பற்றியே முன் ஶ்லோகங்களில் ப்ரஸ்தாவம் வந்திருக்கையால், இங்கு 'வ்யக்தாத்' என்று பதமும் பிரிக்காமல், 'அவ்யக்தாத்' என்று பதமும் பிரித்து, அந்த மூலப்ரக்ருதியைச் சொல்லுவதாகவே பொருள்கொள்ளவேண்டும். (பர: அந்ய: பாவ: அவ்யக்த:) மேலானவனும், வேறுபடிப்பட்டவனுமான பொருள் அவ்யக்தம் எனப்படும் முக்தஜீவன். 'தமாஹு: பரமாம் கதிம்' என்று புருஷார்த்தத்தைச் சொல்லுமிடமாகையால், அவ்யக்தம் எனப்படும் அசேதனமான மூலப்ரக்ருதியைக் காட்டிலும் மேலான புருஷார்த்தமாயிருப்பவன் முக்தஜீவன் என்பதை 'பர:' என்னும் பதமும். அசேதனமான அதைக் காட்டிலும் மிகவும் வேறுபட்ட சேதநஜாதியைச் சேர்ந்தவன் என்பதை 'அந்ய:' என்னும் பதமும் காட்டுகின்றனவாகையாலே இப்பதங்களிடையே புநருக்தியில்லை. (அவ்யக்த:) ஒரு ப்ரமாணத்தாலும் முழுவதும் அறிய முடியாதவனாய், தனக்குத் தானே அநுபவித்து அறியத்தக்க தனித்தன்மைகளை உடையவனாயிருக்கும் ஜீவன். அடுத்த ஶ்லோகத்தில் இவனையே அநுவதிக்கும் போது "அவ்யக்தோऽக்ஷர இத்யுக்த:" என்கையாலும், அறிதற்கரிய ஜீவஸ்வரூபத்தை 'வ்யக்த:' [அறிதற்கெளியவன்] என்பது பொருந்தாதாகையாலும், இங்கும் 'வ்யக்த:' என்று பதமும் பிரிக்காமல் 'அவ்யக்த:' என்றே பதமும் பிரிக்கவேண்டும். ப்ரத்யக்ஷத்தாலும், அநுமானத்தாலும், ஶப்தப்ரமாணமான ஶாஸ்த்ரத்தாலும் அறியத்தக்க ஜீவனை 'அறியவொண்ணாதவன்' என்னும் பொருளுள்ள அவ்யக்தஶப்தத்தால் குறிப்பது எப்படி? அறியவே முடியாதவன் எனில் ஆகாஶத்தாமரைபோல் இல்லாத பொருளாகவேண்டிவருமே எனில்: இவனுடைய ஏகத்வம் (ஒருவனாயிருக்கை), நித்யத்வம் (நித்யனாயிருக்கை), ஜ்ஞாநத்வம் (ஞானமாயிருக்கை) முதலான தனித்தன்மைகளைத் தனக்குத் தானே அநுபவித்து அறியலாமேயொழிய, ஒரு ப்ரமாணத்தால் முழுவதும் உணர்ந்துவிடமுடியாது என்று கருத்தாகையாலே 'அவ்யக்த:' என்னக் குறையில்லை. (ஸநாதந:) இரண்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டபடி உத்பத்தி (உண்டாவது), விநாஶம் (அழிவு) ஆகியவற்றுக்கு யோக்யதையே இல்லாததால் என்றுமிருப்பவன். (ய: ஸர்வேஷு பூதேஷு நஶ்

दादिभूतेषु सकारणेषु सकार्येषु विनश्यत्सु तत्रतत्र स्थितोऽपि न विनश्यति ; सोऽव्यक्तोऽक्षर इत्युक्तः * ये त्वक्षरमनिर्देश्यमव्यक्तं पर्युपासते (१२. ३) * कूटस्थोऽक्षर उच्यते (१५. १६) इत्यादिषु ;

யத்ஸு ந விநஶ்யதி) ஆகாஶம் முதலான எல்லா பூ₁தங்களும், காரணங்களான மஹான் முதலானவற்றோடும், கார்யப்பொருள்களான உலகங்களோடும் அழியும்போது, அவற்றினுள்ளிருந்தபோதிலும் எவன் அழிவதில்லையோ. 'ய:' என்று ஜீவனைக்குறிக்கையால், பூ₄த ஶப்₃த₃ம் ஜீவராசிகளைக் குறிக்காமல், ஆகாஶம் முதலான பஞ்ச மஹாபூ₄தங்களைக் குறிக்கிறது. 'ஸர்வேஷு' என்று—அந்த பூ₄தங்களின் காரணங்களான மஹான் முதலானவற்றையும், கார்யங்களான உலகங்களையும் குறிக்கிறது. உலகில் பொதுவாக எள் முதலான பொருள்கள் தீ முதலானவற்றால் அழியும்போது. அவற்றினுள்ளிருக்கும் எண்ணெ முதலானவையும் அழிவதைக் காண்கிறோம். இங்கு அப்படியல்லாமல், இவ்வழியும் பொருள்களின் உள்ளிருந்தபோதிலும் ப்ரளயகாலத்தில் ஜீவர்கள் அழிவதில்லை என்று கருத்து. இப்படி ப்ராக்ருதப் பொருள்களினுள்ளிருக்கும் காலத்திலேயே, அவை அழியும்போதும் அழியாத இவன், ப்ரக்ருதிமண்ட₃லத்தைத் தாண்டிச் சென்று ஸ்வரூபவிளக்கம்பெற்ற காலத்தில் — அதாவது கைவல்யஸ்த₂ானத்தில் — அழிவதற்கு இடமேயில்லை என்பது விளங்கும் என்பது கருத்து. அடுத்த ஶ்லோகத்தில் "யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே" என்று கைவல்ய மோக்ஷத்தை அடைந்தவனுக்கும், அவ்வநுப₄வமழிந்து மற்றோரனுப₄வத்திற்குச் செல்லுதலாகிற புநராவ்ருத்தி கிடையாது என்று கூறியிருப்பதற்கு இது காரணமாகும். (ஸ: அவ்யக்தோऽக்ஷர இத்யுக்த:) அந்த ஸ்வஸ்வரூப விளக்கம் பெற்ற முக்தஜீவனே 'அவ்யக்தம்' என்றும், 'அக்ஷரம்' என்றும் என்னால் சொல்லப்படுகிறான். எங்கே ? எனில் ; "யே த்வக்ஷரம் அநிர்த்தே₃ஶ்யம் அவ்யக்தம் பர்யுபாஸதே" [கீ₃தை 12-3] ['தே₃வர்' முதலான தே₃ஹத்தைக்குறிக்கும் ஶப்₃த₃ங்களால் வழங்கத்தகாதவனும், ஆகையால் கண்முதலான இந்திரியங்களால் அறியப்படாதவனும் (அவ்யக்தனும்), ஞானத்திலும் ஏற்றத்தாழ்வின்மையால் 'அக்ஷரம்' எனப்படுபவனுமான (ப்ரக்ருதியினின்றும் நீங்கிய) கேவலாத்ம ஸ்வரூபத்தை எவர்கள் உபாஸிக்கிறார்களோ] "கூடஸ்தோ₂ऽக்ஷர உச்யதே" [கீ₃தை 15-16] [கூடஸ்த₂ன் எனப்படும் முக்தாத்மா 'அக்ஷரன்' எனப்படுகிறான்] முதலானவிடங்களில் சொல்லப்படுகிறான்

तं वेदविद: परमां गतिमाहु:। अयमेव * य: प्रयाति त्यजन् देहं स याति परमां गतिम् (८. १३) इत्यत्र परमगतिशब्दनिर्दिष्टोऽक्षर:

என்று கருத்து. இவ்விடங்களில் 'அக்ஷரம்' எனப்படுபவன் முக்த ஜீவனே என்பது அந்தந்த ப்ரகரணங்களிலேயே விளங்கும். ஆகை யாலேயே இவ்வத்தியாயத்திலும் "அக்ஷரம் ப்₃ரஹ்ம பரமம்" என்று மூன்றும் ஶ்லோகத்திலும், "அவ்யக்தோऽக்ஷர:" என்று இந்த ஶ்லோகத்திலும் அக்ஷர ஶப்₃த₃த்தால் கூறப்படுபவன் ப்ரக்ருதியி னின்றும் நீங்கிய முக்தபுருஷனென்று கொள்வதே தகும். பின்வரும் அத்தியாயத்தில் "யே த்வக்ஷரம்...அவ்யக்தம்" [12-3] என்று சொல்லப்போவதை "அவ்யக்தோऽக்ஷர இத்யுக்த:" என்று இங்கு எப்படி அநுவதி₃க்க முடியும்? எனில்: உபப்₃ரும்ஹணமான அந்த ஶ்லோகத்திற்கு மூலமான ஶ்ருதியைத் திருவுள்ளத்திற்கொண்டு அநுவதி₃க்கலாம். அல்லது "நிஹதா: பூர்வமேவ" [கீ₃தை 11-33] என்று தன் ஸங்கல்பத்தால் எதிரிகள் அனைவரும் ஏற்கனவே அழிக் கப்பட்டு விட்டதாகக் கூறியதுபோல், தன் ஸங்கல்பத்தால் கீ₃தை முழுவதையும் ஏற்கனவே ஸித்₃த₄ப்படுத்திக்கொண்டு சொல்லுவதாக வும் கொள்ளலாம். (தமாஹு: பரமாம் க₃திம்) அந்த முக்த ஜீவனையே மேலான ப்ராப்யமாகக் கேவலாத்மாநுப₄வத்தை விரும்பும் வேத₃வித்துக்கள் கூறுகிறார்கள். ஐஶ்வர்யார்த்தி₂க்கோ, ப₄க₃வானை விரும்புமவனுக்கோ இவன் பரமப்ராப்யனல்லாமையாலே, "யத₃க்ஷரம் வேத₃விதோ₃ வத₃ந்தி" [கீ₃தை 8-11] என்னும் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட கைவல்யார்த்தி₂களான வேத₃வித்துக்களே, இங்கு "ஆஹு:" [கூறுகிறார்கள்] என்னும் பயனிலைக்கு எழுவாயா யிருக்கத்தக்கவர்கள். இந்த ஆத்மகைவல்யத்திற்கு மேற்பட்ட ப₄க₃வத₃நுப₄வமிருக்க, இதை 'பரமா க₃தி:' [தனக்கு மேலில்லாத ப்ராப்யம்] என்னலாமோ? எனில்,—(தமாஹு:) அவர்கள் இதையே தங்களுக்கு ஒப்பற்ற ப்ராப்யமாக நினைத்துக் கூறுகிறார்களாகையாலே, அவர்கள் நினைவாலே இது ஒப்பற்ற ப்ராப்யமாகிறது. அடியார்கள் நினைவறிந்து கார்யம் செய்பவனாகையாலே, "ஸ யாதி பரமாம் க₃திம்" [கீ₃தை 8-13] என்று அவர்கள் நினைவாலே பரமக₃தி யான இந்த மோக்ஷத்தையே அவர்களுக்கு அளிப்பதாகக் கண்ணனும் கூறுகிறான் என்பது காணத்தக்கது. 'பரமாம் க₃திம்' என்னும் ஶப்₃த₃ம் இரண்டு ஶ்லோகங்களிலும் பிரயோகி₃க்கப்பட்டிருப்பதி லிருந்தும், அங்கு சொல்லப்பட்ட கைவல்ய நிஷ்டர்களைப் பற்றியதே இவ்விரு ஶ்லோகங்களும் என்பது விளங்கும். இப்படி 'பரமா க₃தி:'

प्रकृतिसंसर्गवियुक्तस्वरूपेणावस्थित आत्मेत्यर्थः। यमेवंभूतं स्वरूपेणावस्थितं प्राप्य न निवर्तन्ते; तन्मम परमं धाम— परं नियमनस्थानम्।

என்னும் ஶப்3த3த்தைப் பிரயோகி3த்தது அவர்கள் நினைவாலேயே யொழியத் தன் நினைவாலேயன்று ; தன் நினைவாலே ஜீவனுக்கு ஒப்பற்ற ப்ராப்யமாயிருப்பது தன்னையடைவதே என்பதை—பதினெந்தாம் ஶ்லோகத்தில் ''பரமாம் ஸம்ஸித்3தி4ம்'' என்னும் பத3த்தைப் பிரயோகி3ப்பதன்மூலம் காட்டினன் என்பதை அந்த ஶ்லோகத்தின் வியாக்கியானத்திலேயே தெளிவுபடுத்தினோம். ''யத3க்ஷரம்'' [8-11] என்று அங்கும், ''அவ்யக்தோऽக்ஷர:'' என இங்கும் ஜீவனுடைய முக்தஸ்வரூபத்தைப்பற்றியே பேசியிருக்கையாலும், இரண்டிடங்களிலும் அதைப் பரமக3தி (பரமப்ராப்யம்) என்கையாலும், ப்ரக்ருதி ஸம்ஸர்க்க3ம் அடியோடு நீங்கப்பெற்று, தன் ஸ்வரூபவிளக்கம்பெற்ற ஜீவஸ்வரூபத்தை அடைவதே இங்கு இக்கைவல்யார்த்தி2க்குப் பரம ப்ராப்யம் என விளங்குகிறது இந்த ப்ரக்ருதிமண்ட3லத்திலிருக்கும் வரையில் இவனுக்கு ஸூக்ஷ்மஶரீரம் கழியாதாகையாலும், இந்த ப்ரக்ருதிமண்ட3லத்திற்கு மேலெல்லையாகவும் பரமபத3த்திற்குக் கீழெல்லையாகவுமிருக்கும் விரஜாநதி3யில் குளிக்கும்போதே ஜீவனுக்கு ஸூக்ஷ்மஶரீரம் கழிகிறதென்பது ஶாஸ்த்ரஸித்3த4மாகையாலும், இக்கைவல்யாநுப4வம் இவனுக்கு விரஜைக்கு அக்கரையில் நித்ய விபூ4தியிலுள்ளதொரு ஸ்த2ானத்திலேயே ஏற்படுகிறதென விளங்கும்.

''விரஜாபரமவ்யோம்னோர் ஹ்யந்தரம் கேவலம் ஸ்ம்ருதம் ।
தத் ஸ்த2ாநமுபபே4ாக்தவ்யமவ்யக்தப்3ரஹ்மஸேவிநாம் ॥
ஸ்வாத்மஜாநந்த3ஸௌக2த3ம் கேவலம் பரமம் பத3ம் ।
நி:ஶ்ரேயஸம் ச நிர்வாணம் கைவல்யம் மோக்ஷ உச்யதே ॥''

[பாத்3மபுராணம் (பூனா ஆநந்தா3ஶ்ரமப்பதிப்பு) - உத்தரக2ண்ட3ம் 256-7.8]

[விரஜாநதி3க்கும், (பரமாத்மாவை அனுப4விப்பவர்கள் வாழும்) பரமபத3த்திற்கும் நடுவிலிருப்பது 'கேவலஸ்த2ானம்' எனப்படுகிறது; 'அவ்யக்தப்3ரஹ்மம்' எனப்படும் ஆத்மாவை அநுப4விப்பவர்கள் அந்த ஸ்த2ானத்திலிருந்தே அநுப4விக்கவேண்டும். தன் ஆத்மாவை அனுப4விப்பதினுல் உண்டாகும் இன்பத்தை அளிப்பதாய், (அதனுலேயே கைவல்யார்த்தி2களுக்குப்) பரமப்ராப்யமாயிருப்பதாயுள்ளது கேவல ஸ்த2ானம். 'நி:ஶ்ரேயஸம்' 'நிர்வாணம்' என்னும் மோக்ஷத்தைக் குறிக்கும் பத3ங்களால் அக்கைவல்யமோக்ஷமும் கூறப்படுகிறது]என்று இந்த ஸ்த2ானம் பாத்3மபுராணத்தில் தெளிவாகக் காட்டப்பட்டது.

இப்பாத்₃மபுராணவசனத்தையும் திருவுள்ளத்திற்கொண்டே "முக்தாநாம் பரமா க₃தி:" என்னுமிடத்தில் ஸஹஸ்ரநாமபா₄ஷ்யத்தில், "பரமேதி விஶேஷணேந முக்தாநாமேவ கேஷாஞ்சித₃ர்வாசீநா க₃திர் க₃ம்யதே......கைவல்யலக்ஷணா......ஸம்ஸார பரமபத₃யோர் மத்₄யே தேஷாம் ஸ்தா₂நம் ச" ['பரமா' என்று க₃திஶப்₃த₃த்திற்கு விஶேஷணமிட்டிருக்கையாலே, முக்தர்களிலேயே சிலர்க்குத் தாழ்ந்த க₃தியான கைவல்யமோக்ஷம் உண்டென்று உணர்த்தப்படுகிறது. ஸம்ஸாரத்திற்கும் பரமபத₃த்திற்கும் இடையில் அவர்களுக்கு ஸ்தா₂னமும் சொல்லப்பட்டிருக்கிறது.] என்று ப₄ட்டர் அருளிச்செய்தார் என்றும் தெளிவாக விளங்குகிறது. இப்பாத்₃மபுராண வசனத்தில் 'பரமவ்யோம' ஶப்₃த₃த்தால் குறிக்கப்படுவது ஸம்ஸார மண்ட₃லத்திலுள்ள கார்யவைகுண்ட₂ம் என்று கொண்டுவிடலாமே? எனில்: பாத்₃மபுராணத்தில், "த்ரிபாத்₃விபூ₄தேர் லோகாஸ்து அஸங்க்₂யா: பரிகீர்த்திதா:" [பாத்₃மபுராணம் 256-1] [த்ரிபாத்₃விபூ₄தியிலுள்ள உலகங்கள் கணக்கற்றவையாகச் சொல்லப்படுகின்றன] என்று தொடங்கி, த்ரிபாத்₃விபூ₄தி எனப்படுவதாய் ஶுத்₃த₄ஸத்வமயமான தான லோகத்தை வர்ணிக்கத்தொடங்கி அதில் விரஜையை ஒட்டியிருக்கிற கைவல்ய ஸ்தா₂னத்தை முதலில் முன் எடுத்த ஶ்லோகங்களில் வர்ணித்து,

"மஹாத்மாநோ மஹாபா₄கா₃ ப₄க₃வத்பாத₃ஸேவகா: |
தத்₃விஷ்ணோ: பரமம் தா₄ம யாந்தி ப்₃ரஹ்மஸுக₂ப்ரத₃ம் ||"
[256-9,10]

[ப₄க₃வானுக்குத் திருவடிக் குற்றேவல் புரியும் மஹாபா₄க்₃யஶாலிகள் ப்₃ரஹ்மாநுப₄வத்தையளிக்கும் விஷ்ணுவின் பரமபத₃த்தை அடைகிறார்கள்] என்று தொடங்கி அடுத்துள்ள பரமபத₃த்தை வர்ணித்து,

"தந்மத்₄யே நக₃ரீ தி₃வ்யா ஸாऽயோத்₄யேதி ப்ரகீர்த்திதா |
மணிகாஞ்சநசித்ராட்₄ய ப்ராகாரைஸ் தோரணைர் வ்ருதா ||
சதுர்த்₃வார ஸமாயுக்தா துங்க₃கோ₃புர ஸம்வ்ருதா |
சண்ட₃ாதி₃த்₃வாரபாலைஸ்து குமுதா₃த்₃யை: ஸுரக்ஷிதா ||......
தந்மத்₄யேऽஷ்டத₃ளம் பத்₃மம் உத₃யார்க்கஸமப்ரப₄ம் |
தந்மத்₄யே கர்ணிகாயாம் து ஸாவித்ர்யாம் ஶுப₄த₃ர்ஶநே ||
ஈஶ்வர்யா ஸஹ தே₃வேஶஸ் தத்ராஸீந: பர: புமாந் ||"
[256-11, 12, 13...25, 26]

[அழகியவனே! அந்தப் பரமபதத்தின் நடுவில் 'அயோத்4யா' என்று ச்ருதிகளில் சொல்லப்படும் திவ்யநகரம், பொன்னும் மணியும் நிறைந்த ப்ராகாரங்களாலும் மதிள்களாலும், தோரணங்களாலும் சூழப்பெற்றதாய், நாலு வாசல்களுடையதாய், உயர்ந்த கோபுரங்களால் சூழப்பெற்றதாய், சண்டன் முதலான வாயில்காப்போர்களாலும், குமுதன் முதலான கோயில் காப்பவர்களாலும் ரக்ஷிக்கப்படுவதாக விளங்குகிறது......அதன் நடுவில் எட்டு இதழ்கொண்ட, உதய ஸூர்யன்போல் ஒளியுள்ள தாமரையுள்ளது; அதன் நடுவில் காயத்ரீ ஸ்வரூபமான கர்ணிகையில், ஈச்வரியான லக்ஷ்மியோடுகூட நித்ய ஸூரிநாதனான பரமபுருஷன் எழுந்தருளியிருக்கிறான்.] என்று பரவாஸுதேவன் எழுந்தருளியிருக்கும் திருமாமணி மண்டபம்வரை அனைத்தையும் அவ்வத்தியாயத்தில் விரிவாக வர்ணித்திருப்பதை அறிந்தவர்களிடம் இவ்விதண்டாவாதம் விலை செல்லாது. இவ் வாதத்தைத் தவிர்ப்பதற்காகவே ப4ட்டர் "விரஜா பரமபதயோர் மத்4யே" என்று அருளிச்செய்யாமல், "ஸம்ஸார பரமபதயோர் மத்4யே" என்று ஸம்ஸாரமண்டலம் முழுவதையும் கீழெல்லையாக அருளிச்செய்தார். ஆக, கைவல்யஸ்தானம் நித்யவிபூ4தியிலேயே விரஜைக்கு அக்கரையில் இருக்கிறது என்று அசைக்கமுடியாமல் தேறிற்று. இனி, இப்படி ஸ்வரூபவிளக்கம்பெற்று அழிவற்ற அநுப4வமுடைய முக்தர்கள் வாழும் மோக்ஷஸ்தானமாகையாலே, இந்த ஸ்தானத்திற்கும், இதில் அடையும் அனுப4வத்திற்கும் என்றும் அழிவில்லை என்பதைக் காட்டுகிறது மேலே.— (யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே) எந்த ஆத்மாநுப4வத்தை அடைந்தவர்களும் அதற்கு அழிவு ரூபமான புநராவ்ருத்தியை அடைவதில்லையோ; இதற்குக் கீழான ஸம்ஸாரமண்டலத்திற்குச் சென்று ஐச்வர்யானுப4வத்தையோ, மேலான பரமபதத்திற்குச் சென்று ப4கவதநுப4வத்தையோ இவர்கள் என்றும் அடைவதில்லை என்று கருத்து. இப்படிக்கொண்டே தீரவேண்டும்படி ப்ரமாணயுக்திகள் அமைந்திருப்பதைக் கீழே காட்டினோம். (தத் தா4ம பரமம் மம) அந்த முக்த ஸ்வரூபம் என்னுடைய மிக மேலான நியமன ஸ்தானம். 'பி4ன்னா ப்ரக்ருதிரஷ்டதா4" [7-4] என்றவிடத்தில் சொல்லப்பட்டதாய், எனக்கு ப்ரகாரமாயிருப்பதான அசேதனப்பொருள்கள் ஒரு நியமன ஸ்தானம்; "இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்3தி4 மே பராம்! ஜீவபூ4தாம் மஹாபா3ஹோ! யயேத3ம் தா4ர்யதே ஜக3த்!!" [7-5] என்றவிடத்தில் சொல்லப்பட்டதாய், எனக்கு மற்றொரு ப்ரகாரமாயிருப்பதாய், முற்கூறிய அசேதனப்பொருளோடு சேர்ந்திருப்பதான ஸம்ஸாரி ஜீவ ஸ்வரூபம் முற்கூறிய அசேதனப்பொருள்களைக்காட்டிலும் மேலான

अचेतनप्रकृतिरेकं नियमनस्थानम्; तत्संसृष्टरूपा जीवप्रकृतिर्द्वितीयं नियमनस्थानम्; अचित्संसर्गवियुक्तं स्वरूपेणावस्थितं मुक्तस्वरूपं परमं

இரண்டாவது நியமனஸ்த$_2$ானம். ''அக்ஷரம் ப்$_3$ரஹ்ம பரமம்'' [8-3] முதலானவிடங்களில் சொல்லப்பட்டதாய், அசித்ஸம்ப$_3$ந்த$_4$மற்றதாய், ஸ்வரூபவிளக்கம் பெற்றதாய், அதனுலேயே முற்கூறிய ஸம்ஸாரி சேதன ஸ்வரூபத்தைக்காட்டிலும் எனக்குச் சிறந்த ப்ரகாரமாயிருப்பதான முக்தஜீவஸ்வரூபம் முந்திய இரண்டைக்காட்டிலும் மேலான மூன்ருவது நியமனஸ்த$_2$ானம். 'பரமம் த$_4$ாம' என்று விஶேஷித்திருப்பதால் மூன்ருவதான முக்தஸ்வரூபமே இங்கு கூறப்படுவதாகக் கொள்ளவேண்டும். 'த$_4$ாம' ஶப்$_3$த$_3$ம் ஸ்த$_2$ானத்தைச் சொல்லும். ஸ்வரூபவிளக்கம்பெற்ற முக்தாத்மாவான கேவலனுக்கு அபுநராவ்ருத்தியைச்சொல்லும் ப்ரகரணமாகையாலே, 'அவன் எனக்கு இருப்பிடம்' என்று மாத்திரம் சொல்லுவதில் ஸ்வாரஸ்யமில்லை; ஆகையால், ''ய ஆத்மநி திஷ்ட$_2$ந் ஆத்மநோSந்தர:... ஆத்மாநமந்தரோ யமயதி'' [ப்$_3$ருஹ 5-7-22; ஶதபத$_2$ம் (மாத்$_4$யந்தி$_3$நஶாகை$_2$) 14-6-5-30] [அந்தர்யாமியான எவன் ஆத்மாவின் உள்ளும் புறமுமிருந்துகொண்டு, ஆத்மாவை நியமிக்கிருனே] ''அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா'' [யஜு-ஆர 3-11-2] [ஸர்வாந்தர்யாமியானவன் ஜனங்களை உள்நுழைந்து நியமிக்கிருன்] முதலான ஶ்ருதிகளில் சொன்னபடி இங்கு நியமநஸ்த$_2$ானத்தைச் சொல்லுகிறது த$_4$ாமஶப்$_3$த$_3$ம். இங்கு இதைச் சொல்லுவதில் கருத்தென்ன? எனில்: அசேதனப்ரக்ருதியை ஸம்ஸாரிசேதனர்க்கு போ$_4$க்$_3$யம் முதலானவையாகும்படியாக நியமிப்பதுபோலவும், ஸம்ஸாரிசேதனரை அவ்வசேதன ப்ரக்ருதிக்கு போ$_4$க்தாவாயிருக்கும்படி நியமிப்பதுபோலவும், நித்யமான கைவல்யமோக்ஷத்தைப் பெற்ற முக்தனுக்கும் அவ்வாத்மானுப$_4$வத்தை எப்போதும் செய்துகொண்டிருக்கும்படி நியமிப்பவன் நானேயாகையால், கேவலனின் அக்கைவல்யாநுப$_4$வமும், என்னையடைந்த முக்தனின் அநுப$_4$வம்போலே நித்யமாயிருக்கிறது என்று கருத்து. இத்தால், 'இம்முக்தாத்மா ஈஶ்வரனுல் நியமிக்கப்படுபவனுனல், ஸ்வதந்த்ரனன அவன் இவனை ஸம்ஸாரத்திற்குத் திருப்பி அனுப்பிவிடலாமே' என்னும் ஐயமும் தவிர்க்கப்பட்டதாகிறது. 'ஸம்ஸாரத்திற்குத் திருப்பி அனுப்பாவிட்டாலும், இவனை மேலே ஏற்றித் தன் அனுப$_4$வத்தைக் கொடுக்கலாமே' எனில்: ஸாத$_4$நாநுஷ்ட$_2$ானம் செய்யும்போது இவனைத் தன் இனிமையில் ஈடுபடும்படி இவனுடைய ஸாத$_4$னங்களை அமைத்து ஆன

नियमनस्थानमित्यर्थः। तच्च अपुनरावृत्तिरूपम्। अथवा प्रकाशवाची धामशब्दः; प्रकाशश्चेह ज्ञानमभिप्रेतम्; प्रकृतिसंसृष्टात् परिच्छिन्नज्ञान-रूपादात्मनोऽपरिच्छिन्नज्ञानरूपतया मुक्तस्वरूपं परं धाम ॥२०॥२१॥

வரையில் முயன்றும், இவனுக்குப் பரமபுருஷாநுப$_4$வத்தில் விருப்பமில்லாமையால் இவன் விரும்பும் கைவல்ய மோக்ஷத்தை அளித்தவனுகையாலும், பே$_4$ாக$_3$ஸ்த$_2$ானமான மோக்ஷத்திற்கு வந்தபின்பு இவனுடைய விருப்பம் மாற இடமில்லையாகையாலும், ''தஸ்ய கார்யம் ந வித்$_3$யதே'' [கீ$_3$தை 3-17] [முக்தனுன அவனுக்குச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை] என்று இவனுக்கு ஸாத$_4$நாநுஷ்ட$_2$ானம் செய்ய இடமேயில்லை என்று கீ$_3$தையிலேயே சொல்லியிருக்கையாலும், இவனை மேலே ஏற்றவும் இடமில்லை. ஆகையால் இதுவும் அபுநராவ்ருத்திரூபமான (கீழேயோ மேலேயோ போக ப்ரஸக்தியில்லாத) நித்யாநுப$_4$வமேயாகும். 'த$_4$ாம'ஶப்$_3$த$_3$த்திற்கு 'ஸ்த$_2$ானம்'(இருப்பிடம்) என்னும் பொருளைக் கொள்ளும்போது, அதை 'நியமந ஸ்த$_2$ானம்' என்று விஶேஷிக்கவேண்டியிருக்கிறது; 'த$_4$ாம'ஶப்$_3$த$_3$த்திற்கு மற்றொரு பொருளான 'ப்ரகாஶம்' என்னும் பொருளைக் கொள்ளும்போது இந்த அஸ்வாரஸ்யமில்லை; ஜீவனைப் பற்றியதாகையால், இங்கு 'ப்ரகாஶம்' என்றது த$_4$ர்மபூ$_4$தஜ்ஞானத்தைக் குறிக்கிறது; (தத் பரமம் த$_4$ாம மம) அந்த மேலான ஜ்ஞானத்தை உடைய முக்த ஸ்வரூபம் எனக்கு உடைமைப் பொருளாகும். ப்ரக்ருதிஸம்ப$_3$ந்த$_4$முடையவனுய், அதனுலேயே அளவுபட்ட ஜ்ஞாநமுடையவனை ஸம்ஸாரி ஜீவனைக் காட்டிலும், அந்த ஸம்ப$_3$ந்த$_4$த்திலிருந்து விடுபட்டவனுய், அதனுலேயே அளவற்ற ஜ்ஞானமுடைய முக்தஜீவன் மேலானவனுகையால் 'பரமம் த$_4$ாம' என்று விஶேஷிக்கிருன். இங்கு முந்திய பொருளிற்போலே மூன்று படிகளில்லாமையாலே, 'பரமம்' என்றது ப$_4$ாஷ்யத்தில் 'பரம்' என்றே விவரிக்கப்பட்டது. ''பரமம் த$_4$ாம மம'' [மேலான ஒளியான முக்தஸ்வரூபம் என் உடைமை] என்று சொல்லுவதற்குக் கருத்து என்ன? எனில்: இவனும் என் உடைமையாகையாலே, இவனைத் தன் ஆத்மாவிலும் மேலான என்னை விரும்பும்படி ஶாஸ்த்ரங்களில் பலவிடங்களில் தெரிவித்து, அப்போதும் ஆத்மாவையே விரும்பினுல், இவன் திருந்தலாம்படி ஸாத$_4$னங்களை அமைத்து ஆனவரையில் முயன்று பார்த்தும், ப்ராரப்$_3$த$_4$கர்மம் முடிந்து அந்திமஸ்ம்ருதி ஏற்படும் வரையில் இவன் தன் ஆத்மாவை விரும்புவதிலேயே நிலைநிற்கையாலே, இவன் மறுபடியும் ஸம்ஸாரத்தில் அழுந்தி நித்யஸம்ஸாரி

॥ भा ॥ ज्ञानिनः प्राप्यं तु तस्मादत्यन्तविभक्तमित्याह—

पुरुषस्स परः पार्थ भक्त्या लभ्यस्त्वनन्यया ।
यस्यान्तस्स्थानि भूतानि येन सर्वमिदं ततम् ॥ २२ ॥

22. புருஷ: ஸ பர: பார்த்த₂ ப₄க்த்யா லப்₄யஸ் த்வநந்யயா ।
யஸ்யாந்தஸ்ஸ்த₂ாநி பூ₄தாநி யேந ஸர்வமித₃ம் ததம் ॥

பார்த்த₂—குந்தீபுத்திரனே! பூ₄தாநி—எல்லாப் பொருள்களும், யஸ்ய—எந்தப் பரமபுருஷனுடைய, அந்தஸ்ஸ்த₂ாநி—உள்ளேயிருக்கின்றனவோ, யேந — எவனுல், ஸர்வம் இத₃ம்—இது அனைத்தும், ததம்—வியாபிக்கப்பட்டுள்ளதோ,

---

யாய்ப் போகாதபடி, இவன் விரும்பும் நித்யமான கைவல்ய மோக்ஷத்தையே இவனுக்கு அருளுகிறேன் என்று கருத்து. இதிலிருந்து நித்யமான ப₄க₃வத₃நுப₄வமில்லாத இக்கைவல்ய மோக்ஷத்தை அருளுவதால் எம்பெருமானுடைய கருணைக்கு எக்குறையுமில்லை என்றும், பரமகாருணிகனுகையாலேயே வேறு வழியில்லாமல் இதை அளிக்கிருன் என்றும் விளங்குகிறது. நிற்க.

"நின்ற ஒன்றை உணர்ந்தேனுக்கு அதனுள் நேர்மை அது இது என்று
ஒன்றும் ஒருவர்க்கு உணரலாகாது உணர்ந்துமேலும் காண்பரிது
சென்று சென்று பரம்பரமாய் யாதுமின்றித் தேய்ந்தற்று
நன்று தீதென்றறிவரிதாய் நன்ருய் ஞானம் கடந்ததே"
[திருவாய் 8-8-5]

என்னும் பாசுரத்தின் முற்பாதியாலே, இங்கு ஆத்மாவைக் குறிக்கும் அவ்யக்த ஶப்₃த₃த்தையும், பிற்பாதியாலே "அவ்யக்தாத் பர:" என்னும் பகுதியையும் தெளிவாக விவரித்தருளினுராகையால், அந்தப் பாசுரத்தின் வியாக்கியானங்களும், "தமாஹு: பரமாம் க₃திம்" என்றதின் விவரணமாக அடுத்துள்ள "நன்ருய் ஞானம்" [திருவாய் 8-8-6] "அதுவே வீடு" [ஷை 8-8-7] என்னும் பாசுரங்களை அருளிச்செய்திருக்கிருராகையால், அப்பாசுரங்களின் வியாக்கியானங்களும் இங்கு அனுஸந்தி₄க்கத்தக்கவை. ஆக, இவ்விரு ஶ்லோகங்களாலும் அசித₃நுப₄வமான ஐஶ்வர்யாநுப₄வத்தைக் காட்டிலும், சிந்மாத்ராநுப₄வமாகிற கைவல்யாநுப₄வத்தின் சிறப்பு கூறப்பட்டதாயிற்று. 20, 21.

ஸ: பர: புருஷ: து—அந்தப் பரமபுருஷனோவெனில், அநந்யயா ப₄க்த்யா—வேறு பயன் கருதாத ப₄க்தியினுல், லப்₄ய:—அடையத்தக்கவன்.

---

21. தன்னகத்துப் பூதங்க ளெல்லாந் தகவிருத்தி
யன்னவற்றிற் ருன்பரந்தே யாங்கமைந்து—மன்னியசீர்
அந்தப் பரம்புருட னன்பா லனன்னியமாஞ்
சிந்தைக் குறவெளியன் சேர்ந்து

பூதங்கள் எல்லாம் தன் அகத்து தகவு இருத்தி—எல்லாப் பொருள்களையும் தன்னிடம் பொருந்தியிருக்கச் செய்து, அன்னவற்றில்—அந்தப் பொருள்களிடம், தான் பரந்தே அமைந்து—தான் வியாபித்து நின்று, ஆங்கு மன்னிய சீர்—அப்படி வியாபித்தபோதிலும் பெருமை பெற்றிருக்கும், அந்தப் பரம்புருடன்—அந்தப் பரமபுருஷன், சிந்தைக்கு அனன்னியமாம் அன்பால் - நெஞ்சில் வேறு பயன் கருதாத ப₄க்தியினுல், சேர்ந்து உற எளியன்—அடைவதற்கு எளியவனுகிருன்.

---

22. சென்ற இரு ஶ்லோகங்களில், ஜிஜ்ஞாஸுவுக்கு ப்ராப்யமான சித்தைமாத்திரம் அநுப₄விப்பதாகிற கைவல்யமோக்ஷம், ஆர்த்தனுக்கும்,அர்த்தா₂ர்த்தி₂க்கும் ப்ராப்யமாய்,அசித்தை அநுப₄விப்பதாகிற ஐஶ்வர்யாநுப₄வத்தைக்காட்டிலும் மிகச்சிறந்தது என்று காட்டினுன். இந்த ஶ்லோகத்தில் ஜ்ஞாநிக்கு ப்ராப்யமாய்,பரமபுருஷனை அநுப₄விப்பதாகிற பரமமோக்ஷம் கைவல்யமோக்ஷத்தைக்காட்டிலும் மிகவும் சிறந்தது என்று காட்டுகிருன். இந்த ஶ்லோகத்திலுள்ள துஶப்₃த₃ம், இதில் சொல்லப்படும் ப₄க₃வத₃நுப₄வம் கைவல்யத்தைக்காட்டிலும் மிகவும் வேறுபட்டது என்றும், சிறந்தது என்றும் காட்டுகிறது என்னும் திருவுள்ளத்தினுலேயே, இந்த ஶ்லோகத்தின் அவதாரிகையில் "அத்யந்தவிப₄க்தம்" [மிகவும் வேறுபட்டது (சிறந்தது)] என்று பா₄ஷ்யகாரர் அருளினுர். கைவல்யம் பெற்றவனுக்கு ப₄க₃வத₃நுப₄வம் அடியோடு கிடையாது, ஏற்படவும் இடமில்லை என்னும் திருவுள்ளத்தாலேயே, 'விப₄க்தம்' என்றுமாத்திரம் பத₃மிடாமல், 'அத்யந்த விப₄க்தம்' என்று விஶேஷித்திருக்கிருர் என்பது குறிக்கொள்ளத்தக்கது. "குறுகா நீளா இறுதிகூடா எனையூழி சிறுகா பெருகா அளவிலின்பம் சேர்ந்தாலும், மறுகாலின்றி மாயோன்! உனக்கே ஆளாகும் சிறுகாலத்தை உறுமோ

॥भा॥ * मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनंजय। मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव॥ (७. ७), * मामेभ्यः परमव्ययम् (७. १३) इत्यादिना निर्दिष्टस्य यस्य अन्तस्थानि सर्वाणि भूतानि,

---

அந்தோ ! தெரியிலே" [திருவாய் 6-9-10] என்னும் பாசுரத்தில், "நித்யமாய், (ஐம்வர்யத்தைக்காட்டிலும்) சிறந்ததான கைவல்ய மோக்ஷத்தை அடைந்தாலும், அது ஒரு கணநேரம் ப₄க₃வானுக்கே ஆட்செய்வதற்கு ஒப்பாகுமோ ?" என்று ஆழ்வார் பாடியிருப்பதைத் திருவுள்ளத்திற்கொண்டே எம்பெருமானார் இப்படி அருளினார் என்பது தெளிவு நிற்க; 'புருஷ: ஸ பர: லப்₄ய:" என்று இங்கு பரம புருஷனையே ப்ராப்யனாகச் சொல்லுகையாலும், அநந்யப₄க்தியை அதற்கு ஸாத₄னமாகக் கூறுகையாலும், "அநந்யசேதா: ஸததம்... தஸ்யாஹம் ஸுலப₄:" [8-14] என்னும் ம்லோகத்தில் கூறப்பட்ட ஞானியின் ப்ராப்யத்தைப்பற்றியதே இந்த ம்லோகம் என விளங்கு கிறது. (ஸ பர: புருஷ:) அந்தப் பரமபுருஷன் ; இப்படிப்படர்க் கையில் கூறியபோதிலும், " மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சித₃ஸ்தி த₄நஞ்ஜய ! மயி ஸர்வமித₃ம் ப்ரோதம் ஸூத்ரே மணிக₃ணா இவ ॥" [7-7] [த₄னஞ்ஜயனே ! என்னைக்காட்டிலும் (ஜ்ஞாநம் ம்க்தி முதலான வற்றில்) மிக மேலானது வேறு எதுவுமில்லை; என்னிடம் இந்த எல்லாப் பொருள்களும் நூலில் கோர்க்கப்பட்ட ரத்னங்கள்போலே கோர்க்கப் பட்டிருக்கின்றன.] "மாமேப்₄ய: பரமவ்யயம்" [7-13] [இவற்றைக் காட்டிலும் மேலானவனாய், அழிவற்ற என்னை] என்று இங்கு கூறப்படும் பெருமைகளை முன் ப்ரகரணங்களில் தன்னைப்பற்றியவையாகவே கூறி யிருக்கிறானகையாலே, இங்கும் தன்னையே கூறுவதாகக் கொள்ள வேண்டும். (பர: புருஷ:) பரமபுருஷன்.' புரி ஶேதே இதி புருஷ:"என்று ஹ்ருத₃யபுரியில் வாழ்வதாலும், " பூர்ணத்வாத் புருஷ: " என்று பூர்ணனாகையாலும், " பூர்வமேவ இஹாஸமிதி புருஷ: " என்று அனைவர்க்கும் முன்னவனாகையாலும், " புரு ஸநோதீதி புருஷ: " என்று எல்லாப்புருஷார்த்த₂ங்களையும் தருகையாலும் புருஷன் எனப் படுபவனாய், சேதனர் அனைவரிலும் மேலானவனாகையாலே பரம புருஷன் எனப்படுபவன் என்று கருத்து. "ஸஹஸ்ரமீர்ஷா புருஷ:" [பு-ஸூ 1-1] முதலான ப்ரமாணங்கள் புருஷமப்₃த₃த்தால் சொல்லப் படும் லக்ஷ்மீபதியே பரம்பொருள் எனக்காட்டினவன்றோ. 'நான் பரம புருஷனாகையாலே, ஜீவன் தாழ்ந்ததான தன் ஸ்வரூபத்தைத் தான் அநுப₄விப்பதைக்காட்டிலும், பரமபுருஷனான என்னை அநுப₄விப்பது

येन च परेण पुरुषेण सर्वमिदं ततम्, स परः पुरुषः * अनन्य-
चेतास्सततम् (८. १४) इत्यनन्यया भक्त्या लभ्यः ॥ २२ ॥

மிகச்சிறந்தது' என்று உணர்த்துகிருன். இன்னமும் பரமபுருஷன் எத்தகையவன் என்பதைப் பிற்பாதியிலும் காட்டுகிருன்,—(யஸ்யாந்தஸ் ஸ்த₂ாநி பூ₄தாநி யேந ஸர்வமித₃ம் ததம்) ஏழாம் அத்தியாயத்தில் கூறியபடி தானேயான அந்தப்புருஷனிடத்திலேயே அவனுல் த₄ரிக்கப் பட்டு எல்லாப்பொருள்களும் வாழ்கின்றன; அவன் அவை அனைத் தையும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிருன் என்கை. "யஸ்யாந்தஸ்ஸ்த₂ாநி பூ₄தாநி" என்று நாராயண ஶப்₃த₃த்தின் தத்புருஷ ஸமாஸத்தால் ஏற்படும் ஸர்வத₄ாரகத்வத்தையும், "யேந ஸர்வமித₃ம் ததம்" என்று ப₃ஹுவ்ரீஹி ஸமாஸத்தால் ஏற்படும் ஸர்வவ்யாபித்வத்தையும் காட்டுகிருன். "அந்தர் ப₃ஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:" [தை-நா-11] [அவை அனைத்தையும் உள்ளும் புறமும் வியாபித்து விளங்குகிருன் நாராயணன்] "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்...தேநேத₃ம் பூர்ணம் புருஷேண ஸர்வம்" [ஶ்வே 3-9] [எவனைக்காட்டிலும் மேலானது வேறென்றுமில்லையோ... அந்தப்புருஷனுல் இவையனைத்தும் நிறைந்துள்ளது.] முதலான ஶ்ருதிகளில் புருஷனென்றும், நாராயணனென்றும் படிக்கப்படும் தனக்கே இப்பெருமைகள் ஓதப்பட்டிருப்பதை உணர்த்துகிருன். இப்படிச் சேதனுசேதனங்களனைத்தையும் வியாபித்து த₄ரித்துநிற்கும் விபு₄வான தன்னைப்பற்றிய அநுப₄வம், அணுவான சேதனன் தன்னைத் தான் அனுப₄விப்பதைக்காட்டிலும் மிகச்சிறந்தது என்று கருத்து. (அநந்யயா ப₄க்த்யா லப்₄ய:) வேறு பயன்கருதாத ப₄க்தியினுலே அடையத்தக்கவன். அதிலும், "தஸ்யாஹம் ஸுலப₄:" [8-14] என்னும் ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடி மிக எளியவனுகவுமிருக் கிருன். பனிரண்டாம் அத்தியாயத்தின் தொடக்கத்தில் சொல்லப் பட்டபடி அணுவின் அநுப₄வமாகிற கைவல்யமோக்ஷம் நீண்டகாலம் கழித்து மிகுந்த ஶ்ரமப்பட்டு அடையத்தக்கதாயிருக்கையாலும், விபு₄வான தன்னையநுப₄விப்பதாகிற பேரின்பம் விரைவில் ஶ்ரம மில்லாமல் அடையத்தக்கதாகையாலும் கைவல்யமோக்ஷத்திற்கும், தன்னையடையும் நல் வீட்டிற்கும் மலைக்கும் அணுவுக்குமுள்ள வாசி யுண்டாகையால், இது முற்கூறிய கைவல்யமோக்ஷத்தைக்காட்டிலும் மிகச்சிறந்ததே என்று கருத்து. (பார்த்த₂) என் அத்தை பிள்ளை யான நீ இந்த மிகச்சிறந்த மோக்ஷத்தை அடையவேண்டாவோ? என்று கருத்து. 22.

॥भा॥ अथात्मयाथात्म्यविदः परमपुरुषनिष्ठस्य च साधारणीमर्चिरादिकां गतिमाह। द्वयोरप्यर्चिरादिका गतिश्श्रुतौ श्रुता; सा चापुनरावृत्तिलक्षणा। तथा पञ्चाग्निविद्यायां * तद्य इत्थं विदुर्ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते तेऽर्चिषमभिसंभवन्त्यर्चिषोऽहः (छा. ५. १०. १) इत्यादौ। अर्चिरादिकया गतस्य परब्रह्मप्राप्ति-

---

23, 24. இனி, "தத்3ய இத்த2ம் வித்3:, யே சேமேऽரண்யே ஶ்ரத்3த்4ா தப இத்யுபாஸதே, தேऽர்ச்சிஷமபி4ஸம்ப4வந்தி, அர்ச்சிஷோऽஹ:" [சா2ந் 5-10-1] [அந்த ஜீவஸ்வரூபத்தை ஸ்தூ2ல ஸூக்ஷ்ம தே3ஹங்களைக் காட்டிலும் வேறுபட்டதாகவும், ப்3ரஹ்மாத்மகமாகவும் எவர்கள் அறிகிறார்களோ, எவர்கள் ஶ்ரத்3தை4யை முன்னிட்டுக்கொண்டு ப்3ரஹ்மத்தையே உபாஸிக்கிறார்களோ, அவர்கள் இருவகையினரும் அர்ச்சிர்தே3வதையை (ஆதிவாஹிகராக—மோக்ஷத்திற்கு வழிநடத்துமவராக) அடைகிறார்கள். அர்ச்சிர்தே3வதையிடமிருந்து அஹர்தே3வதையை (ஆதிவாஹிகராக) அடைகிறார்கள்.] என்று தொடங்கிப் பஞ்சாக்3நி வித்3யாப்ரகரணத்தில் குறிப்பிடப்பட்டவர்களாய், "ப4க3வச்சே2ஷதைகரஸாத்மஸ்வரூபவித்" [கீ3தை 7-16 பா4ஷ்யம்] [எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருப்பதையே இயல்வாகக்கொண்ட ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவன்.] என்னும் ஜ்ஞாநிலக்ஷணத்தைப் பரிபூர்ணமாகவுடையவர்களான ஆத்மயாதா2த்ம்யவித்துக்கள் எனப்படும் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2ரான ப்3ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸகர்களுக்கும், மற்ற வித்3யைகள் ஒன்றில் நின்று ப்3ரஹ்மத்தை உபாஸிப்பவர்களும், ப்3ரஹ்மத்தையே உபாயமாகக் கொண்ட ப்ரபந்நர்களுமடங்கிய பரமபுருஷநிஷ்ட2ர்களுக்கும் பொதுவான அர்ச்சிராதி3க3தியை மேல் இரண்டு ஶ்லோகங்களாலே கூறுகிறான் கண்ணன். "யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே" [8-21] என்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஜிஜ்ஞாஸுவான கைவல்யநிஷ்ட2னுக்குப்போலே, அர்ச்சிராதி3க3தியாலே செல்லும் இந்த ஜ்ஞாநிகளுக்கும் புநராவ்ருத்தியில்லை. "ஸ ஏநாந் ப்3ரஹ்ம க3மயதி......ஏதேந ப்ரதிபத்3யமாநா இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே" *[சா2ந் 4-15-6]* [அந்த அமானவன் இவ்வர்ச்சிராதி3க3தியால் வந்தவர்களை ப்3ரஹ்மத்தை அடைவிக்கிறான்...இவ்வழியால் வந்தவர்கள் பிறந்தும் செத்தும் நின்று இடறும் இந்த ஸம்

रपुनरावृत्तिश्चाम्नाता * स एनान् ब्रह्म गमयति...एतेन प्रति-
पद्यमाना इमं मानवमावर्तं नावर्तन्ते (छा. ४. १५. ६) इति।

ஸார மண்டலத்தை அடையமாட்டார்கள்] என்னும் வேத₃வாக்யத்தில் அர்ச்சிராதி₃க₃தியால் மோக்ஷமடைந்தவனுக்குப் பரப்₃ரஹ்மாநுப₄வமும், புநராவ்ருத்தியின்மையும் ஓதப்பட்டதன்றோ.

இனி, இவ்வவதாரிகா ப₄ாஷ்யபங்க்தியில் 'ஆத்ம யாத₂ாத்ம்ய வித்' எனப்பட்டவன் பூர்வப்ரக்ருதனை கைவல்யநிஷ்ட₂ன் என்றே கொண்டுவிடலாமே என்னும் ஐயத்திற்குப் பரிஹாரம் உரைக்கப் படுகிறது. (1) ஜிஜ்ஞாஸு எனப்படுபவனும், கேவலாத்மாநுப₄வத்தை ப்ராப்யமாகக்கொண்ட கைவல்யநிஷ்ட₂னுக்கு "ப்ரக்ருதி வியுக்தாத்மஸ்வரூபாவாப்தீச்சு₂:" [ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தன் ஆத்மஸ்வரூபத்தைப் பெற விரும்புகிறவன்] என்றும், ப்₃ரஹ்மாநுப₄வத்தை ப்ராப்யமாகக் கொண்ட ஜ்ஞாநிக்கு "ப₄க₃வச்சே₂ஷதைகரஸாத்ம ஸ்வரூபவித்" [ப₄க₃வானுக்கு அடிமைப்பட்டிருக்கையையே இயல்வாகக்கொண்ட ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவன்] என்றும் "ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு:" [கீ₃தை 7-16] என்று தொடங்கும் ஶ்லோகத்தில் லக்ஷணமுரைத்தார் ப₄ாஷ்யகாரர். இங்கு இவ்வதி₄காரிக்கு "ஆத்மயாத₂ாத்ம்யவித்" [ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்தவன்] என்று பெயரிட்டிருப்பதிலிருந்தும், இவனும் ஆத்ம ஸ்வரூபத்தை ப்₃ரஹ்மாத்மகமாய், ப்₃ரஹ்ம ஶேஷதைகரஸமானது என்று அநுஸந்தி₄க்கவேண்டும் என்று தத்க்ரது ந்யாயத்தையும் காட்டி நிரூபிப்பதிலிருந்தும் இவனை ப₄ாஷ்யகாரர் ஜ்ஞாநியாகக் கருதினரேயொழிய ஜிஜ்ஞாஸுவாகக் கருதவில்லை என்று தெளிவாக விளங்குகிறது. (2) கீ₃தை (7-17) ப₄ாஷ்யத்தில் "இதரயோஸ்து யாவத்ஸ்வாபி₄லஷிதப்ராப்தி மயா யோக₃:" [ஐஶ்வர்ய கைவல்யநிஷ்ட₂ர்கள் இருவர்க்கும் (முறையே) ஐஶ்வர்யமும், கேவலாத்மாநுப₄வமுமாகிற தத்தம் விருப்பம் கிடைக்கும் வரையிலேயே என்னோடு சேர்த்தியுண்டு] என்று கேவலாத்ம ப்ராப்திக்குப் பின் கைவல்யநிஷ்ட₂னுக்கு ப்₃ரஹ்மாநுப₄வம் கிடையாதென்று காட்டினர். கீ₃தை 8-22 அவதாரிகையில், "ஜ்ஞாநிந: ப்ராப்யம் து தஸ்மாத₃த்யந்தவிப₄க்தம்" [கைவல்ய நிஷ்ட₂னுடைய ப்ராப்யத்தைக் காட்டிலும், ஜ்ஞாநியின் ப்ராப்யம் மிகவும் வேறுபட்டது] என்று அருளுவதன் மூலம் இதை வலியுறுத்தினர். பதின்மூன்றுவது அத்தியாயத்தின் அவதாரிகாப₄ாஷ்யத்தில் "ஆத்மகைவல்யமாத்ராபேக்ஷாணும்" என்று கைவல்ய

நிஷ்டனுன் கேவலாத்மாநுபவத்தை மாத்திரமே விரும்புகிருன் என்று அருளுவதன்மூலம் இதை நிலைநாட்டினர். இவ்வவதாரிகாபாஷ்யத்திலோவெனில் ஆத்மயாதாத்ம்யவித்தாகிற பஞ்சாக்நிவித்யா நிஷ்டனுக்கு ப்ரஹ்மாநுபவம் உண்டென்று மிகவும் தெளிவாக அருளிச்செய்கிருர். இதனுலும் இவன் ஜ்ஞாநிகோடியில் சேர்ந்தவனேயொழிய ஜிஜ்ஞாஸுவல்லனென்று விளங்குகிறது. (3) ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்யநிஷ்டனைப்பற்றிப் பலவிடங்களில் குறிப்பிடும்போது "ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபத்தை அடைய விரும்புகிறவன்" [7-16; 7-29] என்ரே, 'அக்ஷரயாதாத்ம்யத்தை விரும்பி உபாஸிப்பவன்' [8-ம் அத்தியாயம் அவதாரிகை] என்ரே, 'கைவல்யார்த்தீ' [8-11, 8-14, 8-15 அவதாரிகைகள்] என்ரே, 'கைவல்யம் ப்ராப்தன்' [8-20, 21 அவதாரிகை] என்ரே, 'ஆத்மகைவல்ய மாத்ராபேக்ஷன்' [13-ம் அத்தியாயம் அவதாரிகை] என்ரே குறிப்பிடுகிருரேயொழிய ஓரிடத்திற்கூட 'ஆத்மயாதாத்ம்யவித்' என்று குறிப்பிடவில்லை. இதிலிருந்தும் இந்த ஆத்மயாதாத்ம்யவித் என்பவன் கைவல்யநிஷ்டனிலும் வேறுபட்டவன் என விளங்குகிறது. (4) கீதை (8-26) ஶ்லோகபாஷ்யத்தில் "ஏதே ஶுக்ல க்ருஷ்ணே கதீ ஜ்ஞாநிநாம், விவிதாநாம் புண்யகர்மணும் ச ஶ்ருதௌ ஶாஶ்வதே மதே" [இந்த ஶுக்லக்ருஷ்ணகதிகளிரண்டும் (முறையே) ஞானிகளுக்கும், பலவிதமான புண்யகர்மங்களைப் புரிந்தவர்களுக்கும் ஶ்ருதியில் எப்போதும் சொல்லப்படுகின்றன.] என்று அருளிச் செய்வதன்மூலம் ஶுக்லகதியான அர்ச்சிராதிகதி ஜ்ஞாநிகளுக்கு உண்டேயொழிய ஜிஜ்ஞாஸுவுக்குக் கிடையாது என்று காட்டுவதன்மூலம் ஆத்மயாதாத்ம்யவித்தாகிற பஞ்சாக்நிவித்யா நிஷ்டன் ஜ்ஞாநிகோடியில் சேர்ந்தவனேயொழிய ஜிஜ்ஞாஸுவல்லனென்று நிலைநிறுத்தினர். "ஜ்ஞாநிநாம் த்விவிதாநாம்" என்று தாத்பர்ய தீபிகையில் எடுக்கப்பட்ட பாடத்தில் இது மிகத் தெளிவாக விளங்குகிறது. (5) பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்குப் பஞ்சாக்னி வித்யை ஒன்றே ஸாதனமாகும். "ஆத்மார்த்தீ சேத்த்ரயோऽப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாதகா:" [கீதார்த்த ஸங்க்ரஹம்-27] [ஆத்ம மாத்ரத்தை அநுபவிக்கையாகிற பலனை விரும்பினுகில், கர்மஜ்ஞாநபக்தியோகங்கள் மூன்றும் தனித்தனியே ஆத்மகைவல்யத்தை ஸாதித்துக்கொடுக்கும்.] "ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்க்காத்யம் பாரலௌகிகம் | கைவல்யம் பகவந்தம் ச மந்த்ரோऽயம் ஸாதயிஷ்யதி ||" [வ்ருத்தஹாரீதஸ்ம்ருதி 6-50] [இவ்வுலகச் செல்வத்தையும், சுவர்க்கம் முதலான மறுமைச் செல்வத்தையும், கேவலாத்மாநுபவமாகிற கைவல்யத்தையும், பகவ

த₃நுப₄வத்தையும் (அதையதை விரும்புவார்க்கு) இவ்வஷ்டாக்ஷர மந்திரம் ஸாதி₄த்துக்கொடுக்கும்.] "தாவதா₃ர்த்திஸ் ததா₂ வாஞ்சா₂ தாவந்மோஹஸ் ததா₂ஸுக₂ம் । யாவந்ந யாதி ஶரணம் த்வாமஶேஷாக₄நாஶநம் ॥" [வி·பு 1-9-73] [எல்லாப் பாபங்களையும் போக்கடிக்கும் உன்னை எதுவரையில் ஶரணமடையவில்லையோ, அது வரையிலேயே (செல்வத்தை இழந்ததனால் ஏற்படும்) வருத்தம்; அதுவரையிலேயே (செல்வம் வேண்டும் என்னும்) ஆசை; அது வரையிலேயே (ஆத்மாநுப₄வமின்மையால் ஏற்படும்) மோஹம்; அதுவரையிலேயே (ப₄க₃வத₃நுப₄வமின்மையால் உண்டாகும்) ஸுக₂மின்மை. (ஆர்த்தன், அர்த்தா₂ர்த்தி₂ எனப்படும் ஐஶ்வர்யார்த்தி₂கள், ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்யார்த்தி₂, ஜ்ஞாநி ஆகிய அனைவர்க்கும் ப்ரபத்தியே ப₂ல ஸாத₄னம் என்றபடி)] என்கிறபடியே கைவல்ய நிஷ்ட₂னுக்குக் கர்ம ஜ்ஞாந ப₄க்தி ப்ரபத்திகளில் எதுவும் ஸாத₄னமாகலாம். இப்படி ஸாத₄னத்தைப் பார்த்தாலும் ஆத்மயாதா₂த்ம்யவித் எனப்படும் பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂ன் கைவல்ய நிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவன் என விளங்கும். (6) பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னைப் பற்றிய ப்ரஸ்தாவம் வரும் கார்யாதி₄கரணம் [4-3-5] முதலான விடங்களில் ஸ்ரீபா₄ஷ்யம், ஶ்ருதப்ரகாஶிகை முதலானவற்றில் அவனைப்பற்றிக் குறிப்பிடும்போது ஓரிடத்திற்கூட அவனைக் கேவலன் என்றோ கைவல்ய நிஷ்ட₂ன் என்றோ, அவனுக்குக் கைவல்யம் ப்ராப்யம் என்றோ கூறவில்லை. நேர்மாறாகப் பஞ்சாக்₃நி வித்₃யா நிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்ட அதி₄காரிகளே "கேவலம் வா சித்₃வஸ்து...ய உபாஸதே" என்று கார்யாதி₄கரணபா₄ஷ்யத்தின் இறுதியில் கேவல சித₃பாஸகர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதிலிருந்தும் ஆத்மயாதா₂த்ம்யவித் எனப்படும் பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂ன், கைவல்ய நிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவன் என விளங்குகிறது.

இனி, பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂ன் கைவல்ய நிஷ்ட₂னைக்காட்டிலும் வேறுபட்டவனானால், ஆத்மோபாஸகர்களான இருவர்க்கும் உள்ள முக்கியமான வேறுபாடு என்ன என்னும் கேள்வி எழுகிறது. இங்கு கார்யாதி₄கரண ஸ்ரீபா₄ஷ்யம் குறிக்கொண்டு காணத்தக்கது. பரமபுருஷநிஷ்ட₂ன், ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸகனான பஞ்சாக்₃நி வித்₃யா நிஷ்ட₂ன் எனும் அப்ரதீகாலம்ப₃னர்களை அர்ச்சிராதி₃க₃தியாலே ஆதிவாஹிகர்கள் அழைத்துச்செல்லுவதாக அவ்வதி₄கரணத்தில் நிருபிக்கப்பட்டது. இவர்களுக்கு ப்₃ரஹ்மாநுப₄வம் உண்டு என்றும் ஸ்தா₂பிக்கப்பட்டது. இவ்வதி₄கரணத்தின் கடைசியில் ஸ்ரீபா₄ஷ்யத்தில் நாலுவகைப்பட்ட ஆத்மோபாஸகர்களை ப்ரதீகாலம்

பு₃னர்களாக எடுத்து, அவர்களுக்கு அர்ச்சிராதி₃க₃தியும் ப்₃ரஹ்மாநு ப₄வமாகிற ப₂லனும் இல்லையென்று காட்டப்பட்டது. அவர்களாவார்,—(1) அசித்தோடு கூடிய ஆத்மாவை ப்₃ரஹ்மத்₃ருஷ்டியோடு (ப்₃ரஹ்மத்வத்தை ஏறிட்டு) உபாஸிப்பவர்கள். பிரமன், உருத்திரன் முதலான தேவர்களைப் பரம்பொருளாக நினைத்து உபாஸிப்பவர்கள் இப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய உபாஸனம் பொய்யை அடிப்படையாகக் கொண்டதாகையால், இவர்களுக்கு மிகவும் அற்ப ப₂லன்களே கிடைக்கும். (2) அவ்வாத்மாவை ப்₃ரஹ்மத்₃ருஷ்டியில்லாமல் உபாஸிப்பவர்கள். பிரமன், உருத்திரன் முதலானோர் பரம்பொருளல்லர் என உணர்ந்து, அவர்கள் அளிக்கக்கூடிய, ஆரோக்₃யம், செல்வம், ஞானம் முதலான இவ்வுலகப் ப₂லனைப் பெற்றுப்போகும் இவர்கள் முந்தியவர்களைக்காட்டிலும் சிறந்தவர்கள். (3) கேவலாத்மாவை ப்₃ரஹ்மத்₃ருஷ்டியோடு (ப்₃ரஹ்மத்வத்தை ஏறிட்டு)உபாஸிப்பவர்கள். இவர்களுடைய உபாஸனமும் பொய்யை அடிப்படையாகக் கொண்டதாகையால், இவர்களுக்கு அற்பப₂லன்களே கிடைக்கும். (4) கேவலாத்மாவை ப்₃ரஹ்மத்₃ருஷ்டியில்லாமல் உபாஸிப்பவர்கள். இவர்களே கைவல்யநிஷ்டர்கள். ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தம் ஆத்மாவைப் பெறுவதற்கு, இவர்கள் ஸூக்ஷ்மஶரீரமும் கழியப் பெற்று நித்யவிபூ₄திக்குச் சென்றொழிய இவர்கள் விரும்பும் கேவலாத்மாநுப₄வம் ஸித்₃தி₄க்காதாகையாலே, இவர்கள் பெறுவது முக்தியேயாகும். ஆயினும், இவர்களும் ப்ரதீகாலம்ப₃னர்களேயாகையாலே, அப்ரதீகாலம்ப₃னர்களான ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸகரான பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்டர்களுக்கும், பரமபுருஷநிஷ்டர்களுக்கும் கிடைக்கும் அர்ச்சிராதி₃க₃தியும் ப்₃ரஹ்மாநுப₄வமும், இவர்களுக்குக் கிடைக்காது. ப்ரதீகமாவது-அவயவம். இவர்கள் அனைவரும் ப்₃ரஹ்மத்தின் அவயவங்களை உபாஸிப்பவர்களேயொழிய அவயவியான ப்₃ரஹ்மத்தை ப்ராப்யமாக உபாஸிப்பவர்களல்லர். ஆகையால், அர்ச்சிராதி₃க₃தியும், அதன் வழியாகச் சென்றவர்களே அடையத்தக்க ப்₃ரஹ்மாநுப₄வமும் இந்த நாலுவகைப்பட்ட ஆத்மோபாஸகர்களுக்கும் இல்லை; அப்ரதீகாலம்ப₃னர்களான (அவயவியான ப்₃ரஹ்மத்தை ப்ராப்யமாக உபாஸிக்கும்) பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்டர்களுக்கும், பரமபுருஷநிஷ்டர்களுக்குமே அர்ச்சிராதி₃க₃தியும் ப்₃ரஹ்மாநுப₄வமும் உண்டு என்பது கார்யாதி₄கரணஸாரம். ஆக, கைவல்யநிஷ்டன் கேவலஸ்வாத்மோபாஸகன், பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்டன் ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸகன் என்பது இருவர்க்கும் உபாஸனத்தில் உள்ள வேறுபாடு. முந்தியவனுக்கு அர்ச்சிராதி₃க₃தியும், ப்₃ரஹ்மாநுப₄வமும் கிடையாது. கேவலாத்மாநுப₄வமாகிற கைவல்யமே உண்டு; பிந்தியவனுக்கு உபாஸனத்திற்கு அநுகு₃ணமாக ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மாநுப₄வம் ப₂லனாகையாலே

ப்₃ரஹ்மாநுப₄வம் உண்டு ; அர்ச்சிராதி₃க₃தியும் உண்டு என்பது இருவர்க்கும் ப₂லனில் உள்ள வேறுபாடு.

இனி, இவ்விருவகையான ஆத்மோபாஸகர்களைப்பற்றி உபனிஷத்துக்களில் எங்கு சொல்லப்பட்டுள்ளது என்னும் கேள்வி எழுகிறது. "தத்₃ய இத்த₂ம் விது₃:" [சா₂ந் 5-10-1] என்னும் வாக்யத்தில் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்டர₂ான ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸகனைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பது எடுத்துக்காட்டப்பட்டது. சா₂ந்தோ₃க்₃யம் ஏழாவது ப்ரபாட₂கத்தில்—முன்னதைக்காட்டிலும் பின்னது உயர்ந்ததான நாமம் தொடங்கி ஆசை ஈருன பதினாலு அசேதனப்பொருள்களிடம் ப்₃ரஹ்மம் என்னும் பு₃த்₃தி₄யை ஏறிட்டு உபாஸிக்கும்படி கூறி, அந்தந்த உபாஸனங்களுக்குப் படிப்படியாக மேலான இவ்வுலகப்பயன்கள் ப₂லனாகக் கூறப்பட்டன. அதற்குப் பிறகு 'ப்ராணன்' என்னும் ஶப்₃த₃த்தால் அசேதனப்பொருள்களைக் காட்டிலும் வேறுபட்ட ஜீவாத்மஸ்வரூபம் முற்கூறிய ஆசையைக் காட்டிலும் உயர்ந்ததாகச் சொல்லப்பட்டு, "ஸ வா ஏஷ ஏவம் பஶ்யந் ஏவம் மந்வாந ஏவம் விஜாநந் அதிவாதீ₃ ப₄வதி" [சா₂ந் 7-14-4] [அத்தகைய இந்த ஜீவன் தன் ஆத்மாவை முற்கூறிய அசேதனப்பொருள்களிலும் வேறுபட்டதாக மனனமும், உபாஸனமும் செய்தானாகில், அசேதனத்தைக்காட்டிலும் வேறுபட்ட தன் ஆத்மாவை ஸாக்ஷாத்கரித்து அதிவாதி₃யாகிறான்.] என்று அந்த அசேதன ப்ரக்ருதியிலும் வேறுபட்ட ஜீவஸ்வரூபத்தை உபாஸிப்பதால், அதையே ஸாக்ஷாத்கரிப்பதாகிற மிகவுயர்ந்த ப₂லன் அடையப்படு கிறது என்று கூறப்பட்டது. அடுத்ததான பதினைந்தாவது க₂ண் டத்தில் "ஏஷ து வா அதிவத₃தி யஸ் ஸத்யேந அதிவத₃தி" [சா₂ந் 7-15-1] [எவன் ஸத்யம் எனப்படும் ப்₃ரஹ்மத்தைக்கொண்டு அதி வாத₃ம் செய்கிறானோ, அவனே உண்மையில் அதிவாதி₃யாவான்.] என்று ஜீவனைக்காட்டிலும் உயர்ந்த ப்₃ரஹ்மத்தின் உபாஸனத்தைக் கூறி, அதற்கு ஜீவாநுப₄வத்தைக்காட்டிலும் உயர்ந்த ப்₃ரஹ்மாநு ப₄வம் ப₂லனாகக்கூறப்பட்டது. இவ்விஷயம் பூ₄மாதி₄கரண (1-3-2) ஸ்ரீபா₄ஷ்யத்தில் விரிவாக விளக்கப்பட்டது. இங்கு ப்ரக்ருதியிலிருந்து நீங்கிய (கேவல) ஜீவனின் அநுப₄வம் ப₂லனாகச் சொல்லப்படுவ தாலும், ப்₃ரஹ்மத்தின் அநுப₄வம் அதைவிடச் சிறந்தது என்று கூறப் படுவதாலும் ப்ராணன் எனப்படும் ஜீவனை உபாஸித்து அடைவதே கைவல்யாநுப₄வம் என்னத்தட்டில்லை. இப்ரகரணத்தில்—ப்₃ரஹ்மோ பாஸன ப₂லத்திற்குப்போலவே, இந்த ஜீவோபாஸநப₂லத்திற்கும் அதிவாத₃விஷயத்வம் சொல்லப்படுவதால், அதைப்போலவே இதுவும் முக்தியென்றும், ஆனால் ப்₃ரஹ்மாநுப₄வத்தைக்காட்டிலும் தாழ்ந்த தொரு முக்திநிலை இது என்றும் கருதப்படுகிறதென விளங்குகிறது.

இனி, ப்₃ரஹ்மாநுப₄வலேசமுமற்ற கைவல்யத்தை அடைபவனைப் பற்றிப் பலவிடங்களில் கூறியிருக்கும் ஆழ்வார்கள், அவனிலும் உயர்ந்தவனாய் ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸகனான பஞ்சாக்₃னி வித்₃யாநிஷ்ட₂னைப்பற்றியும், அவனுக்கு ப்₃ரஹ்மாநுப₄வம் உண்டென்பதுபற்றியும் எவ்விடத்திலாவது கூறியிருக்கிறார்களா என்னும் கேள்வி எழுகிறது. "கண்கள் சிவந்து" [திருவாய்மொழி 8-8] என்னும் திருவாய்மொழியில் ஐந்துமுதல் எட்டாம் பாசுரமீறாக இவனைப்பற்றி ஆழ்வார் அருளிச்செய்வதாக (முதலி)ஆண்டானும், கைவல்யநிஷ்ட₂னைப்பற்றியே ஆழ்வார் அருளிச்செய்வதாக எம்பாரும் நிர்வஹிப்பர்கள் என்று ஈட்டிலிருந்து விளங்குகிறது. ஐந்தாம் பாசுரத்தின் அவதாரிகையில் "இதுக்குமேல் நாலு பாட்டு—பட₃த மான ஸௌக்ல்யத்தைப்பிரித்து நிஷ்கர்ஷகஶப்₃த₃த்தையிட்டு வ்யவ ஹரிக்குமாபோலே, 'எம்பெம்மானோடு' (8-8-8) என்கிற பாட்டளவும் கேவலாத்மஸ்வரூபத்தைச் சொல்லுகிறது — என்று எம்பார் அருளிச்செய்யும்படி. ஆண்டான் 'ப்ரகாரமான வேஷத்திலே சொல்லுகிறது' என்னும்" என்று அருளினார் நம்பிள்ளை. எட்டாம் பாட்டின் ஈட்டில் — "எம்பெம்மானோடு ஒத்தேசென்று அங்குள்ளங் கூடக் கூடிற்றாகில் நல்லுறைப்பே" என்ற பகுதிக்கு எம்பார் நிர்வாஹத்திலும், ஆண்டான் நிர்வாஹத்திலும் பொருள்வேறுபாட்டைத் தெளிவாகக் காட்டுகிறார் நம்பிள்ளை. 'எம்பெம்மானோடு ஒத்த தேசு என்று' என்றிருக்கவேண்டியது நடுக்குறைத்தலாய் 'ஒத்தேசென்று' என்று இருப்பதாகக்கொண்டு, 'எம்பெருமானைப்போலே ஶுத்₃தி₄யை யுடையதாய், ஜ்ஞாநாநந்த₃லக்ஷணமாயிருப்பது ஜீவாத்மா' என்னும் கைவல்யநிஷ்ட₂னின் அநுஸந்த₄ானத்தை ஆழ்வார் கூறுவதாகவும், 'நல்லுறைப்பு' என்று 'ஆத்மப்ராப்தி ஸித்₃தி₄க்கும்' என்று அவனுக்குப் ப₂லனைக் கூறுவதாகவும் எம்பார் நிர்வாஹம். இப்படி நடுக்குறைத்தலாகக் கொள்ளாமல் "எம்பெம்மானோடு ஒத்தே சென்று" என்று பிரித்து, "எம்பெருமான் தனக்கு ஶேஷமாக இவ்வாத்ம வஸ்துவை நினைத்திருக்குமாபோலே, இவனும் அவனோடு ஒத்து - அவன் நினைவோடு ஒத்து, அத்த₃ஶையில் ஶேஷத்வாநுஸந்த₄ானம் கூடுமாகில் நல்ல வாய்ப்பு" என்று கொள்வது ஆண்டான் நிர்வாஹம். இவ்விடத்தில், "'ஆண்டான் பணிக்கும்படி—'நின்ற ஒன்றை உணர்ந் தேனுக்கு' என்னும் பாட்டுத்தொடங்கி நிஷ்க்ருஷ்டாத்மாநுஸந்த₄ான மாத்ரமன்றிக்கே ப₄க₃வச்சேஷத்வபர்யந்தமாக அநுஸந்தி₄க்கிறது... எம்பெருமான் தனக்கு...நல்ல வாய்ப்பு" என்று ஈட்டிலும் "நல் லுறைப்பு-நல்ல வாய்ப்பு; ப₄க₃வத₃நுப₄வம் ஸித்₃தி₄க்கும் என்றபடி என்று ஆண்டான் நிர்வாஹத்திலே தாத்பர்யம்" என்று அரும் பதவுரைகளிலும் உள்ள வாக்யங்கள் — ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை அநுஸந்தி₄த்து ப்₃ரஹ்மாநுப₄வத்தைப்பெறும் பஞ்சாக்₃னி வித்₃யாநிஷ்ட₂னே இங்கு சொல்லப்படுகிறான் என்று முதலியாண்

டான் திருவுள்ளம்பற்றியதைத் தெளிவாக விளக்குகின்றன. இவற்றிலிருந்து இவ்வவதாரிகாபா4ஷ்யத்தில் 'ஆத்மயாதா2த்ம்யவித்' எனப் படும் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2ன் ஜிஜ்ஞாஸு எனப்பட்ட கைவல்யார்த்தி2யிலும் மிகவும் வேறுபட்டவன் என்று அசைக்கமுடியாதபடி தேறிற்று. இவ்விஷயத்தையே ந்யாயஸித்3தா4ஞ்ஜனத்தில் ஜீவபரிச்சேத3த்தின் கடைசியில், "அத்ர கிஞ்சிது3ச்யதே — யஸ்த்வயம் 'ஆத்மயாதா2த்ம்யவித3: பரமபுருஷநிஷ்ட2ஸ்ய ச ஸாதா4ரணீம் அர்ச்சிராதி3காம் க3திமாஹ' இத்யாதி3 க்3ரந்த2: ப்ரஸ்துதத்வமாத்ரேண கைவல்யநிஷ்ட2 பரமபுருஷநிஷ்ட2விஷய இதி ந மந்தவ்யம்। கிந்து பரமாத்மாத்மகஸ்வாத்மாநுஸந்தா4த்ரு ஸ்வாத்மஶரீரகபரமாத்மாநுஸந்தா4த்ருபே4த3பி4ந்நப்3ரஹ்மவித்3விஷய ஏவ। தத2ா ஸதி ஆத்மயாதா2த்ம்யவிச்ச2ப்3தே3ாऽப்யத்யந்தாநுகு3ண:। ஏகக்3ரந்த2 ஸகலாஸ்வாரஸ்யம் ப3ஹுக்3ரந்த2ஸ்வாரஸ்யாய க்3ராஹ்யம்। ந சாத்ர கஶ்சித்3ப4க3வத்3யாமுநமுநிவசநவிரோத4க3ந்தே4ாऽபி இதி। ஸ்ரீமத்3கீ3தாபா4ஷ்யேऽபி பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2ஸ்ய ப்3ரஹ்மாத்மகஸ்வாத்மாநுஸந்தா4நம், தத்க்ரதுந்யாயாத் ப்3ரஹ்மப்ராப்திஶ்ச ஸ்பு2டதரம் ப்ரத்யபாதி3" [இங்கு சில வார்த்தைகள் சொல்லுகிறேன்:- 'ஆத்மயாதா2த்ம்யவித்துக்கும் பரமபுருஷநிஷ்ட2னுக்கும் பொதுவான அர்ச்சிராதி3க3தியைக் கூறுகிறான்' என்னும் கீ3தாபா4ஷ்யக்3ரந்த2ம் - இப்ரகரணத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்டவர்கள் என்பதே காரணமாகக் கைவல்யநிஷ்ட2னையும், பரமபுருஷநிஷ்ட2னையும் பற்றியே பேசுகிறது என்று நினைக்கக்கூடாது. (அப்படியானால், அது யாரைப்பற்றிப் பேசுகிறது? எனில்:) பரமாத்மாவை ஆத்மாவாகக் கொண்டவனாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பவனாகிற பஞ்சாக்3நி வித்3யாநிஷ்ட2ன், தன் ஆத்மாவை ஶரீரமாகக்கொண்டவனாகப் பரமாத்மாவை உபாஸிப்பவன் என இருவகைப்படும் ப்3ரஹ்மோபாஸகர்கள் விஷயமே அது. அப்படிக்கொண்டால்தான் (கைவல்யநிஷ்ட2ன் விஷயமாக எங்குமே பிரயோகிக்கப்படாததாய், ஜ்ஞாநிக்கே பொருந்துமதான) 'ஆத்மயாதா2த்ம்யவித்' எனும் ஶப்3த3மும் மிகவும் பொருந்திநிற்கும். கீ3தாபா4ஷ்யமாகிற ஒரு க்3ரந்த2த்தில் ப்ரகரணப3ங்க3மாகிற ஒரு அஸ்வாரஸ்யம், ஸ்ரீபா4ஷ்ய கீ3தாபா4ஷ்யங்கள் முதலானவற்றில் பல வாக்யங்களின் ஸ்வாரஸ்யத்தைக் கருதி ஏற்கத்தக்கது. [கீ3தார்த்த2ஸங்க்3ரஹத்தில் ஆளவந்தார் கைவல்யநிஷ்ட2னை 'அக்ஷரயாதா2த்ம்யார்த்தி2' என்று குறிப்பிட்டிருக்கிறாரேயொழிய, 'ஆத்மயாதா2த்ம்யார்த்தி2' என்று குறிப்பிடவில்லையாகையால்] இங்கு ப4க3வத்3யாமுநமுனிவரின் வசனத்திற்கு விரோத4லேஶமும் இல்லை என்கை. கீ3தாபா4ஷ்யத்திலும் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னுக்கு ப்3ரஹ்மாத்மகமான தன் ஆத்மாவின் அநுஸந்தா4னமும், தத்க்ரதுந்யாயத்தாலே ப்3ரஹ்மப்ராப்தியும் மிகத்தெளிவாக அருளிச்செய்யப்பட்டது.] என்று ஸ்ரீவேதா3ந்ததே3ஶிகர் அருளிச்செய்தார்.

தாத்பர்யசந்த்3ரிகையில் ஸ்ரீவேதா3ந்ததே3ஶிகர் 'அக்ஷரயாதா2த்ம்ய வித்' என்றும், 'ஜிஜ்ஞாஸு' என்றும் சொல்லப்படுபவனே 'ஆத்ம யாதா2த்ம்யவித்' என்று இந்த அவதாரிகாபா4ஷ்யத்தில் எடுக்கப் படுவதாகக்கொண்டு, மது4வித்3யாநிஷ்ட2னுக்கு வஸுபத3த்தை யடைதலை முன்னிட்டுக்கொண்டு ப்3ரஹ்மாநுப4வம் கிடைப்பதுபோலே அவனுக்குக் கைவல்யம் அவாந்தரப2லம் (இடையில் கிடைக்கும் பயன்) என்றும், ப்3ரஹ்மாநுப4வவே முக்2யப2லன் என்றும் நிர்வஹித் திருக்கையில், அதற்கு முரணுக ந்யாயஸித்3த4ாஞ்ஜந ஸ்ரீஸூக்தி களில் கைவல்யநிஷ்ட2னும், ஆத்மயாதா2த்ம்யவித்தும் வெவ்வேறு பட்டவர்கள் என்று கூறுவது எப்படிப்பொருந்தும்? எனில்: அவர்காலத் தில் அவரது பக்ஷத்தைத்தவிரக் கைவல்யநிஷ்ட2னைப்பற்றி இரு பக்ஷங்கள் இருந்தன. கைவல்யம் நித்யமான முக்தியே என்றே அவ்விரு பக்ஷத்தினரும் கொண்டிருந்தனர். அது நித்யமான முக்தியா யினும் அதில் ப்3ரஹ்மாநுப4வத்தின் லேஶமும் கிடையாது; அர்ச்சி ராதி3க3தியும் கிடையாது; ஆகையால், கைவல்யார்த்தி2 இவ்விரண்டை யுமுடைய ஆத்மயாதா2த்ம்யவித்தான பஞ்சாக்3னிவித்3யாநிஷ்ட2னைக் காட்டிலும் வேறுபட்டவன் என்பது தி3வ்யப்ரப3ந்த4வ்யாக்2யாதாக் களின் பக்ஷம்: கைவல்யநிஷ்ட2ன் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னே; இவனுக்கு அர்ச்சிராதி3க3தி உண்டு; ஶ்ருதியிலும், ஸ்ரீ பா4ஷ்யாதி3 களிலும் இவனுக்கு ப்3ரஹ்மப்ராப்தியைச் சொன்னது ப்3ரஹ்மம் விஶேஷணமாக ப்ரகாஶிப்பதையிட்டு என்பது மற்றவர்களின் பக்ஷம். ஸ்ரீதே3ஶிகன் இவ்விரண்டாவது பக்ஷக்காரர்களை மறுத்துரைக்கும் போது அவர்களுக்கு ஸ்ரீ பா4ஷ்யாதி3கள் முரணுகவும், கீ3தா பா4ஷ்யம் அநுகூலமாகவுமிருப்பதைக் காட்டிவிட்டு, "உப4யா விருத்3த4தயா க்3ரந்த2நிர்வஹணம் து ஸ்ரீமத்3 கீ3தாபா4ஷ்யடீகாயாம் தாத்பர்யசந்த்3ரிகாயாம் உக்தமஸ்மாபி4:" [ஸ்ரீ பா4ஷ்யாதி3களுக்கும், கீ3தாபா4ஷ்யத்திற்கும் முரண்படாமல் ஸ்ரீஸூக்திகளை நிர்வஹிக்கும் வழி ஸ்ரீமத்3கீ3தாபா4ஷ்யத்தின் உரையான தாத்பர்யசந்த்3ரிகையில் நம்மால் சொல்லப்பட்டது.] என்று தம் பக்ஷத்தைக் கூறிவிட்டு, "அத்ர கிஞ்சிது3ச்யதே" [இங்கு சில வார்த்தைகள் சொல்லு கிறேன்.] என்று தொடங்கிக் கூறியது முற்கூறிய இரண்டாவது பக்ஷக்காரர்கள் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக் கைவல்யநிஷ்ட2னுகக் கொள்வதைக்காட்டிலும், தி3வ்யப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்களைப் போலே பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக்காட்டிலும் வேறுபட்டவனுகக் கைவல்யநிஷ்ட2னைக் கொண்டுவிடுவது ஸ்ரீ பா4ஷ்யகாரரின் பல ஸ்ரீ ஸூக்திகளுக்குப் பொருந்தியிருக்கும் என்று காட்டியபடியே

யாகையாலே தாத்பர்யசந்த்₃ரிகைக்கும், ந்யாயஸித்₃த₄ாஞ்ஜனத்திற்கும் முரணில்லை.

இனி, ஆத்மஶப்₃த₃மும், அக்ஷரஶப்₃த₃மும் பர்யாயஶப்₃த₃ங்கள் (ஒரே பொருளைக்கூறும் சொற்கள்) ஆயிற்றே; ஆகையால், ஆத்மயாதா₂த்ம்யவித் எனப்படும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னையே அக்ஷரயாதா₂த்ம்யவித்தான கைவல்யநிஷ்ட₂னாகக் கொண்டுவிடுவது ஸ்வரஸமேயன்றோ? என்னும் கேள்வி எழுகிறது. ஆத்மஶப்₃த₃ம் ஜீவாத்மபரமாத்மாக்களைக்குறிக்கும் பொதுவான சொல். அது இங்கு ஜீவாத்மாவையே குறிக்கிறது என்று ப்ரகரணத்தைக்கொண்டு அறுதியிடப்படுகிறது. அதுபோலே, அக்ஷரஶப்₃த₃ம் ''தத₃க்ஷரம் அதி₄க₃ம்யதே'' [முண்டக₃க 1.1-5] முதலான வாக்யங்களில் பரமாத்மாவைக் குறித்தும், ''அம்ருதாக்ஷரம் ஹர:'' [ஶ்வே 1-10] முதலானவிடங்களில் ஜீவாத்மாவைக்குறித்தும், ''அக்ஷராத் பரத: பர:'' [முண்டக₃க 2-1-2] [அக்ஷரஶப்₃த₃த்தால் சொல்லப்படும் அசேதனத்தைக்காட்டிலும் மேற்பட்ட ஜீவாத்மாவிலும் மேற்பட்ட பரமாத்மா]. ''அக்ஷரம் தமஸி லீயதே'' [ஸுபா₃ல-2] [அக்ஷரம் என்னும் நிலையிலுள்ள ப்ரக்ருதி, 'தமஸ்' என்னும் நிலையிலுள்ள ப்ரக்ருதியில் லயமடைகிறது.] முதலானவிடங்களில் அசேதனப்பொருளைக்குறித்தும், ''ஸர்வகாமாம்ஶ்ச ஸாக்ஷராந்'' [க₃த்₃யத்தில் எடுக்கப்பட்ட புராணஶ்லோகம்] ''ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்₄வஸு'' [சது:ஶ்லோகீ-3] ''ஐஶ்வர்யமக்ஷரக₃திம்'' [ஸ்ரீ கு₃ணரத்நகோஶம் 58] முதலானவிடங்களில் கேவலாத்மாநுப₄வமாகிற கைவல்யமோக்ஷத்தைக்குறித்தும் பிரயோகிக்கப்பட்டிருந்தபோதிலும், ப்ரகாணத்தை அநுஸரித்து கீ₃தார்த்த₂ஸங்க்₃ரஹத்திலும் [12] கீ₃தாப₄ாஷ்யத்திலும் [8-வது அத்₄யாயம் அவதாரிகை] அக்ஷரயாதா₂த்ம்யஶப்₃த₃ம் கேவலாத்மாநுப₄வமாகிற கைவல்யமோக்ஷத்தையே குறிப்பது என்று கொள்ளவேண்டுமாகையால், அக்ஷரயாதா₂த்ம்யவித்தான கைவல்யநிஷ்ட₂னும், ஆத்மயாதா₂த்ம்யவித்தான பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னும் வெவ்வேறுபட்டவர்களேயாவர். ஸ்ரீப₄ாஷ்யகாரர் கீ₃தாப₄ாஷ்யத்தில் வெவ்வேறிடங்களில் உள்ள இரு ப்ரகரணங்களில் இந்த இரு ஶப்₃த₃ங்களையிட்டு, அவ்விரு ஶப்₃த₃ங்களால் குறிக்கப்பட்டவர்களுக்கு ப்ராப்யத்திலும், உபாஸனத்திலும் நெடுவாசியைக் காட்டியிருப்பதே இவ்விருவரும் வேறுபட்டவர்கள் என்பதைக் காட்டித்தரும். ''கண்கள் சிவந்து'' [8-8] திருவாய்மொழியில் ஐந்து முதல் எட்டு பாசுரங்கள் கேவலாத்மோபாஸநம் செய்பவனைக் குறிக்கின்றன, அவனுக்குப் ப₂லம் ஆத்மப்ராப்தி என்று

எம்பார் நிர்வஹித்திருப்பதும், அவை ப்₃ரஹ்மாத்மகமாக ஆத்மாவை உபாஸிப்பவனைக் குறிக்கின்றன, அவனுக்கு ப்₃ரஹ்மாநுப₄வமே ஸித்₃தி₄க்கும் என்று முதலியாண்டான் நிர்வஹித்திருப்பதும் அக்ஷர யாதா₂த்ம்யவித்தான கேவலாத்மோபாஸகனும், ஆத்மயாதா₂த்ம்ய வித்தான ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸகனும் மிகவும் வேறுபட்டவர்கள் என்பதைத் தெளிவாகக்காட்டுகிறது. வேறு பல பாசுரங்களின் வ்யாக்₂யானங்களில் கைவல்யநிஷ்டனுக்கு ப்₃ரஹ்மாநுப₄வ லேஶக₃ந்த₄மும் கிடையாது என்று வ்யாக்₂யாதாக்கள் அருளியிருப்பது இதை வலியுறுத்துகிறது. ஆகையால், தி₃வ்யப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாதாக்கள் உகந்த பக்ஷம் இதுவேயாகும்.

இனி, ப்ரகரணத்தில் ப்ரஸ்தாபமேயில்லாத பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னைப்பற்றி பா₄ஷ்யகாரர் இங்கு எதற்காக ப்ரஸ்தாபிக்கிறார் என்னும் கேள்வி எழுகிறது. அர்ச்சிராதிக₃தியும், ப்₃ரஹ்மாநுப₄வமும் பரமபுருஷநிஷ்ட₂னுக்கு மாத்திரமல்லாமல், ஆத்மோபாஸகர்களில் ஒரு வகையினனான பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுக்கும் உண்டு என்று ப்₃ரஹ்மஸூத்ரத்தில் கார்யாதி₄கரணத்திலிருந்து தேறிய அர்த்த₂த்தை அர்ச்சிராதிக₃தியைப்பற்றிய ஶ்லோகங்களை விவரிக்கும்போது தெரிவிக்கவேண்டியது அவஶ்யமாகையாலும், ப்ரகரணத்தில் அவ்யவஹிதமான முந்தின (22-வது) ஶ்லோகத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்ட ஜ்ஞாநிகள் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ர் என்றும் பரமபுருஷநிஷ்ட₂ர் என்றும் இருவகைப்படுவர் என்று காட்டவேண்டியது அவஶ்யமாகையாலும், அவனை இங்கு ப்ரஸ்தாபிக்கிறார். அப்படி ப்ரஸ்தாபிக்கும்போது, பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னை அதற்குமுன் ப்ரஸ்தாபிக்கப்பட்ட கைவல்யநிஷ்ட₂னென்று எவரும் மயங்கிவிடக்கூடாதென்றே — கைவல்யநிஷ்ட₂னைப் பற்றித் தாம் ஏற்கனவே பிரயோகித்த கைவல்யார்த்தி₂, ப்ரக்ருதிவியுக்தாத்ம ஸ்வரூபாவாப்தீச்சு₂ முதலான பத₃ங்களை இடாமல், கைவல்யார்த்தி₂யைப் பற்றித் தாமோ, ஆளவந்தார் முதலான பூர்வாசார்யர்களோ எங்குமே பிரயோகி₃யாததும், ஜ்ஞாநி லக்ஷணத்தோடு பொருந்தியதுமான 'ஆத்மயாதா₂த்ம்யவித்' என்னும் ஶப்₃த₃த்தாலே அவனைக் குறித்து, கைவல்யார்த்தி₂க்கு இல்லை என்று (7, 17) (8, 22) முதலான ஶ்லோகபா₄ஷ்யங்களில் தம்மால் காட்டப்பெற்ற ப₄க₃வத₃நுப₄வத்தையும், (8-26) ஶ்லோகபா₄ஷ்யத்தில் (இல்லையென்று) காட்டப்போகிற அர்ச்சிராதிக₃தியையும் இவனுக்கு உண்டென்று ப்ரமாணங்களைக் காட்டி நிரூபித்தருளுகிறார். ஆகையாலே, இங்கு கூறப்படும் 'ஆத்மயாதா₂த்ம்யவித்' எனப்படும்

न च प्रजापतिवाक्यादौ श्रुतपरविद्याङ्गभूतात्मप्राप्तिविषयेयं * तद्य इत्थं विदुरिति गतिश्रुतिः, * ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते इति परविद्यायाः पृथक्छ्रुतिवैयर्थ्यात्। पञ्चाग्निविद्यायां च—* इति

பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக் கைவல்யநிஷ்ட2னாகக் கருதச் சிறிதும் இடமில்லை. இனி, இதை வலியுறுத்தும் அவதாரிகா பா4ஷ்யத்தின் மேல் பகுதிகளைக் காண்போம்.

இனி — ச2ாந்தே3ாக்3யத்தில் எட்டாவது ப்ரபாட2கத்தில் உள்ள த3ஹரவித்3யாப்ரகரணத்தில், ஏழாவது க2ண்ட3த்திலிருந்து தொடங்கியுள்ள ப்ரஜாபதி வாக்யத்திலும், " அத்4யாத்மயோகா3தி4க3மேந தே3வம் மத்வா தீ4ரோ ஹர்ஷசோகௌ ஜஹாதி " [கட2 2-12] [மனத்தை ஆத்மாவில் நிலைநிறுத்துவதன்மூலம் ஜீவாத்ம த3ர்சனத்தை அடைந்து, அதன் பலனாகப் பரமபுருஷனை உபாஸித்து, உபாஸகன் இவ்வுலக இன்பதுன்பங்களைக் கைவிடுகிறான்] என்று கடோ2பநிஷத்திலும் பரமாத்மோபாஸனத்திற்கு அங்க3மாகக் கூறப்பட்ட ஆத்மத3ர்சனத்தையே " தத்3ய இத்த2ம் விது3: " என்னும் வாக்யப்பகுதியும் குறிப்பதாகக் கொண்டுவிடலாமே; இவ்விடத்தில் தனியாக ஒருவகைப்பட்ட ஆத்மோபாஸகனைக் கூறுவதாகக் கொள்ளவேண்டிய அவச்யமில்லையே என்னும் கேள்வி எழுகிறது. இதற்குப் பரிஹாரமாவது:— " தத்3ய இத்த2ம் விது3: தேऽர்ச்சிஷமபி4ஸம்ப4வந்தி" [இப்படி ஆத்மாவை உபாஸிப்பவர்கள் அர்ச்சிராதி3 க3தியாலே செல்கிறார்கள்] என்று மாத்திரம் சொல்லியிருந்தால் அப்படிக் கொண்டுவிடலாம். இங்கோவெனில், "தத்3ய இத்த2ம் விது3:, யே சேமேऽரண்யே ச்ரத்3தா4 தப இத்யுபாஸதே" என்று ஆத்மாவை உபாஸிப்பவர்களோடு, பரமாத்மோபாஸகர்களையும் இரண்டு யச்ச2ப்3த3ங்களோடு கூடிய வாக்யப்பகுதிகளிலே தனியே எடுத்து, சகாரத்தாலே இருவரையும் ஸமுச்சயித்து (கூட்டி), இருவர்க்கும் அர்ச்சிராதி3க3தியைச் சொல்லுகையாலே, இவ்வாக்யம்— கீ3தை மூன்றாவது அத்தியாயம் அவதாரிகா பா4ஷ்யத்தில் விளக்கப்பட்ட ப்ரஜாபதி வாக்யத்திலும், கடோ2பநிஷத்திலும் கூறப்பெற்ற பரமாத்மோபாஸனத்திற்கு அங்க3மான ஆத்மத3ர்சநத்தைக் கூறவில்லை என்றும், பரமாத்மோபாஸகர்களைக் காட்டிலும் வேறுபட்ட ஆத்மோபாஸகர்களில் ஒருவகையினரையும், பரமாத்மோபாஸகர்களையும் சேர்த்து எடுத்து, இருவர்க்கும் அர்ச்சிராதி3க3தியைக் கூறுகிறது என்றும் விளங்குகிறது.

तु पञ्चम्यामाहुतावापः पुरुषवचसो भवन्ति (छा. ५. ९. १.) इति, * रमणीयचरणाः...कपूयचरणाः (छा. ५. १०. ७) इति पुण्यपापहेतुको मनुष्यादिभावोऽपामेव भूतान्तरसंसृष्टानाम्, आत्मनस्तु तत्परिष्वङ्गमात्रमिति चिदचितोर्विवेकमभिधाय, * तद्य इत्थं विदुः * तेऽर्चिषमभि-

---

இனி, " தத்₃ய இத்த₂ம் வித்₃ஃ" என்பது ஆத்மோபாஸகர்களில் ஒரு வகையினரைக் கூறுகிறது என்பது எப்படி? எனில், இவ்விஷயம் பஞ்சாக்₃நிவித்₃யாப்ரகரணத்தை ஆராய்ந்தால் தெளிவாக விளங்கும். அதாவது:- நீர் முதலான பூ₄தஸூக்ஷ்மங்களோடு கூடிய ஜீவன் தூ₄மாதி₃ மார்க்க₃த்தாலே ஸ்வர்க்க₃ம் சென்று திரும்பும்போது—தே₃வலோகமாகிற அக்₃நியில் ஶ்ரத்₃த₄ாரூபமான ஹவிஸ்ஸாகவும், பர்ஜந்யனுகிற அக்₃நியில் ஸோமரூபமான ஹவிஸ்ஸாகவும், பூ₄மியாகிற அக்₃னியில் மழையுருவான ஹவிஸ்ஸாகவும், புருஷனுகிற அக்₃னியில் அந்ந ரூபமான ஹவிஸ்ஸாகவும், ஸ்த்ரீயாகிற அக்₃னியில் ரேதஸ்(வீர்யம்) உருவிலான ஹவிஸ்ஸாகவும், ஆக இப்படி ஐந்து அக்₃னிகளில் ஐந்து வித₄மான ஹவிஸ்ஸுக்களாக ஹோமம் செய்யப்படுவதாக " இதி து பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ ப₄வந்தி " [சா₂ந் 5-9-1] [இவ்வண்ணமாக நீர் முதலான பூ₄தஸூக்ஷ்மங்கள் ஐந்தாவதான ஆஹுதியில் ' புருஷன் ' என்னும் பெயருடையவையாகின்றன.] என்பதீருகவுள்ள வாக்யங்களில் ஓதப்பட்டது. இவ்வாக்யங்களிலிருந்து — சேதனமாய், விகாரமற்ற ஆத்மாவைக் காட்டிலும் வேறுபட்ட அசேதனமாய், விகாரமுடைய பூ₄தங்களான ஶரீரத்திற்கே இம்மாறுபாடுகள் நிகழ்கின்றன, ஆத்மா அந்த ஶரீரத்தோடு சேர்ந்திருக்குமித்தனையொழிய விகாரமடைவதில்லை என விளங்குகிறது. இந்த ஶரீரச்சேர்த்தியும் புண்யபாபகர்மத்தால் ஏற்படுவது என்று. " தத்₃ய இஹ ரமணீயசரணா :...ரமணீயாம் யோநிம் ஆபத்₃யேரந்... அத₂ ய இஹ கபூயசரணா :...கபூயாம் யோநிம் ஆபத்₃யேரந் " [சா₂ந் 5-10-7] [திரும்பி வருபவர்களில் பக்வமான புண்யகர்மம் மிகுதியுள்ளவர்கள் ப்₃ராஹ்மணர், க்ஷத்ரியர் முதலான சிறந்த பிறப்புக்களில் ஒன்றை அடைகிருர்கள். பக்வமான பாபகர்மம் மிகுதியுள்ளவர்கள் நாய், பன்றி முதலான தாழ்ந்த பிறப்புக்களில் ஒன்றை அடைகிருர்கள்.] என்னும் வாக்யம் காட்டுகிறது; இப்படி ஶரீரத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக ஆத்மாவைக் காட்டி, " தத்₃ய இத்த₂ம் வித்₃ஃ" என்று யச்ச₂ப்₃த₃த்தோடு கூடிய

संभवन्ति * इमं मानवमावर्तं नावर्तन्ते इति विविक्ते चिदचिद्वस्तुनी त्याज्यतया प्राप्यतया च ये इत्थं विदुस्तेऽर्चिरादिना गच्छन्ति, न च पुनरावर्तन्त इत्युक्तमिति गम्यते। आत्मयाथात्म्यविदः परम-

---

வாக்யப் பகுதியாலே அந்த ஜீவாத்மாவை உபாஸிப்பவனை எடுத்து, "யே சேமேऽரண்யே ஶ்ரத்3தா4 தப இத்யுபாஸதே" என்று மற்றொரு யச்ச2ப்3த3த்தோடும் சகாரத்தோடும் கூடிய வாக்யப்பகுதியாலே பரமாத்மோபாஸகனைக் கூட்டுகையாலே "தத்3ய இத்த2ம் விது3:" என்னும் வாக்யப்பகுதியாலே ஜீவோபாஸகனே எடுக்கப் படுகிறான் என்பது தெளிவு. "இத்த2ம் விது3:" [இப்படி உபாஸிக்கிறார்கள்] என்கையால், இந்தப் பஞ்சாக்3நிவித்3யாப்ரகரணத்தில் ஓதியபடி அசித்தை த்யாஜ்யமாகவும் (கைவிடத்தக்கதாகவும்), சித்தை ப்ராப்யமாகவும் (கைக்கொள்ளத்தக்கதாகவும்) இவர்கள் உபாஸிக்கிறார்கள் என்கையாலே இவனும் ஒருவகையான ஆத்மோபாஸகனே என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது. இப்படி இரண்டு யச்ச2ப்3த3ங்களாலே இருவரையும் எடுத்து, "தேऽர்ச்சிஷமபி4ஸம்ப4வந்தி" என்று ஓதுகையால், இருவர்க்கும் அர்ச்சிராதி3கதி3யுண்டு என்பதும், "ஏதேந ப்ரதிபத்3யமாநா இமம் மாநவமாவர்த்தம் நாவர்த்தந்தே" [சா2ந் 4-15-6] [இவ்வர்ச்சிராதி3கதி3யால் வந்தவர்கள் இந்த ஸம்ஸாரமண்ட3லத்திற்குத் திரும்பமாட்டார்கள்] என்று ஓதுகையால் இருவர்க்கும் புநராவ்ருத்தியில்லை என்பதும் தேறுகிறது.

இனி—"தத்3ய இத்த2ம் விது3:" என்று கூறப்படுமவன் ஆத்மோபாஸகனேயாகில், இவன், சா2ந்தோ3க்யம் ஏழாவது ப்ரபாட2கத்தில் அசேதநப்பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டதாய் ப்ராணஶப்3த3த்தால் சொல்லப்பட்ட தன் ஆத்மாவை உபாஸிக்கும் கேவலாத்மோபாஸகனோ? அல்லது வேறுபட்டவனோ? என்னும் கேள்வி எழுகிறது. பஞ்சாக்3நிவித்3யாப்ரகரணத்தை ஆராய்ந்தால், இவன் கேவலாத்மோபாஸகனல்லன் என்றும், ப்3ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பவனே இவன் என்றும் விளங்கும். எப்படியெனில்: "தத் புருஷோऽமாநவ: ஸ ஏநாந் ப்3ரஹ்ம க3மயதி" [சா2ந் 4-15-6] [அந்த அமாநவபுருஷன் இவர்களை ப்3ரஹ்மத்தை அடைவிக்கிறான்.] என்று அர்ச்சிராதி3க3தியால் சென்ற ஆத்மயாதா2த்ம்யவித்தான பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னுக்கும், பரமபுருஷநிஷ்ட2னுக்கும் ப்3ரஹ்மப்ராப்தி இப்ரகரணத்தில் ப2லனாகச் சொல்லப்பட்டுள்ளது. அதனால் இவ்விருவர்க்கும் அசித்தினின்றும்

पुरुषनिष्ठस्य च * स एनान् ब्रह्म गमयतीति ब्रह्मप्राप्तिवचनादर्चिरादि-युक्तमात्मवस्तु ब्रह्मात्मकतया ब्रह्मशेषतैकरसमित्यनुसन्धेयम्; तत्क्रतु-न्यायाच्च। परशेषतैकरसत्वं च * य आत्मनि तिष्ठन्...यस्यात्मा शरीरम् (शत. माध्य. १४. ६. ५. ३०) इत्यादिश्रुतिसिद्धम्॥

விடுபட்ட ஆத்மஸ்வரூபம்—ப்₃ரஹ்மாத்மகமாகவும் (ப்₃ரஹ்மத்தை அந்தர்யாமியாகக் கொண்டதாகவும்), ப்₃ரஹ்மத்திற்கு அடிமைப் பட்டிருப்பதையே இயல்வாகக் கொண்டதாகவும் உபாஸிக்கத்தக்கது என விளங்குகிறது. "உபாஸனத்தின்படியே ப₂லன் ஏற்படும்" என்னும் தத்க்ரது ந்யாயத்தைக்கொண்டு பார்க்கும்போதும் ப்₃ரஹ்மத்தை அடையும் இவன் ப்₃ரஹ்மத்தை உபாஸித்திருக்கவேண்டும் என்று ஸித்₃தி₄க்கும். ஆகையால், இப்பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் ஏழாவது ப்ரபாட₂கத்தில் சொல்லப்பட்ட கேவலாத்மோபாஸகனல்லன், ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பவனே என்று தேறுகிறது. ஆத்மாவானது ப்₃ரஹ்மத்திற்கு அடிமைப்பட்டிருக்கையையே இயல்வாகக்கொண்டது என்பது — "ய ஆத்மநி திஷ்ட₂ந் ஆத்மனோऽந்தர:...யஸ்யாத்மா ஶரீரம்" [ஶதபத₂ - மாத்₄யந்தி₃ந 14-6-5-30] [எவன் ஆத்மாவில் நிற்கிறானோ, ஆத்மாவினுள்ளிருக்கிறானோ, எவனுக்கு ஆத்மா ஶரீரமோ] "பதிம் விஶ்வஸ்ய" [தை-நா-11]' [உலகனைத்துக்கும் தலைவன் நாரணனே] "கரணாதி₄பாதி₄ப:" [ஶ்வே 6-9] [இந்திரியங்களை நியமிக்கும் ஜீவனுக்குத் தலைவன்] முதலான நூற்றுக்கணக்கான வேத₃வாக்யங்களிலிருந்து ஸித்₃தி₄க்கிறது. இவ்வுண்மையை அநுஸந்தி₄த்து உபாஸிக்கும் ஆத்மயாதா₂த்ம்யவித்தான பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன், ஏழாவது ப்ரபாட₂கத்தில் கேவலாத்மாவை உபாஸிப்பவனாகக் காட்டப்பட்ட அதி₄காரியைக்காட்டிலும் வேறுபட்டவன் என்றும், அவனுக்கில்லாத அர்ச்சிராதி₃கதியும் ப்₃ரஹ்மாநுப₄வமும் இவனுக்கு உண்டு என்றும் பஞ்சாக்₃நிவித்₃யாப்ரகரணத்திலிருந்தே இவ்வண்ணமாக விளங்குகிறது.

இவ்விடத்தில் — ப்₃ருஹதா₃ரண்யகத்தில் அர்ச்சிராதி₃க₃தியைச் சொல்லிவருகையில், "புருஷோ மாநஸ ஏத்ய ப்₃ரஹ்மலோகாந் க₃மயதி" [ப்₃ருஹ 8-2-15] [(பரமாத்மாவால்) மனஸ்ஸினால் (ஸங்கல்பத்தால்) ஸ்ருஷ்டிக்கப்பட்ட (அமானவ) புருஷன் வந்து, அவர்களை ப்₃ரஹ்மலோகங்களை அடைவிக்கிறான்.] என்று ப்₃ரஹ்மலோகப்ராப்தியே சொல்லப்பட்டிருப்பது, கைவல்யநிஷ்ட₂னை பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுக்கு ப்₃ரஹ்மலோகப்ராப்தியுண்டேயொழிய

ப்3ரஹ்மப்ராப்தியில்லை என்னும் கருத்தினாலேயே என விளங்குகிறதே; "ப்3ரஹ்ம க3மயதி" என்றதும் இதற்கு அநுகு3ணமாக ப்3ரஹ்மலோக ப்ராப்தியைச் சொல்லுவது என்று கொண்டுவிடலாமே— என்னும் வாத3ம் ஸ்ரீபா4ஷ்யாதி3களுக்குப் பொருந்தாது என்று அறியத்தக்கது. "யத்து 'ப்3ரஹ்மலோகாந்' இதி லோகஶப்3த3ப3ஹுவசநாப்4யாம் கார்யபூ4தஹிரண்யக3ர்ப்ப4ப்ரதீதிரிதி — தத்3 அயுக்தம்! நிஷாத3ஸ்த2பதி ந்யாயேந 'ப்3ரஹ்மைவ லோகோ ப்3ரஹ்மலோக:' இதி கர்மதா4ரயஸ்யைவ யுக்தத்வாத்! அர்த்த2ஸ்ய ச ஏகத்வே நிஶ்சிதே, ப3ஹுவசநஸ்ய 'அதி3தி: பாஶாந்' [பூர்வமீமாம்ஸா 9-3-5] இதிவது3பபத்தே:!!" [4-3-11 ஸ்ரீபா4ஷ்யம்] ['ப்3ரஹ்மலோகாந்' என்று ப்3ரஹ்மஶப்3த3த்தோடு லோகஶப்3த3த்தைச் சேர்த்துப் படித்துப் பன்மையும் இட்டிருப்பதால், இங்கு ஜீவனை ஹிரண்யக3ர்ப்ப4லோகப்ராப்தி சொல்லப்படுகிறதேயொழிய, ஸர்வவ்யாபியான ப்3ரஹ்மத்தையடைவது சொல்லப்படவில்லை என்னும் பூர்வபக்ஷம் தவறு; பூர்வமீமாம்ஸையிற்கூறிய நிஷாத3ஸ்த2பதி ந்யாயத்தால், 'ப்3ரஹ்மத்தின் லோகம் — ப்3ரஹ்மலோகம்' என்று தத்புருஷமாகக் கொள்வதைக் காட்டிலும் 'ப்3ரஹ்மமாகிற லோகம்— ப்3ரஹ்மலோகம்' என்று கர்மதா4ரயமாகக் கொள்வதே பொருந்துமாகையால். ப்3ரஹ்மம் ஒன்றைப் பற்றியே இங்கு சொல்லப்படுகிறது என நிஶ்சயிக்கப்பட்டவளவில், 'ப்3ரஹ்மலோகாந்' என்ற பன்மையும், பூர்வமீமாம்ஸையில் (9-3-5) உள்ள "அதி3தி: பாஶாந்" என்னும் வழக்கைப்போலே ஒருமையாகக் கொள்ளத்தக்கது.] என்று கார்யாதி4கரண ஸ்ரீபா4ஷ்யத்தில் ஸ்ரீபா4ஷ்யகாரர் "ப்3ரஹ்ம லோகாந் க3மயதி" என்றதை "ப்3ரஹ்ம க3மயதி" என்றதற்கு அநுகு3ணமாக நயநம் செய்தருளியிருக்கிறார். மேலும், இவ்வதி4கரண ஸ்ரீபா4ஷ்யத்திலும் (8-23, 24) அவதாரிகா கீ3தாபா4ஷ்யத்திலும், ஶ்ருதியையும், தத்க்ரது ந்யாயத்தையுங்கொண்டு, பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னுக்கு ப்3ரஹ்மப்ராப்தி ஓதப்பட்டிருப்பதையிட்டு ப்3ரஹ்மோபாஸநத்தை ஸாதி4த்திருப்பதால், இவன் ப்3ரஹ்மத்தை ப்ராப்யமாகவேகொண்டு உபாஸிக்கிறான் என்றும், ப்3ரஹ்மாநுப4வம் இவனுக்கு ப்ராப்யமாகிறது என்றும் தெளிவாக விளங்குகிறது. ஆகையால், இவன் கைவல்ய நிஷ்ட2னல்லன் என்பது வயிரவுருக்காயிற்று. இனி, சில நூற்றுண்டுகளாக இக்கைவல்ய விஷயமாக ஸ்ரீவைஷ்ணவர்களிடையே— குறிப்பாகத் தென்னாசார்ய ஸம்ப்ரதா3யஸ்த2ர்களிடையே — ஏற்பட்டிருக்கும் பலவித4மான குழப்பங்களை நீக்கித் தெளிவு ஏற்படுத்துவதற்காக "கைவல்ய ஸித்3தா4ஞ்ஜநம்" என்னும் கட்டுரையை அடுத்தபடியாக அச்சிடுகிறோம்.

கைவல்ய ஸித்3தா4ஞ்ஜநம்

ந வாத3ாத் நாபி ஸங்க4ர்ஷாத் நாதி4க்யாத் ந ச காமத: ।
வக்ஷ்யாமி வசநம் ப்ராஜ்ஞா: யதா2ர்த்த2ம் கு3ருகௌ3ரவாத்॥

[அறிவாளிகளே ! வாத2ம் செய்யவேண்டும் என்னும் ஆசையாலோ, (பிறர்மீது) பொருமையாலோ, (பிறரைக் காட்டிலும்) பெருமை பெறவேண்டுமென்ருே, மனம்போனபடியோ அடியேன் இங்குள்ள வார்த்தைகளை எழுதவில்லை; ஆழ்வார்கள் ஆசார்யர்களிடமுள்ள கௌ3ரவபு3த்3தி4யாலேயே உண்மையான வார்த்தைகளை இங்கு எழுதுகிறேன்.]

1. எம்பெருமானுக்கு நித்யவிபூ4தி, லீலாவிபூ4தி (ஸம்ஸாரம்) என இரண்டு விபூ4திகள் (செல்வங்கள்) உண்டு. இரண்டுமே அநாதி3காலமாய் இருந்து வருபவை. மேல்வரும் அநந்த காலத்திலும் இருக்கப்போகின்றவை. நித்யவிபூ4தி ஶுத்3த4ஸத்வமயமானது. இதில் என்றும் ஸம்ஸார ஸம்ப3ந்த4மேயில்லாத நித்யர்கள் என்றும், ஒரு காலத்தில் ஸம்ஸாரஸம்ப3ந்த4ம் பெற்றிருந்து அதிலிருந்து விடுபட்ட முக்தர்கள் என்றும் இருவகைப்பட்ட ஜீவர்கள் வாழ்கிருர்கள். ஒவ்வொரு வகையினரும் கணக்கற்றவர்கள். நித்யவிபூ4தி—மேலேயும் பக்கங்களிலேயும் எல்லையற்றதாகவும், கீழே லீலாவிபூ4தியை எல்லையாகக் கொண்டதாகவும் உள்ளது. லீலாவிபூ4தி—கீழேயும் பக்கங்களிலேயும் எல்லையற்றதாகவும், மேலே நித்யவிபூ4தியை எல்லையாகக் கொண்டதாகவும் உள்ளது.

2. மூலப்ரக்ருதியும், அதன் விகாரங்களும் அடங்கியதாய், ஸத்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணமயமானதான லீலாவிபூ4தியில் கணக்கற்ற ஜீவர்கள் ப்ரக்ருதியிலிருந்து தோன்றிய ஶரீரங்களில் அநாதி3காலமாகக் கட்டுண்டு கிடக்கையாலே ப3த்3த4ர்கள் எனப்படுகிருர்கள். நித்யமுக்தர்களுக்கும், இந்த ப3த்3த4ர்களுக்கும் ஸ்வரூபத்தில் வாசியில்லை. ஒவ்வொரு ஜீவாத்மாவின் ஸ்வரூபமும் இயற்கையில் அணுவாய், ஜ்ஞாநாநந்த3ஸ்வரூபமாய், எல்லையற்ற ஞானத்தை த4ர்மமாகக் கொண்டதாயிருப்பது. நித்யமுக்தர்களுக்கு ப்ரக்ருதி ஸம்ப3ந்த4மில்லாமையால் ஜ்ஞாநாநந்த3ஸ்வரூபமும் எப்போதும் பிரகாஶிக்கிறது; ஞானமும் ஸர்வவ்யாபியாயுள்ளது. ப3த்3த4ர்களுக்கு அந்த ஸம்ப3ந்த4மிருக்கையால் ஜ்ஞாநாநந்த3 ஸ்வரூபமும் தெளிவாகப் பிரகாஶிப்பதில்லை; ஞானமும் மிகச்சுருங்கி

யிருக்கிறது. நித்யவிபூ₄தியில் நித்யமுக்தர்களை அநுப₄வித்து போ₄க₃ ரஸம் கொண்டாடும் (இன்புறும்) எம்பெருமான், லீலாவிபூ₄தியில் ப₃த்₃த₄ர்களை ஒவ்வொரு ஶரீரத்தோடு படைத்து, அளித்து, அழித்து, முக்தியளித்து லீலாரஸம் கொண்டாடுவதற்காகவே இப்படிக் கணக்கற்ற ஜீவர்களை ப்ரக்ருதியால் அநாதி₃காலமாகக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறுன் என்று ஶாஸ்த்ரங்கள் முழங்குகின்றன.

3. இப்படி ப₃த்₃த₄ஜீவர்களைக்கொண்டு லீலாரஸம் அநுப₄விக்கும்போது, தனக்குக் குற்றங்கள் வாராமலிருப்பதற்காக, இந்த ஜீவர்கள் முற்பிறவிகளில் செய்த கர்மங்களுக்கு அநுகு₃ணமாகவே இவர்களுக்கு இவ்வுலகப் ப₂லன்களை அளிப்பது என்னும் நியமத்தை வைத்துக்கொண்டிருக்கிறுன் எம்பெருமான். ஜீவன் ஒவ்வொரு கர்மத்தைப் புரியும்போதும், முதன்முதலில் ஒரு ப்ராக்ருத விஷயத்தைப்பற்றி ஜ்ஞாநம், இச்சை₂ அல்லது த்₃வேஷம், ப்ரயத்நம் அல்லது நிவ்ருத்தி ஏற்படுகிறது. அப்போது இவர்களுக்குப் பரிபூர்ணமான ஸ்வாதந்த்ர்யத்தை அநாதி₃காலமாக அளித்திருக்கிறுகையால், பிறகு அக்கர்மாநுகு₃ணமாகப் ப₂லனளிக்கும்போது எம்பெருமானுக்கு வைஷம்யம் (பக்ஷபாதம்) நைர்க்₄ருண்யம் (கருணையின்மை) எனும் தோ₃ஷங்கள் ஏற்படுவதில்லை. இவ்விஷயம் ப்₃ரஹ்மஸூத்ரத்தில் (2-3-6) பராயத்தாதி₄கரணத்திலும், அதன் ஸ்ரீபா₄ஷ்யம் முதலானவற்றிலும் விளக்கப்பட்டுள்ளது.

4. இப்படி ப₃த்₃த₄ஜீவனை அநாதி₃காலமாக ஸ்வாதந்த்ர்ய பு₃த்₃தி₄யுள்ளவனுகவே அமைத்து, அவன் பள்ளமடையாக ஈடுபடும் ஶப்₃த₃ாதி₃விஷயங்களோடு அவனைப் பழகவிட்டு, அதுகாரணமாக சங்கிலித் தொடர்போலே வரும் அஜ்ஞாநம், கர்மம், வாஸனை, ருசி, ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄ம் முதலியவற்றில் உழலுமவனுக்கி லீலாரஸம் அநுப₄வித்தபோதிலும், இந்த ப₃த்₃த₄ஜீவனும், நித்யனையும் முக்தனையும்போலே தனக்குப் பின்னையாகவும், ரக்ஷ்யமாகவும், ஶேஷமாகவும், பா₄ர்யையாகவும், உடைமையாகவும், த₄ரிக்கப்படுபவனுகவும், ஶரீரமாகவும், தன்னை அறியவேண்டியவனுகவுமிருக்கையாலே, இவனுக்கு மோக்ஷமருளி, இவனை நித்யமுக்தர்களைப் போலே தான் பெற்று அநுப₄விக்க விரும்பி, அதற்காக ஸ்ருஷ்டி, ஸ்தி₂தி, ஸம்ஹாரம், ஶாஸ்த்ரப்ரதா₃நம், அவதாரம் முதலான பெருமுயற்சிகளைச் செய்பவனுகவுமிருக்கிறுன் எம்பெருமான் என்று ஶாஸ்த்ரங்கள் முழங்குகின்றன.

5. இப்படி ஸர்வேஶ்வரன் முயற்சிசெய்யும்போது, தனக்கு வைஷம்யநைர்க்₄ருண்யங்கள் ஏற்படாமைக்கும், ஶாஸ்த்ரங்களில்

உள்ள விதி₄நிஷேத₄ங்கள் வீணாகாமைக்கும் — சேதநனுக்குத் தான் அளித்திருக்கும் ஸ்வாதந்த்ர்ய பு₄த்₃தி₄யாலே ஒவ்வொரு ப்ராக்ருத விஷயங்களில் அவனுக்கு ஏற்படும் ஜ்ஞாந இச்சா₂ த்₃வேஷங்களாகிற ப்ரதிபத்தியையும், அதற்கு அநுகு₃ணமாக ப்ராக்ருத விஷயங்களைப் பெறுவதற்கோ, விலக்குவதற்கோ செய்யும் முதல் ப்ரவ்ருத்திகளும், நிவ்ருத்திகளுமாகிற புண்யபாபங்களையும், அல்லது 'ப்ராக்ருதமல்லாத தன் ஶுத்₃த₄ாத்மஸ்வரூபத்தையோ, பரமாத்மாவையோ பெற்று அநுப₄விக்கையாகிற இருவகை மோக்ஷங்களில் ஒன்றைப்பெற்று அநுப₄விக்கவேணும்' என்னும் ப்ரதிபத்தியையும், அதற்கு அநுகு₃ணமாக ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்ட ஸாத₄நாநுஷ்டா₂நங்களில் முதல் முயற்சியையும் எதிர்பார்த்தே எம்பெருமான் முயற்சி செய்கிறான் என்னும் விஷயம் — " வைஷம்யநைர்க்₄ருண்யே ந ஸாபேக்ஷத்வாத் தத₂ா ஹி த₃ர்ஶயதி " [ப்₃ரஹ்மஸூத்ரம் 2-1-34] [(தே₃வாதி₃ ஜீவர்களுடைய கர்மத்தை) எதிர்பார்த்தே விஷம (ஏற்றத் தாழ்வுள்ள) ஸ்ருஷ்டியைச் செய்வதால், அந்த ஸ்ருஷ்டியினால் ஈஶ்வரனுக்கு வைஷம்யம் என்னும் பக்ஷபாதமும், நைர்க்₄ருண்யம் எனும் கருணையின்மையும் ஏற்படமாட்டாது. ஶ்ருதியும் இவ்விஷயத்தைக் காட்டுகிறதன்றோ.] " க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹித ப்ரதிஷித்₃த₄ாவையர்த்₂யாதி₃ப்₄ய : " [ப்₃ரஹ்மஸூத்ரம் 2-3-41] [(எல்லாச் செயல்களிலும்) ஜீவனால் செய்யப்பட்ட (முதல்) முயற்சியை எதிர்பார்த்தே (பரமாத்மா அம்முயற்சியை அநுமதித்து அக்காரியத்தைச் செய்விக்கிறான்.) (இப்படிக் கொண்டால்தான் ப்ராக்ருத ப₂லன்களைக் குறித்தும், மோக்ஷத்தைக் குறித்தும் ஶாஸ்த்ரங்களில் உள்ள) விதி₄நிஷேத₄ங்கள் வீணாகாமலிருக்குமாகையால்] என்னும் ப்₃ரஹ்மஸூத்ரங்களில் தெளிவாக்கப்பட்டது.

6. ப்ராக்ருத விஷயங்களில் ஏற்படும் ப்ரதிபத்திகளைக் கொண்டு சேதனன் மனம்போனபடி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைச் செய்து ஆத்மநாஶத்தை அடைந்துவிடக்கூடாதென்னும் பரமகருணையாலேயே எம்பெருமான் அந்தந்த ப்ரதிபத்திகளையே பற்றாசாகக் கொண்டு இவனை நல்வழிப்படுத்துவதற்காக அந்தந்த ப்ரதிபத்திகளுக்கு அநுகு₃ணமான விதி₄நிஷேத₄ங்களை ஶாஸ்த்ரங்களில் செய்து வைத்திருக்கிறான் என்பது நம் ஆசார்யர்கள் கண்ட முடிவாகும். இம்முறையில் ஶாஸ்த்ர விஶ்வாஸமின்மையாகிற நாஸ்திக ப்ரதிபத்தியுள்ளவனை ஆஸ்திக ப்ரதிபத்தியுள்ளவனாக்குவதற்காக, அவன் விரும்பும் ஶத்ருவிநாஶத்தை எளிதில் ஸாதி₄ப்பதற்கு வேத₃த்தில் ஶ்யேநயாக₃த்தை விதி₄த்திருக்கிறான். ஆஸ்திக ப்ரதிபத்தி ஏற்பட்ட

பின்பும் தே3ஹாத்மாபி4மாந ப்ரதிபத்தியோடிருக்கும் ஒருவனுக்கு, 'தே3ஹத்தைக் காட்டிலும் வேறுபட்டது ஆத்மா' என்னும் ப்ரதிபத்தியை ஏற்படுத்துவதற்காக — பணம், பசு, மழை முதலான த்3ருஷ்ட (கண்காணும்) ப2லன்கள் பலவற்றை ஸாதி4த்துத் தரும் யாக3ங்களை விதி4த்து, அவற்றின் ப2லன் பெற்று ஜீவனுக்கு வேத3த்தில் நம்பிக்கை ஏற்பட்ட பின்பு, ''ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்க3காமோ யஜேத'' [ஸ்வர்க்க3த்தை விரும்புகிறவன் ஜ்யோதிஷ்டோம யாக3த்தைச் செய்யக்கடவன்] என்று இந்த தே3ஹத்தை விட்டுச் சென்று அடையும் ஸ்வர்க்க3ஸாத4னத்தை விதி4க்கிறான். இப்படி ஸ்வர்க்க3த்தையடைந்து, அதனிலும் சிறந்த சிவலோகம், சதுர்முக2லோகம் முதலானவற்றையும் அடைந்தவனுக்கு முன்பிருந்த தே3ஹமே ஆத்மா என்னும் ப்ரதிபத்தி நீங்கி, 'தே3ஹத்தைக்காட்டிலும் வேறுபட்டது ஆத்மா' என்னும் ப்ரதிபத்தி உறுதியாகிறது. அடுத்த படியாக, அல்பாஸ்தி2ரமான இப்ப2லன்களில் ப்ரதிபத்தியை மாற்றி, 'அநந்த ஸ்தி2ரப2லமான மோக்ஷத்தைப் பெற்று இன்புறவேணும்' என்னும் ப்ரதிபத்தியை விளைப்பதற்காகவே கேவலாத்மப்ராப்தி ஸாத4னங்களும், ப4க3வத் ப்ராப்திஸாத4னங்களும் எம்பெருமானால் ஶாஸ்த்ரங்களில் விதி4க்கப்பட்டிருக்கின்றன. இவற்றிலிருந்து தாழ்ந்த விஷயத்தை விரும்புகையாகிற தாழ்ந்த ப்ரதிபத்தியுடனிருக்கும் ஒருவனுடைய ப்ரதிபத்தியை உயர்த்துவதற்கு அநுகு3ணமாகவே அந்தந்த விஷயங்களுக்கு ஸாத4னங்களை எம்பெருமான் விதி4த்திருக்கிறான் என விளங்குகிறது. அந்த ஸாத4நஸ்வரூபங்களை ஆராய்ந்தாலும் இது தெளிவாகிறது. ஶ்யேநயாக3த்திலுள்ள கடுமையான நியமங்களும், அந்த யாக3த்தைக்கொண்டு ஶத்ருவைக் கொன்றவனுக்கு நரகாநுப4வம் ஏற்படும் என்று காட்டி, அதைத் தவிர்ப்பதற்குக் கடுமையான ப்ராயஶ்சித்தங்களை விதி4த்திருப்பதும்— இவனுடைய நாஸ்திகபு3த்3தி4 காரணமாக ஏற்பட்ட க்ரூரப்ரதிபத்தி தொலைந்து ஆஸ்திக ப்ரதிபத்தி ஏற்படவே என்று தெளிவாக விளங்குகிறது. இதே ரீதியில், வேத3த்தில் ஒவ்வொரு ப்ராக்ருத ப2லனுக்காக எம்பெருமானால் விதி4க்கப்பட்டிருக்கும் ஸாத4னங்களும், மோக்ஷார்த்த2மாக விதி4க்கப்பட்டிருக்கும் ஸாத4னங்களும் — இவனுடைய ஸ்வார்த்த2தா ப்ரதிபத்தியை (சுயநல மனப்பான்மையை) படிப்படியாகக் குறைத்து, கடைசியில் இவனை ஸ்வார்த்த2தாலேஶ க3ந்த4மும் இல்லாத பரார்த்த2ப்ரதிபத்தியே வடிவெடுத்த ஞானியாக்கி, இவனுக்கு நிர்ஹேதுகமாகப் பரார்த்தா2நுப4வ கைங்கர்ய ரூபமான பரமமோக்ஷமருளி, இவனைப்பெற்றுத் தான் அநுப4விக்க

எம்பெருமான் இட்டிருக்கும் ஸஹேதுகப்படிக்கட்டுகளே என்று விவேகிகள் உய்த்துணரலாம். இவ்விஷயத்தையே — "ஸுக்ருத கு₃ரீயஸ்த்வேந ப்ரதிபத்திவைஶேஷ்யாத் உத்தரோத்தரம் அதி₄க தமா:" [7-16] "ஸுக்ருததாரதம்யேந ச ப்ரதிபத்திவைஶேஷ்யாத்" [8-ம் அத்தியாய அவதாரிகை] என்ற இரண்டு இடங்களிலும் புண்யம் மிகுதியாவதால் உபாஸகனுடைய ப்ரதிபத்தி சிறப்படைகிறது என்று கூறுவதன்மூலம் பா₄ஷ்யகாரர் உணர்த்தியருளினர்.

7. நம் த₃ர்ஶனத்தில் உண்மைப் பொருள்கள் கணக்கற்றவையானாலும் அசித், சித், ஈஶ்வரன் என்று அவை மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதுபோலவே, புருஷார்த்த₂ங்களும் கணக்கற்றவையாகிலும், அசித₃நுப₄வமாகிற ஐஶ்வர்யம் என்றும், அசித்தினின்றும் நீங்கிய ஆத்மமாத்ராநுப₄வமாகிற கைவல்யம் என்றும், ஈஶ்வராநுப₄வமாகிற பரமமோக்ஷம் என்றும் மூன்றுவகையாகக்காட்டப் பட்டுள்ளன. இவற்றில் அசித₃நுப₄வமாகிற ஐஶ்வர்யாநுப₄வத்தில்—தே₃ஹத்தோடு சேர்ந்த தன் ஆத்மா, பெண்டு பிள்ளைகள், உற்றார் உறவினர் முதலான அசித்தோடு கலந்த ஆத்மாக்களைப் பற்றிய ஆத்மாநுப₄வங்களும் கலந்தேயிருந்தாலும், ப்ராதா₄ந்யத்தைப்பற்ற அது அசித₃நுப₄வம் எனப்படுகிறது. அவ்வண்ணமே ஈஶ்வராநுப₄வத்தில் சித₃சித்துக்களின் அநுப₄வம் ஈஶ்வரனுடைய விபூ₄திகள் (செல்வங்கள்) என்னும் ஆகாரத்தில் கலந்திருந்தபோதிலும், ப்ராதா₄ந்யத்தைப் பற்ற அது ஈஶ்வராநுப₄வம் எனப்படுகிறது. சித்தின் அநுப₄வமாகிற கைவல்யமோவெனில், அசித்தின் அநுப₄வமோ, ஈஶ்வரனின் அநுப₄வமோ அடியோடு இல்லாததாயிருக்கையாலேயே கைவல்யாநுப₄வம் என்றும், கேவலாத்மாநுப₄வம் என்றும் நமது பூர்வாசார்யர்களால் அழைக்கப்பட்டது. ஸூக்ஷ்மஶரீரமும் கழிந்தபின்பே அசித்தின் அநுப₄வத்தோடு கலசாத இக்கேவலாத்மாநுப₄வம் ஏற்படமுடியுமாகையாலேயே, விரஜாதரணத்தின்மூலம் ஸூக்ஷ்மஶரீரம் கழிந்தபின்பு நித்யவிபூ₄தியில் ஏற்படும் மோக்ஷாநுப₄வமே இது என்று கைவல்யஶப்₃த₃த்திலிருந்தே விளங்குகிறது. ஶாஸ்த்ரங்களிலும், நிக₄ண்டுக்களிலும் கைவல்யஶப்₃த₃ம் மோக்ஷத்தைக்குறித்தே பிரயோகி₃க்கப்பட்டிருப்பதும் இதை வலியுறுத்துகிறது. ப₄க₃வத₃நுப₄வலேஶமுமற்ற ஆத்மமாத்ராநுப₄வமே கைவல்யம் எனப் படுகிறதாகையாலே, ப₄க₃வத₃நுப₄வத்தை உடையவனாக எம்பெருமானாரால் ஸ்ரீ பா₄ஷ்ய கீ₃தாபா₄ஷ்யங்களிலும், முதலியாண்டானால் "கண்கள் சிவந்து" பாசுரங்களிலும் காட்டப்பெற்ற பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னாயிருக்கமுடியாது என்பதும்

கைவல்யஸப்₃த₃த்தை ஆராய்ந்தாலே விளங்கும். இவ்விரு விஷயங்களையும் ஶ்ருதிஸ்ம்ருதி வசனங்களையும், ஆழ்வார்கள், ஆசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளையும், அவற்றுக்கு அநுகு₃ணமான யுக்திகளையும் காட்டி நிரூபிக்கிறோம் இனி.

1. ஶ்ருதி ஸ்வாரஸ்யம்

8. சா₂ந்தோ₃க்₃ய உபநிஷத்தில் மூன்று ப்ரகரணங்களில் ஆத்ம த₃ர்ஶநம் கூறப்படுகிறது.(1)ஐந்தாவது ப்ரபாட₂கத்திலுள்ள பஞ்சாக்₃நி வித்₃யாப்ரகரணம் முதலாவது. (2) ஏழாவது ப்ரபாட₂கத்திலுள்ள ப்ராணனெனப்படும் ஜீவனின்உபாஸநத்தைச் சொல்லும் ப்ரகரணம் இரண்டாவது. (3) எட்டாவது ப்ரபாட₂கத்தில் உள்ள த₃ஹரவித்₃யா ப்ரகரணத்தில்,ஏழாவது க₂ண்ட₂ந்தொடங்கிப் படி₂க்கப்படும் ப்ரஜாபதி வாக்யம் மூன்றாவது. இவற்றில் மூன்றாவது ப்ரகரணத்தில் உள்ள ஆத்மத₃ர்ஶனம் பரமாத்மோபாஸனத்திற்கு அங்க₃மானது என்று கீ₃தை மூன்றும் அத்தியாயத்தின் அவதாரிகாபா₄ஷ்யத்திலும், கீ₃தை (8-23, 24) அவதாரிகாபா₄ஷ்யத்திலும் தெளிவாக விளக்கப்பட்டது. முதல் ப்ரகரணமான ஐந்தாவது ப்ரபாட₂கத்தில் பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னுக்கு " ஸ ஏநாந் ப்₃ரஹ்ம க₃மயதி " என்று ப்₃ரஹ்மாநுப₄வம் ப₂லமாகச் சொல்லப்பட்டிருக்கையாலே, இவன் ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பவன் என்று கார்யாதி₄கரண [4-3-5] ஸ்ரீபா₄ஷ்யத்திலும், கீதை (8-23, 24) அவதாரிகாபா₄ஷ்யத்திலும் நிருபித்து, " உபாஸித்தபடியேதான் ப₂லன் கிடைக்கும் " என்னும் தத்க்ரதுந்யாயத்தைக்கொண்டும் பா₄ஷ்யகாரர் இதைநிலைநாட்டியருளுகையாலே இவன் கேவலாத்மாநுப₄வத்தை ப்ராப்யமாகக் கொண்ட கேவலாத்மோபாஸகனாகமுடியாது. [இவ்விஷயம் நமது கீ₃தா (8-வது அத்தியாயம்) வ்யாக்₂யானத்தில் 265-280 பக்கங்களில் அசைக்கமுடியாதபடி ஸ்தா₂பிக்கப்பட்டிருக்கிறது.] இனி, இரண்டாவது ப்ரகரணமான ஏழாவது ப்ரபாட₂கத்தில் படி₂க்கப்படும் ஆத்ம த₃ர்ஶநம் எத்தகையது என்று ஊன்றிப் பார்க்கவேண்டும். அதில் முதல் க₂ண்ட₃த்திலிருந்து தொடங்கிப் பதினாலாவது க₂ண்ட₃மீறாக முறையே (1) நாம (2) வாக் (3) மனம் (4) ஸங்கல்பம் (5) சித்தம் (6) த்₄யாநம் (7) விஜ்ஞாநம் (8) ப₃லம் (9) அந்நம் (10) அப்புக்கள்(நீர்) (11) தேஜஸ்(தீ) (12) ஆகாஶம் (13) ஸ்மரம் (நினைத்தல்) (14) ஆசை (ப₂லத்தில் விருப்பம்) என்னும் பதினாலு அசேதனப்பொருள்களிடத்திலும் ப்₃ரஹ்மம் என்னும் பு₃த்₃தி₄யை ஏறிட்டு உபாஸிக்கும்படி கூறி, அந்தந்த உபாஸனங்களுக்குப் படிப்படியாக மேலான இவ்வுலகப்ப₂லன்கள் பயனாகக்

கூறப்பட்டன. அடுத்ததான பதினைந்தாவது க₂ண்ட₃த்தில் அசேதனப்பொருள்களைக் காட்டிலும் உயர்ந்த ப்ராணன் என்று படி₂க்கப்படும் ஜீவனைப்பற்றிய உபாஸனம் ஓதப்படுகிறது. அதில் இரண்டாவது மூன்றாவது மந்திரங்களில் ''ப்ராணன் உள்ளிருக்கும் போது பிதா, மாதா முதலானோரைக் கடுமையாகப் பேசினாலே, அவனைக் குறித்து, 'பித்ருஹத்தி செய்தவன், மாத்ருஹத்தி செய்தவன்' முதலான அபவாத₃ங்களை உலகம் கூறுகிறது. அதே பிதா, மாதா முதலானோருடைய ஶரீரங்களிலிருந்து ப்ராணன் வெளிக்கிளம்பியபின், அந்த தே₃ஹத்தை ஶூலத்தில் ஏற்றுவதாலோ, எரிப்பதாலோ கூடப் பித்ருஹத்தி மாத்ருஹத்தி முதலான தோ₃ஷங்கள் ஏற்படுவதில்லை'' என்கையால் இங்கு ப்ராணன் எனப்படுவது தே₃ஹத்தைக்காட்டிலும் வேறுபட்ட ஜீவன் என உணர்த்தப்பட்டது. அதனாலேயே பூ₄மாதி₄ கரணத்தில் '' பூ₄மா ஸம்ப்ரஸாத₃ாத₃தி₄. உபதே₃ஶாத் '' [1-3-7] என்று ப்ராணன் எனப்படுபவன் ஸம்ப்ரஸாத₃ன் எனப்படும் ஜீவனே என்று ஸூத்ரகாரரும், ''ப்ரத்யக₃ாத்மந ஊர்த்₄வம் உபதே₃ஶாத்'' என்று அவன் ப்ரத்யக₃ாத்மாவே என அங்கு உரையிட்ட வ்ருத்தி காரரான போ₃தா₄யனரும் தெளிவாக உரைத்தனர். அந்தப் பதினைந்தாவது க₂ண்ட₃த்தில் நாலாவது மந்திரத்தில் ''ஸ வா ஏஷ ஏவம் பஶ்யந் ஏவம் மந்வாந ஏவம் விஜாநந் அதிவாதீ₃ ப₄வதி'' [இந்த ப்ரத்யக₃ாத்மாவை இவ்வண்ணமாக மனனம்செய்து, உபாஸநம் செய்து, நேரே காண்பவன் அதிவாதி₃யாகிறான்.] என்று இந்த ப்ரகரணத்தில் படி₂க்கப்பட்ட ஆத்மோபாஸகனுக்கு அதிவாதி₃த்வம் ஓதப்பட்டு, ''தஞ்சேத் ப்₃ரூயு: அதிவாத்₃யஸீதி, அதிவாத்₃யஸ்மீதி ப்₃ருயாத் ந அபஹ்நுவீத'' [அவனை 'நீ அதிவாதி₃யாயிருக்கிறாய்' என்று அறிவாளிகள் கூறினால், 'ஆம்; அதிவாதி₃யாயிருக்கிறேன்' என்று கூறவேண்டுமேயொழிய அதை மறைக்கலாகாது] என்று வலியுறுத்தவும்பட்டது. அடுத்ததான பதினாறாவது க₂ண்ட₃த்தின் தொடக்கத்தில் ''ஏஷ து வா அதிவத₃தி யஸ் ஸத்யேந அதிவத₃தி'' [எவன் ஸத்யம் எனப்படும் பரமாத்மாவைக்கொண்டு அதிவாத₃ம் செய்கிறானோ, அவனே உண்மையான அதிவாதி₃யாகிறான்] என்று ஓதப்பட்டது. இதிலிருந்து — பரமாத்மாநுப₄வரூபமான மோக்ஷமாகிற மிகவுயர்ந்த ப₂லனைப் பெற உபாஸிப்பவனே 'அதிவாதீ₃' எனத்தக்கவன் என்றும், பதினைந்தாவது க₂ண்ட₃த்தில் அசேதனப் பொருள்களைக் காட்டிலும் வேறுபட்ட ஜீவஸ்வரூபத்தை அநுப₄விப்பதற்காக உபாஸிப்பவன் பெறும் ப₂லனான ஜீவாநுப₄வம் தாழ்ந்ததாயிருப்பதை யிட்டு அவன் ப்₃ரஹ்மோபாஸகனைவிடத் தாழ்ந்தவனாகிறான் என்

றும், ஆனாலும் அவன் பெறும் ப2லனும் முன் சொல்லப்பட்ட அசிதுபாஸநப2லன்களைக் காட்டிலும் வேறுபட்ட மோக்ஷமாயிருப்ப தால் அவற்றை உபாஸிப்பவர்களுக்கு இல்லாததாய், பரமாத்மோ பாஸகனுக்கு உள்ள அதிவாதித்வம் இவனுக்கும் ஒரு வகையில் உண்டு என்றும் விளங்குகிறது ஆக, சா2ந்தோ3க்3ய உபநிஷத்தில் ஏழாவது ப்ரபாட2கத்தில் படி2க்கப்படும் கேவலஜீவோபாஸகன் பெறும் ப2லனாகிற கேவலாத்மாநுப4வம் முக்தியே என இதிலிருந்து விளங்குகிறது. பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னே கைவல்யநிஷ்ட2ன் என்று கொள்வார்க்கு, ஶ்ருதி ஸூத்ர பா4ஷ்யங்களில் அவனுக்கு ப்3ரஹ்மாநுப4வத்தைக் கூறியிருப்பது ஒட்டாது. 'கைவல்யம் முக்தியல்ல' என்பார்க்கு இங்கு கேவலாத்மோபாஸகனை அதிவாதி3 யாகப் படி2த்து வலியுறுத்தியிருப்பது ஒட்டாது.

9. நாராயணோபநிஷத்தில் அத2ர்வஶிரஸ்ஸில், "அகார உகார மகார இதி, தாநேகதா4 ஸமப4ரத் ததே3ததோ3மிதி । யமுக்த்வா முச்யதே யோகீ3 ஜந்மஸம்ஸாரப3ந்த4நாத் ॥" [அகாரம், உகாரம், மகாரம் என்னும் (மூன்று வேத3ங்களின் ஸாரமான) மூன்று எழுத்துக்களை ப்ரஜாபதி ஒன்று கூட்டினார். அதுவே 'ஓங்காரம்' ஆயிற்று. இதை உச்சரித்து உபாஸிப்பவன் ஜந்மஸம்ஸாரக்கட்டி லிருந்து விடுபடுகிறான்.] என்று ஓங்காரமாத்ரோபாஸகனுக்கு ஜந்ம ஸம்ஸாரக் கட்டிலிருந்து விடுதலையை மாத்திரம் கூறி, அடுத்தபடி யாக, "ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோபாஸக: வைகுண்ட2 பு4வந(லோக)ம் க3மிஷ்யதி" ["ஓம் நமோ நாராயணாய" என்னும் திருவஷ்டாக்ஷர மந்திரத்தைக்கொண்டு உபாஸிப்பவன் வைகுண்ட2 லோகத்தையே அடைகிறான்.] என்று ஓங்காரத்தை, மாத்திரங் கொண்டு உபாஸிப்பது என்னும் வரம்பில்லாமல் அதற்கு விவரண மான நம:ஶப்3த3த்தால் தன் ஆத்மாவில் நசை கழியப்பெற்று, நாராயணாய ஶப்3த3த்தால் ப4க3வத்3 கு3ணங்களிலும் கைங்கர்யத்தி லும் ப்ராப்யத்வபு3த்3தி4 ஏற்பட்டு திருவஷ்டாக்ஷரம் முழுவதையுங் கொண்டு உபாஸிப்பவன் வைகுண்ட2லோகத்தை அடைகிறான் என்று கூறியிருப்பதிலிருந்து, முதல் வாக்யம் ஜராமரண மோக்ஷமடையும் கைவல்யநிஷ்ட2னைப் பற்றியதென்றும், அவனடையும் ப2லனும் மோக்ஷமே என்றும், ஆனால் திருவஷ்டாக்ஷரம் முழுவதையுங்கொண்டு உபாஸிக்கும் பரமாத்மோபாஸகனுக்குக் கிடைக்கும் வைகுண்ட2 லோகப்ராப்தி அவனுக்கு இல்லை என்றும் விளங்குகிறது. [இதன் விரிவு கீ3தை (8-12, 13)] வ்யாக்2யானத்தில் (பக்கம் 203-223) காணத்தக்கது.]

10. “ஶதம் சைகா ச ஹ்ருத3யஸ்ய நாட்3யஸ் தாஸாம் மூர்த்4தா4நமபி4நிஸ்ஸ்ருதைகா । தயோர்த்4வமாயந் அம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே ப4வந்தி ॥” [சா2ந் 8-6-6] [ஹ்ருத3யத்தி லிருந்து நூற்றொரு நாடிகள் செல்கின்றன. அவற்றில் தலையை நோக்கிச் செல்வது (ஸுஷும்நா எனும்) ஒரு நாடி. அதன் வழி யாகச் செல்பவனே மோக்ஷமடைகிறான். மற்ற நாடிகள் வழியாகச் செல்பவர்கள் மற்ற ஸாம்ஸாரிகப2லன்களை அடைகிறார்கள்] என்று உபநிஷத்3வாக்யம் ஓதுகிறது. “மூர்த்4ந்யாதா4யாத்மந: ப்ராணம்” [கீ3தை 2-12] [தனது ப்ராண வாயுவைத் தனது தலையிலிருக்கும் ஸுஷும்நா நாடிவழியில் பிரவேசிக்கச்செய்து.] என்று கீ3தையில் அந்திமகாலத்தில் இக்கைவல்யநிஷ்ட2னுக்குத் தலையிலிருக்கும் ஸுஷும்நா நாடிவழியாக உத்க்ரமணத்தைக் கூறுகையாலும் இவன் மோக்ஷப2லனையடைபவனேயொழிய ஸாம்ஸாரிக ப2லனை யடைபவனல்லன் என விளங்குகிறது.

2. கீ3தா தத்3பா4ஷ்ய ஸ்வாரஸ்யம்

11. இனி, கீ3தோபநிஷத் என்று உபநிஷத்தாகச் சொல்லப் படுவதாலும், “ஸர்வோபநிஷதோ3 கா3வ:... து3க்3த4ம் கீ3தாம்ருதம் மஹத்” [எல்லா உபனிஷத்துக்களுமே பசுக்களாகும் ...மிகச்சிறந்த கீ3தையாகிற அமுதமே பாலாகும்.] என்று உபநிஷத் ஸாரமாகக் கூறப்படுவதாலும், கீ3தையிலேயே பலவிடங்களில் கேவலாத்மாநு ப4வமாகிற கைவல்யத்தைப் பற்றி விரிவாகப் பேசப்பட்டிருப்ப தாலும், ஶ்ருதி ஸ்வாரஸ்யத்திற்கு அடுத்தபடி கீ3தாஸ்வாரஸ்யம் விளக்கப்படுகிறது. எம்பெருமானிடமிருந்து அவிச்சி2ந்நமாக (இடை யறாது) வந்த கு3ருபரம்பரைமூலம் கீ3தையின்பொருளை அறிந்த எம்பெருமானாரின் பா4ஷ்யமே கீ3தையின் பொருளைக்காட்டும் கோல விளக்காயிருக்கையால், அந்த பா4ஷ்யஸ்வாரஸ்யமும் ஆங்காங்கு சுருக்கமாகக் காட்டப்படுகிறது. விரிவு வேண்டுவோர் அந்தந்த ஶ்லோகங்களில் நமது வியாக்கியானத்தைக் காணலாம்.

12. “யஸ்த்வாத்மரதி:” [3-17, 18] என்று தொடங்கும் இரு ஶ்லோகங்களிலும் “ஆத்மாவையே தா4ரக போஷக போ4க்3ய மாகக் கொண்டவனாய், ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மாவைக் கண்டு அனுப4விப்பவனுக்கு எந்த ஸாத4நமும் அநுஷ்டி2க்கவேண்டிய தில்லை ; ஒரு கர்மத்தைச் செய்து அவன் பயன்பெறவேண்டியதோ,

ஒரு கர்மம் செய்யாததினால் அவன் பெற்றிருக்கும் ஆத்மப்ராப்தியை இழப்பதோ இல்லை '' என்று கூறுவதிலிருந்து ஆத்மப்ராப்தியாகிற கைவல்யத்தைப் பெற்றவன் முக்தனே என விளங்குகிறது. '' அஸாத₄நாயத்தாத்மத₃ர்ஶநஸ்ய முக்தஸ்யைவ '' [ஆத்மத₃ர்ஶனத்தை ஸாத₄நாநுஷ்டா₂னத்தாலே ஸாதி₄க்கவேண்டிய அவஶ்யமில்லாதபடி ஏற்கனவே அவ்வாத்மத₃ர்ஶனம் கைவரப்பெற்ற முக்தனானவனுக்கே] என்று இந்த ஶ்லோகங்களின் அவதாரிகாபா₄ஷ்யத்திலும், '' ஸ ஹி முக்த ஏவ '' [அவன் முக்தனேயன்றோ] என்று இந்த ஶ்லோகங்களின் பா₄ஷ்யத்திலும் மிகத் தெளிவாக பா₄ஷ்யகாரர் அருளியிருப்பதும் இவன் ப்ரக்ருதிப₃ந்த₄த்திலிருந்து முக்தியடைந்தவனே என்பதை வலியுறுத்துகிறது.

13. கைவல்ய நிஷ்டா₂னின் ப₂லனைச் சொல்லும். '' யுஞ்ஜந்நேவம் '' [6-15] என்னும் ஶ்லோகத்தில் '' ஶாந்திம் நிர்வாண பரமாம் மத்ஸம்ஸ்தா₂மதி₄க₃ச்ச₂தி '' [6-15] [என்னிடமிருப்பதாய், ஶரீரமோக்ஷத்தின் எல்லை நிலமாயிருப்பதான (ஷடூ₃ர்மி அல்லது ஷட்₃பா₄வவிகார) ஶாந்தியை அடைகிறான்.] என்று ஶரீரமோக்ஷத்தின் எல்லையான ஷடூ₃ர்மி ஶாந்தியையும், ஷட்₃பா₄வவிகாரஶாந்தியையும் அடைகிறான் என்கையாலே, இவனுக்கு ஸூக்ஷ்மஶரீரமும் கழிந்து, இவன் ப்ரக்ருதிப₃ந்த₄த்திலிருந்து விடுதலை பெறுகிறான் என்று விளங்குகிறது. '' நிர்வாணபரமாம் '' என்றதற்கு ப₃ஹுவ்ரீஹி ஸமாஸம் கொள்ளாமல் தத்புருஷஸமாஸங்கொண்டு, பரமஶப்₃த₃த்திற்கு 'தனக்கு மேலில்லாத' என்று பொருள்கொள்ளாமல், '' காஷ்டா₂ரூபாம் '' [எல்லையாயிருப்பது] என்று இங்கு பா₄ஷ்யகாரர் பொருளுரைப்பதன்மூலம் இவனுக்கு என்றும் ப₄க₃வத₃நுப₄வமில்லையென்றும், இவன் அடையும் இன்பம் தனக்குமேல் இல்லாததன்று என்றும் உணர்த்தினார். இதன்மூலம்—ப்ரக்ருதிப₃ந்த₄த்திலிருந்து விடுதலையடைவதையிட்டு மோக்ஷம் என்றே இக்கைவல்யம் குறிக்கப்பட்டாலும், பரமனுக்கே ஆட்செய்கையான பரமமோக்ஷத்தைக் காட்டிலும் மிகத் தாழ்ந்ததாகையால் இது அவர (தாழ்ந்த) மோக்ஷமே என்பதையும் காட்டினார்.

14. ஆத்மப்ராப்தியின் பொருட்டுச் செய்யப்படும் யோக₃த்தின் நியமங்களைச் சொல்லும் (6-16, 17) ஶ்லோகங்களில் '' யோகோ₃ ப₄வதி து₃:க்க₂ஹா '' [6-17] [எல்லாத் துன்பங்களையும் போக்கும் யோக₃ம் கைகூடும்.] என்னும் ஶ்லோகப்பகுதியிலிருந்தும், ''ஸகல து₃:க்க₂ஹா - ப₃ந்த₄நாஶநோ யோக₃: ஸம்பந்நோ ப₄வதி'' [எல்லாத்

துன்பங்களையும் போக்கும், (அதாவது—) ஸம்ஸாரப₃ந்த₄த்தை அழிக்கும் யோக₃ம் உண்டாகிறது] என்னும் ப₄ாஷ்யத்திலிருந்தும் இவனுக்கு ஸம்ஸாரத்துன்பங்களிலிருந்து விடுதலை கிடைக்கிறதே யொழிய, பரமாத்மாநுப₄வமாகிற பேரின்பம் இல்லை என உணர்த் தப்படுகிறது. இதுவும் இது தாழ்ந்த மோக்ஷம் எனக் காட்டுகிறது.

15. கைவல்யநிஷ்டனின் ப₂லனைக் கூறும் "ப்ரஶாந்தமநஸம்" [6-27] எனும் ஶ்லோகத்தில், "அகல்மஷம்"என்று இவனுக்கு எல்லாப் பாபங்களும் கழிந்துவிடுகின்றன என்றும், "ஶாந்தரஜஸம்" என்று ரஜோகு₃ணம் அழிந்து விடுவதாகக் கூறுகையாலே இவனுக்கு ஸூக்ஷ்மஶரீரமும் இல்லை என்றும், "ப்₃ரஹ்மபூ₄தம்" என்கையாலே இவனுக்கு ஞானத்திலிருந்த சுருக்கம் நீங்கி, ஞானம் எங்கும் வியாபித்திருக்கும் பெருமையைப் பெற்றுவிடுகிறான் என்றும் கூறுகையாலே, இவன் நித்யவிபூ₄தியிலிருக்கும் முக்தர்களில் ஒரு வகைப்பட்டவனே என்றும் விளங்குகிறது. இந்த ஶ்லோகத்திலேயே "உத்தமம் ஸுக₂ம் உபைதி" என்ற பகுதிக்கு, "ஆத்மஸ்வரூபாநுப₄வரூபம் உத்தமம் ஸுக₂ம் உபைதி" [ஆத்மஸ்வரூபத்தை அநுப₄விப்பதாகிற சிறந்த ஸுக₂த்தை அடைகிறான்] என்று ப₄ாஷ்யமிடுவதன் மூலம், இப்படி இவன் நித்யவிபூ₄தியிலுள்ள முக்தனேயானாலும், உத்தம ஸுக₂மான ஆத்மாநுப₄வ ஸுக₂ம் உண்டேயொழிய உத்தமோத்தம ஸுக₂மான ப₄க₃வத₃நுப₄வஸுக₂ம் கிடையாது என்று காட்டினார் ப₄ாஷ்யகாரர்.

16. "ஏவம் யுஞ்ஜந்" [6-28] என்று தொடங்கும் அடுத்த ஶ்லோகத்திலும், "விக₃தகல்மஷ:" என்ற பத₃த்திற்கு "விக₃த ப்ராசீந ஸமஸ்த கல்மஷ:" [அநாதி₃கர்மங்கள் அனைத்தும் தொலையப் பெற்றவன்] என்று ப₄ாஷ்யமிடுவதன்மூலம் இவனுக்கு அநாதி₃ கர்மங்கள் எல்லாமே தொலைந்து விடுகின்றன என்று காட்டி, "அத்யந்தம் ஸுக₂ம் ஸத₃ா அஶ்நுதே" [ப்₃ரஹ்மமெனப்படும் ஆத்மாவின் அநுப₄வரூபமான எல்லையற்ற இன்பத்தை எப்போதும் அடைகிறான்] என்று அந்வயம் கொள்வதன்மூலம் இவன் மோக்ஷத்தில் ஆத்மாநுப₄வத்தையே எப்போதும் அடைகிறான் என்று ப₄ாஷ்யகாரர் காட்டினார்.

17. "ஸர்வபூ₄தஸ்தி₂தம்" [6-31] என்று தொடங்கும் ஶ்லோகத்தில், "ஏகத்வமாஸ்தி₂த:" என்ற பகுதிக்கு, "அஸங்குசித ஜ்ஞாநைகாகாரதயா ஏகத்வம் ஆஸ்தி₂த:" [முக்திநிலையில் என்னைப்போலே தானும் ஞானச்சுருக்கமற்றவனாயிருக்கப் போவ

தாகிற ஒற்றுமையை அநுஸந்தி4ப்பதன்மூலம் காண்கிறான்.] என்றும், "மயி வர்த்ததே" என்ற பகுதிக்கு "மாமேவ பஶ்யதி—ஸ்வாத்மநி ஸர்வபூ4தேஷு ச ஸர்வதா3 மத்ஸாம்யமேவ பஶ்யதி" [என்னையே காண்கிறான்; அதாவது — தன்னிடமும், எல்லா ஜீவராஶிகளிடமும் எப்போதும் என்னோடு முற்கூறிய ஸாம்யத்தையே காண்கிறான்] என்றும் பா4ஷ்யமிடுவதன்மூலம் ஞானச்சுருக்கமற்றிருக்கையையிட்டுப் பரமாத்மாவோடு ஸாம்யத்தை அநுஸந்தி4ப்பவனாக ஆத்மயோகி3யைக் காட்டுகையாலே, இவன் பெறும் ப2லனும் ஞானச்சுருக்கமற்றிருக்கும் முக்திநிலையே என்றும், உபாஸநத3ஶையில் ப4க3வத்3கு3ணாநுஸந்தா4நமின்மையால், பரமாத்மயோகி3க்குக் கிடைக்கும் ப4க3வத்3கு3ணாநுப4வம் இவனுக்கு இல்லை என்றும் உணர்த்தினார்.

18 "ஜிஜ்ஞாஸுரபி யோக3ஸ்ய ஶப்3த3ப்3ரஹ்ம அதிவர்த்ததே" [6-44] [யோக3த்தை அறிந்து அநுஷ்டி2க்க விரும்புகிறவனும், (அதில் நின்றும் நழுவிய பின்பும் யோக3மாஹாத்ம்யத்தாலே அந்த யோக3ம் தலைக்கட்டப்பெற்று) ஶப்3த3ப்3ரஹ்மம் எனப்படும் ப்ரக்ருதியைத் தாண்டிவிடுகிறான்.] என்னும் ஶ்லோகத்தில், ஆத்மாவை அடைபவன் ப்ரக்ருதியைத் தாண்டிவிடுகிறான் என்று தெளிவாகச் சொல்லப்பட்டது. இந்த ஶ்லோகபா4ஷ்யத்தில் "ஶப்3த3ப்3ரஹ்ம—தே3வமநுஷ்யப்ருதி2வ்யந்தரிக்ஷ ஸ்வர்க்கா3தி3 ஶப்3தா3பி4லாப யோக்3யம் ப்3ரஹ்ம-ப்ரக்ருதி: | ப்ரக்ருதி ப3ந்தா4த்3விமுக்தோ தே3வமநுஷ்யாதி3 ஶப்3தா3பி4லாபாநர்ஹம் ஜ்ஞாநாநந்தை3கதாநம் ஆத்மாநம் ப்ராப்நோதீத்யர்த்த2:||" [ஶப்3த3ப்3ரஹ்மத்தை - தே3வர், மனிதர், பூ4மி, அந்தரிக்ஷம், ஸ்வர்க்க3ம் முதலான ஶப்3த3ங்களினால் சொல்லத்தக்கதாய், 'ப்3ரஹ்ம' எனப்படுவது ப்ரக்ருதி; ப்ரக்ருதியாகிற கட்டிலிருந்து விடுபட்டு, தே3வர் மனிதர் முதலான ஶப்3த3ங்களால் சொல்லத்தகாதவனாய், அறிவுக்கும் ஆநந்த3த்திற்கும் ஒரே இருப்பிடமானவனான ஆத்மாவை அடைகிறான்] என்று பா4ஷ்யகாரர் அருளியிருப்பதிலிருந்து — ஆத்மாவை அடையும் கைவல்யநிஷ்ட2ன் ப்ரக்ருதிமண்ட3லத்தைத் தாண்டிச்சென்றே ஆத்மாநுப4வத்தைப் பெறுகிறான் என்று மிகத் தெளிவாக விளங்குகிறது.

19. "'யோகி3நாமபி ஸர்வேஷாம்'" [6-47] என்று பரமாத்மயோகி3யைப்பற்றி ப்ரஸ்தாவிக்கும் ஶ்லோகத்தின் பா4ஷ்யத்தில் "'யோகி3நாம்'" என்பது நிர்த்தா4ரணே ஷஷ்டி2யன்று; ஐந்தாவது வேற்றுமைப்பொருளில் ஆறாவது வேற்றுமை பிரயோகி3க்கப்பட்டிருக்

கிறதாகையால் ''ஸர்வேப்₄ய: அபி யோகி₃ப்₄ய'' [முற்கூறிய எல்லா யோகி₃களைக்காட்டிலும்] என்றே பொருள்கொள்ளவேண்டும் என்று ப₄ாஷ்யகாரர் நிர்ணயிக்கையால், 13 முதல் 17 வரையில் உள்ள பாராக்களில், எல்லாக் கர்மங்களும் கழியப்பெற்று, ஸ்தூ₂லஸூக்ஷ்ம ஶரீரம் கழியப்பெற்று, ப்ரக்ருதிமண்ட₃லத்தைத் தாண்டிவந்து, ஞான விகாஸமும் பெற்றவனாகக் கூறப்பட்டவன் இங்கு ப்ரஸ்தாவிக்கப்படும் பரமாத்மயோகி₃யைக் காட்டிலும் தாழ்ந்த ஜீவாத்மயோகி₃யே என்று விளங்குகிறது. இதிலிருந்தும் பரமாத்மயோகி₃யடையும் பரமாத்மாநு ப₄வத்தை முற்கூறிய ஜீவாத்மயோகி₃ அடைவதில்லை என உணர்த்தப் படுகிறது. ஏழாம் அத்தியாயத்தில் இது தெளிவாகவே காட்டப் பட்டிருப்பதைக் காண்போம் இனி.

20. (1) ஆர்த்தன், (2) அர்த்தா₂ர்த்தீ₂, (3) ஜிஜ்ஞாஸு, (4) ஜ்ஞாநி என்னும் நாலுவகைப்பட்ட ப₄க₃வது₃பாஸகர்களைக் காட்டும் (7-16) ஶ்லோகத்தில், இவர்களுக்கு லக்ஷணம் சொல்லும் போது '' ஜிஜ்ஞாஸு: - ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபாவாப்தீச்சு₂: '' [ஜிஜ்ஞாஸு எனப்படுபவன் - ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்ம ஸ்வரூபத்தைப் பெறவிரும்புகிறவன்] என்று ப₄ாஷ்யகாரர் அருளிச் செய்கையால், இவன் ப்ரக்ருதியிலிருந்து நீங்கிய தன் ஆத்மஸ்வரூ பத்தை அநுப₄விக்க விரும்புகிறவனேயொழிய, ஆர்த்தன் என்றும் அர்த்தா₂ர்த்தி₂ என்றும் கூறப்பட்டவர்களைப் போலே ஸம்ஸார மண்ட₃லத்தினுள் அசித்தை அல்லது அதோடு கலந்த ஆத்மாவை அநுப₄விப்பதாகிற ஐஸ்வர்யாநுப₄வத்தைப் பெறுபவனல்லன் என்று விளங்குகிறது. ''ப்ரக்ருதிவியுக்தகேவலாத்மநி அபர்யவஸ்யந் ப₄க₃வந் தம் ப்ரேப்ஸு:'' [(முற்கூறியவனைப்போலே) கேவலாத்மாவிலேயே முடிந்துவிடாமல், பரமபுருஷனை அடையவிரும்புகிறவன்] என்று ஞானியைப்பற்றிக் கூறியிருக்கையாலே, ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்ய நிஷ்ட₂ன் ப₄க₃வானை அடைய விரும்பாமல் கேவலாத்மாவிலேயே முடிவடைந்துவிடுகிறான் என்று தெளிவாக விளங்குகிறது. பர்யவஸாந ஶப்₃த₃ம் அதையே முடிந்த ப₂லனாகக்கொள்வதைக் காட்டுமேயொழிய, நடுவில் இளைப்பாறுவதைக் காட்டாது என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். அடுத்த ஶ்லோகத்திலும் இது மிகத்தெளிவாக வலியுறுத்தப்படுவதைக் காணலாம். [22-வது பாரா காண்க.]

21. அந்தப் பதினாறும் ஶ்லோகத்திலேயே ''ப₄க₃வச்சே₂ஷதை கரஸாத்மஸ்வரூபவித்'' [ப₄க₃வானுக்கு அடிமைப்பட்டிருப்பதையே இயல்வாகக்கொண்ட ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவன்] என்று

ஞானிக்கு லக்ஷணமுரைத்திருப்பது குறிக்கொண்டு காணத்தக்கது. "ப₄க₃வந்நிஷ்ட₂: " என்று லக்ஷணமுரைத்தால் பரமேஷைதைகரஸமான ஆத்மாவை (ப்ராப்யமாகக்கொண்டு) உபாஸிக்கும் பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂ன் ஞானியாகாமல் போய்விடக்கூடும் என்று திருவுள்ளம் பற்றியே, (7-23,24) அவதாரிகாபா₄ஷ்யத்தில் அர்ச்சிராதி₃க₃தியும் ப₄க₃வத₃நுப₄வமும் உள்ளவர்களாகக் காட்டப்பெற்ற பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னை ஆத்மயாதா₂த்ம்யவித்தும், பரமபுருஷநிஷ்ட₂னை ப₄க₃வது₃பாஸகனுமாகிற இருவர்க்கும் பொருந்தும்படி "பரமேஷைதைகரஸாத்மஸ்வருபவித்" என்று ஞானிலக்ஷணமுரைத்திருக்கிறார் பா₄ஷ்யகாரர் என்று தெளிவாக விளங்குகிறது. ஆகையால், பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னைக் கைவல்யநிஷ்ட₂னாகக்கொள்வது பா₄ஷ்யகாரர் திருவுள்ளத்திற்குச் சிறிதும் பொருந்தாது என விளங்கும். கீ₃தாவ்யாக்₂யானம் (2-மஷ்டகம்) 265-280 பக்கங்களில் இது விரிவாக நிலைநாட்டப்பட்டது. மேல் வரும் பல பாராக்களிலும் இதை அசைக்க முடியாதபடி நிரூபிப்போம். "உப₄யேऽபி ஹி பரிபூர்ணம் ப்₃ரஹ்மோபாஸதே முக₂பே₄தே₃ந" [வேதா₃ந்தஸாரம் 4-3-24] [பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னும் பரமபுருஷோபாஸகனுமாகிற இருவருமே ஒவ்வொரு வகையில் பரிபூர்ணமான ப்₃ரஹ்மத்தையே (ப்ராப்யமாக) உபாஸிக்கிறார்கள்] என்று வேதா₃ந்தஸாரத்தில் ஸ்ரீபா₄ஷ்யகாரர் அருளியிருக்கையால், இங்கு "ப₄க₃வந்தம் ப்ரேப்ஸு:; ப₄க₃வந்தமேவ பரமப்ராப்யம் மந்வாந:" [ப₄க₃வானை அடைய விரும்புகிறவன்; ப₄க₃வானையே பரமப்ராப்யமாக நினைப்பவன்] என்று ஜ்ஞாநி லக்ஷணத்தை விவரித்திருப்பதும் மிகப்பொருந்திவிடுகிறது.

22. (7-17) ஶ்லோகத்தில் ஐஶ்வர்ய கைவல்யார்த்தி₂களைக் காட்டிலும் ஞானிக்கு "நித்யயுக்த:. ஏகப₄க்தி:" என்று இரு சிறப்புகள் கூறப்பட்டுள்ளன. இவற்றில் 'நித்யயுக்த:' [எப்போதும் சேர்ந்திருப்பவன்] என்னும் பத₃த்தை விவரிக்கும்போது "ஜ்ஞாநிநோ ஹி மதே₃கப்ராப்யஸ்ய மயா யோகோ₃ நித்ய: ; இதரயோஸ்து யாவத்ஸ்வாபி₄லஷிதப்ராப்தி மயா யோக₃:" [என்னையே ப்ராப்யமாகக்கொண்ட ஞானிக்கு என்னோடு சேர்த்தி நித்யமானதாகும். ஐஶ்வர்யகைவல்யார்த்தி₂களுக்கோவெனில் தங்கள் விருப்பத்தை அடையும் வரையிலுமே என்னோடு சேர்த்தி] என்று அருளுவதன்மூலம் ஐஶ்வர்யார்த்தி₂க்குப்போலே கைவல்யார்த்தி₂க்கும் பரமன் ப்ராப்யனல்லன் என உணர்த்தினர் பா₄ஷ்யகாரர். மது₄வித்₃யா நிஷ்ட₂னுக்குப்போல் கைவல்யநிஷ்ட₂னுக்குக் கைவல்யத்தை அநுப₄வித்தபின் பரமபுருஷன் ப்ராப்யமாவதாக பா₄ஷ்யகாரர் திருவுள்ளம்

பற்றியிருந்தால் இப்படி அருளியிருக்க இடமில்லை என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். " ஏகப₄க்தி: " என்ற பதத்தை விவரிக்கும்போது, "தத₃ா ஜ்ஞாநிநோ மய்யேகஸ்மிந்நேவ ப₄க்தி:; இதரயோஸ்து ஸ்வாபி₄லஷிதே தத்ஸாத₄நத்வேந மயி ச" [அவ்வண்ணமே ஜ்ஞாநிக்கு என்னொருவனிடமே அன்பு; ஐச்வர்யகைவல்யார்த்தி₂களுக்குத் தாம் விரும்பும் ஐச்வர்யகைவல்யங்களிலேயே ப்ராப்யமாக அன்புள்ளது; என்னிடம் அதற்கு ஸாத₄நமாகவே அன்புள்ளது] என்று அருளியிருப்பதிலிருந்து ஐச்வர்யார்த்தி₂யைப்போலே கைவல்யார்த்தி₂யும் தான்விரும்பும் கைவல்யத்திற்கு ஸாத₄நமாகவே எம்பெருமானிடம் அன்புகொள்கிறானேயொழிய, எம்பெருமானை ஸ்வயம் போ₄க்₃யமாகக்கொள்வதில்லை எனத் தெளிவாக விளங்குகிறது. மது₄வித்₃யாநிஷ்டனுக்கு வஸுபத₃த்திற்போலே ப்₃ரஹ்மத்திடமும் போ₄க்₃யதாபு₃த்₃தி₄யுள்ளது. முதலில் வஸுபத₃த்தையும் பிறகு ப்₃ரஹ்மத்தையும் அடைய ஆசைப்படுபவன் அவன். அதுபோல் ஜிஜ்ஞாஸு முதலில் கைவல்யத்தையும், பிறகு பரமபுருஷனையும் அடைய ஆசைப்படுபவனுயிருந்தால், 'அவனுக்குத் தான் விரும்பிய கைவல்யத்திலேயே அன்பு; அதற்கு ஸாத₄நமாகவே என்னிடம் அன்புவைக்கிறான்'' என்று பா₄ஷ்யகாரர் அருளியிருப்பாரா என்பதை நடுநிலையாளர் சிந்திக்கவேண்டும்.

23. (7-18) பா₄ஷ்யத்தில் ஐச்வர்யகைவல்யார்த்தி₂களைக் குறித்து " யே மத்தோ யத்கிஞ்சித₃பி க்₃ருஹ்ணந்தி " [எவர்கள் என்னிடம் ஏதோவொன்றைப் பெறுகிறார்களோ] என அருளியுள்ளார். மது₄வித்₃யாநிஷ்டனுக்குப்போலே ஜிஜ்ஞாஸுவுக்கும் கைவல்யம் அவாந்தரப்ராப்யமாகவும், ப₄க₃வத₃நுப₄வம் பரமப்ராப்யமாகவுமிருந்தால் அவனைக்குறித்து, "ஏதோவொன்றைப் பெறுபவன்" என்று பா₄ஷ்யகாரர் அருளியிருக்கமுடியுமா என்பதையும் நடுநிலையாளர்கள் சிந்திக்கவேண்டும்.

24. (7-16) ச்லோகத்தில், அசித₃நுப₄வமாகிற ஐச்வர்யாநுப₄வத்தை விரும்புகிறவன் 'ஆர்த்தன்' என்றும் 'அர்த்தா₂ர்த்தி₂' என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டான். ஈச்வராநுப₄வத்தை விரும்புகிறவன் 'ஜ்ஞாநி' எனப்பட்டான். எஞ்சிநிற்கும் கேவலாத்மாநுப₄வமாகிற கைவல்யத்தை விரும்புகிறவனே 'ஜிஜ்ஞாஸு' எனப்படவேண்டும்; அப்படியல்லாமல் கைவல்யத்தை அவாந்தரப₂லனாகவும் ப்₃ரஹ்மாநுப₄வத்தை முக்₂யப₂லனாகவும் விரும்புமவனாக ஓர் அதி₄காரியைக் கல்பித்து, அவனை ஜிஜ்ஞாஸுபத₃த்திற்குப் பொருளாகக் கொள்வது ஏழு எட்டு அத்தியாயங்களிலுள்ள கீ₃தாப்ரகரணங்களுக்கு

அடியோடு பொருந்தாது. உண்மையில் அப்படி ஓர் அதி₄காரி ஸித்₃தி₄த்தாலும், ப்₃ரஹ்மாநுப₄வத்தைப் பரமப₂லனுகக்கொண்ட அவனை ஜ்ஞாநிகோடியில் சேர்க்கவேண்டுமேயொழிய ஜ்ஞாநியைக் காட்டிலும் தனித்து நிற்கும் அதி₄காரியாகக்கொள்ள இயலாது. 'கைவல்யம் அவாந்தரப₂லமாகையாலே தனி அதி₄காரியாகக்கொள்கிறோம்' எனில்; அப்படியானால் ப்₃ரஹ்மாநுப₄வம் பரமப₂லனுயினும், ஸ்வர்கா₃தி₃ப்ராப்தியை அவாந்தரப₂லனுகக்கொண்ட மது₄வித்₃யா நிஷ்ட₂னையும் இங்கு ஓர் தனி அதி₄காரியாகக் குறித்திருக்க வேண்டும். அப்படிக் குறிக்கவில்லையாகையால், ஜிஜ்ஞாஸுவும் கைவல்யமொன்றையே ப₂லமாகக் கொண்டவனுகவேண்டுமே யொழிய, அதை அவாந்தர ப₂லமாகக் கொண்டவனுக முடியாது. இவ்விஷயம் பற்பல கீ₃தாஶ்லோகங்களிலும், அங்கங்கு பா₄ஷ்யங் களிலும் தெளிவாகக் காட்டப்படுவதை முன்னமே காட்டினேம். மேலேயும் காட்டுவோம்.

25. ''எல்லாக் கர்மங்களும் கழிந்தபின், முக்தியில் ப₂லபே₄த₃ம் கொள்வதற்குக் காரணம் எதுவும் இல்லையாகையாலும், எல்லாக் கர்மங்களும் கழிந்தாலும் ஜிஜ்ஞாஸுவிற்குக் கைவல்யத்திற்குக் காரணமான ஒரு கர்மம் கழியவில்லையெனில், அது ஸாம்ஸாரிக போ₄க₃மாகுமேயொழிய முக்தியாகாதாகையாலும், இங்கு கீ₃தை யிலும், பா₄ஷ்யத்திலும் ஜிஜ்ஞாஸுவின் ப₂லனை முக்தியாகவே குறிக்கையாலும், ஜிஜ்ஞாஸுவை ப₄க₃வத₃நுப₄வரூபமான முக்தி யைப் பரமப₂லனுகவும், கேவலாத்மாநுப₄வமாகிற கைவல்ய போ₄க₃த்தை அவாந்தர ப₂லனுகவும் கொண்ட அதி₄காரியாகக் கல்பிக்கிறேம்'' எனில்: இந்த கீ₃தையிலேயே (7-27, 28) ஶ்லோகங் களிலும், அவற்றின் பா₄ஷ்யத்திலும் 'கர்மம்' என்றால் என்ன என்று காட்டியிருப்பதை ஆராய்ந்தால், எல்லாக் கர்மங்களும் கழிந்தாலும், ப்ரதிபத்தியில் (ப₂லனில் விருப்பத்தில்) வேறுபாட்டையிட்டு முக்தியில் ப₂ல பே₄த₃ம் ஏற்படலாம் என விளங்குகையாலும், கீ₃தை (7-16) பா₄ஷ்யத்தில் '' ஸுக்ருத க₃ரீயஸ்த்வேந ப்ரதிபத்திவைஶேஷ்யாத் உத்தரோத்தராதி₄கதமா ப₄வந்தி '' என்றும், 8-ம் அத்தியாயத்தின் அவதாரிகா பா₄ஷ்யத்தில் '' ஸுக்ருத தாரதம்யேந ச ப்ரதிபத்தி வைஶேஷ்யாத்...உபாஸகபே₄த₃ம் '' என்றும் இரு இடங்களில் பிரயோகி₃க்கப்பட்டுள்ள ப்ரதிபத்தி வைஶேஷ்ய ஶப்₃த₃ம் இவ்விஷ யத்தை வலியுறுத்துகையாலும், இதற்காக அபூர்வமாக ஓர் அதி₄காரி யைக் கற்பிக்கவேண்டியதில்லை. அடுத்த பாராவில் இதை விளக்குகிறேம்.

26. ''(ப்ராக்ருதவிஷயங்களில்) சிலவற்றைப்பற்றிய விருப்பத்தாலும், சிலவற்றைப்பற்றிய வெறுப்பாலும் உண்டாகும் ஸுக₂ம், து₃:க்க₂ம் முதலான த்₃வந்த்₃வமோஹங்களாலே (மயங்கவைக்கும் இரட்டையான சுயநல உணர்ச்சிகளாலே,) எல்லா ஸம்ஸாரிஜீவர்களும், பிறக்கும்போது (அவ்விஷயங்கள்பற்றிய) பெருமயக்கத்தை அடைந்திருக்கின்றனர்'' என்பது 'இச்சா₂த்₃வேஷ'' [கீ₃தை 7-27] என்று தொடங்கும் ஶ்லோகத்தின் பொருள். ''புண்ணியச்செயல்களை மிகுதியாகச்செய்த எந்த ஜீவர்களுக்கு, (முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட) பாபம் முடிவை நெருங்குகின்றதோ, அவர்கள் (தங்களது புண்ணியத்திற்கேற்ப) முற்கூறிய த்₃வந்த்₃வமோஹங்களாகிற மயக்கும் இரட்டைப்பயன்களிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டவர்களாய், (புண்ணியத்தின் மிகுதிக்கேற்ப ஐஶ்வர்யம், கைவல்யம், ப₄க₃வத்ப்ராப்தி ஆகியவற்றைப் பெறவேண்டுமென்று) உறுதியான ஸங்கல்பமுடையவர்களாய், (அப்ப₂லன்களைப்) பெறுவதற்காக என்னைக்குறித்து ப₄க்தி செய்கிறார்கள்'' என்பது ''யேஷாம் து''. [கீ₃தை 7-28] என்று தொடங்கும் அடுத்த ஶ்லோகத்தின் பொருள், இவ்விரு ஶ்லோகங்களிலும் புண்ய பாப லக்ஷணம் கீ₃தாசார்யனாலே உணர்த்தப்படுகிறது என்பது இங்கு குறிக்கொள்ளத்தக்கது. எப்படியெனில்:—'யேஷாம் து'' என்னுமிடத்தில் துகாரத்தாலே, சென்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட உத்ஸர்க₃த்திற்கு (பொதுவிதி₄க்கு), இந்த ஶ்லோகத்தில் அபவாத₃த்தை (விதி₄விலக்கை) உணர்த்துகிறான் என்று விளங்குகிறது இப்படியிருக்கும்போது, அந்த ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட எல்லா அம்ஶங்களும் இந்த ஶ்லோகத்திலும் வர வேண்டுமென்பது வெளிப்படை. இவ்விரு ஶ்லோகங்களை ஆராய்ந்தால், இரு ஶ்லோகங்களிலும் த்₃வந்த₃வமோஹம் வந்தபோதிலும், முதல் ஶ்லோகத்தில் த்₃வந்த்₃வமோஹத்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்ட இச்சா₂த்₃வேஷங்களை (விருப்பு வெறுப்புகளை) மேல் ஶ்லோகத்தில் எடுக்காமலிருப்பதையும், அதற்கு பதிலாக த்₃வந்த்₃வ மோஹங்கள் நீங்குவதோடு தொடர்புகொண்ட புண்ய பாபங்களைப் பற்றிய ப்ரஸ்தாவம் புதிதாக வந்திருப்பதையும் காண்கிறோம். இதிலிருந்து—அங்கு த்₃வந்த்₃வமோஹத்திற்குக் காரணமாகச் சொல்லப்பட்ட இச்சா₂த்₃வேஷங்களின் இரு பகுதிகளே, இங்கு புண்யமென்றும், பாபமென்றும் சொல்லப்படுகிறதென்றும், அதில், படிப்படியாகப் புண்ணியப்பகுதி மிகுந்து, பாபப்பகுதி குறையப்பெற்றவர்களுக்கு, புண்யபாப ரூபமான இச்சா₂த்₃வேஷகார்யமான த்₃வந்த்₃வமோஹம் படிப்படியாகக் குறைகிறது என்றும் எம்பெருமான் கருதுகிறான்

என்று தெளிவாக விளங்குகிறது. ஒவ்வொரு செயலைத் தொடங்கும் போதும் ''ஜாநாதி, இச்ச₂தி அத₂வா த்₃வேஷ்டி, யததே அத₂வா நிவர்த்ததே'' [அறிகிறான், விரும்புகிறான் அல்லது வெறுக்கிறான், (அதற்கு அனுகு₃ணமாக) முயல்கிறான் அல்லது மீள்கிறான்.] என்னும் க்ரமத்திலேயே ஜீவன் முதன்முதலில் செயல்படுகிறான் என்பது அனுப₄வஸித்₃த₄ம். ஆகையால், முன் ஸ்லோகத்தில் சொல்லப்பட்ட இச்சா₂த்₃வேஷங்கள், இவற்றுக்கு முன்வரும் ஜ்ஞாநத்திற்கும், பின்வரும் ப்ரயத்னநிவ்ருத்திகளுக்கும் உபலக்ஷணமென்றும் விளங்குகிறது. தனக்கு வைஷம்யநைர்க்₄ருண்யங்கள் வாராமைக்காகவும், ஶாஸ்த்ரங்களிலுள்ள விதி₄நிஷேத₄ங்கள் வீணாகாமைக்காகவும், எம்பெருமான் ''ஜ்ஞாந இச்சா₂த்₃வேஷ ப்ரயத்நநிவ்ருத்தி'' ரூபமான இந்த ப்ரத₂மப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு ஓர் ஸ்வாதந்த்ர்யம் அளித்துவிடுகிறான் என்பது — 'க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து விஹிதப்ரதிஷித்₃த₄ அவையர்த்₂யாதி₃ப்₄ய:'' [ப்₃ரஹ்ம ஸூத்ரம் 2-3-41] [எம்பெருமான்— விதி₄நிஷேத₄ங்கள் வீணாவது முதலான தோ₃ஷங்கள் வாராமைக்காக—ஜீவன் செய்யும் முதல் ப்ரவ்ருத்தியை (அல்லது நிவ்ருத்தியை) எதிர்பார்த்தே ஜீவனை மேலே செயல்புரியும்படி தூண்டுகிறான்] ''வைஷம்ய நைர்க்₄ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்'' [ப்₃ரஹ்மஸூத்ரம் 2-1-34] [(விஷம ஸ்ருஷ்டியினாலே பரம்பொருளுக்கு) பக்ஷபாதமும், கருணையின்மையும் ஏற்படமாட்டா; (ஜீவன் செய்யும் கர்மங்களை) எதிர்பார்த்தே (பரம்பொருள் விஷமஸ்ருஷ்டியைச்) செய்வதால்.] என்று ப்₃ரஹ்ம ஸூத்ரங்களிலும், 'ந ச மாம் தாநி கர்மாணி நிப₃த்₄நந்தி த₄நஞ்ஜய। உதா₃ஸீநவதா₃ஸீநம் அஸக்தம் தேஷு கர்மஸு ॥'' [கீ₃தை 9-9] [விஷமஸ்ருஷ்டி முதலான செயல்கள் எனக்கு வைஷம்யம் (பக்ஷபாதம்), நைர்க்₄ருண்யம் (கருணையின்மை) முதலான தோ₃ஷங்களை உண்டாக்கமாட்டா; (ஏனெனில்:) (விஷம ஸ்ருஷ்டிக்குக் காரணமாக) ஜீவர்கள் செய்யும் கர்மங்களில் ஒட்டற்றவனாய், உதா₃ஸீநனாயிருக்கிறேனாகையால்.] என்று கீ₃தையில் மேலேயும் சொல்லப்பட்டுள்ளது. ஆக, ஈஶ்வரனால் கொடுக்கப்பட்ட ஸ்வாதந்த்ர்ய ஶக்தியால் உண்டாகும் ப்ராக்ருதவிஷயமான ஜ்ஞாந, இச்சா₂த்₃வேஷ, ப்ரயத்நநிவ்ருத்திகளே ஜீவன் செய்யும் புண்ய பாபங்கள் என்றதாயிற்று. இதில் ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்ட ப்ராக்ருத விஷயங்களில் ஜ்ஞாநத்தை முன்னிட்ட இச்சை₂யும் அதற்கு அநுகு₃ணமான ப்ரயத்னமும், ஶாஸ்த்ரங்களில் நிஷேதி₄க்கப்பட்ட ப்ராக்ருதவிஷயங்களில் ஜ்ஞாநத்தை முன்னிட்ட த்₃வேஷமும், அதற்கு அநுகு₃ணமான நிவ்ருத்தியும் புண்யமென்று சொல்லப்படுகிறது; ஶாஸ்த்ரங்களில் நிஷேதி₄க்கப்பட்ட ப்ராக்ருதவிஷயங்களில்

ஜ்ஞாநத்தை முன்னிட்ட இச்சை₂யும், அதற்கு அநுகு₃ணமான ப்ரயத்னமும், ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்ட ப்ராக்ருதவிஷயங்களில் ஜ்ஞாநத்தை முன்னிட்ட த்₃வேஷமும் அதற்கு அநுகு₃ணமான நிவ்ருத்தியும் பாபம் என்று சொல்லப்படுகிறது. பா₄ஷ்யத்தில் "த்₃வந்த்₃வேச்ச₂ா த்₃வேஷ" என்பதற்கு "கு₃ணமய" என்று விஶேஷணமிட்டிருப்பதினுல், ப்ராக்ருதவிஷயமான ப்ரத₂ம ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளே முற்கூறியபடி அநாதி₃காலமாக ஜீவனுல் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன; அவையே புண்யபாபங்கள் எனப்படுகின்றன என்று உணர்த்தப்படுகிறது; ப்ராக்ருதமல்லாத கேவலாத்ம விஷயமாகவோ, பரமாத்ம விஷயமாகவோ ஏற்படும் ஜ்ஞாநத்தை முன்னிட்ட இச்ச₂ாத்₃வேஷங்களும், அவற்றுக்கு அநுகு₃ணமான ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளும் புண்யபாப ஶப்₃த₃வாச்யமாகமாட்டா என்றும், அவை மோக்ஷஸாத₄னம் என்றே வழங்கப்படுபவை என்றும் விளங்குகிறது இனி, "புண்யாபுண்யாவீஶ்வரப்ரீதிகோபௌ" "யத் த்வத்ப்ரியம் ததி₃ஹ புண்யமபுண்யமந்யத்" என்று ஈஶ்வரனுடைய ப்ரீதியே புண்யமாகவும், ஈஶ்வரனுடைய கோபமே பாபமாகவும் வழங்கப்படுவதுண்டு. ஜீவனுடைய புண்யபாப கர்மங்கள் க்ஷண த்₄வம்ஸிகளாய், அவற்ருல் விளைந்த எம்பெருமானுடைய ப்ரீதிகோபங்களே இவனுடைய புண்யபாபகர்மங்களுக்குப் ப₂லனளிக்கின்றன என்பதையிட்டு அவ்வழக்கு ஏற்பட்டுள்ளது ஆக, ஜீவனுடைய ப்ராக்ருத விஷயமான புண்யகர்மத்தினுல் எம்பெருமானுக்கு விளைந்த ப்ரீதி புண்யமென்றும், அவனுடைய ப்ராக்ருத விஷயமான பாபகர்மத்தினுல் எம்பெருமானுக்கு விளைந்த கோபம் பாபமென்றும் வழங்கப்படுகிறது என்றதாயிற்று. எம்பெருமானுடைய இந்த ப்ரீதிகோபங்கள்—ஜீவனுடைய மோக்ஷஸாத₄நாநுஷ்ட₂ானத்தாலுண்டான அநுக்₃ரஹத்தாலோ, ஸ்வார்த்த₂மான ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியாகிய ஶரணாக₃தி ரூபமான அதி₄காரி விஶேஷணத்தால் வெளிப்பட்ட நிர்ஹேதுகக்ருபையாலோ அழிந்து விடுகின்றன. அந்தந்த அதி₄காரிகள் விரும்பும் அந்தந்த மோக்ஷத்தைக் கொடுக்கைக்கு உறுப்பான அநுக்₃ரஹம் அழியாமல் யாவதா₃த்மபா₄வி நிலைத்து நிற்கிறது. ஆகையால், இது புண்ய ஶப்₃த₃வாச்யமாகாது. ஆக, கர்மஸஹித ஜ்ஞாநயோக₃த்தாலே ஆத்மாவைக் கண்டு, கர்ம ஜ்ஞாந ப₄க்தி ப்ரபத்திகளில் ஒன்றைப் ப₂லகரண ஸாத₄நமாகக் கொண்டு எம்பெருமானிடம் அந்திமஸ்ம்ருதிபர்யந்தம் தன் ஆத்மாவையே அநுப₄விக்க வேணும் என்று வேண்டுகிறவனுக்கு, முற்கூறிய ப்ராக்ருத விஷயமான புண்யபாபகர்மங்களும், அதனுல் விளைந்த ப்ரீதிகோபங்களும் அழிந்த பின்பும், அவனுடைய நிலைநின்ற ப்ரதிபத்திக்கு அநுகு₃ண

மாக ஸ்வாத்மப்ராப்தி ரூபமான தாழ்ந்ததான கைவல்ய மோக்ஷம் ஏற்படுகிறது; இது அவனுடைய மோக்ஷஸாத4நாநுகு3ணமாக எம்பெருமானுக்கு விளைந்த அநுக்3ரஹகார்யமேயொழிய. புண்யகர்மங்களால் விளைந்த ப்ரீதிகார்யமல்ல. கர்மஜ்ஞாநாங்கி3கையான ப4க்தியாலே எம்பெருமானைக்கண்டு, அந்த ப4க்தியையே ப2லகரண ஸாத4னமாகக்கொண்டு, அந்திமஸ்ம்ருதி பர்யந்தம் மோக்ஷத்தில் தான் ஆநந்த3மடைய வேண்டுகிறவனுக்கு, முற்கூறிய ப்ராக்ருத விஷயமான புண்யபாபகர்மங்களும், அதனால் விளைந்த ப்ரீதி கோபங்களும் அழியப்பெற்று, அவனுடைய நிலைநின்ற ப்ரதிபத்திக்கு அநுகு3ணமாக ஸ்வார்த்த2மான ப்3ரஹ்மாநுப4வரூபமான மோக்ஷம் ஏற்படுகிறது ; இதுவும், அவனுடைய மோக்ஷஸாத4நாநுகு3ணமாக எம்பெருமானுக்கு விளைந்த அநுக்3ரஹகார்யமேயொழிய, புண்யகர்மங்களால் விளைந்த ப்ரீதிகார்யமல்ல. அநாதி3காலமாக எம்பெருமான் செய்துவரும் க்ருஷிகள் பரிபூர்ணமாகப் ப2லிக்கப்பெற்று, எவனுக்கு ஒரு ஜந்மத்தில் பரார்த்த2ப்ரதிபத்தி ஏற்பட்டு, வாஸுதே3வனே பரமப்ராப்யமாகவும், ப2லப்ரத3ஸாத4னமாகவுமிருப்பதோடன்றியில், ப2லகரண ஸாத4நமாகவுமிருக்கிறான் என்னும் ஜ்ஞாநம் விளைந்து, ப4க3வத்ப்ரவ்ருத்தி விரோதி4யான ஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்திரூபமான ஶரணாக3தி விளைகிறதோ, ப்ரபந்நர்களில் தலைசிறந்தவனான அவனுக்கு, அந்த ஜந்மத்திலேயே அந்திமஸ்ம்ருதியையும் எதிர்பாராமல், எம்பெருமான் அவனது ப்ரதிபத்திக்கேற்ப, பரார்த்த2மோக்ஷத்தை அருள்கின்றான். இது ஜீவனுடைய ஸ்வப்ரவ்ருத்தி ரூபமான ப்ரதிப3ந்த4கம் (தடை) நீங்கியதால் வெளிப்பட்ட ஸ்வாபா4விக ப4க3வந் நிர்ஹேதுக க்ருபா கார்யமாகையாலே, இதுவும் புண்யகர்மங்களால் விளைந்த ப்ரீதி கார்யமல்ல என்பது வெளிப்படை. ஆக, எல்லாக் கர்மங்களும் கழிந்த பின்பும், ஸுக்ருத தாரதம்யத்தினால் விளைந்த ப்ரதிபத்திகளின் தாரதம்யத்தினால் சேதனன் கைக்கொள்ளும் உபாயங்களின் வேறுபாட்டால் மோக்ஷத்திலும் தாரதம்யத்தை ஒப்புக்கொண்டே தீரவேண்டும் என விளங்குகிறது. பரமகாருணிகனான எம்பெருமான், கைவல்யநிஷ்ட2ன் முதலானோர்க்குத் தாழ்ந்த ப்ரதிபத்திகளை மாற்றி உயர்ந்த ப்ரதிபத்திகளை விளைக்கவேண்டாவோ? எனில்: அப்படி ப்ரதிபத்தியை உயர்த்துவதற்குத்தான், அவரவர்களது ப்ரதிபத்தியை உயர்த்தக்கூடிய ஸாத4நாநுஷ்டா2னங்களைப் பல ஜந்மங்கள் அநுஷ்டி2க்கும்படியும், ஆத்ம பரமாத்ம ஸ்வரூபங்களை அநுஸந்தி4க்கும்படியும் விதி4த்திருக்கிறான் எம்பெருமான். இப்படி அநுஷ்டி2த்து. அநுஸந்தி4த்தபின்பும் அந்திம ஸ்ம்ருதி பர்யந்தம் அவர்களது ப்ரதிபத்தி மாறாவிடில், அவரவர்

விரும்பிய மோக்ஷத்தை அளிக்கிறான். ப₂லாத்காரமாக அவர்களது ப்ரதிபத்தியை மாற்றவல்லவனாயினும், அப்படி மாற்றுவது அச்சேதனனுக்கு அநிஷ்டமாகையாலும், அப்படி மாற்றினால் முற்கூறியபடி எம்பெருமானுக்கு வைஷம்யம் நைர்க்₄ருண்யம் முதலான தோ₃ஷங்கள் வருமாகையாலும் அப்படி மாற்றுவதில்லை என்று கண்டுகொள்வது.

27. ஜீவஸ்வரூபத்திற்கு ஜ்ஞாநாநந்த₃ங்களைக் காட்டிலும் ஶேஷத்வபாரதந்த்ர்யங்களே அந்தரங்க₃நிரூபகங்கள் என்பது ஸம்ப்ரதா₃ய ஸித்₃த₄மாயிருக்க, எல்லாக்கர்மங்களும் கழிந்த முக்திநிலையில் த₄ர்மபூ₄தஜ்ஞாநம் சுருக்கம் நீங்கி விரிவுபெற்ற பின்பும், இக்கைவல்யநிஷ்ட₂னுக்கு, ஶேஷத்வபாரதந்த்ர்யங்கள் மறைந்திருக்கின்றன என்று கொள்வது எப்படிப்பொருந்தும் ? எனில்: ஶேஷத்வமாவது, எம்பெருமானுக்குச் சிறப்பை விளைக்கவல்லதாயிருக்கை; பாரதந்த்ர்யமாவது, — அவன் விருப்பப்படி விநியோகி₃க்கவல்லதாயிருக்கை. இவற்றோடு கூட ஜீவனுடைய அறிவுக்கு ஸ்வாதந்த்ர்ய ஶக்தியையும் அநாதி₃யாக அளித்திருக்கிறான் எம்பெருமான். இந்த ஶக்தியிருப்பதாலே, மோக்ஷத்திலும், ஆத்மபரமாத்மாக்களுடைய விஷயவைலக்ஷண்யத்தினால், ஸ்வாதந்த்ர்யஶக்தியையுடைய ஜீவனுடைய அறிவுக்குத் தாம் விரும்பும் பரமாத்மஸ்வரூபத்திலோ, தம் ஸ்வரூபத்திலோ போ₄க்₃யதாபு₃த்₃தி₄ ஏற்படுகிறது. இந்த போ₄க்₃யதாபு₃த்₃தி₄யை — தமது பரார்த்த₂ப்ரதிபத்திக்கு ஏற்ப, அவனுக்கேயானவர்களான நித்யஸூரிகளும், அத்தகைய முக்தர்களும் எம்பெருமானை உபாயமாகக்கொண்டு தவிர்த்துக்கொள்கின்றனர் என்னும் விஷயத்தை "மருந்தே நங்கள்போக மகிழ்ச்சிக்கு என்று பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும் பிரான்" [திருவாய் 9-3-4] என்னும் பாசுரத்தில் ஆழ்வார் உணர்த்தினார். ஸ்வார்த்த₂நுப₄வ கைங்கர்யநிஷ்ட₂ர்களுக்கும், கைவல்யநிஷ்ட₂ர்களுக்கும் மோக்ஷத்திலும், தம் உபாஸநத்திற்கேற்ப "உபாஸித்தபடியே ப₂லன்" என்னும் தத்க்ரதுந்யாயத்தாலே ஸ்வார்த்த₂ப்ரதிபத்தி கழியாமையாலே, அவர்கள் எம்பெருமானை உபாயமாகக்கொண்டு தத்தம் அநுப₄வங்களில் போ₄க்₃யதாபு₃த்₃தி₄யைக் கழித்துக்கொள்வதில்லையாகையாலே, ஶேஷத்வபாரதந்த்ர்யங்கள் ஒவ்வோரளவுக்கு அவர்களுக்கு மறைந்திருக்கின்றன. ஆயினும், தனக்கு வைஷம்ய நைர்க்₄ருண்யங்கள் ஏற்படாமைக்காக அவரவர் விருப்பத்தையே தன் விருப்பமாகக் கொண்டு, அவரவர் விரும்பிய ப₂லனை அளித்து, எம்பெருமான் அவர்களைக்கொண்டு போ₄க₃ரஸம் அநுப₄விக்கிறானாகையால், அவர்களுக்கும் ஶேஷத்வபாரதந்த்ர்ய ஸித்₃தி₄க்குக் குறையில்லை.

28. த₄ர்மபூ₄தஜ்ஞாநம் விரிவுபெற்றபின்பு தம் ஸ்வரூபமான ஶேஷத்வபாரதந்த்ர்யங்களும், எம்பெருமானுடைய போ₄க்₃யத்வமும் கைவல்யநிஷ்ட₂ர்களுக்கு எப்படி மறைந்திருக்கமுடியும்? எனில்: தம் ஆத்மாவில் இவர்களுக்குள்ள போ₄க்₃யதாபு₃த்₃தி₄யானது அவற்றை மறைத்து விடுகிறது என்று கொள்கிறோம். "ஆங்கார வாரம் அது கேட்டு அழலுமிழும் பூங்காரரவணையான்" [நான்-திருவ 10] முதலான பாசுரங்களில், எம்பெருமானிடமுள்ள பரிவானது, நித்யஸூரிகளுக்கும் எம்பெருமானுடைய ஸர்வரக்ஷகத்வம் முதலான பெருமைகளையும், தம்முடைய ரக்ஷ்யத்வம் முதலான தன்மைகளையும் மறைத்து விடுவதாக ஆழ்வார்கள் அருளியிருப்பது இவ்விஷயத்திற்கு ஒருவகையில் த்₃ருஷ்டாந்தமாகக்கொள்ளத்தக்கது.

29 கீ₃தை (7-29) ஶ்லோகத்தில் "ஜராமரண மோக்ஷாய— யதந்தி யே" [ஜரை (கிழத்தனம்), மரணம் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்காக எவர்கள் முயல்கிறார்களோ] என்று கைவல்ய நிஷ்ட₂ர்களைக் குறிக்கையாலும், "ப்ராக்ருதிவியுக்தாத்ம ஸ்வரூப த₃ர்ஶநாய - யே யதந்தே" [ப்ரக்ருதியிலிருந்து விடுபட்ட ஆத்ம ஸ்வரூபத்தை அநுப₄விப்பதற்காக எவர்கள் முயல்கின்றார்களோ] என்று எம்பெருமானார் அங்கு பா₄ஷ்யமிடுகையாலும், ஷடூ₃ர்மிகள், ஷட்₃ப₄ாவவிகாரங்கள், அவற்றுக்குக் காரணமான ப்ராக்ருதமான ஸூக்ஷ்மஶரீரம் ஆகியவை கழியப்பெற்ற முக்திநிலையே இவர்களுக்கு ப்ராப்யம் என விளங்குகிறது. ஆகையால், கைவல்யாநுப₄வம் ஸூக்ஷ்மஶரீரத்தைக் கழிக்கமுடியாத ப்ரக்ருதி மண்ட₃லத்தினுள் பெறும் அநுப₄வமே என்று கொள்ளமுடியாது. "ஜராமரண மோக்ஷாய" என்று மோக்ஷஶப்₃த₃த்தை ஜராமரணஶப்₃த₃த்தாலே விஶேஷித்திருக்கையால், இவன் பெறுவது ஆத்யந்திக ஶரீரநாஶமே யென்றும், பரமாத்மாநுப₄வமாகிற பரமமோக்ஷம் இவனுக்கு இல்லை என்றும் உணர்த்தப்படுகிறது. இத்தால், "ஸ ஏநாந் ப்₃ரஹ்ம க₃மயதி" [சா₂ந் 4-15-6] [அந்த அமாநவபுருஷன் இவர்களை ப்₃ரஹ்மத்தை அடைவிக்கிறான்] என்று ஶ்ருதியிலும், கார்யாதி₄கரண ஸூத்ரங்களிலும், அங்கு ஸ்ரீபா₄ஷ்யத்திலும், கீ₃தாபா₄ஷ்யத்திலும் ப்₃ரஹ்மாநுப₄வமுடையவனாகக் குறிக்கப்பட்ட பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்ய நிஷ்ட₂னாக முடியாதென்றும் விளங்குகிறது.

30. கீ₃தா (8-3) ஶ்லோகத்தில் கைவல்யார்த்தி₂ அறிய வேண்டிய விஷயங்களைப்பற்றி விளக்குகையில் "ப்₃ரஹ்ம - அக்ஷரம் பரமம்" [இவன் அறியவேண்டியதான ப்₃ரஹ்மமாவது—ப்ரக்ருதியி னின்றும் நீங்கியதாகையாலே மேலானதான முக்தாத்மஸ்வரூபமே]

என்று இவனுக்கு முக்தியடைந்த தன் ஆத்மஸ்வரூபமே ப்ராப்யம் என்று காட்டப்பட்டது "பரமம் அக்ஷரம் — ப்ரக்ருதி விநிர்முக்தம் ஆத்மஸ்வரூபம்" என்னும் பா₄ஷ்யம் இதை வலியுறுத்துகிறது. இந்த ஶ்லோக பா₄ஷ்யத்தில், "முமுக்ஷுபி₄ர் ஜ்ஞாதவ்யம்" என்று இரு இடங்களில் அருளியிருப்பதும் கைவல்யார்த்தி₂ மோக்ஷமடைய விரும்புகிறவனே எனத் தெளிவாகக் காட்டுகிறது. "பூ₄த ஸூக்ஷ்ம தத்₃வாஸநாதி₃கம்... த்யாஜ்யதயா. முமுக்ஷுபி₄ர் ஜ்ஞாதவ்யம்" என்று ஸூக்ஷ்ம ஶரீரம் இவனுக்குக் கைவிடத்தக்கது என அருளியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது.

31. இந்த ஶ்லோக பா₄ஷ்யத்தில், "ஸ்வபா₄வ: அத்₄யாத்மம்" என்னும் ஶ்லோகப் பகுதியை விளக்கும்போது, "ஸ்வபா₄வ:— ப்ரக்ருதி:...பூ₄தஸூக்ஷ்ம தத்₃வாஸநாதி₃கம் பஞ்சாக்₃நிவித்₃யாயாம் ஜ்ஞாதவ்யதயா உதி₃தம் । தது₃ப₄யம் ப்ராப்யதயா த்யாஜ்யதயா ச முமுக்ஷுபி₄ர் ஜ்ஞாதவ்யம் ॥" [ஸ்வபா₄வம் எனப்படுவது ப்ரக்ருதி... ஸூக்ஷ்ம ஶரீரம், அதன் வாஸனை முதலானவை; பஞ்சாக்₃நி வித்₃யையில் அறியத்தக்கதாகச் சொல்லப்பட்டது. தன் முக்த ஸ்வரூபமும், ஸூக்ஷ்மஶரீரமும் (முறையே) ப்ராப்யமாகவும்; கைவிடத்தக்கதாகவும் முமுக்ஷுக்களால் அறியத்தக்கது] என்று அருளியிருக்கையால், கைவல்யநிஷ்ட₂ன் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னே என விளங்குகிறதே எனில்: "பஞ்சாக்₃நிவித்₃யாயாம் அஸ்ய ஜ்ஞாதவ்யதயா உதி₃தம்" [பஞ்சாக்₃நிவித்₃யையில் இவனுக்கு அறியத் தக்கதாகச் சொல்லப்பட்டது] என்று பா₄ஷ்யகாரர் அருளவில்லையாகையாலும், மேலேயும் "அஸ்ய ஜ்ஞாதவ்யம்" [இவனுக்கு அறியத்தக்கது] என்று அருளாமல், "முமுக்ஷுக்களால் அறியத் தக்கது" எனப் பொதுவாக அருளுகையாலும், ப்₃ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸகனைத் தம்மால் கார்யாதி₄கரண ஸ்ரீ பா₄ஷ்யத்திலும், கீ₃தை [8-23, 24] அவதாரிகையிலும் காட்டப்பட்ட பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுக்குப்போலே. கேவலாத்மோபாஸகனை இக்கைவல்யநிஷ்ட₂னுக்கும் ஸூக்ஷ்மஶரீரம் த்யாஜ்யமாகையாலே, பஞ்சாக்₃நிவித்₃யையில் முமுக்ஷுவான அவனுக்குச் சொன்னதை முமுக்ஷுவான இவனுக்கும் அதிதே₃ஶமே செய்கிறார் பா₄ஷ்யகாரர் என்று தெளிவாக விளங்குகிறது. ஆகையால், இதுகொண்டு இவனைக் கைவல்யநிஷ்ட₂னுக்கமுடியாது; ஆக்கமுயன்றால் கார்யாதி₄கரண ஸ்ரீபா₄ஷ்ய ஸ்ரீஸூக்திகளும், கீ₃தை (8-23, 24) அவதாரிகா பா₄ஷ்ய ஸ்ரீஸூக்திகளும் விரோதி₄க்கும்.

32. "யத₃க்ஷரம் வேத₃விதோ₃ வத₃ந்தி" [8-11] என்று தொடங்குவதாய், கைவல்யார்த்தி₂யின் உபாஸந ப்ரகாரத்தைச்

சொல்லும் ஶ்லோகத்தில், அஸ்தூ2லத்வம் முதலானவற்றோடு
கூடியதாய், ப்ரக்ருதியினின்றும் நீங்கியதான தன் ஆத்மாவே
கைவல்யார்த்தி2க்கு ப்ராப்யமாகையால், தத்க்ரது ந்யாயத்தையும்,
ஆதி3பு4ரதந்யாயத்தையும் ஒட்டி அஸ்தூ2லத்வம் முதலானவற்றோடு
கூடிய பரமாத்ம ஸ்வரூபம் அவனுக்கு உபாஸிக்கத்தக்கதாக
விதி4க்கப்படுகிறது இதிலிருந்து இவன் பெறும் ப2லன் ப்ரக்ருதியி
னின்று நீங்கிய முக்திநிலையே என விளங்குகிறது. இப்படி விதி4ப்ப
தில் எம்பெருமானுக்கு மற்றொரு உட்கருத்தும் உண்டு; அதாவது,—
இவன் தன் ஆத்மாவில் எந்தப் பெருமைகளைக் கண்டு அதில் ஈடு
படுகிறானோ, அந்தப் பெருமைகளும், மற்றும் பல பெருமைகளும்
பரமாத்மாவான தன்னிடம் உண்டு என உணர்ந்து, இவன் தன்னிடம்
ஈடுபடவேண்டும் என்பது எம்பெருமானின் உட்கருத்து. இதையே
"ப்ரதிபத்தி வைஶேஷ்யத்தினாலே ஐஶ்வர்ய கைவல்ய ப4க3வச்
சரணார்த்தி2கள் மேன்மேலே சிறந்தவர்கள்" என்று ஏழாம் அத்தியா
யத்தில் ப4க்தபே4த3த்தை விவரிக்கும் (7-16) ஶ்லோக பா4ஷ்யத்தி
லும், அதை அநுவதி3க்கும் எட்டாம் அத்தியாயத்தின் அவதாரிகை
யிலும் பா4ஷ்யகாரர் அருளினார். இதிலிருந்து எம்பெருமான்
செய்யும் ஸாத4நாநுஷ்டா2ன விதி4களுக்குச் சேதனனின் ப்ரதிபத்தி
களை மாற்றுவதில் முக்கிய நோக்கேயொழிய, அந்த ஸாத4னங்களுக்
குரிய ப2லனைக் கொடுப்பதில் முக்கிய நோக்கல்ல என்றும், ஸாத4
நத்தை அந்திமஸ்ம்ருதி பர்யந்தம் பூர்ணமாக அநுஷ்டி2த்த பின்பும்
இவனுடைய ப்ரதிபத்தி மாறாமலிருந்தால், வேறு வழியில்லாமல்
இவன் விரும்பும் சுயநலப்ப2லனை அளிக்கிறான் எம்பெருமான் என்
றும் நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும்.

33. ஐஶ்வர்யார்த்தி2க்கு [8-10] ஶ்லோகத்தில் அந்திமகாலத்தில்
புருவங்களுக்கு நடுவில் ப்ராணனை நிலைநிறுத்தும்படி உபதே3ஶித்தது
போலல்லாமல், கைவல்யார்த்தி2யைப்பற்றிய "ஸர்வத்3வாராணி"
[8-12] என்னும் ஶ்லோகத்தில், 'மூர்த்4ந்யாதா4ய ஆத்மந: ப்ராணம்'
[தன்னுடைய ப்ராணவாயுவைத் தனது தலையில் ப்ரவேஶிக்கச் செய்து]
என்று ஸுஷும்நாநாடி3 வழியாகத் தலையில் நிலைநிறுத்தும்படி
உபதே3ஶிக்கையாலே, ஐஶ்வர்யார்த்தி2 பெறும் ப2லன் அஸ்தி2ரமான
போ4கமென்றும், கைவல்யார்த்தி2 பெறும் ப2லன் நித்யமான
மோக்ஷம் என்றும் தெளிவாக விளங்குகிறது. "ஹ்ருத3யகமல
நிவிஷ்டே மயி அக்ஷரே மநோ நிருத்4ய... வாச்யம் மாம் அநுஸ்மரந்"
என்று இங்கு பா4ஷ்யத்தில் அந்திமக்ஷணத்திலும் தன்னைச் சிந்திக்க
வேண்டும் என்று எம்பெருமான் விதி4த்திருப்பதாகக் காட்டியிருப்பது
"இந்தக் கடைசி க்ஷணத்திலாவது இவன் நம்மிடம் ஈடுபட
மாட்டானா" என்கிற எம்பெருமானின் ப்ரத்யாஶையை விளக்குகிறது.

34. இந்த (8-12) ஶ்லோகத்தில் கைவல்யார்த்தி₂க்கு ப்ராப்யத்தைச் சொல்லும்போது, "தே₃ஹம் த்யஜந் ய: ப்ரயாதி" என்று இவன் ஸ்தூ₂ல ஸூக்ஷ்மதே₃ஹங்களை அடியோடுவிட்டு ப்ரக்ருதிமண்ட₃லத்தைத் தாண்டிச் செல்கிருன் என்றதும், "ஸ யாதி பரமாம் க₃திம்" என்று அசித₃நுப₄வமாகிற ஐஶ்வர்யாநுப₄வத்தைக் காட்டிலும் மேலானதாகையாலே 'பரக₃தி' எனத்தக்க அசிந்மிஶ்ர ஸ்வாத்மாநுப₄வத்தைக் காட்டிலும் மேலானதாகையாலே 'பரமா கதி₃' எனத்தக்க தன் கேவலாத்மாநுப₄வத்தை அடைகிருன் என்றதும்—இவன் அடையும் ப₂லன் மோக்ஷமே என்று காட்டுகிறது. இவ்விடத்தில் பா₄ஷ்யத்தில் "ப்ரக்ருதி வியுக்தம் மத்ஸமாநாகாரம் அபுநராவ்ருத்திம் ஆத்மாநம் ப்ராப்நோதீத்யர்த்த₂:" [ப்ரக்ருதியினின்றும் நீங்கியதாய், என்னேடு ஒத்த (ஜ்ஞாநாநந்த₃மயமான) ஸ்வரூபத்தை உடையதாய், திரும்பி வருதலில்லாததான ஆத்மாவை அடைகிருன் என்று பொருள்] என்று அருளியிருப்பதும் இதை வலியுறுத்துகிறது.

35. (8-12) ஶ்லோகத்தில் 'பரமா க₃தி' என்று கைவல்யாநுப₄வத்தைச் சொன்ன கண்ணன், (8-15) ஶ்லோகத்தில் 'பரமா ஸம்ஸித்₃தி₄' என்று ஞானியடையும் ப₂லனைக் குறிக்கையாலே, இரண்டும் மோக்ஷமேயாயினும், ஞானியடையும் ப்₃ரஹ்மாநுப₄வமாகிற சிறந்த ப₂லனைக் கைவல்யநிஷ்ட₂ன் அடைவதில்லை என்று உணர்த்துகிருன். இதிலிருந்து—ப்₃ரஹ்மாநுப₄வத்தை அடைபவனுக ஶ்ருதி ஸூத்ர பா₄ஷ்யங்களில் கூறப்பட்ட பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னுக முடியாது என விளங்குகிறது.

36. (8-15) பா₄ஷ்யத்தின் அவதாரிகையில், "அத:பரம் அத்₄யாயஶேஷேண ஜ்ஞாநிந: கைவல்யார்த்தி₂நஶ்ச அபுநராவ்ருத்திம், ஐஶ்வர்யார்த்தி₂ந: புநராவ்ருத்திம் சாஹ" [இதற்குமேல் உள்ள அத்₄யாயப்பகுதியாலே, ஞானிக்கும், கைவல்யார்த்தி₂க்கும் புநராவ்ருத்தி இல்லையென்றும், ஐஶ்வர்யார்த்தி₂க்குப் புநராவ்ருத்தி உள்ளதென்றும் கூறுகிருன்.] என்று அருளியிருப்பதிலிருந்து, ஞானியின் ப்ராப்யத்தைப்போலே கைவல்யார்த்தி₂யின் ப்ராப்யமும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதல் இல்லாத மோக்ஷமே என விளங்குகிறது.

37. கைவல்யார்த்தி₂க்கு ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருதல் இல்லாவிடினும், அவன் தான் பெற்றிருக்கும் கேவலாத்மாநுப₄வத்திற்கு மேற்பட்ட ப₂லமான ப்₃ரஹ்மாநுப₄வத்தைக் காலாந்தரத்தில்

அடையலாமே? எனில், (8-16) ஶ்லோகத்தில் "புநராவர்த்திந:" [ப்₃ரஹ்மலோகமீருகவுள்ள எல்லாவுலகங்களும், புநராவ்ருத்தியுள்ளவை] என்றவிடத்துக்கு வியாக்கியானம் செய்யும்போது "விநாஶிந:" [அழிவுடையவை] என்றே பா₄ஷ்யகாரர் அருளிச்செய்கையாலே, புநராவ்ருத்தியில்லாத ப₂லனையுடைய கைவல்யநிஷ்ட₂னும், தன் ப₂லன் அழிந்து கீழான ஐஶ்வர்யாநுப₄வத்தையோ, மேலான ப₄க₃வத₃நுப₄வத்தையோ பெறுவதில்லை என விளங்கும். இப்படிக் கொள்ளாவிடில், இந்த்₃ரலோகத்தில் அநுப₄வத்தைப் பெற்று, அங்கிருந்து உயர்ந்த லோகமாகிற ப்₃ரஹ்மலோகத்திற்குச் சென்று அவ்வுலகில் அநுப₄வத்தைப் பெறுகிறவன் புநராவ்ருத்தியில்லாதவன் என்று கொள்ளவேண்டிவரும். இப்படிக் கொள்வது, "ப்₃ரஹ்மலோகமீருகவுள்ள எல்லாவுலகமுமே புநராவ்ருத்தியுள்ளவை" என்று இந்த (8-16) ஶ்லோகத்தில் சொன்னதோடு முரண்படும். ஆகையால், கைவல்யத்தை அடைந்தவனுக்கு என்றுமே கீழான ஐஶ்வர்யாநுப₄வமும், மேலான பரமாத்மாநுப₄வமும் கிடைப்பதில்லை என்று தேறுகிறது.

38. கைவல்யார்த்தி₂யின் ப்ராப்யத்தைக் கூறும் (8-20, 21) ஶ்லோகங்களில் "யம் ப்ராப்ய ந நிவர்த்தந்தே" என்று கைவல்யாநுப₄வத்தை அடைந்தபின், அதைவிட்டு வேறோரநுப₄வத்தை அடைகையாகிற புநராவ்ருத்தியில்லை என்று முக்தகண்ட₂மாகச் சொல்லப்பட்டிருப்பதும். அவ்விடத்து பா₄ஷ்ய அவதாரிகையில் "அத₂ கைவல்யம் ப்ராப்தாநாமபி புநராவ்ருத்திர் ந வித்₃யத இத்யாஹ" [இனி, கைவல்யத்தை அடைந்தவனுக்கும் புநராவ்ருத்தி இல்லை என்று கூறுகிருன்] என்று அருளியிருப்பதும், கைவல்யாநுப₄வம் ஸம்ஸாரத்திற்கோ, ப₄க₃வத₃நுப₄வத்திற்கோ செல்லமுடியாத நித்யாநுப₄வம் என்பதை வலியுறுத்துகிறது. இங்கு "தமாஹு: பரமாம் க₃திம்" [அக்கேவலாத்மாவை மேலான ப்ராப்யமாக (கைவல்யார்த்தி₂கள்) கூறுகிருர்கள்] என்றவிடத்தின் பா₄ஷ்யத்தில், "அயமேவ...ப்ரக்ருதி ஸம்ஸர்க்க₃வியுக்தஸ்வரூபேணாவஸ்தி₂த ஆத்மா இத்யர்த்த₂:" [இவனே ப்ரக்ருதியிலிருந்து நீங்கப்பெற்றவனாய், ஸ்வரூபவிளக்கம் பெற்றவனான ஆத்மா என்று பொருள்] என்று அருளியிருப்பதிலிருந்து, கைவல்யாநுப₄வம் ப்ரக்ருதிஸம்ஸர்க்க₃ம் அடியோடு நீங்கியபின் ஏற்படும் மோக்ஷாநுப₄வமே என விளங்குகிறது. இங்கு "தத்₃தா₄ம பரமம் மம" [அது எனது மேலான நியமன ஸ்தா₂னம்] என்றவிடத்திற்கு பா₄ஷ்யமிடுகையில், "அசேதந ப்ரக்ருதிரேகம் நியமநஸ்தா₂நம் ; தத்ஸம்ஸ்ருஷ்டரூபா ஜீவப்ரக்ருதிர்

த்3விதீயம் நியமநஸ்தா2நம் ; அசித்ஸம்ஸர்க்க3வியுக்தம் ஸ்வரூபேணா வஸ்தி2தம் முக்த ஸ்வரூபம் பரமம் நியமநஸ்தா2நம் இத்யர்த்த2: I தச்ச அபுநராவ்ருத்திரூபம் I'' [எனக்கு ப்ரகாரமான அசேதனப் பொருள் ஒரு நியமனஸ்தா2னம் ; எனக்கு ப்ரகாரமாயிருப்பதாய், முற்கூறிய அசித்தோடு சேர்ந்திருப்பதான ஸம்ஸாரி ஜீவஸ்வரூபம் முற்கூறிய அசித்தைக் காட்டிலும் மேலான இரண்டாவது நியமன ஸ்தா2னம்; அசித்ஸம்ப3ந்த4ம் அடியோடு நீங்கப்பெற்றதாய், ஸ்வரூப விளக்கம் பெற்றதாய், அதனாலேயே முற்கூறிய ஸம்ஸாரி சேதனஸ்வ ரூபத்திலும் மேலானதான முக்தஜீவஸ்வரூபம் முந்திய இரண்டைக் காட்டிலும் மேலான மூன்றாவது நியமன ஸ்தா2னம்—என்று பொருள். அதுவும் புநராவ்ருத்தியில்லாத நித்யாநுப4வமேயாகும்] என்று அருளியிருப்பது கைவல்யாநுப4வம் நித்யமுக்தியே என்று பா4ஷ்யகாரர் திருவுள்ளம் பற்றியதைக் கரதலாமலகமாக (கையிலங்கு நெல்லிக் கனியாகக்) காட்டுகிறது. தா4மஶப்3த3த்திற்கு 'ப்ரகாஶம்' [ஞான வொளி] என்று பொருள்கொள்ளும்போதும், ''ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டாத் பரிச்சி2ந்நஜ்ஞாநரூபாத் ஆத்மந: அபரிச்சி2ந்நஜ்ஞாநரூபதயா முக்த ஸ்வரூபம் பரம் தா4ம'' [ப்ரக்ருதியோடு சேர்ந்திருக்கையாலே அளவு பட்ட அறிவையுடைய ஸம்ஸாரி ஜீவஸ்வரூபத்தைக்காட்டிலும், அள வற்ற அறிவையுடையதாகையால் முக்தஸ்வரூபம் மேலான ஞான வொளியாகிறது] என்று அருளியது இதை மேலும் வலியுறுத்துகிறது.

39. (8-22) ஶ்லோகத்தின் அவதாரிகா பா4ஷ்யத்தில், '' ஜ்ஞாநிந: ப்ராப்யம் து தஸ்மாத3த்யந்தவிப4க்தம் இத்யாஹ '' [ஞானியின் ப்ராப்யமோவெனில், கைவல்யநிஷ்ட2னுடைய ப்ராப் யத்தைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டது என்று கூறுகிறான்.] என்று அருளுவதன் மூலம் ''கைவல்யம் பெற்றவனுக்கு ப4க3வத3நு ப4வம் அடியோடு கிடையாது'' என்பதைக் கல்வெட்டாகக் காட்டி னார் பா4ஷ்யகாரர். இதிலிருந்து கைவல்யத்தை அநுப4வித்த பின் இவன் ப4க3வத3நுப4வத்தைப் பெறுகிறான் என்று பா4ஷ்யகாரர் கருதியிருக்க இடமேயில்லை என விளங்குகிறது. ப்3ரஹ்மாநுப4வ முள்ளவனாகத் தம்மால் பலவிடங்களில் முழங்கப்பட்ட பஞ்சாக்3நி வித்3யாநிஷ்ட2னைக் கைவல்யநிஷ்ட2னாகக் கருதியிருக்கவும் இடமே யில்லை என்றும் விளங்குகிறது.

40. கீ3தை (8-23, 24) ஶ்லோகங்களின் அவதாரிகா பா4ஷ்யத் தில் '' அத2 ஆத்மயாதா2த்ம்யவித3: பரமபுருஷநிஷ்ட2ஸ்ய ச ஸாதா4ரணீம் அர்ச்சிராதி3காம் க3திமாஹ '' [இனி, ஆத்ம யாதா2த்ம்யவித்துக்கும் பரமபுருஷநிஷ்ட2னுக்கும் பொதுவான

அர்ச்சிராதி₄க₃தியைக் கூறுகிருன்] என்று 'ஆத்மயாத₂ாத்ம்யவித்' என்னும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னைப் பரமபுருஷநிஷ்ட₂னுகிற ஜ்ஞாநியோடு சேர்த்து எடுக்கையாலே, இவ்விருவரும் 7, 8 அத்₄யாயங்களில் பூர்வப்ரக்ருதர்களான ஜிஜ்ஞாஸுவும் ஜ்ஞாநியுமே என விளங்குகிறதே; இதிலிருந்தும், இவ்வவதாரிகா ப₄ாஷ்யத்தின் மேல்பகுதியில் இவ்விருவர்க்கும் அர்ச்சிராதிக₃தியும் ப்₃ரஹ்மாநுப₄வமும் கூறப்படுவதிலிருந்தும் ஜிஜ்ஞாஸுவுக்கு முதலில் கைவல்யாநுப₄வமும், பிறகு ப்₃ரஹ்மாநுப₄வமும் ஏற்படுகின்றன என்று கொண்டுதீர வேண்டியிருக்கிறதே — என்னும் ஆக்ஷேபம் எழுகிறது. இதற்குப் பரிஹாரம் பின்வருமாறு,— (1) கீ₃தை (7-16) ப₄ாஷ்யத்தில் ஜிஜ்ஞாஸுவுக்கு லக்ஷணம் உரைக்கும்போது "ப்ரக்ருதிவியுக்தாத்மஸ்வரூபாவாப்தீச்சு₂:" [ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபத்தை அடைய விரும்புகிறவன்] என்று லக்ஷணமருளினுர் ப₄ாஷ்யகாரர். ஜ்ஞாநிக்கு "ப₄க₃வச்சே₂ஷதைகரஸாத்மஸ்வரூபவித்" [எம்பெருமானுக்கு அடிமைப்பட்டிருக்கையையே இயல்வாகக் கொண்ட ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவன்] என்று லக்ஷணமருளினுர். இங்கு பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னை "ஆத்மயாத₂ாத்ம்யவித்" [ஆத்மாவின் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்தவன்] என்று வழங்கியிருப்பதிலிருந்தும், இவ்வவதாரிகா ப₄ாஷ்யத்திலேயே மேலே இவன் தன் ஆத்மஸ்வரூபத்தை ப்₃ரஹ்மாத்மகமாய், ப்₃ரஹ்மஶேஷதைகரஸமானது என்று அநுஸந்தி₄க்கவேண்டுமென்று தத்க்ரதுந்யாயத்தையும் காட்டி நிரூபிப்பதிலிருந்தும் இவனை ப₄ாஷ்யகாரர் ஜ்ஞாநியாகக் கருதினுரேயொழிய ஜிஜ்ஞாஸுவாகக் கருதவில்லை என்று தெளிவாக விளங்குகிறது. (2) கீ₃தை (7-17) ப₄ாஷ்யத்தில் "ஐஶ்வர்ய கைவல்ய நிஷ்ட₂ர்கள் இருவர்க்கும் (முறையே) ஐஶ்வர்யமும், கேவலாத்மாநுப₄வமுமாகிற தத்தம் விருப்பம் கிடைக்கும் வரையிலேயே என்னேடு சேர்த்தியுண்டு" என்றும், (8-22) அவதாரிகையில் "கைவல்ய நிஷ்ட₂னுடைய ப்ராப்யத்தைக் காட்டிலும் ஜ்ஞாநியினுடைய ப்ராப்யம் மிகவும் வேறுபட்டது" என்றும் அருளுவதன்மூலமும், பதின்மூன்ரும் அத்தியாயத்தின் அவதாரிகா ப₄ாஷ்யத்தில் "ஆத்ம கைவல்யமாத்ராபேக்ஷாணும்" என்று ஜிஜ்ஞாஸு கேவலாத்மாநுப₄வத்தை மாத்திரமே விரும்புகிருன் என்று அருளுவதன் மூலமும் கைவல்யநிஷ்ட₃னுக்கு ப்₃ரஹ்மாநுப₄வம் கிடையாது, அதைப்பெற விருப்பமேயில்லை எனக்காட்டினுர். இவ்வவதாரிகா ப₄ாஷ்யத்திலோவெனில் ஆத்மயாத₂ாத்ம்யவித்தாகிற பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுக்கு ப்₃ரஹ்மாநுப₄வம் உண்டென்று மிகத் தெளிவாகக் காட்டினுர். இதிலிருந்தும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் ஜ்ஞாநிகோடி

யில் சேர்ந்தவனேயொழிய ஜிஜ்ஞாஸுவல்லன் என விளங்குகிறது. (3) ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்யநிஷ்டனைப்பற்றிப் பலவிடங்களில் குறிப்பிடும்போது "ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வருபத்தை அடையவிரும்புகிறவன்" [7-16; 7-29] என்றோ, 'அக்ஷரயாதா2த்ம்யத்தை விரும்பி உபாஸிப்பவன்' [8-ம் அத்தியாயம் அவதாரிகை] என்றோ, 'கைவல்யார்த்தீ2' [8-11, 8-14, 8-15 அவதாரிகைகள்] என்றோ, 'கைவல்யம் ப்ராப்தன்' [8-20, 21 அவதாரிகை] என்றோ, 'ஆத்ம கைவல்ய மாத்ராபேக்ஷன்' [13-ம் அத்தியாயம் அவதாரிகை] என்றோ குறிப்பிடுகிறாரேயொழிய ஓரிடத்திற்கூட 'ஆத்மயாத2ாத்ம்யவித்' என்று குறிப்பிடவில்லை, இதிலிருந்தும் இந்த ஆத்மயாத2ாத்ம்யவித் என்பவன் கைவல்யநிஷ்டனிலும் வேறுபட்டவன் என விளங்குகிறது. (4) கீ3தை (8-26) ஶ்லோகபா4ஷ்யத்தில் "ஏதே ஶுக்லக்ருஷ்ணே க3தீ ஜ்ஞாநிநாம், விவித4நாம் புண்யகர்மணும் ச ஶ்ருதௌ ஶாஶ்வதே மதே" [இந்த ஶுக்லக்ருஷ்ணக3திகளிரண்டும் (முறையே) ஞானிகளுக்கும், பலவித4மான புண்யகர்மங்களைப் புரிந்தவர்களுக்கும் ஶ்ருதியில் எப்போதும் உள்ளவையாகச் சொல்லப்படுகின்றன.] என்று அருளிச்செய்வதன்மூலம் ஶுக்லக3தியான அர்ச்சிராதிக3தி ஜ்ஞாநிகளுக்கு உண்டேயொழிய ஜிஜ்ஞாஸுவுக்குக் கிடையாது என்று காட்டுவதன்மூலம் ஆத்மயாத2ாத்ம்யவித்தாகிற பஞ்சாக்3நிவித்3யாநிஷ்டன் ஜ்ஞாநிகோடியில் சேர்ந்தவனேயொழிய ஜிஜ்ஞாஸுவல்லனென்று நிலைநிறுத்தினர். "ஜ்ஞாநிநாம் த்3விவித4நாம்" என்று தாத்பர்ய தீ3பிகையில் எடுக்கப்பட்ட பாடத்தில் இது மிகத் தெளிவாக விளங்குகிறது. (5) பஞ்சாக்3நிவித்3யாநிஷ்டனுக்குப் பஞ்சாக்3னி வித்3யை ஒன்றே ஸாத4னமாகும். "ஆத்மார்த்தீ2 சேத் த்ரயோऽப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாத4கா:" [கீ3தார்த்த2 ஸங்க்3ரஹம் 27] [ஆத்ம மாத்ரத்தை அநுப4விக்கையாகிற பலனை விரும்பினுகில், கர்மஜ்ஞாநப4க்தியோக3ங்கள் மூன்றும் தனித்தனியே ஆத்மகைவல்யத்தை ஸாதி4த்துக்கொடுக்கும்.] "ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்க்கா3த்3யம் பாரலௌகிகம் | கைவல்யம் ப4க3வந்தம் ச மந்த்ரோऽயம் ஸாத4யிஷ்யதி ||" [வ்ருத்3த4ஹாரீதஸ்ம்ருதி 6-50] [இவ்வுலகச் செல்வத்தையும், சுவர்க்கம் முதலான மறுமைச் செல்வத்தையும், கேவலாத்மாநுப4வமாகிற கைவல்யத்தையும், ப4க3வதநுப4வத்தையும் (அதையதை விரும்புவார்க்கு) இவ்வஷ்டாக்ஷர மந்திரம் ஸாதி4த்துக்கொடுக்கும்] "தாவதா2ர்த்திஸ் ததா2 வாஞ்சா2 தாவந்மோஹஸ் ததா2ऽஸுக2ம்| யாவந்ந யாதி ஶரணம் த்வாமஶேஷாக4நாஶநம் ||" [வி-பு 1-9-73] [எல்லாப்பாபங்களையும் போக்கடிக்கும் உன்னை எதுவரையில் ஶரணமடையவில்லையோ, அது

வரையிலேயே (செல்வத்தை இழந்ததனால் ஏற்படும்) வருத்தம்; அதுவரையிலேயே (செல்வம் வேண்டும் என்னும்) ஆசை; அது வரையிலே (ஆத்மாநுப₄வமின்மையால் ஏற்படும்) மோஹம்; அதுவரையிலேயே (ப₄க₃வத₃நுப₄வமின்மையால் உண்டாகும்) ஸுக₂ மின்மை. (ஆர்த்தன், அர்த்தா₂ர்த்தி₂ எனப்படும் ஐஶ்வர்யார்த்தி₂கள், ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்யார்த்தி₂, ஜ்ஞாநி ஆகிய அனைவர்க்கும் ப்ரபத்தியே ப₃ல ஸாத₄னம் என்றபடி)] என்கிறபடியே கைவல்ய நிஷ்ட₂னுக்குக் கர்ம ஜ்ஞாந ப₄க்தி ப்ரபத்திகளில் எதுவும் ஸாத₄ன மாகலாம். இப்படி ஸாத₄னத்தைப் பார்த்தாலும் ஆத்மயாதா₂த்ம்ய வித் எனப்படும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவன் என விளங்கும். (6) பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னைப் பற்றிய ப்ரஸ்தாவம் வரும் கார்யாதி₄கரணம் [4-3-5] முத லானவிடங்களில் ஸ்ரீப₄ாஷ்யம், ஶ்ருதப்ரகாஶிகை முதலானவற்றில் அவனைப்பற்றிக் குறிப்பிடும்போது ஓரிடத்திற்கூட அவனைக் கேவலன் என்றோ, கைவல்யநிஷ்ட₂ன் என்றோ, அவனுக்குக் கைவல்யம் ப்ராப்யம் என்றோ கூறவில்லை. நேர்மாறாகப் பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்ட அதி₄காரிகளே "கேவலம் வா சித்₃வஸ்து...ய உபாஸதே" என்று கார்யாதி₄கரணப₄ாஷ்யத்தின் இறுதியில் கேவல சிது₃பாஸகர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இதிலிருந்தும் ஆத்ம யாதா₂த்ம்யவித் எனப்படும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன், கைவல்ய நிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவன் என விளங்குகிறது. பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னைக்காட்டிலும் வேறுபட்ட கேவலாத்மோ பாஸகன் ஒருவன் உண்டோ? எனில்: சா₂ந்தோ₃க்₃யம் ஏழாவது ப்ரபாட₂கத்தில் நாமம் தொடங்கி ஆஶை ஈறாகப் பதினாலு அசேதனப் பொருள்களின் உபாஸனத்தைக்கூறி, அதற்குப்பின் 'ப்ராணன்' எனும் ஶப்₃த₃த்தால் அசேதனப் பொருள்களைக் காட்டிலும் வேறு பட்டதாய், உயர்ந்ததான ஜீவாத்மஸ்வரூபத்தின் உபாஸனத்தை [7-14-4]ல் கூறி, அதை உபாஸிப்பவன் அதிவாதி₃யாகிறான் என்று காட்டி, (7-15-1)ல் 'ஸத்யம்' எனப்படும் ப்₃ரஹ்மத்தை உபாஸிப்பவன் இவனைவிடச் சிறந்த அதிவாதி₃ என்று காட்டுகையால் ப்ராணன் எனப்படும் கேவல ஜீவனை உபா ஸிப்பவன் ப்₃ரஹ்மாத்மகஸ்வாத்மோபாஸகனான பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றும், அதிவாதி₃யாகக் கூறப்படுகையாலே ஒருவகையான மோக்ஷத்தைப் பெறுபவன் என்றும், ப்₃ரஹ்மோபாஸகனைக் காட்டிலும் தாழ்ந்தவனாகக் கூறப் படுகையாலே ப்₃ரஹ்மோபாஸகனைக் காட்டிலும் தாழ்ந்த கேவலாத் மோபாஸகன் இவனேயென்றும் விளங்குகிறது. ஆகையால் இவனே

ஜிஜ்ஞாஸுவெனப்படும் கைவல்யநிஷ்ட₂னென்றும், பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னும், பரமபுருஷநிஷ்ட₂னும் இவ்வவதாரிகாபா₄ஷ்யத் தோடு அவ்யவஹிதமாக(இடைவெளியில்லாமல்) ப்ரக்ருதரான ஜ்ஞாநி களில் இருவகையினரே என்றும் அசைக்கமுடியாதபடி தேறுகிறது.

41. கீ₃தை (8-26) ஶ்லோக பா₄ஷ்யத்தில் மோக்ஷகதியான அர்ச்சிராதி₃க₃தி ஜ்ஞாநிகளுக்கு உண்டேயொழிய ஜிஜ்ஞாஸுவுக்குக் கிடையாது என்று காட்டுவதன்மூலம் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுகிற 'ஆத்மயாதா₂த்ம்யவித்' ஜிஜ்ஞாஸுவிலும் வேறுபட்டவன் என உணர்த்தினர். முந்தின (40-வது) பாராவில் பரிஹாரத்தின் (4)வது பிரிவில் இது விவரிக்கப்பட்டது.

42. கீ₃தை (12-3, 4, 5)ல் கேவலாத்மோபாஸகனின் ப்ராப் யத்தைக் குறிப்பிடுகையில், ''தே ப்ராப்நுவந்தி மாமேவ'' [அவர்கள் என்னையே அடைகிறார்கள்] என்கிறான் கண்ணன். இவர்கள் முதலில் கேவலாத்மாநுப₄வத்தையும், பிறகு பரமாத்மாநுப₄வத்தையும் அடை பவர்களாயிருந்தால், இங்கு பா₄ஷ்யகாரர் ஏவகாரத்தோடு கூடிய ஶ்லோகஸ்வாரஸ்யத்தையொட்டி அவ்விஷயத்தைக் கூறியிருப்பார். அப்படிக் கூறாமல் '' மாம் ப்ராப்நுவந்த்யேவ '' என்று அயோக₃ வ்யவச்சே₂த₃பரமாக அந்வயத்தை மாற்றி, '' மத்ஸமாநாகாரம் அஸம்ஸாரிணம் ஆத்மாநம் ப்ராப்நுவந்த்யேவ '' [(ஜ்ஞாநாநந்த₃ங் களில்) என்னை ஒத்த ஸ்வரூபத்தை உடையவனாய், ஸம்ஸார ஸம்ப₃ந்த₄மற்ற தம் ஆத்மஸ்வரூபத்தை அடையவே செய்கிறார்கள்] என்று பொருளுரைப்பதிலிருந்து, பா₄ஷ்யகாரர் கைவல்யநிஷ்ட₂ன் பிரிதொரு காலத்தில் ப்₃ரஹ்மாநுப₄வத்தைப் பெறுகிறான் என்று திருவுள்ளம் பற்றவேயில்லை எனத் தெளிவாக விளங்குகிறது. ஏழு எட்டாம் அத்தியாயங்களில் கைவல்யநிஷ்ட₂னுக்கு ப்₃ரஹ்மாநுப₄வம் அடியோடு இல்லை என்று கண்ணன் திருவுள்ளம் பற்றியிருப்பதாகிற அர்த்த₂ஸ்வாரஸ்யத்தையொட்டி, இங்கு ஶப்₃த₃த்தைச் சிறிது நலிந்து பொருள்கொள்ளவேண்டும் என்று பா₄ஷ்யகாரர் திருவுள்ளம் பற்றுகிறார் என விளங்கும்.

43. இங்கு ''க்லேஶ: அதி₄கதரஸ்தேஷாம்'' என்று கைவல்ய நிஷ்ட₂ன் ப₄க₃வது₃பாஸகனைக் காட்டிலும் நீண்ட காலம் மிகுந்த ஶ்ரமப்பட்டு உபாஸிக்கவேண்டும் என்று விதி₄த்திருப்பது—அவனுடைய தைக் காட்டிலும் மிகுந்திருக்கும் இவனுடைய ஸ்வார்த்த₂தா ப்ரதி பத்தியைக் கழிப்பதற்காகவே என விளங்குகிறது.

44. கடைசி ஷட்கத்தின் தொடக்கமான பதின்மூன்றும் அத்தி யாயத்தின் அவதாரிகையில், முந்தின ஷட்கத்தின் ப்ரமேயத்தைக்

கூறும்போது, " ஆத்ம கைவல்ய மாத்ராபேக்ஷாணும் " [கேவலாத்மாநுப₄வத்தை மாத்திரம் விரும்புகிறவர்களுக்கு] என்று கைவல்ய நிஷ்டூர்களைக் குறிப்பிடுவதிலிருந்து, இவர்களுக்கு ப்₃ரஹ்மத்தை அநுப₄விக்கவேண்டும் என்னும் விருப்பமே கிடையாது என விளங்குகிறது. மது₄வித்₃யா நிஷ்ட₂ர்களைப்போலே, முதலில் கேவலாத்மாநுப₄வத்தையும், பிறகு ப்₃ரஹ்மாநுப₄வத்தையும் பெறவிரும்புகிறவர்களாயிருந்தால், இவர்களை "கைவல்யமாத்ராபேக்ஷர்கள் " என்று ப₄ாஷ்யகாரர் குறிப்பிட்டிருப்பாரா என்பதை நடுநிலையாளர்கள் சிந்திக்கவேண்டும்.

45. ப₄க்தியோக₃த்தின் தொடக்கமான ஏழாம் அத்₄யாயத்தை ப₄ாஷ்யத்துடன் மொத்தமாக விமர்சிக்கும்போது,— இரண்டாவது ஶ்லோகத்தில் பரமாத்மாவான தன் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்தால், அறியவேண்டியது வேறு இல்லை என்றும், மூன்றாவது ஶ்லோகத்திலும், 26-வது ஶ்லோகத்திலும் — ஸ்வார்த்த₂மான ஸித்₃தி₄க்காக யத்னம் செய்பவர்களிடையே தன்னை உள்ளபடி அறிந்தவன் எவனுமில்லை என்றும் கூறி, தன் பெருமையைக்கூறும் 4 முதல் 12 ஶ்லோகமீறாக அசித்தைப்போலே ஜீவனும் தனக்கு அத்யந்தபரதந்த்ரனென நிரூபித்திருப்பது, தன்னை உபாஸிப்பவனை 'ப₄க்தன்' எனக் கூறாமல், பெரும்பாலும் 'ஜ்ஞாநி' என்றே கூறுவது, 19 வது ஶ்லோகத்திலே, ஞானத்தின் பூர்த்தியை அடைந்தவனைத் தனக்கே கிடைத்தற்கரியவன் என்பது, 28-வது ஶ்லோகத்தில், புண்யத்தாலே பாபம் சிறிது சிறிதாக அழியப்பெற்றவர்கள் தன்னை ஒவ்வொரு ப₂லனுக்காக ஸாத₄னங்களை அனுஷ்டி₂த்து உபாஸிக்கிறார்கள் என்பது முதலானவற்றை ஆராய்ந்தால், எம்பெருமான் - கைவல்யம் போன்ற அபாயங்களில் சிக்கவைக்கக்கூடிய ஸ்வப்ரவ்ருத்தி ரூபமான ஸாத₄நங்களைக் காட்டிலும், ஸ்வார்த்த₂மான ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்திக்கு உறுப்பான ஜ்ஞாநத்திற்கும், பரார்த்த₂ப்ரதிபத்திக்குமே முக்கியத்துவம் அளித்திருக்கிறான் என்றும், ஸாத₄நங்களை விதி₄த்திருப்பதும் அந்த ப்ரதிபத்தியை விளைப்பதற்கே என்றும் விளங்கும்.

46. இவ்வண்ணமாக, கீ₃தையிலும், அதன் ப₄ாஷ்யத்திலும், பலவிடங்களில்—கைவல்யம் ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄ம் நீங்கப்பெற்ற நித்ய முக்தியே என்றும், இக்கைவல்யநிஷ்ட₂னுக்கு அர்ச்சிராதி₃க₃தியும் ப₄க₃வத₃நுப₄வமும் கிடையாது என்றும் தெளிவாகக் காட்டியிருக்கையால், கீ₃தாசார்யனும், ப₄ாஷ்யகாரரும் தி₃வ்யப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாதாக்களின் பக்ஷத்திற்கே ஆதரவளித்துள்ளார்கள் என்று தெளிவாக விளங்குகிறது. இனி, த்₃ராவிட₃வேத₃ம் என்று புகழ்பெற்ற தி₃வ்ய ப்ரப₃ந்த₄ங்களிலும், அதன் வ்யாக்₂யானங்களிலும் கைவல்யம் ப்₃ரஹ்மாநுப₄வலேஶமுமற்ற தாழ்ந்த மோக்ஷமே என்றும், கைவல்ய நிஷ்ட₂ன் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னிலும் வேறுபட்டவன் என்றும் காட்டப்பட்டிருப்பதை விளக்குவோம்.

3. த்₃ராவிட₃வேத₃ தத்₃வ்யாக்₂யாந ஸ்வாரஸ்யம்

47. முதலாயிரத்தில் முதலானதாய், வேத₃த்திற்கு ஓங்காரம் போலே தி₃வ்யப்ரப₃ந்த₄த்திற்குத் தொடக்கத்திலுள்ள திருப் பல்லாண்டில் — ஐஸ்வர்யார்த்தி₂, கைவல்யார்த்தி₂, ப₄க₃வத₃நு ப₄வத்தை விரும்புமவன் ஆகிய மூவகை அதி₄காரிகளையும் அழைத்து மங்க₃ளாஸாஸனம் செய்யத் தம்மோடு கூட்டிக்கொள்கிறார் பெரியாழ்வார். அதில் கைவல்யார்த்தி₂யை அழைக்கும் ''ஏடு நிலத்தில்'' என்னும் நாலாம் பாசுரத்தில், ''ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம்'' என்று ''ஸூக்ஷ்மஸரீரம் ப்ரக்ருதியில் லயிப்பதற்கு முன்னம் வந்து சேருங்கள்'' என்கையாலே, இவனுக்கு விரஜா தரணத்தின்போது நிகழும் ஸூக்ஷ்மஸரீரநாஸம் ஏற்பட்டு விடுகிறது என்றும், இது ஒருவகை முக்தியே என்றும் விளங்குகிறது. ''எங்கள் குழாம் புகுந்து கூடும் மனமுடையீர்கள் வரம்பொழி வந்து'' என்கை யால், 'தம் ஆத்மாவே இனிது' என்னும் நினைவை மாற்றி, 'எம்பெருமானே இனியவன்' என்னும் நினைவைக் கொள்வதே இவன் செய்யவேண்டியது என்று கூறுகையாலே, 'ப்ரதிபத்திக்கு முக்₂யத்வமேயொழிய ஸாத₄நாநுஷ்டா₂நத்திற்கு முக்₂யத்வமில்லை, எல்லாக் கர்மங்களும் கழிந்த பின்பும் இந்நினைவினாலேயே இவனுக்குத் தாழ்ந்த மோக்ஷம் ஏற்படுகிறது' என்னும் ஸித்₃தா₄ந்தத்தைக் காட்டினார் பெரியாழ்வார். ''போதுவீர் போதுமினோ'' [திருப்பாவை1] ''யாதானும் பற்றி நீங்கும் விரதத்தை நல்வீடு செய்யும் மாதாவினைப் பிதுவை'' [திருவிருத்தம் 95] முதலான பாசுரங்களில் — பேற்றுக்குப் பரார்த்த₂ப்ரதிபத்தியே வேண்டுவது என்றும், அதை விளைப்பதற்கே, இயற்கையுறவினனான எம்பெருமான் ஸ்ருஷ்ட்யவதாரங்கள் மூலமாக வும், ஸாஸ்த்ரங்களை அளித்தும், இவன் விரும்பும் ஸ்வார்த்த₂பலன் களுக்கு அந்த ஸாஸ்த்ரங்களில் ஸாத₄நங்களை விதி₄த்தும், ஞானிகளை அவதரிப்பித்தும், மற்றும் பலவகைகளாலும் முயல்கின்றான் என்றும் மற்றையாழ்வார்களும் காட்டினார்கள். இவ்வாழ்வார்களை அடி யொற்றியே ''ப்ரதிபத்திவைஸேஷ்யாத்'' என்று கீ₃தாபா₄ஷ்யத்தில் இரண்டு இடங்களில் அருளினார் ஸ்ரீபா₄ஷ்யகாரர். ''ஒல்லை கூடுமினோ'' என்று விரைந்து வந்து சேரச்சொல்லுகையாலே, இவனுக்குக் கைவல்யமோக்ஷம் கிடைத்துவிட்டால், பிறகு எக் காலத்திலும் ப₄க₃வத₃நுப₄வரூபமான மோக்ஷம் இல்லாமற்போய்விடும் என்னும் இவனுடைய து₃ர்க்க₃தி உணர்த்தப்படுகிறது. கைவல் யார்த்தி₂க்கு கீ₃தாபா₄ஷ்யத்தில் அபுநராவ்ருத்தியைக் கூறுவதன்

மூலம் பா₄ஷ்யகாரரும் இதை அடியொற்றினர். ஐஶ்வர்யார்த்தி₂க்கு முன்னால் இவனை அழைத்தது இந்த து₃ர்க்க₃தியைக்கண்டே என்று பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்₂யானமிட்டிருப்பது காணத்தக்கது. "நமோ நாராயணாய என்று பாடும் மனமுடைப் பத்தருள்ளீர்" என்று ஓங்காரமாத்ரத்தை அநுஸந்தி₄த்து ஜந்மஸம்ஸாரக்கட்டு நீங்கித் தம் ஆத்மாவின் அநுப₄வத்தை மாத்திரம் பெற்றுப்போகாமல், மந்த்ரஶேஷத்தையும் சேர்த்து அநுஸந்தி₄த்து, ப₄க₃வத்கைங்கர்யத்தில் பே₄ாக்₃யதாபு₃த்₃தி₄ வைத்து மங்க₃ளாஶாஸநம் செய்யச்சொல்லுகையாலே, நாராயணோபனிஷத்தில் அத₂ர்வஶிரஸ்ஸில் "ஓமிதி, யமுக்த்வா முச்யதே யோகீ₃ ஜந்மஸம்ஸாரப₃ந்த₄நாத் । ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரோபாஸகோ வைகுண்ட₂பு₄வந (லோக)ம் க₃மிஷ்யதி" என்று ஓங்காரத்தை மாத்திரம் அநுஸந்தி₄ப்பவனுக்குக் கைவல்ய மோக்ஷமே என்றும், "நமோ நாராயணாய" என்பதையும் சேர்த்து அநுஸந்தி₄ப்பவனுக்கே வைகுண்ட₂ப்ராப்தி என்றும் கூறியதை விளக்குகிறார்.

48. திருப்பல்லாண்டில் கைவல்யார்த்தி₂கள் சேரும் "தீயிற் பொலிகின்ற" என்னும் பாசுரத்தில் தாங்கள் சக்ராங்கனம் பெற்று வந்ததாகக் கூறுவது பஞ்சஸம்ஸ்காரத்திற்கும் உபலக்ஷணமாகையாலே, ஆழ்வார் அழைத்தபோது நியமித்தபடி "நமோ நாராயணாய" என்னும் மந்த்ரஶேஷத்தையும் சேர்த்துத் திருமந்திரத்தை அர்த்த₂த்தோடு அநுஸந்தி₄த்து, 'ஆத்மாவையே அநுப₄விப்பது' என்னும் வரம்பை ஒழித்து எம்பெருமானுக்குப் பல்லாண்டு பாட வந்தார்கள் இவர்கள் என்று தோற்றுகிறது. இவற்றிலிருந்து, கைவல்யம் தாழ்ந்ததொரு முக்தியே என்றும், ப₄க₃வத₃நுப₄வமற்ற கைவல்யநிஷ்ட₂ன் அதையுடையவனாக ஶ்ருதி ஸூத்ரபா₄ஷ்யங்களில் அறிவிக்கப்பட்ட பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னாயிருக்கமுடியாது என்றும் விளங்குகிறது.

49. முதலாயிரத்திலுள்ளதாய், வேதமனைத்துக்கும் வித்தாய், உபநிஷத்ஸாரமான திருப்பாவையில் "ஒருத்தி மகனாய்" [25] என்னும் பாசுரத்தில் "வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்து" என்னும் ப₂லஶ்ருதியில், "வருத்தம்" என்று அசித்ஸம்ப₃ந்த₄த்தினாலேற்பட்ட துன்பங்கலந்த அசித₃நுப₄வமான ஐஶ்வர்யாநுப₄வத்தையும், "தீர்ந்து" என்று அவ்வசித்ஸம்ஸர்க்க₃ம் அடியோடு கழிகையால் துன்பங்கழியப்பெற்ற கைவல்யாநுப₄வத்தையும் உணர்த்தி, "மகிழ்ந்து" என்று தான் பெறவிருக்கும் ப₄க₃வத₃நுப₄வமே எல்லையற்ற ஆனந்த₃த்தையுடையது என்று உணர்த்தினாள்

ஆண்டாள். இதனால், கைவல்யத்தில் அசித்ஸம்ப₃ந்த₄ம் கழிகை யால் தன்னடையே உண்டாகும் ஆத்மமாத்ராநுப₄வமாகிற சிற்றின்பமே உண்டென்றும், ப₄க₃வத₃நுப₄வமாகிற பெருமகிழ்ச்சி கிடையா தென்றும் உணர்த்தப்பட்டதாகிறது. இதிலிருந்தும் கைவல்யம் வருத்தத்திற்குக் காரணமான அசித்ஸம்ஸர்க்க₃ம் அடியோடு கழியப் பெற்ற மோக்ஷமேயென்றும், ப₄க₃வத₃நுப₄வமற்ற கைவல்யநிஷ்ட₂ன் ஶ்ருதிஸூத்ரபா₄ஷ்யங்களில் ப₄க₃வத₃நுப₄வமுடையவனாக முழங்கப் படும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னாகமுடியாது என்றும் விளங்கும். ஸூசநமாத்ரமாய், வ்யாக்₂யானத்தைக்கொண்டே தெளிய அறிய வேண்டிய இத்தகைய இடங்கள் மற்றும் சிலவும் உண்டு. அவற்றை விட்டு, கைவல்யத்தைப் பற்றியது என்று பாசுரத்திலேயே தெளி வாக விளங்கும் இடங்களைக் காண்போம் இனி.

50. இரண்டாம் ஆயிரத்தில் சரமப்ரப₃ந்த₄மான திருநெடுந் தாண்டகத்தில், "முன்னுருவில் பிணிமூப்பில்லாப் பிறப்பிலி யாய்" என்று அசித்ஸம்ஸர்க்க₃த்தாலே வரும் பிணி, மூப்பு, பிறப்பு முதலான ஷட்₃பா₄வவிகாரங்களும், ஷடூ₃ர்மிகளுமற்ற முக்த ஸ்வரூபத்தை எடுத்து. "இறப்பதற்கே எண்ணாது" என்று 'அத்தகைய தன் முக்தஸ்வரூபத்தையே அநுப₄விப்பதாகிற கைவல்ய மோக்ஷம், என்றுமே ப₄க₃வத₃நுப₄வமேயற்றிருக்கிறதாகையால் ஆத்ம விநாஶத்தை ஒத்தது' என்று அருளிச்செய்தார் திருமங்கையாழ் வார். இதிலிருந்தும், கைவல்யம் ப₄க₃வத₃நுப₄வமற்ற நித்யமுக்தியே என்றும், ப₄க₃வத₃நுப₄வமுடையவனாக ஶ்ருதிஸூத்ரபா₄ஷ்யங்களில் நிலைநாட்டப்பட்ட பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னாக முடியாது என்றும் விளங்குகிறது.

51. மூன்றும் ஆயிரமான இயற்பாவில் முதல் ப்ரப₃ந்த₄மான முதல் திருவந்தாதியில், "எழுவார் விடைகொள்வார் ஈன்துழாயானை வழுவாவகைநினைந்து வைகல் தொழுவார்" [முதல் திருவ 26] என் னும் பாசுரத்தில் "எழுவார்" என்று மேன்மேலே ஐஶ்வர்யங்களில் ஆசையை வளர்த்துக்கொண்டு போகிறவர்களையும், "ஈன்துழாயானை வழுவாவகைநினைந்து வைகல்தொழுவார்" என்று நிரந்தரமாக ப₄க₃வானை அனுப₄விக்கவிரும்பி. காலமெல்லாம் அவனைத் தொழு கின்றவர்களான உபாஸகஜ்ஞானிகளையும் எடுக்கிறார் என்று தெளி வாக விளங்குகையாலே, இடையிலேயுள்ள "விடைகொள்வார்" என்னும் சொல்லாலே—ஐஶ்வர்யாநுப₄வத்திற்கும், ப₄க₃வத₃நுப₄வத் திற்கும் இடையிலேயுள்ள கைவல்யாநுப₄வத்தைப் பெறுபவர்களை ஆழ்வார் குறிப்பிடுகிறார் என்று தெளிவாகிறது. இவர்களுக்கு

"விடைகொள்வார்" என்று பெயரிடுகையாலே, "எங்களுக்கு ஆத்மாநுப₄வமே போதும்; உன் அநுப₄வம் வேண்டா" என்று நிரந்தரமாக எம்பெருமானிடமிருந்து இவர்கள் விடைகொண்டு விடுகிறார்கள் என விளங்குகிறது. இதிலிருந்தும், கைவல்யம் ப₄க₃வத₃நுப₄வமற்ற நித்ய முக்தியே என்றும், ப₄க₃வத₃நுப₄வமுடையவனாக ஶ்ருதிஸூத்ரபா₄ஷ்யங்களில் நிலைநாட்டப்பெற்ற பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னாக முடியாது என்றும் தெளிவாக விளங்குகிறது.

52. மூன்றும் ஆயிரமான இயற்பாவில் சேர்ந்ததாய், யஜுர் வேத₃ஸாரமான திருவாசிரியத்தில் "உலகு படைத்து" என்று தொடங்கும் இரண்டாம் பாசுரத்தில் "நல் வீடு" என்று பரம புருஷார்த்த₂லக்ஷணமோக்ஷத்தை விஶேஷிக்கையாலே, ப₄க₃வத₃நுப₄வமாகிற நன்மையற்றதாய், ப்ரக்ருதியிலிருந்து விடுபட்டிருக்கையாலே 'வீடு' (மோக்ஷம்) எனத்தக்கதான கைவல்யமாகிற தாழ்ந்த மோக்ஷமும் உண்டென்று உணர்த்துகிறார் நம்மாழ்வார். இதிலிருந்தும் முற்கூறிய இரண்டு விஷயங்களும் தேறுகிறது.

53. இனி, நாலாவது ஆயிரமாய், ஸாமவேத₃ஸாரமான திருவாய்மொழியில் கைவல்யத்தைப் பற்றிய இடங்களைக் காண்போம். முதல்பத்தில் இரண்டாம் திருமொழியான வீடுமின்முற்றத்தில், ஐந்தாம் பாசுரத்தில் "அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்" என்று, ப்ராக்ருத விஷயங்களில் பற்று அறுந்துவிட்டால், ப்ரக்ருதியினின்று நீங்கிய தன் ஆத்மாநுப₄வமாகிற 'வீடு' (மோக்ஷம்) உண்டாகிவிடும் என்று கூறுகையாலே, கைவல்யம் ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄மற்ற மோக்ஷமே என உணர்த்துகிறார் ஆழ்வார். "அது செற்று மன்னுறில் அற்றிறை பற்றே" என்னும் பிற்பாதியில் "அந்த மோக்ஷமாகிற அபாயத்தில் அகப்படாமல், ப₄க₃வச்சே₂ஷத்வமே வடிவான உம் ஸ்வரூபத்தைப்பெற்று நிலைநிற்கவேண்டியிருந்தால், விஷயங்களில் பற்றை விடும்போதே எம்பெருமானைப் பற்றிவிடுங்கள்" என்கிறார். 'அது செற்று' என்னும் பத₃ங்களாலே, ப₄க₃வத₃நுப₄வம் என்றுமேயில்லாமல் செய்துவிடும் அபாயமான அக்கைவல்யத்தை முகம் சிதறப் புடைத்துத் தள்ளவேணும் என்கிறார் ஆழ்வார். இவற்றிலிருந்தும் முற்கூறிய இரு விஷயங்களும் தேறுகிறது. இங்கு — "மன்னுறில்" [நிலைநிற்கவேண்டியிருக்கில்] என்று ஆழ்வார் அருளுகையாலே, ப₄க₃வத₃நுப₄வமே நிலைநின்ற (நித்யமான) புருஷார்த்த₂ம் என்றும், கைவல்யம் நிலைநில்லாததே (அநித்யமே) என்றும் விளங்குகிறதே — என்று சிலர் செய்யும் வாத₃ம், "குறுகா

நீளா'' [6-9-10] முதலானவிடங்களில் திருவாய்மொழியிலேயே பலவிடங்களில் ஆழ்வார் கைவல்யத்தை நித்யமாகக் கூறுகையாலே தள்ளப்படுகிறது. ''அதில் அகப்படாதே ப₄க₃வச்சே₂ஷதைகரஸமான உன்னுடைய ஸ்வரூபத்தைப்பெற்று நிலைநிற்கவேண்டியிருக்கில்'' என்று ஆறுயிரப்படியில் பிள்ளானும் ''மன்னுறில்'' என்னும் பத₃ம் ஶேஷத்வஸ்வரூபத்தைப்பெற்று நிலைநிற்பதையே குறிக்கிறது என்று காட்டினர். ''(மன்னுறில்) மன்னவுறில்; தன்னைப்பற்றினால் 'இன்னமும் அதற்கு அவ்வருகே ஒரு அநுப₄வமுண்டு' என்று இருக்கவேண்டாதபடியான நிலைநின்ற புருஷார்த்த₂த்தைப் பற்றப் பார்க்கில்'' என்று நம்பிள்ளை அருளியபடியே, 'தனக்கு மேல் ஓரநுப₄வமுண்டு' என்று சொல்லத்தக்கதாகையாலே, நித்யமான போதிலும் கைவல்யம் நிலைநில்லாதது என்றும் கொள்ளலாம். ஆகையால், முன்னும் பின்னும் நாம் காட்டும் நூற்றுக்கணக்கான ப்ரமாணங்களுக்கு முரணுக. இப்பாசுரங்கொண்டு 'கைவல்யம் அநித்யம்' என்று ஸாதி₄க்க எண்ணுவது பகற்கனவாகவே முடியும்.

54. ஆழ்வார் தம் தாழ்வைப்பார்த்து எம்பெருமானைவிட்டு நீங்கநினைக்கும் ''வளவேழுலகு'' என்னும் திருவாய்மொழியில் ''அடியேன் சிறிய ஞானத்தன்'[திருவாய் 1-5-3] என்னும் பாசுரத்தில், ''செடியார் ஆக்கை அடியாரைச் சேர்தல் தீர்க்கும் திருமாலை''என்னும் அடியில் கைவல்யநிஷ்ட₂ரைச் சொல்லும்போது, அவர்களுக்கு ஶரீரஸம்ப₃ந்த₄ம் அடியோடு கழிந்துவிடுகிறது என்றும், ''தம்மைப் போலே எம்பெருமானைக் கிட்டி அவனுக்கு தோ₃ஷத்தை விளைக்காமல், அவனைவிட்டு என்றும் விலகிப்போகும் கேவலரே உண்மையான அடியார்கள்'' என்றும் உணர்த்துகையாலே, முற்கூறிய இரு விஷயங்களும் இப்பாசுரத்திலிருந்தும் தேறுகிறது. '''இவனைக்காண வேணும்' என்று ஆசைப்படாதே இவன்பக்கலிலே கைவல்யாதி₃ ப்ரயோஜனங்களைக்கொண்டு அகன்றுபோவார்கள் என்ன பூ₄ாக்₃யம் பண்ணினுரோ? நானும் அங்ஙனே ஆகப்பெற்றிலேன் என்று நோகிருர்'' என்று பிள்ளான் ஆறுயிரப்படியில் அருளியது அநுஸந்தி₄க்கத்தக்கது.

55. ''பிறவித்துயரற'' [1-7-1] என்னும் பாசுரத்தில் கேவலரைப் பேசுகிருர் ஆழ்வார் என்பது எல்லா வ்யாக்₂யானங்களிலிருந்தும் விளங்குகிறது. இங்கு'பிறவி' என்றது ஐந்து விகாரங்களுக்கும், ஷடூ₃ர்மிகளுக்கும் உபலக்ஷணமாகையாலே,''ஜராமரணமோக்ஷாய'' [கீ₃தை 7-29] முதலானவிடங்களிற்போலே இப்பத₃த்திலிருந்தும், இவனுக்கு ப்ராக்ருதஶரீரம் அடியோடு கழிந்துவிடுகிறது என விளங்குகிறது.

''துறவிச்சுடர்விளக்கம் தலைப்பெய்வார்'' என்கையாலே, முற்கூறிய ஶரீரநாஶத்தாலே, இவன் முக்தியடைந்து ஜ்ஞாநவிகாஸம் (அறிவு விளக்கம்) பெற்றுவிடுகிறான் என்று காட்டுகிறார். ''அறவனை'' என்கையாலே, ''எங்களுக்கு நீ வேண்டா, எங்களுடைய ஆத்மாநுப₄வமே போதும்'' என்கிறவர்களுக்கும் அதைக்கொடுக்கும் ஔதா₃ர்யத்தை ஆழ்வார் கொண்டாடுகிறார். ''ஆழிப்படை அந்தணனை'' என்கையாலே, ஆத்மாநுப₄வவிரோதி₄யைப் போக்குவதற்குக் கையும் திருவாழியுமாயிருப்பவன் என்றும், தங்களுக்குள்ள அஶுத்₃தி₄யாகிற அசித்ஸம்ப₃ந்த₄த்தைக் கழிக்கவல்ல ஶுத்₃த₄ன் என்றும் இவர்கள் அநுஸந்தி₄ப்பதைக் காட்டுகிறார் ஆழ்வார். ''அந்தணன் என்று சாணிச்சாற்றோபாதி ஶுத்₃த₄ன் என்று கொண்டார்களித்தனை; போ₄க்₃யதையிலே நெஞ்சு சென்றதில்லை;...கையும் திருவாழியுமான அழகைக்கண்டால் அதில் கால் தாழாதே, தங்கள் ப்ரயோஜனத்துக்கு உறுப்பான ஶுத்₃தி₄மாத்ரத்தையே பற்றுவதே!'' என்னும் ஈட்டு ஶ்ரீஸூக்திகள் இங்கு அநுஸந்தி₄க்கத்தக்கவை. ''மறவியையின்றி மனத்து வைப்பரே'' என்கையாலே, ''எங்களை நெஞ்சழிக்கும் பரம போ₄க்₃யமான திருமேனியைக் கண்டுவைத்தும், தாங்கள் விரும்பும் க்ஷுத்₃ரபுருஷார்த்த₂மான கைவல்யாநுப₄வத்தை மறக்காமல் நினைவிற்கொண்டு, அதற்கு ஸாத₄நமாக அவனை நினைப்பதே!'' என்று ஆழ்வார் ஆஶ்சர்யப்படுகிறார். இவற்றிலிருந்தும் முற்கூறிய இரு விஷயங்களும் மிகத் தெளிவாக விளங்குகிறது.

56. ''பிறவித்துயரற'' [1-7-1] ஈட்டு வ்யாக்₂யானத்திலேயே, ''ஐஶ்வர்யார்த்தி₂க்கும், ஆத்மப்ராப்திகாமனுக்கும், ப₄க₃வத்ப்ராப்தி காமனுக்கும் ஒக்குமாயிற்று ஸர்வேஶ்வரனை உபாஸிக்கையும், அந்திமஸ்ம்ருதியும்; இனிப் பேற்றில் தாரதம்யம் வரும்படியென்? என்னில்; உபாஸநஸமயத்தில் சிறுகக்கோலுகையாலே. அதாவது-அவனளவும் செல்லாதே நடுவில் வரம்பிட்டுக்கொள்ளுகை. அத்தையிறே ''வரம்பொழிவந்து'' [திருப்பல் 4] என்கிறது. அதுதனக்கு அடி அவர்கள் ஸுக்ருததாரதம்யம்'' என்று அருளிச்செய்திருப்பதிலிருந்து, கைவல்யநிஷ்ட₂னுக்கும், ப₄க₃வத₃நுப₄வகாமனுக்கும் எல்லாக்கர்மங்களும் கழிந்தபோதிலும் பேற்றில் வாசி ஏற்படுவது, ஸுக்ருததாரதம்யமடியாகச் சிறுகவும் பெருகவும் கோலும் அவர்களுடைய ப்ரதிபத்தி வேறுபாட்டாலேயே என விளங்குகிறது. இதையே கீ₃தாபா₄ஷ்யத்தில் இரண்டு இடங்களில் ப்ரதிபத்தி வைஶேஷ்யஶப்₃த₃த்தாலே காட்டினார் பா₄ஷ்யகாரர் என்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

57. ''அமரர் தொழப்படுவானை'' [திருவாய் 3-5-9] என்னும் பாசுரத்தில் ''அமரமனத்தினுள் யோகு புணர்ந்து அவன் தன்னொ டொன்றாக அமரத்துணியவல்லார்கள்'' என்று, அந்திமஸ்ம்ருதி ஸமயத்தில் ஸாத்₃தி₄விஷயத்தில் எம்பெருமானை ஒத்திருப்பது தம் ஆத்மஸ்வரூபம் என்று கேவலர் உபாஸிப்பதாகக் கூறி அவர்களை நிந்தி₃க்கையால், இக்கைவல்யாநுப₄வம ஸாத்₃த₄ாத்மஸ்வரூபத்தை அநுப₄விக்கும் முக்தியே என்றும், இவனுக்கு ப்₃ரஹ்மாநுப₄வமில்லை என்றும் விளங்குகிறது. ஆகையால், முற்கூறிய இரு விஷயங்களும் இதிலிருந்தும் தேறுகிறது.

58. நாலாம் பத்தில், ஐஸ்வர்ய கைவல்ய வைராக்₃யத்தைப் பிறர்க்கு உபதே₃ஶிக்கும் ''ஒரு நாயகம்'' என்று தொடங்கும் முதல் திருவாய்மொழியில், முதல் ஒன்பது பாசுரங்களாலே ப்ராக்ருதமான இவ்வுலகச் செல்வங்களும், ஸ்வர்க்க₃ம் முதலான மறுமைச் செல்வங்களும் அற்பமாகவும், அஸ்தி₂ரமாகவும் (நிலையற்ற தாகவும்) இருக்கையாலே கைவிடத்தக்கவை என்று உபதே₃ஶித்து, ''அப்படியானால், ஐஸ்வர்யத்தைப்போலே அற்பமாயும், அஸ்தி₂ர மாயும் இராமல், அளவில்லாத இன்பமாய், நிலையானதான கைவல் யத்தைப் பயனாகப் பற்றலாமோ ?'' என்னும் கேள்வி எழுந்தவளவில், ''குறுகமிக'' என்று தொடங்கும் பத்தாம் பாசுரத்தாலே அதற்கு பதில் கூறுகிறார் நம்மாழ்வார். இப்பாசுரத்திற்கு ஆறாயிரப்படியில் அருளியபடி பொருள் பின்வருமாறு:— ''குறுக மிக உணர்வத்தொடு நோக்கி, இறுகல் இறப்பென்னும் ஞானிக்கும்'' என்னும் பகுதியாலே, ''கைவல்யநிஷ்ட₂ன் ஜ்ஞாநயோக₃த்தை ஸாத₄னமாகக்கொண்டு நெஞ்சை ஆத்மாவில் ஈடுபடுத்தி, அதை நேரே கண்டு, ப₄க₃வத₃நு ப₄வத்தைக் காட்டிலும் இறுகியதான (சுருங்கியதான) அந்த மோக்ஷத்தையே புருஷார்த்த₂மாகக் கொள்கிறான்'' என்று காட்டுகை யாலே, கைவல்யம் ப₄க₃வத₃நுப₄வத்தைக் காட்டிலும் தாழ்ந்த தாயினும், அதுவும் ஒருவகை மோக்ஷமே என்று ஆழ்வார் திரு வுள்ளம் பற்றுகிறார் என்று தெளிவாக விளங்குகிறது. ''எல்லாம் விட்ட ஞானி'' என்னும் பகுதியாலே, 'இக்கைவல்யநிஷ்ட₂ன் தன் பயனைப் பெறுவதற்குத் தடையான அசித்தில் பற்றை அடியோடு விடவேண்டும்' என்று காட்டுவதும், இவன் பெறும் பயனில் அசித₃நுப₄வம் அடியோடு கிடையாது என வலியுறுத்துகிறது. ''அப்பயனில்லையேல் சிறுக நினைவதோர் பாசமுண்டாம்'' என்று, ''எம்பெருமானை ஆஶ்ரயிக்காவிடில் ஆத்மாநுப₄வத்திற்குத் தடை யான கர்மம் நீங்காதாகையாலே, மறுபடியும் விஷயங்களில் ஈடுபாடு உண்டாகிவிடுமாகையாலே அந்தக் கைவல்யமோக்ஷமும் ஸித்₃தி₄ யாது'' என்று காட்டுகையாலே, தமக்குப் பயனாயிருக்கும் ப₄க₃வ தா₃ஶ்ரயணத்தைக் கைவல்யநிஷ்ட₂ன் ஸாத₄னமாகவே கொள்கிறான்

என்றும், விஷயாநுபவத்திற்கு எதிர்த்தட்டாயிருப்பது கைவல்யாநுபவம் என்றும் காட்டுகிறார். "மறுகலில் ஈசனைப் பற்றிவிடா விடில் பின்னும் வீடில்லை" என்னும் பகுதியாலே, "எம்பெருமானை உபாயமாக ஆஶ்ரயித்து ஆத்மாவைக் கண்டாலும், அந்திம ஸமயத்திலாவது எம்பெருமானை ப்ராப்யமாக அநுஸந்தித்து, முக்யமோக்ஷமான பகவத் கைங்கர்யத்திற்குத் தடையான தன் ப்ரதிபத்தியைப் போக்கிக்கொள்ளாவிடில், அந்த முக்யமோக்ஷம் ஸித்திக்காது" என்கையாலே, 'தன் ஸ்வார்த்த ப்ரதிபத்தியை மாற்றிக்கொள்வதே முக்யமோக்ஷத்தைப்பெற இவன் செய்யவேண்டியது'என்று காட்டினார். "வீடு அஃதே" என்னும் பகுதியாலே, பரமமோக்ஷமான அந்த பகவத் கைங்கர்யமே முக்யமோக்ஷம் என்று காட்டினார். ஆறாயிரப் படியில் பிள்ளான் "அஸ்திரத்வாதி தோஷாஸம்பிந்நமான கைவல்யத்தை" என்று இப்பாசுர வ்யாக்யானத்தைத் தொடங்குவதன் மூலம், கைவல்யம் நித்யமானதே என்று தெளிவாகக் காட்டினார். "எம்பெருமானை ஆஶ்ரயித்தாலல்லது ஆத்மாவலோகந விரோதி கர்மம் போகாது" என்கையால், 'எம்பெருமானை ஆஶ்ரயித்து ஸகல கர்மங்களும் போனபின்பே கைவல்யமோக்ஷம் ஸித்திக்கிறது' என்று காட்டினார். "பகவத் ஸமாஶ்ரயணத்தாலே ஆத்மாவலோகனம் பிறப்பது; பிறந்தாலும், அந்திமதஶையிலே பகவதநுஸந்தானம் பண்ணி ப்ரதிபந்தகத்தைப் போக்காதொழியில், பின்னை ஆத்மயாதாத்ம்யாவிர்ப்பாவலக்ஷண மோக்ஷம் ஸித்தியாது; முக்யமான மோக்ஷமாகிறதும் அந்த பகவத்கைங்கர்யமே" என்று, 'பகவதநுஸந்தானம் பண்ணி ப்ரதிபந்தகத்தைப் போக்கவேணும்' என்கையாலே, 'கைவல்யநிஷ்டனுடைய ப்ரதிபத்தியே ஸர்வகர்மங்கள் கழிந்த பின்பும் அவனுக்கு முக்யமோக்ஷத்திற்குத் தடையாயுள்ளது, அந்திம ஸ்ம்ருதியிலாவது அவன் ப்ரதிபத்தியை மாற்றிக்கொள்ளாவிடில் அவனுக்கு என்றும் பரமமோக்ஷம் கிடைக்காது' எனத் தெளிவாகக் காட்டினார். "ஆத்மாவலோகந விரோதிகர்மம்"என்று கர்மஶப்தத்தையும் "பகவதநுஸந்தானம் பண்ணி ப்ரதிபந்தகத்தைப் போக்காவிடில்" என்று 'பகவதநுஸந்தானம்' 'ப்ரதிபந்தகம்' என்னும் பதங்களையும் இட்டிருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது. "ஆத்மயாதாத்ம்யாவிர்ப்பாவலக்ஷணமோக்ஷம்"என்று பகவத்கைங்கர்யத்தைக் குறிக்கையாலே, கீதாபாஷ்யத்தில் 'அக்ஷரயாதாத்ம்ய'த்தை அடைபவனாகச் சொல்லப்பட்டவனான கைவல்யார்த்தியைக் காட்டிலும், 'ஆத்மயாதாத்ம்யவித்' என்று சொல்லப்பட்ட பஞ்சாக்நிவித்யாநிஷ்டன் வேறுபட்டவன் என்று தெளிவாக உணர்த்தினார். ஆக, இவ்வண்ணமாக எம்பெருமானாரின் நியமனத்தினால், அவரால் ஜ்ஞானபுத்ரராக அபிமானிக்கப்பெற்ற பிள்ளானால் இயற்றப்பெற்ற ஆறாயிரப்படியிலிருந்தே கைவல்யம் நித்யமுக்தியே என்றும், கைவல்யநிஷ்டன் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனைக்காட்டிலும் வேறுபட்டவன் என்றும் விளங்குகிறது.

59. இப்பாசுரத்தின் மற்ற வ்யாக்₂யானங்களில் விவரிக்கப்பட்ட பொருள் வேறுபாடுகள் பின்வருமாறு:- ''எல்லாம் விட்ட ஞானி'' என்றதுக்கு ''ப்ராக்ருதவிஷயங்கள் எல்லாவற்றையும் விட்ட ஜ்ஞாந யோக₃நிஷ்ட₂ன்'' என்று பிள்ளானைப்போல் பொருள்கொள்ளாமல், ''ஐஶ்வர்யம்,ப₄க₃வத₃நுப₄வம் என்னும் மற்ற இரண்டு புருஷார்த்த₂ங்களையும் விட்ட ஜ்ஞாநயோக₃நிஷ்ட₂ன்'' என்று மற்ற வ்யாக்₂யாதாக்கள் பொருள்கொண்டார்கள். இதிலிருந்தும் ' கைவல்யநிஷ்ட₂னுக்கு ப்ராக்ருதஸுக₂ங்கள் நீங்கப்பெற்ற ஒருவகையான மோக்ஷம் ஏற்பட்டுவிடுகிறது ' என்றும், 'அந்த மோக்ஷத்தில் ப₄க₃வத₃நுப₄வம் அடியோடு கிடையாது' என்றும் விளங்குகிறது. ''மறுகலில் ஈசனைப் பற்றி விடாவிடில், பின்னும் வீடில்லை'' என்னும் பகுதிக்கு ''அந்திம காலத்தில், தாழ்வுகள் ஒன்றும் இல்லாதவனாகவும், ஜ்ஞாநத்தையே வடிவாகக்கொண்டவனாகவும் எம்பெருமானை அநுஸந்தி₄த்து, இவ்விஷயங்களில் அவனை ஒத்தவனாகத் தன் ஆத்மாவையும் அநுஸந்தி₄த்து இந்த ஶரீரத்தை விடவில்லையானால், அந்தக் கைவல்ய மோக்ஷமும் ஸித்₃தி₄க்காது'' என்று பொருள்கொண்டார்கள். இதிலிருந்தும்—அந்திமஸ்ம்ருதியில் எம்பெருமானைப்போலே தன் ஆத்மாவும் ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄த்தால் வரும் தாழ்வுகள் அற்றது என்றும், ஜ்ஞாநத்தையே வடிவாகக்கொண்டது என்றும் அநுஸந்தி₄ப்பதன் மூலம், ப்ரக்ருதிஸம்ப₃ந்த₄ம் அற்றதாய், ஜ்ஞாநத்தையே வடிவாகக் கொண்டதான, தன் ஆத்மாவை அநுப₄விப்பதாகிற மோக்ஷத்தையே கைவல்யநிஷ்ட₂ன் பெற்றுவிடுகிறான் என்று விளங்குகிறது. ஆகையால், ஸூக்ஷ்மஶரீரம் நீங்கமுடியாத இந்த ப்ரக்ருதிமண்ட₃லத்திலேயே கைவல்யாநுப₄வம் ஏற்படுகிறது என்று ஆழ்வாரும், அவருடைய திருவுள்ளக் கருத்தறிந்த ஆசார்யர்களில் எவரும் திருவுள்ளம் பற்றவில்லை என்றும் விளங்குகிறது.

60. நாலாம்பத்தில் ஒன்பதாம் திருவாய்மொழியில் பத்தாம் பாட்டில் ''கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி கண்ட இன்பம்'' என்று இவ்வுலகத்திலுள்ள ப்ராக்ருதமான விஷயங்களை அநுப₄விப்பதாலுண்டாகும் ஐஶ்வர்ய ஸுக₂ங்களை எடுத்து, ''தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்'' என்று முற்கூறிய விஷயஸுக₂ங்களிலேயே உழலும் ஸம்ஸாரிகளுக்கு அறிய இயலாததாய், அந்த ப்ராக்ருதமான இன்பங்களைக் காட்டிலும் பெருத்திருக்கையாலே அளவில்லாததாய், ப₄க₃வத₃நுப₄வ ஸுக₂த்தைக் காட்டிலும் மிகச் சிறிதாகையாலே சிற்றின்பம் எனத்தக்கதான

கைவல்யாநுபவத்தை எடுத்து, இவ்விரு அநுபவங்களையும் ஸ்ரிய: பதியை அநுபவிக்கப்பெற்ற தான் கைவிட்டதாகக் கூறுகிறார் ஆழ்வார். எல்லா வ்யாக்யானங்களிலும் இப்படியே விவரணம் உள்ளது. "தெரிவரிய அளவில்லா" என்கையாலே "அல்பமும், அஸ்திரமுமான ஐஶ்வர்யஸுகங்களைப்போலல்லாமல், கைவல்யாநுபவம் அளவற்ற இன்பமாய் இருக்கிறது" என்று கூறப்படுகையாலே, இது ஒருவகையான மோக்ஷமே என்று உணர்த்தப்படுகிறது. 'சிற்றின்பம்' என்கையாலே, பகவதநுபவமாகிற பேரின்பம் இவனுக்கு இல்லை என்று உணர்த்தப்படுகையால், பகவதநுபவம் உடையவனாக ஶ்ருதிஸூத்ரபாஷ்யங்களில் நிர்ணயிக்கப்பட்ட பஞ்சாக்நிவித்யாநிஷ்டன் கைவல்யநிஷ்டனாயிருக்கமுடியாது என்றும் விளங்குகிறது.

61. ஆறும்பத்து ஒன்பதாம் திருவாய்மொழி பத்தாம் பாட்டில் "குறுகா நீளா இறுதி கூடா எனையூழி சிறுகா பெருகா அளவில் இன்பம்" என்று கைவல்ய மோக்ஷாநந்தத்தைக் குறிப்பதன் மூலம் இது நித்யமான மோக்ஷமே என்று மிகத் தெளிவாகக் காட்டினார் ஆழ்வார். "வைஷயிக ஸுகம் அல்பாஸ்திரத்வாதி தோஷதுஷ்டமாகையாலே உமக்கு அபேக்ஷிதமன்றாகில், ப்ராசுர்யஸ்திரத்வாத்யநேக குணயுக்தமான கேவலாத்மாநுபவ லக்ஷண ஸுகத்தை ப்ராப்யமாகக் கொள்ளலாகாதோ? என்னில்" என்று ஆறாயிரப்படியில் அவதாரிகை இடுவதன்மூலம் நிலையற்ற இவ்வுலக ஸுகங்கள் போலல்லாமல், நிலையான மோக்ஷாநந்தமாயிருப்பது கைவல்யாநுபவம் என்று பிள்ளான் காட்டினார். மேலே வ்யாக்யானத்திலும் இதை உறுதிப்படுத்தினார். மற்ற ஆசார்யர்களும் இப்படியே விவரித்தார்கள். இதிலிருந்து, கைவல்யம் நித்யமான மோக்ஷம் என்றே திவ்யப்ரபந்த வ்யாக்யாதாக்கள் அனைவரும் திருவுள்ளம் பற்றினார்கள் என்று விளங்குகிறது. "மறுகாலின்றி உனக்கே ஆளாகும் சிறுகாலத்தை உறுமோ? அந்தோ! தெரியிலே" என்னும் பகுதியாலே "ஆராய்ந்தால், அளவற்ற நித்யமோக்ஷமான அக்கைவல்யாநுபவம், எம்பெருமானுக்கு ஆட்செய்வதால் ஏற்படும் கணநேர இன்பத்திற்கும் ஈடாகாது" என்று கூறுவதன்மூலம், கைவல்ய நிஷ்டனுக்கு பகவதநுபவ ஸுகம் அடியோடு கிடையாது என்று உணர்த்தினார் ஆழ்வார். இதிலிருந்தும் கைவல்யநிஷ்டன் பகவதநுபவமுடைய பஞ்சாக்நிவித்யாநிஷ்டனாயிருக்க முடியாது என்று விளங்குகிறது.

62. ஏழாம்பத்து ஐந்தாம் திருவாய்மொழி பத்தாம் பாட்டில் "பெருந்துன்பம்" என்று ஆழ்வார் கைவல்யத்தைக் குறிப்பதாகப்

பிள்ளான் முதலிய எல்லா வ்யாக்₂யாதாக்களும் பொருள் கொண்டார்கள். ''கைவல்யரூப மஹாநர்த்த₂ம்'' என்று விவரித்தார் பிள்ளான். ''அளவிலின்பம்'' என்று ஆழ்வார் தாமே அருளிச்செய்கையாலே, அதற்கு முரணாக, ''பெருந்துன்பத்தைத் தருவது'' என்னும் பொருளில் 'பெருந்துன்பம்' என்று ஆழ்வார் இக்கைவல்யத்தைக் குறிக்கமாட்டாராகையாலே, 'பெரிய அனர்த்த₂த்தைத் தருவதாகையாலே பெருந்துன்பத்தை ஒத்தது' என்றே எல்லா ஆசார்யர்களும் பொருள் கொண்டார்கள். அப்படி இதனால் வரும் அநர்த்த₂ம் என்ன ? எனில் ; 'ப₄க₃வத₃நுப₄வம் இல்லாவிட்டாலும், ஐஶ்வர்ய ஸுக₂த்தைப் பெற்றவனுக்கு அது நிலைநில்லாததாகையாலே பிறிதொருகாலத்தில் ப₄க₃வத₃நுப₄வத்தைப் பெறுவதற்கு இடமுண்டு; ப₄க₃வத₃நுப₄வ மற்ற இக் கைவல்யாநுப₄வம் நித்யமானதாகையாலே, என்றுமே இவனுக்கு ப₄க₃வத₃நுப₄வமில்லாமல் செய்து விடுமாகையாலே பெருந்துன்பத்தை ஒத்த மஹாநர்த்த₂த்தைத் தருவது இது' என்று கருத்து. இப்படியே இருபத்துநாலாயிரப்படியிலும், ஈட்டிலும் விவரிக்கப்பட்டது. இதிலிருந்து 'இவனுக்கு என்றுமே ப₄க₃வத₃நுப₄வம் இல்லாமல் போய்விடுகிறது' என்றே எல்லா ஆசார்யர்களும் திருவுள்ளம் பற்றினர்கள் என்று தெளிவாக விளங்குகிறது. ஆகையால், இப்பாசுரத்திலிருந்தும் கைவல்யம் நித்யமான மோக்ஷமே என்றும், கைவல்யநிஷ்ட₂ன் ப₄க₃வத₃நுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னாக முடியாது என்றும் விளங்குகிறது.

63. எட்டாம்பத்து மூன்றாந்திருவாய்மொழி இரண்டாம் பாட்டில் கைவல்ய நிஷ்ட₂னை இகழ்கிறார் ஆழ்வார். இப்பாட்டின் ஆறாயிரப்படியில் ''ஐஶ்வர்யோபாய விதா₄யக ஶாஸ்த்ரங்களை விட்டு, மோக்ஷோபாய விதா₄யக ஶாஸ்த்ரத்தை அவலம்பி₃த்த நாமும்...... ஸம்ஸார நிவ்ருத்தி மாத்ரத்தை ப்ராப்யமாகப் பற்றினோமித்தனையிறே; அவன் திருவடிகளை ப்ராப்யமாகப் பற்றிலோமிறே.'' என்று கைவல்யார்த்தி₂யின் பாசுரமாக அமைந்த இப்பாட்டின் பொருள் விவரிக்கப்பட்டது. ''மரணம் தோற்றம் வான் பிணி மூப்பென்றிவை மாய்த்தோம்'' என்று ''இவனுக்கு ஸம்ஸார ஸம்ப₃ந்த₄ம் அடியோடு கழிந்து விடுகிறது'' என்று பாட்டின் இரண்டாமடியில் காட்டப்பட்ட கருத்தை உட்கொண்டு, இவனுக்கு ஸம்ஸார நிவ்ருத்தி மாத்ரமே ப்ராப்யமென்றும், எம்பெருமான் திருவடிகள் ப்ராப்யமல்ல என்றும், இவன் ஐஶ்வர்யத்துக்கு உபாயங்களை விதி₄க்கும் ஶாஸ்த்ரங்களைவிட்டு, மோக்ஷோபாயத்தை விதி₄க்கும் ஶாஸ்த்ரங்களைப் பின்பற்றியவன் என்றும் தெளிவாகக் காட்டுகிறார் பிள்ளான். மற்ற வ்யாக்₂யாதாக்

களும் இதையே விவரித்தார்கள். "விரோதி₄நிவர்த்தகமான கனலாழியைக் கையிலேந்தியவனாகையாலே, அதையே பற்றாசாகக் கொண்டு, 'தங்களுடைய விரோதி₄யான ஸம்ஸாரத்தையும் அவன் கழித்துத் தருவான்' என்னும் கருத்தாலே இவர்கள் எம்பெருமானைக் கைவல்யத்திற்கு உபாயமாக நினைத்தார்களேயொழிய, ப்ராப்யமாக நினைக்கவில்லை" என்று "கனலாழி அரணத்திண் படை ஏந்திய ஈசற்காளாயே" என்னும் பாசுரப் பகுதிக்குக் கருத்து தெளிவாகக் காட்டப்பட்டது. இதிலிருந்தும் கைவல்ய நிஷ்டனுக்குக் கிடைப்பது ஸம்ஸாரம் அடியோடு நீங்கும் மோக்ஷமே என்றும், ப₄க₃வத₃நுப₄வம் அவனுக்கு அடியோடு கிடைப்பதில்லை என்றும் தெளிவாக விளங்குகிறது. ஆகையால், கைவல்யம் நித்யமுக்தியே என்றும், ப₄க₃வத₃நுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்டனே கைவல்யநிஷ்டனாக முடியாது என்றும் வயிரவுருக்காக நிலைநாட்டப்பட்டது.

64. எட்டாம்பத்து எட்டாம் திருவாய்மொழி ஐந்தாம்பாட்டு முதல் எட்டாம்பாட்டு முடிய, ஆழ்வார் ஒருவகையான ஆத்மாநுப₄வத்தைப் பேசி, அதை "வீடு (மோக்ஷம்)" என்று நிர்த்தே₃ஶிக்கிறார். ஐந்தாம்பாட்டின் ஆறாயிரப்படியில் "நாலாம்பாட்டளவும் ஆத்மநிதாத்பர்யமாய், நிர்த்தே₃ஶத்தை ப₄க₃வத்பர்யந்தமாகப் பண்ணிகொடுபோந்தது. இனி, இந்நிர்த்தே₃ஶமும் ஆத்மபர்யந்தமே ஆகிறது" என்று அவதாரிகையிடுகையாலே, இந்த நாலுபாட்டுகளும் கேவலாத்மாவைப் பற்றியவை என்பது பிள்ளான் திருவுள்ளம் என்று விளங்குகிறது. ஏழாம்பாட்டின் ஆறாயிரப்படியில் "இந்த ஆத்மஸ்வரூபாவிர்ப்ப₄ாவமே மோக்ஷமாகிறது, மோக்ஷம்பெற்றால் பெரும் ஸுக₂மாவதும் அதுவே என்று அத்₄யவஸித்துக்கொண்டு வ்யதிரிக்த விஷயஸங்க₃த்தையெல்லாம் விடில். ஆத்மஸ்வரூபாவிர்ப்ப₄ாவலக்ஷணமாயிருந்த மோக்ஷம் கைவரும். இப்படிச் செய்யாதாருக்குக் கைவாராது. அவர்கள் ஸம்ஸரித்தேபோமித்தனை என்கிறார்" என்று அருளிச்செய்யப்பட்டது. எட்டாம்பாட்டின் ஆறாயிரப்படியில், "இவ்வாத்மஸ்வரூபாவிர்ப்ப₄ாவ லக்ஷணமோக்ஷமானது இந்த்₃ரிய ஜயமாத்ரத்திலே கைவாராது; அந்திமத₃ஶையிலே ப₄க₃வத்ஸமாகாராத்மாநுஸந்த₄நமும் வேண்டும் என்கிறார்" என்று அருளிச்செய்யப்பட்டது. இவற்றிலிருந்து, நாலாம் பாட்டுவரையில் ப₄க₃வத்பர்யந்தமாக நிர்த்தே₃ஶம் பண்ணியபோதிலும், ஆழ்வாருக்கு ஆத்மஸ்வரூபத்தைக் காட்டுவதிலே தாத்பர்யம் என்றும், ஐந்தாம்பாட்டு முதல் எட்டாம்பாட்டுவரை அவ்வாத்மாவைப் பிரித்து அநுஸந்தி₄த்து, அதன்ப₂லனாகச் சிலர் அடையும் கேவலாத்மாநுப₄வரூபமான கைவல்ய

மோக்ஷத்தை ஆழ்வார் விவரிக்கிறார் என்றும் பிள்ளான் திருவுள்ளம் பற்றுகிறார் என விளங்குகிறது. இங்கு பிள்ளான், கைவல்யத்தை ஆத்மாவுக்கு த₄ர்மபூ₄தஜ்ஞாநத்தின் சுருக்கம் நீங்கப்பெற்று ஸ்வரூபாவிர்ப்பா₄வம் ஏற்பட்டிருக்கும் நித்யமோக்ஷமாகவும், ஸம்ஸாரத்துக்கு எதிர்த்தட்டாகவும் அருளிச்செய்திருப்பது குறிக்கொள்ளத்தக்கது. இப்பாட்டுக்களின் இருபத்து நாலாயிரத்திலும், ஈட்டிலும் எம்பாரும் இதே நிர்வாஹத்தை அருளியதாகக் காட்டப்பட்டது. அவ்விரண்டு வ்யாக்₂யானங்களிலும், இப்படி த₄ர்மியான எம்பெருமானைவிட்டுப் பிரித்து, த₄ர்மமான ஆத்மாவை மாத்திரம் அநுப₄விக்கும் கைவல்யமோக்ஷத்தைக் குறிப்பதாகக்கொள்ளாமல், ஆத்மாவை ப₄க₃வச்சே₂ஷமாக அநுஸந்தி₄த்து, ப₄க₃வத₃நுப₄வத்தையே பெறுமவனாக (பஞ்சாக்₃நிவித்₃யையில்) சொல்லப்பட்ட ப்₃ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸகனை ஆழ்வார் காட்டுவதாக ஆண்டான் நிர்வஹிப்பர் என்று காட்டப்பட்டது. எட்டாம்பாட்டில் ''எம்பெம்மானோடு ஒத்தேசென்று'' என்றதற்கு ''எம்பெம்மானோடு ஒத்த தேசு என்று'' என்று 'த' என்னும் எழுத்தைச் சேர்த்துக்கொண்டு, ''எம்பெருமானோடொத்த ஶா த்₃ தி₄ யையும், ஜ்ஞாநாநந்த₃ லக்ஷணமாயிருக்கையையும் உடையது ஜீவாத்மா'' என்று அநுஸந்தி₄க்கும் கைவல்ய நிஷ்ட₂னைச் சொல்லி ''அங்குள்ளம் கூடக் கூடிற்றாகில்'' என்று அப்படியே அந்திமகாலத்தில் அநுஸந்தி₄க்கும் அவனுடைய அந்திமஸ்ம்ருதியைச் சொல்லி, ''நல்லுறைப்பு'' என்று ''அவனுக்கு ஆத்மப்ராப்தி ஸித்₃தி₄க்கும்'' என்று ஆழ்வார் அருளிச்செய்வதாக எம்பார் நிர்வாஹத்தில் வ்யாக்₂யானம் செய்யப் பட்டது. ''எம்பெம்மானோடு ஒத்தே சென்று'' என்பதை அப்படியே வைத்துக்கொண்டு.''எம்பெருமான் தனக்கு ஶேஷமாக இவ்வாத்மாவை நினைத்திருக்குமாபோலே, இவனும் அவனோடு ஒத்து நினைத்து, அந்த அந்திமஸமயத்திலே ஶேஷத்வாநுஸந்த₄னம் கூடுமாகில்'' என்று பொருள்கொண்டு, ''நல்லுறைப்பு'' என்றதற்கு ''நல்ல வாய்ப்பு'' என்று இவ்விரு வ்யாக்₂யானங்களிலும் ஆண்டான் நிர்வாஹத்தில் பொருள் உரைக்கப்பட்டது. ''நல்ல வாய்ப்பு'' என்றதற்கு '' 'ப₄க₃வத₃நுப₄வம் ஸித்₃தி₄க்கும் என்றபடி' என்று ஆண்டான் நிர்வாஹத்திலே ஶப்₃த₃ார்த்த₂ம்'' என்று அரும்பதவுரைகளிலே பொருள் உரைக்கப்பட்டது. ஐந்தாம்பாட்டின் அரும்பதவுரையிலும், '' 'மேல் நாலுபாட்டும் வைவக்ஷிக நிஷ்கர்ஷகம்' என்று எம்பார் நிர்வாஹம். அநிஷ்கர்ஷகமாக ஆண்டான் நிர்வாஹம். 'எம்பெம்மானோடொத்தே சென்று' என்கிற பாட்டில், கைவல்யபரயோஜனைக்குச் சேர எம்பார் நிர்வாஹம்; ப₄க₃வது₃பாஸநபரயோஜனைக்குச் சேர ஆண்டான் நிர்வாஹம்'' என்று தெளிவுறுத்தப்பட்டது. இவற்றி லிருந்து, பிள்ளான், எம்பார் ஆகிய இருவரும் கேவலாத்மாவை

அநுஸந்தி₄த்துக் கேவலாத்மாநுப₄வத்தைப்பெறும் கைவல்யநிஷ்ட₂ன் விஷயமாக இந்த நாலுபாட்டுக்களையும் நிர்வஹித்தார்கள் என்றும், ஆண்டான், ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை அநுஸந்தி₄த்து ப்₃ரஹ்மாநுப₄வத்தையே பெறும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் விஷயமாக இந்த நாலு பாட்டுக்களையும் நிர்வஹித்தார் என்றும் விளங்குகிறது. இதிலிருந்து—கேவலாத்மாவை அநுஸந்தி₄த்து, அதையே பெறும் கைவல்யநிஷ்ட₂னைக் காட்டிலும், ப்₃ரஹ்மாத்மகமாக (அதாவது) ப்₃ரஹ்மத்திற்கு ப்ரகாரமாகவும், சேஷமாகவும் ஆத்மாவை அநுஸந்தி₄த்து, ப்₃ரஹ்மாநுப₄வத்தையே பெறும் பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂ன் மிகவும் வேறுபட்டவன் என்று கையிலங்கு கனியாகவும், வெள்ளிடைமலையாகவும் விளங்குகிறது. ஆகையால் நம்பிள்ளை, பெரிய வாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை ஆகிய மஹாசார்யர்களையும், அவர்களிட்ட வ்யாக்₂யானங்களையும் போற்றுமவர்கள் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னே கைவல்யநிஷ்ட₂ன் என்று வாய்திறக்க வழியில்லை.

65. திருவாய்மொழியில் 'ஒருநாயகம்' (4-1-10) ஆறுயிரப்படியில், ஆத்மயாத₂ாத்ம்யாவிர்ப்ப₄ாவலக்ஷணமோக்ஷம் என்று ப₄க₃வத் கைங்கர்ய ப்ராப்திலக்ஷணமான முக்₂ய மோக்ஷம் குறிக்கப்பட்டது. திருவாய்மொழியில் 'அதுவே வீடு' (8-8-7) ஆறுயிரப்படியில், "ஆத்மஸ்வரூபாவிர்ப்ப₄ாவலக்ஷணமோக்ஷம்" என்று கைவல்யம் குறிக்கப்பட்டது. 4-1-10 ஆறுயிரப்படியில், 'கைவல்ய மோக்ஷத்திற்குக் கர்மம் தடை' என்றும், 'முக்₂ய மோக்ஷத்திற்குக் கர்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாய், வலிதான ப்ரதிப₃ந்த₄கம் (தடை) ஒன்று இருக்கிறது' என்றும் காட்டப்பட்டது. எம்பெருமானை ப்ராப்யமாக அநுஸந்தி₄ப்பதே அந்த ப்ரதிப₃ந்த₄கத்தைப் போக்கும் வழி என்றும் காட்டியிருக்கிறார். இவற்றிலிருந்து—கைவல்ய நிஷ்ட₂னுக்கும் ஸகல கர்மங்களும் கழிந்து விடுகின்றன என்றும், அதனால் கர்மம் காரணமாக அநாதி₃காலமாக இருந்துவந்த த₄ர்மபூ₄த ஜ்ஞாநத்தின் சுருக்கம் நீங்கப்பெற்று, "ஸ ஆநந்த்யாய கல்பதே" [முக்திநிலையில் ஜீவன் தன் அறிவால் எங்கும் வ்யாபிப்பவன் ஆகிவிடுகிறான்] என்னும் ஸ்வரூபாவிர்ப்ப₄ாவலக்ஷணமோக்ஷம் அவனுக்கு ஏற்பட்டு விடுகிறது என்றும், 'தன் ஆத்மாநுப₄வமே போதும்' என்னும் ப்ரதிபத்தியாகிற (எண்ணமாகிற) ப்ரதிப₃ந்த₄கம் (தடை) இருப்பதால், அவனுக்கு ஆத்மயாத₂ாத்ம்யாவிர்ப்ப₄ாவலக்ஷண மோக்ஷமாகிற முக்₂ய மோக்ஷம் ஸித்₃தி₄ப்பதில்லை என்றும், அந்திம ஸ்ம்ருதியிலாவது, எம்பெருமானை ப்ராப்யமாக அநுஸந்தி₄த்து அந்தத் தடையைப் போக்கிக்கொண்டாலதான் அவனுக்கு முக்₂ய

மோக்ஷம் ஸித்₃தி₄க்கும் என்றும், இல்லாவிடில் என்றும் கைவல்ய மோக்ஷத்தையே அநுப₄விக்கும்படி நேரிடும் என்றும் பிள்ளான் மிகத் தெளிவாகக் காட்டியிருப்பது நடுநிலையாளர்களுக்கு நன்கு விளங்கும். ஆகையால், பிள்ளானையும், ஆறுயிரப்படியையும் போற்றுமவர்கள் "கைவல்யம் மோக்ஷமல்ல; இவ்வுலகில் அநுப₄விக்கப்படும் ஒரு ஐஶ்வர்யமே என்றும், பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னே கைவல்ய நிஷ்ட₂ன்" என்றும் வாய்திறக்க வழியில்லை.

66. திருவாய்மொழியில் 'வியன் மூவுலகு' [8·10-2] என்னும் பாட்டில், "தானே தானேயானாலும்" என்னும் தொடராலே கைவல்யாநுப₄வத்தைக் குறிப்பதாக எல்லா வ்யாக்₂யாதாக்களாலும் அருளிச்செய்யப்பட்டது. இங்கு 'தானே' என்று இரண்டுமுறை ப்ரயோகிப்பதன்மூலம், இவனுக்கு அசித்தை அநுப₄விப்பதாகிற ஐஶ்வர்யாநுப₄வமும், ப₄க₃வத₃நுப₄வமும் இல்லாமல் போய்விடுகிறது என்றும், என்றும் இவன் கேவலாத்மாநுப₄வமே செய்யவேண்டும் என்றும் ஆழ்வார் தாமே தெளிவாகக் காட்டுகிறார். இதிலிருந்தும், கைவல்யம் நித்யமுக்தியே என்றும்,ப₄க₃வத₃நுப₄வமுடைய பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னாக முடியாது என்றும் தெளிவாக விளங்குகிறது.

67. திருவாய்மொழியில் 'யாதுமில்லை' (9-1-9) ஆறுயிரப்படியில் "எல்லாவற்றிலும் மேற்பட்ட புருஷார்த்த₂மன்றே ஸாம்ஸாரிக து₃:க்க₂ நிவ்ருத்திரூப கைவல்யம் என்று அத்தைப் புருஷார்த்த₂ம் என்று பற்றில், காதுபெருக்க என்றுபுக்கு, பண்டுள்ளத்தையும் கெடுத்து, கூதையாக்கினாற்போலே (காதை அறுத்துக்கொள்வதுபோலே), பண்டுள்ள ஸாம்ஸாரிக ஸுக₂த்தையும் இழக்குமித்தனை" என்று அருளிச் செய்கையாலே, "கைவல்யம் ஸகலஸம்ஸார து₃:க்க₂ங்களும் நீங்கப் பெற்ற மோக்ஷமே என்றும், அதை அடைந்தவனுக்கு ஐஶ்வர்யாநுப₄வமும், ப₄க₃வத₃நுப₄வமும் அடியோடு இல்லாமல் போய்விடுகிறது" என்றும் தெளிவாக விளக்கப்பட்டது. மற்ற வ்யாக்₂யாதாக்களும் இப்படியே விவரித்தார்கள். இதிலிருந்தும், கைவல்யம் நித்யமுக்தியே என்றும், கைவல்யநிஷ்ட₂ன் ப₄க₃வத₃நுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னாகமுடியாது என்றும் தெளிவாக விளங்குகிறது.

68. கைவல்யநிஷ்ட₂னைப் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் என்று கொண்டால், அவனுக்கு அர்ச்சிராதி₃க₃தியைச் சொல்லவேண்டி வருகிறது. அப்படிவரும்போது "சூழ்விசும்பணிமுகில்" [திருவாய்10-9]

என்னும் திருவாய்மொழியில், வாசலில் வானவரும், வாளொண்கண் மடந்தையரும், முடியுடை வானவரும், வைகுந்தத்தமரரும், முனிவரும், நல்வேதியரும், மதிமுக மடந்தையரும் ஆகிய நித்யஸூரிகள் இக்கைவல்யநிஷ்டனுக்கு நல்வரவுசொல்லி, மகிழ்ந்து வாழ்த்தி, முறை முறை எதிர்கொண்டு வியந்து, பாதங்கள் கழுவி, நிதியும் நற்சுண்ணமும் நிறைகுடவிளக்கமும் ஏந்திவந்து உபசாரம் செய்கிறார்கள் என்று கொள்ளவேண்டிவருகிறது. ஆத்ம யாதா2த்ம்யாவிர்ப்பா4வம் ஏற்படாத இக்கைவல்யநிஷ்டனுக்கு நித்யஸூரிகள் இத்தகைய உபசாரங்களைச் செய்வார்களா? என்பதையும், ''தானே தானேயானாலும்'' [திருவாய் 8-10-2] என்கிறபடியே தன் ஆத்மாவைத் தவிர வேறு எதையுமே விரும்பாத இவன் அத்தகைய உபசாரங்களை ரஸித்து ஏற்பானா? என்பதையும், 'அஶரீரியாய்க்கொண்டு திரிவான் ஒருவன்' [அர்த்த2பஞ்சகம்-15] என்று ஶரீரமற்றவனாக ப்ரஸித்3த4னான இவனுக்கு, அத்தகைய உபசாரங்களைச் செய்யமுடியுமா? என்பதையும் நடுநிலைநின்று சிந்தித்தால், இவனுக்கு அத்தகைய உபசாரங்களை நித்யஸூரிகள் செய்யமாட்டார்கள் என்றும், செய்தாலும் இவன் விரும்பமாட்டான் என்றும், ஶரீரமற்ற இவனுக்கு அவ்வுபசாரங்களை உண்மையில் செய்யமுடியாது என்றும் தெளிவாக விளங்கும். ஆகையால் ''இவன் அர்ச்சிராதி3 க3தியுடைய பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னல்லன்'' என்பது ''சூழ்விசும்பணிமுகில்'' பதிகத்திலிருந்தே தெளிவாக விளங்குகிறது.

69. எம்பெருமானாருடைய பெருமைகளை அற்புதமாக விவரிப்பதாய், ஒவ்வொரு பாடலிலும் ராமாநுஜ நாமத்தைக்கொண்ட நூற்றெட்டு பாடல்களை உடையதாகையாலே 'ப்ரபந்ந கா3யத்ரீ' என்று போற்றப்படுவதாய், எம்பெருமானார் நியமனத்தாலே நாலாயிர தி3வ்ய ப்ரப3ந்த4த்தோடு சேர்க்கப்பெற்றதான ''இராமாநுச நூற்றந்தாதி''யில் நாற்பதாம் பாட்டில், ''அறம், பொருள், இன்பம், வீடு'' என்னும் நாலு புருஷார்த்த2ங்களில், கண்ணனுக்கே ஆமது காமம் என்றும், மற்ற மூன்று புருஷார்த்த2ங்களும் அக்காமத்துக்கு உறுப்பானவை என்றும் கூறுகின்றார் திருவரங்கத்தமுதனார். அப்படிக் கண்ணனுக்கேயாம் காமத்துக்கு உறுப்பான வீட்டை நிர்த்தே3ஶிக்கும்போது, இப்பாட்டின் தொடக்கத்தில் 'சேமநல்வீடு' என்று இரண்டு விஶேஷணங்களாலே விஶேஷிக்கிறார் அமுதனார். '' தன் ஆத்மாநுப4வமாகிற கைவல்யம், ஆத்மஸ்வரூபாவிர்ப்பா4வம் உடையதாகையாலே வீடு, மோக்ஷம் எனத்தக்கதாயினும், ப4க3வத3நுப4வ மற்ற அது கண்ணனுக்கேயாம் காமத்துக்கு அடியோடு உறுப்பன்று, ஸாத4நாந்தரநிஷ்ட2ர்கள் பெறும் ப4க3வத3நுப4வமும்,

அவர்களுக்கும், கண்ணனுக்கும் உறுப்பானதாகையாலே, அதுவும் கண்ணனுக்கேயாம் காமத்துக்கு உறுப்பானதன்று; அவனையே உபாயமாகக்கொண்ட ஸித்₃தோ₄பாய நிஷ்டர்கள் பெறும் பரார்த் த₂ாநுப₄வ கைங்கர்யரூபமான மோக்ஷமே கண்ணனுக்கேயாம் காமத் திற்கு உறுப்பானது; முற்கூறிய இரண்டு மோக்ஷங்களும் அத் தகையவை அல்ல'' என்று உணர்த்துவதற்காகவே, ''சேம, நல்'' என்று வீட்டிற்கு இரண்டு விசேஷணங்களை இட்டிருக்கிறார் அமுதனார் என்று எளிதில் உணரலாம். ப₄க₃வத₃நுப₄வமற்ற கைவல்யத்தைக் காட்டிலும் வேறுபடுத்தி ப₄க₃வத₃நுப₄வமுடைய மோக்ஷத்தைக் காட்டுவதற்காக நம்மாழ்வார் திருவாசிரியத்தில் (2-ம் பாட்டு) 'நல் வீடு' என்று விசேஷித்தது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

70. இவற்றிலிருந்து, நாலாயிர திவ்யப்ரப₃ந்த₄ங்களை அருளிய ஆழ்வார்களும், அமுதனாரும், கைவல்யத்தை ஆத்மஸ்வரூபாவிர்ப் ப₄ாவமுடைய நித்யமோக்ஷமாகவும், ப₄க₃வத₃நுப₄வம் அற்றதாகவுமே திருவுள்ளம் பற்றினார்கள் என்று விளங்குகிறது. இவ்விஷயம் வ்யாக்₂யானங்களில் மிகத் தெளிவாய் உள்ளது. ஆகையால் கைவல்யத்தை, ப்ராக்ருத லோகத்திலுள்ள பே₄ாக₃ங்களில் ஒன்றுகக் கொள்வதும், ' பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்டனே கைவல்யநிஷ்டன் ' என்பதும் த்₃ராவிட₃ வேத₃ங்களுக்கும், அவற்றின் வ்யாக்₂யானங் களுக்கும் சிறிதும் பொருந்தாது என்பது வெளிப்படை.

4. ஸ்ம்ருதி ஸ்வாரஸ்யம்

71. ஸ்ம்ருதிகளில் பரம வைஷ்ணவ த₄ர்மங்களைச் சொல்லு மவற்றில் தலைசிறந்ததான வ்ருத்₃த₄ஹாரீத ஸ்ம்ருதியில் உள்ள '' ஐஹலௌகிகமைஶ்வர்யம் ஸ்வர்க்கா₃த்₃யம் பாரலௌகிகம் | கைவல்யம் ப₄க₃வந்தம் ச மந்த்ரோऽயம் ஸாத₄யிஷ்யதி ||'' [வ்ருத்₃த₄ ஹாரீதஸ்ம்ருதி 6-50] [இவ்வுலகச் செல்வத்தையும், சுவர்க்கம் முதலான மறுமைச் செல்வத்தையும், கேவலாத்மாநுப₄வமாகிற கைவல்யத்தையும், ப₄க₃வத₃நுப₄வத்தையும் (அதையதை விரும்பு வார்க்கு) இவ்வஷ்டாக்ஷர மந்திரம் ஸாதி₄த்துக்கொடுக்கும்.] என் னும் ஶ்லோகத்தில், ஐஶ்வர்யம், கைவல்யம், ப₄க₃வத் ப்ராப்தி என்னும் மூவகைப் புருஷார்த்த₂ங்களைப் பற்றிப் பேசப்பட்டுள்ளது. இது நம் பூர்வாசார்யர்களாலும் ரஹஸ்ய க்₃ரந்த₂ங்களில் கையாளப் பட்ட ப்ரமாணம். ருஷிகள் வாக்கில் கைவல்ய ஶப்₃த₃ம் நேரே வழங்கப்பட்டிருப்பது இந்த ப்ரமாணத்திற்குரிய தனிச் சிறப்பு.

இதில், இவ்வுலக ஐஶ்வர்யம் என்றும், மேலுலக ஐஶ்வர்யம் என்றும் இருவகைப்பட்ட ஐஶ்வர்யங்களையும் எடுத்து, அதைக் காட்டிலும் வேறுபட்டதாகக் கைவல்யத்தை எடுக்கையாலே, மேலுலக ஐஶ்வர்யங்களிலும் மேலான ஒருவகைப்பட்ட மோக்ஷமே கைவல்யம் என விளங்குகிறது. கைவல்ய ஶப்₃த₃ம் நிக₄ண்டு முதலானவற்றிலும், ஶாஸ்த்ர க்₃ரந்த₂ங்களிலும் மோக்ஷத்தைக் குறித்தே ப்ரயோகிக்கப்பட்டிருப்பதும் இதை வலியுறுத்துகிறது. இந்த ஶ்லோகத்தில் 'ப₄க₃வந்தம்' என்று ப₄க₃வத₃நுப₄வத்தைத் தனியாக எடுத்திருக்கையால் இது ப₄க₃வத₃நுப₄வமற்ற ஒரு மோக்ஷம் என்றும் விளங்குகிறது. ஆகையால், ''ஆத்ம கைவல்யம்'' என்று ஆளவந்தாரால் கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்திலும், 'கைவல்யம்' என்று எம்பெருமானார் முதலான ஆசார்யர்களாலும் குறிக்கப்பட்ட ஆத்ம மாத்ராநுப₄வமே இந்த ஶ்லோகத்தில் கைவல்யம் என்று எடுக்கப்பட்டது என்று தெளிவாகிறது. இந்த ஶ்லோகத்தில், முதலில் இவ்வுலகச்செல்வத்தையும், அடுத்தபடி அதனிலும் மேற்பட்ட மேலுலகச் செல்வத்தையும் எடுத்துவிட்டு, அடுத்தபடி கைவல்யத்தையும், அதன்பிறகு ப₄க₃வத₃நுப₄வத்தையும் எடுக்கையாலே, ஆத்ம மாத்ராநுப₄வமாகிற இக்கைவல்யம் ப₄க₃வத₃நுப₄வமற்றதாகையாலே பரமமோக்ஷத்தைக் காட்டிலும் தாழ்ந்தது என்றும், மேலுலக ஐஶ்வர்யங்களைக் காட்டிலும் சிறந்ததாகையாலே மோக்ஷத்தில் ஒருவகை என்றும் விளங்குகிறது. இது சிலர் கூறுவதுபோல் ஐஶ்வர்யத்தில் ஒருவகை என்றால், மேலுலகச் செல்வத்திற்காட்டிலும் மேலானதாக இதை எடுத்திருப்பதும், கைவல்ய ஶப்₃த₃த்தை ப்ரயோகித்திருப்பதும் ஒட்டாது. ஆகையால், கைவல்யம் நித்யமோக்ஷமே என்றும், இக்கைவல்யநிஷ்ட₂ன் ப₄க₃வத₃நுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னாக இருக்கமுடியாது என்றும் இந்த ஸ்ம்ருதி வாக்யத்திலிருந்தும் தேறுகிறது.

5. இதிஹாஸ ஸ்வாரஸ்யம்

72. இதிஹாஸ ஶ்ரேஷ்ட₂மான ஸ்ரீராமாயணத்தில் அயோத்₄யா காண்ட₃த்தில், இளையபெருமாள் பெருமாளிடம், தானும் வனத்திற்குக் கூடவரவேண்டும் என்று ப்ரார்த்தி₂க்கும்போது, ''ந தே₃வ லோகாக்ரமணம் நாமரத்வம் அஹம் வ்ருணே! ஐஶ்வர்யம் வாபி லோகாநாம் காமயே ந த்வயா விநா!!'' [ரா-அ 31-5] [வானவர் நாடான பரமபத₃த்தை அடைவதையும், மரணமின்மையாகிற கைவல்ய மோக்ஷத்தையும், ப்ராக்ருத லோகங்களில் உள்ள எல்லா ஐஶ்வர்யங்களையும் உன்னைவிட்டுப் பிரிந்து நான் அனுப₄விக்க விரும்புகின்றிலேன்.] என்று அருளியதாக உள்ளது. இங்கு

ப்ராக்ருத லோகங்களில் உள்ள ஐஸ்வர்யங்களையெல்லாம் மூன்றாவதாக எடுத்துவிட்டபடியால், அதற்கு முன் 'தே3வலோகாக்ரமணம்' என்றும், 'அமரத்வம்' என்றும் எடுக்கப்பட்ட இரண்டும், ஸ்வர்க்க3லோகத்தை ஆள்வதும், இந்த்3ராதி3 தே3வர்களில் ஒருவனாக இருக்கும் சிறப்பும் ஆகமுடியாது. ஆகையால், முன்னிரண்டும் அசித3நுப4வமாகிற ப்ராக்ருதச் செல்வங்களைக் காட்டிலும் மேற்பட்டதாகவே இருக்கவேண்டும். இப்படித் தேறினபின்பு 'தே3வலோகாக்ரமணம்' என்பது வானவர் நாடாகிற பரமபத3த்தில் பெறும் ப4க3வத3நுப4வத்தையும், 'அமரத்வம்' என்று அதிலும் தாழ்ந்ததான ஆத்மமாத்ராநுப4வமாகிற கைவல்யத்தையும் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும். இக்கருத்தாலேயே தி3வ்யப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்களான நம்பிள்ளையும், பெரியவாச்சான்பிள்ளையும், இம் மூன்று பத3ங்களும் ஈஸ்வரன், சித், அசித் என்னும் மூன்று தத்வங்களின் அநுப4வத்தைக் கூறுவதாகவே பொருள் கொண்டார்கள். இங்கும், ப்ராக்ருதமான ஐஸ்வர்யங்களைக் காட்டிலும் மேற்பட்டதாகவும், ப4க3வத3நுப4வத்தைக் காட்டிலும் தாழ்ந்ததாகவும் கைவல்யத்தை எடுத்திருப்பதிலிருந்தும், அதை 'அமரத்வம்' என்று மரணமற்ற நிலையாகக் குறித்திருப்பதிலிருந்தும் கைவல்யம் நித்யமோக்ஷமே என்றும், ப4க3வத3நுப4வம் அற்றது என்றும் விளங்குகிறது. ஆக, இந்த ஸ்ரீராமாயண ஸ்லோகத்திலிருந்தும், கைவல்யம் மரணம் முதலானவற்றையற்ற மோக்ஷம் என்றும், ப4க3வத3நுப4வமுடைய பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2ன் கைவல்யநிஷ்ட2னாக முடியாது என்றும் தெளிவாக விளங்குகிறது.

73. பா4ரதத்தின் நடுநாயகமான கீ3தையில், கைவல்யம் நித்யமோக்ஷமே என்றும், கைவல்யநிஷ்ட2ன் ப4க3வத3நுப4வமுடைய பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னாக முடியாது என்றும் எம்பெருமானுடைய கீ3தா பா4ஷ்யத்தைக் கொண்டு இந்த ஸித்3தா4ஞ்ஜனத்தின் இரண்டாவது பிரிவில் அசைக்கமுடியாதபடி நிலைநாட்டப்பட்டதாகையால் இவ்விஷயம் இதிஹாஸங்கள் இரண்டிலிருந்தும் தேறியதாயிற்று.

74. பா4ரதத்தின் ஸாரமான ஸ்ரீ விஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் "முக்தாநாம் பரமா க3தி:" (12) என்று ஒரு திருநாமம் படிக்கப்பட்டது. 'முக்தர்களுக்கு மேலான ப்ராப்யம்' என்பது இதன்பொருள். இதிலிருந்து முக்தர்களுக்குக் கீழான ப்ராப்யம் ஒன்று உண்டு என்று உணர்த்தப்பட்டது. இந்த கீழான ப்ராப்யம் எது? என்பதை ஸ்ரீபராஸரப4ட்டர், ஸஹஸ்ரநாம பா4ஷ்யத்தில், "பரமேதி விஸேஷணேந முக்தாநாமேவ கேஷாஞ்சித் அர்வாசீநா க3திர்க3ம்யதே ......

கைவல்யலக்ஷணம்......ஸம்ஸார பரமபத₃யோர் மத்₄யே தேஷாம் ஸ்தா₂நஞ்ச'' ['பரமா'(மேலான) என்று க₃தி ஶப்₃த₃த்தை விசேஷித்திருப்பதால் முக்தர்களிலேயே சிலருக்குத் தாழ்ந்த க₃தியான கைவல்யம் உண்டென்று உணர்த்தப்படுகிறது. ஸம்ஸாரத்திற்கும், பரமபத₃த்திற்குமிடையில் அவர்களுக்கு ஸ்தா₂னமும் சொல்லப்பட்டிருக்கிறது.] என்று அருளிச்செய்து, இதற்கு ப்ரமாணமாக ''யோகி₃நாம் அம்ருதம் ஸ்தா₂நம் ஸ்வாத்ம ஸந்தோஷகாரிணும்'' [வி-பு 1-6-38] என்னும் ஶ்ரீவிஷ்ணுபுராண ஶ்லோகத்தைக் காட்டினர். இதிலிருந்தும், 'கைவல்யம் நித்யமுக்தியே' என்றும், 'நித்யவிபூ₄தியிலேயே கைவல்ய ஸ்தா₂நம்' என்றும் தெளிவாக விளங்குகிறது. பரமபத₃த்திற்கு வெளியில் இவனுக்கு ஸ்தா₂னத்தைச் சொல்லுகையால், பரமபத₃த்தினுட்சென்று ப்₃ரஹ்மாநுப₄வம் செய்யும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னைக் காட்டிலும் கைவல்யநிஷ்ட₂னுக்கு பே₄த₃மும் ஸித்₃தி₄க்கிறது.

75. பா₄ரதம் மோக்ஷ த₄ர்மத்தில் (கிருஷ்ணாசார்யர் பதிப்பில்) 350-வது அத்₄யாயத்தில் (மற்றொரு பதிப்பில் 342-வது அத்₄யாயத்தில்) உள்ள

''சதுர்வித₄ா மம ஜநா ப₄க்தா ஏவ ஹி தே ஶ்ருதா: ।
தேஷாம் ஏகாந்திந: ஶ்ரேஷ்டா₂ஸ் தே சைவ அநந்ய தே₃வதா: ॥
அஹமேவ க₃திஸ் தேஷாம் நிராஶீ:கர்மகாரிணாம் ॥
யே து ஶிஷ்டாஸ் த்ரயோ ப₄க்தா: ப₂லகாமா ஹி தே மதா: ।
ஸர்வே ச்யவநத₄ர்மாண: ப்ரதிபு₃த்₃த₄ஸ்து மோக்ஷபா₄க் ॥''
[பா₄ரதம்-மோக்ஷ 350-33, 34, 35]

[நாலுவகைப்பட்ட ஜநங்கள் என்னுடைய ப₄க்தர்கள் என்று பிரஸித்₃தி₄ பெற்றவர்கள்; அவர்களுக்குள் ஏகாந்திகள் சிறந்தவர்கள்; அவர்களே வேறு தே₃வர்களைப் பற்றாதவர்கள். ப₂லன்களில் பற்றற்றுக் கர்மம் செய்யும் அவர்களுக்கு நானே ப்ராப்யனாகிறேன். மற்ற மூன்று ப₄க்தர்களும் என்னையொழிந்த ப₂லனை விரும்புகிறவர்கள். அவர்கள் மூவரும் நழுவுதலை இயல்வாகக் கொண்டவர்கள். நான்காமவனான ஜ்ஞாநியே மோக்ஷத்தை அடைகிறான்.] என்கிற ஶ்லோகங்களில் நாலுவகைப்பட்ட ப₄க்தர்களைக் கூறுகையாலே, ''ஆர்த்தோ ஜிஜ்ஞாஸு: அர்த்தா₂ர்த்தீ₂ ஜ்ஞாநீ'' [கீ₃தை 7-16] என்று கீ₃தையில் சொல்லப்பட்ட நாலு வகைப்பட்ட ப₄க்தர்களைப் பற்றியே இந்த ஶ்லோகங்களும் பேசுகின்றன என விளங்குகிறது. இதில் ஜ்ஞாநிகளைத் தவிர்ந்த மற்ற மூவரும் 'ச்யவந த₄ர்மாக்கள்' (நழுவுதலை இயல்வாகக் கொண்டவர்கள்) என்று கூறப்படுவதால், 'கைவல்யார்த்தி₂யின் ப₂லனும் நழுவக்கூடியதே என விளங்கு

கிறதே' என்னும் ஆக்ஷேபம் ஒன்று எழுகிறது. இவ்வாக்ஷேபத்துக்குப் பதில் உரைப்போம் இனி. இந்த ஶ்லோகங்களில் 'ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு' முதலிய நாலு வகைப்பட்ட ப₄க்தர்களே சொல்லப்படுவதாகக் கொண்டாலும், 'ச்யவந த₄ர்மாண:' என்ற மாத்திரத்தால் கீ₃தையில் கைவல்யார்த்தி₂க்குச் சொல்லப்பட்ட அபுநராவ்ருத்திக்கு முரணாக இங்கு புநராவ்ருத்தியைச் சொல்லுவதாகக் கொள்வது பொருந்தாது. 'ச்யவந த₄ர்மாண:' என்றதற்கு 'மோக்ஷத்வ த₄ர்மத்திலிருந்து நழுவியவர்கள்' என்றோ, 'பேரின்பமாகிற ப₄க₃வத₃நுப₄வத்திலிருந்து நழுவியவர்கள்' என்றோ, 'உபாஸந த₃ஶையில் தொடர்புகொண்டிருந்த பரமாத்மாவாகிற பரமத₄ர்மத்தைவிட்டு நழுவியவர்கள்' என்றோ பொருள் கொள்ளலாம். உண்மையில் இந்த ஶ்லோகங்களில் ஆர்த்தன், ஜிஜ்ஞாஸு முதலானவர்களைச் சொல்வதாகக் கொள்வதற்குச் சில விரோத₄ங்கள் உள்ளன. இங்கு "இந்த நாலுவிதமான ப₄க்தர்களில் ஏகாந்திகளே சிறந்தவர்கள். அவர்களே வேறு தே₃வர்களைப் பற்றாதவர்கள்" என்று நாலாமவனே ஏகாந்தியாய் இருப்பவன் என்றும், வேறு தே₃வர்களைப் பற்றாதவன் என்றும் கூறுகையால், மற்ற மூவரும் ஏகாந்திகள் அல்லர் என்றும், வேறு தே₃வர்களைப் பற்றுகிறவர்கள் என்றும் விளங்குகிறது. கீ₃தை ஏழாம் அத்₄யாயத்தில் சொல்லப்பட்ட ஆர்த்தன் முதலான நாலு ப₄க்தர்களோவெனில், ஏகாந்திகள் என்றும், வேறு தே₃வர்களைப் பற்றாதவர்கள் என்றும், அந்த கீ₃தா ப்ரகரணத்தையும், கீ₃தா பா₄ஷ்யத்தையும் ஆராய்ந்தால் தெளிவாக விளங்குகிறது. "ஐகாந்த்யம் ப₄க₃வத்யேஷாம் ஸமாநம் அதி₄காரிணாம்" (28) என்று கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்தில் ஆளவந்தாரும், இந்நால்வரையுமே ஏகாந்திகள் என்று குறிப்பிட்டுள்ளார். ஆகையால் மோக்ஷத₄ர்மத்தில் சொல்லப்பட்ட ப₄க்தர்கள் வேறானவர்கள் என்றே கொள்ளவேண்டும். அப்படி நாலுவகைப்பட்ட ப₄க்தர்கள் வேறு உண்டோ? என்று ஆராய்ந்தால், "யாந்தி தே₃வவ்ரதா தே₃வாந் பித்ரூந் யாந்தி பித்ருவ்ரதா: । பூ₄தாநி யாந்தி பூ₄தேஜ்யா யாந்தி மத்₃யாஜிநோऽபி மாம் ॥" [கீ₃தை 9-25] என்னும் ஶ்லோகத்தில் கூறப்பட்ட (1) தே₃வப₄க்தர்கள், (2) பித்ருப₄க்தர்கள், (3) பூ₄தப₄க்தர்கள், (4) ப₄க₃வத்₃ப₄க்தர்கள் என்னும் நாலுவகைப்பட்ட அதி₄காரிகளையே மோக்ஷத₄ர்மத்தில் "சதுர்வித₄ா:" என்று எடுக்கிறான் என்று கொள்வது பொருத்தம். இந்த ஶ்லோகத்துக்கு முந்தின ஶ்லோகத்தில், "தத்த்வேநாதஶ்ச்யவந்தி தே" என்று கூறியதையே மோக்ஷத₄ர்மத்தில் "ஸர்வே ச்யவந த₄ர்மாண:" [அனைவரும் நழுவும் ப₃லனையும் தன்மையையும் உடையவர்களே]

என்று அநுவதிக்கிறார் என்றும், அதற்கு முந்திய ஶ்லோகத்தில் "யேऽப்யந்யதேவதாபக்தா:......தேऽபி மாமேவ கௌந்தேய யஜந்தி அவிதிபூர்வகம் ||" [கீதை 9-23] [மற்ற தெய்வங்களின் பக்தர்களும் உண்மையில் அந்தர்யாமியான என்னையே ஆராதிக்கிறார்கள். ஆனால் விதிப்படி (நேரே) என்னை ஆராதிப்பதில்லை] என்று கூறப்பட்ட ரீதியில், தேவதாந்தர பக்தர்களையும், தன் பக்தர்களாகக்கொண்டே மோக்ஷதர்மத்தில் "சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ஶ்ருதா:" என்று அவர்களை அநுவதிக்கிறான் என்றும் விளங்குகிறது. மேலும், மோக்ஷதர்மத்தில் "ப்ரதிபுத்தஸ்து மோக்ஷபாக்" என்று முப்பத்தைந்தாவது ஶ்லோகத்தில் சொன்னவுடன் "ப்ரஹ்மாணம் ஶிதிகண்டஞ்ச யாஶ்சாந்யா தேவதா: ஸ்ம்ருதா: | ப்ரதிபுத்தா ந ஸேவந்தே யஸ்மாத் பரிமிதம் பலம் ||" [பிரமன், சிவன், மற்ற தேவதைகள் முதலானோரை, அவர்களிடமிருந்து கிடைக்கும் பலன் அளவுபட்டதாகையால் (நான்காமவர்களான) ப்ரதிபுத்தர்கள் ஆராதிக்கமாட்டார்கள்] என்று கூறியிருக்கையாலே, முதல் மூன்றுபேரும் ஶரீரமான தேவர்கள், பித்ருக்கள், பூதங்கள் ஆகிய மூன்றுவகைப்பட்டவர்களை ஆராதிப்பதன்மூலம் எம்பெருமானை அவிதிபூர்வகமாக (வழியல்லா வழியில்) ஆராதிக்கும் பக்தர்களே என்று தெளிவாக விளங்குகிறது. ஆகையால், கைவல்யம் நித்ய மோக்ஷமே என்னும் கொள்கைக்கு, இந்த மோக்ஷ தர்மவசநம் எவ்வகையிலும் முரண்படாது.

6. புராண ஸ்வாரஸ்யம்

76. முதலில் "தத்வேந யஶ்சிதசிதீஶ்வர" [ஸ்தோ-ர 4] என்னும் ஶ்லோகத்தில் அபவர்க்கமாகிற மோக்ஷத்தையும், அதை அடைவதற்குரிய உபாயத்தையும் உள்ளபடி அறிவித்தவர் என்று ஆளவந்தாரால் புகழப்பெற்ற பராஶர மஹரிஷி அருளிய புராண ரத்னமான ஸ்ரீவிஷ்ணுபுராணத்தின் ஸ்வாரஸ்யத்தைக் காட்டுவோம். "யோகிநாம் அம்ருதம் ஸ்தானம் ஸ்வாத்ம ஸந்தோஷ காரிணும்" [வி-பு 1-6-38] [ஆத்மாநுபவம் செய்யும் யோகிகளுக்கு அழியாத ஸ்தானம் உள்ளது.] என்று ஸ்ரீபராஶர மஹரிஷி, அழியாததான ஆத்மாநுபவஸ்தானம் ஒன்றைச் சொல்லிவிட்டு, "ஏகாந்திந: ஸதா ப்ரஹ்மத்யாயிநோ யோகிநஶ்ச யே | தேஷாம் தத் பரமம் ஸ்தாநம் யத்வை பஶ்யந்தி ஸூரய: ||" [எம்பெருமானையே ப்ராப்யமாகக் கொண்டு பரப்ரஹ்மமான அவனையே எப்போதும் த்யானிக்கும் யோகிகளுக்கு நித்யஸூரிகள் காணும் மிக உயர்ந்த ஸ்தானம் உள்ளது.] என்று நித்யஸூரிகள் முதலானோர் ப்ரஹ்மாநுபவம் செய்யும் ஸ்தானத்தை அடுத்தபடி வெளிப்படுத்தினார். ஆத்மாநுபவ ஸ்தானத்தை அழியாததாகக் குறித்திருக்கும் ஸ்வாரஸ்யத்தைக்

கொண்டும், அடுத்த ஶ்லோகத்தில் ப்₃ரஹ்மாநுப₄வம் செய்யும் பரம பத₃த்தைக் குறித்திருப்பதைக்கொண்டும், இங்கு குறிக்கப்பட்ட ஆத்மாநுப₄வஸ்த₂ானம் தாழ்ந்த முக்தியான கைவல்யஸ்த₂ானமே என்று ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமபா₄ஷ்யத்தில் ஸ்ரீ பராஶரப₄ட்டரும், ஸ்தோத்ரவ்யாக்₂யானத்திலும், தி₃வ்யப்ரப₃ந்த₄வ்யாக்₂யானம் முதலானவற்றிலும் பெரியவாச்சான்பிள்ளை முதலானோரும் அருளிச்செய்தனர். இதிலிருந்து, அழியாத ஸ்த₂ானத்திலிருந்து செய்யும் ஆத்மாநுப₄வமாகிற கைவல்யம் நித்யமுக்தியே என்று விளங்குகிறது. இங்கு கைவல்யஸ்த₂ானத்தை ப்₃ரஹ்மாநுப₄வம் செய்யும் ஸ்த₂ானத்தைக் காட்டிலும் கீழ்ப்பட்டதாகக் கூறியிருக்கையால், கைவல்யம் அடைந்தவனுக்கு ப்₃ரஹ்மாநுப₄வம் கிடையாது என்று விளங்குகிறது. இக்காரணத்தாலேயே, இவன் ப்₃ரஹ்மாநுப₄வம் செய்யும் பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னாகமுடியாது என்றும் விளங்குகிறது.

77. "யோகி₃நாம் அம்ருதம் ஸ்த₂ானம்" என்னும் ஶ்லோகத்தில் அம்ருத பத₃த்திற்கு 'நீண்ட காலமிருப்பது' என்னும் அமுக்₂யார்த்த₂மும் கொண்டு, அந்த ஶ்லோகத்தில்—த்₄ருவநக்ஷத்திரத்திற்கு மேலேயுள்ள விஷ்ணு பத₃ம் என்னும் (ப்ரக்ருதி மண்ட₃லத்திற்குட்பட்ட) ஸ்த₂ானத்தைச் சொல்லுவதாக எங்களாழ்வான் வியாக்கியானம் செய்திருப்பதிலிருந்து கைவல்யம் அநித்யம் என்று அவர் கருதியிருப்பதுபோல் தோன்றுகிறதே? எனில்: "அம்ருதம் ஸ்த₂ாநம்" என்றவிடத்தில் கைவல்ய ஸ்த₂ானம் சொல்லப்படுவதாகவே அவர் திருவுள்ளம் பற்றவில்லையாகையால், இதுகொண்டு கைவல்யவிஷயத்தில் கருத்துவேற்றுமையைக் கற்பிக்கவொண்ணாது. எப்படி? எனில்: "யோகி₃நாமிதி ॥ ஆஶ்ரமிஷ்வேவ யே ப்ரதீகோபாஸகா யோகி₃ந: தேஷாம் அம்ருதம் — விஷ்ணுபத₃ாக்₂யம் த்₄ருவாது₃பரி ஸ்த₂ாநம் — யதோ க₃ங்கா₃ ப்ரவஹதி இதி வக்ஷ்யமாணம் ॥" [நாலு ஆஶ்ரமங்களில் இருப்பவர்களிலேயே, ப்ரதீகமான தம் ஆத்மாவை உபாஸிக்கும் யோகி₃களுக்கு, (காலக்ரமத்தில் முக்தியளிக்கையாலே) அழியாதது எனப்படுவதாய், 'விஷ்ணுபத₃ம்' என்று பெயர்பெற்றதாய், த்₄ருவநக்ஷத்திரத்திற்கு மேற்பட்டதான ஸ்த₂ாநம் இங்கு சொல்லப்படுகிறது. இந்த ஸ்த₂ாநத்திலிருந்தே க₃ங்கை₃ பெருகுகிறது என்று மேலே (2-8) சொல்லப்படப்போகிறது.] என்று இவ்விடத்தில் வியாக்கியானம் செய்தார் எங்களாழ்வான். மேலே (2-8-98, 99, 100) இந்த விஷ்ணுபத₃ஸ்த₂ானத்தைப்பற்றிப் பேசுமிடத்தில், "அதோऽத்ர விஷ்ணுபதே₃ ஸ்வர்க்க₃ாதி₃கஸௌக்₂யாத், ஸத்யலோகாத் அர்வாசீநத்வாச்ச மோக்ஷோக்தி: க்ரமமுக்த்யர்த்த₂ா । தத்ஸ்த₂ா: க்ரமாத் ப்₃ரஹ்மலோகமேத்ய ப்₃ரஹ்மணா ஸஹ முச்யந்தே । விஷ்ணுபதே₃ ஸ்தி₂தா: தத்ர லப்₃த₄ஜ்ஞாநா முச்யந்தே; ந து தந்முக்தைர் லப்₄யம் ஸ்த₂ாநமித்யர்த்த₂:" [ஆகையால், இந்த விஷ்ணுபத₃த்தில் ஸ்வர்க்க₃த்தைக் காட்டிலும் மேற்பட்ட இன்பம்

உள்ளதாகையாலும், ப்₃ரஹ்மாவின் ஸத்யலோகத்தைக் காட்டிலும் இது தாழ்ந்ததாகையாலும், இதை 'அம்ருதம்' என்பது, இவ்விடத்தி லிருப்பவர்களுக்கும் காலக்ரமத்தில் மோக்ஷம் கிடைக்கும் என்னும் கருத்துடையது; விஷ்ணுபத₃த்திலிருப்பவர்கள், காலக்ரமத்தில் ப்₃ரஹ்மாவின் ஸத்யலோகத்தை அடைந்து, அங்கு ஜ்ஞானம்பெற்று, ப்₃ரஹ்மாவோடுகூட முக்தி அடைகிறார்கள்; அவ்விஷ்ணுபத₃ம் முக்தர்கள் அடையும் ஸ்த₂ானமன்று என்று கருத்து] என்று வியாக்கியானமிட்டார். இதிலிருந்து, இது ஸத்யலோகத்தைக்காட்டி லும் தாழ்ந்த ஸுக₂த்தையுடைய (அசிந்மிஶ்ரமான) தம் ஆத்மாவை அநுப₄விப்பவர்களின் ஸ்த₂ானமேயொழிய, ஸத்யலோகத்தைக்காட்டி லும் சிறந்ததாய், ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதல் இல்லாததாய், ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தம் ஆத்மாவை அநுப₄விக்கும் இடமான கைவல்யஸ்த₂ானமன்று என்று விளங்குகிறது. ஆகையால், இவ் விடத்திலுள்ள ஸ்ரீஸூக்திகளிலிருந்து கைவல்யவிஷயமான எங்களாழ் வானுடைய திருவுள்ளத்தை அறுதியிடமுடியாது; ஸ்ரீவிஷ்ணு புராண வ்யாக்₂யானத்திலேயே கைவல்யத்தைப்பற்றி எங்களாழ்வான் தம் திருவுள்ளத்தை மிகத் தெளிவாகக் காட்டியிருக்கும் இடங்களை இனிக் காட்டுவோம்.

78. "த்வத்தோ விராட் ஸ்வராட் ஸம்ராட்" [வி-பு 1-12-57] 'விராட்' எனப்படும் அவ்யக்தத்தை ஶரீரமாகக்கொண்ட அநிருத்₃த₄ மூர்த்தியும், 'ஸ்வராட்' எனப்படும் கேவலாத்மாநுப₄வம் செய்யும் முக்தனும், 'ஸம்ராட்' எனப்படும் பரமபத₃மடைந்த முக்தனும் உனக்கு ஶரீரமே] என்னுமிடத்தில் எங்களாழ்வான் "ஸம்ராட் - பரமபத₃ ப்ராப்த:; 'ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட்' இதி விஶேஷணாத்; ஸ்வராட்- கேவலாத்மப்ராப்த:" ['அழியாதவனாய், மேலான ஸ்வராட்டாக இருப்பவன்' என்று தைத்திரீய நாராயணவல்லியில், ப்₃ரஹ்மாநுப₄வம் செய்யும் முக்தன் மேலான ஸ்வராட்டாகச் சொல்லப்படுகையால், இங்கு பரமபத₃மடைந்த அவனே 'ஸம்ராட்' என்று சொல்லப்படு கிறான். 'ஸ்வராட்' என்று கேவலாத்மாவை அடைந்தவன் சொல்லப் படுகிறான்.] என்று வ்யாக்₂யானம் செய்திருக்கிறார். இதிலிருந்து, "கைவல்யத்தையடைந்தவனை 'ஸ்வராட்' என்றும், பரமபத₃த்தை யடைந்தவனை ஸம்ராட் (மேலான ஸ்வராட்) என்றும் அவர் திருவுள்ளம் பற்றியிருக்கிறார்" என்று விளங்குகிறது. "ஸ ஸ்வராட் ப₄வதி" [ச₂ாந் 7-25-2] என்று உபநிஷத்துக்களில் 'ஸ்வராட்' என்னும் ஶப்₃த₃ம் கர்மபாரதந்த்ரியம் அற்ற முக்தனைக் குறித்து ப்ரயோகி₃க்கப் படுகிறது என்பது ப்ரஸித்₃த₄ம். ஆக, இவ்விடத்தில் எங்களாழ்வான் ஸ்ரீஸூக்தியிலிருந்து கேவலாத்மாவை அடைந்தவனை 'முக்தன்' என் றும், பரமபத₃ம் அடைந்தவனை 'மேலான முக்தன்' என்றும் அவர் திருவுள்ளம் பற்றியிருக்கிறார் என்று விளங்குகிறது.

79. ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதல் அம்ஶம் ஒன்பதாவது அத்₄யாயத்திலுள்ள, "தாவதா₃ர்த்திஸ் ததா₂ வாஞ்சா₂ தாவன்மோஹஸ் ததா₂ऽஸுக₂ம் | யாவந்ந யாதி ஶரணம் த்வாமஶேஷாக₄நாஶநம் ||" [வி-பு 1-9-73] [எப்போது வரையில் அந்தந்தப் ப₂லன்களுக்குத் தடையாயிருக்கும் எல்லா அநிஷ்டங்களேயும் போக்கவல்ல உன்னை ஶரணமாகப் பற்றவில்லையோ, அதுவரையிலேயே (செல்வத்தை இழந்ததனுல் ஏற்படும்) வருத்தம்; அதுவரையிலேயே (செல்வம் வேண்டும் என்னும்) ஆசை; அதுவரையிலேயே (ஆத்மாநுப₄வமின்மையால் ஏற்படும்) மோஹம்; அதுவரையிலேயே (ப₄க₃வத₃நுப₄வமின்மையால் உண்டாகும்) ஸுக₂மின்மை. (ஆர்த்தன், அர்த்தா₂ர்த்தி₂ எனப்படும் ஐஶ்வர்யார்த்தி₂கள், ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்யார்த்தி₂, ஜ்ஞாநி ஆகிய அனைவர்க்கும் ப்ரபத்தியே ப₂ல ஸாத₄நம் என்றபடி.)] என்ற ஶ்லோகம் ஐஶ்வர்யகைவல்யப₄க₃வச்சரணார்த்தி₂கள் மூவரையும் குறிப்பதாக நம் பூர்வாசார்யர்கள் பலர் விளக்கியுள்ளனர். இந்த ஶ்லோகத்திலிருந்தும் கைவல்யத்தை மோஹத்திற்கு எதிர்த்தட்டான ப₂லமாக எடுக்கையால், அது ஒரு வகை முக்தியே என விளங்குகிறது. ப₄க₃வத₃நுப₄வத்தை ஸுக₂ ஶப்₃த₃த்தால் குறித்திருக்கையால், ஜ்ஞானிக்குள்ள பேரின்பம் கைவல்யார்த்தி₂க்குக் கிடையாது என விளங்குகிறது. இதிலிருந்து ப₄க₃வத₃நுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னுகமுடியாது என்பதும் விளங்குகிறது.

80. இனி, கேவலாத்மாநுப₄வமாகிற கைவல்யத்தைப்பற்றியும், அதற்குரிய உபாயங்களைப்பற்றியும் ஸ்ரீபராஶரமஹர்ஷி (முதலாவது அம்ஶம் 22ம் அத்தியாயத்தில்) விரிவாக விளக்கியிருக்கும் பகுதியைக் காண்போம். அதாவது :—

"யோகி₃நோ முக்திகாமஸ்ய ப்ராணாயாமாதி₃ ஸாத₄நம் |
ஸாத்₄யம் ச பரமம் ப்₃ரஹ்ம புநர் நாவர்த்ததே யத: ||
ஸாத₄நாலம்ப₃நம் ஜ்ஞாநம் முக்தயே யோகி₃நாம் ஹி யத் |
ஸ பே₄த₃: ப்ரத₂மஸ் தஸ்ய ப்₃ரஹ்மபூ₄தஸ்ய வை முநே! ||
யுஞ்ஜத: க்லேஶமுக்த்யர்த்த₂ம் ஸாத்₄யம் யத்₃ப்₃ரஹ்ம யோகி₃ந: |
தத₃ாலம்ப₃நவிஜ்ஞாநம் த்₃விதீயோऽம்ஶோ மஹாமுநே! ||
உப₄யோஸ்த்வவிபா₄கே₃ந ஸாத்₄யஸாத₄நயோர் ஹி யத் |
விஜ்ஞாநமத்₃வைதமயம் தத்₃பா₄கோ₃ऽந்யோ மயோதி₃த: ||
ஜ்ஞாநத்ரயஸ்ய சைதஸ்ய விஶேஷோ யோ மஹாமுநே! |
தந்நிராகரணத்₃வாரத₃ர்ஶிதாத்மஸ்வருபவத் ||

நிர்வ்யாபாரமநாக்₂யேயம் வ்யாப்திமாத்ரமநூபமம் |
ஆத்மஸம்பே₃ாத₄விஷயம் ஸத்தாமாத்ரமலக்ஷணம் ||
ப்ரஶாந்தமப₄யம் ஶுத்₃த₄ம் து₃ர்விப₄ாவ்யமஸம்ஶ்ரயம் |
விஷ்ணோர் ஜ்ஞாநமயஸ்யோக்தம் தத்₃ஜ்ஞாநம் ப்₃ரஹ்மஸம்ஜ்ஞிதம்||
தத்ர ஜ்ஞாநநிரோதே₄ந யோகி₃நோ யாந்தி யே லயம் |
ஸம்ஸாரகர்ஷணோப்தௌ தே யாந்தி நிர்பீ₃ஜதாம் த்₃விஜ ! ||"
[வி-பு 1-22-45...52]

['ஜரை, மரணம் முதலான இவ்வுலகத் துன்பங்களிலிருந்து) விடுபடுவதையே விரும்பும் கைவல்யார்த்தி₂க்கு — ப்ராணாயாமம் முதலானவற்றை அங்க₃மாகக்கொண்ட அஷ்டாங்க₃யோக₃ம் ஸாத₄னமாகிறது ; 'ப்₃ரஹ்ம' எனப்படும் ப்ரக்ருதியைக் காட்டிலும் சிறந்த 'பரப்₃ரஹ்ம' எனப்படும் ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄முள்ள ப₃த்₃த₄ஜீவனைக் காட்டிலும் சிறந்ததாகையாலே 'பரமப்₃ரஹ்ம' எனத்தக்க திரும்பி வருதலில்லாத (தனது) முக்தஸ்வரூபம் ஸாத்₄யமாகிறது. (இது பின்வரும் நாலு பகுதிகளாக ஸாதி₄க்கப்படுகிறது:—) யோக₃ ஶாஸ்த்ரத்திலிருந்து அறியத்தக்கதாய், ப்ராணாயாமம் முதலான ஸாத₄னத்தைப்பற்றியதான அறிவு முதல் பகுதி; ஷடூ₃ர்மி முதலான க்லேஶங்கள் போவதற்காக இப்படி யோக₃ம் செய்யும் இவனுக்கு ஸாத்₄யமாய், ப்ரக்ருதியினின்றும் நீங்கியதான தனது ஆத்மஸ்வரூபத்தைப் பற்றிய அறிவு இரண்டாவது பகுதி; முற்கூறிய ஸாத்₄ய ஸாத₄னங்களை ஸாத்₄யஸாத₄னப₄ாவ ஸம்ப₃ந்த₄த்தோடு அறிந்து, தே₃வர் மனுஷ்யர் முதலான (ஶரீரஸம்ப₃ந்த₄த்தினால் ஆத்மாவுக்கு ஏற்படும்) பே₄த₃ங்களை நீக்கித் தன் ஆத்மாவை த்₄யானிப்பது மூன்றாவது பகுதி. முற்கூறிய மூன்று வகைப்பட்ட ஜ்ஞானங்களின் வேறுபாடுகளை மறக்கையாலே தன் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதாயிருக்கும் அறிவு நாலாவது பகுதியாகும். (ஸாத₄னம் முதலானவற்றை நினைப்பது ஆத்மஸாக்ஷாத்காரத்திற்கு விரோதி₄யாகையாலே, அவற்றை மறந்தால் தான் இவ்வாத்மாவலோகனம் ஏற்படும் என்று கருத்து.) (நாலாவதான இவ்வாத்ம ஸாக்ஷாத்கார நிலையில் இவன் காணும்) ஆத்மஸ்வரூபமானது, ஸாத₄நாநுஷ்ட₂ானமற்றது ; ரூபம், வர்ணம் முதலானவையற்றது ; (அறிவால்) எங்கும் வியாபித்திருப்பது; ஒப்பற்றது. தனது அறிவாலேயே அறியத்தக்கது. (ஷட்₃ப₄ாவவிகாரங்களில் — குறைதல், அழிதல், மாறுதல், வளர்தல், பிறத்தல் என்னும் ஐந்துமற்றதாய்) ஸத்தையொன்றே உடையதாயிருப்பது. (ஆண், பெண் முதலான) அடையாளங்களற்றது. (பசி முதலான) ஷடூ₃ர்மிகளற்றது. இத்தகையது

என்று நினைக்க அரியது. ஜ்ஞாநமயனான விஷ்ணுவுக்கு உருவமாய், ப்₃ரஹ்மமெனப்படும் ஜ்ஞாநஸ்வரூபமான அவ்வாத்மஸ்வரூபம் இத்தகையதாகச் சொல்லப்படுகிறது. மற்ற ஶப்₃த₃ாதி₃ விஷய அறிவுகளற்று, அந்தத் தமது ஆத்மஸ்வரூபத்தில் (அந்திம ஸ்ம்ருதிப₃லத்தாலே) எவர்கள் லயத்தை (ஸ்தூ₂ல ஸூக்ஷ்ம ஶரீர நாஶத்தை) அடைகிறார்களோ, அவர்கள் உமிநீங்கிய நெல்போலே, ஸம்ஸாரமாகிற வயலில் விதைக்கத்தகாதவர்களாகின்றனர்] என்னும் எட்டு ஶ்லோகங்கள்கொண்ட பகுதியே அது. இந்த ஶ்லோகங்களின் வ்யாக்₂யானத்தில், ஸ்ரீ பா₄ஷ்யகார ஶிஷ்யரான ஸ்ரீ விஷ்ணுசித்தரெனும் எங்களாழ்வான் இக்கைவல்யத்தின் தன்மையை மிகவும் தெளிவுபடுத்தியிருக்கிறார். எப்படியெனில் : முதல் ஶ்லோகத்தில் இவனுக்கு ஸாத்₄யமாகச் சொல்லப்பட்ட ''பரமம் ப்₃ரஹ்ம'' என்பதை ''முக்த ஸ்வரூபம்'' என்று வ்யாக்₂யானம் செய்வதன்மூலமும், மூன்றும் ஶ்லோகத்தில் உள்ள ''தத₃ாலம்ப₃நவிஜ்ஞாநம்'' என்பதை ''ப்ரக்ருதிவிவிக்தாத்மவிஷயம் விஶிஷ்ட ஜ்ஞாநம்'' என்று விவரிப்பதன்மூலமும், ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ம் அடியோடு நீங்கப்பெற்ற தன் முக்தாத்ம ஸ்வரூபமே இவனுக்கு ப்ராப்யம் எனக் காட்டினார். ஐந்தாம் ஶ்லோகத்தில் ''தந்நிராகரண த்₃வாரத₃ர்ஶிதாத்மஸ்வரூபவத்'' என்றதற்கு, ''விநிஷ்பந்ந ஸமாதே₄:, இதரபராமர்ஶஸ்ய ஆத்மாவலோகநவிரோதி₄த்வாத் தந்நிராகரணம த்₃வாரம் இத்யுக்தம்'' [ஸமாதி₄ நிறைவடையப்பெற்ற இவனுக்கு ஸாத₄னம் முதலியவற்றை நினைப்பது ஆத்மாநுப₄வத்திற்கு விரோதி₄யாகையால், அவற்றை மறப்பது ஆத்மாநுப₄வத்திற்கு த்₃வாரம் (காரணம்) என்று சொல்லப்பட்டது.] என்று உரையிட்டதன்மூலம், ஸாத₄னமாயிருந்த ப₄க₃வானைப்பற்றிய சிந்தனமும் ஆத்மாநுப₄வத்திற்குத் தடையாகையாலே, ஸாத்₄யத₃ஶையில் இவனால் கைவிடப்படுகிறது என்று உணர்த்தினார். ''இதரயோஸ்து யாவத்ஸ்வாபி₄லஷிதப்ராப்தி மயா யோக₃:'' [ஐஶ்வர்ய கைவல்ய நிஷ்ட₂ர்களுக்குத் தம் ஸாத்₄யம் ஸித்₃தி₄க்கும் வரையில்தான் (ஸாத₄னமான) என்னோடு சேர்த்தி] என்று கீ₃தை(7-17)யில் நித்ய யுக்தஶப்₃த₃ப₄ாஷ்யத்தில் பா₄ஷ்யகாரர் அருளியதை அடியொற்றிய படி. இதனாலேயன்றோ இக்கைவல்யநிஷ்ட₂ரை ''விடைகொள்வார்'' [முதல்திருவ 26] என்று பொய்கையாழ்வார் அருளினார். இக்கைவல்யநிஷ்ட₂னுக்கு ப்ராப்யமான இவனது (ப்ரக்ருதியினின்று நீங்கிய) ஆத்மஸ்வரூபத்தை விவரிக்கும் ஆறும் ஶ்லோகத்தில் ''நிர்வ்யாபாரம்'' என்னும் பத₃த்திற்கு ''ஸாத₄நாநுஷ்ட₂ாந ரஹிதம்'' என்று ஸாத₄நாநுஷ்ட₂ாநமாகிற செயலற்றவன் என்று

வ்யாக்₂யானம் செய்வதன்மூலம், இவன் கைவல்ய மோக்ஷத்தை அடைந்த பின்பு ப₄க்தியோக₃ம் முதலான ஸாத₄னத்தை அநுஷ்டி₂த்து ப₄க₃வத₃நுப₄வத்தைப் பெற இடமில்லை என்று காட்டினர். "முக்திகாமஸ்ய" (1) "முக்தயே" (2) "க்லேமுக்த்யர்த்த₂ம் யுஞ்ஜத:" (3) என்னும் பகுதிகளாலும், இவனுக்கு ப்ராப்யமான கேவலாத்மஸ்வரூபத்தை விவரிக்கும் 6, 7 ஶ்லோகங்களாலும் — "ஜராமரண மோக்ஷாய" [கீ₃தை 7-29] "பிறவித்துயரற" [திருவாய் 1-7-1] "மரணம் தோற்றம் வான் பிணி மூப்பென்று இவை மாய்த்தோம்" [திருவாய் 8-3-2] முதலானவிடங்களில் சொல்லப்பட்ட பிறப்பு, இறப்பு முதலான ஷடூ₃ர்மிகளற்றிருக்கையாகிற மோக்ஷமே இவனால் பெறப்படுவது என்று ஸ்ரீ பராஶரர் திருவுள்ளம் பற்றுவதாகக் காட்டினர் எங்களாழ்வான். அவரே "தத்ர" என்று தொடங்கும் எட்டாவது ஶ்லோகத்திற்கு அவதாரிகையாக "ஆத்மயோகி₃நாம் அந்திமப்ரத்யயோ அவஶ்யம் பூ₄ர்வ்யம்; அந்யதா₂ புநராவ்ருத்திரித்யாஹ" [தம் ஆத்மாவைப் பெறவிரும்பி யோக₃ம் செய்பவர்களுக்கு அந்திமஸ்ம்ருதி அவஶ்யம் வேண்டும்; இல்லாவிடில் மறுபடி ஸம்ஸாரத்திற்குத் திரும்பி விடுவார்கள்.] என்று அருளிச்செய்வதன்மூலம்,

"குறுகமிக உணர்வத்தொடு நோக்கி எல்லாம் விட்ட
இறுகல் இறப்பென்னும் ஞானிக்கும் அப்பயனில்லையேல்
சிறுக நினைவதோர் பாசமுண்டாம் பின்னும் வீடில்லை
மறுகலில் ஈசனைப் பற்றி விடாவிடில் வீடஃதே"

[திருவாய் 4-1-10]

என்று ஆழ்வார் அருளிச்செய்த ரீதியில், இந்தக் கேவலாத்மயோகி₃யான கைவல்யநிஷ்ட₂னுக்கும் அந்திமஸ்ம்ருதியிருந்தால்தான் புநராவ்ருத்தி (மறுபடியும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதல்) இல்லாத இக்கைவல்ய மோக்ஷம் ஏற்படுகிறது என்று காட்டி, இவ்வெட்டாவது ஶ்லோகத்தில் 'லயம்' என்னும் ஶப்₃த₃த்திற்கு 'உபாதி₄வியோக₃ம்' என்று வ்யாக்₂யானம் செய்வதன்மூலம், இக்கைவல்ய நிஷ்ட₂னுக்கு ஸூக்ஷ்ம ஶரீரமும் அடியோடு அற்றுப்போகிறதென்றும், "ஸம்ஸார கர்ஷணேப்தௌ தே யாந்தி நிர்பீ₃ஜதாம் த்₃விஜ" என்னும் பிற்பகுதிக்கு வ்யாக்₂யானமாக "க்ருஷ்யத இதி கர்ஷணம் கேதா₃ர: | ஸம்ஸார கேதா₃ரே உப்தௌ — ஸஸ்யாவாபே விதுஷவ்ரீஹிவத் அபீ₃ஜதாம் யாந்தி ||" [க்ருஷி செய்யப்படுகையாலே கர்ஷணம் என்று வயல் சொல்லப்படுகிறது; அவர்கள் — உமிநீங்கிய நெல் போலே, ஸம்ஸாரமாகிற வயலில் விதைக்கத்தகாதவர்களாகிறார்கள்.]

என்று அருளிச்செய்வதன்மூலம் இவன் ஸம்ஸாரத்தில் பிறப்பற்ற முக்தனே என்றும் தெளிவுபடுத்தினர்.

“ஏவம்ப்ரகாரம் அமலம் நித்யம் வ்யாபகம் அக்ஷயம் ।
ஸமஸ்தஹேயரஹிதம் விஷ்ணவாக்₂யம் பரமம் பத₃ம் ॥”
[வி-பு 1-22-53]

[நிர்வ்யாபாரனுயிருக்கை முதலான முக்தனுக்குக் கூறிய எல்லாப் பெருமைகளையும் உடையதாய், அதற்கு மேலே (அவனுக்கு இல்லாத) நித்யஶுத்₃தி₄யையும், ஸர்வவஸ்துக்களையும் ஸ்வரூபத்தால் வியாபித்திருக்கையையும், ப்ரதிவஸ்து பூர்ணத்வத்தையும், (பார தந்த்ர்யம் முதலிய) எல்லாத் தாழ்வுகளும் அற்றிருக்கையையும் உடையது ‘விஷ்ணு’ எனப்படும் பரமப்ராப்யமான ப₄க₃வத்ஸ்வரூபம்] என்று ப₄க₃வத்ஸ்வரூபத்திற்கு முற்கூறிய முக்தஸ்வரூபத்தைக் காட்டிலும் சிறப்பைத் தெரிவிக்கும் ஶ்லோகத்தில் “அஸ்ய நித்ய ஶுத்₃த₄த்வ ஸர்வாத்மத்வ பூர்ணத்வ ஹேயராஹித்யாநி ப்ரக்ருதி ப₃ந்த₄முக்தேப்₄யோ விஶேஷ:” [(முற்கூறிய) ப்ரக்ருதிப₃ந்த₄த்தி னின்றும் விடுபட்டவனைக் காட்டிலும், இந்தப் பரமபுருஷனுக்கு (1) எப்போதும் ஶுத்₃த₄னுயிருக்கை, (2) ஸர்வாத்மாவாயிருக்கை, (3) பூர்ணனுயிருக்கை, (4) தாழ்வற்றவனுயிருக்கை என்னும் நாலு பெருமைகள் உண்டு.] என்று வ்யாக்₂யானமிடுமிடத்திலும், இக் கைவல்யநிஷ்டனை ‘ப்ரக்ருதிப₃ந்த₃முக்தன்’ [ப்ரக்ருதியாகிற ப₃ந்த₄த்தினின்றும் விடுபட்டவன்] என்றே குறிப்பிடுவது குறிக் கொள்ளத்தக்கது.

“தத்₃ ப்₃ரஹ்ம பரமம் யோகீ₃ யதோ நாவர்த்ததே புந: ।
ஶ்ரயத்யபுண்யோபரமே க்ஷீணக்லேஶோ(அ)திநிர்மலே ॥

[ப₄க₃வது₃பாஸகன், புண்யபாபங்கள் க்லேஶங்கள் முதலியவை நீங்கியவுடன், திரும்பிவருதலில்லாத அந்தப் பரப்₃ரஹ்மத்தையே அடைகிறுன்] என்னும் ப₄க₃வது₃பாஸகனைப்பற்றிய அடுத்த ஶ்லோ கத்தில், “யோகீ₃—ப₄க₃வத்₃யோகீ₃ । அஸ்யாப்யந்திமப்ரத்யயப₃லோ ப₄க₃வதி லீநஸ்ய அபுநராவ்ருத்திர் த்₃ரஷ்டவ்யா” [இங்கு ‘யோகீ₃’ எனப்படுபவன் ப₄க₃வானை ப்ராப்யமாகப்பற்றி உபாஸிப்பவனுவான். அந்திமஸ்ம்ருதி ப₃லத்தாலே ப₄க₃வானை அடைந்த இவனுக்கும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பி வருதலில்லை என்பது குறிக்கொள்ளத் தக்கது.] என்று ப₄க₃வத்₃யோகி₃யை ஆத்மயோகி₃யைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று தெளிவாகக்காட்டி, அந்திம ஸ்ம்ருதி ப₃லத் தால் ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தன் ஆத்மாவையடைந்த ஆத்ம

யோகி₃யைப்போலே. அந்திமஸ்ம்ருதி ப₂லத்தால் ப₄க₃வானை அடைந்த இவனுக்கும் ஸம்ஸாரத்திற்குத் திரும்பிவருதல் இல்லை என்று காட்டினார். இவற்றிலிருந்து—பிள்ளான், ப₄ட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை முதலான பூர்வாசார்யர்கள் திருவுள்ளமும், எங்களாழ்வானது திருவுள்ளமும் இக்கைவல்ய விஷயத்தில் ஒருபடிப்பட்டதே என விளங்குகிறது.

81. இனி, ஸாத்விகபுராணங்களில் ஒன்றாய், நமது பூர்வாசார்யர்களால் ஆங்காங்கு எடுத்துக் கையாளப்பட்டிருப்பதான பாத்₃ம புராணத்தில் உத்தரக₂ண்ட₃த்தில் கைவல்யாநுப₄வஸ்த₂ாநம் நித்ய விபூ₄தியில் விரஜைக்கும், பரமபத₃த்திற்கும் இடையே உள்ளது என்று தெளிவாகக் காட்டப்பட்டிருப்பதைக் காண்போம். அதாவது :—

"விரஜாபரமவ்யோம்னோர் ஹ்யந்தரம் கேவலம் ஸ்ம்ருதம் ।
தத் ஸ்த₂ாநமுபபே₄ாக்தவ்யமவ்யக்தப்₃ரஹ்மஸேவிநாம் ॥
ஸ்வாத்மஜாநந்த₃ஸுக₂த₃ம் கேவலம் பரமம் பத₃ம் ।
நி:ஶ்ரேயஸம் ச நிர்வாணம் கைவல்யம் மோக்ஷ உச்யதே ॥"
[பாத்₃மபுராணம் (பூனா ஆநந்தா₂ஶ்ரமப்பதிப்பு) –
உத்தரக₂ண்ட₃ம் 256-7, 8]

[விரஜாநதி₃க்கும், (பரமாத்மாவை அனுப₄விப்பவர்கள் வாழும்) பரமபத₃த்திற்கும் நடுவிலிருப்பது 'கேவலஸ்த₂ானம்' எனப்படுகிறது; 'அவ்யக்தப்₃ரஹ்மம்' எனப்படும் ஆத்மாவை அநுப₄விப்பவர்கள் அந்த ஸ்த₂ானத்திலிருந்தே அநுப₄விக்கவேண்டும். தன் ஆத்மாவை அனுப₄விப்பதினால் உண்டாகும் இன்பத்தை அளிப்பதாய், (அதனாலேயே கைவல்யார்த்தி₂களுக்குப்) பரமப்ராப்யமாயிருப்பதாயுள்ளது கேவல ஸ்த₂ானம். 'நி:ஶ்ரேயஸம்' 'நிர்வாணம்' என்னும் மோக்ஷத்தைக் குறிக்கும் பத₃ங்களால் அக்கைவல்யமோக்ஷமும் கூறப்படுகிறது.] என்று கைவல்ய ஸ்த₂ானம் பாத்₃மபுராணத்தில் தெளிவாகக் காட்டப்பட்டது. இப்பாத்₃மபுராண வசனத்தையும் திருவுள்ளத்திற் கொண்டே "முக்தாநாம் பரமா க₃தி:" என்னுமிடத்தில் ஸஹஸ்ர நாமபா₄ஷ்யத்தில், "பரமேதி விஶேஷணேந முக்தாநாமேவ கேஷாஞ்சித₃ர்வாசீநா க₃திர் க₃ம்யதே........கைவல்யலக்ஷணா........ ஸம்ஸார பரமபத₃யோர் மத்₄யே தேஷாம் ஸ்த₂ாநம் ச" ['பரமா' என்று க₃திஶப்₃த₃த்திற்கு விஶேஷணமிட்டிருக்கையாலே, முக்தர்களிலேயே சிலர்க்குத் தாழ்ந்த க₃தியான கைவல்யமோக்ஷம் உண்டென்று உணர்த்தப்படுகிறது. ஸம்ஸாரத்திற்கும் பரமபத₃த்திற்கும் இடையில் அவர்களுக்கு ஸ்த₂ானமும் சொல்லப்பட்டிருக்கிறது.]

என்று ப₄ட்டர் அருளிச்செய்தார் என்றும் தெளிவாக விளங்குகிறது. இப்பாத்₃மபுராண வசனத்தில் 'பரமவ்யோம' ஶப்₃த₃த்தால் குறிக்கப்படுவது ஸம்ஸார மண்ட₃லத்திலுள்ள கார்யவைகுண்ட₂ம் என்று கொண்டுவிடலாமே? எனில்: பாத்₃மபுராணத்தில், "த்ரிபாத்₃ விபூ₄தேர் லோகாஸ்து அஸங்க்₂யா: பரிகீர்த்திதா:" [பாத்₃மோத்தரம் 256-1] [த்ரிபாத்₃விபூ₄தியிலுள்ள உலகங்கள் கணக்கற்றவையாகச் சொல்லப்படுகின்றன] என்று தொடங்கி, த்ரிபாத்₃விபூ₄தி எனப்படுவதாய் ஶுத்₃த₄ஸத்வமயமானதான லோகத்தை வர்ணிக்கத் தொடங்கி, அதில் விரஜையை ஒட்டியிருக்கிற கைவல்ய ஸ்த₂ானத்தை முதலில் முன் எடுத்த ஶ்லோகங்களில் வர்ணித்து,

"மஹாத்மானோ மஹாபா₄க₃ா ப₄க₃வத்பாத₃ஸேவகா: ।
தத்₃விஷ்ணோ: பரமம் த₄ாம யாந்தி ப்₃ரஹ்மஸுக₂ப்ரத₃ம் ॥"
[256-9, 10]

[ப₄க₃வானுக்குத் திருவடிக் குற்றேவல் புரியும் மஹாபா₄க்₃யஶாலிகள் ப்₃ரஹ்மாநுப₄வத்தையளிக்கும் விஷ்ணுவின் பரமபத₃த்தை அடைகிறார்கள்] என்று தொடங்கி அடுத்துள்ள பரமபத₃த்தை வர்ணித்து,

"தந்மத்₄யே நக₃ரீ தி₃வ்யா ஸாऽயோத்₄யேதி ப்ரகீர்த்திதா ।
மணிகாஞ்சநசித்ராட்₄ய ப்ராகாரைஸ் தோரணைர் வ்ருதா ॥
சதுர்த்₃வார ஸமாயுக்தா துங்க₃கோ₃புர ஸம்வ்ருதா ।
சண்ட₃ாதி₃த்₃வாரபாலைஸ்து குமுதா₃த்₃யை: ஸுரக்ஷிதா ॥......
தந்மத்₄யேऽஷ்டத₃ளம் பத்₃மம் உத₃யார்க்கஸமப்ரப₄ம் ।
தந்மத்₄யே கர்ணிகாயாம் து ஸாவித்ர்யாம் ஶுப₄த₃ர்ஶநே! ॥
ஈஶ்வர்யா ஸஹ தே₃வேஶஸ் தத்ராஸீந: பர: புமாந் ॥"
[256-11, 12, 13...25, 26]

[அழகியவளே! அந்தப் பரமபத₃த்தின் நடுவில் 'அயோத்₄யா' என்று ஶ்ருதிகளில் சொல்லப்படும் தி₃வ்யநக₃ரம், பொன்னும் மணியும் நிறைந்த ப்ராகாரங்களாலும், மதிள்களாலும், தோரணங்களாலும் சூழப்பெற்றதாய், நாலு வாசல்களுடையதாய், உயர்ந்த கோ₃புரங்களால் சூழப்பெற்றதாய், சண்ட₃ன் முதலான வாயில்காப்போர்களாலும், குமுத₃ன் முதலான கோயில்காப்பவர்களாலும் ரக்ஷிக்கப்படுவதாக விளங்கிறது...அதன் நடுவில் எட்டு இதழ்கொண்ட, உத₃ய ஸூர்யன்போல் ஒளியுள்ள தாமரையுள்ளது; அதன் நடுவில் கா₃யத்ரீ ஸ்வரூபமான கர்ணிகையில், ஈஶ்வரியான லக்ஷ்மியோடுகூட நித்ய ஸூரிநாத₂னான பரமபுருஷன் எழுந்தருளியிருக்கிறான்.] என்று பரவாஸுதே₃வன் எழுந்தருளியிருக்கும் திருமாமணி மண்டபம்வரை அனைத்தையும் அவ்வத்தியாயத்தில் விரிவாக வர்ணித்திருப்பதை

அறிந்தவர்களிடம் இவ்விதண்டாவாதமும் விலை செல்லாது. இவ்வாதத்தைத் தவிர்ப்பதற்காகவே பட்டர் ''விரஜா பரமபதயோர் மத்யே'' என்று அருளிச்செய்யாமல், ''ஸம்ஸார பரமபதயோர் மத்யே'' என்று ஸம்ஸாரமண்டலம் முழுவதையும் கீழெல்லையாக அருளிச்செய்தார். ஆக, கைவல்யஸ்தானம் நித்யவிபூதியிலேயே விரஜைக்கு அக்கரையில் இருக்கிறது என்று அசைக்கமுடியாமல் தேறிற்று.

7. ஆகம ஸ்வாரஸ்யம்

82. இனி, பாஞ்சராத்ரவைகாநஸரூபமான இரு வைஷ்ணவாகம ஸ்வாரஸ்யத்தைக் காண்போம். அதில், ஆகமப்ராமாண்யத்தில் ஆளவந்தாராலும், பாஞ்சராத்ராதிகரணம் முதலானவிடங்களில் எம்பெருமானாராலும் நிலைநிறுத்தப்பெற்ற ப்ராமாண்யமிகுதியையுடையதாய், ''பஞ்சராத்ரம் ஸர்வத்ரைவ ப்ரமாணம்'' [ர-ஸ்த 2-14] [பாஞ்சராத்ராகமம் முழுவதுமே ப்ரமாணம்] என்று ஸ்ரீ பராசர பட்டரால் போற்றப்பெற்றதாய், நூறு ஸம்ஹிதைகளுக்கு மேற்பட்டதான பாஞ்சராத்ரத்தில் கைவல்யவிஷயம் வந்திருக்குமிடங்களை அறிந்தவரையில் ஆராய்வோம். இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஸகலசாஸ்த்ரங்களும் வல்லவராய் எழுந்தருளியிருந்த வித்வத்வரிஷ்டரான புரிசை ஸ்ரீரங்காசார்ய ஸ்வாமியின் கார்யாதிகரணவாதம் என்னும் க்ரந்தத்தில் (மூன்றாவது தரங்கம்) 269-வது பாராவில் 'ப்ருஹத்ப்ரஹ்ம ஸம்ஹிதா' என்னும் பாஞ்சராத்ர ஸம்ஹிதையின் முதல்பாதம் இரண்டாம் அத்யாயத்திலிருந்து பின் வரும் சில ஶ்லோகங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. (இந்த ஸம்ஹிதை நம்மிடமில்லாமையால், ப்ராமாணிகக்ரந்தத்திலிருந்து எடுத்துக்காட்டுகிறோம்.)

''ஸம்ப்ராப்யாசார்யசரணம் உபாயமவகம்ய ச |
மதாஜ்ஞாகாரிணோ பூத்வா ஹயாஜீவம் ப்ராக்ருதாம் தநும் ||
ஹித்வா முக்தா யே பவந்தி த்விவிதாஸ்தே ப்ரகீர்த்திதா: |
கேவலா: ஸேவகாஶ்சேதி கேவலாஸ் தநுவர்ஜிதா: ||
ஸேவகா த்விவிதா ஜ்ஞேயா: கிங்கரா ரூபஸேவகா: |
கைங்கர்யம் கந்தமால்யாதிமார்ஜநாலேபவர்த்தநம் ||
பக்ஷ்மபாதாஸஹப்ரேம வீக்ஷணம் ரூபஸேவநம் |
ஏவம்முக்தா மஹாதேவி! மம லோகே விஶந்தி ஹி ||...
மாமேவ ஶரணம் யாதா: ஸர்வபாவேந ஸிந்துஜே ! |
அதீதா துஸ்தராம் மாயாம் கேவலாஸ் ஸேவகா ஹி வா ||
பஹவோ மத்பதம் யாதா: ஸேவகா: ஸேவகா மம |
கமநாகமநைர் முக்தா: கேவலாஸ்து பவந்தி ஹி ||''

[ஓர் ஆசார்யன் திருவடியை அடைந்து, மோக்ஷோபாயத்தை உணர்ந்து, ஶாஸ்த்ரத்தில் நான் ஆணையிட்டபடி இவ்வுலகில் இருக்கும் வரையில் நடந்து, கடைசியில் ஸ்தூ₂ல ஸூக்ஷ்மரூபமான ப்ராக்ருத தே₃ஹத்தைவிட்டு முக்தியை அடைபவர்கள் 'கேவலர்கள்' என்றும் 'ஸேவகர்கள்' என்றும் இரண்டுவிதமாகச் சொல்லப்படுகிறார்கள். கேவலர்கள் ஶரீரம் அற்றவர்களாயிருப்பவர்கள். ஸேவகர்கள் கைங்கர்யம் செய்பவர்கள் என்றும், ஸ்வரூப ரூபங்களை ஸேவிப்பவர்கள் என்றும் இரண்டுவிதமாக அறியத்தக்கவர்கள். வாசனை த்₃ரவ்யங்கள், மாலை முதலானவற்றை ஸமர்ப்பிப்பது, கோயிலைப் பெருக்குவது, மெழுகுவது, புகையிடுவது முதலானவை கைங்கர்யமாகும். ஸ்வரூப ரூபங்களை ஸேவிப்பதாவது—கண்கொட்டுவதையும் பொறுக்காமல் பெருங்காதலோடு எம்பெருமானைக் கண்டு அநுப₄விப்பதாகும். பெருந்தே₃வியே ! இப்படிக் கேவலர்களாகவும், ஸேவகர்களாகவும் முக்தி அடைந்தவர்கள் என்னுடைய அப்ராக்ருதலோகத்தை அடைகிறார்கள்... பாற்கடலில் உதி₃த்தவளே! மோக்ஷம் அடைவதற்கு என்னையே எல்லா விதத்திலும் உபாயமாகக் கொண்டவர்களாய், என்னுடைய கடக்கவரிதான ப்ரக்ருதியான மாயையைக் கடந்தவர்களாய்ப் பலர் எனதுஅப்ராக்ருத லோகத்தைக் கேவலர்களாகவோ ஸேவகர்களாகவோ வந்து அடைந்திருக்கிறார்கள். ஸேவகர்கள் (எனக்குக் கைங்கர்யம் செய்வதன் மூலமோ என்னைக் கண்டுகளிப்பதன்மூலமோ) என்னை ஸேவிப்பவர்கள். கேவலர்களோவெனில்: ஸம்ஸாரத்திற்குப் போவது, வருவது இல்லாத ப்ரக்ருதிப₃ந்த₄முக்தர்களாயிருக்கிறார்களித்தனை. ('எனது ஸேவை அவர்களுக்குக் கிடையாது' என்று கருத்து.)] இந்த ஶ்லோகங்களிலிருந்து—கைவல்யநிஷ்ட₂ர்களும் அப்ராக்ருத லோகத்தை அடைந்தவர்கள் என்றும், ப₄க₃வத்ஸேவை அற்றவர்கள் என்றும் விளங்குகையால் கைவல்யம் நித்யமுக்தியே என்றும், ப₄க₃வத₃நுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னாயிருக்கமுடியாது என்றும் விளங்குகிறது. ப₄க₃வானை அடையும் பரமமுக்தர்களிலும் ப₄க்தி முதலான உபாயாந்தரங்களைக்கொண்டு அவனை அடைபவர்கள் எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப ஸேவைகளிலே ஊன்றியிருப்பார்கள் என்றும், ஶரணாக₃தியாலே அவனை அடைந்தவர்கள் அவனுடைய கைங்கர்யத்திலே ஊன்றியிருப்பார்கள் என்றும் இதிலிருந்து விளங்குகிறது. ''ஸாத்₄யா ருஷயஶ்சயே'' [பு-ஸூ] ''யத்ர ருஷய: ப்ரத₂மஜா யே புராணா:'' [ ] ''வைகுந்தத் தமரரும் முனிவரும்'' [திருவாய் 10-9-9] முதலான தென்மொழி வடமொழி வேத₃வாக்யங்களும், வைகுந்தத்தில் கு₃ணாநுப₄வத்தை ப்ரத₄ானமாகக்

கொண்டவர்களும், கைங்கர்யத்தை ப்ரதா₄னமாகக்கொண்டவர்களு மாக இருவகை முக்தர்கள் இருப்பதாக ஓதியிருப்பது இங்கு குறிக்கொள்ளத்தக்கது.

83. பாத்₃மஸம்ஹிதையில் ஜ்ஞாநபாத₃த்தில் எட்டாம் அத்₄யா யத்தில் "முச்யந்தே மத் ப்ரஸாதே₃ந ஜந்மநோऽஸ்மாத்₃விக₃ர்ஹிதாத் | பே₄தே₃ந சாப்யபே₄தே₃ந மிஶ்ரேண ச சதுர்முக₂! ||" [8-28] [சதுர் முக₂னே! மிகவும் இகழத்தக்க இந்த ப்ராக்ருதமான பிறப்பிலிருந்து என் அருளாலே முக்தி அடைபவர்கள் பே₄த₃முக்தி, அபே₄த₃முக்தி, மிஶ்ர (இரண்டும் கலந்த) முக்தி என்று மூவகைப்பட்ட மோக்ஷங்களை அடைகிறார்கள்.] என்று தொடங்கி மூவகைப்பட்ட மோக்ஷம் சொல்லப்பட்டுள்ளது. அதில் கைங்கர்யம் செய்வது பே₄த₃முக்தி என் றும், "அவனைப்போலே நம் ஆத்மாவும் இருப்பதாகையாலே, அவனைக் காட்டிலும் பே₄த₃ம் அற்ற நம் ஆத்மாவையே அநுப₄விப்போம்" என்று 'அவன் தன்னோடு ஒன்றாக அமரத்துணியவல்ல' [திருவாய் 3-5-9] கைவல்யநிஷ்டர்களின் அநுப₄வம் அபே₄த₃முக்தி என்றும், கு₃ணாநுப₄வமும் கைங்கர்யமும் கலந்தது மிஶ்ரமுக்தி என்றும் கொள்வது பொருந்தும். இதிலிருந்தும், முக்தியில் பே₄த₃ம் உள்ளது என்னும் பாஞ்சராத்ர ஸம்ஹிதையின் கொள்கை விளங்குகிறது.

"மோக்ஷம் ஸாலோக்ய ஸாரூப்யம் ப்ரார்த்த₂யே ந கதா₃சந |
இச்சா₂ம்யஹம் மஹாபா₃ஹோ ! ஸாயுஜ்யம் தவ ஸுவ்ரத ! ||"

[ஸாலோக்யம், ஸாரூப்யம் என்னும் மோக்ஷவகைகளை நான் ஒரு போதும் வேண்டேன். அலம்புரிந்த நெடுந்தடக்கையனே ! ஶரணாக₃த ரக்ஷணத்தை உறுதியான வ்ரதமாகக் கொண்டவனே ! உன்னோடு பரமஸாம்யத்தை அடைவதாகிற ஸாயுஜ்ய மோக்ஷத்தையே நான் விரும்புகிறேன்.]

"லோகேஷு விஷ்ணோர் நிவஸந்தி கேசித்
ஸமீபம் ருச்ச₂ந்தி ச கேசித₃ந்யே |
அந்யே து ரூபம் ஸத்₃ருஶம் ப₄ஜந்தே
ஸாயுஜ்யமந்யே ஸ து மோக்ஷ உக்த: ||"

[விஷ்ணுவினுடைய லோகங்களில் சிலர் வஸிக்கிறார்கள்; (இது ஸாலோக்யம்). மற்றும் சிலர் அவனுக்கு அருகில் இருக்கிறார்கள்; (இது ஸாமீப்யம்). மற்றும் சிலர் அவனையொத்த உருவை அடை கிறார்கள்; (இது ஸாரூப்யம்). வேறு சிலர் அவனையொத்தவர்களா கிறார்கள்; (இது ஸாயுஜ்யம்). இதுவே முக்₂யமோக்ஷம்.] என்னும் இரண்டு ஶ்லோகங்கள் ஸ்ரீவேதா₃ந்த தே₃ஶிகரால் ந்யாயஸித்₃தா₄ஞ்

ஜனத்தில் ஜீவபரிச்சே₂த₃த்தில் ப்ரமாணமாக எடுக்கப்பட்டுள்ளன. முற்கூறிய ப்ரமாணங்களைக்கொண்டு பார்க்கும்போது இந்த ஶ்லோகங்களில் கூறப்படும் ஸாலோக்யமோக்ஷம் கைவல்யமோக்ஷமே என்றும், ஸாமீப்யமோக்ஷம் ப₄க₃வத₃நுப₄வத்தை முக்₂யமாகக்கொண்டிருக்கையாலே ரூபம் தேவையில்லாத ஸாத₄நாந்தரநிஷ்டா₂ர்கள் பெறும் மோக்ஷமே என்றும். ஸாரூப்யமோக்ஷம் ஸ்வார்த்த₂ கைங்கர்யத்தை விரும்பி ந்யாஸமெனப்படும் ப்ரபத்தியை ஸாத்₄யோபாயமாகக் கொண்டு அநுஷ்டி₂க்கும் ஸ்வக₃தஸ்வீகாரநிஷ்டா₂ர்கள் பெறும் மோக்ஷமே என்றும், ஸாயுஜ்யமோக்ஷம் பரக₃தஸ்வீகாரநிஷ்டா₂ர்கள் பெறும் பரார்த்த₂ாநுப₄வகைங்கர்யரூபமோக்ஷமே என்றும் விளங்குகிறது.

84. இனி, வைகா₂நஸ ஆக₃மத்தில் கைவல்யத்தைப்பற்றிய கொள்கையைக் காண்போம், "ஸமாராத₄ந விஶேஷாத் சதுர்வித₄ பத₃ாவாப்தி:" [ப₄க₃வத₃ாராத₄னமாயிருக்கும் ஒவ்வொரு மோக்ஷோபாயத்தால் நாலுவிதமான மோக்ஷங்களை அடைகிறான்.] என்று வைகா₂நஸாக₃மத்தைச் சேர்ந்த மரீசிஸம்ஹிதையில் சொல்லப்பட்டது. வைகா₂நஸர்களின் உபநிஷத்தான பாரமாத்மிகோபநிஷத்தில் ஐந்தாம் அநுவாகத்தின் பத்தாவது மந்திரத்தில் "பதே₃ பதே₃" என்று இந்த மோக்ஷநிலைகள் உணர்த்தப்படுவதாக வைகா₂நஸர்களால் 'வேத₃ாந்ததே₃ஶிகர்' என்று கொண்டாடப்படும் ஶ்ரீநிவாஸ தீ₃க்ஷிதரால் பா₄ஷ்யம் இடப்பட்டது. அவர் தமது பா₄ஷ்யத்தில்,

"ஆமோத₃ஶ்ச ப்ரமோத₃ஶ்ச ஸம்மோத₃ஸ்தத₃நந்தரம் |
வைகுண்ட₂மிதி விஜ்ஞேயா: தேऽந்யோந்யம் உபரி ஸ்தி₂தா: ||
அத:பரம் சதுர்த்த₂: ஸ்யாத் லோக: பரமபா₄ஸ்வர: |
வாஸுதே₃வஸ்ய ஸுமஹத் தத் தி₃ப்தம் அஜராம்ருதம் ||
த்₃வாத₃ஶாவரணோபேதம் பூர்ணசந்த்₃ராயுத ப்ரப₄ம் |
ஸர்வதேஜோமயம் பா₄ஸ்வத் அநிர்த்தே₃ஶ்யம் ஸுரைரபி ||
ஆநந்த₃ம் நாம தல்லோகம் பரமாநந்த₃மத்₃பு₄தம் ||"

[ஆமோத₃ம், ப்ரமோத₃ம், ஸம்மோத₃ம். வைகுண்ட₂ம் என்னும் நான்கு லோகங்களும் ஒன்றன்மேல் ஒன்று இருப்பவை; முதல் மூன்று லோகங்களுக்குமேல் நான்காவதாயிருக்கும் வைகுண்ட₂ம் பேரொளி வீசுவது. வாஸுதே₃வனின் பெருங்கோயிலாய் உள்ளது. சோதி மயமாய், ஜராமரணங்கள் அற்றதாய் உள்ளது. பனிரண்டு ஆவரணங்களோடு சேர்ந்தது. பதினாயிரம் பூர்ணசந்த்₃ரர்கள்போல் ஒளியுள்ளது. எல்லாத் தேஜஸ்ஸுக்களும் நிறைந்து ப்ரகாஶிப்பதாய், தே₃வர்களாலும் அறியவொண்ணாதது. ஆநந்த₃ம் என்னும் அந்த உலகம்

பரமாநந்த₃மயமாய் அற்புதமாயிருப்பது.] என்னும் வைக₂ாநஸ ஆக₃ம ப்ரமாணங்களை எடுத்துள்ளார். ஐந்தாம் அநுவாகத்தில்முதல் மந்திரத்தின் பா₄ஷ்யத்தின் கடைசியில். "ஆமோத₃ப்ராப்தி: கைவல்யஸ்ய ஆமோத₃ ஏவ| தத்ராபி ஸ்வாநுப₄வ ஏவ| ச₂ாந்தோ₃க்₃யே-யதா₂க்ரதுரஸ்மிந் லோகே புருஷோ ப₄வதி, ததே₂த: ப்ரேத்ய ப₄வதி இதி ஶ்ருதே:| தம் யதா₂ யதா₂ உபாஸதே ததை₂வ ப₄வதி இதி||" [கைவல்யமோக்ஷமாவது ஆமோத₃ ஸ்தா₂னத்தை அடைதல். அவனுக்கு 'ஆமோத₃ம்' எனப்படும் ஆத்மாநுப₄வமாத்திரமே உள்ளது. ச₂ாந்தோ₃க்₃ய உபநிஷத்தில் "மனிதன் எப்படி இவ்வுலகில் உபாஸிக்கிருனே அப்படியே மறு உலகில் அடைகிருன்" என்று ஓதப்பட்டுள்ளதன்றே. எப்படி உபாஸிக்கிருனே அப்படியே ஆகிருன் என்று கருத்து] என்று வைக₂ாநஸ ஆக₃மங்களில் கைவல்யத்தைப்பற்றிய கொள்கையை விளக்கியிருக்கிருர். இவற்றிலிருந்து ஆமோத₃ ஸ்தா₂னம் எனப்படும் கைவல்யம் நித்யவிபூ₄தியிலேயே உள்ளது என்றும், வைகுண்ட₂த்தைக் காட்டிலும் கீழ்ப்பட்டது என்றும், அதில் ஆத்மாநுப₄வமாத்திரம் உண்டேயொழிய பரமாத்மாநுப₄வம் இல்லை என்றும் விளங்குகையால் கைவல்யம் நித்யமுக்தியே என்றும், ப்₃ரஹ்மாநுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₃னுகமுடியாது என்றும் வைக₂ாநஸ ஆக₃மத்திலிருந்தும் தேறுகிறது.

8. ஸூத்ர ஶ்ரீபா₄ஷ்ய ஸ்வாரஸ்யம்

85. இனி, ப்₃ரஹ்மஸூத்ரத்திலும், அதன் வ்யாக்₂யானமாக ஶ்ரீபா₄ஷ்யகாரரால் அருளிச்செய்யப்பட்ட ஶ்ரீபா₄ஷ்ய தீ₃பஸாரங்களிலும் முற்கூறிய விஷயங்களே வலியுறுத்தப்பட்டிருப்பதைக் காண்போம். ஶ்ரீபா₄ஷ்யத்தின் தொடக்கத்திலுள்ள இரண்டாவது ஶ்லோகத்தில் ப்₃ரஹ்மஸூத்ரத்தை அம்ருதமாக உருவகப்படுத்தும்போது "ஸம்ஸாராக்₃நி விதீ₃பந வ்யபக₃த ப்ராணாத்ம ஸஞ்ஜீவநீம்" [ஸம்ஸாரமாகிற நெருப்பு கொழுந்துவிட்டு எரிவதனுல் ப்ராணனை (பரமாத்மாவை) அடியோடு இழந்த ஆத்மாக்களை நன்ருக உயிர்ப்பிப்பது.] என்று அவ்வம்ருதத்திற்கு விஶேஷணமிடுகிருர் ஶ்ரீபா₄ஷ்யகாரர். 'வ்யபக₃த ப்ராணாத்ம ஜீவநீம்' என்று விஶேஷணமிட்டாலே போதுமாயிருக்க 'ஸஞ்ஜீவநீம்' என்று விஶேஷணம் இட்டதன் கருத்தை "ஸஞ்ஜீவநீம் இதி — ஜீவநம் — உஜ்ஜீவநம் — ஸம்ஸாரோந் மூலநம்| ஸம் இதி கைவல்ய வ்யாவ்ருத்தி:||" ['ஸஞ்ஜீவநீம்' என்றதின் கருத்து பின்வருமாறு:—ஜீவநம் என்பது உஜ்ஜீவநத்தை, அதாவது ஸம்ஸாரம் அடியோடு கழிவதைக் குறிக்கும். கைவல்யத்

திலும் ஸம்ஸாரம் அடியோடு கழிவது உள்ளதாகையாலே அதை வேறுபடுத்தி, பரமாத்மாநுப4வமும் உடையதான ப4க3வத் ப்ராப்தியைக் காட்டுவதற்காக 'ஸம்' என்னும் உபஸர்க்க3த்தை இடுகிறார்.] என்று ஶ்ருதப்ரகாஶிகாப4ட்டர் வ்யாக்2யானம் இட்டிருப்பதிலிருந்து கைவல்யம், ஸம்ஸாரம் அடியோடு கழியப்பெற்ற இடமே என்றும், அதில் ப4க3வத3நுப4வம் கிடையாது என்றும் ஸ்ரீபா4ஷ்யகாரர் திருவுள்ளம் என விளங்குகிறது. இதிலிருந்தும், கைவல்யம் நித்ய முக்தியே என்றும், ப4க3வத3நுப4வமுடைய பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2ன் கைவல்யநிஷ்ட2னாக முடியாது என்றும் தேறுகிறது.

86. பூ4மாதி4கரணத்தில் (1-3-2) "நாமாதி3ஷ்வாஶாபர்யந்தேஷ்வசேதநேஷு புருஷார்த்த2 பூ4யஸ்தயா பூர்வ பூர்வ மதிக்ராந்தேஷ்வப்யுத்தரோத்தரேஷூபதி3ஷ்டேஷு தத்தத்3வேதி3ந: ஆசார்யேணாதிவாதி3த்வம் நோக்தம்; ப்ராணஶப்3த3 நிர்த்தி3ஷ்ட ப்ரத்யக3ாத்மயாதா2த்ம்யவேதி3நஸ்து புருஷார்த்த2பூ4யஸ்த்வாதிஶயம் மந்வாநோ 'ஸ வா ஏஷ ஏவம் பஶ்யந்நேவம் மந்வாந ஏவம் விஜாநந் அதிவாதீ3 ப4வதி' [சா2ந் 7-15-4] இதி அதிக்ராந்தவஸ்துவாதி3த்வமுக்தம் | அதோऽத்ரைவாத்மோபதே3ஶஸ் ஸமாப்த இதி மத்வா ஶிஷ்யோ பூ4யோ ந பப்ரச்ச2 | ஆசார்யஸ்து இத3மபி ஸாதிஶயம் மத்வா நிரதிஶய புருஷார்த்த2பூ4தம் ஸத்யஶப்3த3ாபி4தே4யம் பரம் ப்3ரஹ்ம 'ஏஷ து வா அதிவத3தி யஸ்ஸத்யேநாதிவத3தி' [சா2ந் 7-16] இதி ஸ்வயமேவோபசிக்ஷேப | ஶிஷ்யோऽபி பரமபுருஷார்த்த2ரூபே பரஸ்மிந் ப்3ரஹ்மண்யுபக்ஷிப்தே தத்ஸ்வரூப தது3பாஸநயாதா2த்ம்ய பு3பு4த்ஸயா 'ஸோऽஹம் ப4க3வஸ்ஸத்யேநாதிவதா3நி' [சா2ந் 7-16] இதி ப்ரார்த்த2யாமாஸ ||" ['நாமம் தொடக்கமாக ஆஶாபர்யந்தமான அசேதநங்கள் முன்னதைக் காட்டிலும் பின்னது சிறந்த புருஷார்த்த2ம்' என்று ஆசார்யன் உபதே2ஶித்தபோதிலும் அவற்றில் அவர் அதிவாதி3த்வத்தைக் கூறவில்லை. ப்ராண ஶப்3த2த்தால் சொல்லப்படும் ப்ரத்யக3ாத்மாவை உள்ளபடி உபாஸிப்பவனுக்கோவெனில் முற்கூறியவற்றைக் காட்டிலும் மிகச்சிறந்த புருஷார்த்த2ம் கிடைக்கிறது என்று கருதி, 'இவ்வண்ணமாக ஆத்மாவைக்கண்டு, நினைத்து அறிந்தவன் அதிவாதி3யாகிறான்' [சா2ந் 7-15-4] என்று முற்கூறிய அசேதனப்பொருள்களைக் கடந்திருக்கும் ஆத்மவஸ்துவை உபாஸிக்கின்றமை கூறப்பட்டது. ஆகையால் இவ்விடத்திலேயே ஆத்மோபதே2ஶம் முடிவடைந்தது என்று நினைத்து ஶிஷ்யன் மறுபடி கேள்வி கேட்கவில்லை. ஆசார்யனோவெனில், இந்த ஆத்மப்ராப்தியும் அளவுபட்டது என்று எண்ணி, தனக்கு மேலில்லாத புருஷார்த்த2மா

யிருப்பதாய் 'ஸத்ய' ஶப்3த3த்தினால் சொல்லப்படுவதான பரம் பொருளை 'ஸத்யத்தைக்கொண்டு அதிவாத3ம் செய்பவனே உண்மையில் அதிவாத3ம் செய்பவனாவான்' [சா2ந் 7-16] என்று தானே உபதே3ஶித்தார். ஶிஷ்யனும் பரமபுருஷார்த்த2ரூபமான பரம் பொருளைப்பற்றி உபதே3ஶிக்கப்பெற்றவுடன் அதன் ஸ்வரூபம், உபாஸநம் ஆகியவற்றை உள்ளபடி அறிய விரும்பி 'ப4க3வானே! நான் ஸத்யமாகிற ப்3ரஹ்மத்தைக்கொண்டே அதிவாத3ம் செய்யக் கடவேன்' [7-16] என்று ப்ரார்த்தி2த்தான்.] என்று ஸ்ரீபா4ஷ்ய காரர் அருளியுள்ளார். இந்த ஸ்ரீஸூக்தியிலிருந்து 'நாமம்' தொடக்கமாக 'ஆஶா' பர்யந்தமாக உள்ள அசேதநோபாஸநங்கள் நிலையற்ற ப2லன்களை அளிப்பவையாகவும், இவ்வசேதனப் பொருள்களைக் கடந்திருக்கும் கேவல ஜீவனின் உபாஸநம் நிலையான ப2லனை அளிப்பதாகவும் இருப்பதாலேயே அவற்றிற்குச் சொல்லாத அதிவாதி3த்வத்தைக் கேவல ஜீவோபாஸகனுக்கு ஆசார்யன் அருளினான் என்றும், 'ஸத்ய' ஶப்3த3த்தால் சொல்லப்பட்ட ப்3ரஹ்மத்தை உபாஸிப்பவனுக்கு முற்கூறிய கேவலஜீவோபாஸகனின் ப2லனைப் போலே அளவுபட்ட ப2லனாயிராமல் ப்3ரஹ்மாநுப4வமாகிற அளவற்ற ப2லன் கிடைக்கையாலே, அவனுடைய அதிவாதி3த்வம் முற்கூறியவனின் அதிவாதி3த்வத்தைக் காட்டிலும் சிறந்தது என்று ஆசாரியன் கூறினான் என்றும் விளங்குகிறது. இதிலிருந்து அதிவாதி3யான கேவலஜீவோபாஸகனின் ப2லமான கைவல்யம் நித்ய முக்தியே என்றும், 'ஸத்யம்' எனப்படும் ப்3ரஹ்மத்தை உபாஸிப்பவனுக்குள்ள ப்3ரஹ்மாநுப4வமாகிற ப2லன் அவனுக்குக் கிடையாதென்றும் விளங்குகிறது. "விஶேஷஞ்ச த3ர்ஶயதி" [ப்3ர-ஸூ 4-3-15] என்னும் ஸூத்ரத்தின் பா4ஷ்யத்தில் "அசிந்மிஶ்ரம் கேவலம் வா சித்3 வஸ்து......ய உபாஸ்தே ந தாந் நயதி" [அசித்தோடு கலந்த ஜீவனையோ, அசித் ஸம்ப3ந்த4மற்ற கேவலஜீவனையோ உபாஸிப்பவனை அர்ச்சிராதி3க3ணங்கள் அழைத்துச் செல்வதில்லை.] என்று கேவலஜீவோபாஸகனுக்கு, ப்3ரஹ்மநிஷ்ட2னுக்கும், பஞ்சாக்3நி வித்3யாநிஷ்ட2னுக்கும் உள்ள அர்ச்சிராதி3க3தி இல்லை என்று காட்டுவதன் மூலமும் இந்தச் சா2ந்தோ3க்3ய ப்ரகரணத்தில் 'ப்ராணன்' எனப்படும் ஜீவனை உபாஸிப்பவனாகப் படிக்கப்படுபவனே கைவல்ய நிஷ்ட2ன் என்றும், இவனுக்கு அர்ச்சிராதி3க3தியும், ப்3ரஹ்மாநுப4வமும் இல்லை என்றும் மிகத் தெளிவாகக் காட்டினார் ஸ்ரீபா4ஷ்ய காரர். ஆகையால், பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக் கைவல்யநிஷ்ட2னாகக் கொண்டு அவனுக்கு அர்ச்சிராதி3க3தியைக் கூறும் பக்ஷம் ஸ்ரீபா4ஷ்யகாரரால் ஆத3ரிக்கப்பட்டதல்ல என விளங்குகிறது.

கைவல்யநிஷ்டனையே குறிக்கும் 'கேவல' ஶப்₃த₃த்தை இந்த சா₂ந்தோ₃க்₃ய வாக்யத்தில் 'ப்ராணன்' எனப்படும் ஜீவனை உபாஸிப்பவனைக் குறித்தே ஸ்ரீ பா₄ஷ்யகாரர் ப்ரயோகி₃த்திருப்பதும், பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்டனைக் குறித்து 'கேவல' ஶப்₃த₃த்தை எங்குமே ப்ரயோகி₃யாமல் இருப்பதும் இதை வலியுறுத்துகிறது.

87. "வித்₃யாகர்மணோரிதி து ப்ரக்ருதத்வாத்" [ப்₃ர-ஸூ 3-1-17] என்னும் ஸூத்ரத்தின் பா₄ஷ்யத்தில் ப்₃ரஹ்ம வித்₃யைகளில் ஒன்றை அநுஷ்டி₂த்து ப்₃ரஹ்மத்தை அடைபவர்களுக்கு தே₃வயாநமான அர்ச்சிராதி₃க₃தியையும், புண்யகர்மங்களை அநுஷ்டி₂த்து, அஸ்தி₂ரமான ஐஶ்வர்ய ப₂லன்களைப் பெறுபவர்களுக்கு பித்ருயாணமான தூ₄மாதி₃க₃தியையும் அஸாதா₄ரணமாக வேத₃ங்களில் ஓதப்பட்டவையாக ஸ்ரீபா₄ஷ்யகாரர் நிஷ்கர்ஷிக்கையால் கேவல ஜீவோபாஸகனுக்கு இவ்விரண்டு க₃திகளும் இல்லை என்று தெளிவாக விளங்குகிறது. கீ₃தை (8-23) பா₄ஷ்யத்தில் ஜ்ஞாநிகளுக்கு அர்ச்சிராதி₃க₃தியையும், புண்யகர்மங்களை அநுஷ்டி₂க்கும் ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு தூ₄மாதி₃க₃தியையும் பிரித்து அருளிச்செய்து, ப்ரகரணஸித்₃த₄னை ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்யநிஷ்டனுக்கு இவ்விரண்டு க₃திகளும் இல்லை என்று பா₄ஷ்யகாரர் உணர்த்தியதும் இந்த ஸூத்ரத்தைத் திருவுள்ளத்தில் கொண்டே என எளிதில் உணரலாம். ஆகையால், பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்டனே கைவல்ய நிஷ்டன் என்னும் பக்ஷம் ஸ்ரீபா₄ஷ்யகாரர் உகந்ததன்று என்று இதிலிருந்தும் தேறுகிறது.

88. "தே₃ஹயோகா₃த்₃ வா ஸோऽபி" [ப்₃ர-ஸூ 3-2-5] என்னும் ஸூத்ரத்தின் ஸ்ரீபா₄ஷ்யத்தில் "ஸோऽபி-திரோபா₄வ: தே₃ஹயோக₃த்₃வாரேண வா ப₄வதி, ஸூக்ஷ்மாசிச்சூ₂க்தியோக₃த்₃வாரேண வா; ஸ்ருஷ்டிகாலே தே₃ஹாவஸ்தே₂ந அசித்₃வஸ்துநா ஸம்யோகா₃த் ப₄வதி; ப்ரளயகாலே நாமரூபவிபா₄கா₃நர்ஹாதி ஸூக்ஷ்மாசித்₃வஸ்துயோகா₃த்। அதோऽநபி₄வ்யக்த ஸ்வரூபத்வாத்..." [பரமபுருஷனுடைய ஸங்கல்பத்தால் ஜீவனுக்கு ஏற்படும் அந்த ஸ்வரூப மறைவு — ஸ்ருஷ்டி காலத்தில் தே₃ஹமாகிற அசேதனப்பொருளோடு (எம்பெருமானால் உண்டாக்கப்பட்ட) சேர்த்தியாலே விளைகிறது; (எம்பெருமான் அனைத்தையும் லயமடையச்செய்யும்) ப்ரளய காலத்தில் இந்த ஸ்தூ₂லமான தே₃ஹம் இல்லாவிடிலும், இதற்குக் காரணமாய், நாமரூபப் பிரிவற்றதாகையாலே அதிஸூக்ஷ்மமான மூலப்ரக்ருதி எனும் அசேதநப்பொருளின் சேர்த்தியாலே உண்டா

கிறது. இப்படி ஸ்ருஷ்டி காலத்திலும், ப்ரளயகாலத்திலும் (இரு வகைப்பட்ட அசேதநப்பொருளின் தொடர்பு ஏற்பட்டு இந்த லீலா விபூ₄தியிலிருக்கும் வரையில்) ஜீவன் மறைக்கப்பட்ட ஸ்வரூபத்தை உடையவனுயிருக்கையால்......)] என்று அருளிச்செய்யப்பட்டது. இந்த ஸூத்ரத்திலிருந்தும், பா₄ஷ்யத்திலிருந்தும் இந்த லீலா விபூ₄தியிலிருக்கும் வரையில் ஸ்தூ₂லமாகவோ, ஸூக்ஷ்மமாகவோ ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ம் தவிர்க்கவொண்ணுதாகையாலே ப்ரக்ருதியி லிருந்து நீங்கிய ஆத்மஸ்வரூபத்தின் பூர்ணுநுப₄வமாகிற கைவல்ய மோக்ஷத்தை ஜீவன் ப்ரக்ருதிமண்ட₃லத்துக்குள் இருந்துகொண்டு அடையமுடியாது. ஆகையால் நித்யவிபூ₄தியிலேயே இந்த மோக்ஷ ஸ்த₂ானம் உள்ளதென்றும், இது நித்ய முக்தியே என்றும் விளங்குகிறது.

89. இது நித்ய முக்தி என்று கொள்வதில் ஸ்ரீபா₄ஷ்ய ஸ்ரீஸூக்திகள் சில முரண்படுமே என்னும் ஆக்ஷேபத்திற்குப் பரிஹாரம் உரைக்கின்றோம். அத்ரதி₄கரணத்தில் ''விஶேஷணுச்ச'' [ப்₃ர.ஸூ 1-2-12] என்னும் ஸூத்ரத்தின் பா₄ஷ்யத்தில் புறமதத்தவர்கள் மோக்ஷத்தைப் பலவாறு கூறுகிறார்கள் என்று விளக்கிவிட்டு, ''த்ரய்யந்தநிஷ்ணுதாஸ்து—நிகி₂லஜக₃தே₃ககாரணஸ்ய அஶேஷஹேய ப்ரத்யநீகாநந்தஜ்ஞாநாநந்தைக₃க ஸ்வரூபஸ்ய ஸ்வாபா₄விகாநவதி₄ காதிஶயாஸங்க்₂யேய கல்யாண கு₃ணுகரஸ்ய ஸகலேதர விலக்ஷணஸ்ய ஸர்வாத்மபூ₄தஸ்ய பரஸ்ய ப்₃ரஹ்மணஶ்ஶரீரதயா ப்ரகாரபூ₄தஸ்ய அநுகூலாபரிச்சி₂ந்ந ஜ்ஞாநஸ்வரூபஸ்ய பரமாத்மாநுப₄வைகரஸஸ்ய ஜீவஸ்ய அநாதி₃கர்மரூபாவித்₃யாதிரோஹித ஸ்வரூபஸ்ய அவித்₃யோச் சே₂த₃ பூர்வக ஸ்வாபா₄விக பரமாத்மாநுப₄வமேவ மோக்ஷம் ஆசக்ஷதே ||'' [வேத₃ாந்தங்களின் முடிவு கண்டவர்களோவெனில்— எல்லாவுலகிற்கும் ஒரே காரணமாய், எல்லாத் தாழ்வுகளுக்கும் எதிர்த் தட்டானவனுய், அளவற்ற ஜ்ஞாநாநந்த₃ங்களை ஸ்வரூபமாக உடைய வனுய், இயல்வானவையாய் எல்லையற்ற மேன்மையை உடையவை யான கணக்கற்ற கல்யாணகு₃ணங்களுக்கு இருப்பிடமானவனுய், தன்னையொழிந்த பொருள்கள் அனைத்திலும் சிறப்புற்றவனுய், அனை வர்க்கும் ஆத்மாவாயிருப்பவனுன பரப்₃ரஹ்மத்திற்கு ஶரீரமாய், ப்ரகாரமாயிருப்பவனுய், அநுகூலமான அளவற்ற ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாகக்கொண்டவனுய், பரமாத்மாவை அநுப₄விப்பதையே இயல்வாகக் கொண்டவனுன ஜீவனுக்கு, ஸ்வரூபத்தை மறைத்துக்கொண்டிருக்கும் அநாதி₃கர்மரூபமான அவித்₃யையின் அழிவை முன்னிட்டுக்கொண்டு இயல்பான பரமாத்மாநுப₄வம் ஏற்படுவதையே மோக்ஷம் என்று கூறுகிறார்கள்.] என்று பரமாத்மாநுப₄வமே மோக்ஷம் என்று வேத₃ாந்தங்களின் முடிவு கண்டவர்களின் ஸித்₃தா₄ந்தமாக ஸ்ரீ பா₄ஷ்யகாரர் அருளியுள்ளார்.

வாக்யாந்வயாதி₄கரணத்தில் [1-4-6] ''அம்ருதத்வஸ்ய பரமபுருஷ வேத₃னைஉபாயதயா ப்ரதிபாத₃நாத்'' [மோக்ஷமானது பரமபுருஷனை உபாஸிப்பதையே உபாயமாகக்கொண்டதென்று வேத₃ம் ஓதுகையால்] என்று தொடங்கி, ''ஆத்மஸ்வரூப யாத₂ாத்ம்ய ஜ்ஞாநம் அவ்வுபாஸனத்திற்கு அங்க₃மாகுமேயொழிய மோக்ஷத்திற்கு நேர் உபாயமாகாது'' என்று அருளியுள்ளார். இதிலிருந்து, ஜீவாத்மாநுப₄வ ரூபமான கைவல்யம் மோக்ஷமன்று என்று ஸ்ரீப₄ாஷ்யகாரர் திருவுள்ளம்பற்றியிருப்பதாக விளங்குகிறதே—என்பது அவ்வாக்ஷேபம். இதற்குப் பரிஹாரம் பின்வருமாறு — பரமாத்மாநுப₄வமே முக்₂ய மோக்ஷமாகும். அணுவாகிற ஜீவன் தன்னைத்தான் அநுப₄விப்பதாகிற கைவல்யமோக்ஷம் 'சிற்றின்பம்' [திருவாய் 4-9-10] என்று ஆழ்வார்களால் இகழப்பட்ட தாழ்ந்த மோக்ஷமேயாகையாலே அமுக்₂ய மோக்ஷமேயாகும். இங்கு எடுத்த ஸ்ரீப₄ாஷ்ய ஸ்ரீஸூக்திகளில் வேத₃ாந்தங்களின் முடிவு கண்ட த்ரய்யந்தநிஷ்ணாதர்கள் திருவுள்ளம் பற்றிய முக்₂ய மோக்ஷத்தைப் பற்றியே ஸ்ரீப₄ாஷ்யகாரர் பேசியிருக்கிறாராகையாலே, இதுகொண்டு கீ₃தா ப₄ாஷ்யாதி₃களில் அவரே தெளிவாக முக்தி என்று காட்டியிருக்கும் அமுக்₂ய மோக்ஷமான கைவல்ய மோக்ஷத்தை இல்லைசெய்ய முடியாது. முற்கூறிய காரணங்களால் இந்த லீலாவிபூ₄தியில் அநுப₄விக்கப்படும் ஐஶ்வர்யமாக இதைக்கொள்ள முடியாமலிருக்கையால், இதை மோக்ஷத்தின் ஒரு வகையாகவும், தாழ்ந்த மோக்ஷமாகவும், அமுக்₂யமோக்ஷமாகவும் முற்கூறிய ஶ்ருதி, ஸ்ம்ருதி, இதிஹாஸ, புராண, ஆக₃மாதி₃ வாக்யங்களைக்கொண்டு நிர்ணயிக்கத் தட்டில்லை.

90. ப்₃ரஹ்மஸூத்ரத்தில் கார்யாதி₄கரணமும் அதன் ஸ்ரீப₄ாஷ்யமும், தீ₃பஸாரங்களும் தி₃வ்யப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாதாக்களின் பக்ஷத்திற்கே பொருந்தியுள்ளன என்று நிரூபிக்கப்படுகிறது இனி. இக்கார்யாதி₄கரணம் (4-3-5) இரண்டு பூர்வபக்ஷங்களும் ஒரு ஸித்₃தா₄ந்தமும் கொண்டது. அர்ச்சிராதி₃க₃தியிலே ஆதிவாஹிகக₃ணங்கள் அழைத்துச்செல்வது கார்யமான ஹிரண்யக₃ர்ப்ப₄னை உபாஸிப்பவர்களையா? அல்லது ஜக₃த்காரணமான பரப்₃ரஹ்மத்தை உபாஸிப்பவர்களையா? அல்லது பரப்₃ரஹ்மோபாஸகர்கள், தம் ஆத்மாவையே ப்₃ரஹ்மாத்மகமாக உபாஸிப்பவர்கள் ஆகிய இருவகைப்பட்டவர்களையுமா? என்று கேள்வி எழுந்தவளவில், கார்யமான ஹிரண்யக₃ர்ப்ப₄னை உபாஸிப்பவர்களையே ஆதிவாஹிகர்கள் அர்ச்சிராதி₃க₃தியில் அழைத்துச்செல்கிறார்கள் என்று பா₃த₃ரி என்பவர் கருதினர். ஜைமிநி

மஹரிஷியோவெனில், பரமாத்மோபாஸகர்களையே அர்ச்சிராதி3க3தியில் ஆதிவாஹிகர்கள் அழைத்துச் செல்கிருர்கள் என்று கருதினர். இவ்விரண்டு கருத்துக்களையும் பூர்வபக்ஷமாகக்கொண்டு, ''அப்ரதீ-காலம்ப3நாந்நயதீதி ப3ாத3ராயண உப4யதா4 ச தோ3ஷாத் தத்க்ரதுஶ்ச'' (4-3-14) ''விஶேஷஞ்ச த3ர்ஶயதி'' (4-3-15) என்னும் இரு ஸூத்ரங்களில் தம் ஸித்3தா4ந்தத்தை நிலைநாட்டினர் ப3ாத3ராயணரான வேத3வ்யாஸர். இவற்றில் முதல் ஸூத்ரத்தில், ''(1) ப்3ரஹ்மோபாஸகர்கள். (2) ப்3ரஹ்மாத்மகமாகத் தம் ஆத்மாவை உபாஸிப்பவர்கள் ஆகிய இருவகைப்பட்டவர்களுக்கு அர்ச்சிராதி3க3தி உண்டு'' என்று ப3ாத3ராயணர் ஸித்3தா4ந்தம் செய்கிருர். இவர்களை 'அப்ரதீகாலம்ப3நர்கள்' என்று குறிக்கிருர். '' அங்க3ம் ப்ரதீகோऽவயவ: '' [அமரகோஶம் 2-6-70] என்கிற நிக4ண்டுவின்படி, 'ப்ரதீக' ஶப்3த3ம் அவயவத்தைக் குறிக்கும். 'ஆலம்ப3ந' ஶப்3த3ம் உபாஸனத்தைக் குறிக்கும். 'ப்ரதீகாலம்ப3ந' ஶப்3த3ம் ப்3ரஹ்மத்தின் அவயவமான சேதநாசேதநங்களில் ஒன்றை ப்ராப்யமாக உபாஸிப்பவர்களைக் குறிக்கும். இவர்கள் பின்வருமாறு ஆறுவகைப்படுவர்:—(1) பூ4மாதி4கரண விஷயவாக்யத்தில் எடுக்கப்பட்ட நாமம் தொடக்கமாக ஆஶாபர்யந்தமாக உள்ள அசேதநமொன்றை ப்ராப்யமாக உபாஸிப்பவர்கள். (2) அந்த வாக்யத்திலுள்ள ப்ராணன் எனப்படும் கேவலாத்மாவை ப்ராப்யமாக உபாஸிப்பவர்கள். (3) அசித்தோடு சேர்ந்த ஆத்மாவை ப்ராப்யமாக உபாஸிப்பவர்கள். (4), (5), (6) முற்கூறிய அசேதநத்தையும், கேவலாத்மாவையும், அசித்தோடு சேர்ந்த ஆத்மாவையும் 'ப்3ரஹ்மம்' என்னும் எண்ணத்தை ஏறிட்டு உபாஸிப்பவர்கள். (4, 5, 6) உபாஸகர்கள் ப்3ரஹ்மமல்லாததை ப்3ரஹ்மமாக நினைத்து உபாஸிக்கிருர்களாகையாலே, அவர்களுக்கு அஸ்தி2ரமாய் மிகவும் அற்பமான ப2லன்களே கிடைக்கும். முதல் உபாஸகனை அசேதநத்தை உபாஸிப்பவனுக்கும். மூன்ருமவனை அசித்ஸம்ஸ்ருஷ்ட ஜீவோபாஸகனுக்கும் அசேதநம் அஸ்தி2ரமாய், அல்பமாய் இருக்கையாலே அஸ்தி2ரமாய், அல்பமான ப2லன்களே கிடைக்கும். இரண்டாவது வகை உபாஸகர்கள் நித்யமான கேவலாத்மாவை உபாஸிக்கையாலே நித்யமான ப2லன் கிடைத்தபோதிலும், அணுவான தம் ஆத்மாவை ப்ராப்யமாக உபாஸிக்கையாலே, ப்3ரஹ்மாநுப4வத்தைக் காட்டிலும் அல்பமான கேவலாத்மாநுப4வமே கிடைக்கும். இப்படி ப்3ரஹ்மத்தின் அவயவமான சேதநாசேதநங்களை உபாஸிப்பவர்களுக்கு அற்பமான ப2லன்களே கிடைக்கையால், அவர்களுக்கு ப்3ரஹ்மாநுப4வத்தைப் ப2லனாகக் கொண்டதாக உபநிஷத்துக்களில் ஓதப்படும் அர்ச்சிராதி3க3தி கிடையாதென்று ப3ாத3ராயணரால் இந்த அதி4கரணத்தில் முடிவு

கட்டப்பட்டது. இனி, அர்ச்சிராதி₃க₃தி உடையவர்கள் யாரென்னில்: சா₂ந்தோ₃க்₃யம் 5-10-1ல் குறிப்பிடப்பட்ட பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னை ஆத்மோபாஸகனும், ப்₃ரஹ்மோபாஸகனும் அர்ச்சிராதி₃க₃தியை உடையவர்கள் என்றும் இவ்வதி₄கரணத்தில் முடிவு கட்டப்பட்டது. இங்கு கூறப்பட்ட பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுக்கு "ஸ ஏநாந் ப்₃ரஹ்ம க₃மயதி" [சா₂ந் 4-15-5] என்று ப்₃ரஹ்மாநுப₄வம் ஓதப்படுவதால், தத்க்ரதுந்யாயத்தாலே உபாஸித்தபடியே ப₂லன் கிடைக்க வேண்டுமாகையால் இவன் கேவலாத்மாவை ப்ராப்யமாக உபாஸிப்பவனன்று, ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பவனே என்று விளங்குகிறது—என்னும் விஷயத்தை 'தத்க்ரதுஶ்ச' [4-3-14] என்னும் ஸூத்ரப்பகுதியாலே பா₃த₃ராயணர் விளக்குகிறார் என்று ஸ்ரீபா₄ஷ்யத்தில் அருளிச்செய்யப்பட்டது. இதிலிருந்து ஸூத்ரகாரரும், பா₄ஷ்யகாரரும் ப்₃ரஹ்மாநுப₄வமும், அர்ச்சிராதி₃க₃தியுமுடைய பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னை இவை இரண்டும் அற்ற கைவல்யநிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவனாகவே கருதியிருக்கிறார்கள் என்று விளங்குகிறது. "நாமாதி₃ ப்ராணபர்யந்த ப்ரதீகாலம்ப₃நாநாம் தூப₄யவித₄ஶ்ருதிஸித்₃தே₄பாஸநாப₄ாவாத் அசிந்மிஶ்ரோபாஸநே தத்க்ரதுந்யாயாச்ச அர்ச்சிராதி₃நா க₃திர் ப்₃ரஹ்ம ப்ராப்திஶ்ச ந வித்₃யதே" [நாமம் முதலாக ப்ராணன் ஈறாகவுள்ள ப்ரதீகமான (ப்₃ரஹ்மாவயவமான) சேதநாசேதநங்களை உபாஸிப்பவர்களுக்கு, ஶ்ருதியில் சொல்லப்பட்ட ப்₃ரஹ்மோபாஸநமும், ப்₃ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸநமுமாகிற இருவகைப்பட்ட உபாஸனமும் இல்லாமையாலும், அசித்தோடு கலந்த ஆத்மாவை உபாஸிப்பதில் 'உபாஸித்தபடியே ப₂லன் கிடைக்கும்' என்னும் தத்க்ரதுந்யாயத்தால் அசித்தோடு கலந்த ஆத்மாநுப₄வமே கிடைக்கவேண்டுகையாலும், அர்ச்சிராதி₃க₃தியும், ப்₃ரஹ்மாநுப₄வமும் கிடையாது] என்று இந்த ஸூத்ரபா₄ஷ்யத்தின் கடைசியில் ஸ்ரீபா₄ஷ்யகாரர் அருளிச்செய்தார். இதிலிருந்து, 'ப்ராணன்' எனப்படும் ஜீவனை உபாஸிப்பவன்—அசித்தோடு கலந்த ஜீவனை உபாஸிப்பவனைக் காட்டிலும் வேறுபட்டவன் என விளங்குகிறது. ஆக, ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிக்கும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவனாய், அசித்தோடு கலந்த தன் ஆத்மாவை உபாஸிக்குமவனைக் காட்டிலும் வேறுபட்டவனாக இங்கு எடுக்கப்படும் 'ப்ராணன்' எனப்படும் ஜீவனை உபாஸிப்பவன் கைவல்யநிஷ்ட₂னாகவே இருந்து தீரவேண்டும். இவனுக்கு அர்ச்சிராதி₃க₃தியும், ப்₃ரஹ்மாநுப₄வமும் கிடையாது என்று பா₄ஷ்யகாரர் முக்தகண்ட₂மாக இங்கு அருளிச்செய்திருப்பது குறிக்கொள்ளத்தக்கது. "விஶே

ஷுஞ்ச த3ர்ஶயதி'' [ப்3ர-ஸூ 4-3-15] என்னும் அடுத்த ஸூத்ரத்தின் ப4ாஷ்யத்திலும், ''அசிந்மிஶ்ரம் கேவலம் வா சித்3வஸ்து..... ய உபாஸதே ந தாந் நயதி'' [அசித்தோடு கலந்த ஜீவனையோ, அசித் ஸம்ப3ந்த4மற்ற கேவல ஜீவனையோ உபாஸிப்பவனை அர்ச்சிராதி3 க3ணங்கள் அழைத்துச் செல்வதில்லை.] என்று இவ்விஷயத்தை வலியுறுத்தினர் ஸ்ரீப4ாஷ்யகாரர். இவ்வதி4கரணத்தின் ஸ்ரீப4ாஷ்யத்தில் கைவல்யநிஷ்ட2னையே குறிக்கும் கேவல ஶப்3த3த்தை 'ப்ராணன்' எனப்படும் ஜீவனை உபாஸிப்பவனைக் குறித்தே ஸ்ரீப4ாஷ்யகாரர் இங்கு ப்ரயோகி3த்திருப்பதும், பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக்குறித்து 'கேவல' ஶப்3த3த்தை எங்குமே ப்ரயோகி3யாதிருப்பதும், கைவல்யநிஷ்ட2ன் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக் காட்டிலும் வேறுபட்ட 'ப்ராணன்' எனப்படும் ஜீவோபாஸகனே என்று மிகத் தெளிவாகக் காட்டுகிறது.

91. கார்யாதி4கரண தீ3பஸாரங்களிலும் இவ்விஷயம் வலியுறுத்தப்படுகிறது. முதல் ஸித்3தா4ந்த ஸூத்ரத்தின் (4 3-14) வேதா3ந்த ஸாரத்தில் ''உப4யேऽபி ஹி பரிபூர்ணம் ப்3ரஹ்மோபாஸதே முக2பே4தே3ந—ஸ்வாத்ம ஶரீரகம் ப்3ரஹ்ம கேசந, ப்3ரஹ்மாத்மக ஸ்வாத்மாநமிதரே—இதி '' [பரமபுருஷநிஷ்ட2னும், ப்3ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸகனை பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னுமாகிய இருவரும் ப்3ரஹ்மத்தைப் பரிபூர்ணமாக (ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும்) உபாஸிக்கிறார்கள்; உபாஸிக்கும் முறையிலேயே வாசி. அதாவது:— பரமபுருஷநிஷ்ட2ன் தன் ஆத்மாவை ஶரீரமாகக்கொண்ட ப்3ரஹ்மத்தை ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் உபாஸிக்கிறான். பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2ன் ப்3ரஹ்மத்தை அந்தர்யாமியாகக்கொண்ட தன் ஆத்மாவை ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் உபாஸிக்கிறான் என்னுமிவ்வளவே வாசி.] என்று பரமபுருஷநிஷ்ட2னுக்கும், பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னுக்கும் உபாஸிக்கும் முறையில் சிறிது வாசி இருந்தாலும், பரமபுருஷனே ப்ராப்யமாகவும் ஆகிறான் என்று மிகத் தெளிவாகக் காட்டினர் ஸ்ரீ ப4ாஷ்யகாரர். அன்றிக்கே, ''பரிபூர்ணம் ப்3ரஹ்ம உபாஸதே'' என்றது ஸகல கல்யாணகு3ண விஶிஷ்டமான ப்3ரஹ்மத்தை ப்ராப்யமாக விரும்பி உபாஸிக்கிறான் என்றும் கொள்ளலாம். பரமபுருஷாநுப4வத்தின் வாஸனையும் இல்லாதவனாக ஆழ்வார்களாலும், நாம் முன்னெடுத்த பற்பல ப்ரமாணங்களிலும் காட்டப்படும் கைவல்யநிஷ்ட2ன் இப்பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னாயிருக்க இடமே இல்லை என்பது இந்த ஸார ஸ்ரீஸூக்தியிலிருந்தே மிகத் தெளிவாக விளங்குகிறது.

92. ப்ரதீகாலம்ப₃நர்களைக் காட்டும்போது ஸ்ரீ ப₄ாஷ்யத்திற்கும், வேதா₃ந்த தீ₃பத்திற்கும் சிறிது முரண்பாடு இருப்பதுபோல் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது தோன்றக்கூடும். உண்மையில் முரண்பாடு இல்லை என்று நிரூபிக்கப்படுகிறது இனி. "அசிந்மிஶ்ரம், கேவலம் வா சித்₃வஸ்து ப்₃ரஹ்மத்₃ருஷ்ட்யா தத்₃விபோ கே₃ந ச ய உபாஸதே. ந தாந் நயதி" [அசித்தோடு கலந்த ஆத்மாவையோ, கேவலாத்மாவையோ, ப்₃ரஹ்ம த்₃ருஷ்டியோடோ அல்லது ப்₃ரஹ்ம த்₃ருஷ்டியில்லாமலோ எவர்கள் உபாஸிக்கிறார்களோ, அவர்களை ஆதிவாஹிகர்கள் அர்ச்சிராதி₃க₃தியில் அழைத்துச்செல்வதில்லை.] என்பது (4-3-15) ஸ்ரீப₄ாஷ்யம். "ப்ரதீகாலம்ப₃நாஸ்து—அசிந்மிஶ்ரம், கேவலம் அசித்₃வஸ்து ச 'ஸிம்ஹோ தே₃வத₃த்த:' இதிவத் ப்₃ரஹ்மத்₃ருஷ்ட்யா ஸ்வரூபேண வா தத்₃வஸ்து ய உபாஸதே, தே" [ப்ரதீகாலம்ப₃னர்கள் யாரெனில்—அசித்தோடு கலந்த ஜீவனையும், அசிந்மாத்ரத்தையும், 'தே₃வத₃த்தன் சிங்கமாயிருப்பவன்' என்பதுபோலே 'இவ்வஸ்துவே ப்₃ரஹ்மம்' என்னும் எண்ணத்தோடோ, அவ்வெண்ணமில்லாமல் உள்ளபடியேயோ எவர்கள் உபாஸிக்கிறார்களோ அவர்கள்.] என்பது (4-3-14) வேதா₃ந்ததீ₃பம். இந்த ஸ்ரீப₄ாஷ்ய ஸ்ரீஸூக்திகளில் பாரா 90ல் எடுக்கப்பட்ட ஆறு வகைப்பட்ட ப்ரதீகோபாஸகர்களில் அசிந்மாத்ரத்தை ப்₃ரஹ்ம த்₃ருஷ்டியோடோ, இல்லாமலோ உபாஸிக்கும் இருவகைப்பட்ட ப்ரதீகோபாஸகர்கள் எடுக்கப்படவில்லை. வேதா₃ந்த தீ₃பத்திலோ வெளில் கேவலாத்மாவை ப்₃ரஹ்மத்₃ருஷ்டியோடோ, இல்லாமலோ உபாஸிக்கும் இருவகைப்பட்ட ப்ரதீகோபாஸகர்கள் எடுக்கப்படவில்லை. ஓரிடத்தில் மாத்திரம் எடுக்கப்பட்டவர்களை மற்றவிடத்திலும் உபலக்ஷணமுறையில் கொண்டுவிட்டால் மேலெழுந்தவாரியாகத் தோன்றும் இம்முரண்பாடு தீர்ந்துவிடும். ஆக, ப்ரதீகோபாஸகர்கள் ஆறுவகைப்பட்டவர்களாகத் தேறுகிறார்கள். சிலர் இப்படிக் கொள்ளாமல் முற்கூறிய ஸ்ரீப₄ாஷ்ய ஸ்ரீஸூக்தியில் "கேவலம் வாऽசித்₃வஸ்து" என்று பாட₂ம்கொண்டு வேதா₃ந்த தீ₃பத்தில் சொல்லப்பட்ட நாலுவகைப்பட்டவர்களே ஸ்ரீப₄ாஷ்யத்திலும் ப்ரதீகோபாஸகர்களாகக் காட்டப்படுவதாகக்கொண்டார்கள். இது ஸ்ரீப₄ாஷ்யத்தின் முன்பின் ஸ்ரீஸூக்திகளுக்குப் பொருந்தாது. (4-3-14) ஸ்ரீப₄ாஷ்யத்தின் கடைசியிலுள்ள (பாரா 90ல் எடுக்கப்பட்ட) வாக்யத்தில் 'ப்ராணன்' எனப்படும் கேவலாத்மாவை உபாஸிப்பவனை அசித்தோடு கலந்த ஆத்மாவை உபாஸிப்பவனைக் காட்டிலும் வேறானவனாகவும், ப்ரதீகோபாஸகனாகவும் தெளிவாகக் காட்டியிருக்கையாலும், (4-3-15) ஸ்ரீப₄ாஷ்யத்திலும் "நாமாதி₃

ப்ராணபர்யந்த ப்ரதீகம் உபாஸீநாநாம்'' என்று 'ப்ராணன்' எனப் படும் கேவலாத்மாவை உபாஸிப்பவனையும் ப்ரதீகோபாஸகனுக எடுத்திருக்கையாலும், அப்ரதீகாலம்ப₃னனுன (ப்ரதீகோபாஸகனைக் காட்டிலும் வேறுபட்டவனுன) பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னை இந்த வாக்யத்தின் கடைசியில் குறிக்கும்போது ''ஆத்மாநஞ்ச ப்ரக்ருதி வியுக்தம் - ப்₃ரஹ்மாத்மகம் உபாஸீநாநாம்'' என்று கேவலாத்மோ பாஸகனைக் காட்டிலும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுக்கு வாசி ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பதே என்று விளக்கி யிருக்கையாலும், இடையில் ப்ரதீகோபாஸகர்களைக்காட்டும் ப்ரக்ருத மான ஸ்ரீஸூக்தியில் ''கேவலம் வா சித்₃வஸ்து''என்று கேவலாத்மோ பாஸகனைக் காட்டுவதாகவே கொள்ளவேண்டும். ஆகையால், ஸ்ரீப₄ாஷ்யத்திலும், தீ₃பத்திலும் ஒன்றில் சொல்லாத இருவகைப் பட்ட ப்ரதீகோபாஸகர்களை மற்றொன்றில் உபலக்ஷணமுறையில் காட்டுவதாகக் கொள்வதே உசிதம். அன்றிக்கே, ஸ்ரீப₄ாஷ்யத்தில் 'கேவலம் வா சித்₃வஸ்து' என்பதை 'கேவலம் வாऽசித்₃வஸ்து' என்று ஆவ்ருத்திசெய்துகொண்டு முன் ஸூத்ரப₄ாஷ்யத்தில் எடுக்கப்பட்ட ஆறுவகைப்பட்ட ப்ரதீகோபாஸகர்களையும் நேரேயே காட்டுவதாகவும் கொள்ளலாம். எப்படிக்கொண்டாலும், கேவலாத்மோபாஸகனுன கைவல்யநிஷ்ட₂ன் ப்ரதீகோபாஸகனே என்பதையும், அசித்தோடு கலந்த ஆத்மாவை உபாஸிப்பவனையும், ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிக்கும் பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னையும் காட்டிலும் அவன் வேறுபட்டவனே என்பதை யும், அவனுக்கு அர்ச்சிராதி₃க₃தி இல்லை என்பதையும் ஸ்ரீப₄ாஷ்ய காரர் இங்கு கல்வெட்டாகக் காட்டியிருப்பதை எவராலும் மறுக்க வொண்ணுது.

93. இப்படிக் கைவல்யநிஷ்ட₂னுக்கு அர்ச்சிராதி₃க₃தி இல்லை யானுல், அவன் எந்த க₃தியாலே செல்கிருன் என்னும் கேள்வி எழு கிறது. அவனுக்குரிய க₃தி ஶாஸ்த்ரங்களில் எங்குமே காட்டப்பட வில்லையாகையால், ''யேந கேநாபி க₃ச்ச₂தி'' (ஏதோ ஒருவழியில் செல்லுகிருன்) என்று ஸ்ரீவேதா₃ந்ததே₃ஶிகர் ந்யாயஸித்₃த₄ாஞ்ஜனத் தில் ஜீவபரிச்சே₂த₃த்தில் கைவல்ய விசாரப்ரகரணத்தில் அருளிச் செய்தார். புண்யகர்மங்களைச் செய்தவர்களுக்கு தூ₄மாதி₃மார்க்க₃மும், ப்₃ரஹ்மநிஷ்ட₂ர்களுக்கு அர்ச்சிராதி₃மார்க்க₃மும் உபனிஷத்துக்கள், கீ₃தை, ப்₃ரஹ்மஸூத்ரம் முதலான ஶாஸ்த்ரங்களில் விவரிக்கப் பட்டிருக்கும்போது, இவனுக்குரிய க₃தி ஏன் ஶாஸ்த்ரங்களில் விவரிக் கப்படவில்லை ? என்னும் கேள்வி எழுகிறது. இதற்கு பதிலுரைக்

கிறேம் இனி. ''மாலிருஞ்சோலை நெறிபட அதுவே நினைவது நலமே'' [திருவாய் 2-10-6] என்கிறபடியே மாலிருஞ்சோலை யாத்ரை, ப₃த₃ரி யாத்ரை, திருவேங்கட யாத்ரை முதலான யாத்ரைகளுக்குச் செல்கிறவர்களுக்குப் போகும்வழியும் உத்₃தே₃ஶ்யமாயிருக்கையாலே, அந்த யாத்ரை செல்வதற்கு உத்₃தே₃ஶித்த காலந்தொடங்கிச் செல்லும் வரையிலும் யாத்ரையில் செல்லும் வழியைச் சிந்தித்துக் கொண்டேயிருப்பார்கள். அதுபோலே ஸ்வர்க்க₃ம் செல்பவர்களுக்கு வழியாயிருக்கும் தூ₄மாதி₃ மார்க்க₃ம் அவர்களுக்கு உத்₃தே₃ஶ்ய மாகையாலே அதையும், மோக்ஷம் செல்பவர்களுக்கு வழியாயிருக்கும் அர்ச்சிராதி₃மார்க்க₃ம் அவர்களுக்கு உத்₃தே₃ஶ்யமாகையாலே அதையும், அவரவர்கள் சிந்திப்பதற்காக அம்மார்க்க₃ங்களை ஶாஸ்த்ரம் விதி₄த்தது. கேவலாத்மோபாஸகனுக்குத் தன் ஆத்மாவைத் தவிர மற்ற எதுவுமே அவ்வாத்மாநுப₄வத்திற்குத் தடையாயிருக்கையால், அவன் க₃தி சிந்தனத்தை விரும்புவதில்லை என்னும் காரணத்தாலேயே அவனுக்குரிய க₃தியை ஶாஸ்த்ரம் எங்குமே விவரிக்கவில்லை என்று கண்டுகொள்வது.

94. 'கைவல்யநிஷ்ட₂னுக்கு அர்ச்சிராதி₃க₃தியைக் காட்டிலும் வேறான க₃தியுண்டு' என்று பூர்வாசார்யர்கள் எங்காவது தெரிவித்திருக்கிறார்களா? எனில்: கீ₃தை (8-23. 24) தாத்பர்யசந்த்₃ரிகையில், ''அந்யாமபி க₃திம் ப்ராஞ்ச: ப்ரதீசீம் ப்ரத்யபாத₃யந்'' [(அர்ச்சிராதி₃க₃திக்கு) நேர்மாறான வேறொரு க₃தியை முன்னோர்கள் தெரிவித்தார்கள்] என்று ஸ்ரீவேதா₃ந்ததே₃ஶிகர் தமக்கு முன்னிருந்த பல ஆசார்யர்கள், '' சூழ்விசும்பு '' [10-9] திருவாய்மொழியின்படி தோரணம் நிரைத்தெங்கும் தொழுபவரும், தூபநல்மலர்மழை பொழிபவரும், இருப்பிடம் வகுப்பவரும், கைந்நிரை காட்டுபவரும், கீதங்கள் பாடுபவரும், வேதநல்வாயவரும், காளங்கள் வலம்புரி கலந்தெங்கும் இசைப்பவரும், வாழ்த்துபவரும், தோத்திரம் சொல்லுபவரும், முறைமுறை எதிர்கொள்பவரும், வியப்பவரும், பாதங்கள் கழுவுபவரும், நிதியும் நற்சுண்ணமும், நிறைகுடவிளக்கமும் ஏந்திவருபவர்களும் நிறைந்த அர்ச்சிராதி₃க₃திக்கு நேர்மாறாய், தானே தானேயாகும் கைவல்யநிஷ்ட₂னுக்குத் தக்கபடி நிர்மாநுஷ்யமானதொரு க₃தியை அவனுக்குத் தெரிவித்திருக்கிறார்கள் என்று கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. இப்படி நிர்மாநுஷ்யமாய், எவ்வித அடையாளமுமில்லாததனாலேயே, சாஸ்த்ரங்கள் இவ்வழியை வர்ணிக்கவில்லை என்றும் கொள்ளலாம்.

95. கார்யாதி₄கரணத்தில் (4-3-14) முதல் ஸித்₃தா₄ந்த ஸூத்ரத்தில் "தத்க்ரதுஶ்ச" என்று மோக்ஷார்த்த₂மான உபாஸகர்களிடையே "உபாஸித்தபடியே ப₂லன்" எனக்கூறும் தத்க்ரது ந்யாயத்தை ஸூத்ரகாரர் ஸஞ்சரித்திருக்கையாலும், பா₄ஷ்யகாரரும் அதை இருவித₄மான ப்₃ரஹ்மோபாஸகர்களிடையே நிரூபிக்கையாலும், முக்₂யமோக்ஷமான ப்₃ரஹ்மாநுப₄வத்திலேயே ஆகாரதாரதம்யம் உண்டென்று விளங்குகிறது. இருவரும் ப்₃ரஹ்மத்தை ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும் உபாஸித்தபோதிலும், தன் ஆத்மாவுக்கு அந்தர்யாமியான பரப்₃ரஹ்மத்தை ப்ராப்யமாக உபாஸித்தவன் பரமபத₃ம் சென்றபின்பும், தன் ஆத்மாவுக்கு அந்தர்யாமியாயிருக்கும் ஸகல கல்யாணகு₃ணபூர்ணமான ப்₃ரஹ்மத்தை அநுப₄விக்கிறான் என்றும், ப்₃ரஹ்மத்திற்கு ப்ரகாரமாகத் தன் ஆத்மாவை உபாஸித்தவன், பரமபத₃ம் சென்றபின்பு ஸகல கல்யாணகு₃ணபூர்ண ப்₃ரஹ்மத்திற்கு ப்ரகாரமான தன் ஆத்மாவின் அநுப₄வத்தைப் பெறுகிறான் என்றும் விளங்குகிறது. இருவருக்குமே தன் ஆத்மாநுப₄வமும், பரமாத்மாநுப₄வமும் இருந்தபோதிலும், உபாஸநமுறையில் சிறிது பே₄த₃ம் இருந்ததுபோலே, அநுப₄வமுறையிலும் அந்த பே₄த₃ம் உள்ளது என்றே தத்க்ரதுந்யாயத்தின்படி கொள்ளவேண்டும். இருவர்க்குமே அணுவான ஆத்மாவின் அநுப₄வத்தைக் காட்டிலும், விபு₄வான ப்₃ரஹ்மத்தின் அநுப₄வமே விஞ்சிநிற்குமாகையால், "ப்₃ரஹ்ம க₃மயதி" [சா₂ந் 4-15-5] [அமானவன் இருவரையும் ப்₃ரஹ்மத்திடம் அழைத்துச் செல்லுகிறான்] என்று ப்₃ரஹ்மாநுப₄வத்தைப் ப₂லனாக ஶ்ருதி சொன்னதில் குறையில்லை. இப்படிக்கொள்ளாமல், பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்டனுக்கு ப்ரக்ருதிமண்ட₃லத்திற்குள் சிறிதுகாலம்ஆத்மாநுப₄வத்தையும், அதற்குப்பின் பரமபத₃த்தில் ப்₃ரஹ்மாநுப₄வத்தையும் கல்பிப்பது தத்க்ரதுந்யாயத்திற்கும் பொருந்தாது; ஶ்ரீபா₄ஷ்யம், ஶ்ருதப்ரகாஶிகை முதலான பூர்வாசார்ய க்₃ரந்த₂ங்களிலும் அப்படிக் கல்பிக்கவேண்டும் என்று ஸூசநமாகவும் சொல்லப்படவில்லை.

96. இப்படி மோக்ஷத்தில் தாழ்ந்த முக்தி என்றும், உயர்ந்த முக்தி என்றும் இரு முக்திகளை ஒப்புக்கொண்டால், "விகல்போऽவிஶிஷ்ட ப₂லத்வாத்" [ப்₃ரஹ்மஸூத்ரம் 3-3-57] [ப₂லம் ஒத்திருக்கையால், ஒரு வித்₃யையை அநுஷ்டி₂த்தாலே போதும்] என்னும் ஸூத்ரத்தில் மோக்ஷத்தில் ப₂லபே₄த₃மில்லை என்று கூறியிருப்பது பொருந்தாதே எனில்: அவ்வதி₄கரணம் ப்₃ரஹ்மவித்₃யைகளில் ஒவ்வொரு வித்₃யையை அநுஷ்டி₂த்தாலே எல்லையற்ற ப்₃ரஹ்மாநந்த₃ம் ஏற்பட்டு விடுமாகையால், ஒன்றை அநுஷ்டி₂த்தாலே போதும் என்று ஸ்தா₂பிக்க வந்ததேயொழிய, கைவல்ய ஸாத₄கமான ஆத்மவித்₃யைக்கும், ப்₃ரஹ்மாநுப₄வஸாத₄கமான ப்₃ரஹ்மவித்₃யைக்கும் ப₂லம் ஒன்று என்று ஸாதி₄க்க வந்ததல்ல; ஆகையால் விகல்பாதி₄கரண விரோத₄ம் வாராது.

97. தத்க்ரதுந்யாயத்தை ஆத்மத்வோபாஸநாதி4கரணத்தில் [4-1-2]. விளக்கும்போது " யதா2வஸ்தி2தஞ்ச ப்3ரஹ்ம உபாஸ்யம் | அயதே2ாபாஸநே ஹி ப்3ரஹ்மப்ராப்திரபி அயதா2பூ4தா ஸ்யாத் || " [ப்3ரஹ்மத்தை உள்ளபடி உபாஸிக்கவேணும்; உள்ளபடியல்லாமல் உபாஸித்தால் ப்3ரஹ்மப்ராப்தியும் உள்ளபடியல்லாததாகவே அமையும்.] என்று ஸ்ரீபா4ஷ்யகாரர் அருளியிருப்பதிலிருந்து மோக்ஷத்திலும் தத்க்ரதுந்யாயப்படி அவரவர் விருப்பத்தை அநுஸரித்து பே4த3ங்கள் உண்டென்று தேறுகிறது. இவ்வாக்யம் பூர்வபக்ஷத்தில் எடுக்கப்பட்டிருந்தபோதிலும், ஸித்3தா4ந்தத்தில் மறுக்கப்படாமையாலே ஸ்ரீபா4ஷ்யகாரர் திருவுள்ளம்பற்றியதென்றே விளங்கும். " அயதா2பூ4தா ஸ்யாத் " என்னும் ஸ்ரீ பா4ஷ்ய ஸ்ரீ ஸூக்திக்கு " ஸம்ஸாரித்வப்ராப்தி: ஸ்யாத் இத்யர்த்த2: " [ஸம்ஸாரியாக வேண்டிவரும் என்று கருத்து] என்று ஸ்ருதப்ரகாஸிகையில் பூர்வ பக்ஷியின் கருத்துப்படி உரையிடப்பட்டதாகையாலே, ஸித்3தா4ந்தத்தில் "கைவல்யம் முதலான பலவிதமான முக்திகள் தத்க்ரதுந்யாயத்தாலே ஏற்படும்" என்று கொள்வதற்கு இது முரணாகாது. ஆக, கைவல்யநிஷ்ட2ன் எம்பெருமானிடம் பே4ாக்3யதாபு3த்3தி4 இல்லாமல் கேவலாத்மாநுப4வத்தை அளிக்கும் ஸாத4னமாக மாத்திரம்கொண்டு உபாஸித்தானாகில், முக்தியிலும் அவனுக்கு எம்பெருமான் கேவலாத்மாநுப4வத்தை அளிப்பதற்கு ஸாத4னமாக ப்ரகாஸிப்பானேயொழிய, பே4ாக்3யமாக ப்ரகாஸிக்கமாட்டான் என்பது இந்த ஸ்ரீ பா4ஷ்ய ஸ்ரீ ஸூக்தியிலிருந்து எளிதில் விளங்கும்.

98. அபா4வாதி4கரணத்தில் [4-4-5] முக்தனுக்கு ஸரீரம், இந்த்3ரியம் முதலானவை உண்டா, இல்லையா என்று ஆராயப்படுகிறது. பா3த3ரி என்பவர் 'ஸரீரம் இருந்தால் ப்ராக்ருதமான ஸுக2 து3:க்க2ங்களைத் தவிர்க்க முடியாதாகையாலே, முக்தனுக்கு ஸரீரம் இல்லை' என்று கருதினார். ஜைமினியோவெனில், "முக்தன் பலபடியாக ஆகிறான்" என்று வேதம் ஓதுகையால், கர்மம் காரணமாக ஏற்படாத அப்ராக்ருத ஸரீரம் அவனுக்கு உண்டென்று கொள்ள வேண்டும்" என்று கருதினார். பா3தராயணராகிற வ்யாஸர் இவ்விரண்டு பக்ஷத்தையும் ஏற்காமல், "முக்தர்களில் சிலர் ஸரீரம் உடையவர்களாகவும் இருக்கலாம், சிலர் ஸரீரம் இல்லாதவர்களாகவும் இருக்கலாம்" என்று திருவுள்ளம் பற்றினார். இதிலிருந்து, நித்யஸூரிகளைப்போல் கைங்கர்யத்தில் ஊன்றியிருக்கும் சில முக்தர்களுக்கு ஸரீரம் உண்டென்றும், கைங்கர்யத்தில் ஊன்றாமல் பகவத்

கு₃ணநுப₄வத்திலேயே ஊன்றியிருக்கும் சில முக்தர்களுக்கு ஶரீரம் தேவையில்லையாகையாலே அப்ராக்ருத ஶரீரமும் இல்லையென்றும் விளங்குகிறது. இதே ந்யாயத்தின்படி பார்க்கும்போது, கைவல்யத்தையடைந்தவனான முக்தனும் தன் ஆத்மாவை மாத்திரம் அநுப₄விப்பவனாகையாலே அவனுக்கு ஶரீரம் தேவையில்லை என்னும் காரணத்தால் அவன் அஶரீரியாகவே இருந்து தன் ஆத்மாவை அநுப₄விக்கிறான் என்று கொள்ளலாம்.

99. பராயத்தாதி₄கரணத்தில் [2-3-6] "க்ருதப்ரயத்நாபேக்ஷஸ்து" [2-3-41] என்று தொடங்கும் ஸூத்ரத்தில், ஶாஸ்த்ர விதி₄நிஷேத₄ங்கள் வீணாகாமல் இருப்பது முதலான காரணங்களுக்காக எம்பெருமான் ஒவ்வொரு காரியத்திலும் ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் சேதனனுக்கு ஸ்வாதந்த்ர்யம் அளித்திருப்பதாக ஸூத்ரகாரர் தெளிவாகத் திருவுள்ளம் பற்றினார். ஸ்ரீ பா₄ஷ்யத்திலும், ஶ்ருதப்ரகாஶிகையிலும் இது விரிவாக நிரூபிக்கப்பட்டது. நடாதூரம்மாளாலே தத்வஸாரத்தில் "ஆதா₃வீஶ்வரத₃த்தயைவ" [46] என்னும் ஶ்லோகத்தில் இவ்விஷயம் மிகத் தெளிவாக நிலைநாட்டப்பட்டது. சேதனனுக்கு இப்படி ஒவ்வொரு கார்யத்திலும் ஜ்ஞாநம், இச்சை₂ ப்ரவ்ருத்தி என்னும் முறையில் ஏற்படும் ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ரியம் அளிக்கப்பட்டிருக்கையாலே, அவனது இச்சை₂யாகிற ப்ரதிபத்திக்கு அநுகு₃ணமாகவே எம்பெருமான் அவனுக்கு ஸாத₄னங்களை விதி₄த்து, அவனுடைய தாழ்ந்த ப்ரதிபத்திகளை (எண்ணங்களை) படிப்படியாக உயர்த்துவதற்கு முயலுகிறான் என்றும், முக்தியிலும் தான் ஆனந்த₃ம் அடைவதற்காக ப்ரக்ருதியிலிருந்து நீங்கின தன் ஆத்மாவைத் தான் அநுப₄விக்கவேண்டும் என்னும் எண்ணமுடையவனுக்கு அவனுடைய அவ்வெண்ணத்தைத் திருத்துவதற்காக ஶேஷத்வாநுஸந்தா₄நம், தி₃வ்ய மங்க₃ள விக்₃ரஹ சிந்தனம் முதலானவற்றோடு கூடிய ஜ்ஞான யோக₃த்தை ப்ராரப்₃த₄ கர்மம் முடிந்து அந்திம ஸ்ம்ருதி ஏற்படும் வரையில் பல ஜன்மங்களில் ஸாத₄னமாக அநுஷ்டி₂க்கச் செய்கிறான் என்றும், அந்திம ஸ்ம்ருதி வரையிலும் இவனுக்குத் தன் கேவலாத்மாநுப₄வத்தில் ஆசை நீங்கி, எம்பெருமானிடம் பே₄க்₃யதாபு₃த்₃தி₄ ஏற்படாவிடில் எம்பெருமான் ஶாஸ்த்ர விதி₄கள் வீணாகாமை, தனக்கு வைஷம்ய நைர்க்₄ருண்யங்கள் ஏற்படாமை முதலானவற்றைக் கருதி, இவன் விரும்பிய கைவல்ய மோக்ஷத்தையே இவனுக்கு அருளிவிடுகிறான் என்றும் தெளிவாக விளங்குகிறது. பராயத்தாதி₄கரணத்தில் நிலைநாட்டப்பட்டிருக்கும் ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ர்யம் இவ்வண்ணமாக முக்தியில்

ப2லபே4த3த்தைத் தவிர்க்கமுடியாததாக்கிவிடுகிறது. இவ்விஷயம் 26-வது பாராவில் ஏற்கனவே விரிவாக நிரூபிக்கப்பட்டது.

9. யுக்தி ஸ்வாரஸ்யம்

100. ''எல்லாக் கர்மங்களும் கழிந்தபின் ஏற்படுவதுதானே முக்தி. அப்படி எல்லாக் கர்மங்களும் கழிந்தபின் ஸ்வரூபத்துக்குத் தகாத கேவலாத்மாநுப4வம் முதலானவை முக்தியில் எப்படி ஏற்பட முடியும்? அப்படி முக்தியிலும் ஸ்வரூபத்துக்குத் தகாத புருஷார்த்த2ம் கிடைக்குமானால், அதற்கும், லீலாவிபூ4தியிலடையும் ப்ராக்ருத போ4க3ங்களுக்கும் வாசியில்லாமல் போய்விடுமே?'' என்பது கைவல்யத்தை முக்தியாகக் கொள்ளமுடியாது என்னும் பக்ஷத்தைத் தழுவிய ஆசார்யர்கள் கைக்கொண்ட முக்2யமான யுக்தியாகும். இக் கேள்விக்கு பதிலை 25. 26, 27-வது பாராக்களில் விரிவாக நிரூபித்திருக்கிறோம். எம்பெருமானாருக்குப் பிற்பட்ட காலத்தில் பிள்ளான், நஞ்சீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை முதலான தி3வ்யப்ரப2ந்த4 வ்யாக்2யாதாக்களும், அருளாளப்பெருமாள் எம்பெருமானார், எங்களாழ்வான், நடாதூரம்மாள், கூரத்தாழ்வான், பட்டர், பிள்ளைலோகாசார்யார் முதலான பூர்வாசார்யர்களும்—நாம் ஏற்கனவே எடுத்துக் காட்டிய உப4யவேத3வேத3ாந்த ஸ்வாரஸ்யங்கள், ஸ்ரீப4ாஷ்ய கீ3தா ப4ாஷ்யாதி3 ஸ்வாரஸ்யங்கள் முதலானவற்றைத் திருவுள்ளம்பற்றி, ப்ரத2மப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு எம்பெருமான் அநாதி3காலமாக ஸ்வாதந்த்ர்யத்தை அளித்திருக்கிறான் என்றும், இந்த ஸ்வாதந்த்ர்யத்தினாலேயே ஜீவன் ப்ராக்ருதமான விஷயங்களை விரும்பி, ஜ்ஞான இச்சா2 ப்ரயத்னங்களைச் செய்து, கணக்கற்ற புண்யபாபங்களைக் குவித்துவைத்திருக்கிறான் என்றும், எம்பெருமான் ஜீவனுக்குப் பள்ளமடையாயிருக்கும் இந்த ஸ்வார்த்த2மான ஸ்வப்ரவ்ருத்திகளைப் பற்றாசாகக்கொண்டு, அவன் விரும்பும் ப்ராக்ருத ப2லன்களுக்கும், கேவலாத்மப்ராப்தி, பரமாத்ம ப்ராப்திரூபமான மோக்ஷங்களுக்கும் ஸாத4னங்களை விதி4த்து, ஜீவனுடைய எண்ணத்தைப் படிப்படியாக உயர்த்தி, அவனுடைய ஸ்வார்த்த2தையாகிற சுயநலமனப்பான்மையும், அதனால் தன் ஆனந்த3த்துக்குத் தான் முயலுகையாகிற ஸ்வப்ரவ்ருத்தியும் படிப்படியாகக் குறைவதற்கு, ஜீவனுடைய பல ஜன்மங்களில் பாடுபடுகிறான் என்றும், அந்த ஸ்வார்த்த2தையும், ஸ்வப்ரவ்ருத்தியும் அடியோடு கழிந்து, 'உனக்கே நாமாட்செய்வோம்' [திருப்பாவை 29] என்னும் பரார்த்த2ப்ரதிபத்தியும், ஸ்வார்த்த2மான ஸ்வப்ரவ்ருத்தி நீங்குகையாகிற பரக3தஸ்வீகார நிஷ்டை2 (ஸித்3தோ4பாய நிஷ்டை2) எனப்படும் உத்தம ப்ரபத்திநிஷ்டை2யும் விளைந்த

பின்பு, தனது நிர்ஹேதுக க்ருபைக்கு அநாதி3காலமாகத் தடையாயிருந்த ஸ்வார்த்த2மான ஸ்வப்ரவ்ருத்தி நீங்குகையாலே, பரமபத3த்தில் பரார்த்தா2நுப4வ கைங்கர்யரூபமான பரமபுருஷார்த்த2த்தை அந்த நிர்ஹேதுக க்ருபையாலேயே அளிக்கிறான் என்றும், பல ஜன்மங்கள் மோக்ஷஸாத4னத்தை அநுஷ்டி2த்த பின்பும் அந்திம ஸ்ம்ருதிவரையில் மோக்ஷாநந்த3த்தில் ஸ்வார்த்த2தை நீங்கிப் பரார்த்த2 ப்ரதிபத்தி விளையாதவர்களுக்கு, அநாதி3காலமாக ஜீவன் செய்திருக்கும் ப்ராக்ருத விஷயமான ஜ்ஞான இச்சா2 ப்ரயத்னப2லங்களாகிற புண்யபாபங்களை முழுவதும் கழித்து, அவர்கள் விரும்பும் கைவல்ய மோக்ஷத்தையோ, ஸ்வார்த்த2மான முக்2ய மோக்ஷத்தையோ தத்க்ரதுந்யாயத்தையொட்டியும், ஶாஸ்த்ர விதி4கள் வீணாகாமை, தனக்கு வைஷம்ய நைர்க்4ருண்யங்கள் வாராமை முதலானவற்றுக்குக் கட்டுப்பட்டும் அவர்கள் செய்த ஸாத4நாநுஷ்டா2நப2லனாக அளித்துவிடுகிறான் என்றும் ஒப்புக்கொண்டார்கள். இவ்வாசார்யர்களின் திருவுள்ளமாவது— ஜீவனுடைய முயற்சிகள் அவனுக்குப் பரார்த்தா2நுப4வ கைங்கர்யங்களாகிற பரமமுக்2ய மோக்ஷத்தையளிக்கமாட்டாவாகையால், ப4க்தியோ அல்லது ப்ரபத்தியோ மோக்ஷஸாத4னம் என்னும் எண்ணம் தவறானது. தனக்காகத் தான் முயல்வதினின்றும் நீங்கித் தன்னிடமுள்ள ஜ்ஞானம், ப4க்தி, ப்ரபத்தி முதலியவைகளை மோக்ஷோபாயமாகக் கருதாமல் ஸ்வயம் ப்ரயோஜனமாக எண்ணி, பரார்த்த2 ப்ரதிபத்தியோடு எம்பெருமானையே உபாயமாக நினைத்திருக்கும் அதி4காரிகளுக்கு எம்பெருமான் நிர்ஹேதுக க்ருபையாலே முற்கூறிய பரம முக்2ய மோக்ஷத்தை அருளுகின்றான். மோக்ஷத்தில் எம்பெருமானோடு தானும் ஆனந்த3மடையவேணும் என்று விரும்பி, அந்திம ஸ்ம்ருதி வரையில் அதற்காகத் தன் முயற்சியில் ஈடுபடுவர்களுக்கு அவரவர் விருப்பப்படி தாழ்ந்த மோக்ஷங்களே கிடைக்கும். ஆகையால், தனக்காகத் தான் முயலுவது ஸ்வரூபத்துக்கு விருத்3த4மாகையாலும், தாழ்ந்த மோக்ஷங்களையளித்துவிடுமாகையாலும் அம்முயற்சியில் சேதனன் ஈடுபடலாகாது — என்பது இவ்வாசார்யர்களின் திருவுள்ளம். எம்பெருமானாருக்குப் பிற்பட்ட சில ஆசாரியர்கள் இதில் கருத்து வேற்றுமை கொண்டார்கள். எல்லாக் கர்மங்களும் கழிந்த பின்பு முக்தியில் வேறுபாடு ஏற்படுவதற்கு இடமில்லை என்றும், ரிஷிகள் முதலானவர்கள் ப4க்தி முதலான தன் முயற்சிகளில் ஈடுபட்டு மோக்ஷம் அடைந்திருக்கையாலே அதை ஸ்வரூப விருத்3த4ம் என்பது சரியல்ல என்றும் கருதினார்கள். "ப்ரத2ம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ரியத்தை எம்பெருமான் அளித்திருப்பதால் இவனுடைய எண்ணத்திற்கு அநுகு3ணமாக மோக்ஷத்தில் பே4த3த்தை

ஒப்புக்கொள்ளவேண்டிவருகிறதே" என்னும் கேள்விக்கு, "ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ர்யம் என்பதே நிரூபிக்க இயலாத விஷயம். ஒவ்வொரு புண்யபாப கர்மமும், முன்செய்த புண்யபாப கர்மங்கள், அக்கர்மங்களால் ஏற்பட்ட வாஸனை முதலானவற்றாலே விளைகையாலும், இப்படி அநாதி₃காலமாகச் சங்கிலித் தொடர்போலே புண்ய பாபங்கள் ஏற்படுகையாலும், ஸர்வேஶ்வரனுக்கு வைஷம்ய நைர்க்₄ருண்யங்கள் உண்டாகமாட்டாவாகையால், இந்த வைஷம்ய நைர்க்₄ருண்யங்களைத் தவிர்ப்பதற்காக ப்ரத₂மப்ரவ்ருத்தியில் ஜீவ னுக்கு ஸ்வாதந்த்ரியத்தை ஒப்புக்கொள்ளவேண்டியதில்லை ; ஒப்புக் கொண்டால் 'எம்பெருமான் ஸர்வகாரணம்' என்னும் கொள்கை யோடு முரண்படும்" என்று பதில் கூறினார்கள் இவர்கள். இந்த வாத₃ம் ஸ்ரீவைஷ்ணவ மதம் இரண்டு ஸம்ப்ரதா₃யங்களாகப் பிரிவுபடுவ தற்குக் காரணமாயிற்று. இந்த ஸம்ப்ரதா₃ய பே₄த₃ம் கைவல்யம் முக்தியா அல்லவா ? என்னும் விசாரத்தில் வெளிப்படையாக விளங்குகிறது. ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ர்யத்தை ஒப்புக் கொண்டு, 'தன் முயற்சியாலே அவனைக் காண நினைப்பவர்கள் அவனை உள்ளபடி காணமுடியாதாகையாலே, பரார்த்த₂ ப்ரதிபத்தி யால் ('உனக்கே நாமாட்செய்வோம்' என்னும் எண்ணத்தால்) தடை நீங்கப்பெற்றதான எம்பெருமானுடைய நிர்ஹேதுக க்ருபையாலேயே பரம முக்₂யமோக்ஷமான பரார்த்த₂ மோக்ஷம் கிடைக்கும்' என்றும், 'கடைசி வரையில், மோக்ஷத்திற்காகத் தான் முயலுவதினின்றும் நீங்காமல், ப₄க்தி முதலிய முயற்சிகளாலேயே மோக்ஷத்தையடை பவர்களுக்குத் தாழ்ந்த மோக்ஷமான ஸ்வார்த்த₂ மோக்ஷமே கிடைக் கும்' என்றும், 'தன் முயற்சியும், தான் இன்புறவேணும் என்னும் சுயநல மனப்பான்மையும் வலியதாயிருந்தால், என்றுமே ப₄க₃வ த₃நுப₄வம் இல்லாததாய், ஆத்ம விநாஶ துல்யமான கைவல்ய மோக்ஷமாகிற மஹாநர்த்த₂மும் ஏற்பட்டு விடும்' என்றும் அருளிய முற்கூறிய ஆசார்யர்களின் கொள்கையை ஒரு ஸம்ப்ரதா₃யம் பின் பற்றிற்று. இதில் கருத்து வேற்றுமைகொண்டு, "ஜீவனுடைய ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ர்யம் என்று ஒன்று இல்லாமை யாலே, இவனுடைய விருப்பத்திற்குத் தக்கபடி மோக்ஷத்தில் ஏற்றத்தாழ்வு என்பது சரியல்ல; ஆகையால் கைவல்யம் மோக்ஷமல்ல; கைவல்யத்தை மோக்ஷம் என்றும், நிர்ஹேதுக க்ருபையாலேயே முக்₂யமோக்ஷம் என்றும், ஜீவனுடைய முயற்சியால் மோக்ஷத்திலும் தாழ்வுகள் ஏற்பட்டுவிடும் என்றும், ப்ரத₂மப்ரவ்ருத்தியில் ஜீவனுக்கு ஸ்வாதந்த்ர்யம் உண்டு என்றும் கூறும் ஶ்ருதிஸ்ம்ருதி இதிஹாஸபுராண வசனங்களையும், ஆழ்வார்கள், ஆசார்யர்கள்,

ஸ்ரீஸூக்திகளையும், ப்3ரஹ்மஸூத்ர ஸ்ரீபா4ஷ்ய, கீ3தாபா4ஷ்யாதி3 ஸ்ரீஸூக்திகளையும் ஒருவகையாக நயனம் செய்துகொள்ளவேண்டியதே" என்றும் திருவுள்ளம்பற்றிய ஆசார்யர்களின் கொள்கையை மற்றொரு ஸம்ப்ரதா3யம் பின்பற்றியது. சுருங்கக்கூறினால், ஜீவனுடைய ஜ்ஞாந இச்சா2 ப்ரயத்னங்களில் இச்சை2யாகிற ப்ரதிபத்திக்கு ப்ராதா4ந்யமளிப்பதாக ஒரு ஸம்ப்ரதா3யமும், ப்ரயத்நமாகிற ஸ்வப்ரவ்ருத்திக்கு ப்ராதா4ந்யமளிப்பதாக ஒரு ஸம்ப்ரதா3யமும் ஏற்பட்டது. "த்வமேவோபாயபூ4தோ மே ப4வேதி ப்ரார்த்த2நாமதி:, ஶரணாக3திரித்யுக்தா" [நீயே உபாயமாவாயாக என்று பிரார்த்திக்கும் எண்ணமே ஶரணாக3தி எனப்படுகிறது] என்று பாஞ்சராத்ரத்தில் ப்ரபத்திலக்ஷணமுரைத்தபடியே ஸித்3தோ4பாய ப்ரார்த்த2நா மதியை ப்ரபத்தியாகவும், ஆநுகூல்யஸங்கல்பம் முதலானவற்றைத் தன்னுடையே ஏற்படக்கூடிய ஸ்வபா4வங்களாகவும் ஒரு ஸம்ப்ரதா3யமும், ப4ரஸமர்ப்பணரூபக்ருதியை ப்ரபத்தியாகவும், ஆநுகூல்ய ஸங்கல்பம் முதலானவற்றை அதற்கு அங்க3ங்களாகவும் மற்றொரு ஸம்ப்ரதா3யமும் கொண்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. இதில் எந்த ஸம்ப்ரதா3யம் ப்ரமாணங்களுக்கும், யுக்திக்கும் பொருந்தியது என்பதை ஸாராஸார விவேகஜ்ஞர்களாய், விமத்ஸரர்களாய், ப்ரமாண பரதந்த்ரர்களாய், நடுநிலை தவறாத நல்லோர்களே நிஷ்கர்ஷிக்கவேண்டும். இதுநிற்க;

101. முற்கூறிய பூர்வாசார்யர்களின் திருவுள்ளத்தைப் பின்பற்றிய தென்னாசார்ய ஸம்ப்ரதா3யஸ்த2ர்களிடையிலேயே கைவல்ய விஷயத்தில் பூர்வாசார்யர்களுக்குப் பிற்காலத்தில் இருவகையான அபி4ப்ராயங்கள் ஏற்பட்டுவிட்டன. பூர்வாசார்யர்கள் காலத்திலேயே சிலர் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக் கைவல்யநிஷ்ட2னாகக்கொண்டு, இவனுக்கு ப4க3வத3நுப4வமற்ற நித்யமான கைவல்ய மோக்ஷம் ஏற்படுவதாகக் கருதினார்கள். இதில் ஸ்ரீபா4ஷ்யாதி3 விரோத4ம் ஏற்படுவதைக் காட்டி ஸ்ரீவேதா3ந்ததே3ஶிகர் தமது ந்யாயஸித்3தா4ஞ்ஜநாதி3 க்3ரந்த2ங்களில் இப்பக்ஷத்தைக் கடுமையாகக் கண்டித்தார். பூர்வாசார்யர்களுக்குப்பிற்பட்ட தென்னாசார்ய ஸம்ப்ரதா3யஸ்த2ர்களில் பலர், ஸ்ரீ தே3ஶிகனால் க2ண்டிக்கப்பட்ட இதுவே தென்னாசார்யர்களின் பக்ஷம் என்று கொண்டுவிட்டார்கள். "கண்கள் சிவந்து" வ்யாக்2யானங்களிலும், அரும்பதவுரைகளிலும் ப்3ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸகனாகிற பஞ்சாக்3னிவித்3யாநிஷ்ட2னுக்கு ப்3ரஹ்மாநுப4வமே ஸித்3தி4க்கும் என்று நிலைநாட்டப்பட்டிருப்பதைக் காண்பார்க்கு தி3வ்யப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்கள் பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னைக் கைவல்யநிஷ்ட2னாகக் கொள்ளவில்லை என்பது எளிதில்

விளங்கும். மாமுனிகளுக்கு மிக ஸமீபகாலத்திலிருந்த தாத்பர்ய தீ₃பிகாகாரர்—பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்ட ப்ராணோபாஸகனையே கைவல்யநிஷ்ட₂ன் எனக்காட்டும் பக்ஷத்தையே முக்₂யமாக எடுத்திருப்பதும் தி₃வ்யப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாதாக்களின் பக்ஷம் இதுவே எனக் காட்டுகிறது. கீ₃தை 8-22, 24 தாத்பர்ய சந்த்₃ரிகையில் 'அந்யாமபி க₃திம் ப்ராஞ்ச: ப்ரதீசீம் ப்ரத்யபாத₃யந்'' [ப்ராசீனர்களான ஆசார்யர்கள் அர்ச்சிராதி₃க₃திக்கு நேர் எதிர்த்தட்டான வேறொரு க₃தியைக் கைவல்ய நிஷ்ட₂னுக்குக் கூறினார்கள்.] என்று ஸ்ரீதே₃ஶிகன் அருளியிருப்பதிலிருந்தும் ப்ராசீனர்களான பிள்ளான் முதலான தி₃வ்யப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாதாக்கள் அர்ச்சிராதி₃க₃தியையுடைய பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னைக் கைவல்யநிஷ்ட₂னாகக் கருதவில்லை என்று தெளிவாக விளங்குகிறது. பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னைக் கைவல்ய நிஷ்ட₂னாகக்கொள்ளும் பக்ஷம் ஏராளமான ப்ரமாண யுக்திகளுக்கு முரண்படுகிறது என்று முன் பாராக்களில் காட்டியுள்ளோம். ஆகையால், இனி, இவ்விஷயத்தில் தென்னாசார்ய ஸம்ப்ரதா₃யஸ்த₂ர்களிடையே கருத்துவேற்றுமை தொடரச் சிறிதும் நியாயமில்லை.

*102. பரமகாருணிகனான எம்பெருமான் இவ்வண்ணமாகக் கைவல்ய மோக்ஷத்தை அளித்து, சில சேதனரைத் தன் அநுப₄வமில்லாதபடி எப்போதும் பிரித்து வைப்பானா? எனில்: இவர்களுக்குத் தன்னிடம் போ₄க்₃யதாபு₃த்₃தி₄யை விளைப்பதற்காக, இவர்களுடைய ப்ராரப்₃த₄ கர்மம் முடியும் வரையில் பல ஜன்மங்களில் இவர்களுக்குத் தன் தி₃வ்யமங்க₃ளவிக்₃ரஹசிந்தனம், மோக்ஷத்வாநுஸந்த₄ானம் முதலானவற்றை இவர்களுடைய ஸாத₄னத்திற்கு அங்க₃மாக விதி₄த்து ஆனவரையில் முயன்றும், இவனுக்கு அடியோடு தன்னிடம் போ₄க்₃யதா பு₃த்₃தி₄ ஏற்படாத நிலையில்தான், 'இவன் விருப்பப்படி ஸம்ஸார வ்யாதி₄யாவது நீங்கித் தன் ஆத்மாநுப₄வமாகிற இன்பத்தைப் பெற்றுப் போகட்டும்' என்னும் பரமகருணையாலே எம்பெருமான் இவனுக்குக் கைவல்யத்தை அளிக்கையாலே, இது காருண்யத்திற்கு அநுகு₃ணமாகுமேயொழிய முரணாகாது. மேலும், லீலாவிபூ₄தி நித்யமாகையாலும், ஈஶ்வரன் ஜீவனுக்கு அளித்திருக்கும் ப்ரத₂ம ப்ரவ்ருத்தியில் ஸ்வாதந்த்ர்யம் விசித்திரமானதாகையாலும், எப்போதுமே அநந்தமான சேதனர்கள் இந்த லீலாவிபூ₄தியிலும் இருந்து கொண்டுதான் இருக்கப் போகிறார்கள். இதற்கும் அச்சேதனர்களுடைய ப்ரதிபத்தியே காரணமாகையாலே, எம்பெருமானுடைய கருணைக்குக் குறையில்லை என்றே கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த

ப்ரதிபத்தியே காரணமாகச் சிலர் ப₄க₃வத₃நுப₄வமில்லாமல் ஆத்ம மாத்ராநுப₄வத்தையே எப்போதும் பெற்றுப்போவது எம்பெருமா னுடைய கருணைக்கு எப்படிக் குறையாக முடியும்?

103. இப்படி என்றுமே ப₄க₃வத₃நுப₄வமில்லாமையாலே 'இறப்பது' [திருநெடு-1] [ஆத்மவிநாஶம்] 'பெருந்துன்பம்' [திருவாய் 7-5-10] எனப்படும் இக்கைவல்யத்தை எவன் ஆசைப்படுவான்? எனில்: "ஹந்த! அநேவம்விதே₄ஷ்வபி ஸ்வர்க்க₃ பஶு புத்ர பி₄க்ஷாத₃நாதி₃ஷு அபி₄லாஷிணோ த்₃ருஶ்யந்தே; கிம் புந: அதி ஶயிதாநந்த₃ஶாலிநி ஏவம்விதே₄! ப்ரஸித்₃த₄ஞ்ச ப்ரியாஸ்பத₃த்வம் ஸ்வாத்மந:! ஆக₃மஶ்ச 'ஆஶ்சர்யவத் பஶ்யதி கஶ்சிதே₃நம்' இத்யாதி₃" [இவ்வாத்மாநுப₄வத்தைக் காட்டிலும் மிகத் தாழ்ந்த ஸ்வர்க்க₃ம், பசுக்கள், புத்ரர்கள், பிச்சையெடுத்த உணவு முதலானவற்றையும் ஆசைப்படுபவர்கள் காணப்படுகிறார்களே! அப்படியிருக்க 'தெரிவரிய அளவில்லா இன்பம்' [திருவாய் 4-9-10] 'குறுகா நீளா இறுதிகூடா எனையூழி சிறுகா பெறுகா அளவில் இன்பம்' [திருவாய் 6-9-10] எனப்படும் அளவற்ற ஆநந்த₃முள்ள ஆத்மாநுப₄வத்தில் ஆசையுள்ள வர்களிருக்கக் குறையென்ன? ஆத்மாவானது ஆனந்த₃மயமானது என்பது ப்ரமாண ப்ரஸித்₃த₄மன்றோ; 'ஆஶ்சர்யம்போலே ஒருவன் இவ்வாத்மாவைக் காண்கிறான்' முதலான வேத₃வாக்யங்களும் இதையே கூறுகின்றனவன்றோ.] என்று தொடங்கி ஸ்ரீவேதா₃ந்த தே₃ஶிகர் ந்யாயஸித்₃தா₄ஞ்ஜநத்தில் ஜீவ பரிச்சே₂த₃த்தின் இறுதியில் அருளியிருக்கும் ஸ்ரீஸூக்திகளே இக்கேள்விக்கு அழகான பதிலாக அமைந்திருக்கின்றன.

104. நம் த₃ர்ஶனத்தில் சித், அசித், ஈஶ்வரன் எனும் மூன்று தத்துவங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்கு ஏற்ப, அசித் தினுடைய அநுப₄வமாகிற ஐஶ்வர்யமும், ஈஶ்வரனை அநுப₄விப்பதாகிற முக்₂ய மோக்ஷமும், இவ்விரண்டு அநுப₄வமுமில்லாமல், கேவல சித்தாகிற தன் ஆத்மாவை மாத்திரம் அநுப₄விப்பதான கைவல்ய மும் வ்யவஸ்தி₂தங்களான மூன்று புருஷார்த்த₂ங்களாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ப்ரக்ருதியிலிருந்து நீங்கிய கேவலாத்மாநு ப₄வம் விரஜாதரணமாகி ஸூக்ஷ்மஶரீரமும் கழிந்த பின்பே ஏற்படமுடி யும். இதிலிருந்தே அசித் ஸம்ஸர்க்க₃ம் அடியோடு நீங்கின பின்பே ஏற்படக் கூடிய கேவலாத்மாநுப₄வம் நித்யமுக்தியே என்றும், ப்₃ரஹ்மாநுப₄வமுடையவனாக ப₃ஹுப்ரமாணப்ரஸித்₃த₄னான பஞ் சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னாகமுடியாது என்றும் நடு நிலையாளர்க்கு மிகத் தெளிவாக விளங்கும்.

10. பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம்

105. ஸ்ரீபா₄ஷ்யகாரர் முதலான பூர்வாசார்யர்களின் ஸ்ரீஸூக்திகள் கைவல்ய விஷயத்தில் தி₃வ்ய ப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாதாக்களின் பக்ஷத்திற்கே அநுகு₃ணமாயிருப்பதை ஏற்கனவே பல பாராக்களில் காட்டினோம். அதில் ஆளவந்தாருடைய கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹ ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 40-வது பாராவிலும், ஸ்ரீபா₄ஷ்யகாரருடைய கீ₃தாபா₄ஷ்ய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 11 முதல் 46 வரையுள்ள பாராக்களிலும், ஸ்ரீபா₄ஷ்ய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 8-வது பாராவிலும், 85 முதல் 99 வரையுள்ள பாராக்களிலும் விரிவாகக் காட்டப்பட்டது. முதலியாண்டான், எம்பார் ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 64-வது பாராவில் காட்டப்பட்டது. பிள்ளானுடைய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 53, 54, 58, 61, 62, 63, 64, 65, 67 பாராக்களில் காட்டப்பட்டது. எங்களாழ்வானுடைய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 77, 78, 80 பாராக்களிலும், அவர் ஶிஷ்யரான நடாதூரம்மாளுடைய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 99-வது பாராவிலும் காட்டப்பட்டது. அமுதனாருடைய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 69-வது பாராவில் நிரூபிக்கப்பட்டது. ப₄ட்டருடைய ஸஹஸ்ரநாம பா₄ஷ்ய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 81-வது பாராவில் எடுத்துக்காட்டப்பட்டது. ஶ்ருத ப்ரகாஶிகாப₄ட்டருடைய ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 85, 99 பாராக்களில் விளக்கப்பட்டது. நஞ்ஜீயர், நம்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத்திருவீதிப்பிள்ளை ஆகிய தி₃வ்யப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாதாக்களின் ஸ்ரீஸூக்தி ஸ்வாரஸ்யம் 47 முதல் 68 வரையுள்ள பாராக்களில் நிலைநாட்டப்பட்டது. இதுவரையில் எடுக்கப்படாத ஆசார்ய ஸ்ரீஸூக்திகளின் ஸ்வாரஸ்யத்தைக் காட்டுவோம் இனி.

106. "ஆத்மார்த்தீ₂ சேத் த்ரயோऽப்யேதே தத்கைவல்யஸ்ய ஸாத₄கா:" [கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹம் 27] என்று ஆத்மாவை மாத்திரம் அநுப₄விக்கும் புருஷார்த்த₂மாகையாலே இதைக் கைவல்ய ஶப்₃த₃த்தாலே ஆளவந்தார் குறிப்பிட்டு, இவனுக்கு அசித₃நுப₄வமும், ப்₃ரஹ்மாநுப₄வமும் அடியோடு கிடையாது என்று உணர்த்துவதன்மூலம், இவன் முக்தனே என்றும், ப்₃ரஹ்மாநுப₄வம் உடையவனாக ப்₃ரஹ்மஸூத்ர ஸித்₃த₄னை பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்டனைக் காட்டிலும் வேறுபட்டவனே என்றும் விளங்க வைத்தார். இவனுக்குக் கர்ம ஜ்ஞாந ப₄க்தியோகங்கள் ஒவ்வொன்றுமே ஸாத₄னமென்று கூறுவதன்மூலமும், பஞ்சாக்₃நிவித்₃யை ஒன்றையே ஸாத₄னமாகக்கொண்ட பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்டனைக் காட்டிலும் வேறு

பட்டவனே இவன் என்று காட்டினர். இவர் அருளிய சது:ஶ்லோகியில், "ஸம்ஸ்ருத்யக்ஷர வைஷ்ணவாத்₄வஸு" [3] என்று இக் கைவல்யத்தை "அக்ஷராத்₄வா' என்று குறித்து, ஸம்ஸ்ருத்யத்₄வாவான ஸம்ஸார மண்ட₃லத்தைக் காட்டிலும், வைஷ்ணவாத்₄வாவான பரமபத₃த்தைக் காட்டிலும் வேறுபட்டதாக இதையெடுக்கையால், இது ஸம்ஸாரத்தைக் காட்டிலும் மேற்பட்ட முக்தியே என்றும், பரமபத₃த்திலடையும் ப₄க₃வத₃நுப₄வம் அற்றது என்றும் விளங்குகிறது. இதிலிருந்து ஆளவந்தார்—இது ஸம்ஸார மண்ட₃லத்திற்குட்பட்டதோர் அநுப₄வம் என்றே, ப்₃ரஹ்மாநுப₄வம் உடையவனாக ப்₃ரஹ்மஸூத்ரஸித்₃த₄னை பஞ்சாக்₃நி வித்₃யா நிஷ்ட₂னைக் கைவல்யநிஷ்ட₂னாகவோ திருவுள்ளம்பற்றியிருக்க முடியாது என்று தெளிவாக விளங்குகிறது. இங்குபோலே, கீ₃தார்த்த₂ ஸங்க்₃ரஹத்திலும் "ஐஶ்வர்யாக்ஷர யாதா₂த்ம்ய ப₄க₃வச்சரணார்த்தி₂நாம்" என்று கைவல்யார்த்தி₂யை 'அக்ஷரயாதா₂த்ம்யார்த்தி₂' என்று அக்ஷரஶப்₃த₃த்தையிட்டுக் குறிக்கையால் 'ஆத்ம யாதா₂த்ம்யவித்' என்று கீ₃தாபா₄ஷ்யத்தில் (8-23, 24) பா₄ஷ்யகாரரால் குறிக்கப் பட்ட பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னைக் காட்டிலும் இக்கைவல்ய நிஷ்ட₂ன் வேறுபட்டவன் என்பதே ஆளவந்தார் திருவுள்ளம் என்று தெளிவாக விளங்குகிறது.

107. வேதா₃ர்த்த₂ ஸங்க்₃ரஹத்தில்—(1) நித்யவிபூ₄தி, (2) ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபம், (3) ப₄க₃வத்ஸ்வரூபம் ஆகிய மூன்றுமே 'பரமபத₃ம்' என்று சொல்லப்படுவதைப்பற்றி விசாரித்து வரும்போது, "பரமம் பத₃ம் தஸ்யாகு₃ணம் மஹத்" [வி•பு 1-22-41] என்று விஷ்ணுபுராணத்தில் ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபத்தைப் பரமபத₃ ஶப்₃த₃த்தால் சொல்லியிருப்பதை எடுத்துக் காட்டி, "ஸர்வகர்மப₃ந்த₄விநிர்முக்தாத்மஸ்வரூபாவாப்திர் ஹி ப₄க₃வத்ப்ராப்திக₃ர்ப்பா₄" [எல்லாக் கர்மப₃ந்த₄ங்களினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபத்தை அடைவது ப₄க₃வத்ப்ராப்தியை உள்ளடக்கியதன்றே.] என்று ப்ரக்ருதியினின்றும் விடுபட்ட ஆத்மஸ்வரூபாவாப்தியைப் பெறும்போது ப₄க₃வத்ப்ராப்தியும் ஏற்பட்டே தீரும் என்று பா₄ஷ்யகாரர் அருளியிருப்பதால், கைவல்ய நிஷ்ட₂னுக்கும் ப₄க₃வத்ப்ராப்தி உண்டென்று தோன்றுகிறதே? எனில்: அவனுக்கும் ப₄க₃வத்ப்ராப்தியிருந்தபோதிலும், ப₄க₃வத₃நுப₄வமில்லாமையாலே குறையில்லை. இவ்விடத்தில் தாத்பர்யதீ₃பிகையெனும் வ்யாக்₂யானத்தில் "ப₄க₃வத்ப்ராப்தி க₃ர்ப்ப₄த்வாத் - ப₄க₃வத்ப்ராப்தி ஸஹிதத்வாதி₃த்யர்த்த₂:" [ப₄க₃வத்ப்ராப்தியை உள்ளடக்கியது என்றது—ப₄க₃வத்ப்ராப்தியோடு

கூடியது என்றபடி] என்றும், ''ப₄க₃வத்₃கு₃ணாமபி திரோத₄ாயகம் கர்மேதி, தந்நிவ்ருத்திபூர்வகாத்மப்ராப்தெள ப₄க₃வத்₃கு₃ணதிரோத₄ாயக நிவ்ருத்தேரபி ப₄ாவாத் ப₄க₃வத்ப்ராப்தி: ஸித்₃த்₄யதி'' [ப₄க₃வத்₃ கு₃ணங்களையும் கர்மமே மறைக்கிறதாகையால், ஸர்வகர்மங்களும் கழிந்து ஆத்மப்ராப்தி ஏற்படும்போது, ப₄க₃வத்₃கு₃ணங்களை மறைக்கும் கர்மமும் நீங்குகிறதாகையால், ப₄க₃வத்ப்ராப்தியும் ஸித்₃தி₄க்கிறது.] என்றும் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் இவனுக்கு ப₄க₃வத்ப்ராப்தியை அருளிச்செய்திருக்கிறரேயொழிய,ப₄க₃வத₃நுப₄வத்தை அருளிச்செய்யவில்லை என்பது காணத்தக்கது. ப்ராப்தி ஏற்பட்டால் அநுப₄வம் ஏற்படாமல் இருக்குமோ? எனில்: அந்திமஸ்ம்ருதி வரையில் இவனுக்குப் பரமாத்மாவிடம் பே₄ாக்₃யதாபு₃த்₃தி₄ ஏற்படாமல், தன் ஆத்மாவிலேயே பே₄ாக்₃யதாபு₃த்₃தி₄ நிலைநிற்கையாலும், பரமபத₃த்திற்குச் சென்றபிறகு பரமாத்மாவிடம் பே₄ாக்₃யதாபு₃த்₃தி₄ ஏற்படத்தக்க ஸாத₄நாநுஷ்ட₂ாநம் செய்யமுடியாது என்பதை ''நிர்வ்யாபாரம்'' என்னும் பத₃த்தால் ஸ்ரீபராஶர மஹர்ஷி முற்கூறிய ஸ்ரீவிஷ்ணுபுராண ப்ரகரணத்தில் காட்டியிருக்கையாலும், இவனுக்கு ப₄க₃வத் ப்ராப்தியிருந்தபோதிலும் ப₄க₃வத₃நுப₄வமில்லை என்றே தேறும், கர்மம் கழிகையாலே, ப₄க₃வானும், அவனது கு₃ணங்களும், நித்யவிபூ₄தியும், நித்யமுக்தர்களும் ஸாத்₄யத₃ஶை யில் இவனுக்குப் பிரகாஶித்தபோதிலும், ஸாத₄நத₃ஶையில் அந்திம ஸ்ம்ருதிவரையில், அவற்றில் பே₄ாக்₃யதா ப்ரதிபத்தி ஏற்படாமல், தன் ஆத்மாவிலேயே பே₄ாக்₃யதா ப்ரதிபத்தி நிலைநிற்கையாலே, ஸாத்₄யத₃ஶையிலும் முக்தனை இவனுக்கு என்றுமே அவற்றில் பே₄ாக்₃யதா ப்ரதிபத்தி ஏற்பட இடமில்லை என்று கருத்து. இவ் விஷயத்தை இந்த விஷ்ணு புராண ப்ரகரணத்தை விளக்குகையில் எங்களாழ்வான் மிகவும் தெளிவுபடுத்தியிருப்பதை 80-வது பாராவில் காட்டினேம்.

108. இனி, எம்பெருமானருக்குப் பிற்பட்ட ஆசார்யர்களின் முக்₂யமான சில ஸ்ரீஸூக்திகள் காட்டப்படுகின்றன. (1)''பே₄ாக₃ா இமே விதி₄ ஶிவாதி₃ பத₃ஞ்ச கிஞ்ச, ஸ்வாத்மாநுபூ₄திரிதி யா கில முக்தி ருக்தா! ஸர்வம் தத₃ஷஜலஜோஷமஹம் ஜுஷேய ஹஸ்த்யத்₃ரி நாத₂! தவ தா₃ஸ்யமஹாரஸஜ்ஞ:!!'' [வரத₃ராஜஸ்தவம் 81] [அத்திகிரி அருளாளனே! இவ்வுலகிலுள்ள அசித்₃பே₄ாக₃ங்களும், ப்₃ரஹ்மலோகம், ஶிவலோகம் முதலான மறுமையிலுள்ள அசித்₃ பே₄ாக₃ங்களும், ஆத்மமாத்ராநுப₄வம் என்று சொல்லப்படும் முக்தியும் ஆகிய இவையனைத்தையும், உப்புநீரை வெறுத்து ஒதுக்கு

வதுபோலே ஒதுக்குகின்றேன். ஏனெனில், உன்னுடைய கைங்கர்யத்தின் பெருஞ்சுவையை அறிந்தவனன்றோ அடியேன்.] என்று கூரத்தாழ்வான் இக்கைவல்யத்தை முக்தி என்றே குறிப்பிட்டார். இதையும் உப்புநீர் போன்றது என்கையாலே, ப4க3வத3நுப4வம் இதில் அடியோடு இல்லையென்றும் காட்டினார். இதிலிருந்து, கூரத்தாழ்வான் இதை ஸம்ஸார மண்ட3லத்திற்கு உட்பட்டது என்றோ, ப்3ரஹ்மாநுப4வம் உடைய பஞ்சாக்3நி வித்3யா நிஷ்ட2னைக் கைவல்யநிஷ்ட2ன் என்றோ திருவுள்ளம்பற்றியிருக்க முடியாது என்று விளங்குகிறது. (2) ஸ்ரீவேதா3ந்ததே3ஶிகரால் ந்யாயஸித்3தா4ஞ்ஜனத்தில், மோக்ஷத்தைக் காட்டிலும் ஐஶ்வர்ய கைவல்யங்கள் வேறுபட்டவை என்று ஸ்ரீபராஶர ப4ட்டர் அத்4யாத்ம க2ண்ட3த்3வய வ்யாக்2யானத்தில் அருளியிருப்பதாக எடுக்கப்பட்ட ஸ்ரீஸூக்தியும் இவ்விஷயங்களையே வலியுறுத்துகிறது. அங்கு மோக்ஷம் என்றது முக்2யமோக்ஷமான ப4க3வத3நுப4வமேயாகையால் எம்பெருமானார், கூரத்தாழ்வான் முதலானோர் அமுக்2ய மோக்ஷமான கைவல்யத்தை மோக்ஷம் என்று குறிப்பிட்டிருப்பதோடும், ப4ட்டரே ஸஹஸ்ரநாம பா4ஷ்யத்தில் இதைத் தாழ்ந்த மோக்ஷமாகக் காட்டியிருப்பதோடும் முரணில்லை. (3) முற்கூறிய ந்யாயஸித்3தா4ஞ்ஜன ப்ரகரணத்தில் கைவல்ய நிஷ்ட2னுக்குக் கர்மங்கள் முழுவதும் கழிவதில்லை என்றும், ஆகையால் அவன் முக்தனல்லன் என்றும், அவனுடைய அநுப4வத்தை அழிவற்ற ஐஶ்வர்யாநுப4வமாகவே கொள்ளவேண்டும் என்றும் நடாதூராழ்வான் அருளியிருப்பதாக ஸ்ரீவேதா3ந்ததே3ஶிகர் எடுத்திருக்கிறார். இதிலிருந்து, எம்பெருமானார் ஶிஷ்யர்களிடையிலேயே கைவல்யத்தைப்பற்றி அபி4ப்ராய பே4த3ங்கள் விளைந்துவிட்டன என விளங்குகிறது. தி3வ்யப்ரப3ந்த4 வ்யாக்2யாதாக்களைப் போலே இக்கைவல்யம் அழிவற்றது என்று நடாதூராழ்வான் திருவுள்ளம் பற்றியபோதிலும், அவர்களைப் போலே கர்மங்கள் அனைத்தும் கழிந்த முக்தியாக இதை நடாதூராழ்வான் கருதவில்லை என விளங்குகிறது. நடாதூராழ்வானுடைய மாநயாதா2ர்த்ம்ய நிர்ணயத்தில் 'அணுவான ஆத்மஸ்வரூபம் முக்தித3ஶையில் விபு4வாகி விடுகிறது' என்று வாத3ம் செய்திருப்பது ப்3ரஹ்மஸூத்ரம், ஸ்ரீபா4ஷ்யம் முதலானவற்றுக்கு முரண்படுமாகையால் அதிவாத3மாகும்'' என்று ஸ்ரீவேதா3ந்ததே3ஶிகர் ந்யாயஸித்3தா4ஞ்ஜனத்தில் ஜீவபரிச்சே2த3த்தில் அருளிய கணக்கிலே, இந்த வாத3மும் கீ3தா பா4ஷ்யாதி3களோடு முரண்படுகையால் அதிவாத3ம் என்று கொள்ளத் தகும். (4) அந்த ந்யாயஸித்3தா4ஞ்ஜன ப்ரகரணத்திலேயே ''ப்3ரஹ்மத்தை அடையவேண்டும் என்று விரும்பி உபாஸனத்தில் இழியும்

சிலர் ஆத்மாவின் போ₄க்₃யதையிலே ஈடுபட்டு, கைவல்யத்தை விரும்பி அதை அடைந்துவிடுவது, ஸ்வர்க்க₃த்தை அடைய விரும்பி யாக₃த்தைத் தொடங்கி, அதைச் சரிவர அநுஷ்டி₂க்காததால் ப்₃ரஹ்ம ராக்ஷஸ ஜன்மத்தை அடைவதையொக்கும்'' என்று ஸ்ரீ விஷ்ணுசித்த ரான எங்களாழ்வான் ஸங்க₃திமாலையில், கைவல்யத்தை ப்₃ரஹ்ம ராக்ஷஸ ஜன்மத்தோடு ஒப்பிட்டிருப்பதாக எடுத்திருப்பதிலிருந்தும் இக் கைவல்யம் ப்₃ரஹ்மாநுப₄வம் அடியோடு இல்லாதது என்று விளங்கு கிறது. இதிலிருந்தும் ப்₃ரஹ்மாநுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂னாக முடியாது என்றும் விளங்குகிறது. (5) ஸ்ரீபராஶரப₄ட்டர் தமது ஸ்ரீரங்க₃ராஜஸ்தவத்தில் பூர்வஶதகத்தில் ''ஆர்த்தாபாஶ்ரயம் அர்த்தி₂கல்பகம் அஸஹ்யாக₃ஸ்கர க்ஷமாதலம், ஸத்₃யஸ்ஸம்ஶ்ரித காமதே₄நும் அபி₄யத்ஸர்வஸ்வம் அஸ்மத்₃த₄நம் | ஸ்ரீரங்கே₃ஶ்வரம் ஆஶ்ரயேம கமலாசக்ஷுர் மஹீஜீவிதம். ஸ்ரீரங்கே₃ ஸ ஸுக₂ாகரோது ஸுசிரம் தா₃ஸ்யம் ச த₄த்தாம் மயி ||''[76] [ஆர்த் தருக்குப் புகலிடமாயும், அர்த்த₂ார்த்தி₂களுக்குக் கற்பகமரமாயும், (எம்பெருமானை ஶாஶ்வதமாக விரும்பாமையாகிற) அஸஹ்யாபசாரம் செய்யும் கைவல்யார்த்தி₂கள் விஷயத்திலும் பொறுமையுள்ளவனாக வும், (ஸம்ஸாரத்தில் அடிக்கொதிப்பாலும்,ப்₃ரஹ்மாநந்த₃த்தில் பெரு விருப்பாலும் ப₄க்தி முதலானவற்றை உபாயமாக அநுஷ்டி₂த்துச்) சடக் கென ஆஶ்ரயித்தவர்களுக்கு அவர்கள் விரும்பும் ப₂லனையளிக்கும் காம தே₄நுவாகவும், (எம்பெருமானையே ப்ராப்ய ப்ராபகங்களாகவும், த₄ாரக போஷக போ₄க்₃யங்களாகவுங்கொண்டு) அவனையே எல்லாமாக அடைந்த ஆழ்வார்களுக்கு எல்லாமாயிருப்பவனாகவும், (ஒரு கைம்முத லுமற்ற) என்னைப்போன்றவர்களுக்கு எல்லாச் செல்வமுமாயிருப்பவனா கவும், பெரியபிராட்டியார்க்குக் கண்ணாகவும், பூ₄மிப்பிராட்டிக்கு உயி ராகவுமிருப்பவனாகவுமுள்ள அரங்கநகரப்பனை ஆஶ்ரயிப்போம். அவன் நீண்டநாட்கள் அடியேனை ஸ்ரீரங்க₃த்தில் இன்புறச்செய்யவேணும். அடி யேனுக்குத் தன் கைங்கர்யத்தையும் அருள்வானாக.] என்று அருளினார். இதில் கைவல்யநிஷ்ட₂ன் என்றுமே எம்பெருமானை விரும்பாமலிருப் பதையிட்டு அவனை அஸஹ்யாபசாரம் செய்பவனாகக் குறிப்பிடுகை யால், அவனுடைய புருஷார்த்த₂ம் முக்தியே என்றும், ப்₃ரஹ்மா நுப₄வமுடைய பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னைக் காட்டிலும் இவன் வேறுபட்டவனே என்றும் ப₄ட்டர் திருவுள்ளம் பற்றியிருப்பது விளங்கு கிறது. (6) உத்தரஶதகத்தில் ''ஆர்த்திம் திதீர்ஷுரத₂ ரங்க₃பதே த₄நாயந் ஆத்மம்ப₄ரிர் விவிதி₃ஷுர் நிஜத₃ாஸ்யகாம்யந் | ஜ்ஞாநீத்யமூந் ஸமமத₂ா: ஸமமத்யுத₃ாராந் கீ₃தாஸு தே₃வ ப₄வத₃ாஶ்ரயணோ பகாராந் ||'' [83] [அரங்கநகரப்பனே! தேவரீரை ஆஶ்ரயிப்பதாகிற

உதவியைச் செய்கிறவர்கள் என்பதையே கொண்டு, இழந்த செல்வத்தைப் பெற விரும்பும் ஆர்த்தன், புதிதாகச் செல்வத்தை அடைய விரும்பும் அர்த்தா2ர்த்தி2, ஆத்மாவையே விரும்பும் ஜிஜ்ஞாஸு, கைங்கர்யத்தை விரும்பும் ஜ்ஞாநி ஆகிய இவர்களை வாசியற ப4க3வத்3கீ3தையில் உதா3ரர்களாகத் திருவுள்ளம் பற்றினீரன்றோ] என்னும் ஸ்லோகத்தில்—வயிற்றை நிரப்பியே வாழ்பவனை உத3ரம்ப4ரி என்பது போலே ஆத்மாவொன்றையே விரும்புகையால், ஆத்மம்ப4ரி எனத் தக்க கைவல்யநிஷ்ட2னையே கீ3தையில் சொல்லப்பட்ட ஜிஜ்ஞாஸுவாக ப4ட்டர் எடுக்கையால், ப்3ரஹ்மாநுப4வமும் உடைய பஞ்சாக்3நிவித்3யாநிஷ்ட2னை அவர் ஜிஜ்ஞாஸுவாகத் திருவுள்ளம் பற்றவில்லை என்று தெளிவாக விளங்குகிறது. (7) அடுத்தான "நித்யம் காம்யம்" என்று தொடங்கும் ஸ்லோகத்தில் கர்மயோக3நிஷ்ட2ர்களைப் பற்றியும், அதற்கடுத்த 'ப்ரத்யஞ்சம் ஸ்வம்' என்று தொடங்கும் ஸ்லோகத்தில் ஜ்ஞானயோக3நிஷ்ட2ர்களைப் பற்றியும், அதற்கடுத்த "அத2 ம்ருதி3த கஷாயா:" என்று தொடங்கும் ஸ்லோகத்தில் ப4க்தியோக3நிஷ்ட2ர்களைப்பற்றியும் விளக்கிவிட்டு 'உபாத3த்தே' என்று தொடங்கும் 87-வது ஸ்லோகத்தில், தாம் எம்பெருமானையே உபாயமாகவும், உபேயமாகவும் பற்றிய ப்ரபந்நர் என்பதைக் காட்டுகிறார் ப4ட்டர். இதில், ஜ்ஞானயோக3நிஷ்ட2னைப் பற்றியதான, "ப்ரத்யஞ்சம் ஸ்வம் பஞ்சவிம்ஶம் பராச:, ஸஞ்சக்ஷாணாஸ் தத்த்வராஶேர் விவிச்ய | யுஞ்ஜாநாஶ்சர்தம்ப4ராயாம் ஸ்வபு3த்3தெ4ள, ஸ்வம் வா த்வாம் வா ரங்க3நாத2ாப்நுவந்தி ||" [ர-ஸ்த 2-75] [ஸ்ரீரங்க3நாத2ரே! இருபத்தைந்தாம் தத்துவமாய், தனக்குத் தானே ப்ரகாஶிக்கும் தன் ஆத்மாவை, மற்ற இருபத்துநாலு தத்துவங்களிலிருந்து பிரித்து அறிகின்றவர்களாய், (ஸமாதி4 நிலையில்) உண்மையைக் காணும் தங்கள் அறிவில் தம் ஆத்மாவை தியானிக்கிற ஜ்ஞாநயோக3நிஷ்ட2ர்கள் தம் ஆத்மாவையோ, அல்லது உம்மையோ அடைகிறார்கள்.] என்னும் ஸ்லோகத்தில் அசித்தைக் காட்டிலும் வேறுபடுத்தி ஆத்மாவை அறியும் ஜ்ஞாநயோக3த்தினால் (அசித்தினின்றும் நீங்கிய) தம் ஆத்மாவையோ, எம்பெருமானையோ அவர்கள் அடைகிறார்கள் என்று கூறப்பட்டது. அடுத்த ஸ்லோகத்தில், ஜ்ஞாநயோக3ம் நிறைவடைந்து, ப4க்தியோக3த்தைப் பெற்று அதன் மூலம் எம்பெருமானை அடைபவர்களைப் பற்றிப் பேசுகையாலே, இங்கு ஜ்ஞான யோக3த்தின் மூலமே தம் கேவலாத்மாவையோ அல்லது எம்பெருமானையோ அடைவதைப் பற்றியே கூறுகிறார் என்று விளங்குகிறது. இதிலிருந்து ஜ்ஞாந யோக3 நிஷ்ட2ன் அந்திம ஸ்ம்ருதி வரையில் தன் கேவலாத்மாவையே விரும்பினானாகில்

கைவல்யமோக்ஷத்தை அடைந்து விடுகிறான் என்றும். அந்திம ஸ்ம்ருதியின்போது எம்பெருமானிடம் பே₄ாக்₃யதாபு₃த்₃தி₄ ஏற்பட்டு. ப்₃ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸகனை பஞ்சாக்₃நி வித்₃யா நிஷ்ட₂னாக மாறினாகில் ப்₃ரஹ்மாநுப₄வத்தையே பெற்று விடுகிறான் என்றும் ப₄ட்டர் திருவுள்ளம் பற்றினார் என்று விளங்குகிறது. ஆக, கைவல்யம் ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தாழ்ந்த முக்தியே என்றும், கைவல்ய நிஷ்ட₂ன் பஞ்சாக்₃நி வித்₃யா நிஷ்ட₂னாக முடியாது என்றும் இந்த ஶ்லோகத்திலிருந்தும் விளங்குகிறது. (8) அர்த்த₂ பஞ்சகத்தில் 15-வது சூர்ணையில் கைவல்யத்தை அடைந்தவனைப்பற்றிப் பேசும்போது பிள்ளை லோகாசார்யர் "அஶரீரியாய்க்கொண்டு திரிவானொருவன்" என்று அருளியிருக்கையாலே, அர்ச்சிராதி₃ க₃தி வழியே செல்லும் பரம புருஷ நிஷ்ட₂னுக்கும், பஞ்சாக்₃நி வித்₃யா நிஷ்ட₂னுக்கும் கௌஷீதகியில் சொல்லப்பட்ட அப்ராக்ருத ஶரீரம் கைவல்ய நிஷ்ட₂னுக்கு இல்லை என்று ஏற்படுகிறது. இதிலிருந்தும் கைவல்ய நிஷ்ட₂ன் பஞ்சாக்₃நி வித்₃யா நிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவன் என்றும், அவனுக்கு அர்ச்சிராதி₃க₃தி இல்லை என்றும் தெளிவாக விளங்குகிறது. தி₃வ்ய ப்ரப₃ந்த₄ வ்யாக்₂யானங்களிலும், பெரியவாச்சான்பிள்ளை, பிள்ளை லோகாசார்யர், மாமுனிகள் முதலான பூர்வாசார்யர்கள் அருளிய பற்பல ரஹஸ்யக்₃ரந்த₂ங்களிலும் இவ்விஷயங்கள் மேலும் நூற்றுக் கணக்கானவிடங்களில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. அவற்றை விரி விற்கஞ்சி விடுக்கிறோம். சுருங்கக் கூறினால், முற்கூறிய பூர்வாசார் யர்கள் அனைவருமே இக்கைவல்யத்தை ப்₃ரஹ்மாநுப₄வலேஶக₃ந்த₄மு மற்ற நித்யமுக்தியே என்று நூற்றுக்கணக்கானவிடங்களில் முழங்கி யிருக்கிறார்கள். ஓரிடத்திலாவது இவனைப் பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂ னென்றோ, அர்ச்சிராதி₃க₃தியுடையவனென்றோ காட்டவில்லை, இவற்றி லிருந்து — கைவல்யம் ப்ரக்ருதி மண்ட₃லத்திற்கு அப்பாற்பட்ட தொரு ஸ்த₂ானத்தில் அநுப₄விக்கப்படும் நித்யமுக்தியே என்றும், இக்கைவல்யநிஷ்ட₂ன் — ப்₃ரஹ்மாநுப₄வமுடையவனென்று ஸூத்ர ஸ்ரீபா₄ஷ்ய கீ₃தா பா₄ஷ்யங்களில் நிலைநாட்டப்பட்டிருக்கும் பஞ்சாக்₃நி வித்₃யா நிஷ்ட₂னைக் காட்டிலும் வேறுபட்டவனென்றும், இக்கைவல்ய நிஷ்ட₂னுக்கு அர்ச்சிராதி₃க₃தி கிடையாது என்றுமே இப்பூர்வாசார் யர்கள் திருவுள்ளம் பற்றியிருந்தார்கள் என்பது கையிலங்குகனியாக வும், வெள்ளிடைமலையாகவும் விளங்குகிறது.

முடிவுரை

சுமார் இருபது வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட ஸந்மதகாரி காவளி விவரணத்தில் "கைவல்யம் தாழ்ந்தது என்பது எல்லா ஆசார்யர்களுக்கும் உடன்பாடாகையாலும், தற்காலத்தில் கைவல் யத்தை விரும்புவார் எவருமில்லாமையாலும் இவ்விஷயத்தில் வீண் விவாதம் வேண்டியதில்லை" என்று அடியேனால் எழுதப்பட்டது. இப்போதும் கைவல்யத்தைப்பற்றிச் சர்ச்சை செய்துகொண்டிருப்பது விசேஷமான பயனை விளைக்கக்கூடியதல்ல என்பதே நம் கருத்து. ஆயினும், கீ₃தையிலும், அதன் பா₄ஷ்யத்திலும் கைவல்யத்தைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டிருக்கையால், அவற்றைத் தெளிவாக வும், விரிவாகவும் விளக்கும் நமது கீ₃தா வ்யாக்₂யானத்தில் கீ₃தா சார்யனுடையவும், கீ₃தாபா₄ஷ்யகாரருடையவும் திருவுள்ளம் விளங்கு வதற்காக இவ்வளவு விரிவாக நாம் விசாரம் செய்யவேண்டிய அவஶ்யம் நேர்ந்து விட்டது. இப்படி விசாரம் செய்யும்போது, இது கைவல்யம் ஒன்றைப் பற்றிய விசாரமாக மாத்திரம் அமையாமல், ஸ்ரீவைஷ்ணவ ஸித்₃தா₄ந்தத்தில் உள்ள இரு ஸம்ப்ரதா₃யங்களும் எந்த அடிப்படையில் பிரிந்து நிற்கின்றன என்பதைத் தெளிவாகவும், விரிவாகவும் காட்டும் விசாரமாகவும் அமைந்துவிட்டபடியால், இவ் விசாரம் பயனுடையதாகவும் ஆகிறது. இதை அடியேனைக் கருவி யாகக்கொண்டு கீ₃தாசார்யனும், கீ₃தாபா₄ஷ்யகாரரும் எழுதியிருப்ப தாகவே அடியேனுடைய அபி₄ஸந்தி₄ (நினைவு). ஸாராஸார விவேக ஜ்ஞர்களான நடுநிலைநிற்கும் நல்லோர்கள் நடுநிலைநின்று ஆராய்ந்து உண்மையை நிஷ்கர்ஷிப்பார்களாக.

ஸாராஸாரவிவேகஜ்ஞா: க₃ரீயாம்ஸோ விமத்ஸரா: |
ப்ரமாணதந்த்ரா: ஸந்தீதி ஸித்₃தா₄ஞ்ஜநமிதா₃ம் க்ருதம் ||

[ஸாரம், அஸாரம் ஆகியவற்றைப் பகுத்தறியக் கூடியவர்களும், மாத்ஸர்ய மற்றவர்களும், ப்ரமாணங்களுக்குக் கட்டுப்பட்டவர்களு மான பெரியோர்கள் இக்காலத்திலும் இருக்கிறார்கள் என்னும் எண்ணத்தாலே இந்தக் கைவல்ய ஸித்₃தா₄ஞ்ஜநம் இயற்றப் பெற்றது.]

கைவல்யஸித்₃தா₄ஞ்ஜநம் நிறைவுபெற்றது.

यत्र काले त्वनावृत्तिमावृत्तिं चैव योगिनः।
प्रयाता यान्ति तं कालं वक्ष्यामि भरतर्षभ !॥ २३ ॥
अग्निर्ज्योतिरहश्शुक्लः षण्मासा उत्तरायणम्।
तत्र प्रयाता गच्छन्ति ब्रह्म ब्रह्मविदो जनाः ॥ २४ ॥

23. யத்ர காலே த்வநாவ்ருத்திமாவ்ருத்திம் சைவ யோகி₃ந:।
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி ப₄ரதர்ஷப₄! ॥

24. அக்₃நிர்ஜ்யோதிரஹஶ்ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்।
தத்ர ப்ரயாதா க₃ச்ச₂ந்தி ப்₃ரஹ்ம ப்₃ரஹ்மவிதே₃ா ஜநா: ॥

ப₄ரதர்ஷப₄ !—ப₄ரதகுல திலகமே ! யத்ர காலே ப்ரயாதா: யோகி₃ந:து-எந்த வழிகளில் செல்லும் யோகி₃களோவெனில், ஆவ்ருத்திம் அநாவ்ருத்திம் ச—ஸம்ஸார மண்ட₃லத்துக்குத் திரும்பி வருதலும், அப்படித் திரும்பிவராமல் ப்₃ரஹ்மத்தை அடைதலுமாகிற ப₂லன்களை, யாந்தி—பெறுகிறார்களோ, தம் காலம் — அந்த வழிகளை, வக்ஷ்யாமி — கூறுகிறேன்: அக்₃நிர்ஜ்யோதி : — அர்ச்சிஸ்ஸு, அஹ : — அஹஸ்ஸு, ஶுக்ல:—ஶுக்லபக்ஷம், உத்தராயணம் ஷண்மாஸா:—உத்தராயணமான ஆறு மாஸங்கள், தத்ர ப்ரயாதா :—என்னும் இவ்வழியிலே செல்கின்ற, ப்₃ரஹ்மவித₃ : ஜநா :—ப்₃ரஹ்மத்தை ப்ராப்யமாக உபாஸிக்கும் உபாஸகர்கள், ப்₃ரஹ்ம க₃ச்ச₂ந்தி—ப்₃ரஹ்மத்தை அடைகிறார்கள்.

---

22. யாதுவழி செல்லுங்கால் யோகியர்கண் மீளார்கள்
யாதுசெல்லுங் கான்மீள்வ ரிவ்வுலகின்—மீதமைந்த
வவ்வழிக டாமிரண்டு மாங்குனக்குச் சொல்லுகே
னிவ்வழியிற் கேளா யிது.

யோகியர்கள்—யோகி₃கள், யாது வழி செல்லுங்கால்—எந்த (அர்ச்சிராதி₃) மார்க்க₃த்தின் வழியாகச் செல்லும் போது, மீளார்கள்—(ஸம்ஸார மண்ட₃லத்திற்கு) மீண்டு வரமாட்டார்களோ, யாது செல்லுங்கால்—எந்த (தூ₄மாதி₃)

மார்க்கத்தின் வழியாகச் செல்லும்போது, மீள்வர்—(இந்த ஸம்ஸார மண்டலத்திற்கே) மறுபடியும் வருவார்களோ, இவ்வுலகின்மீது அமைந்த—இந்த உலகத்திலே அமைந்திருக்கும், அவ்வழிகள் தாம் இரண்டும் — அந்த இரண்டு மார்க்கங்களையும், ஆங்கு—இவ்விடத்தில், உனக்குச் சொல்லுகேன்—உனக்குச் சொல்லுகின்றேன், இது—இவ்வழிகள் இரண்டையும், இவ்வழியில் கேளாய் — நான் சொல்ல நீ கேட்பாயாக.

23. அங்கிபகன் முற்பக்க மாங்கு வடவயனந்
தங்கிமிசை யேகியே தாமணைவர் — சங்கையற
மன்னும் பிரமத்தை வாய்ந்ததனைத் தம்முணர்வா
லுன்னு மனத்தவர்க ளுற்று.

அங்கி—அக்நியாகிற அர்ச்சிஸ்ஸு, பகல்—அஹஸ்ஸு, முற்பக்கம் — ஶுக்லபக்ஷம், ஆங்கு — அடுத்தபடியுள்ள, வடவயனம் மிசை—உத்தராயணம் ஆகியவற்றிலே, தங்கி ஏகியே — தங்கிச்சென்று, சங்கை அற — ஐயமில்லாமல், மன்னும் பிரமத்தை—நிலைநின்ற ப்ரஹ்மத்தை, வாய்ந்து—ப்ராப்யமாகப் பெற்று, தாம் அணைவர்—தாம் அநுபவிக்கப் பெறுவர்; (யாரெனில்) அதனை—அந்த ப்ரஹ்மத்தை, தம் உணர்வால் உற்று—தம் அறிவாலே ப்ராப்யமாக எண்ணி, உன்னும் மனத்தவர்கள்—உபாஸிக்கும் நெஞ்சை உடையவர்களே (முற்கூறியவாறு அடைவர்.)

(யத்ர காலே ப்ரயாதா: யோகிந:) எந்த மார்க்கத்தில் சென்ற யோகிகள்; இங்கு 'கால' ஶப்தம், ப்ரகரணத்தை ஒட்டி அர்ச்சிராதி மார்க்கம், தூமாதி மார்க்கம் என்னும் இரு மார்க்கங்களையும் குறிக்கிறது. "ஶுக்ல க்ருஷ்ணே கதீ ஹ்யேதே" [8.26] என்று தொடங்கும் அடுத்துள்ள ஶ்லோகத்தில், இவற்றை 'கதி' ஶப்தத்தால் எடுத்து, அடுத்த ஶ்லோகத்தில் 'நைதே ஸ்ருதீ' [8.27] என்று மார்க்கத்தைச் சொல்லும் ஸ்ருதி ஶப்தத்தாலே அநுவதிக்கையால் இங்கு காலமாத்ரத்தைச் சொல்லுவதாகக் கொள்ளமுடியாது. மேலும், "அதஶ்சாயனேऽபி தக்ஷிணே" [ப்ர-ஸூ 4-2-19] என்று தொடங்கி ப்ரஹ்ம ஸூத்ரத்தில், தக்ஷிணாயனம், க்ருஷ்ணபக்ஷம், ராத்ரி

॥भा॥ अत्र कालशब्दो मार्गस्याहःप्रभृतिसंवत्सरान्तकालाभिमानिदेवताभूयस्तया मार्गोपलक्षणार्थः। यस्मिन्मार्गे प्रयाता योगिनोऽनावृत्तिं, पुण्यकर्माणश्चावृत्तिं यान्ति; तं मार्गं वक्ष्यामीत्यर्थः।

ஆகிய காலங்களில் மரணமடைந்தவனும் மோக்ஷமடையலாம் என்று கூறப்பட்டது. ஆகையால், இங்கு அவ்வக்காலமாத்ரத்தை 'அஹ:' முதலான பத3ங்கள் குறிப்பதாகக் கொள்ளாமல், அர்ச்சிராதி3 தூ4மாதி3 மார்க்க3ங்களிலுள்ள அந்தந்தக் காலாபி4மாநி தே3வதைகளைக் குறிப்பதாகக் கொள்வதே பொருந்தும். காலத்தைச் சொல்லாத '' அக்3நிர்ஜ்யோதி: '' '' தூ4ம: '' என்னும் பத3ங்களை இங்கு கலந்து ப்ரயோகி3த்திருப்பதும் இதையே வலியுறுத்துகிறது. காலாபி4மாநி தே3வதைகளே பெரும்பான்மையினரா யிருப்பதால், காலஶப்3த3த்தால் மார்க்க3ம் குறிக்கப்படுகிறது. (யோகி3ந:) ஜ்ஞாநிகளும் புண்யகர்மம் செய்கிறவர்களுமாகிற இரு வகை யோகி3கள் என்று பொருள் கொண்டால், '' ஸரூபாணாம் ஏகஶேஷ ஏகவிப4க்தௌ'' [அஷ்டாத்4யாயீ 1-2-64] [ஒரே வேற்றுமையுடைய ஒருபடிப்பட்ட ஶப்3த3ங்களிடையே ஒரு ஶப்3த3மே எஞ்சிநிற்கும்.] என்னும் ஸூத்ரத்தின்படி, ''யோகி3நஶ்ச யோகி3நஶ்ச — யோகி3ந:'' என்னும் ஏகஶேஷத்3வந்த்3வமாகக் கொள்ள வேண்டும். அடுத்த ஶ்லோகத்தில் புண்யகர்மம் செய்தவர்களையும் யோகி3களாக எடுத்திருப்பதற்கு இது பொருந்தும். அன்றிக்கே, ''புண்யகர்மாணஶ்ச'' என்னும் பத3த்தை வருவித்துக்கொண்டு, ''யோகி3கள் அநாவ்ருத்தியையும், புண்யகர்மாக்கள் ஆவ்ருத்தியையும் அடைகிறார்களோ'' என்றும் பொருள் கொள்ளலாம். இப்போது இந்த ஶ்லோகத்தில் 'யோகி3கள்' என்றது ஜ்ஞாநிகளை மாத்திரம் குறிக்கும். கீ3தாபா4ஷ்யத்தில் இப்படியே கொள்ளப்பட்டது. இந்த கீ3தாஶ்லோகஸ்வாரஸ்யத்தையொட்டி இருபத்தாறுவது ஶ்லோக பா4ஷ்யத்தில், அர்ச்சிராதி3க3தி ஜ்ஞாநிகளுக்கே உரியது என்று காட்டப்பட்டிருக்கையால், இங்கும் 'யோகி3ந:' என்றது ஜ்ஞாநிகளையே குறிக்கும் எனக்கொள்வது ஸ்வரஸம். (து) 'து' ஶப்3த3ம் பாபிகளை நரகத்திற்கு அழைத்துச் செல்லும் க3திகளைக் காட்டிலும் வேறுபாட்டைக் காட்டுகிறது. (ஆவ்ருத்திம் அநாவ்ருத்திம் ச யாந்தி) அர்ச்சிராதி3 மார்க்க3த்தால் செல்லும் ஜ்ஞாநிகள் மறுபடியும் ஸம்ஸார மண்ட3லத்திற்குத் திரும்பி வருவதில்லை என்றும், தூ4மாதி3 மார்க்க3த்தால் செல்லும் புண்யகர்மகர்த்தாக்கள் ஸம்ஸார மண்ட3லத்திலேயே

अग्निर्ज्योतिरहश्शुक्लष्षण्मासा उत्तरायणमिति संवत्सरादीनां प्रदर्शनम् ॥ २३ ॥ २४ ॥

உழல்கிருர்கள் என்றும் கருத்து. (தம் காலம் வக்ஷ்யாமி) அந்த அர்ச்சிராதி3, தூ4மாதி3 மார்க்க3ங்களை உனக்குக் கூறுகிறேன். (ப4ரதர்ஷப4) ப4ரதகுலத்துக்குத் தலைவனுன நீ இவ்விரு மார்க்க3ங்களில் சிறந்ததான அர்ச்சிராதி3 மார்க்க3த்தை அடைந்து அந்த வழியாலே ப்3ரஹ்மத்தை அடையவேண்டும் என்று கருத்து. இரண்டாம் ஶ்லோகத்தில் இவ்வர்ச்சிராதி3 மார்க்க3மும் காட்டப்படுகிறது இனி, (அக்3நிர்ஜ்யோதி:) அக்3நிரூபமான ஜ்யோதி: அதாவது — அர்ச்சிராதி3 மார்க்க3த்தில் முதல் படியான அர்ச்சிஸ்ஸு. (அஹஶ் ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்) அடுத்த படிகளான பகல், ஶுக்லபக்ஷம், உத்தராயணமான ஆறு மாஸங்கள். ''அர்ச்சிஷோऽஹ: அஹ்ந ஆபூர்யமாணபக்ஷம், ஆபூர்யமாணபக்ஷாத் யாந் ஷடு3தங்ஙேதி மாஸாம்ஸ்தாந், மாஸேப்4ய: ஸம்வத்ஸரம், ஸம்வத்ஸராதா3தி3த்யம், ஆதி3த்யாச்சந்த்3ரமஸம், சந்த்3ரமஸோ வித்3யுதம்'' [சா2ந் 5-10-1, 2] [அர்ச்சிஸ்ஸிலிருந்து அஹஸ்ஸையும், அஹஸ்ஸிலிருந்து ஶுக்லபக்ஷத்தையும், ஶுக்லபக்ஷத்திலிருந்து ஸூர்யன் வடக்கு முகமாகச் செல்லும் உத்தராயணமான ஆறு மாஸங்களையும், அவ்வுத்தராயணத்திலிருந்து ஸம்வத்ஸரத்தையும், ஸம்வத்ஸரத்திலிருந்து ஆதி3த்யனையும், ஆதி3த்யனிலிருந்து சந்த்3ரனையும், சந்த்3ரனிலிருந்து வித்3யுத்புருஷனையும் அடைகிருன்] என்று உபநிஷத்தில் சொல்லப்பட்ட ஸம்வத்ஸரம் முதலான அர்ச்சிராதி3 மார்க்க3த்திலுள்ள மற்ற அபி4மாநி தே3வதைகளுக்கும், மற்றும் சிலர்க்கும் இவை உபலக்ஷணம். இம்மார்க்க3த்திலுள்ள மற்றும் சிலர் யாரென்பது ப்3ரஹ்மஸூத்ரத்தில் அர்ச்சிராதி3 பாத3த்தில் விளக்கப்பட்டது.

''அர்ச்சிரஹஸ்ஸிதபக்ஷா நுதக3யநாப்3த3 மருத3ர்க்கேந்து3ந் ।
அபி வைத்3யுத வருணேந்த்3ர ப்ரஜாபதீநாதிவாஹிகாநாஹு: ॥''

[தத்வஸாரம்-102]

[(1) அர்ச்சிஸ் (ஒளி) (2) அஹஸ் (பகல்) (3) ஶுக்லபக்ஷம் (4) உத்தராயணம் (5) ஸம்வத்ஸரம் (வருஷம்) (6) மருத் (வாயு) (7) ஸூர்யன் (8) சந்திரன் (9) வைத்3யுதன் (10) வருணன் (11) இந்த்3ரன் (12) ப்ரஜாபதி (பிரமன்) ஆகிய இவர்கள் ஆதிவாஹிகர்கள் (அர்ச்சிராதி3க3தியில் முக்தனை அழைத்துச் செல்லுமவர்கள்) என்று கூறுகிருர்கள்.]

धूमो रात्रिस्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम् ।
तत्र चान्द्रमसं ज्योतिर्योगी प्राप्य निवर्तते ॥ २५ ॥

'முக்தோऽர்ச்சிர் தி₃நபூர்வபக்ஷஷடு₃த₃ங்மாஸாப்₃த₃வாதாம்ஶுமத்₃-
க்₃லௌவித்₃யுத்₃வருணேந்த்₃ரதா₄த்ருமஹித: ஸீமாந்தஸிந்த்₄வாப்
ஸ்ரீவைகுண்ட₂முபேத்ய நித்யமஜட₃ம் தஸ்மிந் பரப்₃ரஹ்மண: [ஸு₂த:]
ஸாயுஜ்யம் ஸமவாப்ய நந்த₃தி ஸமம் தேநைவ த₄ந்ய: புமாந் ||''
[ஶ்லோகத்₃வயம் 2]

[(1) அர்ச்சிஸ் (2) பகல் (3) ஶுக்லபக்ஷம் (4) உத்தராயணம் (5) வருஷம் (6) வாயு (7) ஸூர்யன் (8) சந்திரன் (9) வைத்₃யுதன் (10) வருணன் (11) இந்திரன் (12) ப்ரஜாபதி (பிரமன்) ஆகிய வர்களால் அவரவர் ஸ்த₂ானங்களிலே (முறையே) கொண்டாடப் பட்டு, (வைத்₃யுதனை அமாநவனோடு கூடச்சென்று) ப்ரக்ருதி மண்ட₂லத்தின் இறுதியிலுள்ள (விரஜா) நீரில் குளித்து, ப₄ாக்₃ய ஶாலியான முக்தன் நித்யமாய், ஸ்வயம்ப்ரகாஶமான ஸ்ரீவைகுண் ட₂த்தை அடைந்து, அங்கு பரமாத்மாவோடு ஒத்த கு₃ணத்தை உடையவனாகி அவனோடு கூட இன்புறுகிறான்.] என்று அர்ச்சிராதி₃ க₃தியிலுள்ள எல்லா (பன்னிரண்டு) ஆதிவாஹிகர்களையும் நடாதூரம் மாள் காட்டியருளினார். அர்ச்சிராதி₃ முதலான ரஹஸ்யக்₃ரந்த₂ங்க ளிலும் இந்த க₃தி விவரிக்கப்பட்டது. (தத்ர ப்ரயாதா: ப்₃ரஹ்மவிதோ₃ ஜநா: ப்₃ரஹ்ம க₃ச்ச₂ந்தி) அந்த அர்ச்சிராதி₃க₃தி வழியாகச் செல் கின்றவர்களாய், ப்₃ரஹ்மத்தை ப்ராப்யமாக உபாஸிக்கும் முமுக்ஷுக்கள் ப்₃ரஹ்மத்தை அடைகிறார்கள். ப்₃ரஹ்மத்தை ப்ராபகமாக உபாஸிக்கும் கைவல்யார்த்தி₂களும் இங்கு ப்₃ரஹ்மவித்துக்கள் என்னும் ஶப்₃த₃த் தாலே எடுக்கப்படுவதாகக் கொள்ளலாமே? எனில்: அப்படிக் கொண்டால் ப்₃ரஹ்மத்தை ஐஶ்வர்ய ஸாத₄நமாக உபாஸிக்கும் ஐஶ்வர்யார்த்தி₂களுக்கும் அர்ச்சிராதி₃க₃தியை ஒப்புக்கொள்ளவேண்டி வரும். ஐஶ்வர்யார்த்தி₂க்கு அர்ச்சிராதி₃க₃தி இல்லை என்பது அனைவரும் இசைந்தது. ஆகையால் இங்கு ப்₃ரஹ்மத்தை ப்ராப்ய மாக உபாஸிக்கும் ஜ்ஞாநிகளே ப்₃ரஹ்மவித்துக்கள் என்று கூறப் படுகிறார்கள் என்று கொண்டு தீரவேண்டும். ஆக, கைவல்யார்த்தி₂க்கு அர்ச்சிராதி₃க₃தியில்லை என்பது 'ப்₃ரஹ்மவித₃:' என்னும் ஶப்₃த₃த்தி லிருந்தே அசைக்கமுடியாதபடி தேறுகிறது. ஆக, பரமபுருஷநிஷ்ட₂ னும், பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுமான இருவகையான ஜ்ஞாநிகள் ப்₃ரஹ்மத்தை அடைவதற்கு வழியான அர்ச்சிராதி₃மார்க்க₃ம் விவரிக்கப்பட்டதாயிற்று. 23,24.

25. தூ₄மோ ராத்ரிஸ் ததா₂ க்ருஷ்ண: ஷண்மாஸா
தக்ஷிணாயநம் ।
தத்ர சாந்த்₃ரமஸம் ஜ்யோதிர் யோகீ₃ ப்ராப்ய நிவர்த்ததே ॥

தூ₄ம:— தூ₄மம் (புகை), ராத்ரி:-இரவு, ததா₂ க்ருஷ்ண:- அவ்வண்ணமே க்ருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயநம் ஷண்மாஸா:— தக்ஷிணாயநமான ஆறு மாதங்கள், தத்ர சாந்த்₃ரமஸம் ஜ்யோதி:— அதற்குப்பின் சந்த்₃ரனுகிற சோதி (ஆகியவர்களை) யோகீ₃— புண்யகர்மம் செய்தவன், ப்ராப்ய— அடைந்து, நிவர்த்ததே—(கர்மபூ₄மிக்கே) திரும்பி வருகிறான்.

24. தூமமிராப் பிற்பக்கஞ் சோராமற் றென்னயன
மாமதன்மேற் சந்திரனை யாங்கணைந்து—போமவன்றான்
நல்வினையிற் சேர்பயனு நாடணைந்து மீளுமே
மல்வினையிற் சார்பால் மறிந்து.

தூமம் — புகை, இரா — இரவு, பிற்பக்கம் — அபர (க்ருஷ்ண)பக்ஷம், தென் அயனம்— தக்ஷிணாயநம், ஆம் அதன்மேல் சந்திரனை ஆங்கு அணைந்து— முற்கூறியவற்றுக்கு மேல் சந்திரனை அவ்வழியில் அடைந்து, சோராமல் போமவன்தான்—களைப்படையாமல் போகின்றவன், நல்வினையின் சேர் பயனும்—புண்ய கர்ம ஸம்ப₃ந்த₄த்தின் ப₂லமாயிருக்கும், நாடு அணைந்து — ஸ்வர்க்க₃லோகத்தை அடைந்து, மல் வினையின் சார்பால் — எஞ்சிய கர்மத்தின் தொடர்பால், மறிந்து மீளுமே—மறுபடியும் கர்மபூ₄மிக்கே வந்து சேர்வான்.

25. புண்ணியம் செய்தவர்கள் ஸ்வர்க்க₃த்திற்குச் செல்லும் வழியான தூ₄மாதி₃ மார்க்க₃த்தைக் காட்டுகிறான் இதில். (தூ₄ம:) அர்ச்சிராதி₃க₃தியில் முதலாவதான ஒளிக்கு எதிர்த்தட்டான புகைக்கு அபி₄மாநிதே₃வதை. (ராத்ரி:) அர்ச்சிராதி₃க₃தியில் இரண்டாவதான பகலுக்கு எதிர்த்தட்டான ராத்ரிக்கு அபி₄மாநிதே₃வதை. (ததா₂ க்ருஷ்ண:) அர்ச்சிராதி₃க₃தியில் மூன்ருவதான ஶுக்ல பக்ஷத்திற்கு எதிர்த்தட்டான க்ருஷ்ண பக்ஷத்திற்கு அபி₄மாநிதே₃வதை. (ஷண்மாஸா: தக்ஷிணாயநம்) அர்ச்சிராதி₃க₃தியில் நான்காவதான உத்தராயணத்திற்கு எதிர்த்தட்டான் தக்ஷிணாயநத்திற்கு அபி₄மாநிதே₃வதை.

॥भा॥ एतच्च धूमादिमार्गस्थपितृलोकादेः प्रदर्शनम्। अत्र योगिशब्दः पुण्यकर्मसंबन्धिविषयः॥ २५॥

(தத்ர சாந்த்₃ரமஸம் ஜ்யோதி: ப்ராப்ய) அவ்வழியில் சந்த்₃ரனுகிற சோதியை அடைந்து. "அத₂ ய இமே க்₃ராம இஷ்டாபூர்த்தே த₃த்தமித்யுபாஸதே தே தூ₄மமபி₄ஸம்ப₄வந்தி, தூ₄மாத்₃ராத்ரிம், ராத்ரேரபரபக்ஷம், அபரபக்ஷாத்₃யாந் த₃க்ஷிணைதி மாஸாம்ஸ்தாந், நைதே ஸம்வத்ஸரமபி₄ப்ராப்நுவந்தி. மாஸேப்₄ய: பித்ருலோகம். பித்ருலோகாதா₃காஸம், ஆகாஸாச்சந்த்₃ரமஸம்" [சா₂ந் 5-10-3,4] [யாவர் சிலர் தங்களூரிலிருந்துகொண்டு யாக₃ம் முதலான இஷ்டங்கள், குளம்வெட்டுதல் முதலான பூர்த்தங்கள், தா₃னம் முதலான புண்ய கர்மங்களை (ஸ்வர்க்க₃த்தை அடைவதற்காக) முறைப்படி செய்கிறார்களோ, அவர்கள் முதலில் தூ₄மாபி₄மாநிதே₃வதையை (ஆதிவாஹிகராக) அடைகிறார்கள். தூ₄மத்திலிருந்து ராத்ரி, ராத்ரியிலிருந்து க்ருஷ்ணபக்ஷம்; அதிலிருந்து த₃க்ஷிணாயநம் ஆகியவற்றை அடைகின்றனர். வருஷத்தை இவர்கள் அடைவதில்லை. த₃க்ஷிணாயநத்திலிருந்து பித்ருலோகத்தையும், அதிலிருந்து ஆகாஸத்தையும், அதிலிருந்து சந்திரனையும் அடைகின்றனர்.] என்னும் உபநிஷத்₃ வாக்யத்தில் சொல்லப்பட்ட பித்ருலோகம், ஆகாஸம் ஆகிய ஆதிவாஹிகர்களையும் இங்கு சேர்த்துக்கொள்ளவேண்டும். (தத்ர யோகீ₃ சாந்த்₃ரமஸம் ஜ்யோதி: ப்ராப்ய நிவர்த்ததே) புண்யகர்மங்களோடு ஸம்ப₃ந்த₄முடையவன் சந்திரனுகிற சோதியை அடைந்து ஸ்வர்க்க₃ ஸுக₂த்தை அநுப₄வித்துவிட்டு, புண்யகர்மம் முடிந்தவுடன், கர்ம ஶேஷப₃லத்தாலே கர்மபூ₄மிக்கே திரும்புகிறான். இவ்விஷயங்களும் ப்₃ரஹ்மஸூத்ரத்தில் மூன்றும் அத்தியாயத்தின் முற்பகுதியில் விளக்கப்பட்டன. (யோகீ₃) இங்கு யோக₃ஶப்₃த₃ம் "யோக₃: ஸந்நஹநோபாய" [அமரம் 3-3-22] என்கிற நிக₄ண்டுவின்படி ஸ்வர்க்க₃த்திற்கு உபாயமான புண்யகர்மங்களைக் குறித்து, 'யோகீ₃' என்று அவற்றை உடையவனைக் குறிப்பதாகக் கொள்ளலாம். அன்றிக்கே, யோக₃ஶப்₃த₃ம் ஸம்ப₃ந்த₄த்தைக் குறிப்பதாய், புண்யம் செய்தவர்கள் அடையும் தூ₄மாதி₃மார்க்க₃ ப்ரகரணத்தையொட்டி, 'யோகீ₃' என்று இங்கு புண்யகர்மஸம்ப₃ந்த₄முடையவனைக் குறிப்பதாகக்கொள்ளலாம். ஆக, இந்த ஶ்லோகத்தில் புண்யகர்மம் செய்த ஐஶ்வர்யார்த்தி₂கள் ஸ்வர்க்க₃ம் முதலான ப்ராக்ருதலோகங்களை அடைவதற்குச் செல்லும் தூ₄மாதி₃மார்க்க₃ம் விவரிக்கப்பட்டதாயிற்று. 25.

शुक्लकृष्णे गती ह्येते जगतः शाश्वते मते ।
एकया यात्यनावृत्तिमन्ययाऽऽवर्तते पुनः ॥ २६ ॥

26. *ஶுக்லக்ருஷ்ணே* க$_3$தீ ஹ்யேதே ஜக$_3$த: *ஶாஶ்*வதே மதே ।
ஏகயா யாத்யநாவ்ருத்திம் அந்யயாऽऽவர்த்ததே புந: ॥

ஏதே *ஶுக்லக்ருஷ்ணே* க$_3$தீ — இந்த அர்ச்சிராதி$_3$, தூ$_4$மாதி$_3$ மார்க்க$_3$ங்கள் இரண்டும், ஜக$_3$த: — (முறையே) ஞானிகளுக்கும், புண்ணியம் செய்தவர்களுக்கும், *ஶாஶ்*வதே மதே — (*ஶ்*ருதியில்) நிலையானவையாக ஓதப்படுகின்றன. ஏகயா — இவற்றில் ஒன்றான அர்ச்சிராதி$_3$க$_3$தியாலே, அநாவ்ருத்திம் யாதி—திரும்பி வருதலில்லாத (ப்$_3$ரஹ்மப்ராப்தியாகிற) ப$_2$லனை அடைகிறான். அந்யயா—மற்றொன்றான தூ$_4$மாதி$_3$ மார்க்க$_3$த்தால் (சென்றவன்), புந: ஆவர்த்ததே-மறுபடியும் (கர்மபூ$_4$மிக்குத்) திரும்பி வருகிறான்.

---

25. வெளிதுகரி தாயிருமை மேவியுல கேய்ந்த
வளியநெறி யாங்கவற்றி லொன்றாற்—றெளிவமரு
மீளாப் பதமணையு மிக்கதனான் மீண்டுவரும்
கோளாறு தானணையுங் கூர்ந்து.

வெளிது கரிதாய் இருமை மேவி—வெள்ளை வழி, கரிய வழி என (முறையே) இரு பெயர்களைப் பெற்று, உலகு ஏய்ந்த அரிய நெறி ஆங்கு அவற்றில்—(முறையே) ஞானிகளுக்கும், புண்ணியம் செய்தவர்களுக்கும் பொருந்திய நிலையான வழிகளான அவ்விரண்டு வழிகளில், ஒன்றால்—ஒன்றான அர்ச்சிராதி$_3$க$_3$தியாலே, தெளிவு அமரும் மீளாப் பதம் அணையும்—தெளிவு பொருந்தியதாய், ஸம்ஸாரத்திற்குத் திரும்புதலில்லாத பரமபத$_3$த்தை (ஜீவன்) அடைவான். மிக்கதனால்—மற்றொரு வழியான தூ$_4$மாதி$_3$ மார்க்க$_3$த்தாலே (சென்றவன்), மீண்டு வரும் கோளாறுதான்—கர்மபூ$_4$மிக்குத் திரும்பி வரும் துன்பத்தையே, கூர்ந்து அணையும்—பொருந்தி அடைவான்.

॥ भा ॥ शुक्ला गतिः—अर्चिरादिका, कृष्णा च धूमादिका। शुक्लयाऽनावृत्तिं याति; कृष्णया तु पुनरावर्तते। एते शुक्लकृष्णे गती

---

26. முற்கூறிய இரண்டு க3திகளும் ஶ்ருதிப்ரஸித்3த4மானவை என்று காட்டுகிறது இந்த ஶ்லோகம். (ஏதே ஶுக்லக்ருஷ்ணே க3தீ) இந்த ஶுக்ல (வெள்ளை) க3தியும், க்ருஷ்ண (கறுப்பு) க3தியும். ஶுக்லபக்ஷஸம்ப3ந்த4த்தால் அர்ச்சிராதி3மார்க்க3ம் ஶுக்லக3தியென்றும், க்ருஷ்ணபக்ஷஸம்ப3ந்த4த்தால் தூ4மாதி3 மார்க்க3ம் க்ருஷ்ணக3தி என்றும் சொல்லப்படுவதாகக் கொள்ளலாம். ஸாத்விகரான முக்தியடைபவர்களை உபசரிக்கும் ஸாத்விகரான தே3வர்கள் நிறைந்திருக்கையாலே ஶுத்3தி4யையிட்டு அர்ச்சிராதி3க3தி ஶுக்லக3தி என்றும், ரஜஸ்தமோகு3ணம் மிகுந்த புண்யகர்மகர்த்தாக்களை உபசரிக்கும் ரஜஸ்தமோகு3ணங்கள் மிகுந்த தே3வர்கள் நிறைந்திருக்குமிடமாகையாலே அஶுத்3தி4யையிட்டு தூ4மாதி3மார்க்க3ம் க்ருஷ்ணக3தி என்றும் கூறப்படுவதாகவும் கொள்ளலாம். அர்ச்சிஸ் (ஒளி), அஹஸ் (பகல்), ஶுக்லபக்ஷம், ஆதி3த்யன் முதலான ஒளிநிறைந்த பொருள்களின் அபி4மாநிதே3வதைகள் வாழுமிடமாகையாலே, அர்ச்சிராதி3 மார்க்க3ம் 'வெள்ளை வழி' என்றும், தூ4மம் (புகை), ராத்ரி (இரவு) க்ருஷ்ணபக்ஷம் முதலான இருள்நிறைந்த பொருள்களின் அபி4மாநிதே3வதைகள் வாழுமிடமாகையாலே, தூ4மாதி3மார்க்க3ம் 'கறுப்பு வழி' என்றும் கூறப்படுவதாகவும் கொள்ளலாம். (ஜக3த: ஶாஶ்வதே மதே ஹி) ஜ்ஞாநிகளுக்கு அர்ச்சிராதி3க3தியும், "இஷ்டாபூர்த்தம் த3த்தம்" [சா2ந் 5-10-3] என்று யாக3ம், த3ானம், குளம் வெட்டுதல் முதலான பலவித4மான புண்யகர்மங்களைச் செய்தவர்களுக்கு தூ4மாதி3மார்க்க3மும் வேத3வாக்யங்களில் தனித்தனியாகவும், நிலையானவையாகவும் ஓதப்பட்டுள்ளனவன்றோ. 'ஹி' ஶப்3த3ம் ஶ்ருதிப்ரஸித்3தி4யைக் காட்டுகிறது. "தத்3ய இத்த2ம் விது3:, யே சேமேऽரண்யே ஶ்ரத்3தா4 தப இத்யுபாஸதே தேऽர்ச்சிஷமபி4ஸம்ப4வந்தி" [சா2ந் 5-10-1] [இதன்பொருள் பக்கம் 265, 380 முதலானவிடங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.] என்று அர்ச்சிராதி3மார்க்க3மும், "அத2 ய இமே க்3ராமே இஷ்டாபூர்த்தம் த3த்தமித்யுபாஸதே, தே தூ4மமபி4ஸம்ப4வந்தி" [சா2ந் 5-10-3] [இதன் பொருள் 383-ம் பக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.] என்று தூ4மாதி3மார்க்க3மும் ஶ்ருதியில் விவரிக்கப்பட்டிருப்பது காணத்தக்கது. 'ஜக3த:' (உலகிற்கு) என்று பொதுப்படையாக இருந்தபோதிலும், ஶ்ருதியில்-ப்3ரஹ்மத்தை

ज्ञानिनां, विविधानां (ज्ञानिनां द्विविधानां,) पुण्यकर्मणां च श्रुतौ शाश्वते मते । * तद्य इत्थं विदुर्ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते तेऽर्चिषमभि-

---

ப்ராப்யமாகக்கொண்டு ப்3ரஹ்மவித்3யையை அநுஷ்டி2க்கும் ஜ்ஞாநிகளுக்கே அர்ச்சிராதி3க3தியும், ஸ்வர்க்க3ம் முதலான ப்ராக்ருத ப2லங்களை ப்ராப்யமாகக்கொண்டு யாக3த்3ான ஹோமாதி3புண்ய கர்மங்களை அநுஷ்டி2க்குமவர்களுக்கே தூ4மாதி3மார்க்க3மும் தனித் தனியாக ஓதப்பட்டிருக்கையாலும், "வித்3யாகர்மணோரிதி து ப்ரக்ருதத்வாத்" [ப்3ரஹ்மஸூத்ரம் 3-1-17] [ப்ரகரணத்தைக்கொண்டு ஆராயும்போது, ப்3ரஹ்மவித்3யையை அநுஷ்டி2த்தவர்களுக்கே தே3வயாநமாகிற அர்ச்சிராதி3மார்க்க3மும், (புண்ய) கர்மங்களை அநுஷ்டி2த்தவர்களுக்கே பித்ருயாணமான தூ4மாதி3மார்க்க3மும் (ஏற்படும்) என்று (விளங்கும்)] என்று ப்3ரஹ்மஸூத்ரத்திலும் இவ் விஷயம் நிஷ்கர்ஷிக்கப்பட்டிருக்கையாலும், ஜக3ச்ச2ப்3த3த்திற்கு "ஜ்ஞாநிநாம், விவித4ாநாம் புண்யகர்மணாம் ச" என்று பா4ஷ்யகாரால் உரையிடப்பட்டது. தாத்பர்ய தீ3பிகையில் "ஜ்ஞாநிநாம் த்3விவித4ாநாம், புண்யகர்மணாம் ச" [பரமபுருஷநிஷ்ட2ன், பஞ்சாக்3நி வித்3யாநிஷ்ட2ன் என்னும் இருவகை ஞானிகளுக்கும், புண்ய கர்மம் செய்தவர்களுக்கும்] என்றும் பா4ஷ்யபாட2மிருப்பதாகக் காட்டப்பட்டது. "விவித4ாநாம் புண்யகர்மணாம்" என்று பாட2மா ஞல் "இஷ்டாபூர்த்தம் த3த்தம்" [சாந் 5-10-3] என்னும் ஶ்ருதியை விளக்கியதாகவும், "ஜ்ஞாநிநாம் த்3விவித4ாநாம்" என்று பாட2மிருந்தால் "தத்3ய இத்த2ம் விது3:, யே சேமேऽரண்யே ஶ்ரத்3த4ா தப இத்யுபாஸதே" [சாந் 5-10-1] என்னும் ஶ்ருதியை விளக்கியதாகவும் ஆகிறது. எந்தப் பாட2மிருந்தாலும் ஜிஜ்ஞாஸுவான கைவல்யநிஷ்ட2னுக்கு இவ்விரு க3திகளிலும் அந்வயமில்லை என்பதே பா4ஷ்யகாரர் திருவுள்ளம் என்று தெளிவாக விளங்குகிறது. ப்ராக்ருதலோகத்தில் அமைந்திருக்கும் இந்த க3திகளை 'ஶாஶ்வதே' என்றது எப்படி? எனில்: ஒவ்வொரு கல்பத்திலும் இந்த க3திகள் அமைந்திருக்கையால் ப்ரவாஹரூபேண நித்யம் என்பதையிட்டும், ப்3ரஹ்மத்தை அடைபவனுக்கு அர்ச்சிராதி3மார்க்க3ம் என்றும், ப்ராக்ருதமான ஸ்வர்க்கா3தி3லோகங்களை அடைபவனுக்கு தூ4மாதி3மார்க்க3ம் என்றும் தனித்தனியாயிருக்கையாலும் 'ஶாஶ்வதே' எனப்படுகிறது. (மதே) ஶ்ருதியில் ஓதப்பட்டன. பரமபத3மடைபவனுக்கும், ஸ்வர்க்க3மடைபவனுக்கும் அவ்வழிகளும் அவற்றில் நடக்கும் உபசாரங்களும் உத்3தே3ஶ்யமாகையாலே

संभवन्ति (छा. ५. १०. १) * अथ य इमे ग्राम इष्टापूर्ते दत्त मित्युपासते ते धूममभिसंभवन्ति (छा. ५. १०. ३) इति ॥ २६ ॥

வேத3த்தில் இவ்விருவகையினரும் சிந்திப்பதற்காக விவரிக்கப்பட்டன வாகையாலே நானும் இங்கு விவரித்தேன்; மற்றோரதி4காரியான கைவல்யநிஷ்டனுக்குத் தன் ஆத்மாவைத் தவிர வேறொன்றும் உத்3தே3ஶ்யமல்லவாகையாலே வேத3த்தில் அவனுக்கு க3தி விவரிக்கப் படவில்லையாகையால், நானும் அவனுக்கு க3தியை விவரிக்கவில்லை என்று கருத்து. (ஏகயா...புந:) ஶுக்லக3தியாலே இவ்வுலகத்திற்குத் திரும்பிவருதலில்லாத ப்3ரஹ்மாநுப4வத்தையும், க்ருஷ்ணக3தியாலே கர்மபூ4மிக்குத் திரும்பிவரக்கூடிய ஸ்வர்க்க3ம் முதலான அநுப4வங் களையும் அடைகிறான் என்று கருத்து. இங்கு அநாவ்ருத்தியை உடைய வனுக்கு அர்ச்சிராதி3க3தியைக் கூறியிருக்கையால் (8-20) முதலான ஶ்லோகங்களில் அநாவ்ருத்தியை உடையவனாகக் கூறப்பட்ட கைவல்யநிஷ்டனுக்கும் அர்ச்சிராதி3க3தி உண்டென்று விளங்கு கிறதே எனில்: இங்கு "அநாவ்ருத்தியை உடையவனுக்கெல்லாம் அர்ச்சிராதி3க3தியுண்டு" என்னும் வ்யாப்தி கருதப்படவில்லையாகை யால், கைவல்யநிஷ்டனுக்கு அர்ச்சிராதி3க3தி உண்டென்று தேறாது. அப்படியொரு வ்யாப்தி இங்கு கருதப்பட்டதாகக்கொண்டால், "ப்3ரஹ்மணா ஸஹ தே ஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே। பரஸ் யாந்தே க்ருதாத்மாந: ப்ரவிஶந்தி பரம் பத3ம் ॥" [கூர்மபுராணம் - பூர்வக2ண்ட3ம் 12-269] [பிரமனின் ஸத்யலோகத்தில் ப4க்திமுதலான உபாயங்களை அநுஷ்டி2த்து முடித்த அவர்களனைவரும், ப்3ரஹ்மா வின் ஆயுளான பரம் எனும் காலம் முடிந்தவுடன் ப்ரளயகாலத்தில் ப்3ரஹ்மாவோடுகூடப் பரமபத3த்தை அடைகிறார்கள்] என்கிறபடியே, அர்ச்சிராதி3க3தியில்லாவிடிலும் பரமபத3த்தை ப்3ரஹ்மாவோடு ப்ரளய காலத்தில் அடைந்து (க்ரம) முக்தியடைபவர்களுக்கும் புநராவ்ருத்தி யில்லையாகையாலே, இந்த வ்யாப்திக்கு வ்யபி4சாரம் (தட்டுப்பாடு) வரும். மேலும், இந்த ஶ்லோகத்தில், இத்துடன்கூடப் படிக்கப் படும் தூ4மாதி3மார்க்க3த்திற்கும், "ஆவ்ருத்தியை உடையவனுக் கெல்லாம் தூ4மாதி3மார்க்க3ம் உண்டு" என்னும் வ்யாப்தியைக்கொள்ள வேண்டிவரும். ஆவ்ருத்தியுடைய நரகம் செல்வார் விஷயத்தில் தூ4மாதி3மார்க்க3ம் இல்லையாகையால் இந்த வ்யாப்தியும் பொருந் தாது. ஆகையால் ப்3ரஹ்மத்தை அடைபவனுக்கு ஆவ்ருத்தியில்லாத அர்ச்சிராதி3மார்க்க3மும், ஸ்வர்க்கா3தி3 ப்ராக்ருத புண்யலோகங்களை அடைபவனுக்கு ஆவ்ருத்தியுள்ள தூ4மாதி3மார்க்க3மும் உண்டு என விதி4ப்பதே இந்த ஶ்லோகத்தின் பரமதாத்பர்யமாகும். 27.

नैते सृती पार्थ ! जानन् योगी मुह्यति कश्चन ।
तस्मात्सर्वेषु कालेषु योगयुक्तो भवार्जुन ॥ २७ ॥

27. நைதே ஸ்ருதீ பார்த்த$_{2}$! ஜாநந் யோகீ$_{3}$ முஹ்யதி கஶ்சந |
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோக$_{3}$யுக்தோ
ப$_{4}$வார்ஜுந ! ||

பார்த்த$_{2}$ அர்ஜுந—குந்திபிள்ளையான அர்ஜுனா! ஏதே ஸ்ருதீ— இந்த அர்ச்சிராதி$_{3}$, தூ$_{4}$மாதி$_{3}$மார்க்க$_{3}$ங்கள் இரண்டையும், ஜாநந்—அறிகிற, கஶ்சந யோகீ$_{3}$—எந்த ஞானியும், ந முஹ்யதி — மயங்கமாட்டான். தஸ்மாத் — ஆகையால், ஸர்வேஷு காலேஷு—தினந்தோறும், யோக$_{3}$யுக்த: ப$_{4}$வ — (அர்ச்சிராதி$_{3}$க$_{3}$தியைச் சிந்திப்பதாகிற) யோக$_{3}$த்தோடு கூடியவனாக ஆவாயாக.

---

26. இவ்வழிக ளானறிந்த யோகியவன் பார்த்தனே !
யெவ்வழியு மோகத் திடையணையான்—அவ்வழியாற்
கால மனைத்திலுநீ காதலால் யோகத்தை
யேல முயல்கண்டா யிங்கு.

பார்த்தனே — அர்ஜுனா! இவ்வழிகள்தான் அறிந்த யோகி அவன்—இந்த அர்ச்சிராதி$_{3}$. தூ$_{4}$மாதி$_{3}$மார்க்க$_{3}$ங்களை அறிந்த எந்த ஞானியும், எவ்வழியும்—ப்ரயாணகாலத்திலும், மோகத்திடை அணையான்—மயங்கமாட்டான். அவ்வழியால்—ஆகையாலே, காலம் அனைத்திலும்—தினந்தோறும், நீ—நீ, காதலால்—ஆர்வத்தோடு, யோகத்தை ஏல—(இந்த அர்ச்சிராதி$_{3}$க$_{3}$தியைச் சிந்திப்பதாகிற) தியானத்தை ஏற்றுக்கொள்ள, இங்கு—ஸாத$_{4}$நத$_{3}$ஶையான இப்போதே, முயல்கண்டாய்—முயற்சிசெய்வாயாக.

---

27. *அர்ச்சிராதி$_{3}$க$_{3}$தி சிந்தனம் தினந்தோறும் ஞானியால் செய்யப்படவேண்டும் என்று விதி$_{4}$க்கிறான் இந்த ஶ்லோகத்தில். (ஏதே ஸ்ருதீ ஜாநந் கஶ்சந யோகீ$_{3}$) வெள்ளை வழியாகிற அர்ச்சிராதி$_{3}$க$_{3}$தியையும், கறுப்பு வழியாகிற தூ$_{4}$மாதி$_{3}$க$_{3}$தியையும் அறிகின்ற எந்த ஞானியும். பார்த்த$_{2}$னே 'அர்ஜுந' (வெளுத்தவனே!)*

॥ भा ॥ एतौ मार्गौ जानन् योगी प्रयाणकाले कश्चन न मुह्यति; अपि तु स्वेनैव देवयानेन पथा याति। तस्मादहरहरर्चिरादिगति-चिन्तनाख्ययोगयुक्तो भव ॥ २७॥

என்று விளிக்கையாலும், தனக்கு ஆத்மஸமனை அவனை ஞானியாக்குவதிலேயே கண்ணனுக்கு நோக்காகையாலும் இங்கு யோகி₃ ஶப்₃த₃ம் 23-வது ஶ்லோகத்திற்போலே ஞானியையே குறிக்கிறதென்று கொள்ளவேணும். ஞானிக்கு மார்க்க₃ சிந்தநம் எதற்கு? எனில்: திருவேங்கடயாத்ரை, ப₃த₃ரியாத்ரை போலே அடையும் தே₃ஶத்தின் இனிமையாலே செல்லும் வழியும் உத்₃தே₃ஶ்யமாயிருக்கையால் ப்ராப்யத்தில் ருசியை வளர்ப்பதற்காக தினந்தோறும் க₃திசிந்தனம் செய்யவேண்டும் என விதி₄க்கப்படுகிறது. தாழ்ந்ததான தூ₄மாதி₃ மார்க்க₃த்தையும் அறியவேண்டும் என்றதற்குக் காரணத்தைக் காட்டிக்கொண்டு, உயர்ந்ததான அர்ச்சிராதி₃க₃தி சிந்தனத்திற்கு மேலும் ஒரு காரணம் காட்டப்படுகிறது. — (யோகீ₃ ந முஹ்யதி) யோகி₃ மயங்கமாட்டான்; உபாஸநத₃ஶையிலேயே இரண்டு க₃திகளையும் நன்கு அறிந்தவன், தாழ்ந்ததாய், பித்ருயாணமாகிற கறுத்த க₃தியிலிருந்து, சிறந்ததாய் தே₃வயாநமான வெளுத்த க₃தியைப் பிரித்தறிந்து, ப்ரயாணகாலத்தில் தனக்குரிய தே₃வயாநமாகிற அர்ச்சிராதி₃க₃தியில் மயங்காமல் செல்கிருன் என்று கருத்து. (ந முஹ்யதி) தலைசிறந்தவர்களின் உபசாரங்கள் நிறைந்த ஞானிக்குரிய அர்ச்சிராதி₃க₃திக்கு, தாழ்ந்தவர்களின் உபசாரங்களையுடைய ஐஶ்வர்யார்த்தி₂க்குரிய தூ₄மாதி₃க₃தியையும், ஒருபசாரமுமில்லாத ஜிஜ்ஞாஸுவுக்குரிய, நிர்மநுஷ்யமாய், விவரிக்க இயலாத க₃தியையுங்காட்டிலும் சிறப்பை அறிகையாலே, மயக்கம், வருத்தம் முதலானவற்றையடையாமல், ஸாத₄நத₃ஶையே தொடங்கித் தெளிவோடும் ஆநந்த₃த்தோடுமிருக்கிருன் என்று கருத்து. (ந முஹ்யதி) "தத்ப்ரகாஶித த்₃வார:" [ப்₃ரஹ்மஸூத்ரம் 4-2-16] என்கிறபடியே பரமாத்மாவான எனது அருளாலே மார்க்க₃த்தைப்பற்றிய தெளிவு உண்டாகையாலே, ப்ரயாணகாலத்திலும் மயங்கமாட்டான் என்றும் கருத்துரைக்கலாம். (தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ ப₄வ) ஆகையால் தினந்தோறும் அர்ச்சிராதி₃க₃தி சிந்தனமாகிற யோக₃த்தோடு கூடியவனாக ஆவாய், அர்ச்சிராதி₃க₃திஜ்ஞானத்திற்கு மயக்கமின்மையாகிற ப₂லனை உபதே₃ஶித்து, 'தஸ்மாத்' என்று அதை ஹேதுவாக எடுத்து, அதற்குப்பின் மோக்ஷஸாத₄னமாகிற

॥ भा ॥ अथाध्यायद्वयोदितशास्त्रार्थवेदनफलमाह —
वेदेषु यज्ञेषु तपस्सु चैव दाने च यत्पुण्यफलं प्रदिष्टम् ।
अत्येति तत्सर्वमिदं विदित्वा योगी परं स्थानमुपैति चाद्यम् ॥ २८ ॥
॥ इति श्रीमद्भगवद्गीतासूपनिषत्सु
अक्षरपरब्रह्मयोगो नाम अष्टमोऽध्यायः ॥ ८ ॥

28. வேதே3ஷு யஜ்ஞேஷு தபஸ்ஸு சைவ
தா3நே ச யத் புண்யப2லம் ப்ரதி3ஷ்டம் ।
அத்யேதி தத்ஸர்வமித3ம் விதி3த்வா
யோகீ3 பரம் ஸ்தா2நமுபைதி சாத்3யம் ॥
॥ இதி ஸ்ரீமத்3ப4க3வத்3கீ3தாஸூபநிஷத்ஸு
அக்ஷரபரப்3ரஹ்மயோகோ3 நாம அஷ்டமோऽத்4யாய: ॥

வேதே3ஷு—வேத3ங்களை ஓதுவதற்கும், யஜ்ஞேஷு—யஜ்ஞங்கள், தபஸ்ஸு ச—பலவகைப்பட்ட தவங்கள், தா3நே ச ஏவ—தா3னங்கள் ஆகியவற்றை அநுஷ்டி2ப்பதற்கும், யத் புண்யப2லம்-யாதொரு புண்யப2லம், ப்ரதி3ஷ்டம்-(ஶாஸ்த்ரங்களில்) சொல்லப்பட்டுள்ளதோ, தத் ஸர்வம்-அது அனைத்தையும், இத3ம் — இவ்விரு அத்தியாயங்களிலும் சொல்லப்பட்டதான, பரமபுருஷனான எனது இப்பெருமையை, விதி3த்வா—அறிந்து, அதனால், அத்யேதி—(அவ்வெல்லாப்புண்யப2லங்களையும்) கடந்து நிற்கிறான், யோகீ3—ப4க்தியோக3த்தைச் செய்பவன் (ஞானியாகவும் ஆகி), ஆத்3யம்—அநாதி3யானதாய், பரம்-மேலானதான, ஸ்தா2நம்-ஸ்ரீவைகுண்ட2லோகத்தை, உபைதி—அடைகிறான்.

யோக3த்தை விதி4ப்பது பொருந்தாததாகையால், ''யோக3ஸ் ஸந்நஹநோபாய த்4யாந ஸங்க3தி யுக்திஷு'' [அமரம் 3-3-22] என்று நிக4ண்டுவில் எடுக்கப்பட்ட பொருள்களில் இங்கு யோக3ஶப்3த3ம் ''த்4யாநம்'' என்னும் பொருளையுடையதாகக்கொண்டு, அந்த த்4யாநம் ப்ரகரணத்தையொட்டி, அர்ச்சிராதி3க3தியைச் சிந்திப்பதே என்று கொள்வதே பொருந்தும். (பார்த்த2 அர்ஜுந) ஞானியான என் அத்தையின் பிள்ளையாய், வெளுத்தவனான நீ ஞானிக்குரிய வெள்ளைவழியைச் சிந்திப்பதே பொருந்தும் என்று கருத்து. 27.

27. வேதத்தில் வேள்வியினின் மெய்த்தவத்திற் றுனத்தில்
ஓதும் பயனதனை யுற்றெழுந்து—மீதுபோய்
இந்த வறிவமரும் யோகிதான் மேன்முதலா
மந்த நிலமடையு மங்கு.

இந்த அறிவு அமரும் யோகிதான் — இவ்விரு அத்தியாயங்களிலும் சொல்லப்பட்ட என் பெருமையை அறியும் ஞானி, **வேதத்தில்**—வேத3ங்களை ஓதுவதற்கும், **வேள்வியினில்**—யஜ்ஞங்களை அநுஷ்டி2ப்பதற்கும், **மெய்த்தவத்தில்**—உண்மையான தவங்களை அநுஷ்டி2ப்தற்கும், **தானத்தில்**—தா3னம் செய்வதற்கும், **ஓதும் பயன் அதனை**—(ஶாஸ்த்ரங்களில்) ஓதப்படுகிற அப்பயன்களையெல்லாம், **உற்றெழுந்து மீது போய்**—அடைந்து, அதற்கும் மேலே போய், **அங்கு** — மறுமையில், **அந்த மேல் முதலாம் நிலம் அடையும்** — ஶாஸ்த்ர ப்ரஸித்3த4மாய், மேலானதாய், அநாதி3யானதான பரமபத3த்தை அடைவான்.

---

28. 7,8 அத்தியாயங்களாகிற இரு அத்தியாயங்களில் சொல்லப்பட்ட, ப்ராப்யமாய், ப்ராபகமாய், ஶேஷியாய், காரணமான பரமபுருஷனின் வைப4வத்தை அறிபவன்—எல்லா ஸாத4நாநுஷ்டா2நங்களையும் செய்தவர்கள் அடையும் ப2லனைக்காட்டிலும் சிறந்த ப2லனை இவ்விபூ4தியிலேயே பெறுபவனாய், மறுமையில் பரமபத3த்தையும் அடைகிறான் என்று, கீ3தாஶாஸ்த்ரத்தின் ஹ்ருத3யபா4க3மான இவ்விரு அத்தியாயங்களின் பொருளை அறிந்தவனுக்குப் ப2லன் கூறி எட்டாம் அத்தியாயத்தை நிறைவுபடுத்துகிறான் கீ3தாசார்யன். "யத் ஜ்ஞாத்வா நேஹ பூ4யோऽந்யத் ஜ்ஞாதவ்யம் அவஶிஷ்யதே" [கீ3தை 7-2] [எந்தப் பரமபுருஷனின் பெருமையை அறிந்தவனுக்கு, இவ்வுலகில் மறுபடியும் அறியவேண்டியது வேறு ஒன்றுமில்லையோ] என்று இந்த ப்ரகரணத்தின் தொடக்கத்தில் கூறியதை விவரித்ததாயிற்று. (வேதே3ஷு)என்று தொடங்கி ஏழாவதுவேற்றுமையுடைய நாலு ஶப்3த3ங்களில் ஒவ்வொன்றும் "யத் புண்யப2லம் ப்ரதி3ஷ்டம்" [யாதொரு புண்யப2லம் (ஶாஸ்த்ரங்களில்) சொல்லப்பட்டுள்ளதோ] என்னும் மேல் பகுதியோடு அந்வயிக்கிறது. அப்படிக்கொள்ளாமல் "வேதே3ஷு ப்ரதி3ஷ்டம்" [வேத3ங்களில் சொல்லப்பட்டதோ] என்று அந்வயித்தால், தூ3ராந்வயமும் வைரூப்யமும் வரும். "ப்ரதி3ஷ்டம்" [சொல்லப்பட்டதோ] என்

॥ भा ॥ ऋग्यजुस्सामाथर्वरूपवेदाभ्यासयज्ञतपोदानप्रभृतिषु सर्वेषु पुण्येषु यत्फलं निर्दिष्टम्, इदम् — अध्यायद्वयोदितं भगवन्माहात्म्यं

ருலே ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டது என்பது எளிதில் கிடைக்குமாகையாலும், "வேதே3ஷு" என்றதை மற்ற மூன்று ஶப்3த3ங்களோடு ஏகரூபமாகக்கொண்டு, "ருக் முதலான நாலுவேத3ங்களை அத்4யயந பாராயணங்கள் செய்வதினாலும் யஜ்ஞ தபோ தா3நங்களை முறைப்படி அநுஷ்டி2ப்பதாலும் (ஶாஸ்த்ரங்களில்) யாதொரு ப2லன் கூறப்படுகிறதோ" எனக்கொள்வதே பொருந்தும். ஔசித்யத்தைக் கருதி வேத3ஶப்3த3ம் வேத3மோதுதலையும், யஜ்ஞ தபோ தா3நஶப்3த3ங்கள் அவற்றின் அநுஷ்டா2னத்தையும் குறிக்கின்றன. "வேத3ங்களிலே எத்தனை புண்யப2லன்கள் சொல்லப்பட்டுள்ளனவோ அவையும், யஜ்ஞ தபோ தா3னங்களின் அநுஷ்டா2னத்திற்குச் சொல்லப்பட்டுள்ள ப2லன்களையும்" என்று பொருள் கொள்ளலாகாதோ? எனில்: அப்போது யஜ்ஞ தபோ தா3நங்களின் ப2லமும் வேத3த்தில் சொல்லப்பட்டதேயாகையால், "வேதே3ஷு" என்றவிடத்தில் அவையொழிந்த மற்றவை சொல்லப்படுகிறது என்று கொள்ளவேண்டும். "இத3ம் விதி3த்வா" என்று இந்த ஶ்லோகத்தின் உத்தரார்த்த4த்தில் இந்த இரு அத்4யாயங்களில் சொன்ன அர்த்த2ங்களின் ஜ்ஞாநப2லமும் வேத3ார்த்த2மேயாகையால், "வேதே3ஷு" என்று அது தவிர்ந்த மற்றவை சொல்லப்படுகிறது என்று கொள்ளவேண்டும் இந்த அஸ்வாரஸ்யங்களெல்லாம் இல்லாதபடி "வேத3மோதுவதற்கு யாதொரு ப2லன் சொல்லப்படுகிறதோ" என்று "வேதே3ஷு" என்ற ஶப்3த3த்திற்குப் பொருள்கொள்வதே உசிதம். வேத3மோதுவதால் பாபங்கள் நீங்குகின்றன என்றும், விருப்பங்கள் நிறைவேறுகின்றன என்றும் ஶாஸ்த்ரங்களில் ப2லன் சொல்லப்பட்டிருப்பதும் ப்ரஸித்3த4ம். இங்கு வேத3ாப்4யாஸம், யஜ்ஞதபோதா3நாநுஷ்டா2னம் ஆகிய நாலு புண்யங்களின் ப2லன்களைச் சொன்னது—ஶாஸ்த்ரங்களில் ஒரு ப2லனை உத்3தே3ஶித்து விதி4க்கப்படும் எல்லாப் புண்யங்களின் ப2லன்களுக்கும் உபலக்ஷணம். (இத3ம் விதி3த்வா தத் ஸர்வம் அத்யேதி) இந்த இரு அத்4யாயங்களில் சொன்ன ப4க3வானின் பெருமையை உள்ளபடி அறிந்தால் அந்த எல்லாப்புண்யப2லன்களையும் விஞ்சிநிற்கும் ப2லனை இம்மையிலேயே பெறுகிறான். 'இத3ம் விதி3த்வா' என்று பொதுவாகச்சொல்லி, க3திமுதலானவற்றை அறிவதைக் குறிப்பிட்டு எடுக்காமையால், ஒரே ப்ரகரணமான இவ்விரு அத்தியாயங்களில் சொல்லப்பட்டதான, 'எம்பெருமானே ப்ராப்யமாய், ப்ராபகமாய், காரணமாய், ஶேஷியாய், ஜ்ஞாநிக்கு தா4ரகபோஷகபோ4க்3யங்கள் முதலான எல்லாமாயிருப்பவன்' என்னும் ப4க3வத்3வைப4வத்தை அறிவதே இங்கு சொல்லப்படுகிறது என்று கொள்ளவேண்டும்.

विदित्वा तत्सर्वमत्येति — एतद्वेदनसुखातिरेकेण तत्सर्वं तृणवन्मन्यते । योगी ज्ञानी च भूत्वा ज्ञानिनः प्राप्यं परमाद्यं स्थानमुपैति ॥ २८ ॥

॥ इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीमद्गीताभाष्ये अष्टमोऽध्यायः ॥ ८ ॥

கீ3தையின் ஏழாம் அத்தியாயத்தின் தொடக்கத்திலுள்ள பனிரண்டு ஶ்லோகங்களே ப4க3வானுடைய பெருமையைச் சொல்லுவதானாலும், மேலே 7, 8 அத்தியாயம் முடிய அதை விவரிக்க வந்ததேயாகையால், இவ்விரு அத்தியாயங்களிலும் பரமபுருஷவைப4வமே சொல்லப்பட்டது என்னக்குறையில்லை. (இத3ம் விதி3த்வைவ தத் ஸர்வம் அத்யேதி, இந்த ப4க3வத்3வைப4வத்தை அறிவதாலேயே எல்லா ஸாத4நாநுஷ்டா2னங்களின் ப2லனைக்காட்டிலும் அதி4கமான ப2லனைப்பெறுகிறான். அதாவது— எம்பெருமானையே ப்ராப்யமாகவும், ப்ராபகமாகவும், மற்றெல்லாமாகவும் அறிந்தவனுக்கு, அந்த ஜ்ஞானமே பரமப்ராப்யமாகையாலும், அந்த ஜ்ஞானமுடையவனுக்கு எம்பெருமான்தானே ஒரு ஸாத4நாநுஷ்டா2னத்தை எதிர்பாராமல் பரமபுருஷார்த்த2 லக்ஷண மோக்ஷத்தைத் தன் பேறாக அருளுவானாகையாலும், ஸாத4நாநுஷ்டா2ன ப2லன்களையெல்லாம் இவனடையும் ப2லன் விஞ்சிநிற்கிறது என்று கருத்து. இந்த ஜ்ஞானமுடைய மஹாத்மாக்கள் "பா4வோ நாந்யத்ர க3ச்ச2தி" [ரா-உத் 40-16] [என் நினைவு பரமபத3த்திற்கும் செல்கின்றதில்லை.] "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மை தேவபிரான் அறியும்" [திருவாய் 7-10-10] "இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்" [திருமாலை 2] என்று "பரமபத3த்திற்சென்று அடையும் ஸுக2த்தைக் காட்டிலும் இங்கு அடையும் ஸுக2மே விஞ்சிநிற்கிறது" என்று அருளிச்செய்தார்களன்றோ. இப்படி பரமபத3த்தையே ஒன்றாக நினையாதவர்கள் முற்கூறிய வேதா3ப்4யாஸயஜ்ஞதபோதா3நநாநுஷ்டா2னங்களின் ப2லன்களைப் புல்லென மதிப்பார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? இந்த ஶ்லோகத்தின் பூர்வார்த்த4த்திலுள்ள ஏவகாரத்தை உத்தரார்த்த4த்திலுள்ள 'விதி3த்வா' என்றதோடு கூட்டிப் பொருள் கொள்ளும்போது, இந்த ஜ்ஞானமுடையவனுக்கு ஸாத4நாநுஷ்டா2னங்கள் எதையும் செய்யத் தேவையில்லை என்று உணர்த்தப் படுகிறது. பூர்வார்த்த4த்திலுள்ள இரண்டு சகாரங்களில் ஒன்று உக்த ஸமுச்சயமாய், அங்குள்ள வேதா3ப்4யாஸ யஜ்ஞ தபோ தா3நநாநுஷ்டா2னங்களை ஸமுச்சயிக்கிறது(கூட்டுகிறது). மற்றொரு சகாரம் அநுக்த ஸமுச்சயமாய், ஜ்ஞானயோக3ம், ப4க்தியோக3ம் முதலான உபாயாந்த

ரங்கள் அனைத்தையும் கூட்டுகிறது ஆக, எம்பெருமானைப் பற்றிய உண்மையறிவை உடையவனுக்கு யஜ்ஞம் முதலான மற்ற எதையும் உபாயமாக அநுஷ்டிக்கத் தேவையில்லை என்றதாகிறது. ''ஸர்வே வேதா3: ஸர்வ வித்3யா: ஸாஸ்த்ரா: ஸர்வே யஜ்ஞா: ஸர்வ இஜ்யாஸ்ச க்ருஷ்ண:| விது3: க்ருஷ்ணம் ப்3ராஹ்மணாஸ் தத்த்வதோ யே தேஷாம் ராஜந்! ஸர்வயஜ்ஞா: ஸமாப்தா: ||'' [எல்லா வேதங்களும், (வேதத்தில் சொல்லப்பட்ட) எல்லா வித்யைகளும், (வேதத்தை விவரிக்கும்) மற்ற ஶாஸ்த்ரங்களும், (வேதத்தில் விதிக்கப்பட்ட) எல்லா யஜ்ஞங்களும், (அந்த யஜ்ஞங்களால் ஆராதிக்கப்படும்) எல்லா தேவதைகளும் கண்ணனுக்கு அதீனமே. எந்த அந்தணர்கள் இப்படிக் கண்ணனை ஸர்வநிர்வாஹகன் என்று உள்ளபடி அறிகிறார்களோ, அவர்களுக்கு எல்லா யஜ்ஞங்களும் செய்து முடிக்கப்பட்டவையாகின்றன.] என்று மஹாபாரதத்தில் மற்றோரிடத்திலும் சொல்லப்பட்டதன்றோ. இவர்களை ''செய்தவேள்வியர் வையத்தேவர்'' [திருவாய் 5-7-5] என்றாரன்றோ நம்மாழ்வாரும். அப்படி இவ்வுலகில் இவன் அநுப4விக்கும் ஸுக2மே தலைசிறந்ததாகில், இவன் பரமபத3த்தை அடைவதில்லையோ? எனில்: (யோகீ3 பரம் ஸ்தா2நம் உபைதி சாத்3யம்) யோகீ3 பரம் ஆத்3யம் ஸ்தா2நம் உபைதி ச என்று அந்வயம். முற்கூறிய ப4க3வத்3வைப4வத்தை உள்ளபடி உணர்ந்த ப4க்தியோக3 நிஷ்ட2ன் கீ3தை (7-19ல்) சொல்லப்பட்ட மஹாத்மாவான ஜ்ஞாநியாகி, அத்தகைய ஜ்ஞாநிகளுக்கு ப்ராப்யமாய், மேலானதாய், அநாதி3யானதான பரமபத3த்தையும் அடைகிறான். ''உபைதி'' எனும் பரஸ்மைபத3ம் இவன் பரமபத3த்தை அடைவது எம்பெருமானுடைய ஆனந்த3த்துக்கேயொழியத் தன் ஆனந்த3த்துக்காகவல்ல என்று காட்டுகிறது. அவன் பரமபத3த்தை ஒருபொருளாக மதிக்காவிடினும், கிடைத்தற்கரிய மஹாத்மாவான அவன் எனக்குப் பெரும்பேறாயிருப்பவனாகையாலே, அவனை இந்த ஜன்மத்தின் முடிவிலேயே பரமபத3த்திற்கு அழைத்துச் சென்று நான் பேரானந்த3த்தை அடைகிறேன் என்று கருத்து. ''ப3ஹூநாம் ஜந்மநாம் அந்தே ஜ்ஞாநவாந்'' [கீ3தை 7-19] என்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட ஜ்ஞாநியாகப் பரிபக்குவமடைந்த உபாஸகனாகிற யோகி3க்கு அப்போதே உபாஸநம் நிறைவடைந்து இம்மையிலும், மறுமையிலும் தலைசிறந்த ப2லனைப் பெற்றுவிடுகிறான் என்று கருத்து. இக்கருத்திலேயே கீ3தாபா4ஷ்யத்தில் ''யோகீ3 ஜ்ஞாநீ ச பூ4த்வா ஜ்ஞாநிந: ப்ராப்யம் ஸ்தா2நமுபைதி'' என்று அருளிச்செய்யப்பட்டது. (பரம் ஸ்தா2நம்) ''ஆதி3த்ய வர்ணம் தமஸ: பரஸ்தாத்'' [பு-ஸூ 2-2; ஶ்வே 3-8] [தமோ கு3ணத்தை உடையதாகையாலே தமஸ் எனப்படும் மூல ப்ரக்ருதிக்கு அப்பாற்

பகவத்கீதை வெண்பா

(எட்டாம் அத்தியாயத்தின் ஸாரத்தைக் கூறும் பாசுரம்)

இவ்வாறு மாய னெழிற்கீதை யெட்டாமோத்
தவ்வா றருளி யமைபொருள்கள்—செவ்வாரு
ஞானத் தமர்ந்து நலஞ்சிறந்த நன்மைசேர்
மானப் படமுடிந்த வாய்த்து.

வாதிகேஸரி ஜீயர் அருளிய பகவத்கீதை வெண்பாவில்
எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

பட்டிருப்பவனாய், ஸூர்யன் போல் ஒளி விஞ்சிநிற்பவன் பரமபுருஷன்.] "க்ஷயந்தம் அஸ்ய ரஜஸ: பராகே" [ருக்-அஷ்டகம்-5-6-24-12] [ரஜோகுணம் உடையதாகையாலே ரஜஸ் எனப்படும் மூல ப்ரக்ருதிக்கு அப்பாற்பட்ட பரமபதத்தில் வாழ்பவன்] "ததக்ஷரே பரமே வ்யோமந்" [தை-நா 6-1] [அந்தப் பரம்பொருள் அழியாததாய் பரமாகாசம் எனப்படும் பரமபதத்தில் உள்ளது.] "ஹிரண்மயே பரே லோகே விரஜம் ப்ரஹ்ம" [முண்டக 2-2-10] [பொன்மயமான (சுத்த ஸத்வ மயமான) மேலான உலகத்தில் குற்றமற்ற ப்ரஹ்மம் எழுந்தருளியிருக்கிறது.] முதலான வேதவாக்யங்களிலும், "திவ்யம் ஸ்தாநம் அஜரம் சாப்ரமேயம்" [பாரத-மௌஸல 5-27] [அழிவற்றதாய், அளவிடவொண்ணாததான அப்ராக்ருதமான ஸ்தானத்தை] "ஏதே வை நிரயாஸ்தாத! ஸ்தாநஸ்ய பரமாத்மந:" [பாரத - சாந்தி 196-31] [பரமாத்மாவின் ஸ்தானத்துக்கு ஒப்பிட்டால் மற்ற உலகங்களெல்லாம் நரகத்தை ஒக்கும்] முதலான உபப்ருஹ்மணங்களிலும் சொல்லப்பட்டபடியே, அழிவில்லாததாயிருக்கையாலே காலத்தாலும், அளவற்றதாயிருக்கையாலே தேசத்தாலும், சுத்த ஸத்வமாயிருக்கையாலே வஸ்துவாலும் மேலானதாயிருக்கும் ஸ்தானம் என்றபடி. (ஆத்யம் ஸ்தாநம்) அநாதியான ஸ்தானம். "ஆத்யம் - ஆதௌ பவம் காரணம் ப்ரஹ்ம இத்யர்த்த:" [ஆத்யம்-ஆதியிலிருக்கும் காரணமான ப்ரஹ்மம் என்று பொருள்.] என்று சங்கரர் வ்யாக்யானம் செய்தார். 'ஆத்ய' சப்தம் 'ஸ்தாந' சப்தத்துக்கு விசேஷணமாயிருக்கையாலே இது பொருந்தாது. ஆக, 7, 8 அத்தியாயங்களின் அர்த்தத்தை உள்ளபடி அறிந்தவன் அடையும் பலன் சொல்லப்பட்டதாயிற்று. 28.

ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி தாஸன் இயற்றிய
கீதார்த்த விவரணத்தில் எட்டாமத்தியாயம் நிறைவு பெற்றது.

இவ்வாறு — இவ்விதமாக, மாயன் — கண்ணனுடைய, எழில் கீதை—அழகிய கீதையின், எட்டாம் ஓத்து — எட்டாம் அத்தியாயத்தில், அவ்வாறு அருளி — முன் பாசுரங்களில் சொல்லியபடி ஐஶ்வர்யார்த்தி, கைவல்யார்த்தி, ஜ்ஞாநி ஆகியவர்களைப் பற்றிய விஷயங்களையெல்லாம் அருளி, அமை பொருள்கள் — பொருந்தி நிற்கும் அர்த்தங்கள், செவ்வாறு—செம்மையான வழியிலே, நலம் சிறந்த—சிறந்த பயன்களைப் பெற்றுத் தரும் ஞானத்து அமர்ந்து—(எம்பெருமானுடைய வைபவத்தைப் பற்றிய) அறிவிலே முடிவடைந்து, நன்மை சேர் மானப்பட—சிறப்புடைய ப்ரமாணங்களையொட்டியதாய், வாய்த்து—பொருத்தமாக, மூழ்ந்த—முடிவுற்றன.

கீதார்த்த சங்க்ரகம்

(ஸ்ரீவேதாந்த தேசிகர்)

எட்டாம் அத்தியாயத்தின் ஸாரப்பொருள்

8. ஆராத செல்வமு மாருயிர் காணு மரும்பயனும்
பேராது தன்கழற் கீழம ருப்பெரு வாழ்ச்சிகளுஞ்
சோரா துகந்தவர் தூமதி கொள்வதுஞ் செய்வனவுந்
தேரா விசயனுக் குத்திரு நாரணன் செப்பினனே.

திருநாரணன்—ஸ்ரீமந் நாராயணன் ஆகிய கண்ணன், தேரா விசயனுக்கு—தெளிவுபெறாத அர்ஜுநனுக்கு, ஆராத—(மேன்மேலே ஆசையை விளைக்கையாலே) போதுமென்று தோன்றாத, செல்வமும்— ஐஶ்வர்யத்தையும், ஆர் உயிர் காணும்—அருமையான ஜீவனைக் கண்டு அநுபவிப்பதாகிய, அரும் பயனும் — அருமையான (கைவல்யப்) பலனையும், தன் கழல் கீழ் — (ஸர்வேஶ்வரனாகிய) தன் திருவடியின் கீழ், பேராது அமரும் — பிரியாது தங்குதலாகிய, பெரு வாழ்ச்சிகளும்—பெரிய வாழ்வுகளையும், சோராது—குறைவுபடாது (பெறவேண்டுமென்று), உகந்தவர் — விரும்பிய அதிகாரிகள், தூ மதி கொள்வதும் — பரிஶுத்தமான (தம்) மனத்தால் அறியவேண்டியவையும், செய்வனவும்—அநுஷ்டிக்கவேண்டியவையும் (ஆகிய இவற்றை) செப்பினன்— உபதேஶித்தான்.

கீதார்த்தஸங்க்ரஹம்: ஸ்லோகார்த்தச் சுருக்கம்

எட்டாமத்தியாயம்

ஸ்லோ. அர்த்தம்

1-2. (1) கைவல்யார்த்திகள் அறியவேண்டிய ப்ரஹ்ம, அத்யாத்மம், கர்ம என்பவை யாவை? (2) ஐஸ்வர்யார்த்திகள் அறியவேண்டிய அதிபூதம், அதிதைவம் என்பவை யாவை? (3) மூவகை அதிகாரிகளும் அறியவேண்டிய அதியஜ்ஞும் என்பது யாது? அதற்கு அதியஜ்ஞுத்தன்மை எப்படி வந்தது? (4) மூவருக்கும் அந்திமஸ்ம்ருதி எத்தகையது?—என்று அர்ஜுனனின் கேள்விகள்.

3. முதல் கேள்விக்குக் கண்ணனின் பதில்.

4. முற்பாதியால் இரண்டாவது கேள்விக்கும், பிற்பாதியால் மூன்றாவது கேள்விக்கும் கண்ணனின் பதில்.

5. அந்திமஸ்ம்ருதி பற்றிய நாலாவது கேள்விக்குக் கண்ணனின் சுருக்கமான பதில்—'ஈஸ்வரன் விஷயமான அந்திமஸ்ம்ருதி அவரவர் விரும்பும் வகையில் ஈஸ்வரனோடு ஸாம்யத்தை விளைக்கும்' என்று.

6. இது ஈஸ்வரவிஷயத்தில் மட்டுமல்ல. கடைசிக்காலத்தில் எந்த விஷயத்தை மனிதன் நினைத்தாலும் அந்நினைவுதானே அடுத்த பிறப்பில் அவ்விஷயம்போன்ற ஒரு நிலையை அவனுக்கு விளைத்துவிடும்.

7. ஆகையால் அர்ஜுனன் எப்போதும் தன்னைப்பற்றிய நினைவையும், அதை விளைக்கும் க்ஷத்ரிய தர்மமான யுத்தத்தையும் செய்யவேண்டும் என்று கண்ணன் நாலாவது கேள்விக்கு விளக்கமான பதில் கூறுகிறான்.

8-14. அவரவர்க்குரிய அந்திமஸ்ம்ருதி ஏற்படுவதற்குறுப்பான உபாஸனபேதம்.

8-10. ஐஸ்வர்யார்த்திக்குரிய உபாஸனமுறையும், அதையொட்டி ஏற்படும் அந்திமஸ்ம்ருதியும்.

11-13. கைவல்யார்த்திக்குரிய உபாஸனமுறையும், அதையொட்டி ஏற்படும் அந்திமஸ்ம்ருதியும்.

14. ஜ்ஞாநி பகவானை உபாஸிக்கும் முறையும், அடையும் முறையும்.

15-28. ஜ்ஞாநிக்கும், கைவல்யார்த்திக்கும் இந்த ஸம்ஸாரமண்டலத்திற்குத் திரும்பி வராமையை உடைய அழிவற்ற பலன்.

ஐஶ்வர்யார்த்தி₂க்குக் கர்மபூ₄மிக்கே திரும்பிவரும் அழிவுள்ள ப₂லன்.

15. ஜ்ஞாநியடையும் ப₂லனான ப₄க₃வத₃நுப₄வம் நித்யமானது.

16. தன்னை ப்ராப்யமாயடைந்தவர்களுக்குக் கிடைக்கும் ப₂லன் நித்யமாயிருப்பதற்கும், ஐஶ்வர்யார்த்தி₂யின் ப₂லன் அநித்யமாயிருப்பதற்கும் காரணம்.

17-19. ப்₃ரஹ்மலோகம் ஈருகவுள்ள உலகங்களுக்கும், அவற்றினுள்ளிருப்பவர்களுக்கும் உத்பத்தி விநாஶங்களின் கால வரம்பு இருக்கையாலே ஐஶ்வர்யம் அநித்யமே.

20-21. கைவல்யாநுப₄வத்திற்கும் அழிவு இல்லாமையால், அதிலிருந்து மற்றொரு அநுப₄வத்தை அடைவதாகிற புநராவ்ருத்தி இல்லை.

22. கைவல்யத்தை அடைந்தவனுக்கு ப்₃ரஹ்மாநுப₄வம் என்றுமே கிடையாதாகையால், கேவலாத்மாநுப₄வமாகிற அவனுடைய அநுப₄வத்தைக் காட்டிலும், பரிபூர்ணப்₃ரஹ்மாநுப₄வமாகிற ஜ்ஞாநியினுடைய அநுப₄வம் மிகவும் வேறுபட்டது.

23-24. பரமபுருஷநிஷ்ட₂னும், ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிக்கும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுமான இருவகையான ஜ்ஞாநிகள் ப்₃ரஹ்மத்தை அடைவதற்கு வழியான அர்ச்சிராதி₃க₃தியின் விவரணம். (கைவல்யவிஷயத்தில் ஏற்பட்ட பலவிதமான குழப்பங்களை 'கைவல்ய ஸித்₃த₄ாஞ்ஜனம்' என்னும் க்₃ரந்த₂த்தின் மூலம் நீக்கவேண்டி வந்துவிட்டதால், இவ்விரு ஶ்லோகங்களுக்கும் வ்யாக்₂யானம் 117பக்கங்களாக நீண்டுவிட்டது.)

25. புண்ணியம்செய்த ஐஶ்வர்யார்த்தி₂கள் ஸ்வர்க்க₃ம் முதலான புண்ணிய லோகங்களுக்குச் செல்லும் வழியான தூ₄மாதி₃ மார்க்க₃த்தின் விவரணம்.

26. முற்கூறிய இரண்டு க₃திகளும் ஶ்ருதி ப்ரஸித்₃த₄மானவை. அர்ச்சிராதி₃க₃தியால் செல்பவன் திரும்பி வருதலில்லாத ப₄க₃வத₃நுப₄வத்தை அடைகிறான். தூ₄மாதி₃க₃தியால் செல்பவன் கர்மபூ₄மிக்கே திரும்பிவருகிறான்.

27. அர்ச்சிராதி₃க₃தி சிந்தனம் தினந்தோறும் ஜ்ஞாநியால் செய்யப்படவேண்டும்.

28. ஏழு, எட்டு அத்தியாயங்களாகிற இரு அத்தியாயங்களில் சொல்லப்பட்ட—ப்ராப்யமாய், ப்ராபகமாய், ஶேஷியாய்,

காரணமாய். ஜ்ஞாநிக்கு த₄ாரக போஷக போ₄க்₃யமா யிருக்கும் கண்ணனின் பெருமையை அறிபவன் எல்லா ஸாத₄நாநுஷ்டா₂னங்களைச் செய்தவர்கள் அடையும் ப₂லனைக் காட்டிலும் சிறந்த ப₂லனை இவ்விபூ₄தியிலேயே பெற்று. மறுமையில் பரமபத₃த்தையும் அடைகிருன்—என்னும் அத்₄யாய த்₃வயார்த்த₂ சிந்தன ப₂லஶ்ருதி.

திவ்யப்ரப₃ந்த₄ வ்யாக்₂யாதாக்களின் திருவுள்ளத்தை அடியொற்றிய நமது கீ₃தா வ்யாக்₂யானத்திற்கும், ஸ்ரீதே₃ஶிகன் அருளிய தாத்பர்ய சந்த்₃ரிகைக்கும், ஏழு, எட்டு அத்தியாயங்களில் உள்ள அர்த்த₂ பே₄த₃ங்கள்.

(1) 7-3 கீ₃தா வ்யாக்₂யானம்:-

கைவல்ய மோக்ஷஸித்₃தி₄யின் பொருட்டுக் கடைசிவரை முயல்ப வன் ஆயிரத்தில் ஒருவன்; அவர்களிலும் ஆயிரத்தில் ஒருவன் பரம புருஷனையே முக்தியில் ப்ராப்யமாய் அறிந்து, ப₄க்தி முதலான தன் முயற்சிகளான மற்ற உபாயங்களை அவனை அடையப் ப₂லகரண ஸாத₄னமாகக்கொண்டு அனுஷ்டி₂ப்பவன். அவர்களிலும் ஆயிரத் தில் ஒருவனே அவனை ப்ராபகமாகவும் அறிபவன். இத்தகையவன் பரமபுருஷனைப் பெறுவதன் பொருட்டு அவனையே உபாயமாக (ப₂ல கரண ஸாத₄னமாக)க் கொள்வானேயொழிய, தன் முயற்சியான கர்ம, ஜ்ஞான, ப₄க்தியோக₃ங்கள் முதலானவற்றை உபாயமாகக் கொள்ளமாட்டான்.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

மற்ற தெய்வங்களிடமிருந்து ஐஶ்வர்ய ஸித்₃தி₄யின் பொருட்டுக் கடைசிவரை முயல்பவன் ஆயிரத்தில் ஒருவன். அவர்களிலும் ஆயிரத்தில் ஒருவன் பரமபுருஷனை ஐஶ்வர்யம் அல்லது கைவல்யத் திற்கு ஸாத₄னமாகக் கொண்டு அதைப் பெறுபவன். அவர்களிலும் ஆயிரத்தில் ஒருவனே அவனையே ப்ராப்யமாகவும் அறிபவன். இவன் தன் முயற்சியான ப₄க்தியையோ, ப்ரபத்தியையோ ப₂லகரண ஸாத₄னமாகக்கொண்டு மோக்ஷத்தில் எம்பெருமானை அடைகிருன்.

(2) 7-4 to 12 கீ₃தா வ்யாக்₂யானம்:-

சேதனன் அசேதனத்தைப்போலே எம்பெருமானுக்குப் பரதந்த்ர னுகையாலே அவன் தன் முயற்சியில் ஈடுபடுவது தகாது. எம் பெருமான் அனைத்துக்கும் காரணமாகவும் ஶேஷியாகவும் இருப்பவ னுகையாலே சேதனனை எம்பெருமானே ரக்ஷிக்கவேண்டும்; சேதனன் தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்ள முயல்வது தகாது. ஜ்ஞானம், ஶக்தி முதலான கல்யாணகு₃ணங்களால் ஜீவர்களைக்காட்டிலும் மிக

உயர்ந்தவனுகப் பரமபுருஷன் இருப்பதால். ஜீவனுக்கு அவனே ரக்ஷகன்; ஜீவன் தனக்குத் தான் ரக்ஷகனல்லன். அசேதனத்தைப் போலே ஜீவனுக்கும் எம்பெருமான் ஶரீரியாயிருக்கையாலே அவனே ஜீவனுக்கு ரக்ஷகன்; ஶரீரமான ஜீவன் தன்னைத்தானே ரக்ஷித்துக் கொள்ள முயல்வது தகாது. இக்காரணங்களாலே, எம்பெருமானே ஜீவனுக்கு இயற்கையான ப்ராப்ய ப்ராபகங்களாயிருப்பவன். மற்ற பொருள்களில் ப்ராப்யத்வத்திற்கும், ப்ராபகத்வத்திற்கும் உறுப்பாக வுள்ள சிறந்த பெருமைகள் பரமபுருஷ ஸங்கல்பத்தால் செயற்கை யாக வருபவையாகையாலே, அவற்றை ப்ராப்யப்ராபகங்களாக அறிவது மயக்கமேயாகும். இந்த ஜ்ஞானமுடையவனுக்கு ஐஶ்வர்ய கைவல்யங்களாகிற மற்ற ப்ராப்யங்களும், கர்ம ஜ்ஞாந ப4க்தி யோக3ங்கள் முதலான மற்ற உபாயங்களும் கைவிடத்தக்கவையே. இக்கருத்தாலேயே இரண்டாவது ஶ்லோகத்தில் "இவ்வறிவைப் பூர்ணமாகப் பெற்றுல் அறியவேண்டியது வேறொன்றும் இல்லை" என்று சொல்லப்பட்டது. ஐஶ்வர்ய கைவல்யங்களாகிற மற்ற பயன்களை ப்ராப்யமாகவோ, ப4க3வத3நுப4வமாகிற சிறந்த ப்ராப்யத்தைத் தனக்கென்றே நினைப்பவர்களைத் திருத்தும் பொருட்டு, அந்தந்த அதி4காரிகளுக்கு ஶேஷத்வாநுஸந்த4ானம், த்ரிவித4பரித்யாக3ங்கள், தி3வ்யமங்க3ளவிக்3ரஹ சிந்தனம் முதலானவற்றேடுகூடிய உபாயாந்தரங்கள் விதி4க்கப்படுகின்றன. இத்தகைய ப4க்தியோக3நிஷ்ட2னுக்கு ப4க3வத3நுப4வத்தில் சுயநலமனப்பான்மை நீங்குவதற்காகப் பரமபுருஷனைப்பற்றிய இந்த உண்மையறிவு ப4க்திக்கு அங்க3மாக விதி4க்கப்படுகிறது.

தாத்பர்ய சந்த்3ரிகை:-

இந்த ஷட்கத்தில் விதி4க்கப்படும் ப4க்தியோக3த்துக்கு அங்க3மான பரமபுருஷ யாதா2த்ம்ய ஜ்ஞானம் இந்த ஶ்லோகங்களில் விவரிக்கப்படுகிறது.

(3) 7-13,14 கீ3தா வ்யாக்2யானம்:-

முற்கூறிய பரிபூர்ண ஜ்ஞானமுடையவனுக்குப் பரமபுருஷனையே உபாயமாகக் கொள்ளுவதாகிற முக்2யப்ரபத்தியால் ப்ரக்ருதி ஸம்ப3ந்த4ம் நீங்குகிறது. பரிபூர்ண ஜ்ஞாநமில்லாமல் உபாயாந்தரங்களில் கைவைப்பவனைத் திருத்துவதற்காக ஶரணாக3தி, கர்மஜ்ஞாந ப4க்திகளுக்கு அங்க3மாக விதி4க்கப்படுகிறது. கடைசிவரையில் உபாயாந்தர நிஷ்ட2ர்களாகவேயிருப்பவர்களுக்கு, அவ்வுபாயாந்தரங்களுக்கு அங்க3மாகவே இருந்துகொண்டு ஶரணாக3தி ப்ரக்ருதி ஸம்ப3ந்த4ம் நீங்குவதற்குக் காரணமாகிறது.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

இங்கு ப்ரக்ருதி ஸம்ப₃ந்த₄ம் நீங்குவதற்குப் பரம்பரயா காரண மான அங்க₃ப்ரபத்தியே விதி₄க்கப்படுகிறது.

(4) 7-16 கீ₃தா வ்யாக்₂யானம்:-

இங்கு பா₄ஷ்யத்தில் 'ஜிஜ்ஞாஸு' பத₃த்தை விளக்கும்போது "ப்ரக்ருதியினின்றும் நீங்கிய ஆத்மஸ்வரூபத்தை அடைய விரும்பு மவனே ஜிஜ்ஞாஸு" என்றும், 'ஜ்ஞாநி' பத₃த்தை விளக்கும் போது "(ஜிஜ்ஞாஸுவைப் போலே) ப்ரக்ருதியினின்றும் நீங்கிய கேவலாத்மாவைப் பெறுவதோடு முடிந்துவிடாமல் எம்பெருமானை அடைபவன் ஜ்ஞாநி" என்றும் விளக்கியிருக்கையால், "கைவல்யம் ப்ரக்ருதியினின்றும் முழுவதும் நீங்கிய முக்தியே" என்றும், "கைவல்ய நிஷ்ட₂னுக்கு ப₄க₃வத₃நுப₄வம் கிடையாது" என்றும், "ப₄க₃வத₃ நுப₄வம் உடையவன் என்று ஶ்ருதி ஸூத்ர பா₄ஷ்யங்களில் ப்ர ஸித்₃தி₄ பெற்றவனை பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யநிஷ்ட₂ னாக முடியாது" என்றும் விளங்குகிறது. "எல்லாக் கர்மங்களும் நீங்கிய பிறகு முக்தியில் எப்படி பே₄த₃ம் பொருந்தும்? என்னும் கேள்விக்கு, "அவனவன் விருப்பத்தில் வேறுபாட்டாலே பொருந்தும்" என்னும் பதிலை இந்த ஶ்லோகத்தின் பா₄ஷ்யத்தில் "ப்ரதிபத்தி வைஶேஷ்யாத்" என்னும் பத₃த்தாலே பா₄ஷ்யகாரர் உணர்த்தினர்.

தாத்பர்ய சந்த்₃ரிகை

இங்கு ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்யநிஷ்ட₂னை 'ப்ரக்ருதியினின் றும் நீங்கின ஆத்ம ஸ்வரூபத்தை அடையவிரும்புகிறவன்' என்று லக்ஷணம் உரைத்திருக்கையால், இவன் முக்தன் என்று விளங்கு கையாலும், மேலே கைவல்யார்த்தி₂யைப் பற்றி வரும் ஶ்லோக பா₄ஷ்யங்களில் இது வலியுறுத்தப்படுகையாலும் இவன் முக்தியடை பவனே என விளங்குகிறது. ஆனாலும், எல்லாக்கர்மங்களும் நீங்கிய பின்பு முக்தியில் பே₄த₃ம் இருக்க ந்யாயமில்லையாகையால், இங்கு சொல்லப்படும் ஜிஜ்ஞாஸு ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை உபாஸிப்பவனாய், ப்₃ரஹ்மாநுப₄வத்தை அடைபவனாக ஶ்ருதிஸூத்ர பா₄ஷ்யங்களில் ப்ரஸித்₃தி₄பெற்ற பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னே என்று கொண்டு, அவன் ப்ரக்ருதி மண்ட₃லத்துக்குள் இருந்துகொண்டு கேவலாத்மாவை அநுப₄விக்கும் கைவல்ய ஸ்தா₂னத்தில் ப்ரக்ருதியி னின்றும் நீங்கிய தன் ஆத்மாவைச் சிலகாலம் அநுப₄வித்து விட்டுச் செல்வதால் இங்கு கைவல்யநிஷ்ட₂ன் என்று குறிப் பிடப்படுகிறான் என்று கல்பிக்கிறோம். "(ஜிஜ்ஞாஸுவைப்போலே)

கேவலாத்மாநுபவத்தில் முடிந்துவிடாமல்" என்ற ப₄ாஷ்யகார ஸ்ரீஸூக்திக்கு "நகரத்தில் நுழைய விரும்பிய வழிப்போக்கன் — நிழல் தரும் மரத்தடியில் தூங்குவதுபோலே (ஜிஜ்ஞாஸுவுக்கு) ஆத்மாநுப₄வரூபமான காலதாமதம் இடையில் ஏற்படுகிறது" என்று கருத்துரைக்கவேண்டும்.

(5) 7-17 கீ₃தா வ்யாக்₂யானம்:-

"ஐஶ்வர்ய கைவல்யநிஷ்ட₂ர்களுக்குத் தாங்கள் விரும்பும் ஐஶ்வர்ய கைவல்யங்களை அடையும் வரையிலேயே என்னோடு சேர்த்தி" என்றும், "ஜ்ஞாநிக்கு என் ஒருவனிடமே அன்பு உள்ளது. மற்ற இருவர்க்கும் தாங்கள் விரும்பும் ஐஶ்வர்ய கைவல்யங்களிலும், அவற்றின் ஸாத₄னமாக என்னிடமும் அன்பு உள்ளது" என்றும் இங்கு கீ₃தா ப₄ாஷ்யத்தில் அருளியிருப்பதிலிருந்து, கைவல்யநிஷ்ட₂னுக்கு ஐஶ்வர்யார்த்தி₂க்குப் போலே பரமபுருஷன் எக்காலத்திலும் ப்ராப்யமாயிருக்க இடமில்லை என விளங்குகிறது. ஆகையால் இவன் ப்₃ரஹ்மாநுப₄வத்தை ப்ராப்யமாகக் கொண்ட பஞ்சாக்₃நிவித்₃யா நிஷ்ட₂னாக இருக்கமுடியாது

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

முற்கூறியபடி எல்லாக் கர்மங்களும் கழிந்த பின்பு முக்தியில் பே₄த₃ம் இருக்கமுடியாதாகையால், பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂னுக்கு இடையில் ஏற்படும் கைவல்ய போ₄க₃த்தையிட்டு இந்த கீ₃தா ப₄ாஷ்ய ஸ்ரீஸூக்திகள் எழுந்தன என்று கொள்ளவேண்டும்.

(6) 7-19. கீ₃தா வ்யாக்₂யானம்:-

இந்த ஶ்லோகம்—"உபாஸக ஜ்ஞாநியானவன் எம்பெருமானே ப்ராப்யம், ப்ராபகம், தா₄ரக போஷக போ₄க்₃யங்கள் முதலான எல்லாமாயிருப்பவன் என்று உணர்ந்து, எந்த ஜன்மத்தில் முக்₂ய ப்ரபந்நனாகிறானோ அந்த ஜன்மத்தின் இறுதியிலேயே மோக்ஷத்தையடைகிறான். அத்தகைய மஹாத்மாவான ஜ்ஞாநி எனக்குங்கூட மிகவும் கிடைத்தற்கரியவன்" என்று உபாஸக ஜ்ஞாநி பரமபுருஷனைப் பற்றிய உண்மையைப் பரிபூர்ணமாக உணர்ந்தபின்பு பரக₃த ஸ்வீகாரநிஷ்ட₂ன் என்னும் ஸித்₃தோ₄பாய நிஷ்ட₂னாவதைக் குறிப்பிடுகிறது.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

முற்கூறிய ஜ்ஞாநி மிகவும் கிடைத்தற்கரியவன் என்று கூறுவதன் மூலம் அவனுடைய சிறப்பைக் காட்டுகிறது இந்த ஶ்லோகம்.

(7) 7-27, 28 கீ₃தா வ்யாக்₂யானம்:-

எல்லா ஸம்ஸாரி சேதனர்களும் பரமபுருஷனை அறியாமலிருப்பதற்குக் காரணத்தை முதல் ஶ்லோகமும், சிலர் ப₄க₃வானை உபாஸிப்பதற்குக் காரணத்தை இரண்டாவது ஶ்லோகமும் காட்டுகின்றது. மேலும், இவ்விரு ஶ்லோகங்களிலும் "ஶப்₃த₃ாதி₃ விஷயமான (ஜீவனுடைய) ஜ்ஞாநம், இச்சா₂த்₃வேஷங்கள், ப்ரயத்ன நிவ்ருத்திகளாகிற ப்ரத₂ம ப்ரவ்ருத்திகளே ஶாஸ்த்ரத்தை ஒட்டியிருந்தால் புண்யமாகவும், ஶாஸ்த்ரத்துக்கு முரண்பட்டிருந்தால் பாபமாகவும் ஆகின்றன" என்று புண்ய பாப லக்ஷணம் சொல்லப்படுகிறது. இதிலிருந்து, ஆத்ம விஷயமான அல்லது பரமாத்ம விஷயமான ஜ்ஞாநம், இச்சா₂த்₃வேஷங்கள், ப்ரயத்ன நிவ்ருத்திகள் ஆகியவை புண்யபாபங்களாகமாட்டா என்றும், மோக்ஷ ஸாத₄னங்களேயாகும் என்றும், அந்த மோக்ஷ ஸாத₄னங்களிலும், அவற்றுக்குக் காரணமான சேதநனுடைய ப்ரதிபத்தி எனப்படும் விருப்பத்திலும் பே₄த₃த்தாலே முற்கூறிய புண்ய பாபங்களெல்லாம் கழிந்த பின்பும் மோக்ஷத்திலும் பே₄த₃ம் உண்டாகலாம் என்றும் விளங்குகிறது.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

எல்லா ஸம்ஸாரி சேதனர்களும் பரமபுருஷனை அறியாமலிருப்பதற்குக் காரணத்தை முதல் ஶ்லோகமும், சிலர் ப₄க₃வானை உபாஸிப்பதற்குக் காரணத்தை இரண்டாவது ஶ்லோகமும் காட்டுகின்றது.

(8) 8-11 to 13 கீ₃தா வ்யாக்₂யானம்:-

கைவல்யார்த்தி₂யின் உபாஸந முறையையும், அந்திமஸ்ம்ருதி முறையையும் கூறும் இந்த ஶ்லோகங்களில் முன் சொல்லப்பட்ட ஐஶ்வர்யார்த்தி₂க்குப் போலே புருவமத்தியில் ப்ராணனை நிறுத்துவதை விதி₄க்காமல், தலையில் ப்ராணனை நிறுத்துவதை விதி₄த்திருக்கையால், இவன் மோக்ஷத்தை விரும்புகிறவன் என்று விளங்குகிறது. 8-12,13 ஶ்லோகங்களின் பா₄ஷ்யத்தில் "ப்ரக்ருதியினின்றும் நீங்கியதாய், என்னையொத்த ஆகாரத்தை உடையதாய், திரும்பி வருதலில்லாத ஆத்மாவை அடைகிறான்" என்று கைவல்யார்த்தி₂க்குப் ப₂லம் சொல்லியிருப்பதால், இக்கைவல்ய நிஷ்ட₂னுக்கு ப்ரக்ருதியினின்றும் நீங்கிய தன் ஆத்மாநுப₄வமே ப்ராப்யம் என்றும், ப்ராக்ருதமான ஐஶ்வர்யாநுப₄வமோ, ப₄க₃வத₃நுப₄வமோ இவனுக்குக் கிடையாது என்றும், ஆகையாலேயே ப்₃ரஹ்மாநுப₄வத்தைப் ப₂லமாகவுடைய பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னாய் இவன் இருக்கமுடியாது என்றும், என்றும் ப₄க₃வத₃நுப₄வமில்லாத ஒரு

வகைத் தாழ்ந்த மோக்ஷமே இது என்றும், ப்ரக்ருதி மண்ட3லத்தைத் தாண்டியே இந்த மோக்ஷாநுப4வம் ஏற்படமுடியும் என்றும் விளங்குகிறது.

தாத்பர்ய சந்த்3ரிகை:-

முக்தியில் பே4த3ம் இருக்கமுடியாதாகையாலே, கைவல்யத்தைப் பரம ப்ராப்யமாகக்கொண்ட கைவல்யார்த்தி2 அநுப4விக்கும் ப2லன் ப்ரக்ருதி மண்ட3லத்துக்குள்ளேயே இருக்கவேண்டும். இங்கு தலையில் ப்ராணனை நிறுத்துவதை விதி4த்திருக்கையால், இவன் மோக்ஷத்தை அடைபவன் என்று விளங்குகிறது. இந்த முரண்பாட்டை நீக்குவதற்காகக் கைவல்யத்தை அவாந்தர ப்ராப்யமாகவும், கைவல்யத்தில் சிலகாலம் தங்கிய பிறகு ப4க3வத் ப்ராப்தியாகிற மோக்ஷத்தை ப்ராப்யமாகவும் கொண்ட பஞ்சாக்3நி வித்3யாநிஷ்ட2னே இங்கு கைவல்யார்த்தி2யான ஜிஜ்ஞாஸுவாகக் குறிக்கப்படுகிறான் என்று கொள்ளுகிறோம்.

(9) 8-15 கீ3தா வ்யாக்2யாநம்:-

இந்த ஶ்லோகத்தின் அவதாரிகா பா4ஷ்யத்தில், ஜ்ஞாநிக்கும், கைவல்யார்த்தி2க்கும் அபுநராவ்ருத்தியையும், ஐஶ்வர்யார்த்தி2க்குப் புநராவ்ருத்தியையும் கீ3தாசார்யன் கூறுவதாக பா4ஷ்யமருளினார் பா4ஷ்யகாரர். 8-13, 21 ஶ்லோகங்களில், கைவல்யார்த்தி2யின் ப்ராப்யமான கைவல்ய மோக்ஷத்தை 'பரமா க3தி:' என்று குறிப்பிட்ட கீ3தாசார்யன் இந்த ஶ்லோகத்தில் ஜ்ஞாநியின் ப்ராப்யத்தை 'பரமா ஸம்ஸித்3தி4:' என்று குறிப்பிடுகையால், கைவல்யம் தாழ்ந்த மோக்ஷம் என்றும், ப4க3வத3நுப4வம் உயர்ந்த மோக்ஷம் என்றும் விளங்குகிறது.

தாத்பர்ய சந்த்3ரிகை:-

கைவல்யத்தை அவாந்தர ப்ராப்யமாகக்கொண்ட பஞ்சாக்3நி வித்3யாநிஷ்ட2னைப் பற்றியே இவ்வத்தியாயங்களில் பேசப்படுவதால் அவன் மோக்ஷமடைவதாகக் குறிப்பிடுவதில் விரோத4மில்லை.

(10) 8-16 கீ3தா வ்யாக்2யாநம்:-

இந்த ஶ்லோக பா4ஷ்யத்தில் 'புநராவர்த்தின:' என்னும் பத3த்திற்கு 'திரும்பி வருபவை' என்று பொருள் கொள்ளாமல் 'விநாஶின:' (அழிவுடையவை) என்று பொருள் கொண்டமையால், புநராவ்ருத்தியற்ற கைவல்யாநுப4வம் அழிவற்றது என்றும், அவ்வநுப4வத்திலிருந்து கீழேயுள்ள ஐஶ்வர்யாநுப4வத்திற்கோ,

மேலேயுள்ள ப₄க₃வத₃நுப₄வத்திற்கோ செல்லமுடியாது என்றும் விளங்குகிறது.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னுக்கு இக்கைவல்யார்த்தி₂க்குக் கீழே ஐஸ்வர்யாநுப₄வத்திற்குச் செல்வது இல்லாவிட்டாலும், மேலே ப₄க₃வத₃நுப₄வத்திற்குச் செல்வது உண்டு. ப₄க₃வத₃நுப₄வத்திற்குச் சென்ற பின்பும் ஆத்மாநுப₄வம் தொடருகையாலே, கைவல்யாநுப₄வத்திற்கு விநாசம் இல்லை என்பதும் ஒட்டும்.

(11) 8-20, 21 கீ₃தா வ்யாக்₂யானம்:-

இந்த ஶ்லோகங்களின் அவதாரிகையிலும், கைவல்யார்த்தி₂க்குப் புநராவ்ருத்தியில்லை என்று முழங்கியிருக்கிறார் பா₄ஷ்யகாரர். அவனுக்கு ப்ராப்யமாயிருப்பது ப்ரக்ருதி ஸம்ஸர்க₃த்தினின்றும் நீங்கியதாய், ஸ்வரூபாவிர்ப்பா₄வம் பெற்றதான ஆத்மா என்றும், அது முக்த ஸ்வரூபமே என்றும், அபுநராவ்ருத்திரூபமே என்றும், அளவற்ற ஜ்ஞானத்தை உடையது என்றும், இந்த ஶ்லோகங்களின் பா₄ஷ்யத்திலும் கோ₄ஷித்திருக்கிறார் பா₄ஷ்யகாரர். இதிலிருந்து, கைவல்ய மோக்ஷத்தில் ஆத்மாவின் ஜ்ஞானத்துக்குச் சுருக்கம் நீங்கி ஸ்வரூபாவிர்ப்பா₄வம் ஏற்பட்டு விடுகிறது என்றும், இது முக்தியில் ஒரு வகையே என்றும் விளங்குகிறது.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னுக்கும் கைவல்யாநுப₄வத்துக்குப் பிறகு மோக்ஷம் ஏற்படுவதையிட்டு இந்த கீ₃தா பா₄ஷ்ய ஸ்ரீஸூக்திகள் பொருந்துகின்றன.

(12) 8-22 கீ₃தா வ்யாக்₂யானம்:-

இந்த் ஶ்லோகத்தின் அவதாரிகாபா₄ஷ்யத்தில், 'ஜ்ஞாநிக்குக் கிடைக்கும் ப₂லன் கைவல்யார்த்தி₂க்குக் கிடைக்கும் ப₂லனைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டது' என்று பா₄ஷ்யகாரர் அருளியிருக்கையால், கைவல்யார்த்தி₂க்கு ப₄க₃வத₃நுப₄வம் ஏற்பட இடமேயில்லை என்றும், ப₄க₃வத₃நுப₄வம் உடையவன் என்று ஶ்ருதி ஸூத்ர பா₄ஷ்யங்களிலிருந்து விளங்கும் பஞ்சாக்₃நிவித்₃யாநிஷ்ட₂ன் கைவல்யார்த்தி₂யாயிருக்க முடியாதென்றும் மிகத்தெளிவாக விளங்குகிறது.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

முற்கூறியபடி முக்தியில் ப₂ல பே₄த₃த்தை ஒப்புக்கொள்ள முடியாதாகையால், பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னுக்கு இடையில்

ஏற்படும் கைவல்யாநுப₄வத்தைக் கருதி ப₄ாஷ்யகாரர் 'ஜ்ஞாநிக்குக் கிடைக்கும் ப₂லன் கைவல்யார்த்தி₂க்குக் கிடைக்கும் ப₂லனைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டது' என்று அருளினார் என்று கொள்ள வேண்டும்.

(13) 8-23, 24 கீ₃தா வ்யாக்₂யானம்:-

இங்கு அவதாரிகாப₄ாஷ்யத்தில் 'ஆத்ம யாத₂ாத்ம்யவித்' என்று சொல்லப்பட்டவன் முந்தியதான 22-வது ஶ்லோகத்தில் சொல்லப் பட்ட ஜ்ஞாநிகளில் ஒருவகையினனான பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னே யொழிய. அதற்கு முன் ஶ்லோகங்களில் கைவல்யார்த்தி₂ முதலான வேறு பத₃ங்களால் குறிப்பிடப்பட்ட கைவல்யார்த்தி₂ அன்று. கைவல்யார்த்தி₂ பெறுவது ஆத்மஸ்வரூபாவிர்ப்ப₄ாவ லக்ஷண மோக்ஷம். அதாவது—ப்ரக்ருதி ஸம்ஸர்க₃த்தால் அநாதி₃காலமாக ஆத்மாவுக்கு ஏற்பட்டிருந்த ஜ்ஞானச்சுருக்கம் அவனுக்கு நீங்குகிறதே யொழிய. ஶேஷத்வ ப₂லமான ப₄க₃வத₃நுப₄வ கைங்கர்யங்களில் அவனுக்கு விருப்பம் இல்லாமையாலே அவை ஏற்படுவதில்லை. ஜ்ஞாநியோவெனில் ஆத்ம யாத₂ாத்ம்யாவிர்ப்ப₄ாவ லக்ஷணமோக்ஷத் தைப் பெறுகிறான். அதாவது ஶேஷத்வ ப₂லமான ப₄க₃வத₃நுப₄வ கைங்கர்யங்களைப் பெறுகிறான். இவன் பரமபுருஷனை ப்ராப்யமாக உபாஸிப்பவன் என்றும், ப்₃ரஹ்மாத்மகமாகத் தன் ஆத்மாவை ப்ராப்யமாக உபாஸிக்கும் பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂ன் என்றும் இருவகைப்படுவான். இவ்விருவகையினருக்கும் அர்ச்சிராதி₃க₃தியும், ப்₃ரஹ்மாநுப₄வமும் உண்டு. கைவல்யார்த்தி₂க்குக் கேவலாத்மாநுப₄வம் உண்டேயொழிய ப₄க₃வத₃நுப₄வம் இல்லை. அவன் உபசாரங்களையுடைய அர்ச்சிராதி₃க₃தியாலே செல்லாமல், நிர்மாநுஷ்யமான தாய், விவரிக்க இயலாத ஒரு வழியாலே நித்யவிபூ₄திக்குள்சென்று, விரஜையை ஒட்டியிருக்கும் ஒரு ஸ்த₂ானத்திலிருந்து எப்போதும் தன் ஆத்மாவை மாத்திரமே அநுப₄வித்துக்கொண்டிருக்கிறான்.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

இவ்வத்தியாயத்தில் முன் ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட ஜிஜ்ஞாஸு எனும் கைவல்யார்த்தி₂யை ப₄ாஷ்யகாரர் இங்கு 'ஆத்ம யாத₂ாத்ம்யவித்' என்று எடுக்கையால், கீ₃தையில் ஜிஜ்ஞாஸு என்றும், ப₄ாஷ்யத்தில் கைவல்யார்த்தி₂ முதலான பத₃ங்களாலும் குறிக்கப்பட்டவன் கைவல்யத்தை அவாந்தர ப்ராப்யமாகவும், ப்₃ரஹ்மாநுப₄வத்தை முக்₂ய ப்ராப்யமாகவும்கொண்ட பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂னே என்று விளங்குகிறது.

(14) 8-26 கீ₃தா வ்யாக்₂யானம்:-

இந்த ஶ்லோக பா₄ஷ்யத்தில், ஜ்ஞாநிகளுக்கு அர்ச்சிராதி₃க₃தி என்றும், பலவித₄மான புண்யங்களைச்செய்த ஐஶ்வர்யார்த்தி₂களுக்கு தூ₄மாதி₃க₃தி என்றும் தெளிவாகப் பிரித்துக்கூறி, ஜிஜ்ஞாஸுவுக்கு இவ்விரு க₃திகளும் கிடையாதென்று காட்டியிருக்கையால், அர்ச்சிராதி₃க₃தியுடைய பஞ்சாக்₃நி வித்₃யாநிஷ்ட₂ன் ஜிஜ்ஞாஸுவாகிற கைவல்யநிஷ்ட₂ன் அல்லன், ஜ்ஞாநியே என்று விளங்குகிறது.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

கீ₃தையில் எடுக்கப்படும் ஜிஜ்ஞாஸு முக்₂யமான கைவல்யார்த்தி₂யல்லன். ப்₃ரஹ்மாநுப₄வத்தைப் பரமப்ராப்யமாகக்கொண்ட ஜ்ஞாநியே யாவான் அவன். ஆகையால் இங்கு ஜ்ஞாநிக்கு அர்ச்சிராதி₃க₃தி என்று சொன்னது ஜிஜ்ஞாஸுவுக்கும் சொன்னபடியேயாம்,

(15) 8-28 கீ₃தா வ்யாக்₂யானம்:-

இவ்விரு அத்தியாயங்களிலும் சொல்லப்பட்ட ப்ராப்யமாய், ப்ராபகமாய், ஶேஷியாய், காரணமான பரமபுருஷனின் பெருமையை அறிந்தவன், 7-19ல் சொல்லப்பட்ட மஹாத்மாவான ஜ்ஞானியாகி, எம்பெருமானுடைய நிர்ஹேதுகக்ருபைக்கு விஷயமாகிருன். ஆகையாலே ஸாத₄நாநுஷ்டா₂னம் செய்யும் மற்ற அனைவருடைய ப₂லனைக் காட்டிலும் தலைசிறந்த ப₂லன் அவனுக்கு இவ்வுலகிலும், பரமபத₃த்திலும் கிடைக்கிறது. அந்த ஜ்ஞானத்தைப் பரிபூர்ணமாகப் பெருத ஜ்ஞானியைத் திருத்துவதற்காக, பரமபுருஷனைப் பற்றிய உண்மையறிவை அங்க₃மாகக்கொண்ட ப₄க்தியோக₃ம் அவனுக்கு மோக்ஷஸாத₄னமாக விதி₄க்கப்படுகிறது.

தாத்பர்ய சந்த்₃ரிகை:-

இவ்விரு அத்தியாயங்களிலும், ப₄க்தியோக₃த்திற்கு அங்க₃மாக விதி₄க்கப்படும் பரமபுருஷவைப₄வம், உபாஸகனுக்கு மற்ற ப₂லன்களிலிருந்து வைராக்₃யத்தை விளைக்கிறதாகையாலே, எல்லா ஸாத₄நாநுஷ்டா₂னங்களையும் செய்பவர்கள் அடையும் ப₂லனைக் காட்டிலும் சிறந்த ப₂லனை இவ்விரு அத்தியாயங்களின் பொருளை அறிந்தவர்கள் அடைகிருர்கள் என்று கூறப்பட்டது.

கீ₃தா வ்யாக்₂யான தாத்பர்யசந்த்₃ரிகைகளில்
ஏழு, எட்டு அத்தியாயங்களில் உள்ள
'ஸம்ப்ரதா₃யார்த்த₂ பே₄த₃ங்கள்' நிறைவு பெற்றது.

இதுவரை வெளியான

எட்டு அத்தியாயங்களின் ஸாரப்பொருள்

1—2-9. உறவினர்களிடம் தகாத அன்பினாலும், கருணையினாலும், தனக்கு த4ர்மமான யுத்3த4த்தை அத4ர்மம் என நினைத்துக் கலங்கிச் சரணடைந்த அர்ஜுனனைக்குறித்து அவனது மயக்கம் தெளிவடைவதற்காக கீ3தாஶாஸ்த்ரம் தொடங்கப்பட்டது

2 ஆத்ம தத்துவத்தைப்பற்றிய அறிவுடையவனாய், கர்ம யோக3த்தை அநுஷ்டி2ப்பவனுக்கு ஸ்தி2தப்ரஜ்ஞநிலை எனப்படும் ஜ்ஞாநயோக3ம் ஏற்பட்டு, அது நிறைவடைந்தால் ஆத்மா (மனத்தால்) நேரே காணப்படுகிறது. (இதுவே ஆத்மஸாக்ஷாத்காரம்).

3 ஜ்ஞாநயோக3த்தை அநுஷ்டி2க்க ஶக்தியில்லாதவனும், ஶக்தி யிருந்தபோதிலும் சான்றோனாகப் புகழ்பெற்றவனும், தன்னிடமுள்ள கர்த்ருத்வத்தை (செயல் புரியும் தன்மையை) கு3ணங்களிலோ, ஸர்வேஶ்வரனிடமோ சேர்ப்பதாகிற கர்த்ருத்வத்யாக3த்தைச்செய்து, மோக்ஷம் தவிர்ந்த மற்ற ப2லன்களில் பற்றில்லாமல் கர்மங்களைச் செய்வதாகிற (ஞானத்தோடு கூடிய) கர்மயோக3த்தை அநுஷ்டி2ப்ப தாலேயே ஆத்மஸாக்ஷாத்காரத்தை அடையலாம்.

4 (1) அவதார ரஹஸ்ய ஜ்ஞாநம். (2) ஞானத்தை உள்ள டக்கிய கர்மயோக3மும் ஞானயோக3மாகவேயுள்ளது. (3) கர்மயோக3 ஸ்வரூபம். (4) அதன் வகைகள்.

5. (1) கர்மயோக3ம் செய்வதற்கு எளியது; ஜ்ஞாநயோக3த் தைக் காட்டிலும் விரைவில் ஆத்மஸாக்ஷாத்காரமாகிற ப2லனை அளிப்பது (2 அந்தக் கர்மயோக3த்தின் அங்க3ங்கள். (3: 'ஶுத்3த4 மான (ஶரீரஸம்ப3ந்த4மற்ற) ஆத்மாக்கள் அனைவரும் ஸமமாயிருப்ப வர்கள்' என்று காண்பதற்கு உறுப்பான கர்மயோகி3யின் நிலை.

6. (1) ஆத்மஸாக்ஷாத்காரமாகிற யோக3த்தைப் பழகும் முறை (2) ஆத்மஸாக்ஷாத்காரம் செய்யும் யோகி3களில் நாலு வகை. (3) அவ்வாத்மஸாக்ஷாத்காரத்திற்கு ஸாத4னமாயிருக்கும் அப்4யாஸம் (சிந்தனம்), வைராக்3யம் முதலானவை. (4) தொடங்கிய யோக3ம் இடையில் தடைபட்டாலும், அடியோடு அழிந்துவிடாமல் காலக்ரமத் தில் ஸித்3தி4யடையும். (5) ஸர்வேஶ்வரனை விஷயமாகக்கொண்ட ப4க்தியோக3ம் முற்கூறிய ஆத்மஸாக்ஷாத்காரமாகிற யோக3த்தைக் காட்டிலும் சிறப்புற்றது.

7. (1) பரமபுருஷனைப்பற்றிய உண்மையறிவு (2) அது ப்ரக்ருதி ஸம்ப3ந்த4த்தால் ஜீவர்களுக்கு மறைக்கப்பட்டுள்ளது. (3) பரம புருஷனை ஶரணமடைவதால் அம்மறைவு நீங்கும். (4) ப4க்தர்களில் நாலு வகை. (5) இந்நால்வரில் ஞானியின் சிறப்பு.

8. ஐஶ்வர்யத்தை அல்லது கைவல்யத்தை அல்லது பரமபுருஷனை அடைய விரும்புகிறவர்கள் அறியவேண்டியவைகளும், கைக்கொள்ள வேண்டியவைகளும் யாவை என்பதின் விளக்கம். [பரமபுருஷனே ப்ராப்யம், ப்ராபகம், தா4ரகபோஷகபோ4க்3யங்கள் முதலான எல்லாமா யிருப்பவன் என்று உணர்ந்த ஞானிக்கு உபாயாநுஷ்டா2நம் எதையும் எதிர்பாராமல் எம்பெருமானுடைய நிர்ஹேதுக கிருபையாலேயே மோக்ஷம் கிடைக்கிறது என்பது 7-8 அத்தியாயங்களின் பரம ஸாரம்.]